கண்ணகாதேவி துணை



# நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன்

உ
சிவமயம்

# ஓம் கோவலர் கதைக் காப்பு

## வெண்பா

குணமான கண்ணகையைக் கோவலனார் தான் மணஞ்செய்
மணமாலை தன்னை வகுத்துரைப்பக் - கணபதிதன்
பாதாரவிந்தம் பலநாளும் நெஞ்சிலுன்னிக்
காதாரக் கைதொழுவோம் காண்.

# கோவலன் கண்ணகி கதை

## விருத்தம்

சீர்கொண்ட கைலாசவாசரிட மேவுமொரு தேவியருளோர் பிறப்பிற்
செப்பரிய பாண்டியன் புத்திரியதானதைச் செந்தமிழில் யான் பாடவே
போர்கொண்ட முருகேசன் தெய்வானை வள்ளியும் பெருமையுறு வடுகேசனும்
பிரபெலம்புரி வீரபத்திரனு மரிநாதர் பெண்ணு மிரண்டு திருவுருவும்
கார்கொண்ட குழல் முத்துமாரியும் மகனான காத்தவிராய தேவுங்
கருதுங் கறுப்பனொடு குருநாத சாமியுங் கன்னிமார் நாச்சிமாரும்
போர்விண்டதெனவருள் புரிந்தெம்மை யாழ்கின்ற பொற்பினும் திருபாதமே
போற்றினேன் வருதுயர்கள்தீர்த்து நிதமுங்கருணைபொழியு முகிலெனவருளுதே.

## நாகர்கோவில் கண்ணகை அம்மன் துணை

உ

## கண்ணகை அம்மன் துணை

## ஓம் கோவலர் கதைக் காப்பு

வெண்பா

குணமான கண்ணகையைக் கோவலனார் தான் மணஞ்செய்
மணமாலை தன்னை வகுத்துரைப்பக் - கணபதிதன்
பாதாரவிந்தம் பலநாளும் நெஞ்சிலுன்னிக்
காதாரக் கைதொழுவோம் காண்.

தாயாய சரமசரத் தயாபரியா யெப்பொருட்கு
நாயகிதன் காதை தன்னை நாட்டுதற்கு- தூய்மையுறுந்
தந்திமுகனார் சரணம் தனைத்தொழுது
வந்தனை செய்து மகிழ்.

கலித்துறை

மாமதிபோன்ற வதனமவரை மகளாம் பரை
யாளமதிற் கூடலுற்பவித்தே அருட்சோழ நகர்
தாமதில்வாழ்ந்த கதைபாடவே கொன்றைத் தார்புனையுந்
தேவதிகார சிவன்றிருபரை பாதமென் சென்னியதே

விருத்தம்

சீர்கொண்ட கைலாசவாசரிட மேவுமொரு தேவியருளோர் பிறப்பிற்
செப்பரிய பாண்டியன் புத்திரியதானதைச் செந்தமிழில் யான் பாடவே
பேர்கொண்ட முருகேசன் தெய்வானை வள்ளியும் பெருமையுறு வடுகேசனும்
பிரபெலம்புரி வீரபத்திரனு மரிநாதர் பெண்ணு மிரண்டு திருவுருவும்
கார்கொண்ட குழல் முத்துமாரியும் மகனான காத்தவிராய தேவுங்
கருதுங் கறுப்பனொடு குருநாத சாமியுங் கன்னிமார் நாச்சிமாரும்
போர்விண்டதெனவருள் புரிந்தெம்மை யாழ்கின்ற பொற்பினும் திருபாதமே
போற்றினேன் வருதுயர்கள்தீர்த்து நிதமுங்கருணைபொழியு முகிலெனவருளுதே

உ

## திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ காங்கேசப் புலவரடி யெடுத்தருள் புரியக் கோவலர் கதைக

### கடவுள் வணக்கம

சீர்வளருங் கண்ணகையார் திருக்கதையிங் குரைப்பதற்கு
கூர்வளரு மொருகோட்டுக் குஞ்சரண் செஞ்சரண் துணையே
போர்வளரு மிப்புவியைப் பெற்றவடன் பெருங்கதைக்குக்
கார்வளரு நஞ்சருந்துங் காளகண்டர் பதந்துணையே

ஆதிபரத்துருவாகி யதிலிருந்தோர் செயல்வடிவாய்
சோதிபெற்ற பூவமர்ந்த தோகைதிருக் காதைசொல்ல
ஓதியற்ற சூரனுட னுற்றசுரர் கட்டளிய
மோதிவினை காதுமெங்கண் முருகனிருபதந் துணையே

தாயெனவே யுயிரளித்துஞ் சகலபொருள் தனைக்கொடுத்தும்
மாயநற்காட் சிகளளித்தும் மருவினர்க்கு வளியளித்தும்
தூயமுத்தி தாமளிக்குஞ் தோகைதன்பா மாலைதனை
வேய்மருவு வாயின்மண்ணும் வெண்ணெயுமுண் டவன்துணையே.

அரியுருவா யணுவுருவா யாதியரன் தனதுருவாய்
நரருவாய் வந்துதித்த நாயகிதன் காதை சொல்ல
தரவுகிரா லயன் தலையைக் களைந்ததனைக் கையடக்கி
வரமருளி யெமைப்புரந்த வடுகன்மல ரடிதுணையே

மாறன்செய்த தீவினையால் மாவடுவின் வந்துதித்துக்
கூறுமொரு காயாகிக் கும்பமுற்ற கொம்பினுக்குப்
பேறுமிந்தக் கதையுரைக்கப் பெரியவீர பத்திரன்றன்
நாறுமலர் பாதமது நாளுஞ்சிர நான்துதிப்பேன

சிற்றுருவாய்ப் பேருருவாய்ச் செல்வமுய்க்கும் வல்லிகதை
சொற்றுருகித் தமிழ்பருகித் தொண்டர் தொழுதாடுதற்கு
பற்றுருகி நிமித்தமிட்ட பகவனுக்குப் பாட்டுரைத்த
நற்புருகு நாகதுரை நற்பதத்தைப் போற்றுவமே.

காரதிருங் கருங்கடல்சூழ் காசினியிற் பேசரிய
வாரதிரு மதுரைநகர் மாறுகொண்டு நீறாக்குந்
தீரதிருந் தெய்வக்கதை செப்பமுத்து மாரிபதம்
பேரதிருந் திருக்கமலம் பெருஞ்சிரத்தி லிருத்துவனே

மாநாகர் திருமனையில் வந்துதித்தோர் சந்திரன்போல்
தானாகவே வளர்ந்த தையல்கதை தானுரைக்க
கானாரு மான் வயிற்றிற் கருணை யுருவாகி வந்து
வானாருந் திருக்கார்த்த வராயனடி பரவுவனே

அறுக்கைசெய்து பாண்டியனை யருஞ்சிறையில் பழுதாக
வுறுக்கி வைத்தங் கொருசிலம்பா லுயருமெரி தனைக் கொழுத்தி
வெறுக்கவெரித் திட்டமின்னார் விளங்கு புகழுரைப்பதற்கு
கறுப்பரிரு செஞ்சரண கமலந்தலை புனைவேனே

கருமருவு குழன்மடவார் கண்ணகையார் கோவலரைத்
திருமருவு மணம்புரிந்த செல்வக்கதை சொல்வதற்குப்
பொரவரிய பரிகலங்கள் புடைபரவ முடிமருவும்
உருமருவு குருநாத சுவாமிபத முளந் துதிப்போம்

மையணிந்த கண்ணகைக்கும் மகிழ்நரெனுங் கோவலற்குஞ்
செய்யமணம் புரிந்தகதை செகதலத்திற் பாடுதற்குத்
துய்ய நாச்சிமாருடனே சொற்ற கன்னிமார் சரணம்
வையமரு னெஞ்சகத்தில் வைத்துநித்தந் தொழுவேனே

மீனாட்சி யெனப்புரந்த வித்தகிதன் காதைசொல்ல
மானாட்சி பொரும்விழியாண் மாமலரிற் செந்திருவாள்
ஏனாட்சி தாக்கணங்காம் லட்சுமியென் மிடிதீர்ப்பாள்
தானாட்சி யானபதந் தந்துமென்னை யாளுவளே

என்மிடியு மென்பளியு மென்பிணியுந் தீர்க்குமின்னார்
தன்னடியை நான் வணங்கிச் சாற்றுமிந்தத் தமிழினுக்கு
வன்னவப்பர் சுந்தரரும் வாதவூரிற் பெருமாளுஞ்
சொன்ன நாவுக்கரசரிவர் சொற்பதத்தைத் தொழுவேனே

தொழுதகையவித் தமிழைச் சொல்வதற்குச் சிவனடியார்
குழுவெவரோ வவர்கள்பதங் கும்பிட்டு நடம்புரிந்தேன்
தழுவியவிப் பாவினுக்கு தந்திமுகன் முருகேசன்
வழுவகலச் சத்திநாமம் மனதுவைத்தோ ரைத்தொழுவேன்

வேதமுதலான வெங்கள் வித்தகிதன் பாவினுக்கு
ஓதுதெய்வ யானையம்ம னுறுசரணந் தினந்துதிப்பேன்
நாதவிந்தத் தாவுதித்த நாரியர்தன் பாவுரைக்க
வோதுவள்ளி நாயகிதன் னுத்தமி பாதந்தொழுவேன்

முழுதகலு மிவ்வுடலை முன்சுமந்து தான்பிறக்க
கொழுவுபல மாயமெல்லாங் கூட்டியெனை வாட்டிநித்தம்
தொழுமடியர் பெரும்பிறவிச் சுழிக்கடலி லாழாமல்
வழிவிடுத்த கருணைக்கடல் மாயுமதோ மாயநித்தம்

நித்தமென்னைப் பெரும்பிறவி நீழ்கடலி லுய்க்குமென்று
அத்தைவிட்டுத் தப்பவொரு வனையெனக்கை தந்துமென்னை
பத்தியெடுத் தருகணைத்தும் பாதமுய்பள் பரையெனவும்
புத்தியொன்று வந்துதிப்ப பொய்யல்லவே னறிந்ததின்நான்

நானறியேன் கல்வியென்ன நாயகிமுன் செய்தவத்தாற்
தானறிந்திங் கெனையாண்டு சற்றருட்கண் வைத்தமையால்
மேனெறிசெல் கதையிதொன்று விளம்பியிருந் ததையெடுத்துத்
தாநெறிசொல் லெல்லாமன்னை தன்னுநாம மாகுமென்று

ஆகுமிந்தக் கதையிதனை யரும்புலவர் சங்கமதில்
போகுமென்று சொல்லுகின்ற புத்திகேட்டை யுற்றறியில்
மாகமுற்ற கடலருந்த வந்தகுறு முனிக்கெதிரே
பாகமுற்றோ ரெறும்பருந்தப் படர்ந்ததொக்கும் பாவலரே

பாவலர்முன் சொல்லுகின்ற பாவைதிருக் காதைசொல்லல்
ஆவலுற்ற குயில்கூவ வருகிருந்த கழுதையொன்று
ஏவலுற்ற குரவையிட்டங் கிசைபொருத்த முயல்வதொக்கும்
காவலுற்ற மயிலாடக் காகமு நின்றாடலொக்கும்

ஒக்குமிதை யுங்கள்முன்னே யுரைப்பதற்கிங் கெள்ளளவும்
வெட்கமொன்று விளையுமென்று விளம்புகின்றே னிசைப்பொருளின்
குற்றமென்றுங் குறையிதென்றுங் குறிக்கலென்றந் நாயகியார்
மிக்யமுற்று மகிழ்வளென்றோ மெய்யென்மன மீதிலுண்டே

கடவுள் வணக்கம் முற்றிற்று

விருத்தம்

சிரசினொளி கொண்டதொரு தங்கக்கிரீடமும் திருநுதற் சுட்டிவரியும்
செண்டலங்காரமுறு கொண்டயிற் குச்சுமயில் சேருமொரு நாகபடமும்
பரசுமிரு பொற்றோடு மேல்வாளி குண்டலம் பணிமாலை கண்டசரமும்
பாடகந்தரிசு கொலிசாடு கிண் கிணியினொடு பல பூடணங்குலவவே
அரிசுமந்திடு மாசனத்திருந் தன்பருக்கரிய வரமுதவுதாயே
அந்தகன் தூதரென்முன் வரும்போது வந்தாண்டடிமை யாக்குமம்மே
வரிசுமந்தொளி குலவுமுகக்கண்ணி கவுமாரிமகமாசி சகமுதவியே
மாதலங்காரியுமை மேவுசிங்காரியே மாதுகண்ணகை யம்மனே

பாயிரம்

பரமபரை சோதி பவுரிகவுரி பலகலையு
நிரம்பிய நாயகி நின்மலை நீண்மலை நேர்மகளே
உரம்பெறுமுன் கதைப்பாயிரங் கொண்டிங் குரைப்பதற்கு
வரம்பெறு தாமரைத் தாழளித்தாழென் வழித்துணையே

கலித்துறை

வாழ்வுசெறி கண்ணகையார் மணிச்சிலம்பின் கதையிதனை
தாழ்வுசெறி கடல்புடைசூழ் தாரணியின் முன்னொரு நாள்
நாழ்வுசெறி காங்கேச நற்புலவர் பாட்டுடனே
ஆழ்வுசெறி புகணயினாப் பணிக்கனுமுன் னறைந்தனனே

அறைந்தவிந்தக் காதைதனை யடிக்கடியே வரைந்ததிலும்
துறந்தெழுதுஞ் சிலருடைய சொற்பழுதுண் டதனாலும்
மறைந்தசில கதைக்குறைகள் வழுவியிருந் ததனாலும்
குறைந்தசில பாமிகுதி குறிநெடிலுற் றிடலாலும்

உற்றவிந்தக் கதையிதனை யுள்ளருளிற் கண்ணகையார்
சொற்றாளே சிலபெரியோர் சொல்லிய வுத்தரவாலும்
நற்றபத்தி விருப்பாலு நாடிய சாத்திரத்தாலும்
கற்ற கந்தபுராணமுடன் காசிகண்ட முபதேசம்

தேசமென்னுங் காண்டமதுந் தெரிந்தெடுத் தொன்றாய்த் தேர்ந்து
வாசமுறக் கௌவுரிவந்து மாவடுவிற் பிறந்ததுவும்
நேசமுறு பழமாகி நிறைகுடத் துற்பவித்ததுவும்
பாசமிகு பெண்பிள்ளையாய்ப் பாண்டியன் கொண்டேகியதும்

ஏகுமந்த பெண்பொருட்டா லிருங்கனவு கண்டதுவும்
வாகுமொழிச் சோதிடரால் மாதைப் பொன்னின் பேழைவைத்து
ஆகுமந்தக் கடலிடத்தே யன்னைதன்னை விடுத்ததுவும்
பாகுமொழிக் கோவலனார் பண்புடனே பிறந்ததுவும்

பிறப்புடைய மாநாகர் பெருமையுறு மாசாத்தர்
சிறப்புடைய கப்பல்விடுந் திருத்துறையில் வரும்பொழுது
உறப்பெரிய கண்ணகையா மொண்டொடியைக் கண்டதுவும்
திறப்புடனே யெடுத்துமணற் றிறம்பேசிப் போனதுவும்

போய்வழுவி நாகமணி பொற்சிலம்பு சமைப்பதற்கு
ஆயருளின் மீகாம னரியகப்ப லோடினதும்
தாயருள்செய் நாகமணி தான்வாங்கப் போம்பொழுது
தீயவெடி யரசனுடன் செருச்செய்து மீண்டதுவும்

மீண்டுமணி வாங்கிவர வீரநாரணன் னுடனே
மூண்டமர்செய் துயிர்முடித்து முன்விளங்கு தேவனுடன்
காண்டமரே பொருதுறவு கண்டுவந்து மீண்டதுவும்
பூண்டமணி கொண்டுவந்து பொற்சிலம்பு சமைத்ததுவும்

பொற்சிலம்பு தனைப்புனைந்து பூவைதனைக் கோவலற்கு
உற்றமணஞ் செய்ததுவு முயர்வணிகர் கோவலனார்
தற்செயலின் மாதேவிக்கு தான்மயலாய்ப் பொருடோற்றுக்
கற்பனையின் துயர்பொருந்திக் கண்ணகைதன் காற்சிலம்பை

தன்சிலம்பைக் கொண்டுபோகத் தட்டான்முன் தான்மருட்டி
கண்கலங்கப் பாண்டியன்முன் கள்வனென்று காட்டினதாற்
பண்கலங்காக் கோவலரைப் பாண்டியன் சங்கரித்ததுவும்
எண்கலங்காக் கண்ணகையார் இதையறிந்து உயிர்மீட்சி

மீட்டுவரல் வாறறிந்து மிக்கவினை தனையுருவி
காட்டிவழி தகனமிட்டுக் கனமதுரை வாசல்வந்து
மூட்டிவழக் கினையுரைத்து முடிமகி பாதிரனை வென்று
கோட்டிவரு சிலம்பாலே கொடுமதுரை தனையெரித்து

எரியமர மனைகொடுத்து இடைச்சியர்செய் பூசைகண்டு
பெரிய வதிசயமுடனே பெண்ணங்கு மிலங்கைநண்ணி
உரியபல தலங்களிலே யுற்றசில பூசைகண்டு
சரியரிய வரங்கொடுத்து தார்குழல் வற்றாப்பளையில்

மருவியிருந் தருள்கொடுத்து வளர்கதிரை மலையணுகி
அருவியுயர் கயிலைசென்று மையனிடத் தமர்ந்தனளே
உருவுடைய தெய்வமென்று முத்தமிதன் திருக்கதையைத்
திருவுவந்து சகம்பரவச் சிந்தனைகொண் டுரைத்தவன்றான்

உரைத்தபுகட் டென்னிலங்கை யுற்றதொரு தேசமதிற்
துரைத்தனஞ்சேர் யாழ்ப்பாணந் துலங்குவட கீட்டிசையின்
மருவு குடாரப்பதெனு மாநகரில் வாழுகின்றேன்
பொருமருவு கந்தர்செய்த புண்ணியமாதவத்தில் வந்தோன்

தரியலர்க ளெனுங்கரியை தானடர்சிங் கேறனையான்
திருமருவு குவளையணி செங்கனக மார்பகத்தோன்
இருளகலக் கலைசிலபா வோதுவுணர் மனத்துடையோன்
மருளகலு மனதுநடு மருவுநிலைக் கோலுடையோன்

கொடியர்பலர் கூடியொரு கோளுரைத்துக் கோடேற்ற
நெடியமுடி மன்னரவர் நீழ்வருடம் பன்னாலென்
றுடையசிறை மீதிருந்தங் குத்தமி கண்ணகைமீது
படிபுகழு மோர்பதிகம் பாடிடநாட் பதிநாலிற்

சேரிசென்று சிறுகுடியுஞ் சிதறுமம்பும் வில்வகையும்
பாரவாளும் வேலுமற்றும் படைக்கலமும் பசுந்தொடையும்
சேரவள்ளி முகிநிறத்து திடுதிடென்று சத்தமிடடுக்
கோரமுற்ற விந்திரன்போற் கோலமென்ன மேவியதே

துடியிடையாள் கண்ணகைதன் தொல்லருளால் மறியல்விட்டு
கடியர்மனந் துணுக்கமுறக் கருணைசெறி பதியில்வந்தோன்
அடியன் வெற்றிவேலனெனு மானதிரு நாமமுள்ளோன்
படியுயர்ந்த கண்ணகைதன் பட்டமுய்த்த வுத்தரவால்

உத்தரவாற் சிலப்பதிகாரக் கதையையிங்கு யுரைப்பதற்குப்
பத்திபெறு பாயிரத்தைப் பாடுகெனப் பணித்ததனாற்
சத்தமுறு பன்னலெனுந் தக்கதுறைத் தும்பளையில்
மெத்துபுகட் காராளர் மேற்குலத்தில் வந்துதித்தோன்

உதித்த கதிர்காமரரு ளொண்புதல்வன் சங்கரன்றான்
துதித்தவிந்தக் காதைதன்னிற் றொகுதிசில பகுதிகண்டு
மதித்தபுகழ் கண்ணகையாம் மாதருளாற் றமிட்பாவாற்
பதிதத்தவிந்தக் காதைதன்னிற் பாயிரத்ததைப் பாடினனே

பாயிரமுற்றும்

விருத்தம்

ஊனாகி யுயிராகி யொளியாகி யெங்குமிகு முளநாடு சோதிவடிவா
யொருவன் றனக்குமிகு கருணையுட னன்பான யுத்தமீ சித்ரவுருவே
கானார்துழாய் கொண்டமுடியோன் றனக்கு நற்கனமான தங்கைச்சியே
கமலைக்கு மச்சினீ மனமொத்த வுத்தமீ காமற்குமோர் மாமியே
தேனா ரலங்கலணி மார்பஞ் செறிந்திடுஞ் செப்பரிய பாண்டியற்கு
சீர்பெற்ற புதல்வியெனவே யுற்பவித்திடுஞ் சிவகாமி யபிராமியே
பானார்மொழிக் கொண்டுனைத் தண்டமிட்டவர்கள் பத்திப்பழுத்தபழமே
பத்திபெறு நாகர்பதி யெத்திசை துதிக்கவருள் பண்புடனளித்த வுமையே

உ

## முதலாலது பாண்டியன் அரசிருக்கைக் கதை

திருமருவு காவேரிச் சேர்மதுரைப் பட்டணத்திற்
கருமருவு முகில்களெல்லாங் கடலழுவம் வழுவிவந்து
தருமருவு நீர்முகந்து தாரைகொண்டு மீண்டுசென்று
பருமருவு நல்வரைமேற் பலமுறையாய் சொரிந்ததுவே

சொரிந்தவெள்ள மிடையிடையிடையே சூழ்ந்து வழிந்தாறாகி
பரிந்துவனம் வயல்பரம்பி பருத்தகடல் போற்பெருகி
சரிந்துமலை வனங்களுள தருக்களையு முரித்தெடுத்து
திருந்துபுனல் மறவருற்ற சேரிகளி லுழக்கியதே

சேரிசென்று சிறுகுடியுஞ் சிதறுமம்பும் வில்வகையும்
பாரவாளும் வேலுமற்றும் படைக்கலமும் பசுந்தொடையும்
சேரவள்ளி முகினிறத்து திடுதிடென்று சத்தமிட்டுக்
கோரமுற்ற விந்திரன்போற் கோலமென்ன மேவியதே

மேவுபெண்கள் பஞ்சணையும் வேய்ந்தமாலைப் படைக்கலமுங்
காவுறைந்த பூவகையுங் கைத்திரையிற் கொண்டுசில
தேவரைம்பை மாறன்முன்பு செல்வதுபோற் செல்லுந்நதி
தாவுவண்ட தாற்பரிக்கத் தாரைகொண்டு போயினதே

இளஞ்சொரிந்த பொன்னுமுத்து மேற்றபல சாமரமுந்
தனஞ்சொரிந்ந கரிகோடுஞ் சங்குமுதற் பொருள்களள்ளி
கனஞ்சொரிந் வச்சிரத்தோள் கவுரியர்கோன் றனக்குதவ
வனஞ்சொரிந்த தேவர்கொண்டு வந்ததெனச் சென்றதுவே

சென்றவெள்ளம் வரம்பழித்து சேரிகளு மிகவுளக்கி
துன்றுதடந் தானழித்துத் தொகைத்தரு வெல்லாமுரித்து
மன்றுபாலை வனமழித்து மலையடிக டான்பறித்து
கன்றும்பல வேகமுடன் கரியினத்தின் றிரள்களள்ளி

திரளமொத்த பசுநிரையுஞ் சிந்தியுந்தித் திரையடக்கி
தரளமொத்த தலைபுரட்டிச் சங்கினமும் கயலினமும்
புரளமொத்த யிடியார்த்து புடைப்பரந்தங் கிடைகலங்கி
இருளையொத்த கடல்பரந்திங் கேகலெனப் பாய்ந்ததுவே

பாய்ந்துசென்ற வெள்ளமெல்லாம் பகருமள்ளர் தலைமறித்துச்
சாய்ந்தபல குளங்களிலுந் தடங்களிலும் வயல்களிலும்
ஓய்ந்தசில வாறுகளு முடனேகட்டி மறித்தனரே
வாய்ந்தமள்ளர் பங்குடனே வந்துகட்டி மறித்தனரே

மறித்தமிச்சங் கடல்புகவே மள்ளரெல்லா நிரைநிரையாய்
வெறித்தகிடா வுடனணைத்து மிக்கவெருதுகள் பூட்டி
உறுக்கிவெறித் தடித்தார்த்தங் குளக்கியுழு மோதையிந்தத்
தறைக்குண்மறி கடலடிக்குஞ் சத்தமதைப் போன்றதுவே

போன்றமன்ன ருளவுசெய்து புல்லகற்றி நீர்மறித்து
ஆன்றபெண்கள் கூட்டமுட னடசிநாற்று முளைகொடுத்துச்
சான்றபலர் நிரைநிரையாய்த் தாரைகொண்டு நாற்றுநட்டுப்
போன்றசாலி நிரைவளர்க்கப் பொற்கதிர்கள் விளைந்ததுவே

விளையமள்ளர் நிரையறுத்து மேய்ந்துசில சூடுசெய்து
தளையவிழச் சூடுதறித் தானடித்துத் தூசகற்றிக்
குளைமலைபோ லணைத்துவைத்துக் குவியல்களைத் தான்பகிர்ந்து
வளையமுறுங் குவியல்செய்து மன்னர்பங்கு நீக்கினரே

நீக்கிமள்ளர் பங்களித்து நிறையும்வித்தைச் சேமமிட்டுத்
தாக்குதேவர் சன்னதிக்குஞ் சாருமன்ன சாலைகட்கும்
நீக்கமில்லா மறையவர்க்கு நிறைதவறா வடியவர்க்கும்
போக்கிமிச்சஞ் சேமமிட்டுப் புகளும் வீட்டுக்குதவினரே

உதவுமில் லந்தணர்க்குரிய வொண்டொடிமார் கொண்டதனை
விதமுடன் சன்னாசியர்க்கு வேறுமுள்ள விரவலர்க்கும்
இதமுறுஞ் சுற்றத்தவர்க்கு மெல்லவர்க்குங் குறையாமல்
நிதநிதமு மன்னஞ்சொன்ன நிரைநிரையா யுதவினரே

உதவுகின்ற செந்திருக்க ளொருகோடி வரும்வழிபோற்
புதவுயர்ந்த தெருக்களெல்லாம் பொன்னகர் போலானதுவே
விதவுயர்ந்த சக்ரவாள் கிரியெனவே விண்ணோங்கி
அதவுயர்ந்த மதில்களெல்லா மந்தரம்போய் மண்டினதே

மண்டலத்திற் கடல்வளைந்த மாறதுபோன் மதுரைநகர்
ஒண்டிறல்சேர் மதிலைவளைந் துலவியதே யகழிக்குழீ
விண்டுமகோ ததிகடையும் மேருவினிற் சிகரமெனத்
தண்டமிழ்சேர் மாறன்மனை தனிலுயர்ந்த கோபுரமே

புரமிகுத்தோன் முடிதேடப் போகுமன்னத் திரள்போல
கரமிகுத்த கொடிகளெல்லாங் காலினசைந் தாடியதே
திரமிகுத்த விந்திரனுஞ் சேனைகளும் வந்ததுபோல்
அரமிகுத்த கோபுரத்தி லரும்பாவை பரம்பியதே

பரப்பியபல் லுடுத்திரளும் பரவுசெக்கர் மேகமும்போல்
நிரைக்கு நிரையேமகர தோரணங்கள் நின்றதுவே
பொருப்பின்மிசைப் பொன்பரப்பிப் பூத்தமரைத் தடம்போலே
இருந்துஞ்சுவ ரிடையிடையே யெழுந்ததுவே சாளரங்கள்

ஆயிரம்பொற் சிரசுடனே யாதிவீர னின்றதென்ன
வாயின்மிசை முடிபலவாய் மன்னினதே கோபுரமே
மேயில்பல கோள்களெல்லா மேருமிசை யூர்வதுபோல்
சேயினவ மாமணியின் றிரளிருந்து பரந்தனவே

பரம்புகுந்தக் கதிரவனைப் பரப்பினிரைத் ததுபோலே
அரும்புகுந்த கண்ணாடி யங்குநிரைத் திட்டதுவே
திரம்புகுந்த மதிலடங்கச் சேர்ந்ததிக்கின் றிசைமுழுதும்
வரம்புகுந்த மாளிகையும் மண்டபமுங் கண்டதுவே

மண்டபமு மாமறையோர் வாழ்தெருவு மோர்புறமே
தொண்டர்களு மண்டிவந்து சூழ்தெருவு மோர்புறமே
தண்டமிழைக் கொண்டுவளர் சாலைகளு மோர்புறமே
வண்டகைசேர் மாவணிகர் வாழ்தெருவு மோர்புறமே

பிறந்தபுவி யீன்றவன்னப் பிள்ளைகள்தன் தெருக்களெல்லாம்
சிறந்தபல செல்வமுய்க்குஞ் செந்திருக்க ளுறைவிடமே
திறந்திகணீர் வாளுகின்றோர் சிறந்தபொன்கள் செய்திடுவோர்
உறைந்தபல சாதிகளு முற்றதெரு பற்பலவே

பலதெருவு மீரிரண்டு பக்கமதி லேபரம்பி
உலகுபுகள் பாண்டியனா ருறைவிடங்கள் நடுவிலுண்டே
தலைமைபுகள் சேனையெல்லாந் தானமரு மாளிகைகள்
குலவியெங்கு மொருநிரையாய்க் கோர்வைகொண்டு மேவினதே

மேவுகின்ற யானைகளோர் வெள்ளமறு நூறதுண்டோ
தாவுகின்ற குதிரைகளோர் தாமிலட்ச மாயிரமே
ஏவுகின்ற தேர்த்தொகுதி லட்சமிரண் டாயிரமே
காவுகாலாட் சேனைவெள்ளங் காணும் பதினாயிரமே

ஆடலின் சேனாபதிக ளாறிரட்டி யாயிரமே
தேடுகின்ற மந்திரிமார் சேர்பதினா றாயிரமே
பாடரசிற் பாண்டியனார் பதினாறா யிரம்பேரே
கூடுமிந்த ராசர்கட்குங் கொற்றவனோர் மீனவனே

அன்னவன்றான் மின்னொளிசேர் அத்தாணி மண்டபத்திற்
பொன்னொளிரு மின்னனொளியே புகழுமரி யாசனத்திற்
கன்னியர்க ணிரைநிரையாய் கவரிபுடை பணிமாற
மன்னவன் மாமாறதுரை மகிழ்ந்தரசு புரிந்தனனே

புரிதொறும்போய் மருவலரைப் போரில்வென்று வெளிகொடுத்து
பெரியதொரு தேசமெல்லாம் பெரும்புகழ்தனைப் பதித்தான்
அரியபல வீரரெல்லா மடிபரவ வடிமைகொண்டான்
விரிவருண ராசனையும் வேலதனால் வெற்றிகொண்டான்

கொண்டுசேரன் சோழனுக்குங் குலமகிமை தலைமையுற்றான்
கண்டபல பெண்களுக்குங் கருப்புவில்லுக் கைப்பிடித்தான்
அண்டரெல்லா மடிவணங்க வாதியிந்திரன் சபையிலுற்றான்
மண்டுபுக ழிந்திரனை வணங்காம லேயிருந்தான்

இருந்தளவிற் புரந்தரற்கு மிசைந்தெழுந்த கோபமதாற்
பரிந்தமுத்து மாலையொன்று பதினாயிரங் கிங்கிலியர்
விரைந்தெடுத்து வந்தவன்றன் மேலிலிடவே சுமந்தான்
வரிந்தபுரந் தரன்தனது மணிமுடியிற் சங்கெறிந்தான்

சங்கமுற்ற தேவர்களைச் சபைதனிலே வெற்றிகொண்டான்
அங்கதுற்ற புட்பதருஊ வடியுடனே பிடுங்கிவந்தான்
துங்கமுகில் களைப்பிடித்து சூறைகொண்டு விலங்கிலிட்டான்
பங்கமெல்லாந் தீர்ந்திடவே பாருலகை யாண்டிருந்தான்

இருந்தவர்கள் கொலைகளவு இசைந்தபொய் சூதுகளியற்றில்
பரிந்தவர்கள் தமைவதைக்கப் பற்பலகட்டளை யமைத்தான்
விரிந்தபொய்யைச் சொல்லினரை விளவுதைக்கும் யானையொன்று
தெரிந்த களவாடினரைத் திருகிவைக்கும் யானையொன்று

ஒன்றிவரு கற்பழித்தோர் உயிர்வதைக்கும் யானையொன்று
மண்டுகொலை செய்பவரை வதைபுரியும் யானையொன்று
கண்டுசீறித் துற்சனரைக் காலுதைக்கும் யானையொன்று
அண்டரயி ராவதத்தும் அறுமடங்காய் நின்றதுவே

நின்றகொலை யாளர்களுந் நீண்டமழு வாளர்களுந்
துன்றுபாம்புக் காரர்களுஞ் சூளவேற்று கழுநிரையும்
மண்டுதிர வேங்கையின்கீழ் வாட்டுங்கொலைக் களமதொன்று
உண்டிதனைக் கண்டவர்க ளுடலமெல்லாந் நடுங்கிடுமே

நடமிடுமென் நாயகனார் நல்லரசில் கொலுவில்வந்தால்
திடமுடனே யிருமருங்குந் திருவனைய பெண்களவர்
படபடென்ற மனத்துடனே பன்னீர்க்குப்பிச் சாமரைகள்
குடநிகர் காளாஞ்சிவகை கோதைநல்லா ரேந்துவரே

ஏந்துமந்திர வாளிரண்டு மிருபுறமு மிருதலைவர்
வாய்ந்து பிடித்தடிபரவி வந்தனை செய்திடுவாரே
சாய்ந்ததுப்பற் படிகமது தானிரண்டு தந்துநிற்பார்
காய்ந்தசாந்து கலவைகொண்டு கசிவுசெய்வார் மங்கையர்கள்

கைப்பிடித்தார் பீலிகுஞ்சங் கால்செய்வட்டம் வெண்குடைகள்
பொற்பிடித்த நற்பிரம்பாற் போந்துறையுஞ் சபைநெருங்கில்
மெய்புடனங் கேயடித்து வீதிசெய்தார் தூதுவரே
ஒப்புடன் பல்தூரியங்க ளொத்தினூதிப் பதிவர்களே

பதியமர்ந்த ராசரெல்லாம் பாண்டியற்குத் திறைகொணர்ந்து
விதிவகையால் குவியல்செய்ய வீதியெல்லாம் பொன்மலையே
மதிகுலத்து ராசனுறை மன்றமெல்லாம் ராசர்களே
அதிவித்தின் சேனையினா லந்தரமெல் லாந்துகளே

எல்லெறிக்கு மிரற்றின்முடி யிலங்குசிரந் துலங்கிடவே
வல்லநெற்றிப் பட்டிகையும் வாகுமணிக் குண்டலமும்
சொல்லுவீர சங்கிலியுஞ் சூழ்ந்தவாகு வலயமுடன்
நல்லமுத்து மாலைகளு நாட்டுநற் கண்டசரமும்

கண்டகல்லுப் பூண்டிளைத்த கைக்கடகம் பொன்னரைஞாண்
கொண்டவீர தண்டைமுதற் குலவுபல வாபரணம்
அண்டர்கட்கும் பூணரிய வாபரணந் தானணிந்து
திண்டிறல்சேர் நீறணிந்து திருநுதலிற் பொட்டுமிட்டு

பொட்டுடனற் சாந்துவன்னப் புழுகொடுகைத் தூரிதொட்டு
நெட்டிளஞ்சேர் பூவணிந்து நிம்பமாலை தோளசைய
நட்டமுற்ற துட்டரெல்லா நாளடங்கக் கோளடங்கக்
கட்டகன்ற பொய்யொளிக்கக் கடும்பவங்கள் கட்டளிய

பவங்களிக்கு மந்தணர்கள் பலவித யாகம்புரியத்
தவங்க ளடியவர்புரியச் சைவசமயந் தளைக்க
அவங்கள் குடிகொள்ளாம லறங்களடி தள்ளாமல்
நலங்கொள்முகில் போலவற்கு நல்லருள் செய்திருந்தனரே

திருந்து கவிவாணருக்குஞ் செப்பிய சன்னாசிகட்கும்
பரிந்து நடமாடினர்க்கும் பாட்டிராகஞ் சொல்பவர்க்கும்
விரைந்துவரு மிரவலர்க்கும் வேண்டுபொருள் கேட்பவர்க்கும்
நிரந்தரமு மள்ளியள்ளி நேர்ந்தபொரு ளீய்ந்தனனே

ஈய்ந்தரசு செயுநாளி லியல்புபெறு மீனவனுஞ்
சேர்ந்தமலர்ச் செந்திருவைச் சீறிவெல்லும் பேரளகைக்
காந்தண்மலர்க் கையுடைய காரிகைகோப் பருந்தேவி
மாந்தளிர் போலடியுடைய மங்கைதன்னை மணம்புரிந்தான்

மணம்புரிந்து மலரணைமேல் மங்கையுடனே மருவிக்
குணம்பொருந்து மனம்விரும்பிக் கோதையுமக் கொழுநனுமாய்த்
தனம்பொருந்தி யிதளமிர்தந் தானருந்திக் கனிவுகொண்டு
கனம்பொருந்து விரகவெள்ளக் கடல்படிந்து முழுகினரே

முழுதுமின்பந் தனைப்பருகி முன்னவனாம் பாண்டியனும்
பழுதடையாப் பத்தினியை பலநாளுஞ் சேர்ந்தளவில்
எழுதுகொடி கட்டுமன்னற் கின்பமுறு மைந்தரவர்
அழுதுவிளை யாடவில்லை யாதலினால் மனஞ்சலித்து

சலித்துமெத்தச் சோபமுற்று தனதுபெண்ணின் முகம்பார்த்துக்
கெலித்துமெத்த விதனமுற்றுக் கிருபைகொண்டு கேழ்மயிலே
குலத்துமுறை தான்விளங்கக் குழவியொன்றில் லாததினால்
அலுத்துதெடி பெண்ணரசே யமையுமினி யில்லறமே

இல்லறமு மிவ்வரசு மிந்நிதியுந் தன்னதென்று
சொல்லுறக்கொண் டாடமைந்தர் தொகைபிறக்க வேணுமெடி
நல்லறப் பிள்ளைகளெமக்கு நற்றொகை யில்லாவிடினும்
வல்லவப் புத்திரர்களொன்று மாமகவாய் வேணுமெடி

வேணுமென்றிங் கில்லறத்தில் வீற்றிருக்கு மாடவர்க்கு
ஆணுமென்ற பெண்ணுமென்ற தாகிலொன்று வேணுமெடி
தானுமிரண் றொன்றிலதேற் தார்குழலே சாத்திரங்கள்
காணுமென்ற தாலுமெங்கள் கருவிளங்க வேணுமெடி

கருவிளங்கக் கற்றிடினுங் கல்விசெல்வம் பெற்றிடினும்
உருவிளங்கும் யானைபரி யொண்சிவிகை யேறிடினும்
குருவிளங்கும் தாய்மார்கள் கூட்டமுற விருந்திடினுந்
தருவிளங்கு சுற்றமெல்லாந் தாரைகொண்டு சூழ்ந்திடினும்

சூழ்ந்தசெங்கோ றனைப்பிடித்துத் தொல்லுலக மாளிகினு
வாழ்ந்தகீர்த்தி யெவ்வுலகு மாறமா லிருந்திடினும்
சூழ்ந்தவட்ட லட்சுமியு மாதிமனை சூழ்ந்திடினுந்
தாழ்ந்தவில்லின் மைந்தரொன்று தான்பிறவா தேயிருந்தால்

இருந்திடும்பேர் கெட்டிடுமே யிசைவரிசை மாண்டிடுமே
பொருந்துடலஞ் சிறுத்திடுமே பேர்ந்தொறுமோர் களைவருமே
திருந்துகொடை தேய்ந்திடுமே செய்தரும மாய்ந்திடுமே
விரிந்தரெதி ரிகழுவரே வீட்டிலொன்றும் மிடியாமே

மிடியுமிடை யிடைவருமே வேதமெல்லா மேசிடுமே
கொடியபிணி பவங்களெல்லாங் கொள்ளைகொடு வந்திடுமே
கடியமரு வலர்களெல்லாங் கைமகிழ்வு புரிவாரே
நெடியபிதிர் தேவரெல்லாந் நிந்தனை செய்திடுவாரே

செய்யநல்ல புத்திரர்கள் சென்மியாத மனையகத்தில்
செய்யமலர்ச் செந்திருவுஞ் சேர்ந்திருக்கி னுங்குறைவே
உய்யுமிள மைந்தர்களே யுலவிவாரா முற்றமது
துய்யற்றபேய் தானுலவுஞ் சூளிடங்கள் போன்றதுவே

இடம்பொருந்து மழலைமொழி யில்லுறைவோர் கேட்டிருந்த
தடம்பொருந்து கீதமெல்லாஞ் சத்துருவைப் போன்றிடுமே
மடம்பொருந்து மைந்தர்வந்து மாறிவிளை யாடவுடல்
விடஞ்சுமந்த குடம்போல வெந்தழிந்து போய்விடுமே

அழிந்து சுடுகாட்டினுக்கோ ராண்மதலை வேணுமெடி
ஒழிந்தபிதிர் வாழ்வதற்கோ ரொண்டொடியு மில்லையெடி
மொழிந்துமுன்செய் பழியாலே மோசம்முற்றி வந்ததெடி
கழிந்தகன்மஞ் செல்வதற்கோர் கருமமொன்று மில்லையெடி

இல்லையெடி யென்றுரைத்து ஏந்தலுஞ்சேர்ந் திருத்தல்கண்டு
வல்லைநிகர் நண்முலைசேர் வஞ்சியும்பார்த் தேதுரைப்பான்
கல்லையொத்த புயமுடைய காவலரே யென்கணவர்
சொல்லுமிந்தத் திக்கில்வருந் துட்டரைச் சங்கரித்தீரே

தீரமுறு திக்கதெல்லாஞ் செங்கோண்முனை செலுத்தினிரே
கோரமுறு தீவினைகள் கொன்றுளக்கி வீட்டினிரே
பாரமுறு முத்தமிழ்க்கும் பரிந்துசங்கம் புரிந்தீரே
வாரமுறு மிரவலர்க்கு மகிமையன்னம் மளித்தீரே

அழியாத தேவரசு மடிவணங்க வாழ்ந்தீரே
எழுதடங்காப் புகழைமகா மேருமிசை யெழுதினிரே
களியாத கோவிலெல்லாங் கட்டிப்பூசை புரிதிந்தீரே
வெளியான தன்மமெல்லாம் மேன்மையொடு புரிந்தீரே

புரியுமுன்செய் தீவினைகள் போயளியா திருந்ததென்ன
அரியமைந்தர் பிறவாத வாச்சரிய மென்னவையா
சரியதுவர் மனதிருக்குஞ் சந்தேகந் தெளிந்திடநான்
உரியவெந்த நாயகனே யோர்வசனஞ் சொல்லுமென்றாள்

வெண்பா

சொல்லுமென் றெதிர்புரிந்த சொற்பொருட்கு முற்கதையை
வில்லியர்கோன் கண்டுவிளம்புவான் - நல்லதொரு
கும்புமுலை யம்புவிழிக் கோதையிந்தக் காதைதன்னை
நம்புமினி யென்றான் நயந்து

உருத்திரனாம் விட்டுணுவா மொண்கமலா சனனிவராம்
பருத்தமூர்த்தி களிலுலகைப் பங்கயத்தோன் படைத்திடவே
திருத்தமுட னரிகாவல் செய்யுமந்த நாளையிலே
பெருத்தவெங்க னீசுரனார் பின்தகனஞ் செய்திடுமே

செய்திடுமும் மூர்த்திகளிற் றேவொருவ னரியலவோ
உய்திடுமங் கவன்றனக்கு ஓர்மகவில் லாததினால்
வையமரு ளீசுரனார் மலற்பதத்தை மனதிருத்தி
நையுதவஞ் செய்தவனு நாடிநிற்கு வேளையிலே

வேளை வருடங்கள்பல மிகவன்று நீங்கிடவும்
நாளுமந்த மாயவனு நற்றவங்கள் விட்டிலனே
காளகண்டன் றன்மனதிற் கருணையொன்று பூத்ததினால்
வாளைவென்ற கன்னியுடன் மால்விடைமேற் றோன்றினனே

தோன்றவந்த மாயவனுஞ் சோதிகண்டு தானெழுந்து
நான்றமலர்ச் செம்பதத்தி னாரணனு மிறைஞ்சினனே
ஆன்றதற் பராபரமா யாதிமுத லானவித்தே
ஈன்றளித்தா யிவ்வுலகை யென்வினையைத் தீர்த்தருளும்

அருளுமன்பில் லேன்செய்வினை யத்தனையு நீபொறுத்து
மருளகற்றி யோர்புதல்வன் வரவருளிச் செய்யுமையா
இருள்விளைந்த நற்களத்தீ ரின்பமுட னின்பதமே
பொருளெனக் கண்டேன்சிவனே போற்றிபோற்றி யெனத்தொழுதான்

தொழுதளவி லீசுரனார் தூயகண்ணன் முகம்பார்த்து
வழுவிலாத நின்றவத்தின் மனமகிழ்ந்தேன் மாதவனே
எழுதமுடி யாதழகு எவ்வுலகுஞ் செவ்விதுவாய்ப்
பழுதகலு குழவியொன்று பண்புடன்வந் துதிக்குமென்றான்

என்றுசொல்லக் கண்ணரவ ரின்பமுற்று மிவ்வுலகை
பண்டுபெற்ற பத்தினியைப் பார்க்கவில்லைத் துதிக்கவில்லை
நின்றனனங் கன்னைகண்ணன் நேரிளையா ளென்றறிந்தோ
அன்றரற்கோர் சத்தியவ னவளுமொரு சத்தியென்றோ

சத்தியின் மும்மூர்த்திகளே தாமதிக மென்றறிந்தோ
முத்திமுத லானபரன் முற்றுணைய தென்றறிந்தோ
சித்தமதில் மாயமுற்றோன் செய்கையிலே கண்மறைந்தோ
புத்திகேடோ விதிவழியோ புகுந்தசெய்கை நானறியேன்

நானறியேன் றேவர்களூ நற்றவத்த ரானவரும்
மானுடரும் ராட்சதரு மருவுசில செந்துகளூ
ஏனவருந் தாயெனவே யெப்பொழுதுமே தொழுவார்
கோனிடத்தின் மறைக்கொடியைக் கும்பிடாது விட்வர்கள்

விட்டவன்முன் பிரிங்கிருஷி விதிவலியின் றிறத்தாலே
மட்டவிழ்பூங் குழலாளை வணங்காமற் பரமனையே
கிட்டிவணக்கம் புரிந்த கேடதனைத் தானறிந்து
ஒட்டியவன் றன்மனத்தின் யோசனையை யறிவமென்று

அறிவினுக்கு மறிவான வாதிசிவன் றன்னுடனே
பிறிவிடமில் லாமலொன்றாய்ப் பெண்கொடியுங் கலந்திருந்தாள்
குறிவிடாத சிவனுருவாய்க் கொம்பனையு மொன்றியபின்
நெறிவிடாத பிருங்கிருஷி நிமலனிடம் வந்தனனே

வந்தவன்றான் பார்ப்பளவின் மாதிடத்திற் காணவில்லை
அந்திவண்ண மேனியனார் ரங்கிருந்தார் தான்தனியே
முந்திமுனி வந்தவன்றன் முகத்தையுற்றுப் பார்ப்பளவில்
சந்தமுறு மைந்துவிழி தான்துலங்கக் கண்டனனே

கண்டனனென் னம்மையுள்ளே கலந்திருந்த காரணத்தை
வண்டமிண்மா மறைமுனிவன் மனதறிந்தோர் தும்பியதாய்க்
கண்டகண்ணோர் மூன்றினையுங் கணிதமுற்றுத் தான்பகிர்ந்து
மண்டுமங்கை கண்ணிரண்டு மற்றப்புற மாகவிட்டு

விட்டுநடு வாகமுனி விரைவிற்றும்பி யாய்த்துளைத்து
கிட்டியர னாரைவல மாகவந்து கீழ்விழுந்து
மட்டுமலர்ப் பாதமது மகிழ்வினுடனே வணங்கக்
கட்டழகி தன்மனதிற் கடியசினம் வந்ததுவே

சினமிகுந்து மாமுனியைத் தேன்மொழிபார்த் துரைப்பாளே
மனமிகுந்து என்னையுநீ வணங்காத செருக்கதனால்
உனதுடலிற் றசைகளெல்லா மூனமுற்றுத் தான்வரண்டு
தனதெலும்பாய்த் திரிகவென்று சாபமுய்த்தாள் தற்பரியாள்

தற்பரியாள் சொன்னவுடன் சத்திறங்கத் தசைவரண்டு
அற்பமுற்று மெலும்புருவா யரியமுனி தடதடென்று
நிற்குமுனி யப்புவியி னிற்பெலமற் றேவினவே
பொற்புறுநற் சங்கரனார் பொல்லொன்றுய்த்தா ரம்முனிக்கே

முனிவனப்போ மவ்வளவில் முன்னவனார் தான்கொடுத்த
தனிவிளங்கு தடியுமூன்றித் தானுமூன்று கான்முனியாய்க்
குனிவுகொண்டு தானுலவிக் கொண்டுதிரிந் தான்முனியே
பனிவிளங்கு மதிமுகத்தாள் சொன்னபரி சாபமதைச்

சாபமதைச் சங்கரனார் தானுமாற்ற முடியாதே
ஆவதிவன் பேரருளை யாரிகழ்ந்தா ரன்னவர்கள்
போவதிந்தப் பரிசதெனப் பூவுலகோர் தானறியக்
கோபமென்ற துலகினுக்குக் கொண்டதொரு காரணமே

காரணமிங் கானதனாற் கண்ணனந்தக் காரிகையைப்
பூரணஞ்செய் திட்டவடன் பொன்னடியைப் பணியவில்லை
ஆரணியுஞ் சினம்புரிந்து யையன்றன்னைப் பார்த்துரைப்பாள்
வாரணியு மாயன்கள்ள வஞ்சகனென் றேயறிந்து

அறிவரிய மானுடரை யலைவுசெய்யுங் கள்ளன்முன்னே
நெறியறியா மறைகளுக்கு நீண்டபெருஞ் சோதியேநீர்
குறியவுரு வுடையவன்முன் கொண்டுவரக் காரியமென்
நெறியொடுசொல் லுதுமெனவே நின்மலையுந் தானுரைத்து

உரைக்கரிய மாயவனே யோர்வசனங் கேட்டருள்வாய்
தரைக்குளுன்னைப் பெருமையென்று தானினைத்த மனச்செருக்கால்
வரைக்கதிபன் றந்தபிள்ளை மற்றவன்றன் கண்ணாலே
நெருப்புருவில் வெந்தழிந்து நீறாமென் றோதினளே

ஓதியம்மை யீசனுட னுயர்கயிலை மீதுசென்றாள்
தீதுவந்து மாயவனுஞ் செய்யமனந் தான்கலங்கி
கோதைசிவனார் முருகன் கூடவுருவே புரிந்து
போதுபூசை செய்துதவம் பூண்டிருந்தான் மாதவனே

மாதவனீ ராயிரமாம் வருடமாக நொந்துதவம்
போதச்செய்யு மவ்வளவில் பொற்கொடிநற் சத்தியுமாய்ப்
பேதைபங்கன் வந்திடவே பிரமன்தந்தை முன்னெழுந்து
ஓதுமம்மை தன்பதத்தி லுடன்விழுந்து தொழுதனளே

தொழுதுசிவ னம்மைதன்னைத் துதித்தியான்செய் பிளைகளெல்லாம்
பழுதுபடா துன்னருளே பார்வைசெய்த பாலகனை
முழுமுதல்வ னளியாமன் முன்னருள்செய் தாளுமென்று
அழுதழுதங் கடிதொழவே யன்னைமகிழ் வாயுரைப்பாள்

மகிழ்வுபெறு நாயகனார் வாக்குமென்றன் பேருரையும்
புகழுமிந்த வுலகமெல்லாம் பொய்கினுமோ பொய்யாதே
இகழகலு மைந்தனுனக் கேபிறக்கும் மென்னிறைவன்
அகழ்வுபெறு நெற்றிக்கண்ணி லக்கினியா லேயழியும்

அழிந்துமீண்டு முன்புதல்வன் அநங்கனாக வீற்றிருப்பான்
தெழிந்தமன மாகவுநீ தியக்மறச் செல்லுமென்றாள்
பொழிந்தகருணைக் கடல்சேர் பூரணியும் பூரணனுங்
குளிர்ந்தகயி லாசமிசைக் கோவிலிரு பேருமுற்றார்

உற்றதிசை தான்தொழுது முரியகண்ணர் வீற்றிருக்க
வெற்றிமதனும் பிறந்தான் விண்ணவர்கள் கண்மருள
சுற்றமதனார் வளர்ந்து சூளத்தேவர் தன்னருளாற்
கொற்றமுறு சிவன்மிசையே கோலமலர்ப் பாணமுய்த்தான்

உய்த்தரனார் கண்ணில்வெந்து முமையருளால் மீளவவன்
கர்த்தனருளாற் பிறந்தான் காரிகையே கேட்டருள்வாய்
மெத்துமுன்செய் விதிவழியை வெல்லரிதே பிரமனுக்குஞ்
சத்திசிவ னல்லவெவர் தானகற்ற வல்லவர்கள்

வல்லவர்க ளில்லையென்று மாறன்சொன்ன மொழிகேட்டு
நல்லதென்றாச் சரியமுற்று நாயகன்றன் றாளிணையிற்
செவ்வியக்கோப் பெருந்தேவி தெண்டனிட்டுக் கேளரசே
சொல்லும்பாவ மென்னசெய்தாற் றோசமுண்டு கூறுமென்றாள்

பயமருந்தும் மந்திரங்கள் பலவிதத்துக் கொலைபுரிந்தால்
வயமருந்திச் செய்பவர்கள் மற்றதுசெய்யத் துணிந்தோர்
நயமருந்தும் பிள்ளைகளை நாசகொலை செய்பவர்கள்
சயமருந்தும் நல்லசர்ப்பந் தானடித்தோர் கோவதைத்தோர்

கோபமுய்த்துச் சிவனடியார் தம்மைக் குழந்தைகளாலே
தாபமுற நெருக்குவித்தோர் தகையறுபேய் சாடவிட்டோர்
கோபமுற்றுக் கோயிலுருத் தூக்கினர்சோலை களளித்தோர்
யாவர்கட்கும் பிள்ளையில்லை யென்றுவேதம் சொல்லியதே

சொல்லுவேத மின்னமிந்த தோஷமது தீர்வதற்கொன்
றில்லையோமாற் றென்றுரைக்க விறையவனு மீதுரைப்பான்
சொல்வதென்ன பெண்ணணங்கே சோதியருள் வேதமுதல்
வல்லகலை யாலுணர்ந்த மதியிநீதி கூறுகிறேன்

கூறும்பிள்ளை கொன்றவர்கள் குழந்தையொன்று பொன்னாலே
பேறுடன் தேவாலயத்திற் பிரதீஷ்சை செயிலகலும்
தேறுமதற்க் குதவிசெய்தோர் சிற்சிலநற் றேவவுரு
மாறுடனே செய்துவைத்தால் மாண்டுடவிடு மந்தவினை

அந்தமுறு நல்லசர்ப்ப மடித்தெறிந்த தோழ்சமது
முந்துநாக ராசனுக்கு முழுதும்பொன்னிற் செய்துவைத்துச்
சொந்தமுறப் பூசைசெய்யச் சொற்றசாப மற்றிடுமே
சுந்தரப்பூஞ் சோலைவெட்டுந் தோஷமது தேவருக்கு

மந்தாரப் பொற்றருப்புரிந்து வைக்கிலது மாறிடுமே
சிந்தைதனிற் றவவிரதம் சிவாலயங்க டீர்த்தமுடன்
மந்திரத்தின் முறையாலு மாற்றுமியந் திரத்ததாலுஞ்
சந்ததமும் போகாத தனித்தோஷ மகன்றிடுமே

இடும்பசுவைக் கொலைபுரிந்தோ ரினியபல வாகனங்கள்
விடும்பரிசிற் செய்துவிழா வீதிவரி னேகிடுமே
தடும்பரனு மரிபரையுஞ் சாற்றுபல தேவுருவும்
கடும்பரிசிற் செய்துபூசை காணிற்கருப் பளியழியும்

அழிந்திடுமே பெரியவர்க ளாலடைந்த சாபமது
மொழிந்தலிங்கங் களவுசெய்து மோசமுற்ற தோஷமது
கொழுந்துமதி யணிந்தபரன் கோதையொடு மேவியருள்
பொழிந்திடுகிற் போவதன்றிப் போகவழி வேறிலையே

இல்லையென்று பாண்டியனா ரெடுத்துரைத்தல் கேட்டறிந்து
வல்லிமிக்க தெண்டனிட்டு மாறனுக்குக் கூறலுற்றாள்
நல்லமறை நாடாரிய நாயகனா ரெங்களுக்கும்
புல்லுமருள் செய்யவொரு புத்திசொல்லு முத்தமனே

புத்தியென்ன பெண்ணணங்கே பொற்புறத்தை நீறுசெய்யு
முத்தமனார் தனைநினைந்து யாதவங்கள் தானியற்றி
வித்தகனைக் கண்டிறைஞ்சி வினையகற்றிக் குழவிபெற்று
நித்தியமாய்ச் செல்வமென்று நேரிழையோ டெண்ணினளே

எண்ணமுற்று மீனவனா ரேற்றதவம் புரிவதற்குப்
பண்ணியயோ சனையிருக்கப் பாண்டியன்செய் மாதவத்தால்
வண்ணமுற்ற மாமலரில் வந்தழலா யுற்பவித்த
கண்ணகையார் தான்பிறந்த காதையெடுத் தோதலுற்றேன்

*"பாண்டியன் அரசிருக்கை முற்றிற்று."*

விருத்தம்

வறுமையகலும் கமலை மருவுவாள் சரசுபதி வாக்கின்மிசை நோக்கமுறுவாள்
வருபுத்தி வித்தையுங் கனபுத்திரர் மேன்மையும் வங்கிஷத்தொடு சேருமே
பொறுமை நிறைவாகு மருவலர் மடிகுவர் எம்புரத்தினிற் பிணிவராதே
புரிகின்ற வரசர்சபை தனில்வென்றி கூடுமே போதமும் வெளிநாடுமே
நெறிமை கொண்டே வணிகர் மகளாகி மீனவன் நீணகரினனல் மூட்டிய
நிமலையபிராமி புகழ் சகலசேன வசிகரீஇ நினதுபத மனதுகந்தால்
மறுமையுறு சொற்கமு நிறையுநிதி வர்க்கமும் மகிழ்வினொடு தந்தருளு நீ
வாலபிரகாசமுறு ஞானமானரூபியே மாதுகண்ணகை யம்மனே

## கலித்துறை

பொன்னுலகம் முதலெண்ணுலகுந் தருபூரணப் பெண்
இன்னுலகந் தனிலே பிறப்பாளிக் கதையுரைக்க
நண்ணுலவும் விதிநாவினும் வெள்ளை நளினத்தினும்
எண்ணுளமும் முறை பாரதிதன் பதமேத்துவனோ

## இரண்டாவது கண்ணகைத் திருவவதாரக் கதை

### வெண்பா

உம்பல முகவோர் கொம்பா ஓங்காரத் துட்பொருளே
எம்பரமன் றன்புதல்வா வேரம்பா — வம்புமலர்க்
கோதை கௌவுமாரி சொர்ணகும்பமிசை வந்தகதை
ஓத மனமீதே யுறை

சீர்விளங்கு மாமதுரைச் செல்வமுற்ற பட்டணத்திற்
கூர்விளங்கு சொக்கலிங்கர் கோயிலொன்றங் குற்றதுவே
ஏர்விளங்கு பூவுலகி லெந்நகற்கு மெப்புவிக்கும்
தார்விளங்கு மித்தலம்பூ சாற்றவினை யொன்றிலையே

இல்லுயர்ந்த மாமதிலு மிலங்குமணிக் கோபுரமுங்
கல்லுயர்ந்த மாடமிசை காணும்பல தேவர்களும்
வில்லுயர்ந்த கோபுரத்தின் மேற்பதுமை தன்னழகும்
இல்லையென்று முள்ளதென்றும் யாவர்களு நாடரிதே

நாட்டமுற்ற தாமரையு நற்குவளை யாம்பல்களுங்
கூட்டமுற்ற செங்குவளை கொட்டிமுத லானவெல்லாம்
ஈட்டமுற்ற கீழ்வடக்கா யெண்ணிரண்டு திக்கினிறைந்
தேட்டமுறு மலர்விழிக்குத் தெவிட்டாதே தேவருக்குந்

தேவர்தேவர் மின்னார்கள் தினமுங் காலைமாலை சென்று
ஆவதிந்தத் தடங்களினு மரியகாவு மாடிடுவார்
காவரசன் றேவரடி காணுந்தெரு வீதியெல்லாம்
மேவவவ் வூர்தியடி மிக்கதொரு நற்றடமே

தடமருவு சொக்கலிங்கர் சாமிதிருக் கோயிலுறுங்
திடமருவு தூண்களுக்குச் செப்புமொப்ப தொன்றிலையே
படமருவு நாகமணிப் பன்னவனார் கோயிலுக்குப்
புடவிமிசை வேறதொன்றைப் புகலுதற்கு முடியாதே

முடிபொருந்து மரசரெல்லா முந்திமலர் சிந்திவரப்
படிபொருந்தும் தேவரெல்லாம் பரிந்துகீதம் பாடிவர
அடிதளிர்போன் மங்கையர்க ளாடலுட னாடவரும்
நெடியகரம் கூப்பியர கரவெனச் சொல்லொலியதிர

திரமுறுமத்தளந் திமிலை சேமக்கலந் தாளவொற்றுக்
கரமுறுகொம்பி யாழ்வீணை காளஞ்சின்ன மூதிவர
சரமுறு நற்சாமரங்கள் தாசியர்கை தானசைக்க
வரமுறு வட்டங்குடைகள் மாமுனிவர் மேலசைக்க

அசையும்வன்ன மீனாட்சி யம்மையொரு பாங்கமரத்
திசைவிளங்கு மொளிதுலங்குஞ் செம்பொனி னாலயநடுவாய்
வசையுஞ்சூல மழுத்துடிமான் மலர்க்கரத்தி லேயிருக்க
இசையும் பவளக்கொடி போலேந்துசடை பின்னசைய

பின்னல்செய்த கொன்றைதும்பை பிறையெருக்குச் சிரமிருக்க
வன்னப்பன்றிக் கோடுமோடும் மார்பின்மிசை யேரிசையப்
பொன்னிற்பாம்பு நன்மணியும் பூரணத் தோளின்மிளிரச்
சின்னச்சங்கு கண்டிகையுஞ் சிரத்தொடையு மேற்புரள

மேல்நிறைந்த வெண்பொடியும் விண்ணும் மண்ணும் போலொளிர
மால்நிறைந்த செம்புலித்தோல் வன்னவரை மீதுதுன்ன
ஆல்நிறைந்த கண்டம்பொன்னி னஞ்சனம் போலேயிலங்க
கால்விருது தண்டைகொஞ்சக் கருதும்பொன்னி னாசனத்தின்

ஆசன்மீ தீஸ்பரியு மன்பர்களு மடிதொழவே
ஈசனெமை யாள்பரம னிறைவன்பொன்னி னம்பலவன்
நேசன்பரன் சங்கரனன் னிருத்தமிட்ட தாண்டவனார்
பேசுஞ்சொக்க லிங்கரெனும் பேர்கொடுமங் கிருந்தனரே

இருந்தவிந்த வண்டமெல்லா மீன்றவெங்க ளீசுபரி
வருந்திநின்றங் கிரந்தவற்கு மனமிளகுஞ் சீமாட்டி
மருந்தனைய திருக்கருணை வாரிசெறி மீனாட்சி
பொருந்துதிருக் கோயிலொன்று பொன்னுலகம் போன்றதுவே

பொன்னுலவுங் கோயில்தன்னிற் போந்துவல மாகவந்து
சன்னதியில் வீழ்ந்திறைஞ்சித் தற்பரன்றன் பூசைகண்டு
அன்னதியிலே படிந்து அந்தணர்க்குத் தானமுய்த்தால்
முன்னேசெய்த வல்வினைகள் முடியுமுத்தி கைவசமாம்

முத்தரைத் தூஷித்தபவ முன்பசுவைக் கொன்றபவம்
பித்தரக்குக் கள்ளுண்டபவம் பெண்கள்கறையை யழித்தபவம்
உத்தமபூசுரர் முதலா வுள்ளவரைக் கொன்றபவம்
இத்தரைக்குள் ளென்னபவஞ் செய்திடினு மித்தலத்தில்(அரக்கு –ஓர் குடிவகை)

தலமருவிச் சொக்கலிங்கர் தன்னடியைக் காணுவரேற்
பலபலென்று கட்டுவிட்டுப் பாதகங்கள் பற்றறுமே
குலவியவர் மனதிலெண்ணுங் குறைவுகளு நிறைந்திடுமே
தலத்துலக மூன்றினுக்குந் தரைத்தலமை புரிவாரே

புரிகளெல்லா மேன்மையுறு பொன்மதுரைப் பட்டணத்தில்
உரியகல்லெல் லாமிலிங்க முறையும்மனுத் தேவர்களே
பரிகுளங்கள் குளிகளெல்லாம் பரகதிகொள் தீர்த்தமதே
தருவனங்கள் செடிகளெல்லாந் தலைவிருட்சக் கற்பகமே

கற்பதெல்லாம் மந்திரமே காண்டல்திருக் காட்சியதே
பொற்புறத்துன் நாடகங்கள் பொற்சடையோன் றிருநடமே
சொற்புறத்து மடப்பள்ளிகள் தூயயாக சாலைகளே
எற்புறுத்துந் துகளதெல்லா மீசர்திரு நீறதுவே

நீறணிந்த மேனியனார் நிமலையுடன் வந்திருக்கக்
கூறுமது ராபுரிமுன் கோடிதவஞ் செய்ததுண்டே
மாறுமது ராபுரியில் வந்துசென்மித் திட்டவுயிர்
தேறுமுன்செய் நல்வினைகள் செப்புதற்கு முடிந்திடவோ

திடமுரைத்த பெண்களவர் சேரவளர் கற்பதனால்
இடமுரைத்த சத்தியைப்போ லெவ்வில்தோறு மிருந்தனரே (இல்- வீடு)
படமுரைத்த பாம்பணிந்த பன்னவன்றன் பட்சமதால்
உடனுரைத்த வீடுதொறு முறைபவரு மீசுரரே

ஈசனுறை கோயிலுடன் ஏரம்பனார் கோயில்களும்
பேசுமுரு கேசனுறை பெருமையுற்ற கோயில்களும்
வாசவுமை கோயில்களு மால்வடுகன் கோயில்களுங்
காசகலு மெத்தெருவுங் காணக்காணத் தோணுமதே

தோணுமிந்தப் பட்டணத்திற் சொக்கலிங்கர் கோயிலிலே
ஆணழகன் மீனவனு மாசைகொண்டே புத்திரர்க்காய்
காணரிய நற்றவங்கள் கருதிச்செய்ய வேணுமென்று
வானுதலாள் மங்கையுடன் வருபவர்க்குப் பொருளுதவி

உதவியன்ன தானமுய்த்து உத்தமர்தன் கோயிலிலே
கதியுடனே வந்துதீர்த்தக் கரையிற்படிந் தேறிமுந்தி
பதியுடன் வந்தனைமுடித்துப் பண்ணவன்றன் வீதிசென்று
விதியுடனே வீழ்ந்திறைஞ்சி வித்தகன்றன் சன்னதியில்

அதிகமனப் பத்தியுடன் னாய்ந்தகலைச் சங்கபதி
துதிபுரிந்து சாந்துவர்க்கந் தூயமலர்த் தீர்த்தமுடன்
அதிகபூசைக் குரியபொரு ளானதெல்லாஞ் சேமமிட்டு
மதியணிந்த தற்பரனை மங்கையுடன் பூண்டவிதி

பூண்டவிதிப் படியியற்றும் பொன்னுருவைத் தாபனஞ்செய்
பாண்டியன் வெண்ணீறுடனே பட்சமுறு கண்டிகையும்
பூண்டுமுறை யஞ்செழுத்தைப் பூரணமாய்ச் சேர்வைசெய்து
ஆண்டுதவ மீதிருந்தான் அமரருங்கண்டோர் தொழுதார்

தொழுதரிய தவமனைத்துந் தூயகூடல் மன்னவனுங்
குழுவுமன்பின் ஞானவெள்ளங் குதூகலித்துப் பரவசமாய்
வழுவகலாகப் புத்திரற்காய் மன்னன்பெரு வாட்டமுற்று
எழுதுபாவை போலிருந்தும் ஈசர்பதஞ் சேவைசெய்தான்

செய்து வருடங்கள்பல சென்றதனாலே மகிழ்ந்து
ஐயனெங்க ளம்மையுட னரியவிடை மீதிவர்ந்து
துய்யகண நாதர்களுஞ் சூழ்ந்து துதித்தேபரவ
வைகைமன்னன் கண்ணெதிரே வந்துதோன்ற நின்றனரே

நின்றபடி கண்டமன்ன னெஞ்சுகுளிர்ந் துய்ந்தேனென்று
பொன்றிகளுஞ் செஞ்சடையோன் பொற்பதஞ் செந்தாமரையில்
ஒன்றவிழுந்தே யிறைஞ்சி யும்பருக்குங் காணரிய
மன்றன்மலர்ப் பாதமது வந்ததிரு மாயமென்ன

மாயவனுந் தூயவன்ன வாகனனுந் தேடரியோய்
சேயவனைப் பெற்றவளே திருக்கவுரி நாயகமே
காயமுற்று நீறணிந்த காளகண்டப் பெருமாளே
தாயுந்தந்தை யாயுயிரைத் தான்புரிந்த தற்பரமே

தற்பரனே முப்புரத்தைத் தகனமிட்ட தனிப்பொருளே
வெற்பனலி னுருவாகி விண்ணுமண்ணு நீண்டவனே
கற்புருவச் செப்புமுலைக் கன்னியொரு பங்கினனே
பொற்புருவ மாமதனைப் பொன்றவிழித் திட்டவனே

திட்டமுறு சங்கரனே் தில்லைவன மீதுநின்று
நட்டமியற் றிட்டவனே நானுமக்கு நல்லவனோ
எட்டவியலாத வுன்னை யிப்பிறப்பிற் கண்டேனையா
மட்டுமலர்ச் செம்பதமே போற்றியென்று வாழ்த்தினனே

வாழ்த்துமாறன் றன்முகத்தை மாதுபங்கர் பார்த்துரைப்பார்
காழ்த்தயங்கு மித்தவத்தால் கட்டுவிட்ட துன்முன்வினை
நாழ்த்தயங்கு முன்றவத்தி நான்மகிழ்வ தாகவந்தேன்
வாழ்த்தயங்கு முன்மனதி லுற்றதென்ன சொல்லுமென்றார்

என்றவுடன் பாண்டியனு மென்றனக்கோர் பிள்ளையில்லை
நன்றியுடன் றந்துவிடு நாயகமே யென்றுரைத்தான்
கொன்றைபுனை செஞ்சடையோன் கொற்றவனே யுன்றனக்கு
நின்றதொரு பெண்மகவு நினக்களித்தே னென்றனனே

என்றுமொழி கேட்டவனு மின்பமுற்றுச் செம்பதத்தின்
முன்னம்விழுந்தே தொழுது மூன்றுலகு மீன்றவள்தன்
வன்னமலர் பாதமும்பின் வந்தனை செய்திடுமளவிற்
கன்னமுலைக் கச்சதனைக் காற்றகற்றி விட்டதுவே

விட்டவிடத் தன்னியத்தை மீனவன்கண் கண்டவுடன்
வட்டச்செப்போ நல்லமிர்தம் வைத்தவன்னப் பொற்குடமோ
இட்டமதன் பூமுடியோ யானைக்கோடோ விளனீரோ
பட்டமிதற் கென்னவென்று பட்சமுற்றுச் சிரித்தானே

தானளியும் செய்கையது தன்னைவிடா தன்னதினால்
வானளித்து மண்ணளித்து மற்றுமுயிர் தாமளித்துங்
கோனொளிக்கு மின்னுருவங் கொண்டுநின்ற பைந்தொடியை
ஞானொளிப் பாலூட்டியுயிர்க் கென்றுமுத்தி செய்முலையை

செய்யவனு மாமுகனுந் திருவமுதம் பருகுமுலை
தீயவன்கண் கண்டவுடன் சிரித்துவிட்டா னச்சணமே
மேவினதே கோபமென்னும் வெய்யகன லம்மைகண்ணிற்
தூயகன லப்பொழுது சுலவிமண்ணும் விண்ணதெல்லாம்

எல்லாமொரு மண்ணளவி லீறுசெய்யுங் கோலமதாய்
செல்லவெங்க ளீசருட சேயகட லானதெய்வம்
புல்லியெங்க ளம்மைதனைப் போற்றுதுநீ கோபமென்று
சொல்லவெங்க ளம்மைகனற் றொகையடங்கிப் பொறியிரண்டாய்

பொறியிரண்டும் மாமரத்தின் பூவிரண்டிற் போய்விளவே
நெறிமருண்ட பாண்டியனை நின்மலைபார்த் தேதுரைப்பாள்
அறிதிரண்ட முலைமிசைநீ யாசைகொண்டு சிரித்ததனாற்
குறிதிரண்ட கூடலுடன் கொன்றிடுவே னுன்னையுநான்

உன்னிடத்தி லென்கணவ னுதவுகின்ற பிள்ளையினால்
நின்னிடத்தி லிருந்தமுலை நேர்திருகி முன்னெறிந்து
பொன்னிடத்துக் கனல்பரப்பிப் புரமெரிப்பே னென்றுசொல்லி
மன்னிடத்துக் கையனையும் வரவளைத்துப் போயினளே

போயமர்ந்து புண்ணியனைப் பொற்கொடியாள் தெண்டமிட்டு
சேயமர்ந்த மீனவற்குச் செப்பிய சாபப்படியே
மீயுயர்ந்த பிள்ளையொன்றாய் மேவவரந் தாருமென்றாள்
தூயமர்ந்த தேவரவர் சுந்தரிக்கும் விடைகொடுத்தார்

கொடுத்தவிடை பெற்றகொடி கொம்புமாவின் பூமிசையேய்
வடுத்தயங்கி நாளினிமேல் மாறனியல் கூறலுற்றேன்
எடுத்தவரை வளைத்தபிரா னிருங்கயிலை சென்றபின்பு
உருத்தயங்குந் தன்மதுரை யொண்டொடி யுற்பவித்தபின்னர்

பின்னற்சடை யண்ணலவர் பெருந்தவத்தில் வந்ததுவும்
உன்னற்கருஞ் சேயதொன்றை யுதவினதுந் தான்கௌரி
தன்னதனத்தால் நகைக்கத் தற்பரியாள் கோபமுற்று
பன்னற்கருஞ் சாபமிட்ட பான்மையுங்கேட்டே விழுந்தான்

விழுந்தவ னேக்கம்பிடித்து மெய்யறிவு தானடங்கி
தெளிந்துமன மூச்செறிந்து சிந்தைநொந்து மிகக்கலங்கி
கொழுந்தொளிதன் சினத்தாலே கொண்டவந்தச் செய்கையெல்லாங்
களிந்ததுயில் மீதுகண்ட கனவெனவே மாய்ந்துவிடும்

மாய்ந்துவிடும் வினையிதெங்கண் மாதுபங்க னார்தமக்கு
ஆய்ந்துபூசை செய்வனென்றங் கருள்மனதிற் றானிருத்தி
சாய்ந்தமலர்த் தீர்த்தமெல்லாஞ் சகலசம்பத் தாதிதொட்டு
ஏய்ந்தபல பொருள்களெல்லா மியல்பினீய்ந்து தங்கினனே

தங்குமந்தக் கோயிலிடந் தான்வளர்ந்த மாமரமே
அங்குமது குறைவிலதா யனுதினமுங் காய்பழமே
பொங்குமொரு நாளொன்றுக்குப் பொன்னிறத்திற் பழமுமொன்று
இங்குவிழும் பூசைசெய்ய வியலுமந்த நேரத்திலே

நேரமெல்லா மீனவனு நேர்ந்துபூசை செய்தனனே
வாரமுற்ற பத்தினியார் வந்துற்பவ மானவடு (வடு-மாம்பிஞ்சு)
பாரமுற்றுக் காய்நிறத்தோர் பழத்துடனே விழுந்ததுவே
தீரமுற்ற மீனவனுஞ் செய்யகனி தனையெடுத்தான்

எடுத்தசெங்கா யானதொன்றை யிசைந்தகுட மீதுவைத்தான்
தொடுத்தபழ மானதொன்றைச் சுந்தரற்குப் பூசைசெய்தான்
கடுத்தயங்கு மணிமிடற்றுக் காளகண்ட ரருளாலே
அடுத்தமற்றப் பழமெடுக்க வரசனும்போய்ப் பார்த்தனனே

கலித்துறை

பார்த்திட மண்முதலா முலகாமும் பரைகௌரி
மூர்த்தியிடக் கொம்பதாகி வித்தாகி முளைத்தருளே
சேர்த்தருள் செல்விசிவகாமி தேக சிறுவுருவாய்ப்
பேர்த்திடுபொற் குடந்தனிலே தவழ்ந்து பிறந்தனளே

மன்னவன்போய்ப் பார்ப்பளவில் வன்னச்சடைப் பொன்வளையல்
சின்னத்தோடு பின்னல்மணி செந்நிறத்திற் கன்னசரம்
வன்னப்பட்டம் பொன்னிற்சுட்டி வட்டமூக்குத்தி மருவும்
பொன்னின்மாலை வன்னரைஞாண் பூண்டுசிற்றாடை யுடுத்து

உடுத்திரள் போலாகுமணி யுட்தரிசு நாகமணி
நடுத்தயங்க செய்தசிலம் பொன்றுவலக் காலினண்ண
அடுத்ததொரு சூரியன்போ லக்குடத்தின் மீதொளியே
கொடுத்தனளே தொண்டர்செய்யுங் குறைதவிர்க்கு மிறையவளே

இறையடுத்த தாமரைபோ லிருபதமுந் திருக்கரமுங்
குறையகற்று தொண்டர்களுங் குறிக்கரிய பாதமது
முறைதெரியப் பெற்றனளென் முதல்வியரு ளாரறிவார்
துறையரச னம்மைதனைத் தோற்றங்காணப் பெற்றனளே

பெற்றமுய்த்த பிஞ்சகன்றன் பேரருளிற் பெண்ணணங்கு
உற்றதனா லம்மதுரை யுறுந்தலைமை பெற்றதுவே
பற்றுவைத்தோர் சித்தமதிற் பானிறைந்த வாறதுபோற்
கொற்றவன்றன் பொற்குடத்திற் குழுந்தைவந்து பிறந்ததுவே

பிறந்தசெம்பொற் குடந்திறந்தப் பேரரசன் பிள்ளைதன்னை
சிறந்தகண் கண்டவ்வளவிற் தேகமெல்லாம் குளிர்ந்தனனே
திறந்திறம்பா மீனவனைச் சேயிழைகண் கண்டவுடன்
அறந்திறம்பா வாய்திறந்தென் னம்மைதுடித் தழுதனளே

அழுதளவின் மீனவனு அழகுசெம்பொற் கரத்தாலே
முழுதுமன்பு நின்றொழுக முன்னம்வாரி யணைத்தானே
செழுமலர்ச்செந் திருவெனவே சேணொளிகள் பரம்பினவே
பழுதுபடாப் பட்சமுடன் பாலகியை முத்தமிட்டு

முத்தமிட்டு மார்பணைத்து முன்னவனார் தன்னருளால்
உத்தமத்திற் பெற்றேனென்று மொருமதர்ப்புண் டாயினனே
சத்தசமுத்திரம் வளைந்த தாரணியை யாழும்மன்னன்
அத்தருணம் பெற்றமகிழ் வாருரைக்க வல்லர்பலர்

வல்லபல வாத்தியமும் மணிமுரசு நின்றதிர
நல்லகுடை தான்பரம்ப நங்கையர்கள் வாழ்த்தெடுப்பச்
சொல்லுமட்ட மங்கலமுஞ் சூழவந்த மீனவனும்
புல்லுமணி மண்டபத்திற் புத்திரியோ டேகினனே

ஏகுமிந்த மீனவனை யிவன்மனைவி கண்டவுடன்
ஓகைகொண்டு வாரியணைத் யொண்டொடியாள் முத்தமிட்டாள்
வாகையுறு மங்கைதன்னை மார்பணைத்தா ளப்பொழுது
தாகமுறு செம்முலைப்பால் தாரைகொண்டங் கோடியதே

ஓடுமுலைப் பாலதனை யுத்தமிக்குத் தான்கொடுக்கக்
கேடுவரு மென்றுபல்லி கிருபையுடன் சொல்லியதே
கூடுபல காகமெல்லாங் கூட்டமுற்றுக் கரைந்ததுவே
தேடிவைத்த கும்பமொன்று திடுக்கெனவே வெடித்ததுவே

வெடித்தமுகில் மேலிடியு மின்னுமொன்று கான்றதுவே
நடித்த பெருந்தேவியுடன் நடுக்கமொன்று சேர்ந்ததுவே
பிடித்தகொம்பி னோடசைந்த பெருங்கொடியு மிற்றதுவே
படித்தலமேற் கெடுதல்மிகப் பற்றுக் குறியானதுவே

ஆனவிந்தத் துன்னிமித்த மனைவருக்கும் மனம்வருந்தக்
கோனுமெண்ணி யையமுறக் கோதையொன்று கூறினளே
தோணுமிந்தப் பிள்ளைவரத் துன்னிமித்தந் தோணினது
காணுமையா வென்றளவிற் கவுரியர்கோன் கட்டுடரைப்பான்

உரைக்குந் தவஞ்செய்ததுவு முத்தமனார் வந்ததவு
பரைக்குமனங் கன்றினதும் பரனருளிச் செய்ததுவும்
வரைக்கரசி சென்றதுவும் மாங்கனிதான் வீழ்ந்ததுவும்
புரைக்கொடி வந்துற்றதுவும் பூழியர்கோன் சொன்னனனே

சொன்னமொழி கேட்டுமந்தச் சுந்தரியுந் துளக்கமுற்று
அன்னசெய லானதென்றங் கருள்விளங்கி மனந்தெளிந்து
பன்னுபல தானமுய்த்துப் பத்தினியைத் தொட்டில்வைத்து
மன்னுமந்த ராசனுமாய் மேவினரே நித்திரையில்

நித்திரையிற் பாண்டியனார் நெடுங்கனவு கண்டனனே
பத்தனியு மோர்கனவு பட்சமுடன் கண்டனளே
வித்தகனுந் தானெழுந்து விளங்கிழையே கேளுமிப்போ
சித்தமதிற் சொற்பனமு மொன்று கண்டேன் தேன்மொழியே

தேன்மொழியே யென்றெனது தேகமெல்லா மோர்பிணியே
தான்வெளியாய் நொந்தேனெடி தகவுடனோர் வயித்தியனும்
ஆன்வளிவந் தென்னுடைய வரியகைதொட் டாராய்ந்து
மீன்விழியே மூலியொன்று விரைந்தருந்தச் சொல்லினளே

சொன்னமூலி யெங்கேயென்றேன் றூரமுறு காட்டகத்தில்
அன்னதுண்டு போய்ப்பிடுங்கென் றடையாளஞ் சொல்லினனே
இன்னதினா லென்னபல னென்றிடநா னேதுரைப்பேன்
மன்னவனே யுன்னுரத்தின் மாயப்பிணி மாறுமென்றான்

அனம்பொருந்து நன்னடையீ ரதனைநான்போய்ப் பார்ப்பளவில்
கனம்பொருந்து மூலிதன்னைக் காணவில்லை வானுதலே
மனந்தியங்கி நின்றேனென்றன் மாதாவந்து கண்டனளே
இனம்பொருந்து தாய்பதத்தில் யான்விழுந்து தெண்டமிட்டேன்

தெண்டனிட வந்ததென்ன செப்புமென்றா ளப்பொழுது
கண்டபிணி தன்வரவுங் காடுவந்த காரணமும்
மிண்டுமென்றன் றாயவட்கு விரைவாகச் சொன்னேனவள்
மிண்டுனது தேகபணி விட்டிடுமென் றுரைத்தனளே

என்றவுட னென்னுடம்பை யானுமுற்றுப் பார்ப்பளவில்
நின்றபிணி யொன்றுமில்லை நிறம்பிறந்து நின்றெனெடி
அன்றெனது தாய்முகத்தை யப்போதுற்றுப் பார்ப்பளவில்
பொன்றயங்கு தெய்வவுருப் போலழகு கொண்டதெடி

கொண்டழகைக் கண்டவுடன் கோதைமோக மானெனடி
கண்டவனைப் பார்த்தவுடன் கடுநெருப்பாய் முகமிருக்க
கண்டனெடி யப்பொழுது கழுத்திலவள் பூண்டிருந்த
வெண்டரள மாலையொன்றை விரைவறுத்தென் முன்னெறிந்தாள்

எறிந்தளவில் காணவில்லை யென்னையீன்றாள் போனவிடம்
செறிந்தமுத்து மாலைதன்னைச் சீக்கிரநான் கையெடுத்து
உறுந்தரள மாலையதை யுன்கழுத்திற் பூட்டினனே
பெறுந்தகைசேர் மாலையது பெரியநாக பாம்பாச்சே

ஆச்சுதெடி பாம்பதுபின் னக்கினியைக் கக்கிவிட்டு
போச்சுதெடி யக்கனலே பூண்டதெடி தேகமெல்லாம்
கூச்சமெடி யென்றனக்குக் கொண்டதெடி வெகுபயங்கள்
மூச்சுவிட்டங் கெழும்பிவிட்டேன் மொய்குழலே யென்றுரைத்தான்

வெண்பா

உரைத்தான் றனது கனவுத்தமியுங் கேட்டவுடன்
தரைக்கரசன் சொற்பன நான்றான் கண்டேன்- விரைக்கமழுந்
தாதழவு நிம்பமலர் றார்புனையு நாயகனே
ஓதுவதென் னென்றிதை நானூற்று

உற்றெமது பிள்ளையிவ ளோதுவாலை வடிவாகிச்
சிற்றம்பல நாதரிடச் செல்வியம்மை தன்னுருப்போல்
பற்றுமொரு கைச்சிலம்பு படரும் வேப்பம்பத்திரியும்
மற்றுமவள் கைப்பிடித்து மனதில்வெகு கோபமுடன்

கோபமுற்றுத் தலைவிரித்துக் கோதைமணி வாசல்வந்து
வேகமுற்று மீனவனே விளங்கெனது வழக்கையென்றாள்
ஏகமுற்று நீரவளை யென்னவழக் கென்றுசொன்னீர்
நாகமுற்ற செம்மணிசேர் நற்சிலம்பைத் தானெடுத்தால்

தானடுத்த நாயகனைத் தாழ்வுசெய்த பாதகத்தை
மீனடுத்த வெண்கொடியாய் விளங்கவந்தே னென்றுசொல்லி
மானடுத்த வசையுரைத்து வாதுசெய்து தன்காலிற்
கானடுத்த நற்சிலம்பைக் கற்படியின் மீதடித்தாள்

அடித்த சிலம்பக்கினியா யாழநின்ற பட்டினத்தை
முடித்திரண்டு தெருவைவிட்டு மூண்டிடநான் விழித்தேனென்றாள்
கடித்தயங்கு மார்புடையீர் கண்டகன வென்கனவும்
இடிக்குமிடி தன்னுடனோ ரிடியைநிக ரெமக்குமென்றாள்

என்றவுடன் மீனவனு மேங்கிநொந்து சோகமுற்றுத்
துன்றுமலர்க் குழலாளே துக்கமறப் பெற்றபிள்ளை
யின்றெமக்குத் தீங்குசெய்யு மிதுவகற்ற வேணுமென்றான்
அன்று அந்தவுத்தமியும் அவன்முகம்பார்த் தேதுரைப்பாள்

உரைக்குமெங்கண் மனையகத்தி லொருகுழந்தை வேணுமென்னத்
தரைக்குள்வந்து சேர்ந்தபிள்ளை தன்னைவிட ஞாயமுண்டோ
திரைகடல்சூ ளிப்புவிக்குந் தேவுலகுக்கும் வசையே
புரைக்கொடிதன் வார்த்தைதன்னை போற்றிப்பாரு நாயகமே

நாயகன்றான் கேட்டவுடன் நல்லதென்று சோதிடரைப்
போயழைத்து வாருமென்று போகவிட்டான் றூதுவரை
சேயிளைத்த நூலளைந்த தேசிகரைக் கூட்டமுடன்
ஆயழைத்து வந்தவர்க ளரசன்முன்னே போகவிட்டார்

விட்டவந்தச் சோதிடர்கள் விரைவிலவன் பதம்போற்றப்
பட்டமுறு மீனவனும் பார்த்துரைப்பான் சோதிடரே
இட்டபிள்ளை யென்றனக்கு மிப்போவந்து சேர்ந்தபலன்
நட்டநயங் கூறுவீரே னல்லசங்கை செய்வேனென்றான்

என்றுசொல்ல நற்கணித ரெழுதுநூலின் முறைப்படியே
துன்றவெண்ணி நன்மைதின்மை சொல்லிவிடக் கேளரசே
உன்றனுடை பிள்ளைவந்திங் குற்பவித்த சொற்குணத்தால்
நன்றலவே மீனவனே நட்டமென்று கூறினரே

கூறிடுமிக் கோற்றொடியாள் குலப்பெருந் தெய்வீகமாச்சே
மாறிடமுன் சத்துருவாய் வந்திடவு மதுரைநகர்
நீறிடவுங் கூறிடவு நிகளுருவ மாறிடவுந்
தேறிடவுந் தெய்வச்செயல் செய்திடவும் போகுதென்றார்

என்றுசொல்ல வேறொருவ னிந்தப்பிள்ளை வந்தவுடன்
துன்றுநீயோர் சொற்பனமே துற்குறிபோற் கண்டதென்றான்
அன்றிமற்றோர் சோதிடனு மரசன் மனையாள்கனவு
கண்டதுவு முண்டதென்று கன்வினையுங் கூறிவிட்டான்

விட்டளவில் வேறொருவன் விரும்பிநீபெண் தன்னிடத்தில்
இட்டமக வீய்ந்தளவி லிருதனத்திற் பால்சொரியும்
நட்டமுற்ற கெவுளிசொல்லு நற்கொடிதா னற்றுவிளுந்
துட்டக்குறி கண்டதென்று சொல்லினனோர் சோதிடனே

சோதிடம் பொய்யாமலொன்று சொல்லுகிறோங் கேளரசே
மாதிவளா மாங்கனியில் வந்துகும்பத்தே பிறந்தாள்
ஆதலினாற் கூடலுக்கு மழிவுவரு மென்றுரைத்தார்
காதலினா லோவம்பிகை கண்ணில்வந்த கனலிதென்றார்

கனல்சொரிந்த பொறிவிழுந்து கண்ணிகட்டிக் காய்த்தபழம்
தனல்சொரிந்த தெனவிழுந்த தடமதுரை யழிக்கவென்றான்
அனலுருவப் பெண்பதத்தி லானதொற்றைச் சிலம்பதென்றார்
மனமயக்கப் புத்தியினால் வந்ததிந்தப் பிள்ளையென்றார்

இந்தமங்கை போற்றலுனக் கிசைவதில்லை கேளரசே
முந்தியமூன் றுலகமெல்லா முற்றுமீன்ற பொற்கொடிகாண்
சிந்தைகன்றி மாமதுரை தீயிடவும் வேறுலகஞ்
சந்ததமுந் தாபரிக்கத் தான்பிறந்த பிள்ளையென்றார்

என்றமொழி கேட்டமன்னன் னிப்புதல்வி தன்னையினிக்
கொன்றுவிட வேணுமென்று கூறுகின்ற வேளையிலே
கன்றவில்லைக் கைப்பிடித்துக் காசினியை யாழுமன்னா
இன்றளியும் கொன்றுவிட்டா லிம்மதுரைப் பட்டினமே

பட்டமுற்றோர் பேளைசெய்து பத்தினியைப் பூட்டிவைத்து
திட்டமுற்ற பெட்டகத்தைத் தென்னரசே யிப்புவியில்
வட்டமுற்ற பொற்கடலின் மாறுதேசம் போகவிட்டால்
நட்டமிப்போ சூழ்வதுவு நாடாதென்றார் சோதிடர்கள்

சோதிடர்கள் சொன்னமொழி சுடர்முடியோன் கேட்டளவில்
ஈதுசரி யென்றுசொல்லி யீர்ந்துசொர்ன்னஞ் சோதிடர்க்குப்
போதுமென்ன வேயனுப்பி பூழியனார் பேளைசெய்து
கோதையர்கள் நின்றிரங்கக் குலக்கொடியைத் தானெடுத்து

எடுத்துவன்னப் பொற்கொடியை யிந்திரநீ லிரத்தினம்போல்
அடுத்துவன்னப் பெட்டகத்தி லணிசிறக்கத் தான்வளர்த்தி
தொடுத்த பூட்டிலாணியிட்டுத் துறப்பையதின் மீதிலிட்டு
வடுத்தயங்கு நீலவிழி மாதைக்கடற் றள்ளினனே

தள்ளிவிட்ட பெட்டகமோ தாழ்கடலிற் றானசைந்து
மெள்ளமெள்ள வந்தாளெங்கள் வினையகற்றும் புனையிளையே
தெள்ளுதொண்ட ருள்ளமதிற் சிவனுறைந்த சித்துருப்போல்
வள்ளமணிப் பெட்டகத்தில் மாதிருந்து வாறதுவே

வாறமர்ந்த பாற்கடலின் மாசுணத்தி னாசனத்தின்
பேறமர்ந்த மாயவனார் பெற்றதுயி லொப்பதெனப்
பாறமர்ந்த பாற்கடலிற் பாவைவன்னப் பெட்டகத்தில்
ஊறமர்ந்த யோகதுயி லொண்டொடியும் பெற்றனளே

பெற்றதொண்டர் செய்பவமும் பெரும்பிறப்புந் தீரவருட்
சொற்றகவு மாரிதிரை சூழ்கடலிற் றோன்றினளே
உற்றசிவபத்தி செய்யு முத்தமமாம் வணிகருக்கு
சுற்றமகிழ் மாநாகர் சூழுமனை மேவவென்று

என்றுமன மீதிருத்தி யிசைந்தமணிப் பெட்டகத்தை
துன்றுசோழ மண்டலத்திற் றுறைக்கணித்தாய் விடுகவென்று
அன்று வாதராசனுக்கும் அருங்கடற்குங் கட்டுரைத்துச்
சென்றனளே சோழநகர்த் திசைநோக்கிக் கண்ணகையே

" கண்ணகை திருவவதாரம் முற்றிற்று "

விருத்தம் அரிதானபுரவி மகமாயிரஞ் செய்யினும் மந்தணர்க் காவீயினும்
அளவற்ற மாமாங்கமாடினுங் கன்னிகாதானம் மளித்தபோதும்
பெரிதானபலவிரத மதுவாற்றினும் முறைமைபேணி நற்பூசைசெய்யினும்
பெறவரியநின்பாத முனதுமனதன்பான பெருமைகொடு காணவருவாய்
உரிதானவென் மனதிருக்கும் பெருந்தெய்வமுலகறிய நீயல்லவோ
உறைகின்ற குறைகண்டுமது நீக்கவேறுபிறவூரவர்கள் வருவதுண்டோ
கருதானெனும் பெரியபாண்டியனை வென்றுமிகு கட்டருள்புரிந்தவுமையே
காவுசெறியெகின்மலர் மேவியருளோடுமுறை கண்ணகைப் பெண்ணரசியே

மூன்றாவது கோவலர் அவதாரக் கதை

வெண்பா

எக்கலைக்கு மெவ்வுயிர்க்கு மெப்பொருட்கு மெக்குணமாய்
மிக்கபுகழாக விளங்கி நின்றான் - தக்கபுகட்
சங்கரன்றா னம்பலத்திற் றானடனமாடுபத
மிங்கிருதினேன் மனதிலே

வேறு

சீர்பொருந்து நாமகளுஞ் செப்பரிய செந்திருவும்
கூர்பொருந்து மேகதந்தக் குஞ்சரனுங் கொன்றைதும்பைத்
தார்பொருந்துந் சடிலவனுந் தற்பரியும் பொற்புடைய
பேர்பொருந்துஞ் சயமகிழ்வு பெற்றசோழ நாடுகற்பே

கற்புடையோர் பொற்புடையோர் கற்றகவி வாணர்களும்
நற்புடையோ ரில்லறமும் நாடுதுறவறத் தொகையு
இறப்புடையோர் மகிழ்நற்கின்ப மென்நாளும் பெருக்குவது
சொற்புடையோர் தவறாத சோழதேச மாதவமே

மாதமூன்று மழைபொழியும் வருஷமூன்று நெல்விழைவு
போதமொன்று சிவநூலும் புராணமொன்றுங் குறையாமல்
ஓதுசிவ சாலைகளு முற்றவன்னச் சாலைகளும்
வேதவன்னச் சாலைகளு மிக்குமந்த நாடதுவே

அந்தணர்க ளருந்தவர்க ளரியதொரு சாந்திநெறி
மந்திரங்க ளியந்திரங்கள் வழிபடுத லருள்வழக்கஞ்
சுந்தரங்கள் பவுத்திரங்கள் சொகுசுபல பவுசுகளும்
வந்திருக்கு மிருப்பிடமாம் வடிவுபெறு மந்நாடே

அந்நாட்டு மறையவர்க ளரனடியை வழிபடவும்
பொன்னாட்டு மலர்சொரிந்து பூசைபல புரிவதுவும்
பின்னாட்டு மகமுறைமை பேணுவது மற்றவர்க்குஞ்
சொன்னாட்டு வினைதுடைக்குந் தொகைவிரிவு தொலையாதே

தொலைவரிய சிவபூசை தும்பிமுகன் முதலான
பலகடவு டிருப்பூசை பாடல்பயன் பாவிரதங்
கலையளத்தல் பொருள்விரித்தல் கற்றல்கற்ப தீவதுவும்
நிலையளத்தல் மறையவர்க்குந் நேருறுத்தல் வேறிலவே

வேறுமொன்று செய்யாரே விடியமுன மெழுந்திருந்து
கூறுபுனல் தனில்முழுகி குழைத்துநீறு தனையணிந்து
ஏறிவந்தோ னருணினைந்து இலங்குமணி வடந்தரித்து
மாறின்மந்திர முறையதெல்லாம் வகைவகை யுச்சரிப்பாரே

உச்சரித்து முடிப்பளவி லுதயவனும் வெளிவருவான்
எற்சரிப்போன் றனைத்தொழுவோ ரில்மடவா ரெழுந்தளகாய்
பொற்சரிக்குங் கோமயத்தாற் புனலொழுகி தரைமெழுகிக்
கற்செறிக்கும் புனல்சொரிந்து கடியமுற்ற மலங்கரிப்பார்

அலங்கரிக்குங் குழன்மடவா ராகநிறை கொள்கலங்கள்
இலங்குகின்ற மணிவிளக்கோ டேற்றபல வெண்கலங்கள்
துலங்குசாம்பர் புளியாலுந் துகளகற்றி நீராட்டி
வலங்குமந்த விருப்பிடத்தில் வானீரிட் டாட்டுவரே

ஆட்டியபின் னீர்கயத்தி லணியிளையா ருடையொடுபோய்த்
தோட்டலருந் புனல்குடைந்து தூசுகும்மி கரையில்வந்து
வாட்டலரின் நகைவிளக்கி மறுமுறைநீ ராடிவந்து
மாட்டமர்ந்த பரனையுன்னி மந்திரத்தி னீறணிந்து

அணிந்துமந்திர முச்சரித்து அருக்கனுக்குப் பூசைசெய்து
வணிந்ததுகில் மருங்குடுத்து மணிப்பணிகள் தான்திருத்திக்
தணிந்தவொளி யுதயமெனத் தானணிந்து மாளிகைக்கு
துணிந்துமீளு மளவிரவிர்த் தோகையென்னலா மிவ்வகையே

இவ்வகையாய் முக்கால மெம்பெருமான் மந்திரத்தை
கவ்வையுட னேசேவித்து கருதுமிந்தப் பவுத்திரமாய்
எவ்வெவரு மாலைதனி லியன்றவில்லின் விளக்கேற்றில்
அவ்வில் வறுமைகளணுகா தெனவேற்றி யகங்குளிர்ந்து

குளிர்ந்தமரைத் தடமெனவே கொடியிடையுங் கொழுநர்களு
மொழிந்தமொழி மறவாமன் முழுதுமின்பந் தவறாமல்
எழுந்தசுடர்க் குலமெனவே மிந்திரபுர மிதுவெனவும்
மொழிந்தநாலு வருணர்களும் பொறுதிகொடு வாழுவரே

வாழ்வுசெறி யந்நகரில் வறியவர்கள் கிடையாதே
நாளுறவந் தாலல்லது நல்லுயிர்க ளழியாதே
காள்வுசெறி விடவரவங் கரடிபுலிப் பயமில்லையே
ஆளுறவு பேய்பிடிக ளரியபிணி பலவிலையே

இல்லறங்கள் தவறாம லியன்றபடி தானியற்றி
நல்லறங்கொள் துறவறமு நல்வருண முறைபுரிவார்
சொல்லறங்கள் கோள்பகைகள் சூழும்பவத் தொகுதிமுதல்
அல்லலுக்கா றாகும்மறம் அகற்றிவிட்டுங் கொல்முறையே

கோலமுறு தவனவண்ணக் குடைநிரம்பப் புடைநிரம்பச்
சீலமுறு கலைபரம்பச் சிவசமைய நிறைந்துலவக்
காலமொரு மூன்றினையுங் காட்டியஞானம் மலியப்
பால்மலியப் பசுமலியப் பராபரித்தான் சோழராசன்

சோழதுரை யரசுபுரி சூழ்காவிரிப் பட்டணத்தில்
வாழ்வணிக ரொருதெருவில் மகிமைகொடு வாழ்ந்தனரே
ஆழ்தகமை பெறுவணிக ரானகுலத் தலைமைதன்னில்
ஊழ்முறையிற் றேவகுலத் தொருவணிகன் பிறந்தனனே

பிறந்தவந்த வணிகருக்குப் பேரதுவோ மாசாத்தர்
சிறந்தவந்த மதனெனவுந் தேடளகைப் பதியெனவும்
அறந்தனக்குக் குந்திமைந்த ரவர்களுக்கு முதலெனவும்
மறந்திகளு விக்ரமார்க்கன் மதியெனநன் மதித்திருந்தான்

இருந்தவந்த நாளதனி லின்னுமொரு வணிகர்குலம்
பொருந்துமொரு கொடியிடையாள் பூந்திருவோ டொப்புடையாள்
சரிந்தகுழல் முகினிகராள் தாரைமின்போ லிடையுடையாள்
விரிந்தமதி நிகர்முகத்தாள் வெள்ளைமுத்து நிகர்நகையாள்

அரிந்தகோடு நிகர்தனத்தா ளரம்பைநிக ரடித்துடையாள்

பொருந்துபிடி யெனுநடையாள் பொன்னதெனும் வண்ணமுள்ளாள்
திருந்துமல்குல் கரும்பணியின் திவந்தபடத் தெளிவுடையாள்
சரம்பொருந்தும் விழியுடையாள் சலசகரச் சங்கணியாள்

சாங்கனைய கழுத்துடையாள் சாயலன்னமெனு நடையாள்
பூங்கனையோன் மனையெனவே பொருந்தினுமோர் பொருத்திலதாள்
ஆங்கனை வோரும்புகழு மருந்ததிபோற் கற்புடையாள்
வாங்குவன்ன மாலையென்னு மாதைமணம் முடித்தனனே

மணம்முடித்துக் குணமுடனே மலரணையிற் சுகிர்தமுற்றுக்
கணம்பொருந்திச் சுகம்விரும்பிக் கனிவருந்திக் கணியதென்னக்
குணம்பொருந்து மமிர்தமென்ன குருவருளு நெறியதென்ன
இனம்பொருந்தும் விரகவெள்ளத் தின்பநூகர்ந் திருந்தனனே

அன்னமென்னு நடையாளு மழகிய மாசாத்தருமாய்
துன்னிவரு நாளையிலே துறைமுகத்தி லாயிரமாம்
சொர்ன்னக்கப்பல் வரவோடிச் சூணிதியந் திரட்டினதே
வன்னக்கப்பல் வரவஞ்நூறு வந்துமீளு மஞ்நூறே

மீண்டிடுமக் கப்பலெல்லாம் விரைவுடனே யாபாரம்
பூண்டுபொன்னும் வெள்ளியுமாய்ப் புனைந்துதுறை திரும்பிடுமே
ஆண்டுமந்த நிதியாலே யரண்மனைக ளிடமிலதாய்த்
தூண்டுங்கப்பல் சுமந்துகொண்டு துறைதொறும் போந்திரவியமே

திரவியத்தின் வணிகரிவர் செல்வரிவ ரல்லாது
ஒருபுரத்து மரசரில்லை யெனவுயர்ச்சி பொருந்தினனே
தருநிகருந் திருக்கரத்தான் சாருமந்த நிதிகளெல்லாம்
புரிவதற்குப் பிள்ளையில்லைப் போதமன மிடைந்தனனே

மனமுடைந்து மதிகுறைந்து வாரியந்தப் பாக்கியத்தை
இனமடைந்து மிரப்பவர்கள் ளீடேறக் கொடுத்தனனே
கனதனத்தால் வறுமையென்னுங் கடல்கடைந்த கருணையினாற்
சனமதெல்லாந் தாயெனவே தங்குமிடம் பூசுரர்க்கும்

பூசுரர்க்கு மரசருக்கும் புரியமர்ந்த வணிகருக்கும்
பேசரிய பின்னவற்கும் பேணுநல்லா சிரியருக்கும்
வாசமுறு தேவருக்கும் வகைவகைசேர் துறவருக்கும்
காசகல் சந்நாசியர்க்கும் கருதவல்ல தவசியற்குந்

தவசெயங்கொள் ளாண்டியர்க்குந் தப்பரும்பண் டாரியர்க்குந்
கவசெயங்கொண் முத்துமணி காசுபல சோடினையும்
நவமணியுங் குடைகொடியு நன்முடியுங் குண்டலமுஞ்
சவையணியுந் தங்கம்முத்துத் தார்நிரையுந் தாரையதாய்த்

தார்நிரையுந் தலைப்பாவுஞ் சால்வைவகைச் சதுராவும்
ஏர்நிரையும் பெருட்டொகுதி யெல்லவர்க்கு மள்ளியள்ளிப்
பேர்நிரையும் பிள்ளையென்னும் பெரியபொருள் வாங்குதற்குக்
கார்நிரையும் முகில்போலக் கனபொருளைச் சொரிந்தனனே

தனதனென நிதிபடைத்தோன் தானமுய்த்துத் தவம்பயில
மனதுசரியான பெண்ணின் வதனமதைப் பார்த்தருளி
எனதுடலி லுயிர்போலு மேந்திளையே மாந்தளிரே
நனவிலுமோர் புத்திரரே நமக்கில்லாம லானதுவே

ஆனதுவென் குடிவிழக்க மாண்பிள்ளை யொன்றில்லாமல்
போனதுவே புகழுமெல்லாம் பொற்குலங்க ளவைபரம்ப
மானேவசை நசையுமுண்டு மறுநரகும் பிறவுமுண்டு
மானபங்கம் மிகவெனக்கு வந்ததுவே வாள்மயிலே

வாள்மயிலே யெனவுரைக்க மாதுவன்ன மாலைசொல்வாள்
ஊழ்வினையிற் பழியதெல்லா மொன்றுபட்டுத் திரண்டதெனிற்
பாழ்மனையிற் பசாசிருந்து பாடியாடப் போகுதெல்லாம்
நாள்வினையு முடியுமல்லோ நாயகர்க்குப் பூசைசெய்தால்

பூசைசெய்தா லரிதான பொருளுமுண்டோ புரவலனே
வாசமுற்ற கற்பெனக்கு மரபிலொரு தெய்வமல்லோ
நேசமுற்றிங் கிருக்குதையா நிமலருமெற் கருள்புரிவார்
பேசுமுற்ற தவம்புரிவேன் பிள்ளையெங்கட் கருள்வதற்கே

அதற்கிசையு மெனத்தொழவே யருள்வணிகர் மாசாத்தர்
மதற்கிசையும் புரத்தாளே வருந்தியேநீ தவசுபண்ணிற்
பதற்கிசையு முடம்பதெல்லோ பழுதுபடு முருகுமனம்
சுதற்கிசையும் பொருட்டாலே சூழும்வினை வாண்மயிலே

வாள்மயிலே யெனமொழியு மாதுவன்னமாலை சொல்வாள்
கானமர்ந்த மணிமிடற்றோன் கருணையுண்டிங் கெனநோற்றால்
நாள்வருமோ பழுதெமக்கு நாங்காவ னமக்குமுண்டோ
தாள்வகற்றுந் தனிச்சுடரோன் தானருளு நாயகனே

களம்பொருந்துங் குடிலைபுனை காளகண்டன் பேறருளும்
வனம்பொருந்துங் குழலுமையா மங்கைநோற்க மகிழ்ச்சிகொள்ளுந்
தனம்பொருந்து மேழைபங்கர் தருவர்நல்ல மகவெனக்கே
மனம்பொருந்தி விடைதாரும் வழிபடுதற் கென்றனனே

என்றவுடன் மாசாத்தர் ரிசைந்துபெண்ணின் புறநீவித்
தன்றடமார் பினிலணைத்துத் தலைதனிலே முத்தமிட்டு
வென்றடர்த்து காமமுதன் மிகுவினைக ளணுகாமல்
சென்றிடத்து தவம்புரியுந் தேன்மொழியென் றேவினனே

ஏவல்பெற்றுச் சாலையொன்றி னேந்திளைமார் காவல்செய்ய
கூவலுற்ற தடமுதலாங் கொண்டபுனற் றனின்முழுகி
மேவல்செறி வந்தனையும் விபூதியுடனே முடித்து
ஆவலுடன் மணிவடம்பூண் டஞ்செழுத்தை மனதிலுன்னி

உன்னியைந்து புலனடக்கி யொருவழியின் மனம்போக்கிக்
கன்னி சிவகாமியையுங் கடவுளையு மனதிருத்தி
வன்னியிடு சமிதையென்ன மனப்பொறியைத் தானவித்துப்
பண்ணியிருந்தத் தவம்புரிந்தாள் பராபரனும் மகிழ்ந்தனனே

வேறு – நெடில்

பராபரன்மிகுந்தருளப் பரப்பவொருபங்கிற் பார்ப்பதியுநோக்கியுறு பட்சமொடுசொல்வாள்
தராதலமதிக்குமொரு சோழநகர்தன்னிற் தன்னளிபுரிந்துமது தாண்மலரிருத்திக்
கராசலமதிற்பெரிய கோடுபுரைகன்னியிவள் கொங்கைகன்னியிவள் பன்னரியகண்டிகைபுனைந்து
ராசமகிமைத்தவ மியற்றுவதும்என்ன வெம்பெருமானேயிகுதிசைத் தருளுகென்றாள்

என்றுதொழவீச னருளைய்னெமையாழு மிறையவனருட்கடலெம்மம்மை யிசைபோதில்
இன்றருள்புரிந்திமைய வல்லியிதுகேளா யெங்குநிறைவாகு நீயிங்கிவள்புரிந்ததைத
துன்றுதவமறியாதுபோல் வினவினாய்கேள் சோழநகர்மாவணிகர் சொல்லுமாசாத்தர்
ஒன்றுமனையாளரிய மைந்தர்துயராலே யுற்றெமைநினைந்து தவமோடுதொழுதனளே

தொழுதனளே யெமைநினைந்து தூயதொரு மாசாத்தர்
பழுதுபடாப் பெண்ணிவளே பலநாளும் தவம்புரிந்தாள்
முழுதருள்செய் திடவ்வடகு மூரிமதமால் விடைமேல்
எழுந்தருள்வோ மெனவவளு மிசைந்துவிடையி லாந்தனரே

தனமிகுந்த வன்னமாலை தவம்புரியுஞ் சாலைதன்னில்
கனம்மிகுந்த தேவருடன் கந்தருவர் சித்தர்களும்
இனம்பொருந்து மிரிடிகளு மெண்ணரிய வாத்தியமும்
முனம்பொருந்தி முழங்கிவர முன்னவனா ரெழுந்தனரே

எழுந்துவருஞ் சூரியர்க ளெல்லையில்லாக் கோடியென்ன
குளிர்ந்தவிடை தனிலிவர்ந்து கொடியிடையார் மருங்கிருக்க
தொழுந்தகை சேராதியந்தத் தோகைதனக் கருள்பரப்ப
எழுந்ததுவே கலைகளெல்லா மெண்ணரிய தத்துவமே (இங்கு தத்துவமென்து-சிவபெருமானென்றுணர்க)

தத்துவத்தின் மேலான தனிப்பொருளங் கெழுதல்கண்டு
முத்துநகை மதிமுகத்தாள் முனமெழுந்து தானோடி
வித்துக்கு வித்தாகிநின்ற வேதமலர்ப் பாதமதிற்
சித்தமொன்ற விழுந்திறைஞ்சித் தெண்டனிட்டுச் செப்பலுற்றாள்

வெண்பா

வேதமுதலாகி வேண்டுதற்கு மெட்டாத
சோதிபதியாஞ் சுடரொளியே — ஆதிமுதற்
சங்கரசிதம்பர தரும்பரிசு தந்தருள
இங்குவிரை வந்தரு ளிதென்

கங்கைதும்பை காளரவுகண்ட முடிகொண்டணிந்த
சங்கதுங்க யானையுரி தாங்கினனே - இங்கெமக்கு
உளத்தை யுழத்தவினை யூத்திருளி னூத்தழித்துக்
காத்தருள்வ தெப்போகதி

புலியம்பு னலனலம் பொங்கு மரவுமலி
அலியா ணரிவை யாவணந் துதியே — கலியுலகில்
வந்தவினை சிந்தியெனை மைந்தரை யென்றென்றுமருள
தந்தணைதி யுன்றனிரு தாள்

வேறு

தாரசைய மணியசையத் தாழ்ந்தகுழல் பின்சரிய
ஆரமுலை மேலருவி ஆனந்தநீர் விழிபொழிய
வாரமுடல் தனையுருக்க மாறில்வினையே கருகச்
சாருமின்ப வெள்ளமெனுஞ் சாகரத்தின் முழுகினளே

முழுது நடமாடுகின்ற முழுமுதலைத் தொழுதிறைஞ்சி
அழுதிடத்தின் மறைபழுத்த வனையகொம்புக் கனித்தாகி
பழுதிடத்தி லாததொரு பத்தினியே யுத்தமியே
ஏழுகடற் சூளிடமீன்ற வேந்திளையே மாந்தளிரே

தளிர்பொருந்தும் பதத்தாளே சங்கரியே திகம்பரியே
ஒளிபொருந்தும் யானைமுக வுத்தமனை யீன்றவளே
மிளிர்பொருந்தும் வேற்படைக்கை வேலவர்தன் தாயாரே
எளிர்பொருந்த வெனையாள விருகண்மலர் பரப்புமென்றார்

என்றவுட னெமையாளு மிறையவனு மிறைவியுமாய்
நன்றருு ளதேபுரிந்து நகையினொடு நல்லணங்கே
உன்றனுறு தவமகிழ்ந்தோ முமக்குவேண்டும் பரிசெதுவோ
இன்றுரைத்தி தருவதற்கென் றெம்பெருமான் மொழிந்தனனே

எம்பெருமா னிவையுரைக்க விருமதனி னெழிலுளவாய்
அம்பரமுந் திசைகளெல்லா மளியாத புகழுடனே
உம்பர்குலத் துள்ளவர்போ லுங்களிலன் புள்ளவனாய்
எம்பொருட்டி னொருசுதனை யினியருள்க வென்றனளே

என்றவுட னுன்றனக்கு எழின்மிகுந்த குழவியொன்று
நன்றளித்தே னழகதெனு நல்விரக துறையதனாற்
குன்றளித்த தனத்தாளோர் கொடியிடைமேன் மயலாகிச்
சென்றிடுவ னென்றருளித் தேவனுமீண் டேகினனே

ஏகுமந்தத் திசைநோக்கி யிடைக்கொடியாள் தெண்டனிட்டு
ஓகைகொண்டு மனமகிழ்ந்து உத்தமியு மனையில்வந்து
வாகைகொண்ட மாசாத்தர் மனம்மகிழ வரமுரைத்துத்
தாகமிஞ்சிச் சுகமுடனே சாலைமஞ்சத் தேறினனே

ஏறமதன் கணைதூவ விருவருமோ ருயிர்போல
கூறியின்ப மோடணையக் கொடியிடையாள் கருப்பமுற்றாள்
வேறுமிங்கு துணையிலதாய் வென்றிமத னழகிளக்கப்
பேறுசெல்வந் தனிலழகைப் பெரும்பதியீதெனச் செளித்தான்

செளித்தவன்று முதலாகத் தெய்வபத்தி குருபூசை
களிப்புடன்செய் தாயிரம்பேர்க் கரியபல தானம்மழித்து
துணிந்துறுமப் புயல்போலச் சுகமகிழ்வு மழகுகுணம்
பளிப்பிலுற்று வருமளவிற் பத்துமதி யானதுவே

மதிசோந்த முகத்துடையாள் மாநாக மணியதுபோற்
றுதிசேர்ந்த சனிவாரஞ் சொற்றமகம் விரிச்சிகத்திற்
கதிசேர்ந்த புகராறிற் காரியஞ்சிற் புதனேழில்
விதிசேரு மதிதபனன் மிக்குமேழிற் பொன்னவனு

எளில்பொருவும் ராகுகேது இயன்றவிடத் தீதுறவே
தளிரிலங்கு திருமேனித் தார்குழலார் மனமகிழ்ந்து
ஒளிரிலங்கு நவமணிபோ லுத்தமனைப் பெற்றளவில்
குளிரிலங்கு மதியெனவே கோவலராம் பேருமிட்டு

இட்டபல மங்கையர்க ளேங்கியிரு கண்வலையிற்
தட்டிமிக வகப்படுத்தித் தழுவவிது பருவமென்ன
எட்டருகின் மடவார்க ளெல்லவரு மகிழ்வாகத்
தொட்டகாளைப் பருவமுறத் தொல்குலத்தோர் மகிழ்ந்தனரே

மகிழ்ந்திருக்கு மளவுதனில் மாசாத்தற் கிணையாகப்
புகழ்ந்தெவரும் வணங்கிடவே புகழ்படைத்த மாநாகர்
அகழ்ந்த கப்பலவ்வளவும் மதற்கிசைந்த நிதிபலவும்
மகிழ்ந்தவிந்த மாசாத்தர் மைத்துனரா யிருவோரும்

ஓரகத்தி னிரண்டுயிர்போ லொருவர்பொரு ளொருவருக்காய்
நீரகத்திற் கப்பல்களு நிறைவும்போக்கும் வரவுமெல்லாம்
பாரகத்தி னிருவோரும் பராபரித்துப் பலவிதத்தும்
ஆரிவற்குப் பெரியரென வறிவரிதா யிருந்தனரே

இருந்தளவில் மாசாத்தர் கின்பமுறு கோவலனார்
பிறந்தளவின் மாநாகர் பிள்ளையில்லாச் சோபமதாற்
கரிந்துமுகக் கோட்டமுற்றுக் கனகமெல்லா மிகச்சொரிந்து
விருந்துமிட்டுச் சிலதலங்கள் மிகவணங்கி யிருந்தனரே

தனம்மிகுந்த கோவலனார் தான்பிறந்த கதையுரைத்தேன்
கனம்மிகுந்த பாண்டியனார் கண்ணகையைக் கடலில்விட
தினமிகுந்த மாசாத்தர் சேர்ந்துவர மாநாகர்
இனம்பொருந்துங் கவுரிதன்னை யெடுத்தகதை கூறலுற்றேன்

விருத்தம்

சத்தியாய் முன்னமொரு வேரோடியே சிவன்தன்னை யுள்ளாகவைத்து
சகலகலை வேதமொடு பலபேதமீன்றுமே தலைவியா யுலகமெல்லாம்
வித்துமாய் நின்றிதனை யெங்கெங்கு மருள்செய்துவினவியே முத்தியென்னும்
மேலான கனிகொண்டு தொண்டர்க் களிக்குமென் விமலையே புகலுமொழிகேள்
உத்தமாய்க் கொலைகளவு கட்காம குருநிந்தை யொருநாளு மயராமல்
யூழ்வினையினாற்செய்த கோள்போக வென்னருகு நின்றுகாவல் புரியுமம்மா
அத்தமா மயமருளி யன்னமா மயமருளி யளியாத விசயமருளும்
அழகுசெறி கூடலுறை யபிராமவல்லியே யாசிகண்ணகையம்மனே

வேறு நெடில்

உவரிமிசையருளினொடு முலவிவருமம்மனை உலவுபுகழ்சோழநகர் தன்னிலுறைவோர்கள்
தவருமொருவணிகர்குல மதனிலெவருக்குந் தலைவனெனு மாநாகர்மாசாத்தரிருவர்
கப்பல்வருமென்றவர்க ளித்துறைமுகத்திற் கரைசென்றவ்விருவோரு நிரைகொண்டுவரவே
மொய்புகழ்புனைந்த திருவொப்புறவிருந்த மிதவையொன்றலைமிசை மிதத்தல்கண்டனரே

கண்டனரேமாசாத்தர் பொற்பேழைவருவதை கருதரியமைத்துனரே காணுமென்றாரே
வண்டார்புனைந்த பொற்பெட்டகமுமக்குள்ளே வைத்தபொருள்கொள்வன்யான் மைத்துனவென்றாரே
என்றிவர்கள்தற்கமுற நின்றபொழுதங்கே யேந்திளையறிந் திவனிடத்திலுறுவேன்யான்
குன்றாதபுகழ்தரும நீதிமுறைகொண்ட குலவணிகர்பெருமாளின் மனையிந்திரவல்லி

பொன்னழகுபுவிபொறுதி கற்புக்குநேசப் பொற்கொடியருந்ததி யெனப்பொருவுமாது
சொன்னக்யிலாய சிவநாயகர்தனக்குந் தொண்டர்திருநீற்றினொடு கண்டிகைதரித்தோர்
இங்கிவர்கள்தன்னிட மெழுந்தருளுவேன்யான் என்றுகவுமாரி கரைகொண்டுவந்தனளே
தங்கமுறுபெட்டகந் தங்குகரைதட்டத் தாவுபுகழ்மாநாகர் மேவியேயெடுத்து

கைகொண்டெடுத்துக் கரைகொண்டுவைத்து கருந்திறப்பங்கு கண்டிருந்ததனாற்
சிக்கென்றெடுத்துத் திறந்திட்டபோதே தேசங்களெங்குமொரு நீலவொளியாகி
எவ்வுலகுமெப்பொருளு மிந்நீலமாச்சுதே இந்தனலியாதபனு மிவ்வொளியதனான்
அவ்வொளியினாலிருவர் கண்ணுமொளிமங்கி ஆனந்தமயமாகி யறிவுந்திறந்து

ஞானமயமாகி யபிராமியருளென்றே என்புருகநண்புருக வின்பமுமுழுக்கிட்டு
மாநாகர்மாசாத்த ரிவோருந்தங்கள் மணிமுடிகைகூப்பியே வாழ்த்திநின்றாரே
சிவசங்கரன்மனைவி தேசாட்சரூபி செகமுதல்விமீனாட்சி தேவாதிதேவி
மிகுமுதல்வி மலையரசனுக்கு மொருபுதல்வி வித்துக்குவித்தான வேதாந்தரூபி

அகரவாங்கர வோங்காரறீங்கார ஆமோமெனும்பொருள் தங்குசிங்காரி
உகரமகரானந்த வுத்துங்கவீரி ஒளிமகுடன்முடிநெளிய நடனமிடுசூரி
நமநமசிவாயமாய் நாடிப்புரக்கும் நாலெட்டறத்தியிரு நாலட்சரத்தி
சிவமயமானதொரு திருவருளினேருமா தேவியென்னயனவொளி தெரியவருள்செய்யேன்

என்றவர்கணின்றுதொழ வெம்மையருளாசி யிருவோர்கள்விழியுமொளி தெரியவருள்செய்தே
துன்றுதிருவொளியையுந் தன்னுள்ளடங்கெனச் சொல்லியதுபோலவெம் மன்னையமுதனளே
அப்போதுமாநாக ரிருசெங்கையாலே அம்மையையெடுக்கியருள் மடிமீதிருத்தி
இப்போதுமெங்கள்விழி செப்பியொளிசெய்தாள் எங்கள்பரநாயகி யிம்மாதிவள்தனக்கு

ஒப்பரியதிருநாமமோதுங் கண்ணகையென கொருவருக்கொருவரா யுறவாழ்த்தினாரே
மெய்ப்பொருளெனத்தழுவும் வெண்கமலமாதுங் விருப்பிற்றொழப்பரிசுறப் பெற்றதிருவாள்
இப்புவியிலெங்களிட ரப்புறமகற்றிட ஏகியெமதருகுவரு மிக்குழலியெமதாய்
எப்போதுசென்றாலு முமதுமகனுக்கு எனதுமகளுக்கு மணமென்றிசைத்தனனே

விருத்தம்

திரளாகிமருவலர்க ளொருகோடிசேரினுந் திடமுடனேவெற்றிபெறலாம்
செப்பரியபலவரசர் கோள்கொண்டெதிற்கினுந் தேடரியவிசயமுறலாம்
அருளானபலகல்வி மனைமைந்தரோடு செல்வமாதரத்தோடு பெறலாம்
அந்தகன்றூதர்வரினுஞ் சிந்தவென்று நல்லழகான முத்தியுறலாங்
கருவானநாகமணி யொருகாலிலங்கவிக் கலியுலகத்தேகுமாதிக்
காரணீபூரணீ மாநாகர்மகளைக் கருத்திலென்னாளும் வைத்தோர்
மருவாரைவென்று வயவாகைபுனை வாகிவரு வாலபிரகாசவுமையே
மாவுலவுநாகைநகர் மேவுசிங்காரியே மாதுகண்ணகை யம்மனே

வேறுகுறில் நெடிற் பாளிச்சிந்து

சீர்பெறுமாநாக ரந்தமாமகளைக் கொண்டுசென்று தேவிகையிலீந்து சிலதானமும்
நேர்பெறவேதான்கொடுத்து மாதுயரமேவிடுத்து நின்மலையைத் தன்மகளாநேசமாய்
வாகுபெறவேவளர்த்தார் மாதுபாகானருளத்தில் வாள்விழிமாறாத நேசமாகவோ
ஆகுமுறையேவளர்ந்தாள் வேதவல்லிதன்னிடத்தி னாசிமுன்னிருந்த வகையாகவே
தோகையிளமாமயில்போ லேகபரநாயகியார் சோதிவடிவாக வளர்நாளில்
ஏகபரையும்வளரக் கோவலரும் வாகினுடனேவளர்ந்தார் மாமதனராகவே
வாசமுறுகண்ணகைக்கும் நேசமுறுகோவலற்கும் மாமணமெனும் பருவமாகவே
வீசுமணமேமுடிகக்கவோர் பத்தினிற்சிலம்பு வேணுமொரு நாகமணியீடதாய்

ஏசமைக்க நாகதீவினேகி நாகராசனிட னிப்போமணிவாங்க வல்லர்யாவரோ
பேசுமென்னமாவணிகர் மீகாமனல்லாதுமில்லைப் பின்னேயிங்கேயென்ற சொல்லலைப்பேணியே
தூதர்தம்மையே விரைவினேகி யங்கேமீகாமனைச் சுறுக்கினிலைத்து வரச்சொல்லியே
ஆதரவுட நிருந்தாரம்மை யுற்பவித்தகதை யாமிதை விருப்பொடறைந்தோர்களும்
நேசமுடன்கேட்டவர்க ளோதுவிக்கவேமுயற்சி நோந்தவர்கள் வியர்ந்தவர்கள் யாவரும்
தேசவிசயந்தனை முன்னோதுமனைமக்களோடு செல்வமும்பொருந்தி வாழ்வர்திண்ணமே
காவிவிழிபாவின்மொழி மேவியதிகம்பரியென் கண்ணினுக்குநண்ணு மொழியாளுநீ
ஆவிநிறைவானபதி பாதியெமதாதி யருளாகுமினியோகுந் நிதியாவுமே

சங்கரிதிகம்பரி பரம்பரையென்னம்பிக்கை நற்றாயாருக்குந் தாயாந்தயாபரி
அங்கரியுரித்தவற்கு மங்கைநீ யனைத்தினுக்கு மாதரவதான தங்கரூபியே
மாபரைசிவகவுரி மாமலையரசன்பெற்ற மாதுவேதவல்லி மகளானநீ
ஓமறைபொருளதாகி னானறைவெனோ நிறையாயுத்தமியென் சித்ரவுருவானநீ
ஆமகரமாகியன்பதக் கரமோரொன்றுமாகி யப்பாலுஞ் செப்பமுடியாதநீ
மாமதுரைதீயுறுத்த நீபொறுத்தநல்லுருவை வானவருநாட வரிதாகுமே
தேனோமொழியாளே யிந்தப்பூதலத்து நீவரவுசெய்யப் புவிசெய்ததவமென்னவோ
மாநாகருனைவளர்க்கத் தானேசெய்ததவப்பலனை வாயினாலுரைக்க வழிபோகுமோ

நாடியேனல் வினைக்கதாயே தூவின்மீதுறைந்த நட்டமுன்கருத்தோர் விளையாட்டல்லோ
சேயொளியதான வடிவாகிவருமாபரையே தெய்வமேயானுய்ய வருள்செய்குவாயே
ஈதென்மனமீதிடரை நீயகற்றவேணுமென்றே யின்முனைத்தெண்டம் பண்ணியெண்ணினேன்
சூதுசெய்துவாதுகொள்ளும் பாதகர்தொடுவையறச் சொல்லியருள்செய்ய வேணும்வல்லியே
ஓதுமுன்னேசொன்னவினை யாதுமென்றேயானுமுய்ய வுள்ளத்தருள்செய்து வைத்துமென்னைநீ
பாதுகாவல்செய்யவேணு மாதலினுமக்கபையம் பத்தினியெமக் கருளுஞ்பாதமே
நோயிலுறுகாலமெது காயமறுகாலமெது நோவடைகிலாது மெமையாளநீ
ஆயெனவிம்மாநிலத் திலானதலமுற்று மீதூவலைய மமர்ந்த வருளாழியே

"கோவலருற்பத்தி முற்றிற்று"

விருத்தம்

கருதினில் நினைக்கவரிதான வஞ்சகமோடுகபடான நிறுமூடரே
கனதிரளுறுத்தினும் மனமிடிபொறுக்கினுங் கருதுபிணியதுசேரினும்
உருத்தனில்மிகுந்த சிலயானையொடுகரடி புலியோடரவமாடிவரினு
முற்றபலபெல்லிபேய் மற்றுமுளபேதியுட னுயர்வயுரிநோய் சேரினுந்
திருத்தியவரிப்பரிபுரத்தின் மதுரைப்பதித்தீயெள வெரித்தீருடருந்
தெய்வமென்கண்ணகையென் றையமில்லாதவுரை செய்யிலிவைசெல்லுமுடனே
கருத்தினுமுரைக்க வரிதானகதியுரகபதி காப்பநிதியிப்பதியினுங்
கண்ணனுடனயனமரர் வண்ணமங்கையர்கள்தொழ நண்ணுகண்ணகையம்மனே

நான்காவது தூரியோட்டக் கதை

வெண்பா
சிறந்தபுகழ் மீகாமனைச் செப்பக்கேட்டு
அறம்பெரிய மாநகரப்போ – நிறைந்தமதி
வல்லிநீர் சொன்னபடி வருணன்றனை யழைக்கச்
சொல்லு வீரென்றாள் துணிந்து

வேறு
துணிந்துநின்று மாநாகர் துய்யமதி வல்லிசொல்ல
அணிந்துநின்ற தூதர்தம்மை யருகணைத்து நீங்களிப்போ
பணிந்து பரதவர்குலத்திற் பட்சமுறு மீகாமன்
துணிந்தவுங்க ளுடன்வரவே சொல்லலுமென விடுத்தனரே

சொல்லுமெனத் தூதுவர்கள் சூறையென்ன விரைந்தோடி
எல்லையற்ற புகட்பரவ ரிருக்குமந்தத் தெருப்புகுந்து
மல்லையொத்த புயத்தானே வளமருவு மீகாமர்
அல்லையொத்த தொடைவணிக ரளைத்துவரச் சொன்னார்காண்

என்றமொழி தனைக்கேட்டு எழுந்திருந்து மீகாமன்
சென்றுபோய் மாநாகர்தம்மைச் சீர்பெறவே கண்டபினன்பு
மன்றலஞ்சேர் தொடையானே வணிகேசர் பெருமாளே
இன்றுநமை யழைத்தபணி யின்னதென விசையுமென்றான்

இசையுமென்றங் குரைத்திடவே யியம்புவராம் மாநாகர்
வசையாத சோங்குவிட்டு வாருதியைத் தாண்டியங்கே
நசையாத நாகதீவி நாகமணி வாங்கிவரக்
கசிவான மனத்துடனே கடிதிலுன்னை யழைத்தேனே

அழைத்ததுவு மிகவுநன்று அரவிருக்கு மிடம்போனால்
மழைக்கண்டன் காண்பதல்லால் மானிடர்க்குங் காணலாமோ
பிழைப்பாரோ வெவருமந்தப் பேரரவைக் கண்டவுடன்
தழைத்தேறும் புகழுடையீர் சாற்றுமென்றான் மீகாமன்

சாற்றிடக்கேண் மீகாமர் சமுத்திர யாத்திரைபோகி
மாற்றரிய தனந்தேடி வரும்வழியிற் கடல்மேலே
காற்று மறித்திடவுமங்கே கரையடுக்கக் கல்லுவைத்து
வேற்றொருவ ரிறங்காமல் விரைவினானிங் கிறங்கினேன்காண்

இறங்கியங்கே செலுமளவி லெண்ணரிய கெருடராசன்
மறங்கொண்ட நெஞ்சனாகி மறித்ததந்தப் பேரரவை
திறம்படவே யரவென்னிடஞ் சேர்ந்தபய மென்றதுவே
கறங்கொண்ட கருடனுக்குக் கனகமீய்ந்து காத்துவிட்டேன்

கனகமீய்ந்து அரவினுயிர் காத்தபோதவ் வரவுசொல்லும்
நினைவுனக்குஊ ஏதுவென்பார் நீவேண்டும் வரமுள்ளது
மனதின்படி தருவேன்காண் வணிகாவென் றேயுரைத்து
அனையவென்பான் மணிவாங்க ஆளனுப்பு மென்றதுகாண்

ஆளாக வுள்ளவரார் அவனிதன்னி நீயறியத்
தாளாண்மை வல்லவர்கள் தானுமுண்டோ மீகாமா
மாளாத மணியெனக்கு மாதென்சிசுக் கண்ணகைக்கும்
நீளாண்மை மணமுடிக்க நிகராகு மீகாமர்

காவிசைந்த குழலியற்குக் கருதுமொற்றைப் பதச்சிலம்பு
மேவியவள் பிறத்தலல்லோ வித்தகியார்க் கோர்பதத்திற்
தாவுசிலம் பிணையாகச் சரிச்சிலம்பு சமைத்திடுகில்
தேவுநாக மணிபுனையி லிச்சிலம்புக் கிணைவருமே

வருவதற்கு மணிவாங்க வாளரவி னிடம்போனால்
தருவதொக்கு நவமணிகள் தயவுசெய்து மெமக்காகப்
பரவுமர விருப்பிடத்திற் பதறாமற் போவதற்கு
விரவுமந்தத் துணிபுடையோன் மீகாம நீயல்லதார்

நீள்மேகக் கடல்கடந்து நீண்டபகை தனைமாற்றி
வாண்மேகக் குழலுடையாள் மணமுடிக்க நாளெடுத்த
நாள்போகச் செலுத்தாதே நயினாதீ வணுகியிப்போ
வாளாண்மை வல்லவனே மணிவாங்கித் தாருமென்றான்

மணிவாங்கித் தாருமென்ற வணிகரேநீர் கேளுமிப்போ
மணிவாங்காப் போம்பொழுது வழிமறிப்பான் வெடியரசன்
மணிவாங்க மரக்கலமோ ராயிரஞ்சேனைகள் மருங்காய்
மணிவாங்க வெனைவிடுநீர் வாங்கிவந்து தருவெனென்றான்

தருவேனெனக் கப்பல்கொண்டு சரியாக வுனக்கிசைய
வெருவலிப்போர் கோடிதனம் வேண்டியது தருவேன்காண்
வெருவ மருவலரைவெட்டும் மீகாமா வெனவவனும்
பொருவிசய மாகுமோதான் பொன்கொடுத்துக் கொண்டகப்பல்

பொன்கொடுத்து வாங்குகப்பல் போரினுக்கு மிசைபோமோ
வன்படையான் வெடியரசன் மரக்கலங்கள் வலித்தெதிராய்
முன்படையாய் விட்டுப்பொர முகந்திருப்பாக் கப்பலிங்கே
ப்பொன்கொடுத்துப் பலகைதேடிப் போர்க்குரித்தாய்ச் சமையுமென்றான்

சமையுமென்று கட்டுரைத்த தக்ககுண மீகாமர்
சமையுமிந்தக் கப்பலுக்குத் தக்க பலகைகளெங்குள
சமையமிது சாற்றுகெனத் தகவுணர்மீகாமன் சொல்வான்
சமையுமிடங் கொல்லமலத் தக்கதிலங்கையிற் பலகை

பலகையுடன் கப்பலுக்குப் பலமரமுந் தேடிவர
இலகு மிலங்காபுரிக்கு இக்கடலைக் கடந்துவர
உலகில்வல்ல ராரெனவே யுரைசெய்யென்றார் மாநாகர்
குலவுபுகள் மீகாமன் குறித்துரைப்பா னப்பொழுது

குறித்தபுகழ் வணிகேசே குலமரங்கள் கப்பலுக்கு
நெறித்தமரங் கொண்டுவர நீர்வாளுஞ் சாதிகளில்
மறித்துவருங் கடற்றுறையில் மட்டறிவார் பட்டணவர்
செறித்தபுக ளாரியர்கோன் றேசமவரிருப்ப தென்றான்

தேசம்புகழ் வணிகேசன் சிறப்புடைய தூதுவரை
நேசமுடனே யழைத்து நீங்களிப்போ விரைந்தோடி
வாசமிகு மாரியர்கோன் வளநகரிற் பட்டணரை
நேசமுட னிங்களைத்து நீர்வாருமென வுரைத்தான்

வாருமெனத் தூதுவர்கள் வாயுவினுங் கடிதாகத்
தூரமுட னட்ந்தோடித் துறைதொறும்போய்ப் பட்டணரை
சேரிதோறும் சென்றுசென்று செப்பவவ ரெல்லோருங்
காரெனவே திரண்டுசென்று கண்டனரே வணிகர்தமைக்

கண்டுநின்று பட்டணவர் கைதொழுது மெய்கோட்டி
வண்டுசெறி தார்புயனே வணிகேசர் பெருமாளே
புண்டரிகத் திருவாளும் புயத்தோனே புவியும்மற்ற
எண்டிசையும் புகழ்படைத்தா யெமையழைத்த பணியேதோ

அழைத்தபணி யேதெனவே யருள்செய்வா னென்மகளாம்
மழைத்திறஞ்சேர் குழன்மடவார் மணம்முடிக்க மணிவாங்க
தழைத்தபுகட் டென்னிலங்கை தனக்கேகி மரங்கொணர
அழைத்தது காணும்மையென்றே யருண்மாநாக ருரைத்தனரே

உரைத்துமப்போ மாநாக ருடுகூறை பலவகையும்
தரக்குவெள்ளிலை பழுக்காய் தட்டில்வைத்துக் கொடுத்தபின்பு
இரக்கமுற்ற செம்பணமு மினிமையுள்ள பூஷணமும்
பரக்கவவர் தானிருக்க பட்டணமு மளித்தனரே

அளித்தபின்பு பட்டமவர்க் கழகுசெட்டிப் பிள்ளையென்றும்
வெளிப்படவே பலனாக விளங்குசெட்டி தேவரென்றுந்
தளப்பமிலா வரசர்கொலுச் சங்கீத லோலனென்றும்
பளிப்பறுமூர் நம்பியென்றும் பட்டமுந்தான் கட்டினரே

பட்டமுந்தான் கட்டினபின் பாக்குடன் வெற்றிலையுமிட்டு
கட்டளைசெய் தவர்களுக்குக் கடுகப்போம் வகையுரைத்து
மட்டறவே யோசனைசெய் வகையறிவார் தமைநோக்கி
வட்டாருந் தொடைப்புயத்தான் மாநாக ரேதுரைப்பார்

நானான்கு வகைத்தொகையு நற்புலனு மறிவோரே
தேனாறு சொரிமாலைத் தென்னிலங்கை யரசனுக்கு
தானாகு பாற்குடமுந் தக்கணைகள் வேறுமென்ன
யானாக வறியவிங்கே இயம்பிடுவீர் நீங்களென்றான்

நீங்கள்சொல்ல வேணுமென்ன நெறிபெறவே தானுரைப்பார்
ஓங்குபுகழ் பட்டுவர்க்க முற்றபல வகைச்சேலை
பாங்குடைய வாசனைகொள் பலசரக்குக் கஸ்தூரி
நீங்கரிய விப்பொருளை நீவிர்கட்டி யனுபப்புமென்றார்

கட்டிவிடு மெனமொழியக் கருதரிய மாநாகர்
இட்டமுடன் மனமகிழ்வா யாவருக்கு மிலகுவிலே
கிட்டாத பட்டுவர்க்கங் கெமுக்காயன் புலிக்கொடியன்
தட்டினிலே விளிம்புகட்டி தாரைவன்ன வகைகளெல்லாம்

வகைபெறு நற்கற்பூரம் வாசனைகொள் சூடனுடன்
சகமதிக்குங் கஸ்தூரி சாந்துடனே சாந்துபன்னீர்
புகரில்லாப் புனுகுடனே போதும்வகைப் பண்டமெல்லாம்
வகைவகையா வெவ்வேறு மட்டமிட்டுக் கட்டினரே

கட்டியபாற் குடந்தனக்குக் கணக்குடனே காரியப்பேர்
மட்டறவே சொல்லிவைத்து வணிகேச னப்பொழுது
இட்டமுடன் கட்டியெல்லா மேற்றுமினி யென்றுசொல்லி
மட்டறவே வணிகேசன் வழிச்செலவுங் கட்டினரே

கட்டியெல்லாப் பட்டுவகை கனகம்பல பொருள்வகையும்
விட்டநல்ல தார்நிரைகள் விருதுவகை கொம்புவகை
சொட்டைவகை கத்திவகை தொழிற்கிசைந்த பலபடையும்
இட்டமனக் கிசைவாக யாவர்களு மேற்றினரே

ஏற்றுமென வேற்றியபின் னிவர்கட்டளைப் படிபோக
காற்குமெனக் கனவகைசேர் கட்டுமர முள்ளதெல்லாஞ்
சிற்றமுற்ற கரிபோலே சென்றவரு நீர்பாய்ச்சி
ஊற்றமுற்ற கயிறெடுத்துஊ உதைபாய்ச்சி யொன்றுபட

ஒன்றுபடக் கட்டுமர முதைபாய்ச்சிக் கட்டுவராம்

குன்றாத சாடிகளிற் குன்றாத தண்ணீரோடு
அன்று வணிகேசரிட்ட வரியபொரு ளாயுதங்கள்
ஒன்றுங் குறையாதபடிக் குறவேற்றிக் கட்டியபாய்க்

கட்டுமர முள்ளதெல்லாங் கணிதர்சொன்ன முகூர்த்தமதிற்
பட்டணத்தைப் பிறகிடவே பலகைவாங்க வோடியதாம்
மட்டாவின் பட்டணமும் மாறப்பிறகாய்க் கடந்து
திட்டமுடன் சீனக்குன்றுஞ் சேரப்பிற கிட்டனரே

பிறகுற்றும் மறைவனத்தைப் பெருங்கடல்மேல் விரைந்தோடி
அறிவுற்றார் தான்பரவு மானதொரு வெடியரசன்
வெறியுற்ற தொடைமார்பன் விரைந்துவழி மறிப்பானென்று
எறியுற்ற திரைகடலில் யீழஞ்சுற்றி ஓடுமென்றான்

ஈழம்சுற்றி யோடுதற்கு மெல்லோருஞ் சம்மதித்து
ஆழஞ்சூழுங் கடலதனி லகலவிட்டங் கோடினரே
நீழஞ்சுற்றுங் கடலோடி நிரையாக விடும்போதிற்
கழஞ்சூழுங் கீரிமலைக் கரைகடந்தார் பட்டணவர்

பட்டணவர் கீரிமலைப் பக்கமது தான்கடந்து
இட்டதொரு வல்லுவிட்டி யெனுந்துறையைத் தான்கடந்து
வட்டமிட்டுத் தூரியெல்லாம் வளர்மலைபோ லொருவழியாய்
கட்டளகாம் பரித்தித்துறையின் கரைகடந்தார் பட்டணவர்

கரைகடந்து மூக்கமுனைக் கல்லகல வுயுரவிட்டுப்
புரமெரித்தோ னிடமமரும் பொற்கொடியெம் மிற்கொடியாய்
வரமழிக்கு மாதினுக்கு மணமுடிக்கும் பொருட்டாலே
கரமளிக்குங் கட்டுமரங் கற்கோவளங் கடந்ததுவே

வெண்பா

கரைப்பட்டார் வாரியின்மேற் கட்டுமர மெல்லாந்
திரைப்பட்டார் தாரியின்மேற்சேர — வொருப்பட்டு
நற்கோவளஞ்சேர் நலஞ்சோழ நாடுவிட்டுக்
கற்கோவளங் கண்டார் காண்

காணியநற் கற்கோவளங் கண்டுமங்கே யிறங்காமல்
நாணமிகு குடத்தனையா நலமிகுந்த பதியகன்று
தானுவெனு நாகருறை தலந்தனையும் பிறகேவிட்டு
வானுலவு மணற்பொருவு மாமுனை விட்டோடியதே

ஓடியதே தூரியெல்லா முயரவிட்டு மருத்ததடம்
நாடியபொன் குவித்திடலு நயந்தாருமாம் பிராய்த்திடலுங்
காடுசெறி சுண்டிக்குளங் கடக்கவிட்டங் கோடியதே
சாடுமத கரியுறைஞ் சாலைதனக் குயரோடி

உயரோடித் தூரியெல்லா மொன்றுபடக் குன்றுகள்போல்
கயலையொத்த விழிசெறியுங் கன்னியர்க ளுறைமருது
நயமிகுந்த வரமுதவ நலம்பெறு காணிக்கையிட்டு
வயமிகுந்த மயிலாடும் வட்டுவாகல் லோடியதே

வட்டுவாக லிற்புதுமை மகிழ்ந்தறிந்து பொருளளித்து
அட்டமாகச் சரிந்தோடி ஆகுமணற் குன்றுகண்டு
நெட்டெனவே முல்லைத்தீவு நிறைந்தசெம் மலைகடந்து
கொட்டுவீர காளியுறை கொக்கிளாயுங் கடந்தனரே

கொக்கிளாய் தனைக்கடந்து கொடியமலைக் குயரோடி
மிக்கபுக னாயாறும் விரைவாகத் தான்கடந்து
மைக்காருங் குழன்மடவார் மணமுடிக்கும் பொருட்டாலே
பக்கேருஞ் சோங்குவிட்டும் பளையவாடி தான்கடந்தார்

பளையவாடி தான்கடந்து பரமாகத் தூரியெல்லாம்
வளைவான கடலருகாய் மகரமெனச் சென்றிடவே
தளையுமவ ரறியாத சலுப்பையாறு தான்கடந்தார்
களைகலத்தோ ரறியாது கண்டியாறுங் கடந்தனரே

கண்டியாறு பின்னிடவே கருநொச்சி முனைகடந்து
பண்டுசெய்த தவமெனக்குப் பலித்ததென்னத் தென்கயிலை
கண்டுதொழு தரனருளுங் கற்றோமெனக் களிப்புளராய்த்
தெண்டிரைசேர் புவிபோற்றுந் தீர்த்தக்கரை விட்டனரே

தீர்த்தக்கரை விட்டிறங்கி சென்றேறி மலைமேலே
ஏற்றினரன் பொற்பாத மெல்லோருந் தொழுதிறைஞ்சி
மாற்றரிய வினைதீர்ப்பாய் மலைநாதாவென வாழ்த்தித்
தோற்றுமனத் துடனுடனே திரிகோணமலை கடந்தார்

மலைசூழும் பட்டணவர் மகிழ்ந்தோடித் தூரியெல்லாம்
அலைசூழும் புளியந்துறை யங்குவிட்டுத் தானிறங்கி
கலைசூழுஞ் சடையாற்குக் காணிக்கை மிகக்கொடுத்து
அலைசூண் மாவலிகங்கை யாறும்விட்டங் கோடியதே

விட்டனரே கெவிளிமுனை விரைவான பாண்டித்தீவு
அட்டசல்லித் தீவுடனே யம்பலாம் முனைகடந்தார்
தொட்டபாசிக் குடாவுடனே தொலையாற்றுக் குடாக்கடந்து
வட்டப்புன்னைக் குடாக்கடந்து மட்டைக்களப் போடினரே

மட்டமான கண்டிமுனை வாரியாற்றி னிளைப்பாறி
கட்டுமரந் தனிலேறிக் கண்டபானத் துறைகடந்து
பட்டமுறும் பாளகையைப் பரமாகக் கடந்தோடி
மட்டுபுக ழிராவணன்றன் வளக்கோட்டை கடந்தனரே

வளஞ்செறியு முப்பளத்தை மருவாமற் பிறகுவிட்டுத்
தளஞ்செறியுந் தரங்கல்விட்டு தானோடித் தூரியெல்லாம்
உளஞ்செறியு மிராவணனை யோரம்பினிற் கொன்றபிராற்
உளஞ்செறிந்த தென்னவரை யுற்றவிடத் திறங்கினரே

தென்னவரைத் தனிலிறங்கித் தில்லை மூவாயிரற்கும்
கன்னல்வரை யெடுத்துநிரை காத்துவிடடோன் கோயிலுக்கு
அன்னம்பல காணிக்கைக ளவரவரே கொடுத்தேறி
இன்னுமிகு சலாங்கொடுத்து ஏறினரே தூரிதனில்

தூரியெல்லாஞ் சரிந்தோடித் துய்யவலிகாமம் விட்டு
கார்முழக்கு மருத்துமலை காலியையும் விட்டடோடி
சீர்வளந் தேவன்துறையுந் திட்டமுடன் பிறகுவிட்டு
ஆர்புகழும் பட்டணவ ரலுக்காவற்றையில் விட்டார்

விட்டுமந்தத் துறைதனிலே விரைவாக விறங்கினரே
பட்டணத்திலதிகாரி படவுவிட்டுத் துறையில் வந்தார்
கட்டுமரம் விட்டதிங்கே காரியமென் சொல்லுமென்றார்
செட்டியர்க ளப்பொழுது செப்புவரா மவருடனே

செப்பிடக் கேளதிகாரி தேசிகன்ற னேவலினாற்
கப்பல்வைக்க மரம்வாங்கக் கட்டுமரம் கொண்டுவந்தோம்
மெய்ப்படவே பாற்குடங்கள் மிகவந்தது அரசனுக்கு
இப்பொழுதே யரசனிட மேவுமென்னை யென்றுரைத்தார்

உரைக்கவப்போ காரியத்தி னுயர்ந்தபெரு மந்திரியும்
மரக்கலத்திற் பாற்குடத்தை வகைவகையே யிறக்குவித்து
விருப்புடனே மாநாகர் விடுத்தவர்க ளனைவரையுந்
திருப்புயருஞ் சேரனிடஞ் சேரவாரு மென்றனரே

வெண்பா

வாருமென்னக் காரியத்தின் வந்தகணக் கருடன்
ஆரிதற்கு முன்னிற்போ ரானோருஞ் - சேரவே
சென்றரசன் றிருமுன்பு பாற்குடத்தை
ஒன்றாக வைப்போ மென்றுற்று

வேறுநெடில்

உற்றபுகழ்பெறு மாநாகரவரே யோராயிரம் கப்பல்வைக்கும் பலகை
கொற்றவன்பக்கல் போய்வாங்கிவரவென்று கொடுத்தநற்பாற்குட மெல்லாமெடுத்து
சற்றுந்தெரியாமற் காரியக்காரருந் தலைமையுடையதோர் பட்டனவர்தாமும்
மற்றும்பிறருடன் கூடிப்பிறகிட மன்னவன்வளநாடன் வாசல்வந்தனரே

வந்தனர்மன்ன னளகைக்கதிபனோ மாவலிகங்கை வளநகர்க்காவலன்
சந்தணியும்புயன் சரியொத்தபூரணன் தாவும்புலிக்கொடி தாவுசிங்காரன்
பந்தவரசர்ச் சிகாமணியானோன் பரிதிகுலமான சோழமகராசன்
இந்திரர்போற்று மிலங்கைக்கதிபன் எழில்சேர்மணிவாசல் வநந்துநின்றனரே

நின்றவர்தங்களைக் கண்டவப்பொழுதே நீதிபெறுவாசற் காவலர்நேரே
சென்றேயரசன் பதத்தைப்பணிந்து செப்புவாரப்போ திறல்சேருமேருக்
குன்றெட்டிலுன்றன் புகழைப்பொறித்த கொற்றரசேகுல வதிபனேகேளாய்
இன்றேநின்வாசலின் மாநாகர்பாற்குட மெல்லையறவந்ததிங் கென்றுரைத்தனரே

உரைத்தவப்போதெவ் வரசர்க்கரசன் உரைப்பானவரை யிமைப்போதளவில்
வரச்சொல்லெனத்தூதர் வந்தளைத்தேவிட வந்தவர்கள்தங்களைக் கண்டமகராசன்
திருத்தும்புக ளிலங்காபுரியதனிற் சேரநீர்வந்திங் கேதென்றுரைப்ப
பொருக்கெனச்சென்றவர்கள் பாற்குடமுன்வைத்துப் போற்றிப்பதத்தை புகழந்துநின்றிடவே

நின்றபோதிவர்கள் மேல்விழிகளிப்பாகி நிருபனும்பாற்குட மேதெனவினாவச்
சென்றவர்கள்பின்பு மரசனைபோற்றிச் செய்திகேண்மாநாகர் தன்மகளாற்கு
நன்றியுடன்மணஞ் செய்துமுடிக்க நாகமணிவாங்கிட நாவாய்கள்வைக்க
இன்றுவிடுத்தார் மரம்வாங்கவந்தோ மிதுவுமவர்தந்த பாற்குடமாகும்

ஆகுமெனவவ் ராசன்குடங்களை அங்குதிறப்பித்து மன்போடுபார்த்து
ஆகங்குளிர்ந்து மமைச்சரைநோக்கி யருளுவானிப்போநீ ராட்போகவிட்டு
நாகமணியது வாங்கும்படிக்கு நல்நாவாய்க்கிசைந்த மரங்கள்தறித்துப்
போகுமாறாக விடுவீர்துறைதனிற் போகச்சடுதியி லென்றுரைத்தனரே

வேறு

என்றுசொல்லிக் கனிவகையு மிளநீருந் தேங்காயு
மொன்றுபடு மரிசிகளு முவந்தவிடுதியுங் கொடுத்து
சென்றுகாட்டும் படியவர்க்குச் செல்வனும்பின் செல்வோரை
நின்றேவல் செயும்படிக்கு நிருபனுங் கற்பித்துவிட்டு

கற்பித்து விட்டவற்குக் கடுகப்போகும் வகையுரைத்துச்
சற்பதத்தின் மணிவாங்கத் தக்ககப்பல் வைக்கமரம்
எத்திக்கி லுள்ளவர்க்கு மெழுதித்திரு முகம்கொடுத்து
வெற்பொத்த புயத்தானும் விரைவிற்சபை அதுசமையம்

சமையங்குலைந் துட்புகுந்து தார்வேந்த னமைச்சருடன்
அமையுமெனக் கப்பலுமை யாயிரத்துக் கிரட்டிவைத்து
எமையுநம்பி மாநாக ரிங்குவர விட்டவர்க்கு
நமையிங்குநீர் வேண்டிடுகில் நாள்மூன்றிற் கொடுப்பதென்றான்

நாள்மூன்றிற் கொடுப்பதென்ன நன்றெனவே புறம்போகும்
ஆளுடனே கூட்டியங்கே யடவிகளிற் போய்ப்புகுந்து
வாளுடைய கண்மடவார் மணம்முடிக்கும் பொருட்டாலே
சூழ்தூண்க டான்தறித்துச் சொரிந்தடுக்கி விட்டனரே

அடுக்குகின்ற வேராவு மானமரப் பலகைகளும்
படிக்கான பாய்மரமும் பலவகையுந் தறித்தடுக்கி
எடுத்துலாத்துப் பலகைகளு மெல்லையற்ற பலகைகளும்
மிடுகுடைய வடத்தொகையும் மிக்கவங்கு வாரிகளும்

வாரியுடன் பலமரங்கள் மரக்கல மோராயிரமும்
தீரறவே வைப்பதற்குச் சேர்த்தடுக்கி மரங்களெல்லாங்
காரியத்தின் கணக்கர்களுங் கடற்கரையில் வந்துநின்று
நீரினிற்குங் கட்டுமரந் நிரம்பவேற்றி விட்டனரே

ஏற்றிவிட்ட மரங்களெல்லா மிறைக்குரைத்த நாள்மூன்றில்
ஆற்றில்விட்ட தூரிகளி னவைநிறைய வேற்றியபின்
போற்றிசெய்து மடிபணிந்து பூபாலர் நாள்மூன்றில்
நேற்றுவந்த கட்டுமரந் நிரம்பவேற்றி விட்டனரே

மரங்களேற்றி விட்டோமென்று மந்திரிமார் சொலமகிழ்ந்து
விரும்பிய மாநாகரென்பால் விடுத்தோர்க ளனைவரையும்
உரம்பெறவே யழையுமென்ன ஒற்றர்போயங் கழைத்துவரக்
கரங்குவித்தங் கனைவோருங் கண்டுநின்றார் ரரசனையே

கண்டுநின்றார் தமைநோக்கிக் காவலனு மேதுரைப்பான்
கொண்டுவந்த தூரியேறக் குறைதீர்த்த மரங்களெல்லா
தண்டுதலில் லாதபடி சரிவரவே நிரையாக்கி
ஒண்டொடியார் மணமுடிக்க ஓடிடுவீ ரூருக்கென்றும்

ஓடிப்போவீ ரூருக்கென்றும் உடுகூறை பலகொடுத்தும்
தேடுதற்கு மரிதான சிங்காரப் பணிகனல்கி
ஆடல்பரி நகுலனென்று மரசர்பிரா னப்பொழுதும்
வீடர்வெடி யரசனுக்கு விரைவிற்றப்பிப போங்களென்றார்

என்றுசொல்லி விடைகொடுப்ப வெல்லோருந் தான்கூடிச்
சென்றுகட்டு மரத்தேறித் திருக்கலிட்டுச் சாய்வுபண்ணி
ஒன்றுபடப் பாய்தூக்கி யூர்நோக்கிச் சலாங்கொடுத்து
கன்றுமத யானையைப்போற் கடல்மேலே யோடியதே

கடன்மேலே யோடிவருங் கட்டுமர முள்ளதெல்லாம்
வடுவேது மில்லாத மாநாகர் மணிவாங்க
கடுகவங்கே விரைவினெல்லாங் காற்றெனவே யோடியதே
திடுதிடெனக் கடலடிக்கத் திகுதிகெனத் தான்பரந்து

தான்பரந்து தூரியெல்லாஞ் சமுத்திரமெங்கும் நிறைந்து
வான்பரந்து தேனொழுகும் வகையெனவே யோடியதே
தேன்பொதிந்த மொழிமடவார் சிலம்புசெய்யும் பொருட்டாக
வான்செறிந்த புகழ்செறியும் மகிளமுனை தனைக்கடந்தார்

மகிளமுனை தனைக்கடந்து வாரியின்மேல் தூரியெல்லாம்
தகவுபுகு நிதிபடைத்த தார்வணிகர் மகளான
மகவரிய கண்ணகையார் மணமுடிக்கும் பொருட்டாலே
பகவினம்போற் பாயசைய பரந்தகளித் துறைகடந்தார்

களித்துறையைத் தான்கடந்து கட்டுமர முள்ளதெல்லாம்
எழிற்பெரிய சீதைதன்னை ராவணன்றான் கொடுபோக
அளித்துமறச் சடாசுரன்வந் தவளருளின் முத்திபெற்ற
தளிற்பெரிய விடங்கடந்து தாரையென வோடியதே

ஓடியதே தூரியெல்லா முயர்காவின் மதுவையுண்டு
நீடுமளி பாய்வாழை நிரவுபலாக் கமுகுதெங்கு
கூடியநற் குளங்கிணறு குன்றுநதி பலசூழும்
ஆடல்மிகு சீகாளி யதனைவிட்டங் கோடியதே

அதனைவிட்டு மரங்களெல்லா மகலவிட்டங் கணித்தாக
விதனமற்ற மொழிமடவார் மிக்கமண முடிப்பதற்குக்
கதனமிக்க கோலாலே கருப்புவில்லி யிரதியுடன்
மதனனுக்கு முடிசூட்டு மவத்தாலை தன்னில்வந்தார்

வத்தாலை தன்னில்வந்து வாரிசெறி தூரியெல்லாம்
முத்தினங்க டனைச்சொரியும் முனைக்கொழும்பைத் தான்கடந்து
நத்தான தூர்ந்துலவு நளினமணிச் சிந்துவயல்
வித்தார நீர்கொழும்பு விரைவுடனே கடந்தனரே

நீர்கொழும்பு முழங்குதிரு நிலையமுப்பு முனைகடந்து
பார்தங்கு தூரியெல்லாம் பரந்தகட றனிநிறைந்து
சீர்தொடிகொள் தோழ்மடவார் சிறந்தமண முடிப்பதற்கு
கார்தங்கு புத்தளத்தைக் கடந்தோடிப் போயதுவே

கடந்துகட்டு மரங்களெல்லாங் கனம்பெறவே பலகைகொண்டு
வளந்திகளுங் குழல்மடவார் மணம்முடிக்க மணிவாங்கத்
தடந்தோறும் பலகைகொண்ட தடமரங்க ளுள்ளதெல்லாந்
திடந்தேறு முத்தீனுஞ் சிலாபம்விட்டங் கோடியதே

சிலாபம்விட்டு மன்னாரைச் சிறந்துசுற்றி யோடிவந்து
உலாவுமிகு தென்றலினா லுயரவோடித் தூரியெல்லாங்
கலாதியுற்ற புகழ்சேருங் காரைதீவில் வந்ததுவே
அலாதியுற்றுப் பாலதீவு மணைந்து பிறகிட்டனரே

இட்டமங்கே சூதானஞ் செய்துபொங்கி யுண்டேறி
வட்டமுனைக் கடல்பின்னிட மதியுடனே பட்டணவர்
கட்டுமர முள்ளதெல்லாங் கடியதீவைக் கடந்தோடி
திட்டமுடன் றிரையினம்போற் சில்லக்கரைப் பட்டதுவே

சில்லமதை விட்டோடி சிறிராம வீசுரரை
நல்லதென்று தெண்டனிட்டு நயமுடைய பட்டணவர்
எல்லவரு மனமகிழ்ந்து மிசைந்துமொரு வழியாக
மல்லாருந் திண்புயத்தார் மருவுகோடி தன்னில்வந்தார்

வனமிகுத்த கோடிமிசை வாரியின்மேல் றூரியெல்லாங்
கனமிகுத்த குழன்மடவார் கண்ணகைக்கு மணமுடிக்க
இனமிகுத்த படைபொரவே யேற்றகப்பல் வைப்பதற்கு
தனமிகுத்த பவளக்கொடிச் சாரல்விட்டங் கோடியதே

கோடிவிட்டு நாகதுறைக் குறுக்காரைக் காலில்வந்து
நாடுதரங் கம்பாடி நற்பதியுந் தான்கடந்து
காடுசெறி குழன்மடவார் கதிக்குமண முடிப்பதற்கு
தேடுமர மேற்றிவந்து சென்றுதுறை விட்டனரே

வெண்பா

சென்று துறையில்விட்டார் சீராமர் வெடியரசை
வென்றுமணி வாங்கமிகு கப்பல் - அன்றுவைக்க
அகப்பா மரம்பலகை யாகுவங்கு வாரிமுதல்
உகப்பாக வேற்றி வந்தாருற்று

வேறு

உற்றபுகட் தூரியெல்லா மொன்றுபடத் துறையில்விட்டு
மற்றவருந் தானிறங்கி மாநாகர் தனைவணங்கி
கொற்றவனே நீயழைத்துக் கூறிவிட்ட பணிவிடைகள்
சற்றுங்குறை வாராமற் றாங்கொணர்ந்தோ மென்றுரைக்க

னந்தனக்கு நீங்களன்றி யாருதவி யாவரென்று
சந்தனஞ்சேர் திண்புயத்தான் தக்கபுகழ் மாநாகர்
சிந்தைமகிழ்ந் துடுகூறை சிங்காரப் பணிகனல்கி
வந்திளைப்பா றுதற்குமது மனையிடத்திற் சொல்லுமென்றார்

மனையிடம்போம் படிவிடுத்து மந்திரிமார் தமைநோக்கி
வினைசெய்து மணிவாங்க மிக்ககப்பல் வைப்பதற்கு
தினையளவு நேரமுந்தான் செலுத்தாம லிப்பொழுது
அனைவோரும் வரவிடென்று அருள்வணிக னறைந்தனனே

தூரியோட்டம் முற்றிற்று

விருத்தம்

பணமோடுகல்வியுஞ் சுற்றமொடுகாணியு பதிமக்கண் மனையாளுநற்
பட்சமுய்த்திடுதோழர் நட்புமிக்கிடு துணைவர்பல தந்தைதாய்சுற்றமும்
குணமோடுவேணுமென் றிறுமாந்துவருகின்ற கோளரேகேழுமிப்போ
குலமரபினிற் பாண்டிமகளானகவுரி மாங்கொம்பீன்ற வித்தல்லவோ
சனமோடு செந்தாமரைக்கு நிகாரானஎன்தாய் பாதமோதிமனதிற்
றாபரிக்கிற் செல்வமேபெற்ற கரியதொருசாரூப மோட்சமலவோ
மனமோடுமலரழக வல்லியேயுன்னை மனதினினைக்க வெளிதோ
வாலபிரகாசமுறு நாகர்பதி மீதுறையும் மாதுகண்ணகை யம்மனே

( இங்கே நாகர்பதியென்பது —நாகர்கோயில் எனக்கொள்க பதி-ஊர்)

உ

அம்பாள் துணை

ஐந்தாவது கடலோட்டக் கதை

கரிமுகனைக் கணபதியே கற்பகமே சொற்பொருளே
ஒருமுகனை யுடையவனே யோங்குமொற்றை மருப்பினனே
திருமுகனை யுடையவிந்தத் தெய்வக்கதை செப்புதற்கு
வரமுகனை தருமுனது மலர்ப்பதத்தை வாழ்த்துவனே

வாழ்பொருந்துங் கண்ணகையார் மலர்ப்பதத்தை மனதிருத்தி
ஊழ்பொருந்தும் வினையகற்ற வொருமருந்திங் கிதுவிருந்தாய்
ஆழ்பொருந்த வெனையவனே யடிமைசெய்திங் காழ்வளென்று
காழ்பொருந்து மனதினம்பிக் கட்டுரைக்கத் தொடங்கினனே

தொடக்கமுற்ற மாநாகர் தூதுவரைத் தானோக்கிக்
கடக்கரிய கப்பல்செய்யக் கருதும்பல நாட்டிலுள்ளோர்
அடற்பெரிய திறத்திலுள்ளார் ரானவருங் கருமர்களுந்
தொடக்கமுறத் தச்சர்களின் தொகைவரச் சொல்லென்றனனே

என்றுசொல்லு மளவுதன்னி லெண்ணுறு தூதுவர்கள்
துன்றுசேரன் சோழனுறை துய்யவூரிற் றச்சரெல்லாம்
அன்றுவர வாயழைத்து அங்குவிட்டுத் தூதரெல்லாம்
சென்றுமந்த மாநாகர் திருப்பதத்தி லிறைஞ்சினரே

பதியில்வந்த தச்சரெல்லாம் பட்சமுடன் தொழுதுநிற்க
விரதமுடனே தானோக்கி வெகுமதிகளே புரிந்து
கதிசெறியு மெனதுமகள் கண்ணகைக்கு மணமுடிக்க
துதிசெறியு மணிவாங்கச் சோங்குவைக்க வேணுமல்லோ

வேணுமல்லோ பலகைகளும் வேண்டியதோர் பலபொருளுங்
காணவல்ல கையாளுங் கரியிரும்பு பொன்வகையுங்
பூணநல்ல பொன்வெள்ளியும் பூட்டுசெம்பு வெண்கலமும்
ஏணளவுங் குறையாம லிப்போவைப்பேன் கற்பனைகள்

கற்பனைகள் வைப்பேனான் கப்பலெல்லா மாதமொன்றில்
வெற்பனைய புயமுடையீர் வேலைசெய்து கோலமிட்டு
ஒப்பரிய வெடியரசன் யுத்தமதற் கசையாமற்
தப்பித மில்லாதபடி தரவேணு மெவ்வளவும்

எவ்வளவு தொகைபொருந்து மிசையுங்கப்ப றருவோமென்று
பவ்வளவுங் கப்பலொரு பதினாயிரம் வேணுமென்றார்
அவ்வளவு மாதமொன்றி லமையுமென்றத் தபதியர்கள்
எவ்வெவரு நன்முகூர்த்த மிசையவந்து தொடங்கினரே

கப்பலிசைக் குறில்நெடில்
கரிமுகனைப் பிடித்துவைத்து .நல்ல. கனகமலர் மிகச்சொரிந்து
கபிரிசமுறு மபிடேகங்கள் .அவற்குப். பிரபலமாய்த் தான்முடித்து
பெரியதொருபூகமொடு வாழைகள்வருக்கை பேசுகனிவர்கமொடு காய்பிறவுகந்தம்
உரியதொருவப்பமொடு மிக்கிளனீர்தேங்கா யோதுபலவற்கவகை யாதினமுய்த்து
திருவருளுவாயிதுவு கருமறிரைவேறத் தேவதேவாவென்று தெண்டங்கள்செய்து
பதிவதுறுதச்சர்மிகு வாச்சியுளிகொண்டு படவுசெய்யக்கடிது பலகைவிட்டனரே
அடிமரத்திற் தடையுறுத்திக் .கப்ப. லசையாமல் வசவுவைத்துக்

கடிதடுக்கி மரம்பூட்டிக் . காப்பின். கதிரடுக்கின வதிரொடுக்கி.
காற்பலகை மேற்பலகை கச்சிட்டபலகை. கனவட்டப்பலகையுடன் னெதிர்முட்டுப்பலகை
கூர்ப்பலகை சரிபலகை குத்திட்டபலகை. கோட்படலை யாட்புவிசை கொண்டநற்பலகை
சார்ப்பலகை தாழ்ப்பலகை தாரோடுபலகை. தட்டிட்டபலகை யெதிர்முட்டிட்டபலகை
ஆர்ப்பலகை யிவைதெரிந் தொன்றொன்றடுக்கி.அழகுதருகப்பலுக் கணியுமிட்டனரே

இட்டநல்ல பலகைவற்க.மேன்மே. லெடுத்தடுக்கி நிரைபார்த்து
கட்டிநல்ல வொழுங்கமையத் . தச்சர். கைமுறையில் செய்கைசெய்து
கதிராணி வாலாணி கையாணி போட்டுக். காலாணி நூலாணி கல்லாணியிட்டு
எதிராணி முதிராணி சதுராணியிட்டு. இடையாணி குடையயாணி புடையாணிகோட்டி
பிதிராணி முட்டாணி வட்டாணி கட்டிப். பிடியாணி தடியாணி வடியாணியிட்டு
சதுராணி தாராணி தடையாணி யிடையிற். சாருநற் படியாணி தானுமிட்டனரே

கட்டிநன்றாய்ச் சேர்த்தொடுக்கி .வன்னக. கதிர்நிறத்தின் பிறமுறுத்தி
கதிரோடுமேராவுஞ் சதுரோடுதட்டுங். கதிர்முனையுமிடையுமொரு தடையுமில்லாமல்
அதிரவருபொற்ற கடிருப்புத்தகடு மானபலசெம்பினொடு வெள்ளித்தகடும்
சதுரமுறமேல்வைத்து மேலாணியிட்டுத் தானதிகசித்திரமுறுத்தி யொளியாக்கி
இதரமாவாதமென விசைவேலைசெய்து. இடையிலொருபெரிய பாய்மரமுமிட்டனரே

இட்டுநல்ல கடைமரமு .மேலா. யிசைந்துதவழ் தடிமரமுங்
கட்டுவன்ன விடைமரமும் . இடைக். கடைக்குறையாம் வாங்குகளும்
கருதரியமேல்வீடு கீழ்வீடுசிறுவீடு கைவீடுசமையலது செய்வீடுநல்ல
புரிவுமொருமேல்மாட முப்புரிகைமஞ்சும் புகலானகொலுமேடை புறவாணவீதி
அரியதொருகட்டிலொடு கதிரைபலபெட்டக. மலுமாரிசுமுதலடங்கு பொருளெல்லாஞ்
சரியாச்சமைத்துமிகு தச்சரெல்லோருஞ் சாய்மரம்பதினாறு தானுமிட்டனரே

ஈட்டுநல்ல கப்பிகளு . மேலா. யிசைக்கரிய வாஞ்சானுங்
காட்டவல்ல சுக்கானுஞ் . சாயக். காணுந்நல்ல கானாவும்
நாட்டியதோர்சங்கிலிக ணங்கூரவகையும். நல்லகம்பாக்கயிறுஞ் சொல்லுகும்பாசும்
பூட்டியேவெண்கலங் கப்பல்தங்கத்திற். பொருந்தியேபாயுந் திருத்தியேதூக்கி
வாட்டமறுபதினாயிரம் கப்பலும்வேலை. மாதமொன்றிற்சரி முடித்துவருதச்சர்
கூட்டியேமாநாகர் திருமுன்புகப்பல் குறைவற்றதென்று கும்பிட்டுநின்றனரே

நிற்பளவின் மாநாகர், அவர்க்கு. நிறைந்தபல வெகுமதிகள்
நற்புடனே தான்கொடுத்து . வலியில். நல்லமீகாமனை யழைத்து
கப்பல்பதினாயிரமும் வேலைமுடிவாச்சுக். காசுபலபொன்வெள்ளி காணும்பொருள்வற்கம்
ஒப்பரியபலபடையு முடையசாமானு முற்றுநீர்சொன்னபடி யுத்தரவுசெய்வேன்
இப்பொழுது தாளாதெழுந்து கடிதேகி ஏகமுறுதீவின்மிகு நாகமணிவாங்கச்
செப்பமுடனேபோகி வரவேணுநீயே செல்லுமிதுநன்றெனச் செப்பிவிட்டனரே

விடைகள்பெற்ற மீகாமன் .தனது. விடுதிமனை போய்ப்புகுந்து
தடைகளற்ற கோயில்சென்று . கவுரி. தன்னடியை வணங்கிநிற்க
கடியமீகாமன்முன் கண்ணகையெழுந்து. கருணைசெய்தேயிங்கு வாவென்றழைத்து
படைகொண்டு கப்பல்விட்டே வேலைசென்று. படியில்வெடியரசனுடனே பொருதுவென்று
தடையின்றியேதீவின் மேவுபொழுதங்கே.சார்வினைவரும்பொழுது தானெனைநினைந்தால்
அடிகொண்டுமுன்முன மெழுந்துமருள்செய்வேன்.அஞ்சாதுமணிவாங்க வகலுமென்றனளே

என்றவுடன் மீகாமன். கும்பிட். டேகியங்கே சாலைசென்று
துன்றுநல்ல நீர்முழுகி. மனையிற். றுய்யகறி யமுதருந்திக்
கொண்டசில நற்சோமனைக் கொய்துடுத்துக்.குலவுசருகைசால்வை தலைமீதுசுற்றிக்
கண்டவொழிதங்கக் கடுக்கன்புனைந்து.கருதுபலமாலையொடு பூஷணமணிந்து
வென்றிதருவாயென்று கூர்வாளெடுத்து வெற்றிகொளுகண்ணகை தனைத்தொழுதிடத்திற்
சென்புபலசேனை வெள்ளம்புடைகள் சூழத் திருமேவுகப்பல் துறைசேரவந்தனனே

சேரவந்த மீகாமன். றனது. சேனைவெள்ளந் தனைப்பார்த்து
பாரீரிந்தக் கப்பலுக்கு .வேண்டும். பலபொருளு மேற்றுமென்ன
சாருவருபதினாயிரங் கப்பனிறையச். சகலதீன்சாமான்கள் தடையின்றியேற்றிக்
கூரவருபத்தெனு மிலட்சம்பீரங்கி குறையாதுகுண்டொடு மருந்துவகையேற்றி
பேரவருகத்தியொடுவாள் பலகையீட்டி பெரிதானவில்லம்பு வல்லையங்கைவேல்
தீரவருபடைவகைகள் குறையாமலேற்றித். திருப்பூசைசெய்தவர்கள் தெண்டமிட்டனரே

தெண்டனிட்டு மீகாமன். கண்ணகைத். தெய்வஅருள் மனதுறுத்தி
மிண்டிநின்ற படையுடனே. கப்பல். மேலிவர்ந்து பூசைசெய்து
நன்றுதருபாய்மரத்திற் கொடியணிந்து நயமானதண்டனைக் கிலாசுவகையாக்கி
சென்றுசிலமாலுமிகளும் பலரிருத்தித் தெளிவ்ான சயில்வதி காரிகள்திருத்தி
துன்றுபலமாநாகர் சுற்றமொடுபார்த்துத் துய்யபலவாழ்த்தினிடு சொற்பொருள்களேற்று
கன்றுமொருகப்பறனின் மீகாமனேறிக் கண்ணகைப்புரவியென நாமமிட்டனரே

பேருமிட்டுச் சலாங்கொடுத்து. அவன். பெரியபடைத் தலைவனென்று
சேருமந்தச் சுக்கானைச். சிவன்றன். செயலெனவே செயற்கைசெய்து
பாருமெனவேபெரிய பாய்தனைவலித்து. பரிவானபலபாயு முடனேயிழுத்து
சாருமெனவேபலரும் வாழ்த்தொலியினோடு.தாரைகொடுகொம்புகுழல் தாளமொடுசின்னம்
வாரணையுமேழமொடு மத்தளமுடுக்கை.வாங்குபலதாரைவகை வாரிதிமுழங்க
ஊருமெனவேகவுரி திருவருளினாலே.உயர்கப்பல்கடல்மீதி லோடலுற்றதுவே

ஓடமெல்லா மொருவழியாய்.மலைபோ.லுயரோடி நிரையாக
ஆடல்கொண்டு மிகமுழங்க. வெங்க. ளானைமுக னருளாலே
தேடுபலமாலுமிகள் ஞானவகையாலே.தெளிவானகடலூடு வானூடுசெல்லும்
ஓடுபலமீனமொடு வெள்ளிவகைபார்த்து.உற்றபலகுற்றமதுரைத் திடவிசைந்து
நாடுபலயானைமீன் குதிரைமீனோடு.நண்டாமைவன்மீன் திமிங்கிலகுலங்கள்
சாடுமதுசுக்கான் திருப்படாவென்று.சாற்றியேமேலுயர வேற்றிவிட்டனரே

ஏற்றியங்கே கப்பலெல்லா. முயர. விசைந்த கடலிடமிலதாய்
மாற்றமின்றி வரைபோலே.உருக்கள். வகைவகையே தான்பரந்து
சாற்றுதிருக்கவுரி மகமாசிசிவகாமி. சகலவுலகத்தில்வரு சரமசரமானாள்
ஆர்க்குமொருசமையவதிகாரி சிவனாற்கு.மழகானவன்பூங் கொம்பனையளாகும்
போற்றுகாமாட்சி மீனாட்சியென்னாச்சி.பூரணீகாரணீ பொலிவான பாண்டியன்
தோற்றுமகளான கண்ணகையருளினாற் கப்பல். சோழநகர்தனைவிட்டு மீளவோடியதே

விருத்தம்

தூசினையுடுத்தென்ன வாசனையணிந்தென்ன தோழரொடு கூடியென்னத்
துரைமக்களாயென்ன பணமிக்யமுற்றென்ன சோதியொளி மேவியென்ன
பேசிணையில்லாமலகலுங் காலமேவரிற் பின்னுமங் காவதுளதோ
பெண்ணரசுகண்ணகையை யெண்ணிலானந்தப் பெருக்கென்று மழியாததே
காசுபலபொன்வெள்ளி காணிபலதங்கவள கடைக்கண் கிடைக்குமென்னிற்
கருதுலகமுதன்மையொடு சகலசென்வசீகரங் காணுமவள் காணவுற்றால்
மாசில்மணி யாபரணவாலையே நாகர்பதி வந்தவதரித்தவுமையே
வாலபிரகாசமுறும் ஞானமாரூபியே மாதுகண்ணகை யம்மனே

## கடலோட்டில் வெடியரசன் போர்

தேன்பாட லெனுமதுரச் செந்தமிழோர் தங்கண்முன்னே
நான்பாடுவே னெனவே நாவசைத்த தன்மையது
தான்காணில் மயிலாடத் தன்சிறகை விரித்துதறி
வான்கோழி யாடுகின்ற வண்ணமொக்கும் பாவலரே

ஒப்பற்ற குழலுமையை யொருபாகம் தன்னில்வைத்து
அப்புத்தண் மதிபுனைந்தோ னருளாக வனைவோருஞ்
செப்பித்தா னுய்வதற்குச் சீர்பெறவே பாடுமென்று
கற்பித்த குருநாதன் கமலமலரென் றலைமேல்

தலைமைபெற்ற பாரதத்தைத் தந்தமொன்றா லெழுதிமுன்னாள்
நிலமைபெற்ற கரிமுகன்றன் நெஞ்சுபிளந் தெறிந்தபிரான்
பலர்புகழும் மீகாமன் படவோட்டி மணிவாங்கக்
சலதிசெலுங் கதைபாடத் தந்திமுக னருள்விடுமே

மேவனைய பெரும்புகழான் வெடியரசன் றன்மனையாள்
பூவணைமேற் பள்ளிகொள்ளப் பொல்லாத கனவுகண்டு
ஏவனைய கன்னியஞ்சி ஏங்கியுட னெழுந்திருந்து
காவனைய கையானே கடலரசே கேட்டருளாய்

கடலரசே பெருமாளே கன்னனெனக் கொடையானே
வெடியரசே யென்னரசே விழிதுயின்ற நேரமதில்
கொடியவொருவர் தேசங் கொற்றவனே கண்டேனெனத்
துடியைவென்ற விடையாளே சொல்லுமெனச் சொல்லலுற்றாள்

சொல்லுகிறேன் கேளரசே தூறல்மின்னல் பல்விழவும்
நல்லவெங்கள் பதிவிடவும் நஞ்சுகடற் பிறந்திடவும்
வல்லயானைக் கோடிறவும் மாதிரத்தின் மலைவிழவும்
ஏல்லொருகண் ணிழந்திடவு மிடிவிளவுங் கண்டேனே

கண்டனைய பெண்ணொருத்தி கயலையெல்லா மிகவணிந்து
வண்டமருங் குழல்விரித்து வழிநோக்கி நடந்திடவுங்
கொண்டாடு மன்றிருந்த குலவரசு வீழ்ந்திடவும்
விண்தோய வளர்தருவின் மின்னாம லிடிவிளவும்

மின்னொளிசேர் கதிரோனை விடநாகம் விழுங்கிடவும்
நன்னொளிசே ரிளங்கதிர்கள் நாலுதிக்கிற் திசையெனவும்
மன்னுகடல் மீதிலுன்னை மறியலாக வைத்திடவும்
உன்கை வாளொடிந்திடவு வூழ்வினையிற் கண்டேனே

வினையான சொற்பனங்கள் மிகநானுங் கண்டதினால்
வினையுனக்கு மீகாமன் னென்னாளும் பழிகாறன்
வினைவருவான் கடல்மேலே வெடியரசன் பெருமாளே
வினைவேண்டா மென்கணவர் வேறுதேசம் போய்விடென்றாள்

வேறூரிற் போய்விடென்று மெல்லியலே சொன்னதென்ன
ஏறாகிச் சொற்பனங்க ளெனக்குமடா தானாலும்
மாறாக மீகாமன் வாரான்காண் வந்தாலுங்
கூறாகக் கொன்றிடுவேன் கொடியிடையே யஞ்சாதே

கொடியையென்ற விடையாளே கூறும்வன்போர்க் கார்வரினுங்
கடிதினிநான் கல்லெடுக்கக் காகம்போ லோடுவர்காண்
வெடியரச னெனப்பதிந்த மேதினியோ ரறியாரே
படியிலுள்ள வெலிகட்குநான் பாம்பெனக்காண் பான்மொழியே

மொழிந்திடக்கேள் சிங்கமுன்னே முயல்திரண்டு நிற்பதுண்டோ
கழிவாகக் கற்றூணைக் கறையானு மரிப்பதுண்டோ
செழுங்கானிற் புலிக்குமுன்னே திரண்டுபுல்வாய் துரந்ததுண்டோ
மழைமுகிலிற் குழலாளே மற்றெனக்கா ரெதிர்வருவார்

எதிர்பொரவே வந்தவனை ஞமபுரத்தி னேறுவிப்பேன்
மதியாமல் வாரியின்மேல் மரக்கலங்கள் கொண்டுவந்தால்
சதியாக வெட்டியங்கே தாழ்த்ததுவு மறியீரோ
புதிதோவென் சமத்திதென்று புவியோர்க ளறியாரோ

அறிசோழன் பட்டணத்தான் அவனிங்கு வருவனானால்
பொறியுடைய மாந்திரளைப் புலிக்கடுவன் துரந்ததுபோல்
முறியவெட்டித் துரந்தவனை முன்னாகக் கொன்றிலனேல்
மறையவர்க்கு நீர்வார்த்து மறுத்தவன் நானாவேனே

ஆவதிது ஆனாலும் அன்னமேயுன் கனவிற்குற்றம்
போவதாக மறையவற்குப் புரிந்திடுவாய் தானமென்னப்
பூவணையும் பூங்குழலாள் பொய்கைதனில் படிந்தெழுந்து
தேவர்களை வரவழைத்துத் திருமனையிற் றானும்வந்து

வெண்பா

தான் மிகவளித்தாள் தனதுகண்ணிற் கண்டகனா
ஈனமிக வாராமலென்றுமே - மேன்மைப்
படிராசர் கொண்டாடும் பரதவர்க டங்கள்
வெடியரசன் றேவி விரைந்து

விரைவிலிவள் கண்டகனா வேறார்க்கு மாவதல்லல்
இரவிலிங்கே கண்டகனா வெனக்கல்லக்கா ணெனவுரைத்து
அருகினின்றவனை யழைத்து அறைகுவினீ மரத்தேறி
திரைகடல்மேல் மரக்கலங்கள் தெரிவதுண்டோ பாருமென்றான்

பாருமென்ன வவனருகிற் படர்ந்ததொரு மரமீதே
தூரமுற்று வளர்ந்த கொம்பிற் றோன்றுநுனி மீதேறி
வீரமிகப் பேசுகின்ற வெடியரச னேவலினாற்
காராளி தனில்வரவு கருதியங்கே பார்த்திருந்தான்

பார்த்தபொழுதே தூரம் பாய்க்கறுப்புத் தோன்றிடவே
வேர்த்துளமு மிகநடுங்கி விரைவினுட னவனிறங்கிப்
பூத்தமலர் றொடையானே போரேறே வெடியரசே
நீத்தமெல்ல மரக்கலங்கள் நிறையவங்கே தெரியுதென்றான்

நிறையவங்கே தெரியுதென்ன நீதிசெறி வெடியரசன்
துறையிலுள்ள வுருக்களெல்லாஞ் சோடியுங்கள் கடுகவென்றான்
குறையகல வுருக்களெல்லாங் கோட்டும்வன்னக் கொடிபறக்க
இறைவரையில் நேகரங்கங் கெக்குறைவுந் தீர்த்துவந்தார்

எக்குறையுந் தீர்த்துவந்தோ மென்றுசொல்லி நின்றவர்கள்
மைக்கடலின் மீதுவரு மாற்றலனை வெல்வதற்கு
திக்கிலுள்ள வீரர்தம்மைச் சென்றழைத்து வாருமென்ன
அக்கணமே தூதர்சென்று அனைவரையு மழைத்துவந்தார்

வேறு - **இன்னிசை** நெடில்

வந்தெதிர்த்தவர் சிந்தவெட்டவே. வல்லநாரணன் வாரிதன்னிலே
தநதிபோலவே வந்தவீரனுஞ். சலதிவீரனும் சமரில்வீரனும்
பந்தவன்னியர் தங்கள்வீரனும். பழுதில்வீரனும் பார்புகழ்ந்திட
விந்தைதான்மகிழ் பெற்றவீரனும். வெடியரசனைக் கண்டுவேண்டவே

கண்டுவெற்றியே பெற்றவீரனுங். கமலைதன்னரு ளுற்றவீரனுங்
வண்டுலாந்தொடைப் புயத்துவீரனும். வாரிதீரனும் மதிகொள்வீரனுங்
கொண்டல்போலவே யுதவுபூமனுங். கோளரியென நின்றதீரனும்
விண்டநீரினைக் கார்க்கும்வீரனும். வெடியரசனைக் கண்டுவந்தனர்

வெடியில்வீழவே விடுமவ்வீரனு. வேலையாரியன் கோலசீலனும்
படியினேழினுந் தகையில்வீரனும். பாலலோசனுங் கோலநீலனும்
அடலரச னதானவீரனு. மமரிலேறிடச் சமரில்வீரனுங்
கடகவெற்றியே புனையும்வீரனுங். கடலரசனைக் கண்டுநின்றனர்

கட்லில்வீரர்கள் கண்டனும்முகிற். கருநிறத்தனுங் கருணைவீரனும்
படரும்வீரர்கள் கண்டதிக்கெலாம். பரவுவீரனும் பதிநற்கண்டனும்
தடைசெய்தண்டனுஞ் சமரில்மிண்டனுந். தமர்களாகிய குமரவீரரும்
னுட்புகாரெனும் புரவிவீரனும். வழுவிலாமரூஉ வந்துகண்டனர்

மருதுசாயவே பொருதுராசனும். வங்கராசனுந் துங்கராசனும்
இருகைவாள்வலி விருதராசனும். எழுதெனாததோர் தளவராசனும்
விருதராசனும் வீரராசனும். மிடியர்யாரையுங் கடியும்ராசனும்
மருவலரையே வெல்லவென்துதிசேர் மாலையிட்டுமுன் வந்துகண்டனர்

இட்டபேரணி வெட்டுதேவனு. மியலுவீரர்கள் தங்கள்தேவனும்
ஒட்டொனாரையே கட்டும்வீரனு. முலகெலாம்புகழ் சலதிவீரனுந்
துட்டரானவர் முட்டுவீரனுஞ். சூரதேவனும் வீரதேவனும்
மட்டிலாததோர் வெடியரசனை. வந்துகண்டனர் ரிந்தவீரர்கள்

வெண்பா

வந்துகண்டார் வீரரெல்லாம் வண்மை வெடியரசே
சிந்தைநினை வெங்களுக்குச் செப்புமென — முந்த
அடல்புனையு மீகாமனான் கப்பலாயிரமுங்
கடல்வினையாய் வந்திருந்தார் காண்

காணவிங்கே வந்தவருங் கடலரசன் முகம்பார்த்துத்
தூணைவென்ற வீரரெல்லஞ் சொல்லுவரே சபதமிப்போ
பேணிவந்த கப்பலெல்லாம் பிடியாமற் பேரவிட்டால்
ஆண்மைவிட்டுப் பெண்மைக்கஞ்சி யலியாகிப் போவோமென்றார்

அஞ்சவெற்றி செய்துபுக ழாகவெட்டி செட்டிவிட்ட
மிஞ்சுகப்ப லாயிரமும் வேலைதனிற் சாலமுடன்
பஞ்சுபற்றும் தீயதென்னப் பற்பமாகச் செய்திலமேல்
விஞ்சவத்த மிட்டுவினை மேலளித்தோ ராவோமென்றார்

அழிவுசெய்யக் கருதிவந்த வடல்வீரன் மீகாமன்
எழுதரிய கப்பலெல்லா மிச்சணமே பிடித்திலமால்
தெளிதமிழி னாலாவர் தஞ்சீர்பாடி வந்தவரை
பழுதுசொல்லி யகற்றிவிட்ட பாவியைப்ப போலாவோமென்றார்

பாவிதத்திற் பாடுபவர் பரவுபுகழ் வெடியரசே
காவிரிப்பூம் பட்டணத்தான் கப்பலெல்லாம் பிடித்திலமேல்
பூவலையத் தரசர்சொற்றைப் பொருதியுண்டு போர்க்களத்தில்
ஏவலுமற் போர்க்கழிந்து இரிந்தவர் போலாவோ மென்றார்

என்றாரே வீரரெல்லா மின்பமுற்று வெடியரசன்
நன்றாக நாமாண்ட நற்பதியில் வீரர்களே
ஒன்றாகக் கூடியிப்போ துரைத்தீரே மாற்றானை
இன்றேற்று வெட்டுதற்கு எல்லோரு மேறுமென்றான்

ஏறுமென்று பொற்குவியல் எடுத்தெடுத்துத் தான்கொடுத்து
ஆறுமாதந் தனக்குடமை யனைவருக்குங் கொள்ளுமட்டும்
கூறுமென்று கணக்குரைக்கக் குறையாம னிறைவேற்றி
மாறுசெய்த மாற்றாரை மலைந்துபடை தருவீரென்றே

படைமலைந்து தருவீரென்று படைத்தலைவர் தங்களுக்கு
உடுகூறை சட்டைமுத லுள்ளபோர்க் காயுதமுநல்கிப்
படைகளுறுப்பாக விட்டுப் பாகுபட வேகமுடன்
கடலரச னவர்களுக்குக் காயுடன் வெள்ளிலையுமிட்டான்

இட்டபின்பு வெடியரச னெழுந்துசென்று நீர்முழுகித்
திட்டமுடன் றன்மனையிற் சேர்ந்துறுபா லடிசிலுண்டு
பட்டுவன்னக் கச்சைகட்டி படைக்கலஞ் சீராவணிந்து
மட்டுலவு குழலாளே வாளெடுத்துத் தாருமென்றான்

வாளெடுத்துத் தாருமென்ன வன்னநீல கேசரியுந்
தாளடங்கப் புவியளந்து சலதிதனிற் கண்துயின்று
காளமொத்த வசுரர்கிளை கட்டறுத்த மாயோனே
கோளகற்றி வெல்லவென்று கொடுத்தனளே வாளெடுத்து

கொடுத்திடும்வாள் வாங்கியபின் கொம்புதரை விருதூத
விடுத்திடு சாமரமிரட்ட வெற்றிமுத்தின் குடைநிழற்ற
அடற்பெரிய வீரர்சூழ வமர்புரிய வேணுமென்று
கடற்றுறையிற் சென்றனனே காவற்கப்பல் வெடியரசன்

வெண்பா

காவலவிடு மீகாமன் கப்பல் பதினாயிரமுந்
தாவுகடல் மீதோடித் தான்வரவே — மேவும்
அடற்கரசன் முக்கியர்கோ னானபடைசூழ
கடற்றுறையில் வந்துநின்றான் காண்

நின்றானே வெடியரசன் நீதிபெறு வீரருடன்
ஒன்றாக மீகாம னுருக்களெல்லாஞ் சரிந்துவர
குன்றாத மாலுமியுங் கொம்பிலேறிப் பார்த்திருந்தான்
சென்றேறிப் பார்த்தவனுஞ் செப்பலுற்றா னெல்லவர்க்கும்

செப்பமான கீரிமலை தெரியுதிப்போ தெற்காக
ஒப்பமாகக் கரைமுடுகி லூர்பதியுந் தெரியுதிப்போ
துப்புக்கரை தெரியோடித் தூறுமலை தன்பதியில்
மெய்யுடைய வாவிகளு மிகுந்தமலைச் சோலைகள்தான்

தானடரும் வாழைபலா தங்குதெங்கு மாமதிலும்
வான்றோயு மண்டபமும் மாஞ்சோலை பூஞ்சோலை
மூனறுலகும் புகழ்படைத்த முக்கியர்கோன் பதிபார்க்கில்
சான்றாக விதற்கெந்நகர் சரியில்லைக்காண் பார்தனிலே

பாரினெல்லாம் படையாகப் பரந்துநிற்கு நிரந்தரமாய்
நீரினெல்லா மரக்கலமாய் நிறையவெங்கு தோற்றுதுகாண்
போரினாலே வினைவிழைப்பன் பொருவதல்லாற் போகவிடான்
சீரியல்சேர் மீகாமர் சேமியுமுன் படைகளென்றான்

படைகடனைச் செமியுமென்று பஞ்சலியுஞ் சொன்னதற்பின்
திடமுடைய மீகாமன் சிரித்தவர்க்கு மென்சொல்லுவான்
கடலரச னென்னுடனே கன்றியமர் செய்தானால்
விடைமருவும் வாளாலே விண்ணேற விடுவேனென்றான்

விண்ணேற விடுவெனென்ற விறல்வீர னஞ்சாதீர்
கண்ணகை தன்னருளாலே கடலில்வினை வாராதே
எண்ணரிய கோப்புடனே யிடுபணியுங் கடகமுடன்
நண்ணரியவளை யிவைகள் நல்கிவிடு மென்றிசைந்தான்

விடுவதென்ன பாய்மரத்தின் மேலிருந்தும் வினைசெய்வதாய்த்
திடமுடைய தகளிதட்டிற் சிறந்தமுக்கண்ணிகளு மிட்டார்
முடுகுவீர ரனைவருக்குங் முன்வளைச் சங்கிலியுமிட்டார்
கடுகவரும் பஞ்சலிக்குக் கதித்தசரப் பளியுமிட்டார்

இட்டபின்பு மீகாம னெதிர்வீரர் தங்களுக்கும்
மட்டில்லாத வுடுகூறை வகைவகையே தான்கொடுத்து
வெட்டியிப்போ வெடியரசை வெடியையெல்லாந் தீக்கொழுத்திப்
பட்டணமு மழித்திடுவேன் படைவீர ரஞ்சாதீர்

அஞ்சாதீர் வீரர்களென் றாயுதசா லாஞ்சலமாய்
நஞ்சாருங் களத்தானை நன்றாக நினைந்துகொண்டு
தஞ்சாருஞ் சமத்தர்களை சலதிமிசைக் காண்பமென்று
மஞ்சாரு மீகாமன் மலைபோற் பார்த்திருந்தானே

ஆல்செறிந்த மரக்கலங்கள் அங்கவெடி தன்னையெல்லாம்
வேலையிலே பார்த்திருந்த வெடியரச னேதுரைப்பான்
காலின்மிக்க கடியதொரு கடலவீரர் தம்மையெல்லா
ஏலுமுன்னே யழையுமென்றா னிசைந்ததொரு வெடிமுகத்தில்

வெடிதனிலே வீரர்நிற்க வெடியரசன் போயேறி
விடமெனவிக் கடலிடமாய் மிகுசெருக்காய் வந்தவனை
கடிதில்வெட்ட வேணுமென்று கப்பலெல்லாம் பாய்வாங்கி
திடமுடைய மதிலெனவே தீர்விட்டுச் சூழ்ந்தனரே

விட்டுவந்த பீரங்கியில் வீரரைப்பார்த் தேதுரைப்பான்
மட்டுலவு வீரர்களே மற்றுமுள்ள படையோரே
புட்டணத்தான் வரும்போர்க்குப் படையாவரு மஞ்சாது
முட்டியவன் றன்னைவெட்டி மோதுமுனை வெல்லுமென்றான்

முனைதனக்கு மஞ்சாது முட்டவல்ல மீகாமன்
கனமுடைய கப்பலெல்லாங் காலெனவே வேலைவரச்
சினமுடைய சிங்கமெனத் திருத்தமுறப் பார்த்திருந்து
வினைமுயற்ற வெடியரசன் வீரரைப்பார்த் தீதுரைப்பான்

உரைக்கும் வெற்றிமீகாம னுருக்களெல்லாஞ் சரிந்துவர
கரைக்குலத்தே முகம்பார்த்துக் கட்டுரைத்தா னப்பொழுது
திரைக்கடலில் வெடியரசைச் செருச்செய்திட வேணுமென்று
செருப்புகு மீகாமனுரை தேர்ந்திர்களோ நீங்களென்றான்

என்றுரைக்க வீரர்கள்தான் யாவருமோர்ந் தேதுரைப்பார்
சென்றுமிப்போ மீகாமன் சீறியமர் செய்வானேல்
கொன்றுமிந்தக் கொலைக்களத்திற் குருதிகடல் விட்டிலமேல்
துன்றுசில வெதிரிகளின் சொற்கேட்டோனாவோ மாகுமென்றார்

ஆகுமிந்தக் கப்பலெல்லா மலைகடலிற் றாழ்த்திலமால்
ஆகுமந்த மனையாளுக் கடிமைசெய்வோ னாவோமே
வாகைமிஞ்ச மீகாமன் வரும்படைகள் கொன்றிலமால்
வாகையெந்த நாளுமின்றி வாழ்ந்தவர்க ளாவோம்வல்லே

வல்லமைசேர் மீகாமன் மண்டுசேனை வென்றிலமேல்
இல்லறத்தின் விருந்தகற்றி யினிதுண்டவ னாவோமென்றார்
மல்லகற்று மீகாமன் மரக்கலங்கள் பிடித்திலமேல்
சொல்லியொன்றைத் தாறோமென்று சோந்தைசொல்வோ னாவோமே

ஆவோமே பின்போகி லாருநகைக் கிடமாகும்
தாவுபகை போரிற்பட்டாற் சத்தியமாய் மோக்கமுண்டு
நாவசையாம் வீரும்போம் நல்குலத்துக் கீனமுமாம்
போவீரென்று வீரமுற்றுப் போர்க்கெவரும் போந்தனரே

போந்தவர்கள் வெகுவார்த்தை புகன்றிடவும் கப்பலெல்லாஞ்
சேர்ந்துமிகத் திரண்டோடிச் செருச்செய்ய வேணுமென்று
ஏந்திசையக் கண்பார்வைக் கெட்டுதூர முட்டவங்கே
பாந்தள்மணி வாங்குகப்பல் பாரவங்கொண் டோடிவர

ஓடிவரக் கப்பலெல்லா முறக்கோவம் பிறப்பினிதாய்
ஆடல்வெடி யரசனென்பான் அவர்களைக் கண்டீதுரைப்பான்
தேடியிங்கே வருவதென்னுன் தேசமேது வாசமதாய்
நாடியுமை விடுத்தவரார் நாமறியச் சொல்லுமென்றான்

சொல்லுமென வெடியரசுஞ் சொல்லுவனே மீகாமனும்
மல்லமரும் திண்புயத்தான் மாநாகர் கப்பலிது
நல்லசோழ மண்டலங்காண் நாகமணி வாங்குதற்காய்
மெல்லவிங்கே விட்டவர்காண் மீகாம னென்பேரே

என்பேரு மீகாமன் யான்வருண குலத்திலுள்ளோன்
உன்காவல் தானல்லவோ வுவரிகளு முலகுகளுந்
தென்பாவு கண்ணகையாந் திருவைமணம் முடிப்பதற்கா
அன்பரவின் மணிக்குவந்தே னண்ணரேநீர் வழியைவிடும்

வழியேது விடுவதில்லை மணியவாங்க மரக்கலமும்
அழியவெட்டி யுங்களுடை யாண்மையின்று கண்டிடுவேன்
தெழிதமிழின் புகழ்பெருகு தென்புகாரின் மீகாமன்
பொழுதுபோக முன்னீங்க்ள் பொருதுவெட்டிப் போங்களென்றான்

பொருவதென்றீர் வெடியரசே போர்பொரநா மறிவோமோ
திருவின்மண முடிப்பதற்குச் சிறந்தமணி வாங்கவந்தேன்
விருதராசர் கொண்டாடும் வெடியரசே பெருமானே
தருமமுண்டு புகழுமுண்டு சடுதிவழி விடுவதென்றான்

விடுவதென்றாய் மீகாமர் வேண்டுவது சொன்னாலுங்
கடலரச னென்பதென்னைக் காசினியோ ரறியாரோ
கெடுகேடு கருதிவந்தாய் கிளையுடனே மாளவின்று
படைபொரவே மீகாமர் பாயைவிடா யென்றுரைத்தான்

பாயைவிடா யென்றுசொல்லிப் பதறாதே வெடியரசே
சேயநிதி வெகுவாகத் திறையுனக்கு நான்றருவேன்
போய்நாக மணிவாங்கப் புகழரசே வழியைவிடாய்
காய்வதுவுங் கருமமல்லக் கடலரசே யண்ணாவி

அண்ணாவி யென்றுசொன்னா யடல்மருவு மீகாமர்
என்னாய்நீ யென்விறலை யிப்போதுங்கள் யாவரையும்
விணணேற விடுவனென்று வெடியரச னுரைப்பளவில்
பண்ணரிய கோபமுடன் பார்த்துரைப்பான் மீகாமன்

மன்மருவு குழன்மடவார் மணம்முடிக்குஞ் சிலம்பாக்க
நன்னரவின் மணிவாங்கி நாளைவழி மீண்டிலனால்
மன்னுநீதி தானிருக்க வந்திளைத்தோர்க் கீயாமல்
நன்னடிசி லருந்தினவ னாவேனென வுரைத்தானே

உரைத்தவுடன் கப்பலெல்லா மொன்றுபடக் கூடியபின்
திரைக்கடலில் வந்துபொருந் திறலுடனே மீகாமன்
வரைப்புயத்து வெடியரசை வணங்கியுன்னைச் சொன்னதினாற்
பெருக்கமனத் தாங்காரம் பிடித்துநின்றா யேகுமுன்னை

ஏகவெட்டிப் படையுடனே ஏற்றபுகழ் புனையேனேல்
பாகுமொழிக் கண்ணகையாள் பாததொண்ட னாவேனோ
வாகைபெற்ற வங்கிழ்சத்தில் மகிமைகொடு வாழ்ந்திருந்த
வேகமுறு மென்பேரு மீகாம னல்லவென்றான்

மீகாம னீதுரைக்க வேகமுற்ற வெடியரசன்
நீகாவலாக வந்த நீடுகப்ப லாயிரமும்
போகாமல் வெட்டியுன்னைப் புறங்கெடவே வென்றிலனேல்
வாகுமுண்மை பேசிமுன்னே மறுத்தவனா னாவேனென்றான்

என்றவுடன் மீகாமனு மேதுரைப்பான் வெடியரசே
நின்றெதுநீ சொன்னாலும் நீரில்வழி மறித்தாலும்
அன்றுலகு முயிர்களையு மாக்கினவ னருளாலே
இன்றுவெட்டி யாரையும்வா னேற்றிடுவேன் சிறியனென்றாய்

சிறியவனாய் நினையாதே சிலைமுறிக்கும் சிற்றுளிநான்
வெறிகமழுந் தொடைமார்பா வெடியரசே மாயவனுங்
குறியவுரு வாகியல்லோ குவலயமேழு மிடந்தான்
நெறிவழியை விடாதிடிலுன் னிணக்குடலை பிடுங்கிடுவேன்

நிணஞ்செருகி யுரைத்தாய்கா ணீடுபுகண் மீகாமர்
மணந்தனக்கு மணிவாங்க மகிழ்ந்துபோக வந்தவுன்னைக்
குணம்பெருக் வெல்லுகிறேன் கொடும்புலியைப் புல்வாய்கள்
கணம்பெறவே திரண்டிடினுங் கடிதில்வெல்ல முடிவதுண்டோ

கடிதில்வெல்லு மோவெனவே கருதுபுகழ் மீகாமன்
அடல்செய்யவே கப்பலெல்லா மணியாகத் தான்பிடித்து
வெடியரசே போர்பொரவே வேணுமாகிற் கப்பலெல்லா
முடுகிவந்து அணிவகுத்து முந்திவந்து பொருவதென்றான்

பொருவதென் னப்பாசையிட்டுப் பொருவோமென் றணிவகுத்து
விரைவினுடன் மீகாமன் மேல்நாடி வெடியரசன்
இருபடையுந் திரண்டெதிர்த்து இசைந்திடும்போர் பொருதிடவே
பரிவினுடன் தாரைசங்கு பலமுழங்கும் படியார்க்க

படியடையும் பீரங்கியிற் பருத்தவெடி யிடுவாரும்
வடிவுதரு வில்லதனை வாங்கியம்பு விடுவாரும்
இடிபடவே முகில்முழக்க மென்னனென்று பொருவாரும்
வடிவுதரு சேனையெல்லாம் வகுத்துவெம்போர் பொருதனரே

வெம்போரி லணிகுலைய வேலெறிவார் வளையெறிவார்
அம்பெறிவார் கவணெறிவா ரடுத்தகல்லு மெடுத்தெறிவார்
கொம்பெறிவார் குணிலெறிவார் கூரிருப்புத் தடியெறிவார்
வம்பெறியுங் குணமுடையோர் வகுத்தபூசல் பொருதனரே

பூசலிட்டு முடியரிவார் பொற்கழுத்துஞ் செவியரிவார்
பேசுமகுடந் தறிப்பார் பிறங்குபுயந் தனைத்தறிப்பார்
வாசமுள்ள கரத்துடனே மார்பதனை யறுத்தெறிவார்
நாசியுட னிதளறுப்பார் நகையுடனே முகமறுப்பார்

முகமறுப்பார் விரலறுப்பார் முழங்குகண்டந் தனையறுப்பார்
சிகையறுப்பார் சீரறுப்பார் தேடருமாலைக ளறுப்பார்
வகைவகையாங் கொடிகுடைகள் மன்னுபொன்னி னாபரணம்
தகையவெங்குங் கூற்றுவன்போற் றாவியடர்த் தார்த்தனரே

அடர்ந்துதண்டி லெறிவாரும் மடருமீட்டி யெறிவாருந்
தொடர்ந்து வருவார்மடியத் தோமரத்தி லெறிவாரும்
விடம்பொருந்து மழுவாலே வெட்டியே கூறிடுவாரும்
படர்ந்த பெரும்வேலாலே பாய்மரத்தி லெறிவாரும்

வாருமென்று எதிர்பொருந்தி வானெடுத்துப் பொருவாரு
கூரிருப்புத் தடியாலே குத்திமுன்னே யடர்வாரும்
நீரில்விழுந் தளுவாரு நிணக்குடல்கள் சொரிவாரும்
பாரில்முன்செய் பாரதம்போற் படைபொருது நின்றனரே

வேறு குற்றிசை நெடில்

நின்றபோர்தனில் வீரர்களானவர். நேரமேசெல்லுதென்று விரைந்துடன்
கன்றிவந்தவர் பாய்தனைவெட்டவே. கையிரண்டும் விழும்படிவெட்டவே
நன்றிதுபடைப் போர்செய்ததின்றென. நகைத்துவந்து நடுங்கவமர்செய்யக்
குன்றுபோலிடிக் கொட்புறவெட்டியே. கொடியபூசல்விளைத் தெழுந்தார்த்தனர்

ஆர்த்தபோரினி லோடியமர்செய்வா ரடரும்வீரர்கள் பட்டுவிழும்படி
நீத்தமெல்லா மிரத்தம்நிறைந்திட நீடுருக்க டகர்ந்துமிதந்திட
வேர்த்துடலுறக் கண்ணுஞ்சிவந்திட வேலையெல்லாம் பிணங்கள்மிதந்திட
பார்வருதிரக் கடலென்னவே பார்மதிக்கும்படி பொருதானரோ

பொருதெதிர்த்திடு வீரர்மடிந்திடப் புனையுமாமணித் தாவடமற்றிட
மருவலார்மன மேக்கம்நிறைந்திட வல்லர்மாமன மூக்கநிறைந்திட
குருதிவேலை தனைப்பொருதோடிடக் கொடியபூசல் மிகவும்விழைத்தவர்
விருதுபெற்றனர் மீகாமன்சேனைகள் வெடியரசனும்வந்து போர்செய்தனன்

செய்தபோர்தனி மீகாமனுமுன்னே செங்கைவாளுறை தன்னையுருவியே
ஐயையோவென் றழுதுதழுவிட அடாத்துரப்பி விழுந்தோடவெட்டவே
வெய்யகோபம் விழைந்தெழுமுக்கியர் வேலையெங்கும் பிணங்கள்மிதந்திட
உய்யவேவகை யில்லையென்றோடவே யுரப்பியோடி மீகாமனுஞ்சென்றனன்

வேறு

சென்றெதிர்த்தோர் தங்களையுஞ் செங்கையுறை வாளாலே
கொன்றுளக்கிப் பிணமாக்கிக் குவலயத்தோர் கொண்டாட
வென்றுசில முக்கியரை வெடியுடனே தான்பிடித்து
மின்றிவெட்டிக் குவியல்செய்து மீகாம னாற்பரித்தான்

ஆர்பரிக்கக் கடலரச னானபடை யத்தனையும்
போர்க்கிசைந்து சென்றுவெட்டப் போதுதலை போனவுடல்
கார்க்கொடைசேர் பரதவராங் கருதலரைத் தறித்தபிணம்
நீர்க்குவைத்து போதிகைபோல் நிரம்பியெங்கு மிதந்ததுவே

நிரம்பவங்கே விடுகணையால் நெஞ்சுருவி விழுவாருங்
கரந்தறிந்து விழுவாருங் கழுத்தறுந்து விழுவாருங்
விரைந்துவெட்ட விழுவாரும் வெடியுடனே விழுவாரும்
உரம்பெறவே யுடைவாளா லுருவக்குற்றில் விழுவாரும்

குத்தியதோர் மழுவாலே குடர்சரிந்து விழுவாருஞ்
சித்திரஞசேர் புயர்வீரர் செருமுனையிற் றொடுத்துவிட்ட
அத்திரங்கள் பட்டுடலி லரும்வணிகர் தங்கள்பையில்
முத்துச்செப்புத் திறந்ததென்ன மூளைமுகஞ் சரிவாரும்

முகந்தனில் வெட்டறுந்திடவே முன்னடந்து பொருவாரும்
அகந்தனக்குப் போகவென்றா லவனியுள்ளோர் நகைப்பரென்று
செகந்தனக்குப் புகணிறுத்துந் திறல்வீர ரனைவோரும்
உகந்திரண்டாற் போற்றிரண்டு ஒருப்படவே பொருதனரே

ஒருப்படவே முக்கியர்க ளொன்றுபட்டுச் சென்றுவெட்ட
கரித்துரக்குஞ் சிங்கமென்னக் கண்சிவந்து மீகாமன்
விருப்புடைய தன்னுடைய வீரர்தன்னை நிறுத்தியபின்
திருப்புரக்கும் வாட்புயத்தான் சென்றெதிர்த்துப் பொருதனனே

சென்றெதிர்த்த மீகாமன்றன் றிறத்தைநோக்கும் வெடியரசன்
தின்றுவிடுவார் போலச் சினமிகுத்து மீகாமர்
கன்றிவந்தாய் நீபிழைத்துக் காவிரிப்பூம் பட்டணத்தில்
இன்றுனைநான் போகவிட்டா லெடுத்ததும் வாளல்லவென்றான்

அல்லவென்று வெடியரச னானபடை தற்சூழ
வில்லெடுத்துங் கல்லெடுத்தும் வேலெடுத்துங் காலெடுத்தும்
மல்லையொத்த திண்புயத்தான் மாநாகர் படையைமுற்றுங்
கொல்லவிட்ட கூற்றெனவே கோபமுற்று மார்ப்பரித்தான்

ஆற்பரிக்கக் கண்டுவெம்பி யடடாதம்பி வெடியரசே
போர்க்களத்து நீவலியன் பொருவதினி யறிவோமென்று
நீர்க்குள்வரும் பீரங்கியி னிரம்பிவரும் படைகள்தன்னை
கார்க்குளிடி முழக்கமென்னக் கைகலந்து வெட்டினனே

வெட்டினனே மீகாமன் வேலையெல்லா நிணக்கடலாய்
பட்டாரே வீரரெல்லாம் படுதல்கண்ட வெடியரசன்
அட்டார்க்குப் பிணங்கொடுத்து மஞ்நூறு வெடியுடனே
கெட்டார்போற் றிகைத்துநின்று கெடுமதிநா னினைத்தேனே

நினைந்தநினை வெல்லாம்போய் நீடுபுகழ் வெடிகழும்போய்ச்
சினந்தெதிர்த்துப் பொருபடையுஞ் சேரவங்கே தோற்றுவிட்டேன்
அனஞ்சேரு நடைமாத ரானவர்முன் சபதமிட்டேன்
முனம்போனால் மாதரல்ல மூடர்களு நகைப்பாரே

நகைப்பாரே நம்மவரு நானிலத்து வீரர்களும்
பகைப்பாரே யரசர்களும் படியில்வெடி யரசனென்பேர்
முகம்போமே என்னும்வெகு மோசமுமா நாசமுமாம்
உகப்பாமோர் சத்துருக்க ளோகோவிது ஆகாதென

எனநினைத்து வெடியரசன் இசைந்தகட லுருக்கள்தன்னை
முனமளைத்து வீரரையும் முன்நெறுத்திப் பன்முறையாய்
வினையமுற்றுப் பேரணிகள் வெகுவிதத்தி னருகணைத்து
கனநிரைபோல் மீகாமன் கப்பலின்முன் முடுக்கிவிட்டு

விட்டதிக வெடிகளெல்லாம் மேன்முகில்போ லார்ப்பரிக்க
மட்டுபுகழ் மீகாமன் வாதுசொல்லி வாளுருவி
வெட்டிநல்ல கொடிபறக்க விருதுபெற வீரரெல்லாங்
நட்டமிவர்க் காகுமென்று நகைபுரிந்து நின்றனரே

நின்றுமிரு சேனைகளு நேரும்வெடி பாாப்பளவில்
குன்றுகளி லோரேழுங் குரைகட லேழுங்கூடி
அன்றுபல வடிவுடனே யார்ப்பரித்தும் வோர்த்துமிக
வொன்றுபட வெதிர்த்ததென வுறுபூசல் புரிந்தனரே

வெண்பா

உறுபோர்செய் வீரர்தம்மை யொன்றுபடக் கூட்டி
விறல்கொள்ளுமா நெஞ்சின் மிகக்கருதி — வெறிகுலவுந்
தார்புனையு மீகாமன் றன்படைக்குள் வன்புமிகுஞ்
சீர்புனையு முக்கியர்கோன் சென்றான்

வேறு குற்றிசை நெடில்

சென்றெதிர்த்தவர் நின்றுபொருதிடச்.சிதறியெங்கும் மணிகள்குலைந்திட
வென்றிவீரரடர்ந்து விழுந்திட. வேலும்வாளும் விழுந்தவர்பட்டிடக்
கொன்றுகொன்று குருதிக்கடல்புகக் கூளிகாளிகை கொட்டிநின்றாடிட
ஒன்றையொன்று பேய்தள்ளிவிழுத்திட. வுற்றபூசல் மிகவிழைந்திட்டதே

உற்றபோரென வெட்டிநின்றார்த்திட.ஓர்சரங்களு முற்றெதிர்சென்றிட
பற்றிவீசிப் பரதவருட்கிடப். பற்கடித்துப்பிடித்துக் கதுப்பினில்
எற்றியேகுற்றும் வாளைவிலக்கியே.ஏவிவிட்டவர் தாள்சிரமற்றிட
மற்றும்வாள்கடகங்கள் விலக்கியே.மட்டில்காயங்களுற்றிட வெட்டினார்

வெட்டும்வெட்டினுக் கொட்டியுளக்குவார்.வீரரானவர் வேகத்திலார்ப்புறச்
சொட்டையாலவர் கிட்டிப்பொருதிடச்.சோரிகக்கிடத் தோளுரமற்றிடக்
கிட்டொணதவகை முக்கியரெலாங்.கேடுகெட்டுக் கடலில்விழுந்திடப்
பட்டவீரர்கண் மட்டிலையெங்கணும்.பாறும்பேயுங் கழுகுநிறைந்தவே

பாறுகூடிப்பிணங்கள் வளைந்திடப்.பரவைதூர்ந்து பருந்திடராகிட
கூறொணாத பசாசுகவர்ந்திடக்.குரைகடலுங் குருதிக்கடலெனச்
சேறுசெய்திட வானஞ்சிவப்புற.செருமுனைதனிற் சேனைகளற்றதோ
ஊறுபட்டவருஞ் சிலரோடிட. வுளன்றுசீறி மீகாமன்பொருதனன்

பொருதுநின்றெதிர் வீரர்மடிந்திடப்.புனையுமாமணித் தாவடமற்றிடக்
குருகுலத்தவர் கொம்புகுறித்திடக்.கொட்டியாற்பரித்தே முக்கியர்தம்மைத்
திருகிநின்றமர் செயய்தேவிளைத்தவர்.செம்பொன்மாலையுந் தோள்களுமற்றிட
அரிகளானைத் திரளிற்புகுந்தென.அடர்ந்துசென்று மீகாமனும் வெட்டினான்

வேறு

வெட்டியமர் செய்யவந்த வீரரெல்லாம் பட்டபின்பு
கட்டாண்மை தானுடைய கடலரசன் றான்தனித்து
தட்டளிந்து மனங்கலங்கி தாமரையி னீரதுபோல்
நெட்டெனவே யொழிந்தோட நிசமித்தான் வெடியரசன்

வெடியரசன் றானினைந்து விரைவாகக் கப்பலுள்ளே
கடிதொழித்துப் போம்பொழுது கண்டனனே மீகாமன்
வடிவுசெறி பீரங்கியை வகையுடனே தான்கொழுத்தி
சடுதியினிற் கப்பலைமுன் தாழ்த்துவிட்டான் சலதியுள்ளே

சலதிநீருள் வெடியரசன் றான்முழுகிக் கரைதேடிக்
சிலதுறைக்குச் செல்லுவதைத் தேர்ந்திடு மீகாமனப்போ
வலமொடுதன் புறத்துநின்ற வாகுபடைத் தலைவனைப்பார்த்
துலையிலவன் போகாமற் சுற்றிப்பிடித் திடுவமென்றான்

பிடிப்பதுவு மடிப்பதுவும் பேணிவரு வீரர்களைப்
படித்தலத்தி லமர்க்கொழுத்துப் பாய்ந்துகட லொழிப்பவனைத்
துடித்திடுமா றடியாதீர் தொல்லைமறை முறையுமில்லை
வெடியரசன் றனைப்பிடித்து விலங்கினுடன் போகல்நன்றே

"கடலோட்டில் வெடியரசன் போர்முற்று"

வெண்பா

போக வெடியரசன் பின்போக மீகாமன்
வாகைக் கயிற்றால் வரிந்திழுத்து – வேகமுடன்
கட்டிவைத்தான் பாய்மரத்திற் கடியவெடியரசை
இட்டவிதியோ யிது

விருத்தம்

பரமாயிருந்த பொருளுருவான விதமென்ன பலபேதமான தென்னப்
பதியானதென்னதிற் பசுவானதென்ன நீ பாசவகையான தென்ன
குரவானதென்ன முக்குணமானதென்ன நற்குலமறையதான தென்ன
கோலமாமலர் வடுவினூடுபுகலென்ன நன்குடைய கனியானதென்ன
தரமானகும்பத்தின் மகவான தென்னூபுரத் தழலெழுந்தென்ன
தடமதுரை தீயிட்டதருளினா னீயிட்டசத்தியென் றுற்றறிந்தேன்
வரமானதொன்றருளி யெனைநீபுரக்கில் வசைமருவுமோ நாகர்பதிவாள்
வாலபிரகாசமுறு ஞானமாரூபியே மாதுகண்ணகை யம்மனே

கடலோட்டில் வீரநாரணன் போர்

(இவ்விடம் ஆக்கியோன் நீலகேசரிப் புலம்பலெனவும்
ஒருபகுதியாக்கினர் அதுஅவசியமின்றி யாம் இப் பகுதியினமைத்தனம்)

படைகளெல்லா மழிந்ததுவு பாரக்கப்ப றாழ்ந்ததுவும்
விடையனைய மீகாமன் வெடியரசன் றனைப்பிடித்து
கடியதொரு பாய்மரத்திற் கட்டிவைத்த காரணமும்
நட்முடன் கண்டொருதூதன் நயந்துகடல் சென்றிறங்கி

சென்றிறங்கிப் பதிநோக்கிச் செய்திசொல்ல வேணுமென்று
அன்றுபட்டுக் கடல்தனிலே யலைந்தபிணங் குடல்தொடுத்து
நன்றியுள்ள தெப்பமாக்கி நகரிதனிற் றிசைநோக்கி
சென்றுகரை தனிலிறங்கிச் சிறந்தரசன் மனையணுக

அணுகவங்கே பார்த்திருந்தா ளாலநீல கேசரிதான்
தணிவுபெறாப் புகழேறுஞ் சாரணரிற் றலைத்தரமே
மணிபெறவே யிங்குவந்தோம் மாற்றானு மவன்படையு
துணிவுடனே பெரும்போரிற் றோற்றவரார் வென்றவரார்

தோற்றவரார் சொல்லுமெனத் தூதுவனுஞ் சொல்லலுற்றான்
ஏற்றொருவர் பிழைத்ததில்லை யானொருவன் பிழைத்ததன்றி
மாற்றமற்ற கப்பலெல்லா மாற்றார்கள் கைப்படவே
ஊற்றமுற்ற போர்க்கழிந்து உன்கணவன் கட்டுண்டனன்

உன்கணவன் கட்டுண்டது உண்மையென மனங்கலங்கித்
தன்குழல்மேல் சோர்ந்திடவே தரைதனிலே போய்விழுந்து
பொன்புனையு மேனியெல்லாம் புழுதிபடப் புரண்டுரண்டு
அன்புடையென் கணவாகோ வப்போதுரைக் கொப்பிதுவே

ஒப்பரிய வீரரெல்லாம் உன்னைவெல்வா ரில்லையென்று
தப்பறவே சொல்லுவரே தமியேனுன் திருமுகங்கள்
எப்போது காண்பதினி யெம்பெருமா னெம்பிரமன்
அப்போதும் விதிப்படியோ ஐயையாகோ வென்றழுதாள்

தாள்துவளத் தூழியெழத் தார்வீரர் படைநடந்து
வாழ்வழியா மிவ்வீதி மரமுழைக்க வந்ததுவோ
ஆளுமுன்றன் மங்கிலியம் அறுக்கவந்த நாளிதுவோ
வாழுவனோ நானுமினி வாறேன்கா ணெனவழுதாள்

அழுதாளே யங்கமெல்லாம் ஆறாக நீரோடத்
தொழுதாடி மருவலர்கள் சூழ்ந்துதிறை தரவிருந்தீர்
எழுதாத விசயமுட னெடுத்தபடை வெல்வதுவும்
பழுதாக முடிந்ததுவோ பாவியானோ வென்றழுதாள்

பாவியானே னென்கணவா படியரசர் பெருமாளே
ஆவிபோன வுடல்போல வடியேனு மிங்கிருந்து
பூவுலகி லிடர்புரிய போதன்முன்னா ளெழுதினதோ
காவிவிழி நீர்சொரியக் காரிகையு மழுதனளே

காரியமுன் சொன்னேன்கண்ட கனவுகொடி தென்றுமக்கு
வீரர்களிற் சிங்கமெனும் வெடியரசே பெருமாளே
நேராகப் பொருவதல்லால் நிட்டூரஞ் செய்தாயே
பாரிலென்செய் வேனெனவே பரிதவித்து மழுதனளே

பரிதவித்தே யழுதாலும் பணிமொழிநீ யிதனாலே
வருவதுண்டோ சொல்லுமென்று மாறுரைக்க மற்றவர்கள்
பரதவர்தம் படையைவெட்டிப் பண்புடைய வெடியரசைத்
தருவனிப்போ வவனுடைய தம்பியையிங் கழையுமென்றான்

தம்பியையிங் கழையுமென்றாய் சமத்தர்களிற் றலைத்தரமே
தம்பியையிங் கழைப்பதுநீ தாலிதனைத் தருகினுநீ
நம்பிவீர நாரணரை நன்றழைத்துப் பொருகினுநீ
கம்பிதமா யுங்களண்ணர் கட்டுண்டன ரென்றுசொல்லிச்

சொல்லிய சாமர்த்தியமாய்த் தூண்டியவர் தன்னைவிட்டு
வெல்வதற்கு வகைபார்ப்பாய் வீரனேநீ யென்றழுதாள்
நல்லதென்று சம்மதித்து நயந்துமந்தத் தூதுவனும்
வில்லிசைந்த சரமதென்ன விரைவுடனே வழிநடந்து

மல்லையொத்த திண்புயத்தான் வலியுடனே வரும்வழியில்
எல்லோருங் கொண்டபுகழ் எலுமிச்ச"அ" மலைமேலே
கல்லான நெஞ்சுடையான் கடுகவெகு சனத்துடனே
வில்லாண்மை நாரணனும் வேட்டையாட வெழுந்தனனே

வேட்டையயாட வரும்வழியில் வீரநாரணன் றானும்
ஓட்டமுற வாறவனை உற்றுநின்று பார்த்தெதிரே
வாட்டமுற வந்தாய்நீ வந்தவகை சொல்லுமென்றான்
பாட்டொத்த மொழியெனவே பகர்தலுற்றான் படைத்தலைவன்

வெண்பா

என்னென்று சொல்வேனா னிவ்வுலகி லின்றுமக்கு
மன்னர்க்கு மன்னாக வாழ்ந்திருந்த — வுன்னண்ணர்
வீடர்விறல்சேர் வெடியரசின் வீரமெல்லாங்
கேடான பாடதனைக் கேள்

கேளுமினி மாநாகர் கிளர்ந்த கப்பலாயிரமும்
வாளரவின் மணிவாங்க வரும்வழியைப் போய்மறித்து
மூளுமமர் செய்துவரு முனைவீரர் தங்களையுந்
தூளுறவே படக்கொடுத்துத் தோற்றார்கா ணுங்களண்ணர்

தோற்பதுவும் மல்லாமற் றொடைசேரும் வெடியரசும்
போர்க்குரிய கப்பல்களும் போயவன் கைப்பட்டதுவே
கார்கொடைசேர் மீகாமன் கப்பல்தனி லிப்பொழுது
சேற்புடனே கட்டிவைத்தான் செய்திசொல்லச் சேர்ந்தேனென்றான்

வெண்பா

சேரனோ சோழனோ தென்பாண்டி நாடனோ
வீரனோ வஞ்சா விறலனோ — தீரன்
மதிக்கும் வெடியரசை வாரிதனிற் போர்செய்து
சதிக்கும் வாராரென்றான் றான்

கவி

பார்கேட்டறியும் போர்வலியிற் படைகேட்டறியும் பாவலரிற்
சீர்கேட்டறிவா ரெங்களைப்போற் றெளிய்வறிய வொருவரில்லை
பேர்கேட்டறிவார் சிலவிர் ரறிந்தேயிருந்து பிழைசெய்தால்
ஆர்கேட்டறிவா ரிதுபுதுமை யறிவெனக்குச் செப்பாயே

அறிவதென்ன வையாவுன் னண்ணரை வன்மீகாமன்
திறமுடனே பாய்மரத்திற் சேர்த்தடுத்து வைத்ததுண்மை
முறியமற்றுஞ் சேனைகளை மோதினது தானுமுண்மை
மறியலிவர்க் கானதுண்மை மாநாகர்க்காய் மீகாமன்

மீகாமன் நாகமணி வேண்டவந்த துண்மையுண்மை
வாகுபெற வேகியங்கே வந்ததுண்மை யறிவீரென்று
வேகதூத னீதுரைக்க வீரநாரணன் வெகுண்டு
மேகமென்ன சீறியின்று விழைந்ததெங்கட் குலகிழிவோ

விழைந்தபுகள் வெடியரசை மீகாமன் றான்பிடித்து
வளைந்துமவன் கட்டவவர் மடந்தையரா யிருந்தனரே
உளந்தளரா வண்ணர்தம்மை யுவரியின்மேற் சேர்த்தவனை
களந்தனிலே கொன்றிலனாற் கடலரசன் தம்பியல்லேன்

கடற்புவிக்குட் புகழ்படைத்த கடலரசென் னண்ணரைக்கை
அடற்புரக்கு மீகாமனோ டானபடை யத்தனையும்
படப்பொருது களந்தனிலே பருந்தருந்த விருந்திடனேல்
கொடுத்துவைத்த வடைக்கலத்தைக் கொள்ளைகொள்வோ னாவேனே

கோளரிய நற்சரக்கைக் கொண்டுவிற்கும் வணிகனுக்கு
ஆளெனவே வந்தவனோ அண்ணனைமுன் பிடித்திடுவான்
வாளிலவன் படையைவெட்டி வானேற விட்டிலனாற்
தோளனையு மங்கையரைத் தோற்றவனா வேன்பணியே

பணிகளுடன் பலசரக்குப் பலமுறையாய்க் கொண்டுவிற்கும்
வணிகனுக்கா ளானவனை வந்தபடையோ டெதிர்த்து
அணிகளுட னறுத்தறுத்து ஆழ்கடலில் வீழ்த்திலனேல்
பிளைகள் களையுங்குருவைப் பிழைமிகைசெய் வோனாவேன்

மிகைக்கஞ்சா வெடியரசன் மிக்கதம்பி யாகியநான்
பகைக்கஞ்சாப் படைபொருது பஞ்சினெல்லாங் கண்டிலனேல்
வகைக்கஞ்சாப் படையாண்ட மன்னவரைப் படக்கொடுத்து
நகைக்கஞ்சா மான்மனையில் நாடிவந்தோ னாவேனே

வெண்பா

சீற்றமிக்க வாகுதிறல் வீர நாரணனும்
ஊற்றமிக்க கைவாளுறை களற்றி — நாற்றிசைக்கும்
ஆளைவிட்டான் மீளுவதற் கரைநாளிகை வீரற்
காளைவிட்டான் போர்பொரவே யாம்

அல்லாதவர்கள் போரண்ணாவி தன்படைஞர்
எல்லாரும் பெண்ணா யிருந்தாரோ — வல்லாரைப்
போதச் சொல்லென்று புறப்படத்தான் தன்விருதை
யூதச்சொல் லென்றா னுவந்து

மிகையரசர் மனதீரன் வீரனாநா ரணதேவன்
பகைவிருதருடன் வரவே பதியிலுள்ளோன் வருகவென்றான்
வகைவிருது பலவூத வானிலிடி முழக்கமென்ன
இகல்விருதர் படைமுரச மெடுத்தறையப் பால்பணித்தான்

பாலாழி தனிலணியும் பணியாழி விழவதனை
ஆலாழிதனிற் குளித்தே யன்றெடுத்துக் கொடுத்தவர்கள்
கோலாழி போலெதிருங் குறுகலர்கள் கொலைகாறர்
மேலாழிக் கரைவாணர் வீரநாரணனைக் கண்டார்

கண்டதிறல் வேலரசன் காவலன்வேள் சலராசன்
சண்டசக்ர வீரகண்டன் சாருமலை வீரதீரன்
மிண்டுசேனை கொண்டல்விசை வீரரெல்லாம் பார்நிறையக்
கண்டு விருதூதிவரக் காவலனை வந்துகண்டார்

வேறு குறு நெடில்

தானைத்தலைவரிற் போர்வீரராசனுந். தண்டண்டுமிண்டனும் வேல்வீரராசனுஞ்
சேனைக்குமுன்னோடி வெட்டும்வாள்வீரனுந். தேனாடராசனுஞ் சலதிநாரணனும்
ஆனைக்குமுன்னோடி வாள்வீசுதீரனாம். அருடங்குவீரனுங் காலிங்கராசனும்
வானொத்தபுயவீர நாரணன்முன்னே. வந்துநின்றேசெய்தி சொல்லுமின்றென்றார்

மஞ்சுபெறுவாகுதிறல் வாகைபுனைதோளார்.வஞ்சநெடுவேல்சத்தி வாள்வரிசையுள்ளோர்
வெஞ்சிலைவளைத்திகலும் வீரர்புடைசூழ.விஞ்சுபுகழ்நாரணனை மேவியெதிர்கொண்டார்
அஞ்சனமலைக்கு நிகரானபுரமானோர்.அநந்தரமுழக்கமென வந்திடிகொள்வர்யார்
துஞ்சவினைசெய்தவர்கள் சூழ்படைகள்சூழத்.துங்கவிறல்நாரணனை வந்துமுன்காண்டார்

புன்னைமலரிற்பெரிய பூணினிருதோளார்.அன்னமலருங்கொடிக ளானதுமுயர்த்தோர்
புன்சொல்லணிமுக்கியர்கள் பூசலினியென்ன.முன்சொலணிநாரணனை முன்வந்துகண்டார்
மன்னுலவுமாலையணி மாமதமதத்தார்.நின்னிலெனவேகமொடு நேரிடுதிறத்தார்
வன்னவரியாபரணர் மாமலையினுள்ளார்.தந்நிகரிலாதவர்கள் தான்வந்துகண்டார்

கன்றிநல்லபொற்குடைகள் வித்துவருவாரு.மொன்றுபடவேவிருதை யூதிவருவாரும்
அன்றுவிருதூத வெதிரொக்கவணியிட்டே.வென்றிபுகழ்நாரணனை மேவியெதிர்கண்டார்
மன்றல்கமழ்மாலைகளை யிட்டுவருவாரும்.வென்றசிலதண்டைமணி வீக்குபடைசூழக்
கன்றியிடுமற்றலர் களுத்திலரிகண்டம்.நன்றுகரநாரணனை நாடியெதிர்கண்டார்

வெண்பா

ஈட்டி நெடுஞ்சவள் மேறுவாள் வீராழி
பாட்டில் வில்வாளி பரிசையுடன் - மாட்டணியாய்
எல்லோருஞ் சொல்லவெழில் வீரநாரணனாம்
மல்லார் புயத்தான் மகிழ்ந்து

வந்தவர்கட் கெல்லாம் வகைவகையா மாபரணம்
சந்தனமு நல்வாசச் சாந்தோடு — தந்துவந்த
மாற்றலனை வென்றெமது மாமரபைத் தந்துவசை
தீர்த்தாளு மென்றான் சிறந்து

நெற்பயிரும் வேலியும் போனின்னொடு காவலனே
இப்பெரு வாழ்வாக விருந்தோநாஞ் - சொற்பாத
வாகைபுனை காவலனே வந்தபடையுடனே
ஏகுவோ மென்றா ரிசைந்து

வாகைபுனை நாரணனும் மணிநாடர் சொன்னமொழிக்கே
ஆகமிகப் புழகமாகியே — தாகமுடன்
என்மொழியைக் கேட்டுமெனக்குதவி செய்வோர்க்கு
நன்மை செய்வோமென்றா னயந்து

நயம்பெறவே வீரற்கெல்லா நற்கலைக ளணிவகைகள்
பயன்பெறவே யீந்தவர்க்கும் படசமுடனடை யிலைகாய்
வயம்பெறுபோர்க் குறுமணிகள் வாகுபெற வரிசையுடன்
வியந்தவர்கள் மனம்மகிழ வேண்டியது மிட்டனனே

இட்டமான வீரர்களே யென்மனதுக் கேற்றபடி
மட்டவிழ்தார் மாநாகன் மரக்கலத்திற் சேனையெல்லாம்
வெட்டியென்றன் றமையனையும் மீட்டுஅந்த மீகாமனைக்
கட்டியென் கண்ணெதிராகக் காட்டிடுவீ ரவன்கலங்கக்

கலங்காழி தனிலோடுங் கப்பலின்மேற் கொடிபறக்க
அலங்காமல் வழிமறித்து மசையாமற் போய்த்துணிந்து
பெலங்காணு மாற்றலரைப் பிடியாது விடுவீரென்றால்
நலங்காணும் புவியோரும் நகைப்பருண்மை மாற்றாரும்

மாற்றான்றன் படைகள்கண்டு மத்திலிடு தயிரதுபோல்
ஆற்றார்க ளுடைவதுண்டு அதுபோல வெண்ணுகிலீர்
கூற்றாக முன்னெதிர்த்துக் கொடியபூசல் மிகவிளைத்து
காற்றா மீகாமனைநாங் கட்டிவைப்போந் தப்பில்லைக்காண்

வேறு

தப்பாதசொற்கொண்டு தாவுமாலுமியுந்.தண்டையல்கலாசுவகை கொண்டவர்கள்யாரும்
உப்பாளிதன்னிற் குதிக்கும்படிகப்ப.லூடுசோடித்து வெடியுடமைவகையேற்றக்
கைப்பாவிலாதெவரு மொப்பித்துக்கூடி. காரியம்பலவான வீரியம்பேசி
மெய்பாகுபுகனிறுவு வீரநரணனை. விடைபெற்றுமடைவார்கள் கப்பல்வேலையிலே

வேலைப்போரின் மிகவலிய வீரவான்கள் தானோடி
காலவேக கப்பல்களைக் கடலிறக்கி யசையாமல்
வாலரவொத்திடு கயிற்றால் மரக்கலங்கள் நெருக்கமுறக்
காலமுகி லென்னநின்ற கப்பலெல்லாந் திருத்துவரே

கப்பலெல்லாந் தான்திருத்திக் கால்வாங்கு மேற்பரப்பிச்
செப்பமாகத் தாமமிட்டுச் சீராக நிரைக்கடுத்துக்
கப்பிகளை .விதானமிட்டுக் காரியத்தி னோ்பொருத்தி
வைப்பாகப் பாரடுக்கி வகைவகையே மத்தமிட்டு

மத்துவடத்தே யொதுக்கி வளையமிட்டுக் குழைவுகட்டி
ஒத்தான கம்பமதி லுறப்பிடித்துச் சீனிவைத்து
கத்தாரும் வாரியின்மேற் கப்பல்செல்ல வகைபார்த்து
நத்தாரை யகலவைத்து நாடிநன்றாய்க் குறிப்பாக

நன்றாக வுயரமதி னற்பலகை தான்பரப்பி
ஒன்றாக விருபுறமு முறுதிபெறத் தோம்புமிட்டு
துன்றாத வசனவடஞ் சூழ்மரங்க டனிற்றூக்கி
குன்றாத பாய்மரக்கால் கும்பானி லோடுவித்து

ஓடமிகத் தாபரமா யுருக்களெல்லா மணலேற்றி
சாடிபல சாற்கரகந் தண்ணீரிட நிரையேற்றி
ஆடசையு பாய்மரத்தி லானகுறை தான்திருத்தி
நாடியதின் மேற்பிடிக்க நாட்டுகம்பி வளையமிட்டு

நாட்டமுற வனைவோரு நாலுபண்ணுங் கைக்கொடுத்து
ஈட்டமுற்ற சங்கிலிக ளேலமென்று கைப்பிடித்து
காட்டுநல்ல நங்கூரக் கட்டுவைத்துச் செப்பமிட்டு
ஓட்டியங்கே யலுக்காவி லுத்தாரையி னூற்றமுற்று

ஊற்றமுள்ள பருமல்தன்னை யோடுமரப் பாய்நிறுவி
ஏற்றமுள்ள வாஞ்சானை யெடுத்ததனிற் கைக்கொடுத்து
காற்றெனவே நாலாஞ்சாண் கப்பிதனிற் கைக்கொடுத்து
வார்ப்புறமே லாஞ்சானை வாரிதனி லுறத்தாங்கி

தாங்கியதோர் பாய்மரத்திற் றண்டுமிண்டு கொடிநிறுத்தி
ஆங்குறவே யலங்கரித்து யாருமிகு நேரமுடன்
பாங்கினிசையப் பலரும் பாரிறுகத் தாரிறுக்கி
கோங்குமுகை முளையணிகள் கோட்டிநீட்டிக் கட்டினரே

வேறு நெடில்

கட்டுமரந்தூரி கச்சாங்குபாறை.காற்றுப்போலோடுநதி மிற்சோங்குதோணி
விட்டாறுதன்னிற் குதித்துப்பலருங்.விரும்புங்கரும்பு மிளனீருந்தேனு
மட்டானவெற்றிலை பாக்குவகையரிசி.வகையாகத்தொகையாக மாற்றாகவேற்றி
சுட்டாறும்வர்க்கப் பணிகாரம்பால்பழஞ்.சோறுங்கறியு மிகவேற்றினாரே

ஏற்றுஞ்சருக்கரை கற்கண்டுசீனி.எள்ளவல்பருப்பு நற்பொரிகடலையாவும்
போற்றும்பனிக்கச்சுப் பூந்துகிற்றோப்பா.பொன்னெழுத்தாடையும் பட்டுக்குல்லாவும்
தோற்றமுண்டான சகலாத்துசல்லடஞ்.சூதானமாகவே சோடித்தெழுந்தபின்
மற்றலரொடுபொர விவையெல்லாம்யாரும்.மதிக்கவேகப்பல் வெவ்வேறேற்றினாரே

வேறு

வேறொருவ ரொவ்வாத வீரநாரணன் றனக்கு
கூறான பணிப்புடவை கொற்றக்கொடி சாமரமுஞ்
சேறாடிச் சாந்தாற்றிச் சேரொழுங்கின் முதன்மையுற
மாறான பேர்மதிக்க வரிசைநிரைத் தலைமையதாய்

தலைபொருந்துங் குப்பாயச் சட்டைகட்டுஞ் சால்வைகளுங்
குலத்தொகையோ ராராய்ந்து கொடுவாருமெனக் கொணர
இலக்கமிலா வகைவகையே யேற்றியெடுத் தேற்றமுடன்
சொலற்கரிய மணிமகுடந் தோராத வீரர்களே

தோராத வீரருநந் தொண்ணுற்றெட் டாயுதமும்
கூர்வாளு மம்புகளுங் குந்தமுடன் பந்தமொடு
கார்போன்ற வில்லுகளுங் கத்திவகை யாயுதமும்
பார்போலு மரக்கலத்திற் பரிவுடனே யேற்றினரே

ஏற்றினர் மொட்டம்புகளு மிண்ணயறு கட்டாரிகளு
மாற்றலர் நெஞ்சூடுருவும் வச்சிரமு மெச்சிரமும்
மாற்றிவிடு சக்கரமும் வயிரத்தண்டு வளையமுடன்
சாற்றரிய தேற்றமுடன் தாவும்வன்னி வேகமதாய்

வன்னிசெறி யெறியீட்டி வாகுல வேலாயுதமும்
மின்னுலவு கூருலவு மேன்மைபெறு மாயுதங்கள்
சொன்னாலு முடியாது தோராத வீரரெலாந்
துன்னாரை வெல்லுதற்குச் சொன்னதெல்லா மேற்றினரே

வேறு குற்றிசை நெடில்
எல்லம்படுத்திந்திர சாலஞ்செய்வில்லும்.இணையற்றசெகசால மிகுகோலவில்லுங்
கல்லென்னவில்லோர்க் கதங்கண்டவில்லுங்.கருதும்விருப்புறோர் மதனஞ்செய்வில்லுங்
சொல்லற்கருபுயலெனத் தோணுவில்லும்.தோளுறவளைந்திலகு வாளஞ்செய்வில்லும்
மல்லொத்துமருவலரை வெல்லக்கடுத்திடும்.வாகைவில்லும் வில்லுமேலேற்றினாரே

ஏற்றிக்கொடிகள் பலவகைநாற்றி.யிரண்டாம்படையு மிதுவென்றியம்ப
காற்றிற்கடிதான வீரநாரணனும்.கடிதாகவருசெய்கை கண்டோர்கள்புகழப்
போற்றுந்தலத்தோரு முன்னின்றவீரரும்.புடைவந்துகைதொழப் பூங்குடைபரம்ப
வேற்றொப்பிலாத மலைநகர்க்காவலன்.வீரநாரணனை முன்பின்வட்டமிட்டே

வட்டப்புவியோர் மத்திடுங்கண்டன்.வாகைபெற்றிடு மாலைமேவுபுயராசன்
வெட்டிடுமுனைவாளின் முனைசாய்த்தவீரன்.மிகுவுக்கிரத்தண்ணல் வீரத்தகவன்
முட்டமுனையிற் பரப்பியவாளும்.முன்கண்டபேர்களை பின்கண்டவாளும்
கட்டாரிபலவாள் பரிசைமுதலிய.கடியாயுதவகை கையெடுத்தனரே

வேறுஅளவு நெடிற்துரிதம்
கடியவிடஞ்சேர் மிடியம்புங்.கண்டோர்கொல்லுங் கல்லம்பும்
கொடிகோரங்கள் பலபறவை.கொல்லவல்ல கூரம்பும்
இடிபோலேவுங் கொடியம்பு.மேற்றோர்கூற்றா மூற்றம்பும்
படிநீடெங்கும் பளிரென்னப்.பலருங்கொண்டங் கோடினரே

கொட்டுத்தவிலுங் குறுந்தவிலுங்.குலவுந்தக்கை மத்தளமும்
சுட்டும்முரசுங் குடமுளவு.துடிகையுடுக்கை மல்லாரி
வெட்டும்விருதுக் குழலுடனே.வீணைகொம்பு தாரைகளும்
மட்டேபாடுந் நாகசுரம். மன்னர்க்கங்கங் காற்றினரே

அங்கங்கங்கங் கிடியெனவே யாரவாரம் பாரதிர
பொங்குங்கடலிற் றிரையெனவே போனோர் போருக்கானோரும்
வங்கம்பொங்க வாவாவா வாரிதூர வாவென்றே
சங்கங்கெங்கு முழங்கிடவே தக்கோர்மிக்கோர் தாவினரே

தாவுஞ்சங்க சாரணர்கள் தாரையோடு தடாரியிட
வாவுஞ்சேனைக் கதிபதிகள் மன்னர்க்கருகாய் வருவாராய்
யேவுங்கொடியோ டெங்கெங்கு யிறையோர்முறையா யறைவிருது
மேவுஞ்சால வியூகமுடன் வில்லணிசொல்லணி மேவினரே

வேறு

வில்லணியும் வாளணியும் வேலணியுங் காலணியுங்
மல்லணியும் சோங்கணியும் வகைவகையே நிரைகூட்டிக்
காவலான நெஞ்சுடையான் கடலரசர் பெருமாளும்
எல்லான படைவீரர் யாவரும் வந்தேறுமென்றே

சொல்லான வசனமுடன் சுற்றியதோர் படைவீரர்
எல்லோரையும் வகுத்து மிட்டபடை தொட்டெடுத்தும்
வல்லோரைச் சதுரணியாய் வாகுபெறவே நிறுவிக்
கல்லொலிக் கடல்நிறையுங் கப்பலில் வந்தேறினரே

வந்தவர்க ளிருமருங்கு வல்லவல்ல வரிசைசெய
அந்திவரு முழுமதிபோ லாரநிரைக் குடைதுலங்க
சந்தணியு புயத்தணியான் சமரவீர நாரணனும்
விந்தையுடன் வந்தபல வீரருட னேறினனே

ஏறினான் கப்பலின்மே லியல்வீர நாரணனுந்
தேறினா னடலிபோற் றிரைக்கடல்மேற் பாய்வாங்க
மாறினால் மருவலரை வானேற விடுவனென்றே
நாறுமலர் நலந்திகளு நாகதீவு குறுகவந்தார்

வந்தவர்க ளஞ்சுதலை மாநாக தீவுதனில்
ஏந்விதத்தினு மருவா ரிங்கோடி வருவார்கள (மருவார்-சத்துருக்கள்)
அந்தவிடந் தங்கிநின்று ஆமளவும் யாமெவரும்
புந்தியுடன் போயெதிர்த்துப் பொருவோமோ விரைவெனவே

விரைவில் வீரநாரணனும் வெகுளிகொண்டு மிகவுரைப்பான்
அரவிருக்கு மூர்புகுந்து அரியமீகாமனைப் பிடித்தும்
வரவிருந்த சேனைகளை மாட்டியொரு நொடிப்பொழுதிற்
அரியவெற்றி கொடுவருவோ மரவிந்நகர்க் கணுகுமென்றான்

அரவுகளில் ராகுகேதூஉ அன்றுசெய்த தீவினையால்
விரவியொடுஞ் சோமனொடு மின்றளவும் வழிப்பகையாம்
வரும்மிகவுங் கெடுதலுண்டு வாளரவின் துரையதனாற்
புரவலனே நாகதீவிற் போவதியல் பல்லவென்றார்

அல்லவென்று காரணர்கள் அறைந்தன நன்றெனநினைந்து
வெல்லும்வீர நரணனும் விருதரசர் படையுடனே
பல்லியங்கண் மிகவதிரப் பாரதிர விண்ணதிர
கல்லொலிசேர் கடலினிடை கல்லுவைத்தான் கப்பலுக்கே

கல்லுவைத்தங் கிவனிருக்க கடலில்வெடி யரசருடன்
வல்லமர்செய் தவன்படையை வானேற்றி மீகாமன்
நல்லமணி வாங்குதற்கு நாகர்பதி தேடிடவே
வெல்லுமுனைக் கப்பலெல்லாம் விரைவினுடன் கடலோட்டவே

விரைவினுடன் நாகமலை வேலையிலே தோன்றிடவுஞ்
சிரமதனி லிருகரங்கள் சேர்த்துவைத்து மீகாமன்
பரிவுடனே மனம்மகிழ்ந்து பாரேழுந் தான்சுமந்த
அரவரசே போற்றியென வருளுடனே தொழுதனனே

அருளுடனே தொழுதுநிற்கு மவ்வளவிற் கப்பபலெல்லாந்
திரளாக நாகதீவு சேர்ந்தடுக்கக் கல்லுவைத்துக்
கருணையுடன் மாநாகர் கட்டவிட்ட பாற்குடத்தை
விரைவினுடன் தானிறக்கி மீகாம னிறங்கினனே

மீகாமன் றானிறங்கி வீரர்யாரும் புடைசூழப்
பாகனைய சொற்படைத்த பத்தினியார் மணமுடிக்க
வேகரவின் மணிவாங்கி விரைவுடனே மீளவென்று
நாகாதி பதியிருந்த நற்பதிக்கு நடந்தனனே

நடந்து வருமளவுதனி னாகவனம் பூகவனம்
அடந்துவளர் தாதகியு மலரியிரு வாட்சிபிச்சி
படர்ந்துவளர் மந்தாரம் பாதிரியு மாமழுங்கி
கடம்பினுடன் புன்னைபன்னீர் காந்தன்மலர் சோலைகண்டு

சோலைக்குள் மதுவையுண்டு தும்பியிசை பாடிடவும்
ஆலித்து மயிலாட வன்னம் பார்த்திருப்பதுவும்
கோலத்துக் கிளியிரங்கக் குயில்கூவி மகிழ்வதுவுங்
சீலத்திற் பலசிறப்பின் றிறங்கண்டு மகிழ்ந்தனனே

திறம்பொருந்து மீகாமன் செலும்வழியின் முன்னாக
அறங்குலவு குன்றுகளு மானகுளம் வாவிகளும்
புறங்குழுவோர் முனிவர்சித்தர் புலவருடன் பலகணமும்
இறங்கியதோர் கோபுரமு மெழில்பலவுங் கண்டனனே

பலவர்ண மண்டபமும் பைம்பொன்னின் றிருமதிலும்
நீலவான துலவிநிற்கு நித்திலப் பொற்றூபிகளும்
சிலதேவ ருறையிடமுஞ் சேர்த்திருசூண் மண்டபமும்
நலமாமிவ் விடங்கள்கண்டும் நடந்தனனே மீகாமன்

நடந்துவரும் வழிதனிலே நல்வீரர் தனைநிறுத்தி
தடந்தனிலே நீர்படிந்து தலைவிரியு மயிர்முடித்து
படந்திகழுங் கண்ணகையார் பாதமது மனதிலெண்ணி
உடனரவைத் தொழுதுதித் தொன்றான படிகடந்தான்

ஒன்றான படிகடந்து யுட்புகுந்து வாளரவை
நன்றாக நினைந்துகொண்டு நாகமணிதனை வாங்கிக்
குன்றாத புகழுடைய கோதைமண முடிப்பதற்கு
என்றாகு மீகாமன் இரண்டுபடி கடந்தனனே

இரண்டுபடி தனைக்கடந்து மியல்புபெறு மீகாமன்
திரண்டேறுந் தனம்படைத்த திருவின்மண முடிப்பதற்குப்
புரண்டுநிமி ரரவசையப் போற்றிமணி வாங்கவென்று
முரண்டேறிப் பொருவீரன் மூன்றான படிகடந்தான்

மூன்றான படிகடந்து முத்தமிழ்சேர் மீகாமன்
தேன்றோயு மொழிபடைத்த திருவின்மண முடிப்பதற்கு
கான்றுவிடு கிரணமுள்ள கட்செவியன் மணிவாங்க
இன்நாலு படியகல வேகியஞ்சாம் படிகடந்தான்

அஞ்சான படிகடந்து மாசாரத்துடன் புகுந்துந்
துஞ்சாத விருடிகளுஞ் சொற்பெரிய தேவர்களும்
எஞ்சாத வயிரவரும் எண்டிசையிற் பாலர்களு
நஞ்சாரு படமருவு நாகர்பதம் படிந்திடவே(பதம்-பதவி)

படியில்பல வியல்புடைய பத்தான படிதனக்குள்
சுடிகையஞ்சு கதிர்களென்னச் சுடரொளி விட்டளகெறிப்ப
நெடியவுட றனைமடக்கி நீண்டதொரு மண்டலமாய்
அடலரிப் பொற்பீடிகைமே லரவுகொலு விருந்ததுவே

இருந்ததப்போ மீகாம னியல்புடைய புடவைதனை
திருந்தவங்கே தான்விரித்துச் செங்களுநீர் பிச்சிபுன்னை
பொருந்துநதி மந்தாரம் பூகமலர் நாகமலர்
குருந்துகொங்கு மாதுளையுங் கூவிளையின் மலர்விரித்தும்

கூவிளையோ சாந்துபன்னீர் குருக்கத்தி மந்தாரம்
ஏவுமலர் பாதிரியு மிருகாந்தண் மல்லிகையும்
தாவுமரு நாகமலர் சந்தனப்பூ குங்குமப்பூ
தேவதச்செவ்வந்தி முல்லை சிறக்கவங்கே தான்விரித்து

சிறந்தவாழைக் கனியுடனே தேமாவின் கனிகளியு
திறந்திகளும் வருக்கையுட னிகரில்லாக் கனிபலவுந்
திறப்படு கற்கண்டுடனே சீனிதேன் சர்க்கரையும்
அறந்திகளு மீகாமன் அவலுமிளநீரும் வைத்து

வைத்துப்பசுஞ் சாந்துடனே மணமினிய பச்சைவெட்டு
கத்தூரி கர்ப்பூரங் கல்நிறைந்த பன்னீரும்
உத்தமமாம் புனுகுகெம்பி யொளிவினிலி குங்குமமும்
மெத்தமண முள்ளதெல்லாம் விரைவின்மிக வைத்தவனும்

மிகவெளுத்த வெற்றிலையு மிக்கேலம் பாக்குடனே
அகமகிழ்வ னேகமுய்த்து மாலாத்தி கொடுத்தவனும்
கானமுறு புலன்களெல்லாங் கருத்திருத்தி யோடடக்கிச்
செகமனைத்துஞ் சுமந்தரவைச் சிந்தைவைத்துத் தவம்புரிந்தான்

தவந்தனிலே நின்றவனைத் தான்பார்த்து மாநாகம்
அவமதிப்பில் வந்தவனோ ஆராய வேண்டுமென்று
நவமிதுநாங் கண்டதில்லை நாமிவன்றன் நிலையெனவே
புவிசுமந்த ராசாவும் புற்றரவை விட்டதுவே

விட்டரவிற் செம்பாம்பு மிக்ககரும் பாம்புடனே
குட்டிகளுங் குறட்பாம்பு கோரதந்த நெடும்பாம்பு
இட்டபடி யரசுமங்கே யாதுங்குறையாது நிறைந்
துட்டர்களைத் துரந்ததெனத் தோற்றவனைச் சுற்றியதே

சுற்றுபொழுதினி லவனுஞ் சோதியிடத்திற் பழுத்த
முற்றுமுகின் முலையாளே முருகனை முன்னீன்றவளே
கற்றுணர்ந்தோர் மனதிருந்த கற்புமலைக் குன்றாளே
பொற்கொடியே கண்ணகையே போற்றியெனத் தொழுதனனே

தொழுதளவி லிரவலர்கள் துறக்கசெல்வம் பெற்றதுபோல்
பழுதகலும் பத்தினியார் பாண்டியன்றன் மாமகளார்
முழுதருளின் மீகாமன் முனமெழுந்தோர் மந்திரத்தை
வழுவில்லாமற் சொல்லியிந்த மந்திரத்தை யுச்சரித்தால்

சரித்தரவின் கிளையகலுஞ் சற்பரசு மனமகிழும்
விரித்தகதிர் மணியளிக்கும் வேண்டிடென்றங் கேகினளே
புரிந்தமன வணக்கமுற்று போற்றியந்த மந்திரத்தை
விரைந்து பொழுதுச்சரித்து வேண்டிநின்று துதித்தனனே

அகவல்

மண்ணொடுபுனலும் வாய்வொடுதேயுவு.மெண்ணனலந்தர மிவைமுதலான
புவனியீரேழும் பொருந்தியவுலகி.லவனியின்மிகுதியா மருங்கடற்றோகையுங்
மலையொடுவகையா மருவுபாதலமுங்.குலவியவொருதலை கொண்டுநீசுமந்தாய்
அட்டமாநாகத் தரசெனவிருந்தே.எட்டெனுந்திக்கையு மியல்புடனளித்தாய்

அரவினுக்கரசா யடியரைப்புரக்க.வொருபுரத்தருளுட னுருவினையெடுத்தாய்
ஆயிரஞ்சிரசையு மஞ்செனவடக்கியு.மோர்சிரமுறவு முலவியுந்திரிகுவாய்
சோதியாமதிமுடிச் சுந்தரன்றனக்கே.நீதிசேர்பதத்தை நிருத்தமாயிசைத்து
பதஞ்சலியென்றொரு பட்டமும்பெற்று.இதம்பெறுமுலகோர் யாவருந்தழைக்க

அருளதுபெருக்குமென் னையனேயடியென்.ஒருபெருவளியு முணர்கிலேனையா
சிற்றறிவுடையேன் றெரிகிலாதுறுபிழை. முற்றையுமெண்ணா முனிவுகொள்ளாது
நாயடியேன்றனை நல்லருள்பெறுமா.றாய்வுனதிருவுளத் தருளுனக்கடவெ
சோழநாடதனிற் சூழ்ந்திடும்வணிகர்.வாழ்வின்மாநாகர் மகளெனவெழுந்த

பொற்கொடிக்கண்ணகை புண்ணியவதிக்கோர்.நற்சிலம்பொன்று நலமுறச்சமைக்க
உன்னிடமேகி யுறுமணிவாங்க.வென்னைவிட்டதனா லிங்குநானேகினேன்
சிறியவர்பொருட்டாற் றிருவுளமிரங்கி.குறுகியதுன்னருட் கோலமேயையா
ஐயனேயுனது சரணமேசரணம்.உய்யயாமருளி யுகந்தருள்மணியே

வேறு

முற்றவளர் பாம்பதெல்லா முழுதுமவனுடம்பு சுற்ற
மற்றவனுஞ் சலியாமல் மகதேவர் போலநின்று
வெற்றிபுனை யவுணர்களு மிகவுமங்கே தான்வளைந்து
கொற்றவில்லிக் காளான கோவரவே போற்றியென்றான்

கோளரவு தான்தொடரக் கூசாம லவனும்நின்று
வாளரவு தனைச்சூழ்ந்த வாவியிலே மாயவன்முன்
நீளுமணி பாயலாகி நித்திரை செய்யக்கிடந்த
களமரு மரவரசைக் கருத்திருத்தி நின்றனனே

நின்றவப்போ தன்னுடலை நிறைவுபெறு வகையூர
மன்றலுற்ற தொடைபுனையு வருணேசர் பெருமாளுங்
கொன்றைதும்பை யணியெருக்குக் கூவிளையு மேலணிந்து
மன்றுளாடி வார்சடையில் வாளரசே போற்றியென்று

போற்றியதோர் தேவர்களும் பூவயனு மாயவனு
மாற்றரிய மதிசிலையாய் மந்தரமே மத்தாக
ஏற்றரிய வமுதெளவே யினியபயக் கடல்கடைய
சாற்றரிய தாம்பான சற்பரசே போற்றியென்றான்

சர்பமிவன் றன்னுடலைத் தான்தெரியா வகையூர
அற்பமேனுஞ் சலியாம லடியில் வீரநிற்பளவில்
நற்றலையின் மேலான நாகர்முன்போ யுரைப்பளவிற்
சொற்பெரிய நாகதுரை சொகிசுடனே மனம்மகிழ்ந்து

மனமுற மீகாமனிடம் மலைமகட்கு மணிகொடுக்க
மனமகிழ்ந்து கொலுநீக்கி வாளரவி னேகதுரை
தனமருவும் பலகிரணச் சாய்கைதனைத் தானொளித்து
மனமருவு மீகாமன் வரமறிய வந்தனரே

வரம்பெறுநல் மறையவர்போல் வடிவுமிக வுள்வளைந்து
நரம்பெழுந்து தண்டூன்றி நடுக்கமுற்றுக் குடையுடனே
கரந்தானிலே தருப்பையுடன் கமண்டலமும் வடந்தரித்து
உரம்பெற மீகாமனைப்போ யுன்பேரே துரையுமென்றார்

உரையுமென்ற வுடனவனு உகளமலர்ப் பதம்பணிந்து
வரிசையுட னவனுடலில் வந்துசுற்று மரவுகள்பின்
அரவரசு திருவருளா லகலுமிடம் போனதின்பின்
திருவிருக்கு மறையோனே செய்திசொல்லக் கேளுமின்றே

சொல்லரிய புகழ்சேரும் தொல்புகாரில் வணிகேசன்
மல்லமருந் திண்புயத்தான் மாநாக ரேவலினால்
நல்லமணி வாங்கவென்று நாகர்பக்கல் நானும்வந்தேன்
வெல்லுமறை வல்லவனே மீகாம னென்பெயரே

என்பேரு மீகாமன் யான்வருண குலத்திலுள்ளோன்
தென்பாலின் மாநாகர் திருமகளை மணமுடிக்க
அன்பாய்நன் மணிவாங்க வடியேனிங் கடைந்ததுவே
மின்தாவு புரிநூண்மார் விளங்குமறை யோனேயென்றான்

மறையோனுந் தானிரங்கி மற்றுமவன் வரவுதன்னை
அறியாத வாறெனவே யவனுக்கங் கேதுரைப்பான்
இறைபோந்து தாழ்ந்தரவி னிறைக்குரைத்து நான்வாறேன்
நெறியாக நீயுமிங்கு நில்லுமென வென்றுரைப்பான்

என்றுரைத்து நயந்தருளு மியல்பான வேதியரை
நன்றாகவே தொழுதான் னயினாரே போற்றியென்றான்
குன்றாத வேதியனுங் கோயிறனிற் றிசைநோக்கி
சென்றவர்போ லிவனறையுஞ் செய்திகேட்டு மீண்டனரே

மீண்டுமந்த நாகதுரை விளங்குசிங்க வாசனத்திற்
காண்டகைய கொலுவிடனோர் கந்தருவன் றனைநோக்கி
மீண்டுவந்த தவத்தினின்ற வியல்பான மன்னவனை
ஆண்டுகொள்வோம் அவனையிங்கே யருளியபோ தழையுமென்ன

அருளிப்பாடு மீகாமர் வையர்சொல்லென் றவனுரைக்க
திரளாக வந்ததொரு திருவுறைபாற் குடமெடுத்து
இருளகன்ற கோயில்சென்றே யெட்டாம்படிக் கிடையாய
மருளகன்ற மனமேகமாய் மலரடியைப் போற்றிசெய்தான்

மலரடியைப் போற்றிநிற்க மாநாக மங்கிருந்த
நலமுடைய தேவர்சித்தர் நற்கணத்தர் முனிவருடன்
பலதிசையின் வசுக்களையும் பார்த்ததுடன் மீகாமனுக்கு
இலங்குநவ மணிகளெல்லா மியன்றபடி கொடுங்களென்ன

இயன்றபடி யவர்களப்போ வெளின்மணியின் மாமணியும்
வென்றிசேர் வச்சிரம்பவளம் விறற்புருட ராகமதும்
ஒன்றினொன்றாய் மரகதமு மோதுபத்ம ராகமுத்து
அன்று வயிடூரியங்கோ மேதகத்தோ டளித்துவிட்டார்

விடப்பெரிய நாகதுரை விரும்பியொன்ப துருவெடுத்து
சடக்கரிய செந்நாகத் தன்மையதாய்ப் பன்மையுடன்
வடக்காகத் தான்கிடந்து மாநாகர் மனம்மகிழ
கடற்புவிக்குட் கிடையாத கதிர்மணியை யீன்றதுவே

ஈன்றதொரு மாநாக மியலுருவ மாறிமுன்பு
தோன்றியதோர் மறையோன்போற் றுய்யவுரு வாகியங்கே
கான்றவந்த மணியதனைக் கையதனிற் கொண்டுவந்து
ஏன்றுபுகண் மீகாமா விந்தாநீ யேற்பதென்றார்

என்றபொழு தவன்வணங்கி யிதயமலர் குவிந்துருகி
மன்றமரு மலர்தூவி வாளரசே போற்றியென்ன
நின்றவெட்டு வுருவீன்ற நிறைமணிக ளுடன்கதிர்போற்
குன்றாதவொளி விடுக்குங் குலமணியுங் கொடுத்தனரே

கொடுத்தமணி தனைச்சிறந்து கும்பிட்டுத் தான்வாங்கி
எடுத்தினிய சிவந்தபட்டி லினிதாகத் தான்முடித்து
படிக்குண்மிகு மனமகிழ்வாய்ப் பத்தியுடன் தொழுதுநிற்க
முடிக்குமிட லுடையவரும் முற்றுபல வரங்கொடுத்தும்

வரம்பெற்ற வவன்றனக்கு மறையோனா மாநாகம்
உரம்பெற்ற கதிராளி யொன்றருளி விடைகொடுக்கத்
திரம்பெற்ற மணிசுமந்துந் திருவடியிற் றெண்டனிட்டுங்
கரம்பெற்ற வீரருடன் கப்பலில் வந்தேறினனே

வெண்பா

வந்து அரவதனை வாழ்த்தி மணிவாங்கி
நந்தூர் புனற்புகார் நண்ணவே — கொந்தாருங்
கண்டிறல்சேர் வீரருடன் கப்பலில் வந்தேறினான்
திண்டிறல்சேர் மீகாமன் சேர்ந்து

சேருவதோர் மீகாமன் றிண்டிறலைக் கொன்றிடுமென்
றார்புகழு நாரணனு மவன்படையு மாழ்கடலில்
தூரநின்று சமுக்காவின் சூத்திரத்தின் வழியறிந்து
வீரரெல்லா மணிவகுத்து மீகாமன் வரவறிந்தார்

மீகாமன் மணிவாங்கி விரைவில்வந்து ஏறியபின்
பாகான பாய்வலித்து பலவெடிகள் தான்முழங்க
மாகாளி கண்ணகையார் மலர்ப்பதத்தை மனதிருத்தி
மீகாமனுத்தரவிற் கப்பல் வேலைசிறந் தோடியதே

ஓடிவிரு தூதவெடி யொத்திடு பீரங்கியிட
ஆடிடுவோர் பாடிடுவோ ரங்கேவீர தங்கசுரம்
பாடிடுவோர் வீணையுடன் பற்பலவாத்திய முழங்க
காடர்வெடிக் கப்பலெல்லாங் காததூரங் கடந்ததுவே

காதமொன்று தான்கடந்து கப்பலோடி வரும்வழியில்
மோதுகடல் தனிமேலே முகில்போலத் தோன்றிடவே
ஏதும்முன்னே தோன்றுவதோ வென்றானே மீகாமன்
ஓதுபுகழ் மாலுமியு முருக்கள்மிகத் தோன்றுதென்றான்

உருக்கள்வந்து தோன்றுதென்ன வொன்னலர்க ளாகுமது
திருத்தமுற்ற கடல்மேலே திரளாகத் தோன்றுவதே
கருத்துடைய வீரரெல்லாங் கலக்கமறத் துலங்குமிகப்
பெருத்ததிறற் கப்பலெல்லாம் பிடித்ததின்மே லணியாவீர்

அதனணியாய்ப் பிடித்தகப்ப லார்வமுறப் போர்நிறைய
விதம்விதமாய் வெடிகளுடன் விட்டுவர வட்டமிட்டு
அதிகோபந் தானாகி யடல்புனையு மீகாமன்
சதிவழியாய் வருபவனுன் றம்பியோசொல் வெடியரசே

வெடியரசே சொல்லெனவே மீகாம னுரைப்பளவில்
வெடியரசங் குடனுரைப்பான் வேகமுடனோடு கப்பல்
இடியெனவே விடவென்தம்பி எலுமிச்ச மலைமேலே
கடியவேட்டைக் காகப்போனான் கப்பலேதோ நானறியேன்

நானறியே னென்றபோது நன்றியுள்ள மீகாமன்
தானுமங்கே மனமகிழ்ந்து சாற்றுவனே தேற்றமுடன்
கானுலவு தொடைபுனையுங் கடலரசே யுனதுதம்பி
ஆனவனே யாமாகி லாண்மைக்கவன் வீணல்லவே

வீண்மைக்குநான் சொன்னதல்ல வெடியரசே மெய்யிதுகாண்
ஏண்மைக்கெவ ருலகிலுண்டு யாவருரை யாலுமில்லை
ஆண்மைக்கு நல்வீமனவன் ஆழிவழிதான் மறித்தான்
பூணித்தவன் றன்னையிப்போ போகவுஞ்சொல் லுறவாயே

உறவுசெய்து போகச்சொல்லு உன்னையங்கு விடுவதினி
மறையவர்கள் புகழ்மருவு மாநாகர்க் குனைக்காட்டி
இறைப்பொழுதுந் தாளாமல் யானிங்குனை வரவிடுவேன
சிறையிலிட்டே னுன்னையென்று சிந்தைதனி லெண்ணாதே

சிந்தையெண்ணாய் யென்மீகாமன் திறல்புனையும் வெடியரசன்
எந்தனுடை தம்பியென்றா லெழுதுகிறேன் ஓலையென்று
வந்துநீபோர் விழையாதே மடங்கிமீண்டு போவெனவே
வெந்திறல்சேர் வெடியரசன் விரைவினோலை யெழுதிவிட்டான்

விட்டிடுமவ் வோலையது வீரநாரணன் றன்முனங்
கிட்டவம்பு தனிற்பூட்டிக் கேடில்வில்லைத் தான்வளைத்துப்
பட்டவந்தக் கப்பலின்மேற் பதறாமல் விழும்படியாய்த்
தொட்டுவாங்கி யெய்தளவிறற் றேங்காமல் விழுந்ததுவே

விழுந்வம்பி னோலைதன்னை வீரநாரண பூபதி
தெளிந்த புகளண்ணரவர் திருமுகமென் றேபோற்றி
தொழும்பரிசா லதையவிழ்த்துத் தோன்றவாசித் திட்டபின்பு
செழுந்தீயி னெய்யதுபோல் சீறியவ னேதுசொன்னான்

சொன்னவார்த்தை மிகவுநன்று தொல்புகாரின் மீகாமன்
தன்னையுநா னமர்பொருது சமுத்திரத்திற் கொன்றுளக்கி
பின்னையண்ணர் சிறைவிடுத்து பெரும்புகழை நிறுத்திலேனால்
என்னவீர மெனக்குனக்கு என்றெழுதி மீண்டும்விட்டடான்

மீண்டும்வழி நான்போவேனோ மீகாமன் றனக்குமஞ்சி
மூண்டவனைப் பொருதுபடை முட்டவெட்டிக் கட்டிக்கப்பல்
பாண்டவர்தன் பாரதப்போர் படையெனைத்து கொன்றிலனேல்
ஆண்டவனைப் படக்கொடுத்தோ னவனாவேனென் றேவிவிட்டான்

அவனியுள்ளோர் கொண்டாட அருள்வணிகர் வரவிடுத்த
நலமருவுங் கப்லெல்லா நரலையின்மேற் கொன்றுளக்கி
சிவனவுணர் புரமெரித்த செயன்முடித்து விட்டிலனால்
அவன்றனக்குக் குடைபிடித்தோ னாவேனென் றெழுதிவிட்டான்

எழுந்தசுழித் திரைக்கடலி லிவன்படையைக் கொன்றுமின்று
வளைந்துமவன் பதியைச்சூறை வாரிக்கொண்டும் வாரேனேல்
குழைந்தொருவர் செய்தநன்றி கொன்றவர்க்குங் கொடியவினை
விழைந்தபாவி யாவேனென்றும் மேல்வரைந்தும் விட்டனனே

விட்டரக்கன் பதியதனை வீட்டிவிட்ட வனுமனைப்போல்
பட்டமுற்ற கன்னிகையாற் பார்புகழும் பேருரையாய்
ஒட்டுபுகழ் மீகாம னுருக்கருக்கி விட்டிலனேல்
முட்டுபோரிற் கைதொழுத மூடனென்று மெழுதிவிட்டான்

எழுதுபுகழ் பார்படைத்த வென்றுணைவன் றனைப்பிடித்து
குழுவொடு கொண்டேகுமந்த குணங்கெடநான் நிணக்குடலை
இழுத்தெடுப்பே னென்றுமோலை யெழுதிமீள வெய்துவிட்டு
அழுந்துகப்ப லோட்டிவெடிய் யார்த்துவீரன் வளைந்தனனே

வெண்பா

வீரநாரணன் றானும் வெடியரசன் றன்சிறையை
தீரவமர் செய்துசிறை மீட்கப் - போரில்
விழைந்த புகழ்மீகாமன் மிக்ககப்பல் போகா
வளைந்து கொண்டான் வாரியின்மேல்

வந்துவெடி யுள்ளதெல்லாம் மதியாமற் கப்பலின்மேல்
முந்தவிட்டு மமர்பொரவே முகமுகமாய்த் தான்பிடித்துஞ்
சந்தமப்புந் திண்புயத்தான் தக்கவீரர் புடைசூழ
விந்தையொத்த திறலுடையான் வீரநாரண தேவன்

வீரநாரண பூபதி வெடிகள்மிக விடுதல்கண்டு
தீரனா மீகாமனாமன் சிறந்தகப்ப லாயிரமும்
வாரிதனிற் போர்பொரவே வகைவகையா வணிவகுத்து
பாரும்விண்ணும் மிகநடுங்கப் படைபொரவே தொடங்கினரே

படையறவே லெறிவாரும் பாய்ந்துதத்தி யெதிர்ப்பாரும்
இடையிலம்பு விடுவாரும் எண்ணெய்காய்ச்சி யெறிவாரும்
கடிவிடுவே லெறிவாரும் காலுறுவில் லெறிவாருங்
தடிகளடி யெறிவாரு தாக்கிமிகப் பொருதனரே

தாக்கியெதிர் வீதர்தம்மைத் தலைசுளர விடுவோரு
ஏக்களினாற் பஞ்சலிலை யேக்கமுற விடுவாரும் (பஞ்சலி-மீகாமன்)
வீக்கமுடை வாளதனால் மீட்டுருவிக் குற்றுவாருங்
காக்கநிற விருபடையுங் கலந்துநின்று பொருதனரே

நின்றுமமர் பொருதோரின் நெஞ்சுருவும் படியாகச்
சென்றுநெடும் சவளமதாற் சினத்திடித்து விடுவாருங்
கன்றியெதிர் பொருவாருங் கரந்தெறித்து விழுவாருங்
அன்றுஅவர் தம்மையெல்லா மடசிவெட்டி யார்ப்பரித்ததார்

வெட்டியெதிர் பொருவாரை விண்ணேற விடுவாருங்
கட்டாரி தனையுருவிக் கடிதிற்குற்றி வருவாரும்
சொட்டையெடுத் திட்டுமங்கே சுழன்றுவிழ வெறிவாருந்
தட்டுடையும் படிகலங்கள் தாளவுரத் தெறிவாரும்

உரைத்ததிரும் பீரங்கிகள் ஓடிவெடி வைப்பாருந்
திருகிருத்து சுக்கானைச் சென்றொடித்து விடுவாரும்
உரைத்தகதிர்க் கிடுகறவே யொட்டிநின்று வெட்டுவாரும்
பரக்கவிட்ட படையாலே பலவீரர் பொருதனரே

வீரம்புச் சக்கரங்கள் வேன்மழுக்க ளெறிவாருந்
தாரையொத்த முசுண்டியுடன் சங்கெடுத்து விடுவாரும்
தீரமெல்லாம் பிணமாகச் சேரக்கடற் சொரிவாரும்
பாரவாரந் தனில்மீதே படையிரண்டுங் கொதித்ததுவே

கொதித்துமிக்க சூலத்தினாற் குத்திமெத்தி வருவாரும்
மதிக்கநின்று வாளுடனே வாளின்முட்டிப் பொருவாரும்
பதிக்குள்வானந் தனிலேறப் பற்றிச்சுற்றி யெறிவாருந்
சதிக்கவரு மிருபடைகள் தானெறிந்து பொருதனரே

எறிந்தவெறி கோலதனை யிழுத்துவில்லிற் றொடுப்பாருந்
தறிந்துமங்கே தலைமூளைச் சந்தொடிந்து விழுவாரும்
பறிந்துருவும் படியாகப் பட்டைய்குத்தி விடுவாரும்
மறிந்திடவும் வாளாலே வன்கொலைகள் செய்தனரே

வன்பான படைகளிட்டு வாள்சுழற்றி நிற்பாருந்
தன்கோபத் தாலுறுக்கித் தனித்ததட்டி வருவாரும்
முன்பாகப் பொருபவரை முகப்படையிற் சரிப்பாருந்
பின்போகப் பெரும்படைக்குப் பிடித்தெறிகோ லெறிவாரும்

எறிந்தபல படைகளெல்லா மெடுத்துடனே முறிப்பாருஞ்
செறிந்துவரு மணிகுலைந்து சிதறிடத் துண்டெறிவாரும்
பறிந்துருவு கல்வெடியிற் பதைபதைத்து விழுவாரும்
தறிந்திடவே சவள்மரத்தைத் தாவியேவத் தடிவாரும்

தாவிவெடி மரக்கலங்கள் தானுடைய விடுவாரும்
ஏவுபடை படநடுங்கி யேக்கமுற்றுப் பதைப்பாருங்
தாவுகவண் கல்லெடுத்து தாக்கநோக்கி யெறிவாரும்
மேவரிய விருபடையும் வெம்பூசல் விளைத்தனரே

வெம்பூசல் விளைத்தவரை வெட்டியெதிர் பொருவாருஞ்
கும்பாசுத் துவக்குடனே கோரவெடி யிடுவாருந்
தம்போரி லணைகுலையத் தக்கபடை விடுவாரும்
செம்பாதி யுடல்விழவே சென்றுவெட்டிப் பொருதனரே

வேறு குற்றிசை நெடில்
சென்றெதிர்த்தவர் சிந்திடவெட்டவே.செருவில்வீரர் படியில்விழுந்தனர்
கன்றிவந்தவர் காற்றெனமுட்டியே.கையும்வாளுந் தெறித்திடவெட்டினர்
ஒன்றினோடியுறுக்கி முன்குத்துவர்.உருவாயுதமூடிக் குலைகுவர்
கொன்றுகொண்டு குருதிபரந்தவே.கொடியவீரர் பொருதகளங்களே

கொடியவேல்சரம் பட்டவுடம்பிலே.குருதிசோர மிகவிழுந்தேங்குவர்
நெடியவம்பெதிர் பட்டவுளைவினால்.நீடுதீயென வேங்கியரற்றுவர்
அடிகள்தன்னை யறுந்திடவெட்டவே.ஐயையோவென் றடித்தலம்வீழுவார்
தொடுவையுற்றெதிர் பாணஞ்சொரிந்திடத்.துய்யதூசியின் நின்றேபொருதனர்

துய்யதூசியில் நின்றிடுவீரர்கள்.தொடுத்வம்பிற் தலைகள்சரிந்தன
வெய்யபுல்லற்கு நல்லுரைசொல்வதால்.வீணில்யாதும் விழைப்பதென்றென்னவே
நெய்யுலாவு கதிரம்புவீசிட.நெஞ்சுருவிநிமிர்ந் தெங்கும்போவது
பொய்ம்மையற்ற பொதுவர்க்குச்சொல்லிய. புத்தியீதென வத்திரம்பட்டதே

பட்டஅந்தத்தலையைக் கவண்களிற். பந்துபோலச் சுழற்றியெறிகுவர்
பட்டபட்டவிரு வகைச்சேனையிற். பாரமான பிணமலைமேலௌ
மட்டிலாதவர் சேனையிறந்திட. வாரியெங்குமிரத்த நிறைந்திட
அட்டதிக்கிருள் மாலையும்வந்திட. வாதபானுங் குடபாலடைந்தான்

வெண்பா

அடைந்து குடபாலி லாதவனப் போதுபுகப்
புடையடைந்த வீரரெல்லாம் போராடி - இடம்பெறவே
வீரநாரணன் படையு மீகாமன் றன்படையு
தீர நாவாயின் மேற் சேர்ந்தார்

சேர்ந்துபொரு மிருபடையுஞ் செருநீங்கிப் போனபின்பு
ஆர்ந்தபாகுப் பணிகார மப்பவர்க்கந் தோசைமுதல்
ஈர்ந்தபல பண்டமுத லெக்கனியு மெவ்வுணவும்
பாந்தன்மணி வாங்கவந்த படைவீரன் கொடுத்தனனே

கொடுத்தபோதங் கிவனுமங்கே கொடுத்திடானோ விதுவிருக்கப்
கொடுத்தமீகாமன் படைக்குக் கூறுவனே நாரணனைக்
கொடுத்தகதி ராதவனிக் கோலக்கட லெழவிடிந்தாற்
கொடுத்திடுவேன் பிடித்தவனைக் கொள்வீரெனப் பின்சொல்லுவான்

என்சொல்வான் மீகம னியல்வீர நாரணனைப்
பொன்செய்வெடி கப்பல்படை போகாமற் பிடித்திலனேல்
மின்செய்யும் வாளெடுத்து வென்றாரைச் சேவித்தவன்
தன்செய்யும் பணிவிடைக்குத் தரித்திரனாய்த் திரிவேனே

திருபுரத்தைச் சிவனெரித்த செயல்போல அவன்படையை
பொரவெதிர்த்த போர்முனையிற் போகாமற் கொன்றிலனேற்
கரைபுரளப் பெருஞ்சுழியே கதித்தோடு மாற்றினின்று
விரைவுடனேய் வந்தவரைக் கைவிட்டவ னாவேனே

விட்டவனே யெனவுரைக்க வேலைதனி லிரவிவர
தொட்டபடை யணிவகுத்துத் தூரியின்மே லமர்க்கெழுந்து
வெட்டும்வீர நாரணனும் வீரர்களுஞ் சிங்கமென்ன
வட்டமிட்டங் கழல்போல வந்தணுகிப் பொருதனரே

பொருதுவரும் விருதுகண்டு போரணிகொள் மீகாமன்
திருந்தும்வல்ல வீரருடன் சென்றெதிர்த்தங் கேதுரைப்பான்
விரைந்துவரு மணிகுலைய வேலாலும் வாளாலும்
பரிந்துவீரர் விழும்படிக்குப் பாரினமர் பொருதிடுவீர்

பாரின்மிக்க வீரரெனப் படிபுகழு நாரணனும்
போரின்மிக்க காமனுடன் பொருமுனையிற் சென்றெதிர்த்து
சீரின்மிக்க ராவணனுந் திருமாலும் பொருததென்ன
வீரமிக்க மீகாமன் விட்டுடையப் பொருதனனே (காமன்-மீகாம

**வேறு நெடில்**

படைகுலையச்சிலர் பகழிதொடுத்தனர்.பரிவொடுவிற்களு மிடையிடையே
அடைமழையொப்பென விரைவொடுவெட்டினர்.அவர்களையொட்டி யெதிர்ந்திடுவர்
துடைகளுமற்றிட விரைவொடுவெட்டினர்.துணிவொடுபட்டவர் மட்டிலையே
கடகரியுற்றெதிர் பொருதெனவுட்கொடு.கரமணிகெட்டெதிர் பொருதனரே

பொருதெதிர்முட்டுவ ரெதிரெதிரொட்டுவர்.புரைபடமுட்டுவர் சொட்டைகளாற்
திரைகடல்வெற்பொடு விரவியதொத்தென.தெளிவொடுவெட்டினர் மட்டிலையே
பருமணிபெற்றவர் படைகளையிப்படிப்.பரிவொடுவெட்டினர் முக்கியரே
பரிசைகைசிலர் தலைதுகளெழவெட்டுவர்.பரதவர்திரையென வெடிவகையே

திரைகடல்முட்டவே பிணமலையலையத்.திறலணியற்றனர் குடலுதிர
வரைகளெதிர்த்தென விரைவொடுவெட்டினர்.வகைவகையிவர்கள் களித்தனரே
தரைபுகளிருதுரை யவர்படைவிருதர்கள்.சமர்செயவருபடை தனிலணியே
குருகுலமுற்றவர் தனையடல்முக்கியர்.குலைவுறவிப்படி வெட்டினரே

வெண்பா

வெட்டிமிக வார்ப்பரித்து வீரநரணன் படையு
மட்டில்லா மீகாமனவன் படையும் - இட்டணியாய்
குலையா திருப்படையுங் கோபமுடனே சமமாய்ச்
சிலையாற் பொருதார் முன்சென்று

சென்றிரண்டு புறப்படையுஞ் செஞ்சரங்க டூவிநிற்ப
ஒன்றையொன்று தாளாம லுறுபூசல் செயுமளவில்
வென்றிபுக டிண்புயத்தான் வீரநாரண தேவன்
கன்றிநின்று மவர்களுக்குக் கட்டுரைத்தா னப்பொழுது

கட்டாண்மை தன்னுடைய கடலரசன் றன்சிறையை
வெட்டிவிடுப் போமெனவே மிகவுரைத்தீ ராண்மைமுன்னே
முட்டிவைத்துப் பொருதுமந்த முனையிலொன்றுங் கண்டதில்லை
பட்டணத்தா னவர்க்காகப் பதுங்கினிரோ வாண்மையென்றான்

பதுங்கினிரோ வென்றுசொல்லிப் பற்றாண்மை பேசுகிறாய்
விதம்படவே மீகாமன் விடுபடைக டன்னையிப்போ
மதங்களித்த யானையைப்போல் வாரியின்மேற் கொன்றுளக்கி
இதங்களிக்கப் பொருதுவெல்வோ மென்றார்கள் பொரும்வீரர்

என்றவர்கள் தாமுரைக்க வியல்வீர நாரணனும்
வென்றியான புகழ்சேரும் வெடிகளெல்லா முடுக்கிவிட்டு
சென்றார்கள் மீகாமன் திரட்படையைச் சிந்தவெட்டிக்
கொன்றார்கள் படைக்களத்தே கூற்றெனவே கோபமுற்று

**வேறு குற்றிசை நெடில்**

கூற்றுமஞ்சிக் குலைகுலைந்தோடவே.குன்றுமெட்டுத் திசையும்வெருக்கொள
ஆற்றல்கெட்டங் கணியுஞ்சிதைந்திட.அரியவீரரணியுட் புதைந்திட
ஏற்றகொம்புங் கொடியுமுறிந்திட.வெங்குமெங்கும் பிணமாய்மிதந்திட
சீற்றமான சிங்கத்திரள்போலவே.சென்றுமுக்கியர் சேரப்பொருதனர்

சேரவந்து நெருக்கிப்பொருதனர்.சிங்கமென்னச் செருவைவிழைத்தனர்
பாரும்வானும் நடுங்குறவெங்கனும்.பார்த்வீரர் மனமுந்திடுக்கிட
வீரநாரண னன்புமிகுந்திட. வெட்டிமுக்கிய ரொட்டிப்பொருதனர்
காரில்வென்ற கொடைசேர் மீகாமன்படை.கண்டுவாள்கொண்டு கப்பலில்வெட்டினர்

கப்பலெல்லாந் தலைபோகவெட்டவே.கண்டுமுக்கியர் தன்படையஞ்சியே
இப்படிப்புறங் கட்டுவதோவென.எதிர்த்தெல்லோரும் விளித்தெதிர்சேரவே
செப்பக்கேட்குமதோ விந்தவார்த்தைதான்.சேர்வீர்வீரரென் றார்வத்துடன்
எப்புறமும்கொண்டாட மீகாமன்படை.யிந்தாபாரெனச் சென்றெதிர்வெட்டினர்

வெட்டிவென்றெதிர் வந்தவர்பட்டிட.வேலையெல்லா மிரத்தநிறைந்திட
மட்டிலாதவர் சேனைமடிந்திட.வாரியெங்கும் பிணங்கள்மிதந்திட
கிட்டொணாததோர் சக்கரயூகத்தை.கெடுத்தபின்பும் பொருததுபோலவே
அட்டமேறிப் பரதவர்முட்டியே.அடையவெட்டித் தலைபோகவெட்டினர்

வெண்பா

வெடியரசன் றம்பி வீரநாரணன் றனது
மடுதிறல் மீகாமனவன் றனதுங் - கொடுங்கோபஞ்
சாலவிருபடையுஞ் தாரேறப் போர்மலைந்தார்
வேலைதனின் மீதே வெகுண்டு

வெகுண்டிரண்டு தன்படையும் வெம்பூசல் செய்துநிற்கக்
குகன்குலத்தில் வந்துதித்த கொற்றவீர நாரணனுஞ்
செகம்புரழப் போராடச் சிந்தையிலே நினைந்துகொண்டு
அகங்குளிர மீகாம னணைந்தகப்பற் கடுக்கவிட்டு

அடுக்கவெடி விடுத்ததன்மே லங்குநின்றிங் கேதுரைப்பான்
படுத்தொழிலா திருபடையும் படுவதானாற் பயனொன்றிலைக்
கடற்குளிரு வோர்வலியுங் காணவிங்கே மீகாமர்
தடப்பெரிய புகழானே தனித்தெதிர்ப்போம் வாருமென்றான்

தனித்தெதிர்க்க வாவெனவே தரியாம லவனெதிரே
இனத்திலுள்ள வீரரெல்லா மெதிர்த்துயுத்தஞ் செய்துநிற்க
சினத்தசிங்க மிரண்டெதிர்ந்து செருச்செய்து நின்றதுபோல்
கனத்திறல்சேர் மீகாமன் கப்பறனிற் பாய்ந்தனனே

கப்பறனிற் பாய்ந்துநின்று காவல்புனை மீகாமன்
செப்பலிற்றா னிருபேருஞ் சினத்தெதிர்த்துப் பொரும்போரிற்
ஒப்பமாக வொருவர்வெட்டி யுடன்றுவெற்றி புரிந்தாக்கால்
இப்பொழுது வென்றவர்க்குஉ ஏதுபலன் சொல்லுமென்றார்

சொல்லுமென மீகாமன் சொல்லுவான் நாரணனும்
வெல்லநீயென்னைப் பொருதால் மிக்ககப்ப லுனக்காகும்
இல்லாதுநீ தோற்றா லெனக்குனது படைகளென்ன
மல்லாரும் புயத்தானே வந்தினிநீ பொருவதென்றால்

வந்தினிநீ பொருவதென்ன மரக்கலத்தை யடுக்கவிட்டு
வெந்திறல்சேர் வீரரெல்லா மிகவுயுத்தம் செய்துநிற்க
சுந்தரஞ்சேர் வாளெடுத்துத் தோற்பரிசை தனைச்சுழற்றி
முந்துவீர நாரணனு முகத்தில்வாளாற் போட்டனனே

போட்டவவன் றனைவிலக்கிப் புத்திகொடு வெட்டவெண்ணி
வேட்டமிக்க யானையைப்போல் வெகுண்டுநின்று மீகாமன்
வாட்டொழில்சேர் நாரணனை மாறுமுகம் கெடவுடன்று
காட்டிலுறை சிங்கமென்னக் காய்ந்துபாய்ந்து வெட்டினனே

காய்ந்துவெட்டும் வெட்டதனை கண்டவீர நாரணனும்
சேர்ந்துகொண்டு வாள்சுழற்றிச் சென்றுகுத்திப் போயகன்று
பாய்ந்தெதிர்த்துச் சுழன்றுவெட்டப் பார்த்துமீகா மனுமுடனே
ஆய்ந்துதள்ளி யேமடக்கி யதனைத்தட்டி நின்றனனே

தட்டிநின்ற தல்லாமற் றாரைவாளிற் பின்முன்னிவன்
வெட்டவெட்டத் தைத்திலையே வீரநாரண னுடம்பிற்
கெட்டுமிக வாற்றாமற் கிளர்ந்தகப்ப லதன்மேலே
விட்டேகி மீகாமன் மிகத்தளர்ந்து தோற்றானே

தோற்றோடி மீகாமன் றுயரமுற்றுக் கப்பலிலே
ஆற்றாமற் போய்விழுந்து அன்னையெனுங் கண்ணகையை
போற்றிபோற்றி யுத்தமியே பொற்கொடியே யுன்சரணம்
போற்றிமிகு சுடரொளியே போற்றுமாநா கன்சுதையே

மாநாகர் தமக்கினிநான் மணிவாங்கி வருவெனென்று
தானாகச் சொன்னசொல்லு தவறுபட்டுப் போகாமற்
தேனாரு மொழியாளே சென்றுவெடி யரசருடன்
நானாடிப் பொரும்போரி னாயகமே வெற்றிதந்தாய்

வெற்றிதந்து மிகவரவின் மிக்யமணி வாங்குதற்கு
முற்றதுணை யாகவந்தாய் யுத்தமியே பத்தினியே
விற்கைவிற னாரணனை வெற்றிகொள்ள மாட்டாமற்
சற்றுநின்று தயங்குகிறேன் றாயேயுன் சரண்துணையே

சரணமெனக் கருளியிந்தத் தருணமெனைக் காராயேன்
மரணமிதற் கையமில்லை மாமயிலே வந்தருளி
அரணமெனக் காக்கிடுவாய் யரனிடத்தி னமர்ந்தவளே
தருணமம்மா சமயமிது தாயாரே போற்றியென்றான்

என்றுசொல்லி மீகாம னின்புருகி யென்புருகித்
துன்றுமய லருவிவெள்ளஞ் சொரியவிரு கண்ணாலே
அன்றுளலு மைம்புலனை யடக்கியொரு வழியாக
நின்றுதொழு மவ்வளவி னேரிளையார் கண்ணகையார்

கண்ணவர்கள் சூழநின்ற கருக்குலத்தோ ரறியாமற்
பெண்ணரசும் மீகாமர் பிணியகல்வா யெனமொழிந்து
கண்ணில்வந்து தோன்றியவன் கைக்கொருவாட் படைகொடுத்து
ஒண்ணுதலாள் வேலுமொன்றை யுகந்தருளி நல்கினளே

நல்கியந்த நாரணன்றான் னற்சிரத்தின் மூலியென்று
சொல்லுமொரு மந்திரமுந் தோராமற் செவிக்கலுற்றான்
வல்லமைகா ணவன்சடத்தில் வாளில்வெட்டுப் பலியாது
வெல்லுமிந்த நாந்தகந்தான் வெற்றியுனக் காற்றெனவே

ஆற்றெனவே கண்ணகையா ரருளிமறைந் தேகிடவே
போற்றிசெய்து மீகாமன் புளகமெள வாளெடுக்க
வேற்றொருவ ரொவ்வாத வீரநாரணன் படையுஞ்
சாற்றரிய வெற்றிகொண்டு தாவிமிக வார்ப்பரித்தார்

ஆர்ப்பரித்த வாறுகண்டு அடன்மருவு மீகாமன்
சேர்க்கரிய நாரணன்முன் சென்றுரைப்பா னப்போதே
போர்க்கிசைந்து வருவோரிற் புறங்காட்டா வீரருண்டோ
பார்ப்போமுன் னாண்மையென்று பாய்ந்துகன்றி வாளெறிந்தான்

கன்றிய மீகாமனுடை கரம்விலக்கி நாரணனு
நன்றுநீதான் பொருவதென்று நடந்தகாலுக் கெறிந்தருகு
நின்றிடு நாரணனையொட்டி நிலையுறுகை யொன்றைவெட்டச்
சென்றுபடக் கையும்வாளுந் தெறித்துடனே விழுந்ததவே

தெறித்தகை பாரிடம்விழவே திறல்வீர நாரணனு
மறித்துமற்றக் கையாலே வாளெடுத்து நடந்தெதிர்த்து
செறித்தபுக ழிராவணனுந் திருமாலும் பொருததென்ன
குறித்தபுகட் பரதவன்மேல் குதித்தோடி வெட்டினனே

வெட்டினனே வெட்டதற்கு மீகாம னாற்றாம
வட்டமேறி பத்தினியா ரருளகத்தி னிணைந்துகொண்டு
சுட்டுருவும் படியாகச் சூரரெனும் வேலெடுத்து
விட்டானே நாரணன்றன் மேல்விரைந்து பட்டதுவே

பட்டிடுவே றனைப்பிடித்து பார்த்துவீர நாரணனும்
வெட்டியெதிர் பொருவோமென்று மீகாமா வந்தெதிர்த்தாய்
தொட்டெதிர் போர்செய்யாமற் சோரவமர் செய்தாயே
யிட்டவிதி யிதுவெனவே யெதிர்வீர னிறந்தனனே

வீரநாரணன் படவே வெற்றிபுனை முக்கியர்கள்
போர்க்கெதிர்க்க மாட்டாமற் புறங்கொடுத்துப் போயினரே
வீரமுற்று மீகாமன் மிக்கபடை யோடெதிர்த்துச்
சேரவங்கே கொன்றுளக்கிச் சிங்கமென்ன நின்றனனே

வெண்பா

சிங்கத்துக் கொப்பாந் திறல்வீர நாரணனைத்
தங்கொற்ற வாளாற் றலையறுத்துத் - துங்கமிகு
வெடியரசன் முன்னாய் விரைவாக மீகாமன்
கடிதுரைத்தா னிச்செயலே காண்

வீரர் புகழும் வெடியரசே யுன்வீர
நாரணனாந் தம்பி நடுக்கடலிற் - போராடி
வைத்தகப்பல் சேனைகளை மாளக் கொடுத்தவனுஞ்
செத்தானிது நீ தெரி

நீதெரியென் றுரைத்தளவி னீதிபுகழ் வெடியரசும்
வாதையுற்றென் றம்பியோகோ வைத்தபுகழ் நாரணனோ
பூதலம்விட் டுயர்வானம் போனதங்கே போர்பொரவே
ஈதெண்ணி யாமென்று மேங்கிவிழுந் துருண்டழுதான்

உருண்டுமுகந் தனில்மோதி யுனக்கொருவ ரெதிருமுண்டோ
திரண்டுவரும் போர்க்களத்திற் றிறல்வீம னீயல்லவோ
மருண்டமரு மலரைவெட்டி வாகைபுனை வீரனல்லே
உருண்டதிரைக் கடலுலகி லுன்னைவிட்டே னென்றழுதான்

அழுதரற்றி நாவுலர்ந்து மாறாத கண்ணிரொடும்
புழுதிபட்டும் முகம்புடைத்தும் புரண்டறிவு தடுமாறி
எழுதரிய வடிவுடைய வென்றம்பி யென்வீரம்
பழுதுபட விட்டேனே பாவியென்று மழுதனனே

பாவியெனக் காகவிப்போ படையெடுத்துப் பொருதுவந்து
காவிவிழி மடமாதர் கலந்துசா மரம்மிரட்ட
பூவணையிற் துயிலாமற் புணரியின்மேற் றுயின்றீரோ
ஆவியேயென் னாயகமே யையகோ கோவென்றளுதாள்

அயியெலடுத்து எறிந்துகொல்ல வந்தரத்தி லிறந்தீரோ
செயவிதுவும் கபடமல்லோ தீரர்செய லிப்படியோ
சயிலமொத்த புயத்தர்முன்னே தம்பியின்றி வாழ்வேனோ
கயலையொத்த கண்ணிழந்தாற் காசினியி லாவதுண்டோ

காசினியை யாளவருங் காரிகையைத் தேடவருந்
வீசுபுகழ் பொன்முதலாம் மிக்கபொருள் தேடவரும்
ஓசைபெற்ற சத்துருவே யொருபொழுதில் வெல்லவருந்
கூசல்கொள்ளுந் தம்பியரைக் கொடலரிதென வழுதான்

கோடிளந்த யானையைப்போற் கொம்பிளந்த கற்பகம்போ
வாடுகின்றேன் றம்பியெடா மதியிளந்து மனங்கலங்கி
பாடுபட்டு என்னாலே படையிற்பட்ட வுனைநினைந்து
ஆடுகின்றே னாவிகொண்டு மாறேனா னாறேனே

ஆறாத தீவினையா லாவிவிட்டுப் போய்விடவும்
வீறழிந்து நீகிடக்க வினையேன்கண் துஞ்சுவதோ
மாறாகி நீயிறந்தால் மற்றெனக்குத் துணைவேறார்
ஆறாருந் சடையோன்ற னருளிதுவோ மென்றளுதான்

அருளின் வழியல்லாது ஆருனக்கு நிகராவார்
திருவருளும் புயவீர சிங்கமெனு நாரணனே
மருளுஊர்ந்து திரைகடல்சேர் மாற்றலர்க டன்மனதில்
லிருளுஊர்ந்த கலக்கமெல்லா மின்றொழிந்தார் ரெனவழுதான்

ஒளிந்துவிடா வென்னாலுன் னுயிரைவிட்டாய் வட்டமுறுஞ்
செளுந்தரள வெண்குடைக்கீட் செகமாழு நாரணனே
அளுந்துகின்ற நெஞ்சுகொண்டே யாறேன் முக்கியர்குலங்கள்
கொளுந்தோட வுன்னையின்றிக் குவலயத்தில் வாழ்வேனோ

வாளேனா னுன்னையின்றி வந்தெனது திறலுடைய
தோளான வுயிர்த்துணையே துலங்குவீர நாரணனே
தாளானே யென்னுயிரைத் தம்பியென வெம்பியம்பி
ஏளாழி தனக்கரச னிப்படியே யழுதனனே

இப்படியே வெடியரச னிரங்கியிருந் தழுதிடவே
எப்படியு நானிவனை யயிரங்காது புரிவனென்று
செப்பமுறு மீகாமன் றிறலரச னருகணைந்து
கப்பறனி லிருந்தவற்கு காரியமொன் றோதுவனே

காரியமோ போர்முனையிற் கடலரசே யழுவதுவும்
வீரியமோ பட்டவர்க்கு மின்னார்போ லழுவர்களே
சூரியன்றா னுள்ளளவுந் துயரமுற்றிங் கழுதாலும்
பேருலகின் மாண்டவர்கள் பிழைத்துவரு வாருமுண்டோ

பிழைத்துமீண்டும் வருவாரோ பெருந்திறல்சேர் வெடியரசே
இழைத்திடுநா ளெல்லைவந்தா லீசனுக்கும் விலக்கரிதே
பிழைத்திடுமோ முன்செய்வினை பிரமாவி னொருசிரத்தை
விழைத்படியோ வடுகன் விதிவழியோ களைந்தனனே

விதிவழியும் விலக்கரிதே மிக்கதிருமாலு முன்னாள்
பதியிழந்து தான்போகப் பண்ணினது மறியீரோ
அதிபலஞ்சே ராவணனு மமர்க்களத்தே பட்டிலனோ
எதுவாலும் வாளலாமோ வியற்றும்வினை யளவதன்றோ

அளவுவரு நான்மாண்டா லடல்புனையும் வெடியரசே
தளராதே யுன்னுடைய தம்பியன்றோ நானுமின்று
வளநாடு தனிற்குறுகி மாநாகர்க் குனைக்காட்டி
அளவிறந்த நிதியுநல்கி யரசிலுனை விடுவேன்காண்

அரசிலுனை விடுத்தரசர் அடிவணங்கி முன்போலத்
திரையோடு மரக்கலங்கள் சேரவே நான்தருவேன்
புரையாக நினையாதே புந்திநொந்து வருந்தாதே
தரையாளு மன்னவர்க்குச் சரீரசுக மீதல்லவோ

வெண்பா

அல்லலுற்றுத் தம்பிக் கழுதிரங்கும் வெடியரசே
நல்லதெல்லாஞ் சொல்லி நயந்தேற்றித் - தொல்லுலகு
போற்றும் வெடியரசன் புந்திசலியாதபடி
யாற்றினான் மீகாம னங்கு

கடலோட்டில் வீரநாரணன் போர் முடிவு

விருத்தம்

குடியிற்பிறப்ப தரிததனிற் பிறந்தழகு குணமுட்சரிதலரிதே
குணமுட்சரிக்கி னிதிகொளவுய்த்தலரி தனுகுலமுயத்த லரிதுமடவார்
கடியிற்பிடிப்பதரி ததினல்லபுத்திரர்கள் காணப் பிறப்பதரிதே
காணிற்கொடுக்க லரிதோணிற்பெருங் கீர்த்திகைக்கொண் டிருத்தலரிதே
படியிற்பிறந்தெதிரி தனைவெல்லலரி திவைகள்பற்றிலொரு மோட்ஷசமரிதே
பத்தினீயுத்தமீஇ கற்புடைக் கண்ணகைப் பாதமயராதுகந்தால்
வடிவிற்கிடைக்கு மிதுமுடிவிற்றரும் மோட்ஷசவளமு மொன்றடைதல்திடனே
வாலபிரகாசமுறு நாகர்பதிமேவியருள் மாதுகண்ணகை யம்மனே

கடலோட்டில் விளங்குதேவன் போர்

இட்டவிதிப் படியாலே யெழில்வீர நாரணனும்
பட்டபின்பு குருகுலத்திற் படைவீரன் மீகாமன்
அட்டமுட னழுதுவெடி யரசனையு மனந்தேற்றி
விட்டுப்பொர வேணுமென்று விட்டிருந்தான் கப்பலெல்லாம்

கப்பலெல்லாம் விட்டிருக்கக் கடலரசன் படையிலுள்ளோர்
தப்பியோடிப் பிழைத்தவரிற் சடுதியிற் சாரணனொருவன்
மைப்பொழில்சேர் குகன்கீரி மலையணுகத் திசைநோக்கி
ஒப்பரிய துயரமுட னோதுந்தேவற் கெனவோடி
"தேவர் என்பது இங்கு விளங்குதேவர் எனப்படும் "

ஓடிவந்தங் ககளிதனி லுதகமது சூழநிற்க
வாடிசுற்றுங் கடற்கோட்டை வாசல்தனில் வந்துநிற்க
வேடிதனக் கரசரெனும் விளங்குதேவ வீரனனும்
பாடுமணி மண்டபத்திற் பரிந்துமற்போர் பார்த்திருந்தான்

பார்த்திருக்குஞ் சமயமதிற் பரிந்துசென்றங் கவனடியில்
வேர்த்துவிழுஞ் சாரணனும் விரைவுடன்கே ளரசேசொல்வேன்
கார்க்கடலில் மருவலரைக் கடுகவெட்டிக் கழுகுநரி
ஆக்கவிருந் திடுவீர நாரணனு மிறந்தனனே

இறத்தல்செய்து மீகாம னிருங்கடலிற் கப்பல்விட்டு
விறலின்வெடி யரசைக்கட்டி மிக்கசேனை முடித்துநின்றான்
நிறஞ்சேருங் குருதியெங்கு நிறைந்ததுகா னுவரியெல்லாம்
அறிந்திடுவீர் நடந்தசெய்தி யறைந்தேனா னொருவனென்றான்

ஒருவனென்ற மொழிகேட்டு உறுக்கியவன் வெறித்திருந்து
விருதர்புக ழரசைவென்ற மீகாமனொடு படையைப்
பொருதுவென்று மவனூர்க்குப் புகையழலைக் கொளுவிலனேற்
சுரிகுழலார் முகம்பார்த்துச் சோறிடுவித் துண்ணேனே

உண்ணாது குழவியும்பா லுவரிதனக் கரசனென்றால்
அண்ணாவைத் தளைப்படுத்தி அங்குநின்ற மீகாமன்
மண்ணாள வென்றமையன் வானாளப் பார்த்திருந்தால்
பெண்ணார்க்குப் பேயனென்று பேசாரோ புவியிலுள்ளோர்

பேசவிடம் வைப்பேனோ பெரியோர்கள் சவையிடத்தே
வாசமிட்டேன் மருவலரை மறிகடலி லெறிவெனென்று
பேசியங்கே யிருந்தரசர் பெரும்படைகள் வீரருடன்
காசில்வர வுரையுமென்றே கடற்கரையில் வந்துநின்று

கடற்கரையில் வந்துநின்று கப்பலெல்லா மிறக்குவித்து
அடற்பெரிய மாலுமியு மதன்மேலே யோடுதற்குச்
சுடர்பெறுமோர் நாளிகைக்குட் சூதானஞ் செய்யுமென்னப்
படப்பெரிய சிறகுதட்டுப் பஞ்சலியு மிறுக்குவித்ததார்

தட்டிட்டார் பீலிவாரந் தனிலிசையுங் கப்பியிட்டார்
மட்டிட்டார் கொம்புகள்கால் வளைந்துசூழ வட்டமிட்டார்
பொட்டிட்டார் சூறாவிற் புதியவட மாலையிட்டார்
கட்டிட்டார் பஞ்சலிக்குங் கயிறிட்டார் மஞ்சிலிக்கை

இட்டேற விவைகளெல்லா மிசைந்தவிடத் தேபரப்பி
மட்டாக நாலுபண்ணும் வசையுநல்ல சங்கிலியும்
விட்டேவங் காவியுடன் விசையேற்றுங் கலநவித்தும்
அட்டமுற வெடிகளெல்லா மடுத்தெடுத்து மிகத்திருத்தி

திருகியபின் கொடிநாட்டிச் சேறாடிநிழற்றி வண்மை
புரிசைமரக் கலத்தருகும் பொறிகுறியாய்ப் பொறுமைசெய்து
பரிசையிரு புறமனைத்துப் பண்ணூக்கச் சவரமிட்டுக்
குருகுலத்தார் வெருவுவன்மைக் கொடிபலவுங் கட்டினனே

கொடிகளிட்டுக் கப்பலெல்லாங் கூடவிட்டுச் சலாங்கொடுத்து
வடிவுகட்டும் வாள்வீமா வாரிதனக் கரசேகேள்
படியடுத்த கப்பல்பணி பரமாகப் பார்த்துவந்தோம்
அடிபடுத்தும் போர்க்கிசைய வாயுதங்க ளேற்றவென்றார்

வேறு நெடில்

என்றபோதரசனுரை யாகவவர்சென்றே.யெழுதுவன்னப்பரிசை யிருதலைப்பகளி
கொன்றைவாள்சிற்றுவாள் வீரவாள்கொம்பு.குறிப்புவாள்கொல்லுவாள் கோல்வாளினோடு
பன்றியின்கோடுபோல் வங்கவடிப்பத்திரம்.பாரவளைவங்கவளை பாலானசூரி
அன்றியும்படடைய்ந் தட்டுவாள்கத்தி .யானதுமளுச்சூல மவையுமேற்றினரே

ஏற்றியங்குச்சரப் பெட்டியோடுடனே.யெழுதியவன்னச் சவளம்புகாளம்
தோறற்றுங்களுக்கடைக் கள்ளிகளுடனே.துப்புவளையமுந் தொங்காணகம்பமும்
உற்றமுடன்குத்து மீட்டிமுனைக்கடை.யூடேறுகளுவாயுதந் தாளும்பொறிகள்
போற்றுங்கரத்தேறு புல்லம்புவில்லம்பு.பூச்சுவில்காச்சுவில் பூணுவில்லுடனே

வில்லுடனச்சம்பு வைச்சம்புமெச்சம்பு.வேலம்புகோலம்பு வீரம்புகூரம்பு
வல்லமொட்டம்பு கட்டம்புதட்டம்பு.வண்ணம்புசின்னம்பு துன்னம்புவாளம்பு
கல்லுடன்பாம்புக்குடம் வெண்கருமணல்.காச்சியோசெண்ணெய் குடநெய்க்குடங்கள்
எல்லாங்குறைவற வேற்றியேசேனைகட்.கினியவுணவற்க மினிதினேற்றிடுவார்

இன்பானசெம்பி னிருப்புக்கடார.மினிதானபழவற்க நறுநெய்யொடரிசி
தின்பார்தமக்குரிய பலகாரமவலுந்.தேங்காய்பருப்புச் சருக்கரைசீனி
அன்பாய்க்குடத்திலுறை திரட்டுப்பாலப்பமுடன். நொலையலா வெந்தையவர்க்கம்
தனபூரணமான வெற்றிலைபாக்குடன். சந்தமுடனெல்லாமுன் தந்தேற்றினரே

வேறு

முன்னமிவ்வா றெடுத்தடுத்து மோதுகடல் போல்முழங்கி
அன்னவன்னக் கொடிபறக்க வாயுதங்க ளடுக்கெடுத்து
மின்னியவேற் குருகுலத்தை வேரறுத்து வெல்லவென்று
தென்னொளிசேர் தொடைவிளங்கு தேவனைமுன் வந்துகண்டார்

கண்டமன்னர் மணவாளன் கடல்விருத ராசனென்பேர்
ஒண்டிறல்சேர் ரிவரிருவ ரோரிலட்சம் படைசூழ
தண்டிகையின் மேலேறிச் சாமாரம்போர்க் கொடியிரட்ட
திண்டிறலா னருகுவந்து சினப்புலிபோற் றானிருந்தார்

தானவர்போ லிருவோருந் தானிருக்குஞ் சமயமதில்
தேனுலவு தார்புனைந்த திண்டிறலான் சண்டதரன்
கானுலவு தொடைபுனைந்த கடகளிறென் றிவரிருவர்
கானுலவு கொடிபறக்கக் கப்பலில் வந்தேறினரே

வந்தடைந்த படைத்தலைவர் வாள்வீரர் நால்வரையும்
சிந்தைமகிழ்ந்தே விளங்கு தேவனும்பார்த் தேதுரைப்பான்
நந்துவிறன் மீகாம னாகமணி வாங்கினதுங்
எந்தமைய னவன்சிறையி லிருப்பதுவு மறிந்திலிரோ

அறிந்திலிரோ வீரர்களே ஆண்மையிதென் றுரைப்பளவில்
அறிந்தசமர் வீரரப்போ தறைந்திடுவார் குருகுலத்தை
அறிந்துவெட்டித் தலையறுத்து மாழியின்மேற் கப்பலெல்லா
அறிந்தசம ராற்றியிப்போ தாழிகொள்ளத் தூளிசெய்வோம்

ஆழிகொள்ள விட்டுமதுஊ அண்ணரையு மீட்டிலமேல்
வாளெடுத்துச் சமரகத்தில் வருவதில்லை யரசேயினி
தாள்விலாது சமரகத்திற் சண்டையிட்டு வென்றிடுவோம்
வாழியெந்த நாளுமென்ன வல்விளங்கு தேவனுமே

வல்வினங்கு தேவனப்போ வாதுசொன்ன வீரர்பெறச்
சொல்லுநல்ல மாலையுடன் சொன்னபல வாயுதங்கள்
வல்லவர்கட் காம்வரிசை வகைவகையே தானுதவி
எல்வர்க்குங் குறையாம லெடுத்தெடுத்துக் கொடுத்தனனே

கொடுத்தபின்பு எம்மரபிற் கொற்றவரே யுற்றவரே
எடுத்தபடை வெட்டிவெற்றி யின்றெனக்குத் தாரீரால்
கடுக்கெனவே வாள்பூட்டிக் கலங்கிட மீகாமனையான்
படப்பொருத லல்லதுயான் படுவதின்று பாருமென்றான்

என்றுசொன்ன மொழிகேட்டுஊ இயல்வீர ரேதுரைப்பார்
நன்றுநன்று சொன்னமொழி நாய்தனக்குச் சோற்றையிட்டுப்
பன்றியினா வவுமுண்டாற் பாரிலுள்ளோர் நகையாரோ
தன்றுணைவா வெங்கள்வீரஞ் சமர்தனிலே பாருமென்றார்

பாருமென்ற வீரர்களைப் பரமாக வேறுமென்று
போரில்வல்ல சிங்கமென்னப் போர்க்கோலங் கொள்ளுவனாம்
பாரவன்னச் சட்டையிட்டுப் பருத்தசொட்டைக் கயிறணிந்து
ஆரமுற்ற தலைக்கீடு மந்தச்சகை யாத்துடனே

சகையமுத்துங் கயிறமுத்துந் தண்டரள மாலையிட்டான்
பகைகொள்வீரர் திறைகொடுத்த பணிவகையு மினையணிந்தான்
வகைகொள்வீரக் கழலுமிட்டான் மணிச்சிலம்புந் தாளிலிட்டான்
பகைபயக்கும் வாள்வீரன் பரிந்துநெற்றிப் பட்டமிட்டான்

பட்டமிட்ட கைக்கடசம் பைம்பொற்கோதை தண்டையிட்டு
மட்டணியும் வாரமுற்ற வாகுவலயம் பதக்கம்
கட்டியார மாலைகட்டிக் கட்டுதும்பை முடியிலிட்டு
பட்டணிந்தும் வேண்டுவன பற்பலவா பரணமும்வாள்

வாளெடுத்துக் கையடுத்து வாருறையி னிடையிலிட்டுக்
கோள்கள் சற்றுமணுகாது குறிப்புடையோர் சொல்லுமந்த
நாளிநல்ல முகூர்த்தமதி னாகுவலம்புரி முழங்க
ஆழும்வல்ல குடைநிழற்ற வைம்பொன்மணிக் கவரியிட

மணிப்புடைசே ராலவட்ட மறறுமுள்ள வரிசையெல்லலாம்
அணிச்சிறந்த சாரணர்கள் அவரவரே தானியற்றப்
பணியின்மணி வாங்கவந்த பரதவரை யறுக்கவென்று
தணிப்புலிப்புன் னாலையாழ்வார் தனைத்தொழுது சரம்பார்த்து

சரம்பிழையா தோடிடவே தனிப்புலவோ ரிரவலற்குங்
கரங்கள்கொண்ட தெனப்புகழக் கனநிதிக டான்வழங்கி
அரங்கனேசா சரணமென்ன வணையதனிற் பிடித்தேறி
உரம்பெறுவீ ரெனவாழ்த்த வுட்புகுந்தான் கப்பலிலே

கப்பலிலே யவனேறக் கடிதாகக் கம்மியர்கள்
மைப்பாய்கள் தனைப்பூட்டி வந்துகொறு வாளுடனே
அப்பொழுதே பரிமல்தன்னை யாஞ்சாணி விட்டணைத்து
ஒப்பரிய சீனியெல்லா முறப்பிடித்து வளைத்துவைத்தார்

வைத்தபின்பு மாலுமியா மாகாயன் றனைப்பார்த்து
தொத்துமென்ன வாஞ்சானிற் சொல்லவல்லோ னங்கேறிச்
சித்திரமாய்ப் பாயசைவுஞ் சீர்முடங்குந் தான்திருத்திப்
புத்தியுட னத்தூரியிற் பூட்டியேகாற் சரியணைந்தான்

சரிந்துமொக்க கப்பலெல்லாஞ் சமரகமாய்ப் போந்திடவே
கருத்துடைய வீரரெல்லாங் கைச்சலாஞ்சொல் லாக்கொடுக்க
திருத்தமுள்ள பல்லியங்கள் சேர்ந்திடிபோ லார்ப்பரிக்க
வரித்தவிதி யிதுவெனவே வைத்தனர்கண் நவித்தையெல்லலாம்

நவித்தைவைத்துக் குரவையிட்டு நரலையின்மேல் விடுகலங்கள்
கவுத்துவமா மணிமார்பன் காளநிற மேகவண்ணன்
செவிக்கடுக்கச் சிலைவளைத்துச் செல்லொலிகொள் ஞாணேற்றி
பவத்துருவி னெய்த்தகடும் பகழியென்ன வோடியதே

ஓடிவரும் கப்பலைக்கண் டுயரசையும் பாய்மரத்திற்
கூடிநின்ற மாலுமியுங் குறித்தறிந்து சொல்லலுற்றான்
ஆடல்பெறுங் குருகுலத்தோ ரதிசயங்காண் கடலினிடம்
மூடிவருங் கப்பல்களோ மூவாயிர மாகுமென்றான்

மேவுமவன் சொலுமளவின் மீகாம னேதுரைப்பான்
நாவிரண்டாய்த் தலையாயிர நாகமணி வாங்கவந்தோம்
மேவுகடல் மருவலரை வெற்றிகொண்டோ முற்றநல்ல
பாவாணர்கள் புகழவெட்டிப் பட்டாலுஞ் சொற்கமுண்டு

பட்டாலுஞ் சொற்கமுண்டு படைவீர ரானவரே
அட்டமாகக் கப்பல்விட்டும் ஆயுதங்க ளடுக்கெடுத்து
இட்டமான போரணிகள் யாதுங்குறை யாமலிட்டு
வட்டமிட்டுக் கப்பலெல்லா வரவிடுத்தும் சுற்றுநின்று

சுற்றிவரு வீரெனவே தூதர்கொடி வட்டங்குடை
எற்றுப்பல பறைமுழக்க மெங்குமிடி வெடியுடனே
பற்பலசா ரிகளில்வரப் பாரமான கப்பலொன்றில்
செற்றலர்கள் கப்பல்வாற திசையிற்சிங்க மெனவிருந்தான்

சிங்கமென்ன வவனிருக்கத் திகைத்திருந்தான் வெடியரசும்
பங்கம்வந்த தறிந்திருப்பீர் பரதவர்கள் கப்பலின்மேல்
வங்கமெல்லாம் போய்நெருங்க வாரிதனிற் போரிதமாய்
எங்குநிரை யாவணியா யிசைவின்றி விடுவீரென்றான்

விடுவதென்னக் கப்பலெல்லாம் விரைவினேகாஞ் சானுருவிப்
படவுகள்மேற் படவுகளைப் பாச்சியோச்சி முட்டவிட்டு
அடலரசர் முக்கியர்க ளார்ப்பரித்து வெட்டிடவே
மிடிபடவே கப்பல்சில போர்கள்பட்டு விழுந்தனரே

பட்டவர்மேற் பாய்ந்துகுத்திப் படைவீரர் குருகுலத்தோர்
கட்டியமர் பொருமளவிற் கடலரசன் படையிலுள்ளோர்
முட்டவிட்ட கப்பலெல்லா முட்டிமுட்டி முறியமுன்னாள்
வெட்டியதோர் பாரதம்போல் வெம்பூசல் விழைத்தனரே

வேறு – குறு நெடிலிசை

விளைத்தபோர்ப்பகழியைச் சிலர்சிலர்தொடுப்பர்.மிகுத்தவாளைப் பரிசையைச்சிலர்பறிப்பார்
தழைத்ததோர்மஞ்சிகை தனைச்சிலரறுப்பர்.சமத்தரர்நெரிபட நவுரத்தனையறுப்பர்
முழைக்குள்வாளரியென வுருத்தமர்கெடுத்தார்.முகத்தின்மார்பிற்றுடையில் வேறெறிந்தார்
இழைத்தபேரைச்சில ரெடுத்துறவணைத்தே.யிரக்கமாகக்கொண் டிழைப்பறவிடுத்தார்

வேறு தத்தி சைக்குறு நெடில்

பிடிட்டவரைசிலர் சேர்ந்திடுவார்.பிரியச்சிரந்தோள் முரியத்தொடுவார்
வெடிபட்டவரைக் கடல்விட்டெறிவார்.விரைவிற்சவளப் படைகொண்டரிவார்
பொடிபட்டிடுமண் சுடவேயெறிவார்.புகைசுற்றியதீயது கொண்டிடுவார்
கொடிகெட்டிடவும் விருதேபொருதே. குடைதாரணி கெட்டிடவெட்டினரே

இதுவுமது

தாரற்றுச்சிலர் சமர்முனைவிழுவார்.தரமற்றுச்சிலர் கடல்தனில்விழுவார்
வீரத்திற்சிலர் திடமுடனெதிர்ப்பார்.வீழச்சரமழை மேலினிநலிவார்
பீரிட்டுச்சிலர் குரவைகளிடுவார்.பேணிக்கப்பலினிற் பிறகிடுவார்
போரிற்சொரிமத மாவெனவெட்டிப் புகழுறவறவும் பொருதனரே

வேறு

பொருதுகப்பல் முரிந்திடவும் போரில்வீரர் தலைபடவும்
உருளவிட்டுக் கப்பலெல்லா மொன்றுடனொன் றகலாமற்
பரவிவிட்டு நேரமதிற் பரிதிசெறி கடலடைந்தான்
வருணர்வெற்றி மீகாமன் வாரீரென்றான் றன்படையை

தன்படையார் பொருது வெட்டுஞ் சமத்தையெல்லாம் பார்த்திருந்து
வன்படையாய்க் குருகுலத்தோர் வாளாண்மை செய்ததெல்லாம்
முன்படையாய் நம்முடனே முக்கியர்கள் கதித்தெழுந்தால்
பின்படையாய்ச் செல்வோம்நாம் பிறகிடுங்கோ கப்பலெல்லாம்

கப்பலெல்லா மோரிடமாய்க் கல்லுவைத்தங் கொதுங்கியபின்
அப்பொழுதின் மாலைதனில் ஆய்ந்தவர்கள் மீண்டிருந்து
செப்பமான பால்பழங்கள் சீனிதேனோ டடிசிலுண்டும்
எப்பொழுது விடியுமென்றே யிருந்திடும்போ திருளொழிப்ப

ஒளிவீசி யாதவனும் உதயமுற விருபடையுங்
கனமதனிற் பூசலிடக் கருதுகப்ப நிருத்தமுடன்
அளவினெழுக் கதிரவன்போல் அணிவகுத்துக் கனலெனவே
உளமதனில் வேககப்பல் ஒன்றினொன்றி னதிகமுற்றார்

அதிகமுற முக்கியர்கள் அங்குவிளங்கிய தேவன்
சதியிலவர்க் கொருவார்த்தை தானுரைப்பான் வீரர்களே
அதிகமாக வஞ்சாதீர் அருஞ்சமரில் வெல்லேனேல்
பதியிலுள்ளோர் நகைப்பார்களே பட்டாலுஞ் சொர்க்கமுண்டோ

படக்கெடுத்து அண்ணர்தம்மைப் பாரில்வல்ல னென்றுசென்று
அடற்பெரிய வறுசுவையோ டாயிழையார் முகம்பார்த்துக்
கடற்புவியில் வாழுவதோ கதித்தவல்ல மீகாமன்
மடற்பெரிய வாளாலே மாய்வதுவ நன்றல்லவே.

நன்றல்லவே வாழ்வு தன்னை நாடிமிக விருந்தாலும்
இன்றென்றோ நாளையென்றோ யிவ்வுடலை நிலை நிறுத்திக்
கொன்றிடுவ தினில்மிகுதி குறித்தபுகழ் நிலையதுவே
சென்றுவெட்டி யாண்மைதனைச் செய்வதன்றோ சேவகமே

சேவகந்தா னென்றுரைத்த சினப்புலியை முகம்பார்த்துக் (சினப்புலி என்பது விளங்கு தேவன்)
கோவமது மிகவளருங் கொற்றவீரர் முக்கியர்கள்.
சாவதுநீ ரென்றுரைக்கிற் றடையறவே பொருதுவெல்வோ
நாவாய்பாய் வலியுமென்று நலம்பெறுபாய் வலித்தனரே

பாய்வலித்து வருமாறும் பங்கமவன் சொலுமாறும்
காய்கதிர்போன் மீகாமன் கண்டுசொல்வான் கண்டீரோ
போயவனோ டிரிப்பீரேற் போகவிடான் நம்மவரை
ஆயினுநீ ரவன்படையி லழியவழி செய்யுமென்றான்

செய்யுமென வுருக்கள் சில செறியவிட்டுந் தன் மேலே
எய்யவரு போர்முகத்துக் கெதிரோடு மெனவுரைத்து
கையுடனே பாய்வலித்துக் கடுகவேற விடுமெனவே
உய்தலரி தெனவுருக்க ளொன்றோடொன்று விட்டனரே

வேறு அனவிசைக் குறில்நெடில்

விட்டுப்பொருதனர் முக்கியர்பலர்பல விட்டத்துடனனி பட்டிடவே
மட்டுப்பொருதிரு மன்னர்களுடைதர வட்டத்துடனெழு கடல்நடுசிதறிடத்
தட்டுத்தனிலுள் படையதுபொடிபடத் தப்பிப்போகினும் விடுவதுமிலையென
விட்டுக்கட்டென வெம்படைவீரர்கள். வெஞ்சமரஞ்ச விழைத்தனரே

கிளைத்திடு பூசலின் மிகுவிருதூதினர் கிடுகிடெனப்படகம் முரசதிர
உளைத்திடுகண்டைகள் மண்டொலியதிர உட்புரைகொம்புகள் வீணைசுரங்கள்
தளைத்திடுமோசை சயப்பறையோடு தானிடிவானிடி போலிடிபடவே
களத்தினில் மின்னொடு முகிலினமெனவே கடலிடைமுக்கியர் பொருதனரே

வேறு

கூருமம்பு சொரிந்திடுவாரவர் கூடிநின்றெறி கோலெறிவார்சிலர்
சேரவெட்டிப் பராகமெழும்படி செய்யுமக்கினி யம்புசெலுத்துவார்
வாரிவாரிச் சுடுமணல்வீசுவார். வானமோடிடிபோல் வெடியேவுவார்
ஈரமற்று இருபுறவீரரு மெதிர்த்துவெட்டியுந் தட்டியும்பட்டனர்

வெட்டுவெட்டென் றெதிர்த்துச்சுழற்றியே வேகமிட்டுச் சவளமுமிட்டனர்
தொட்டவேலது தன்னைப்பறித்தவர் தோளின்மீது சுழற்றியெறிகுவார்
முட்டிநின்றெதிர் பாய்ந்துகயமென முனையில்வீர ரெதிர்த்தகளத்திலே
நட்டுனக்கென விட்டபரிசைகள் நாலுதிக்குஞ்சிதறித் தெறித்ததே

நாலுதிக்கின் சிதறவணியெலா நாடியோடிப் பிடித்தகலாமலே
காலமாத்திரை சற்றுந்தப்பாமலே கைகள்காலற வெட்டவிழுங்குறை
ஏலவோடிக் குதித்துக்குதித்து எஞ்சிஎங்கு மிரைகள்போதாமலே
வேலைவாளை விலங்கைவிழுங்கியே விக்கிநின்று துடிப்பதுபோலுமாம்

ஆமெனச்சிலர் கைகொடுவாளினா லாடிநின்றுகளந் தன்னில்வெட்டவே
தாம்மென்னச் சிராய்வளைகோட்டியே தரித்துவெட்டித் தலையற்றுமீளவே
சேமமிட்ட கவசமுமார்பமுஞ் சேரவொக்கப் புறப்பட்டுநிற்கவே
ஏமமிட்டகளுவினில் மன்னரை யேற்றியிட்ட திசைந்ததுநின்றவே

நிற்கவேசிலர் வந்தங்கெதிர்த்துட னீடவொக்க வலமிடமாகியே
அற்பமீதினிற் றாரைமுழக்கியே யதிர்ந்தெழுந்தவர் தம்மைவிலக்கியே
நிற்கவேமுன் புறத்தினில்வெட்டவே நின்றுவாங்கி யுள்ளாகவும்வெட்டிட
மற்புயத்தணி மாலைவிழுவது வானிற்றாரகை மண்ணிற்சொரிவபோல்
(இங்கே அணி + ஆபரணங்களாக)

சொரியுமம்புகள் தன்னைவிலக்கியே சுளித்துநின்று சொரிபவர்தங்களில்
ஒருவரோடுமொருவர் தான்வெட்டவே யொட்டித்தடியுட னம்புந்தப்புவார்
மருவிச்சுழற்றிச் சுழற்றிவாள்வெட்டவே. வாங்கியோங்கியு மேங்கிடவிட்டனர்.
சருவியாற்றாது தப்புதற்கோடவே தானுமோடிக்கால் தட்டியுட்போடுவார்.

போடவேமுன் கடைத்தலைவீரர்கள் பொன்னெழுதிய கச்சுத்தளிந்திட
ஓடிவந்துவலம் பாய்ந்துவெட்டுவார் ஓட்டித்தன்னுள்ளே வெட்டியுட்தப்புவார்
ஆடிநின்றுபவுரியை கொள்ளுவா ராளையாளால் முங்கிடக்குத்துவார்
தேடிவந்துவிடுவித்துக் கொள்ளுவார் சென்றுபட்டவரைத் தரங்கொள்ளுவார்

கொல்லவேமுன்னெறி கோலெடுத்ததுடன் கொக்கரித்துக் குறித்தங்கெழுந்திடப்
புள்ளிவெம்புலி யிட்டபரிசையிற் போட்டதென்ன விலக்கிவளைத்தவர்
பள்ளிகொள்வன் குறியிற்புறப்பட்டப் பகரிற்பன்றியின மெனப்பட்டனர்
வெள்ளிகட்டிய முள்ளதுபோலவே மீளவெங்குஞ் சொரிந்துகிடக்குமால்

சொரிந்தபோதிலெறி வாணக்காறர்கள் தொட்டுமம்பைச் சுழலக்கடாவியே
முரிந்துமெய்ப்படை யோடிப்பிறகிட முறுக்குத்தீனியைத் திரித்துக்கொளுத்துவார்
எரிந்துசென்று படைதனில்வீழ்ந்திட வெழுவும்வானில் விழுமிடிபோன்றதே
சரிந்துவெள்ளி யெரிந்ததுபோலவே தங்குவாள்வெடி வெம்போர்விளைந்ததே

வேறு எண்சீரிசை நெடில்

வெம்போர்விளைப்பா ரடிப்பார்பிடிப்பார்.வெட்டுவார்முட்டுவார் தட்டுவார்வாளால்
அம்பாலடிப்பார் தொடுப்பார்விடுப்பார்.ரங்கேவிளக்கண்டு மிங்கேயிழுப்பார்
கொம்பேகுறிப்பார் பறிப்பார்முறிப்பார்.கொண்டேகுடத்தி லடைத்தேயிருந்த
செம்பாம்பதோடே கரும்பாம்பதெல்லாஞ். சேரமரக்கலத்தூடே யெறிவார்

எறிபட்டவரைக் கொடுசிலர்வருவா. ரிதுபட்டனவோ வெனவிடுவார்கள்
மறிபட்டமரக்கல மேலெறிவார் வசமற்றிடவெட்டிய வாள்முரிவாய்
முறிபட்டிடவெட்டிய வெட்டதனை முடுகிக்கடு கையறவெட்டிடவே
குறிபட்டபிணக் குருதிக்கடலிற் குறைபட்டிடவே சமரம்பொருவார்

சமர்நொந்துசோகமதுறச் சென்றுவிளுவார் தானீந்தநீர்பிடியு மென்றென்றுவருவார்
அமரின்றுமுடிவதோ வையகோவென்பா. ராவின்றுபோகவழி தானில்லையென்பார்
சமரஞ்செய்குருகுலத் தானைகளின்மீதே தாவென்றுசொல்லி விருதுடையமுக்கியர்கள்
யமனந்தகாலந்த மிதுவென்றுசொல்லி யெதிரேறிவாளுருவி யிருபடையும்பொருதார்

வேறு

பொருமளவிற் பாய்மரதிற் போயிருக்கு மாலுமியைத்
தெரியும்வில்லி லம்பாலே தெரிந்துவெட்டத் தலையறுந்து
பருமையொக்க வேவளைந்த பாளைகக்குங் குரும்பைமுத்திக்
கரியபனை தனில்விழுந்த காயெனவும் போனதுவே

காய்கதிர்போற் குருகுலத்தார் கடியவமர் விழைக்கவெல்லாம்
பாய்புலிபோற் கடலரசன் பார்த்துநின்றங் கிறங்கிவெட்ட
ஆய்குருதிப் புனல்பாய வமர்க்களத்தி லங்கமெல்லாம்
சேயபவளக் கொடியிற் செங்கமலம் பிறந்ததொப்பே

பிறகிடவே கப்பலெல்லாம் பேரவிட்டுப் பார்பளவில்
விறல்விளங்கு தேவனுடன் வீட்டுகிறேன் படையையென்று
தறியென்வே மீகாமன் தாக்கிநோக்கி வெட்டிடவே
மறிகடல்மேல் விழும்பிணத்தில் மரக்கலங்கள் தட்டியதே

தட்டுருவப் பொரும்வித்தைத் தான்பார்த்துக் கடலரசன்
மட்டுலவு கண்டலந்தார் வலம்புகாரின் மீகாமர்
ஒட்டியெம திருபுறத்தி லுள்ளபடை முடிந்ததினி
விட்டென்னுடன் போராட மீகாமா வாகுமொடா

மீகாமாவென் றுரைக்கும் விளங்குதேவன் றனைப்பார்த்து
கோமானாய் விளங்குகின்ற கொற்றமிரு வெடியரசை
நாமாகப் பிடித்திருந்தேன் நாரணனும் பொருதுபட்டான்
ஆமான தறிந்திலையோ ஆனாலு முன்னையிப்போ

உன்னை மீண்டும்போகவிடே னோடினாலும் பிடித்தடக்கி
மன்னர்வெடி யரசனுடன் வாரிற்கட்டிக் காவிரிபூம்
நன்னகரின் மானாகர் நாடநாக மணியுடனே
அன்னவர்முன் பாகவிட்டுஊ ஆழ்வேனான் கண்டிரெடா

கண்டிரெடா வென்றுரைத்தாய் கடியதொரு மீகாமர்
தண்கமலா சனனெழுதுந் தலையெழுத்தைத் தானொருவர்
கண்டறிந்த தில்லையெடா கற்பமுண்டு மூவருக்கும்
ஒண்டிறலா யிருப்பதெல்லா முன்னிடமென் றினைந்தாயோ

தாயெந்தான் கண்டுறுக்கித் தான்பாயும் புலியெதிரே
போய்நின்றா னடுங்காதோ புறங்கொடுக்கு மானினங்கள்
நாய்கண்டாய் நீயெனக்கு நடுங்கவிடுஞ் சங்கிலிநான்
பேய்கொண்டாய் பார்த்திரெடா பேரவெட்ட வாறெனென்றான்

பேரவெட்ட வாறதென்று பேசீனாய் நாயனையே
ஊரைவிட்டிங் கிருபுறத்தி னுள்ளோரு மிறந்துவிட்டார்
சேரவெட்டி மாளுமதிற் சேரியுள்ளார் பார்த்திருக்கச்
சாரியொட்டிப் பொருவதற்குத் தனித்துவெட்டி வருகவென்றான்

வெட்டிவரு கென்றுசொன்ன மீகாமன் றனைப்பார்த்து
எட்டியேபோ ரிசைந்ததென்ன விருவருநாம் பொரும்போது
நெட்டனவே யடசிவெட்டி நிலைகண்டார் தமக்குமுன்னம்
ஒட்டமென்ன சொல்லுமென்ன வொப்பிலானங் குற்றுரைப்பான்

உரைப்பதொரு போர்முகத்தி யோரடியி லென்னைவெட்டில்
விருதரசர் கொண்டாடும் வெடியரசன் தனையும்விட்டு
பிரிதிகுருகுலன் முதன்மைப் பட்டமுமென் பட்டணமும்
விரைவாகத் தருவேனென்று மீகாம னோதினனே

மீகாம னோதநின்ற விளங்குதேவ னெதிருரைப்பான்
மீகாம வென்னையுநீ வென்றுவெற்றி யாக்கினையேல்
மீகானு மென்கப்பலும் மேல்நாக மணிகளுடன்
மீகாலு மொழிமணியும் வெகுநிதியுந் தருவெனென்றான்

என்றுசொன்ன மொழிக்கிசைந்து இருவீர ரிருபுலிபோல்
நன்றுநன்றென் றமர்க்கோலம் நன்றுபுனைந் தெழுமடங்கு
வென்றிபுனை வாளுருவி வீரசத்தி மேலுருகி
வென்றகொடி குடைநிழற்ற விருதியத்தோ டதிர்த்தெதித்தார்

வேறு

தாதித்தாவென வெதிரமர்பொரவே.தாரைச்சேலென வாளொளிபொழியக்
காதிப்பரிசையின் மேனொடியடியாக.காலுட்பட்டென வோடியபடகம்
மீதிற்றாரைக ளொடுபிடியாக. வேகித்தானெதிர் பரதவர்கோமான்
சாதித்திருவர்தம் மாண்மையுமிதிலே தாமறிவோமர பாலெனமொழிவார்

வேறு நெடிலிசைக் குறில்

மரபாலவர் திரள்மீளவும் வாவாவென வெதிரே
ஒருவாள்வல முனையோடவு முடனேயவன் விலகிக்
குருவாகிய குகனேவினுங் கொடுவாளிது குறியென்
றரிதானவ ரெதிரோடுவ ரெனவேயமர் விலகே

வேறு குற்றிசை துரிதம்

விலகிப்பிடிபிடி யெனமுக்கியனும். விருதிட்டவர்பொற் பரிசைக்கவசம்
சிலவற்றிடவெட்டிய வெட்டதனைத். திருகிக்கொடு கையறவெட்டிடவே
அலகைக்கொடு கட்டினனுட்படவே.யதுவிட்டெதிர் தப்பினன்மற்றவனும்
உலகிற்பலகற்றது மித்தலையோ.ஒருசற்றெதிரெற பொருமற்றெனவே

வேறு தத்துக் குறிலிசை

மற்றுமேல்தான்பார்த்து வளையமீகாமனு.வட்டமாயெட்டிநின் றொட்டிவெட்டிடவே
உற்றுமேற்றாரை விலக்கியேயோடி.யுட்கூடகந்தனிலுட்பட்ட கற்கையால்
பற்றியேநின்றுமேல் பார்த்துமுன்வெட்டியே.பாரவாளாலெற்றி மேலேயெறிந்திடக்
கற்றதோர்கைக்கடச கண்டசரங்களுங். கைக்கோதையுந்தெறித் தற்றுவிழுந்ததே

கைம்கோதையுடனற் றறுந்தேவிழுந்ததைக்.கண்டுநின்றுள்ளங் கனலெனக்கன்றி
நம்மையோவாளா லெறிந்தனன்போகவோ.நன்றுநன்றின்றென்று நகைகொண்டுதிகையா
செம்மையொடுமுன்சம ரவன்சமர்முன்னியே.சீறியேமீகாமனுஞ் சென்றுவெட்ட
அம்மவன்பூண்ட முடிமுதற்பூடன்.மானதுங்கட்டுங் கழலுந்தெறித்தே

கட்டியவீரக் கழுலுந்தெறித்தது.கையிலணிந்த கடகந்தெறித்ததால்
கிட்டியேமுன்னே விளங்கியதேவன்.கீழ்க்கண்ணினக்கினி யாற்பொறிகாலவே
முட்டியேயட்டகாசங் கொண்டடர்ந்து.முனைவாளினொளிகால வெளியேசுழற்றி
வட்டமாயொட்டி மீகாமன்முன்னோடிட. வல்லமீகாமனுங் வாள்வாங்கிவரவே

வாங்கிவாள்வருதலைக் கண்டிடுமற்றவன். வாளினாலெற்றி வலமிடம்வந்து
ஓங்கிவந்தாங்கெதி ருட்பட்டுவெட்டிட.வோடிமீகாமனு மொட்டிவெட்டிடவே
ஏங்கிநின்றவர்க ளிருபடைவீரரும்.எவ்விதம்வெட்டினா ரென்றுகண்டிலரே
வேங்கைபோலொத்திடம் பாய்ந்துவாள்வெட்டவே.வெட்டியவாளினிற் பொறிமின்பிறந்ததே

வேறு

வெட்டிநின்றங் கிருவோரும் மிகவிளைத்து வாங்கியபின்
முட்டுயுத்தஞ் செய்யவென்று முனையிலங்கே யெதிர்ப்பளவில்
செட்டிதூதன் கையதனிற் சேர்ந்துநின்ற வெடியரசன்
பட்டதுவும் பொருததுவும் பார்த்துநின்றங் கீதுரைப்பான்

உரைப்பதைக் கேளென்னுடனே யொருவழியிற் பிறந்தவனே
வரிக்குமச்சக் கொடியோனே வாகைமீகாமர் தம்பியே
கரைக்குலத்தோர் பெருமானே கற்பகனார் தம்மாணை
இருப்பீரிப்போ பளிவேண்டா மென்னரிய தம்பியரே

தம்பியென வாணையிட்டுத் தனதுதம்பி தனைப்பார்த்து
அம்புவியி லென்னானை யருள்விளங்கு தேவனேகேள்
வெம்பூசலி னிப்போதும் மீகாம னுங்களண்ணன்
பைம்பொன்னின் மணிமார்பா பரிவுடன்வாள் வைப்பீரென்றான்

என்றுசொன்ன மொழிகேட்டுஊ இனியாணை தனைமறுத்தல்
நன்றலவே நரகுவரும் நன்மைசற்று மில்லையென்று
ஒன்றுபட வாயுதத்தை யுறையிலிட்டங் கிருவோருஞ்
சென்றுறவு செய்தாரே திறல்வீர ராற்பரித்தார்

ஆர்பரிக்கத் தானறிந்துஊ அடல்வீரன் மீகாமன்
கார்க்கடல்சூழ் புவியேழுங் காவல்கொண்ட வீரர்களே
போர்க்கிசைந்து பொருமளவிற் புவிவீரன் வெடியரசன்
பார்த்தெதிரே தடைபுரிந்தான் பற்றுசினந் தணிந்தேனென்றான்

எனவிளங்கு தேவனுமே யென்றமயன் சொற்படியே
சினமகன்றேன் வீரர்களே செருவினுக்கு நீர்வலியன்
மனமகிழ்ந்தோ மிருவோரு வ்ருமுமை மகிழ்வாகக்
கனமிகுந்த சோழநகர்க் கடலளவும் வாரேனென்றான்

வாருமென்ற மொழிகேட்டு வளங்குலவு மீகாமன்
பேரிருந்த வெடியரசைப் பின்னிறுக்குங் கட்டறுத்துச்
சேருநல்ல பணிகளுடன் றிருந்துபல வரிசைசெய்து
யூரினோடிப் போகவென்றே யுருக்களினற் பாய்வலித்தான்

வேறு நெடிலிசை

தாரைபலவூதவெண் சங்கொடுமுழங்கத். தம்பட்டமொடுதக்கை தவில்துடியொலிக்க
ஆரமுளநீடுகட னாவாய்களெல்லா.மாழிகிளியக் கோடியதுகரைபட்டுப்
பாரமுளநீல்முனை விளங்குதீவான.பள்ளியதுபுறகிட்டு நாகூர்கடந்து
சேரமிகவேதிரண் டோடிவணிகேசன்.றேவியுறைபதியுங் கடந்திடங்கூடி

கூடியேகடன்மீது நாவாய்களெல்லாங்.கூட்டமொடுமலைபறவை காட்டியதுபோல
ஓடியேநாகமணி வாங்கிவருகப்ப.லுள்ளபுகழ்மாநாக ருளமகிழ்வாதாகப்
பாடுநற்சோலைசெறி வண்டமிடரங்கம்.பாடிவிட்டெதிர்நாக பட்டணமும்விட்டு
தேடுபுகழ்காவிரிப் பட்டணத்துறையிற்.சேரவேகப்பலிற் பாய்தணித்தனரே

வேறு

கப்பலெல்லாம் பாய்தணித்துக் காணவல்ல மீகாமன்
செப்பமுடன் குடைநிழற்றச் சின்னங்க ளார்ப்பரிக்க
தப்பாத வாத்தியத்தாற் றாரையும்விண்ணு மொலிபுலம்ப
அப்பெரிய வரிசையுட னணிமணிகொண் டிறங்கினனே

கொண்டிறங்கத் தூதர்சென்று கூடிமாநா கருக்குரைக்க
கொண்டிடக் கூடாதமணி கூடவிதி யானெனென்று
கொண்டவீடு நின்றுதிரை கூடுகடற் கரையளவுங்
கொண்டபந்த ருடன்வீதி கூடுமிட மலங்கரித்தார்

அலங்கரித்தார் வாழைகமு கானகரும் பிவைநிரையும்
நிலப்பரப்பும் பொன்னாலே நிறைகுடமும் பாளைகளும்
கலங்களேற்றா லத்திமுத்தார் கரகில்பன் னீர்புழுகுந்
தலங்களெங்கும் பாவாடைத் தாரைசெய்வித் தார்வணிகர்

தாரைசங்கு விருதூதத் தாளமேள மார்ப்பரிக்கப்
பார்வணிக காளையர்கள் பட்டத்தவர் புடைசூழ
பேர்மணிசே ராலாத்திப் பெண்கள்பல ரேந்திவர
வாரமுடனெதிர் போந்தார் வணிகேசர் மாநாகர்

வணிகேச ரெதிரேசெல்ல வண்புகாரின் மீகாமன்
பணிசேருங் குடைநிழற்றப் பைம்பொன்சா மரமிரட்ட
இணையதில்லா மீகாமன் எளில்நாகந் தானீன்ற
மணிகொணர்ந்து மாநாகர் மனமகிழமுன்பு வைத்தான்

வைத்தளவின் மாநாகர் மரகதமிட் டிழைத்தபொன்னா
லுய்த்ததொரு கண்டசர முலகுதனி லரிததனை
பைத்தரவின் மணிகொணர்ந்த பட்சமதை மறவாது
கைத்தலத்தா லெடுத்தவன்றன் கழுத்திலிட்டார் கண்டசரம்

கண்டசரங் கைக்கடகங் கருதுபொன்னின் கணையாழி
கண்டநல்ல பலபணிகள் கருதுகூறை யுடன்கொடுத்தும்
கண்டமீகா மன்மனது களிப்புறவு மாநாகர்
கண்டபல வரிசைகளுங் கதித்தபல தந்தனமும்

தந்தனென்று சேர்வரிசை தான்கொடுத்த தோரளவே
பந்தமுற முதன்மையென்னும் பட்டமுமொன் றிட்டளித்து
வந்தவந்த வீரருக்கும் வகைவகையாம் வரிசைசெய்து
கந்தமலர் மாலையிட்டுக் கண்டவனைக் கொண்டாடி

கண்டவனை யெதிரெழுந்து கைப்பிடித்தங் குறவணைத்து
ஒண்டிறலான் செய்தசமத் தொருவர்செய்ய முடியாதே
பண்டெமக்கு முமக்குமென்று பார்த்தவர்கள் வாழ்த்திநிற்க
மண்டுமொழி நாகமணி மறையிடத்தைத் துறவுமென்றார்

என்றுசொல்ல மீகாம னிருகரத்தா லேயெடுத்து
துன்றமுடி வைத்தபட்டைத் துறந்தனனே கதிரொளிபோல்
அன்றுமந்த மணிக்கிரண மங்குநின்றோ ருடம்பதெல்லா
நின்றவொழி பொழியநகர் நேசமுள்ள வங்கிசத்தோர்

வங்கிசத்தோ ருடன்வாழ்த்தி மகிழ்வுடனே பார்த்திருக்க
தங்கமென்ன முத்துமணி தாரைவிடு பவளமணி
மங்குவில்லா மரகதமும் வச்சிர வையிடூரியுமும்
பொங்குபத்ம ராகமணி பொற்புருட ராகமணி

மணிகளின்மேன் மாணிக்கமும் மாறிலாக்கோ மேதகமும்
பணியணிந்த மீகாமன் பார்த்தவர்தங் கைக்கொடுக்க
அணியினின்ற வெல்லவரு மன்னையெங்கள் கண்ணகைக்கு
அணிச்சிலம்புக் காகுமணி யாமிதுநன் றென்றனரே

நன்மணியென் றுரைத்தவர்கள் நன்மையுறு மவ்வளவில்
வன்மையுறு மணிவாங்க மரக்கலம்விட் டோடியதும்
பின்னைவெடி யரசனுடன் பெரிமையொடு பொருததுவும்
அன்னவனை வென்றதுவு மப்பாலாச் சென்றதுவும்

சென்றுமந்த நாகதீவிற் சேர்ந்திறங்கிப் போனதுவும்
அன்றுதவம் செய்ததுவு மரவின்மணி வாங்கினதும்
நன்றுமீள வழியில்வீர நாரணன்வந் தெதிர்த்ததுவும்
சென்றுபொரு திழைப்பளவிற் றேன்மொழியார் கண்ணகையார்

கண்ணெதிரே தோன்றினதுங் கைக்கொருவா ளுதவினதுங்
வண்ணவீர நாரணனை வாளினாலே வென்றதுவும்
அண்ணலவன் றம்பிதேவன் அரும்படையோ டமர்செய்ததுவும்
அண்ணனவன் வெடியரச னாணையிட்டுத் தடைசெய்ததுவும்

செய்துறவு கொண்டுடனே திரும்பியிங்கு வந்தோமென்று
ஐயமில்லா மாநாகர்க் கங்குவீர ருரைத்தளவில்
மெய்யுரையால் மாநாகர் வெடியரசின் கைப்பிடித்து
சையபல வரிசையுடன் தக்ககப்பல்களுங் கொடுத்தார்

கொடுத்தனுப்பத் தம்பியுடன் கூட்டிவிட்டான் மீகாமனுஞ்
சடுதியுடன் வெடியரசன் றம்பியுட னூர்புகுந்து
கடற்காவல் போதுமென்று கப்பலெல்லாம் விலைகூறி
வடுப்புனைந்த வெடியரசன் மட்டக்களப் பெனுநாட்டில்

நாடிருக்க நல்லதென்று நாடியங்கு காடுவெட்டிக்
கோடுசெறி வயல்களுடன் குளங்களையும் மிகத்திருத்தி
பாடுறுநற் சாலியுடன் பலபயிரு நிரையேற்றி
ஆடல்மத கரியெனவே யரசுசெய்தங் கிருந்தனனே

இருந்தகதை யிதுவிருக்க வின்புறமீ காமனுக்கு
பரிந்துமா நாகார்விருந்தும் பலபலகப்பலுங் கொடுத்து
விரைந்துமனை புகுந்திடவே விடைகொடுத்தார் மாநாகர்
திருந்துநாக மணிகொணர்ந்த திறல்வீரன் சென்றனனே

சென்றவந்த மீகாமன் திருநகரிற் போனபின்பு
மன்றலருஞ் சீரகத்தார் வணிகேசர் மாநாகர்
முன்றிலெல்லா முரசதிர முத்தமிழோர் புகள்பெருக
சென்றவரு மனைபுகுந்தார் செந்திருவு மகிழ்ந்திருந்தாள்

"விளங்குதேவன் போருடன் ஐந்தாவது கடலோட்டக்கதை முற்றிற்று"

விருத்தம்

புத்தியறியேன் கல்விவித்தியறியேன் மிகுதிபோதுகலை ஞானமறியேன்
பொலிவானவாழ்வினொடு கேள்வியறியேன் நன்மைதின்மை புதிதென்பதறியேன்
சுத்தமாநடையுமிகு கொடையுமதிலின்புறு சுகமுமொன் றறிவிலறியேன்
துன்பவுடலைச்சுமந் துன்பிற்பிறப்பாந் துவக்கினையறுக்க வறியேன்
அத்தனாயென்னை யருளாசியாயென் றெனக்கதிக துணையாகிநின்ற
அன்னை கண்ணகையெனவு முன்னியொருமந்திரம் மனுதினமு மோதவறியேன்
மத்தனாகியமனது சுத்தமாயின்புருகு வழியருளி மோட்சமுய்ப்பாய்
வாலபிரகாசமுறு நாகர்பதிமேவியருள் மாதுகண்ணகை யம்மனே

**"ஆறாவது கண்ணகையம்மன் திருக்கல்யாணக் கதை"**

ஐந்துமுகத் தோனருளா லண்டராதி யோர்க்காதியாய்
வந்துதித்த வாரணமே வல்வைமணந் தாரணமே
சிந்தையருட் கண்ணகையார் திருமணத்தின் கதையிதனை
தொந்தமறப் பாடுதற்குன் துணைப்பதவா ரிசந்துணையே

துணைமருப்பி னிருதனத்தின் தோகைவள்ளி நாயகியை
குணமுடனே மணமுடிக்க குமரகுரு பரன்றன்முனம்
துணைமருப்பின் மதகயம்போற் றோன்றியவர்க் கருள்புரிந்த
இணைமலரி னிருபதத்தை யின்றெமக்கு மருளாயே

அருணிறைந்த வருக்கருளே யாரணத்தின் முதற்பொருளே
அரனருளுந் திருமகனே யரிபுகழும் மருமகனே
பரையுமரு ளுருமுதலாய் பரமகுரு துணைமுதலாய்
வரமருள வருபொருளே வாரணமெய்க் காரணனே

காரணனே கருத்தறியேன் கண்ணகையின் கலியாணம்
காரணமாய்ப் பாடுதற்குன் கருணை மலரிருசரணைக்
காரணமாய்க் கருதுமருள் காட்டியெனைக் கூட்டு தமிழ்க்
காரணமாய் வுறக்கருத்தாய்க் கருதுமுனதருளாளே

அருளினிறை பரம்பரையே யாறுமுக தேசிகனே
அரியயனே வயிரவனே யையனே செந்திருமகளே
சரசுவதித் தாயாரே தக்கவுங்கள் தாண்மலரை
ஒருபோதும் மறவாமல் ஒருவனுளத் தருளுதவும்

ஒருவனுளத் தொருநாளும் உண்மை மறவாதபடி
வரமருளாய் கதிரமலை வாழ்வான குருபரமே
குருபரத்தின் முன்னுதித்த கோலமத யானைமுகப்
பொருளேயும் மிருசரணைப் போற்றவரு ளுற்றுவிரே

அருள்பரவும் தமிழ்மதுரைக் காங்குசென்று பரிபுரத்தால்
எரிபரவு மிறையவளே யிக்கதையைச் செப்புதற்குன்
வரியளிகள் பரவுமலர் மலிபதுமப் பதமிரண்டும்
உரியமன மதில்வழிகொண் டுரைப்பரவ வருள்தருமே

தருமதய வருள்புரியுஞ் சற்குணநற் கொடியாளே
அருமருந்தாய் யூழ்வினைக்குஊ அருளுதவு மழகாளே
நிருபமுற்றுன் மணமாலை நெடுங்கதைக்குச் சிலகுறைகள்
உருவமுற வோதுதற்குஊ உத்தமியுன் வாக்கருளாய்

வாக்கருளுங் கண்ணகையார் மலர்பதமென் சிரத்திருத்தி
நோக்கமுற்றே னுலகோரே நுதலுமிந்தக் கதைபுகல
வாக்கின்வல்ல கண்ணகையார் மாநாகர் மனையடைந்து
காக்குமருள் சிறந்தழகு காளையர்கள் கருதழகே

கருதுமழ கிளமையொளிக் காரிகைக்கா றிரண்டாண்டாம்
பருவமுறத் திருவெனவே பயனடைந்து கருவிழியும்
புருவமுமன் மதன்கருப்புப் பொற்புவில்லு மம்புமென
உருவுடமை தோன்றிடவே யுத்தமிதத் துவத்துவமே

உத்தமிதத் துவத்தடைய வுருவிலியின் படையடையப்
பத்தினியின் நடையன்னமோ பாயும்பிடி நடையடைவோ
வித்தகியி னிடையுடுக்கோ மின்கொடியோ நூல்கொடியோ
எத்திறமென் றுரைப்பதிவ ளிடைதனக்கோ ருவமையதே

உவமையில்லா திடைக்குறியோ வூரரவின் படப்பொறியோ
நவமிகுந்த தேருருளோ நாடிலர சிலைநிலையோ
பவமிகுந்த வுலகிலென்னோ பகரநிக ராவதுண்டோ
தவமிகுந்த மதனரசு தானிருக்கும் வீடதுவே

வீடதுவே வயிற்றழகின் மேனிலையு மாவிலையுங்
கோடலிது சரியிலையே கொம்பனையா ருந்திச்சந்தம்
ஆடல்புரி வதெனநிக ராகுமாறொன் றிங்கிலையாற்
பாடல்பெறு சிறுபான்மை பதுமவிலை நிலைபெறுமோ

நிலைபெறுமோ கையழகு நீடுகொடி காந்தண்மலர்
விலைபெறுமோ செங்கமலம் விரியுமல ரழகதுவும்
குலமகளின் கொங்கையது கோங்கமுகை யோதேங்கின்
குலையலையு மிளனீரோ கூர்மருப்போ கொடுமுடியோ

முடியுமுவமை களில்லையே முத்திதரும் பத்தினியே
வடிவுடைய புயத்தழகு வானுயரும் கழையழகே
திடமுடைய கழுத்தழகு திருந்துசங்கோ விளங்கமுகோ
அடையவுரைப் பதுமிதுவோ ஆற்றாதிங் குவமையதே

ஆற்றாதிங் குவமைசொல்ல லாயினுமின் னாரதரம்
நாற்றமில்லா முருக்கிதளோ நற்பவளமோ கொவ்வையில
தோற்றுநல்ல கனியதுவோ சொல்லவல்ல நல்லபொருள்
ஏற்றுமாறிங் குலகிலொன்றை யெடுத்துரைக்க முடியாதே

எடுத்தபல்லி னழகுமுத்தோ ஏருறுமுல்லை யின்மலரோ
கடற்பிறந்த நிலவொளியோ கருதல்முடி யாதிதுவும்
அடுத்தமூக்கி னழகொழிசே ரந்தமிகு மென்மலரோ
தொடுத்தகுமி ளலர்மலரோ சொல்லிலோந்தித் தலைசொல்லவோ

சொல்வேனோ கண்ணழகு சூதவடுவோ கடுவோ
வல்லவம்போ வாளயிலோ வடிவிதற்குங் கிடையாதே
மெல்லிநல்லார் செவியழகு மிருதுவள்ளைக் கொடிக்கருவி
அல்லதுபொன் னூஞ்சலெஞ்சில் லாவதொன்றி லோதரிதே

ஓதலரி துத்தமியார்க் கொளிவிளங்கு புருவநெற்றி
வாதைசெய்யு மதனன்வில்லோ வானிலெழு குறைமதியோ
ஓதிலிதி லெதுசரியோ வொன்றையொன்றுக் கிணைசொல்லினு
நீதிமுறை யிறையிலையே நீண்டகூந்த லாண்டவட்கே

ஆண்டவளின் முகமலரை யாய்ந்தறையும் புலவர்களால்
ஈண்டறைய முடியாதேல் யாமுரைப்ப தெங்ஙனினிப்
பூண்டசிலம் பொலிபாதம் போற்றுபிண்டி மாந்தளிரோ
காண்டலடி விதுசிறிதேற் கண்ணகையின் வண்ணமென்னோ

வண்ணமிகு கண்ணகையார் மதனரசி னுரிமைபெற
எண்ணிரண்டாண் டெனுமளவில் லியல்வணிகர் கோவலர்க்கு
தண்ணறுப்பூஞ் சீரகத்தார் தானிசைமா நாகர்தந்த
கண்ணகைக்கும் மணம்பேசக் கற்கைவல்லோர் தனையழைதார்

கற்கைவல்ல தூதர்களைக் கடுகவங்கே தானழைத்து
விற்கைமதன் கோவலற்கும் விவாகமது நிறைவேற்ற
நற்களனி யுழவர்தெரு நற்பதியந் தணர்கள்தெரு
வர்க்கவணி கேசர்தெரு வாழ்வின்வர வுரையுமென்றார்

வரவுரையென் றவருரைக்க வாகுசெறி தூதுவர்கள்
குருவருள்சே ருழவர்தெரு கோலநூலின் மறையோர்தெரு
பெருகுதன வணிகர்தெரு பேரரசர் தெருவடைவே
இருபுவியோர் தான்மதிக்க வெங்குமங்கங் குரைத்தனரே

வேறு

உரைவேதபுரிநூலி னோரேவருகை.யோங்குசெங்கோனீதி யோரேவருகை
வரைவற்றதனமுற்ற வணிகரேவருகை.வாகேரினூரேறு காராளர்வருகை
கரையற்றகலைகற்ற கவிவாணர்வருகை.கண்டசோதிடர்களொடு பண்டிதர்கள்வருகை
மருவுற்றபுகழுற்ற மகனுக்குமணமாம்.மாசாத்தருத்தரவு வாருங்களென்றார்

மாசாத்தருத்தரவு மாதமாவணியில்.வருதிகதிபத்தென்ன மற்றோர்கள்வருவீர்
பூசுரர்களிற்கலை படித்தசோதிடரே.புண்ணியவதி கண்ணகைக்குங் கோவலற்கும்
ஆசகல்பொருத்தமது பேசிமுறைபேசுதற்.காகநீரேகுவீ ரவசியமதாக
வாசமிகுமன்னரே வணிகர்காராளரே.வருநாளிலுதயத்தில் மறவாதுவருவீர்

வருவீர்கள்வருவீர்க ளென்றெங்குமுற்ற.மறையவர்களாதியர்க ளறியலுரைசெய்து
வருதூதர்மாசாத்தர் மனைவந்துவந்தனம்.வணிகேசரேயுமது பணிவிடைகளீய்ந்தனம்
வருவார்கள்கணிதத்தின் மறையவர்கள்பலரும்.மற்றரசராதியோ ரற்றைநாள்வருவார்
வருகாரியங்களேதேது முண்டேயெனில்.வருகுவோமரைநாளி யொருவமுன்போவோம்

முன்போவோமென்றந்த தூதர்களுமகல.முறைவல்லகணிதத்திலா வாணரெல்லவரும்
அன்போடெழுந்தே மகிழ்ந்தேபுகழ்ந்தே.ஆசாரபூதியுமணிந்து கண்டிகையும்
வன்கொலுவுடன்விசிறி குண்டலந்தண்டுடன்.மாசாத்தர்மனைவாசல் வருமளவிலங்குளார்
முன்பேயழைக்கமுன் சென்றுமாசாத்தர்முன்.முன்னாகவீற்றிருந் தென்னோதுமென்றார்

வேறு எற்றிசைக் குறில்

என்றவருரைக்க மாசாத்தர்.எளில்கணிதமறை யவர்கள்முன்னாய்
மன்னியேமறை நூலின்வல்ல.வாணரே கேளுமிப்போதே
பொன்னாடுமில் லாதசெல்வம்.பூதலமிருந் தென்னபுகளோ
இன்னாளி லென்னாளுமாக.இனிவேணுநிலையின் மிக்கோரே

மிக்கோரே தானதருமங்கள்.வேதநூலின் முறைவிளங்க
தக்கதோர் யாகமும்பசுவுஞ்.சாத்திராகமமுந் தளைக்க
அக்குநீறும்புனைந் தருள்வோன்.அஞ்செழுத்தாரண ஞானம்
திக்கெல்லா மாங்கன்னிதானஞ்.செய்தாலுயர்வு முண்டாமே

உண்டாதலென் கோவலற்குஊ. உண்டானவயது மீரெட்டே
கொண்டேறு மயிலாறுமுகனாங். குருநேசமரு ளாகுமிப்போ
வண்டேறுமாலை மாநாகர்.மகளானகண்ணகை விபாகம்
கொண்டாடல் நீர்பேசவேண்டுங் குறிப்பாயறிந்து நாளென்றார்

என்றபோதந் தணர்கள்யாரும்.ஏர்வணிகர்தன் னுள்ளம்மகிழக்
நன்றுறவுசெய் கரணயோகம் நாளினிலையூழ் வினையினிலையும்
குன்றாதசோதிடங் கொள்ளக்.கோளேறுபக்கங் குறித்தே
இன்றுகேளென்று சோதிடர்கள் இசைவாக வோதுவாரினியே

வெண்பா

வாகைபுனை மாநாகர் மகளாகுங் கண்ணகைக்குங்
கோகான மாதுபயில் கோவலற்குங் - ஏகமதாய்
வாழுநிலையாய் மதிக்குமணம் பேசிவர
ஏழுநா ளென்றா ரியைந்து

இயையவொரு நாண்முகூர்த்தம் இட்டமறை யோர்தமக்கு
வயமருவு சீரகத்தார் வணிகேசர் மாசாத்தர்
நயமருவு வெள்ளிலைகாய் நல்லபொன்னி னாடைபட்டும்
நயமருவு கண்டிகையு நவரத்தின மாலைகளு

மாலைகளுஞ் சோலைகளும் வாரமுடனே கொடுத்துச்
சாலவவர்க் கினியபொருள் தக்கதக்க படியளித்து
கோலமுறச் சாந்துபன்னீர் குளிர்புனுகு மான்மதமும்
ஏவவர்க் கங்கமெலாம் இட்டணிந்து விட்டனனே

விட்டபின்பு மதிமுகத்தாள் மின்னினெழு கொடியிடையாள்
மட்டவிழுங் குழல்மடவாள் மடமாதர்க் கரசியன்னாள்
எட்டுநாலு வயதுடையாள் ஏகவன்னக் கண்ணகையை
திட்டமுடன் மணம்பேசத் திடமுடனே யெண்ணினரே

எண்ணிநின்று சவடியுட னிசைந்தசரப் பளிசங்கிலி
வண்ணமிக்க கல்லிளைத்த வச்சிரமணி மார்ப்பதக்கம்
நண்ணுமுத்து மாலையுடன் நவமணிசேர் கைக்கடசம்
பண்ணுசெண்டு சிரசுறுத்திப் பட்டிடையிற் கொய்துடுத்தார்

கொய்தலர்ந்த பூவகையுங் குங்குமகைத் தூரியுடன்
குய்மருவு சாந்துவகை கோலநீறும் புனைந்தணிந்து
வையகத்தின் விலைமதிக்கா வயிரவெட்டுக் கணையாழி
கைவிரலி லணிந்தணைந்தோர் காமனென்ன வெளியில்வந்தார்

வந்திடுநல் மாசாத்தரை லாரமுற்ற தண்டிகையில்
முந்தநின்ற வேவலர்கள் முன்னெதிர்நின் றேற்றிவிட்டு
கந்துநிகர் புயங்கொடுத்துக் கம்பமுற்ற கொம்பினிடம்
வந்தகுடை கொடிநிழற்ற மறுகினிடை யவர்வரவே

மறுகினிடை யவர்வரவை வாழ்புகாரி னகரிலுள்ள
திறன்மிகுந்த வாடவர்கள் சேர்ந்துவர விடையர்தெருக்
குறுகியங்கே குளிர்ந்தருளுங் கோலராமன் றனைநினைந்து
மறுகினிடை மாசாத்தர் வணிகரணி சூழச்சென்றார்

சென்றாரும் புகழ்பரவுஞ் சீர்புகாரி னகரிதனில்
மன்றேறிக் குறையாத வாணிதியந் தன்னாலும்
ஒன்றாலுங் குறையாத வுயர்வணிகர் வாசலிலே
சென்றாரே தண்டேறித் திருந்தியநல் லோர்வரவே

திருந்துபுகழ் மாநாகர் செம்பொன்மணி வாசலிலே
வருந்திவர மாசாத்தர் மாநாக ரெதிரேவந்து
மருந்தெனவே யழைத்துமணி மண்டபமுட் போந்துநல்ல
பொருந்தமளி தனிலிருந்து போதமகிழ் மைத்துனர்கள்

மைத்துனர்க ளிருபேரும் மருமலர்சந் தனவகையும்
வெற்றிலையோ டளவிறந்த மிக்கபொரு ளுண்டணிந்தும்
புத்தியுட னளவழவிப் போந்தவகை புகலுமென்ன
சித்தமகிழ் மாசாத்தர் செப்புவராஞ் சிந்தைசெய்தே

சிந்தைமகி ழுந்தமில்லாச் செய்திசொல்லக் கேட்டருளும்
நந்துலவு மடைபுடைசூழ் நன்னகரின் மைத்துனரே
முந்தவொரு நாளிலென்முன் மொழிந்தவுரை யிருவருக்கும்
அந்தநாளி லுண்டதனை யறியவந்தேன் நானிசைந்து

நானிசைந்த மொழியதுவோ நமதுமகன் கோவலற்குந்
தேனிகர்சொல் லுமதுமகள் தெய்விகமாங் கண்ணகைக்குந்
தானிசைந்து மணம்முடிக்கத் தானிசைந்தோம் முன்னொருநாள்
யானிசைந்தே னுமதுமனத் தெண்ணமென்ன சொல்லுமென்றார்

சொல்லுமென்ன மாநாகர் தோன்றுமன மகிழ்வினொடு
அல்லநிகர் குழலெமதுஊ அன்னைமகள் கண்ணகையை
நல்லமண முடிப்பதென்று நாமுறுதி சொன்னதுண்டு
எல்லவரு மதிசயிக்க விந்தநாளில் மணம்முடிப்போம்

மணம்முடித்துன் மகன்றனக்கு மைத்துனரே நான்தருவேன்
பணந்தருவேன் பொன்தருவேன் பலமனைகள் தான்தருவேன்
கணஞ்சேரும் பசுவெருமை காணிகளு நான்தருவேன்
குணஞ்சேரு மாளடிமை குறைவறவே தருவேனே

தருகுவேனோ ரளவிலதாந் தங்கநகை வங்கநகை
கருமமிக்க கப்பல்களுங் காரியகா ரருந்தருவேன்
விரைமிகுந்த குழல்மகளை விரும்பிமணம் முடிப்பதற்கோ
பரிபுரந்தான் வேணுமதும் பண்பினுடன் செய்குவேனே

பண்சிறந்த மீகாமன் படவுவிட்டு கடலோடி
எண்சிறந்த நாகதீவில் ராசனிடம் வேண்டி வந்த
அண்டயோனி போல் விளங்கு மம்மணியிற் சிலம்பு செய்து
கொண்டுமது மகற்கு மணங் கூட்டாமல் விடுவேனோ

விடுவேனா னவர்கள்மனம் விழைந்தபொரு ளத்தனையும்
இடுவேனா னென்மகளுக் கேற்றபல வாபரணம்
முடியவிட்டு நற்றினத்தில் முடித்திடுவேன் கலியாணம்
நடுவோர்முன் பாகவின்று நவிலலுற்றேன் மைத்துனரே

மைத்துனரே யெனக்குமொரு மகளிவளே யல்லாமல்
வைத்தபிள்ளை வேறுமுண்டோ மைத்துனரே யுன்றனக்கும்
உய்தமக னொருவனல்லா லுலகறிய வேறில்லையே
எத்துமண முடித்திடுவே னிசைந்த தங்கள் மனப்படியே

தங்களிலே கைவளங்கித் தந்ததின்பின் வேதியரை
அங்கழைத்து மகிழ்வுடனே யருமறையோர் முகநோக்கிக்
கொங்கை நல்லார் கண்ணகைக்குங் கோவலற்கு மணமுடிக்க
உங்கள்கணி தத்தினன்னா ளுகந்துரையு மித்தினத்தில்

இத்தினத்தி லென்றவுடன் ஏடெடுத்துச் சோதிடர்கள்
உற்றதிரு நாள்வகுக்க வோதுமுறை யலகடுக்கி
வெற்றிதிரு வாதிரையும் மிக்கமகமும் பொருந்த
மற்றுமுள்ள பொருத்தமெல்லாம் வகைவகையே பார்த்தனரே

பார்த்துநல்ல பேர்ப்பொருத்தம் பாவைதிரு நாட்பொருத்தம்
ஏற்றநல்ல கணப்பொருத்தம் ஏகுகயிற்றுப் பொருத்தம்
ஆற்றுவசி யப்பொருத்தம் ஆனநல்ல மங்கிலியம்
சேர்த்துமிக்க பொருத்தமெல்லாஞ் சீர்பெறவே பார்த்தனரே

சீர்பெருகு மாநாகர் செல்வமுடனே வளர்த்த
கார்பொருவுங் குழன்மடவார் கண்ணகைக்கு மணமுடிக்க
ஆர்பொருவும் மகந்தனக்குள் ளட்டமத்திற் சனியனிப்போ
பார்பொருத சூரியனும் பையரவும் பகையவற்கே

அவம்மிகுந்த திரியொருத்திக் காசைகொண்டு அவள்மேலே
தவமிகுந்த நாலாநாள் சடுதியிலே நிதிகெடுமாம்
குவலயத்தின் பளிகேடன் கொடியதட்டான் மொழிகேட்டு
கவலையற்ற கோவலற்கு கடியபகை விளையுமென்றார்

விழையுமென்றவ் வேதியர்கள் விதிமுறையா யதுதெரிந்தும்
பழையகணக் குடனிருந்தும் பார்ப்பமென்று தேர்ச்சியுற்றும்
களைபரவு கழனிநாடர் காரியமெல் லாந்தெரிந்தும்
வளையுழவு கொழுதழுவு மாநிலத்தோர்க் குரைத்தனரே

வேறு தாளிசை நெடில்

கயல்வாவியேழு நீலவயலூடுமருவக்.கரைதோறுநுரையேறி வருகாவிரிக்கே
வயல்வாளைகுதிபாய மடல்பூகமொடிய. மதுவானததனூடு மடையோடுபெருகப்
புயல்வாவுதிருநாடு நகர்சூழவாழும் புகழ்தாவுவாணிகேசர் மகாளார்தமக்கு
இயல்வாவுகலியாண நிறைவேறவொருநா.ளிலைநாடவருநாள்க ளெந்நாளுமறுவே

மறுவாகிலறையோதம் வருதீரவாரிசூழ். மகநாடுசனிநாட வருநாளுமிடியே
பெறுமாகிலுறுகோள்க ளருகாதுவருமே. பிசகாதுநசையாக வொருநாளுரைக்க
மறையோர்கள்முறையாக நிறையோடிருந்தும்.வசமாகவிசையோடு வருவாரயோகம்
குறையாதவலமோடு நரமோடிநாசியிற்.கோளெண்ணவங்கங்கு மூழ்வந்துதெங்கும்

தெங்குகுலைசிந்தியிரு பூமிதனில்வீழச்.சிறப்புடனறற்புழுதி செம்பொனொளியாக
கங்கைவயல்சூழ்கின்ற பூம்புகார்தன்னிற்.கண்ணகையெனுந்திருவை நன்மணமுடிக்கத்
தங்களிலிருந்தொரு விபாகதிருநாளென்னத்.தக்கமறைவேதியர்கள் மிக்கநீனைவாகிஇ
மங்கலியசூத்திரந் தங்கவென்றங்கவர்.வருநாளுளொருநாளை வழிவாசமிட்டார்

வாசமிகுமம்புயத் தாருடையவேதியர்கள்.வாரமுடனல்யோக நாள்வேறுமிலையாம்
பூசலிடுவேல்விழி மடந்தையருளாலே.பொன்மதுரையெரிபரவும் பூழியனையன்றும்
நாசமிடுமேயிதுவு மாருமறியாமல் நன்றுநாளொன்று குறையுண்டெனநவின்று
தேசுமுகமான மாநாகர்மகளாற்குத்.திருப்பூட்டுநாளொன்று பத்தெனவிதித்தார்

வேறு

விதித்தவிதி வேதியர்க்கு வெள்ளிலைகாய் மலரளித்து
கதித்தமருச் சாந்துவகை கத்தூரி புனுகளித்து
மதித்தநிலா வெனவிளங்கும் மாறின்முத்துத் தாரளித்து
நிதிப்பொருள் பீதாம்பரமும் நேர்ந்தளித்து விட்டனரே

விட்டபின்பு மாநாகர் மெல்லிநல்லார் கண்ணகைக்கும்
மட்டவிழ்தார் கோவலற்கும் மங்கிலியக் கலியாணந்
திட்டமுடன் முடிப்பதற்குச் சிலம்பணிகள் புரிவதற்கும்
தட்டாரை யழைத்துவரச் சாரணரை யேவினரே

ஏவவேகு சாரணர்க ளிருந்தணிசெய் யாலையத்திற்
றாவியவர் தனையழைத்துத் தக்கபுகழ் மாநாகர்
மேவுமிடம் விட்டுநிற்க மேவியந்த மாநாகர்
மாவுலவு மாந்தைநகர் வாழ்பவரே கேழுமிப்போ

கேழுமிப்போ வெனதுமகள் கேடறுசீர் கணண்ணகைக்கு
வாழ்வுபெறு மணமுடிக்க மணிச்சிலம்பொன் றினித்தருவீர்
நாளிரண்டந் தாகுமுன்னே நற்புமாலை பணிகளுடன்
தாழ்விலாது தருவீரென்று சாற்றியவர் தனையிருத்தி

இருத்தியிருந் தரியதங்கம் எண்ணரிதா மிரத்தினமும்
வரித்தபொருள் யாவதுவும் மாந்தைநக ரவர்களிடம்
பெருக்கமுறக் கொடுத்திருந்து பேசுவரென் மகள்காலிற்
திருத்தமுள்ள சிலம்புக்கிணை செய்வீர் நீரெல்லவரும்

எல்லவரு மென்னவவர் யாவருமோ ரிடமிருந்து
நல்லகரி யோடுகுழல் நற்குறடு மிலைக்குறடும்
சொல்லிநல்ல சுத்தியலுந் தொக்கபல வாயுதமும்
வல்லபணி சமைப்பதற்கு வந்திருந்த வேளையிலே

வேழமுகன் றனைப்பூசை விதிப்படியே துதித்தருத்தி
தாழ்விலர்தம் முறையிலக்க சாலையரைத் தெண்டமிட்டு
காளிதனைப் பூசைசெய்தும் காரியமெல்லா முடித்து
சூழவிருந் துழமகிழ்ந்து சொன்னதங்கம் தனையெடுத்தார்

சொன்னமெடுத் துமியோட்டிற் றோன்றுகுகை யிட்டதற்குள்
நன்மருந்து வைத்துத்தட்டார் நற்றீயி லுருக்கநின்ற
பொன்னுருகி நின்றநிலை பொல்லாத குறியிடங்காண்
தென்னவனார் கூடலிலே தீப்பரப்பும் பரிபுரமே

பரிபுரமென் றுரைத்ததட்டார் பண்பினுமி யோட்டிலுள்ள
கரியடுக்கி நிலைக்குறட்டாற் கார்பொழிந்த நீர்பொழிந்து
அருகிலுருகிய பொருளை யாய்ந்தெடுத்துப் பார்த்தபின்பும்
சுரிகுழலார் மணமுடித்தல் தொந்தமுண்டாம் வடுவிதென்றார்

வடுவதனில் வடுவடிக்க வைத்துநறுந் தடியிற்சுத்தி
தடியிலடித் தகடுகொட்டிச் சார்புகம்பி யேயுருக்கிக்
கடுகளவோ ரரும்பெடுத்துக் கலங்கமறத் துலங்குவண்ணம்
படியிலிட்டும் பார்த்துரைத்தும் பட்டமுறக் கொட்டித்.தட்டி

கட்டிமுட்டும் பொட்டுமிட்டுக் கற்கைவல்ல கம்மாளர்
கொட்டிவளைத் துளைபரப்பிக் கூறிடுசந்தந் திமிர்த்து
மட்டமிட்டுக் கவரணிந்து மடக்குமட்டம் படப்பொருத்தி
இட்டகம்பி களிலிழைத்து மிடையிடையி லணிநிரைத்தார்

நிரைபிடித்துச் சவளமுற்று நேர்ந்தவயி டூரியத்தின்
நிரைபிடித்துச் சவளமுற்று நீடுவச்சிரம் பதித்தும்
நிரைபிடித்த பவளமிட்டு நிரைநிரைமுத் தணிகளிட்டும்
நிரைநிரையாய் ரத்தினவகை நீதியுறப் பதித்தனரே

பதித்துமத்தி யடிகடையிற் பவுரிசரி வரவிடுத்துக்
கதித்தவன்னந் தனையுறுத்திக் கண்டவர்கள் கண்மளுங்கத்
துதித்தகசை யொன்பதிட்டுச் சூழ்ந்தகுன்றொன் பதுமடுக்கி
விதித்தபய னிதுவெனவே விணைச்சிலம்பு தனத்திலிட்டார்

தனமிகுந்த பொற்சிலம்பு சமைத்தபின்பு சாலையர்கள்
அனம்பொருந்துங் கண்ணகையார் ரன்றுபிறந் திடுநாளிற்
கனம்பொருந்து மொருகாலிற் கண்டசிலம் பிதுசரியோ
முனம்பொருந்திச் சரிபார்க்க மோசமில்லா திருந்ததுவே

மோசமில்லாச் சிலம்பினிடம் முன்னொருநாள் மீகாமன்
பேசுநாக தீவிற்சென்று பெரியதவத் துரிமைபெற்று
வாசமுறு நாகதுரை மகிழ்வினுடன் கொடுக்கப்பெற்ற
நேசமுறு மணியெடுத்து நிமலனடி தொழுதுதட்டார்

தொழுதுதட்டார் மணியெடுத்துத் தூயமன் றுடனிருந்து
வழுவிலாத சிலம்பினிடை வாயதனைத் தான்திறந்து
செழுபதும மலரிநிகர் செம்மணியை யம்மணியின்
குழுவினுடை யுறப்பதித்துக் கொள்ளவுள்ளோ ரகமகிழ்ந்தார்

ஆகமிக மகிழ்ந்தவர்கள் அருள்வணிகர் தான்மதிக்க
வாகைபுனை பாண்டியனார் மதுரையுட னுடம்பழிய
நாகமணி யொன்பதையு நற்சிலம்புக் கிணைபுனைந்து
வாகைபெறு சிலம்பினொரு வடுவில்லாது புரிந்தனரே

புரிந்தவிந்த சிலம்புதன்னைப் பொன்செய்கொல்லர் பண்புறுத்தி
பரிந்துநல்லா டையிற்பொதிந்து பண்பினக்க சாலையரை
இருந்தெழுந்து தொழுதிறைஞ்சி யெவர்களுக்கு மரிதான
பரிபுரத்தை மாநாகர் பட்சமுறக் கொடுத்தபின்பும்

பின்புமவர்க் கானபணி பேசுமெதிர் மயூரபடம்
நன்குழலிற் புலிப்பணியு நல்லவன்ன வலம்புரியும்
மின்புகுந்த நாகபடம் மீதெழுந்த மகரவணி
அன்புகுந்த கன்னசர மணியணியாய் பணிகள்செய்தே

செய்தநல்ல பணிகளெல்லாந் திருத்முற முடித்தபின்பு
வையகத்தோர் புகழ்மாநாகர் மகிழும்படியவர் முன்பெலாஞ்
செய்ததட்டார் கொடுத்திருக்க சிந்தைகளி கூர்ந்தனராய்
ஐயமில்லா தருள்வணிகர் அப்பணியை நோக்கினரே

நோக்கமுற்ற மாநாகர் நுவலவொண்ணாக் களிப்புடனே
ஆக்கமிக வள்ளியள்ளி அக்கசாலை யருக்களித்து
தேக்கமனங் களிக்கவிட்டு செல்லுவீர்க ளெனவனுப்பி
மாக்கள்புக ழாக்கமுற்ற வல்லசெட்டி களித்திருந்தான்

வல்லசெட்டி மாநாகர் வைத்தபுகழ் காவேரி
நல்லபுகழ் பரவுமந்த நாட்டிலுள்ளோர் தான்மதிக்க
எல்லையற்ற நிதிபெருகு மியல்வணிகர் கோவலற்கு
மெல்லிநல்லார் கண்ணகைக்கு மிக்கமண முடிக்கவென்றே

மணமுடிக்க வேணுமென்று வணிகேசர் தூதரிடம்
கணம்பெறுநற் றூதர்களே கடுகவோடித் தபதியரை
கணப்பொழுது முடியமுதல் கண்டழைத்து வாருமென்ன
கணப்பொழுதி னவர்நடந்து கண்டாரே மாந்தையரை

மாந்தைநகர்த் தபதியரை வந்ததூதர் பார்த்துரைப்பார்
போந்ததுநா மொருகருமம் புகலலுற்றோம் தபதியரே
சேந்தசையுஞ் சீரகத்தார் திறல்வணிகர் மாநாகர்
தாந்தேடி யுமையழைத்தார் தாளாது வாருமென்றார்

வாருமென்னத் தச்சரெல்லாம் வாச்சியுளி முளக்கோலுஞ்
சீருலவு மயநூலைச் சிறக்கவரை புத்தகமும்
பாரமாக வெடுத்தடுத்துப் பாரில்வரு தூதருடன்
வாரமுற்று மாநாகர் மனைவாசல் வந்தனரே

வந்துதபதி யரிருக்க மாநாகர்க் குரைத்தளவில்
வந்திடலா மென்னவர்கள் வந்துவணி கேசர்முன்பு
இந்தநாளில் வணிகேசே யெமையழைத்த பணிவிடையை
முந்தியுரை முயன்றிடுவோம் மென்றுமுன்முன் வணங்கினரே

வணங்கியவர் தனைப்பார்த்து மாநாக ரீதுரைப்பார்
இணங்கிவந்த தபதியரே யென்மகள்கண்ணகை மணங்காண்
நுணங்குநூலின் விதிப்படியே நூதனமண் டபமறைகள்
சுணங்குமுலை மணவறையும் சுவர்க்கமெனச் சமையுமென்றார்

சமையுமெனத் தபதியர்க்குத் தக்கதக்க பணிவிடைக்கு
அமையுநல்ல மரம்பலகைக் கானமரம் வேண்டுபொருள்
இமையொடுங்க முனங்கொடுக்க ஏற்றதபதிய ரெவரும்
சமையமுளக் கோலளந்து சந்தொதுக்கித் தொடங்கினரே

வேறு

சந்தனத்தூணிரைத்தே வட்டமிட்டுத்.தக்கோர்வகுத்த முகூர்த்தங்களொட்டச்
சிந்தைகொண்டுற்றதோர் போதிக்கைபோட்டுச்.சேரவயிடூரியக் காலேறநாட்டி
முந்தவேயுத்திரத் தெற்றியேறிட்டு. முத்தோடுபவளமும் பத்திமாறிட்டு
அந்தரமாகவே யிட்டபோதிக்கைமே.லாகாசவுத்திரம் போகோசமுய்த்து

ஆகாசவுத்திரம் பூட்டிமாறோட்டியே.யாகுமாறேவுசட்டங் ளிட்டொட்டி
வாகானமட்டங்கள் வெட்டிமேலிட்டு.வைத்துவித்தாரமா யொட்டாணிகொட்டிப்
பாகானவிந்திரவளையந் தனிற்கம்பிகள்.பாடாகநாடியே யோடாணிதைத்து
சேகாரடுத்திட்ட விட்டங்களொட்டி.தெய்வகம்மாளனிற் செய்கைசெய்தேற்றி

ஏறிட்டமிக்கது லாசாரசாலம்.எத்திடுஞ்சித்திரக் கம்பியேறிட்டே
வீறிட்டபொன்னின் தகட்டினால்மேய்ந்து.மேலாகவங்கங்க ளங்கங்களுட்டி
கூறிட்டநிலவாச லேரிட்டுநாட்டிக் கோமேதகத்தினா லாமாறுகூட்டி
நாறிட்டபூமாலை தோரணம்மணிகளால்.நாற்றியேகதவு பொன்னூட்டியேபோட்டு

போட்டக்கபாடத்தின் மூட்டாணியிட்டுப்.புருடராகம்பதும நிரைகோணமிட்டு
நாட்டுதூணூட்டிலே மாட்டிநன்மணிகளை.நகர்ப்படுத்தியே வசமத்திலிட்டு
முட்டியேயிந்திர பதியிந்துகதிருதையமோ.முற்றுதனமுற்றவட ராசனிடமிதுவோ
தீட்டுபுகளோர்புகழு மீட்டமுறுமிடமாய்ச்.சித்திரமதாகவொரு மண்டபமுடித்தார்

மண்டபந்தா னின்றிதுபோல் வாய்த்ததொரு முகூர்த்தமதில்க்
கண்டவர்கள் கொண்டாடக் கனகரத்தின நிரையிலிட்டு
அண்டர்புகள் சந்தனக்கா லாயிரமிட் டரியபந்தல்
பண்டைவல்ல தபதியர்கள் பணிபுரிந்து மறுகிலிட்டார்

இட்டாரே தோரணங்க ளிலங்கியதோர் தெருக்களெல்லாம்
செட்டிதெரு வணியணியாய்ச் சேரநல்ல கொடிபறக்க
மட்டிலாத பட்டுவகை வாகுபெற மணிகளினால்
இட்டாரே கம்மாளர் எங்குமினி யெங்குரைப்பேன்

எங்குநல்ல ரத்தினத்தா லிலைத்திரளுங் காய்த்திரளுங்
தெங்கின்குலை வாழைக்குலை சீரினல்ல கமுகின்குலை
துங்குமிகு பூவகையுஞ் சோடிசைந்த வேடிக்கையாய்
அங்கங்கெல்லா மணிகளினா லாய்ந்தழுத்தி வடிவுசெய்தே

வடிவுடனல் மாலைவகை மாவினிலை தோரணங்கள்
கொடிகவரி யிடையிடையே குடைவிசிறி விதானவகை
படிபடியா யிடமிடத்திற் பாங்குசெய்து தேங்கமுகு
புடைகரும்பு வாழைநிரைப் புட்பபந்த லார்தலொன்றே

ஆருமுத்துப் பந்தலுட னானதங்கப் பந்தலுமாம்
பாரப்பட்டுப் பந்தலுடன் பாற்பளிங்கும் பந்தலுமாம்
சாரும்வெள்ளிப் பந்தலுடன் தாரைவச்சி ரப்பந்தலும்
தாருறவொவ் வோர்விதமாத் தனமருவச் சமைத்தனரே

தனமருவு மிலைபழுக்காய் தானுதவப் பாவைகளும்
வனமருவு மலர்மாலை வகுத்தளிக்கும் பாவைகளும்
மனமருவ வருபவரை வந்தழைக்கும் பாவைகளும்
இனமினமா யெப்பொருளு மீய்ந்திடநற் பாவைசெய்தார்

பாவைகளைச் சூத்திரத்தாற் பண்பினுயி ருற்றதென
ஆவகையாய்ச் செய்துவைத்து அண்டருல கீதெனவே
மேவுதெய்வ வுலகமென்று விண்ணவருங் கண்மருள
பூவலயத் தபதியர்கள் புரிந்துசிறப் புறுத்தினரே

சிறப்புறுத்தி வாவிகளுந் தெளிவுறுநீ ரோடைகளும்
அறப்பெரிய பூங்காவு மானரத்தின மேடைகளும்
உறப்பெரிய புட்பசெடி யோடுகயம் வீதிமதில்
உறப்பெருநன் மணிகளினா லூர்புகழப் போற்றிவைத்தார்

போற்றுபொன்னி னாசனமும் புகளுமணி யாசனமு
ஏற்றவெள்ளி யாசனமு மிந்திரநீல வாசனமும்
சாற்றுதங்க வாசனமுஞ் சந்திரரவிக் காந்தமுடன்
தோற்றுசிங்க வாசனங்கள் சூழுமிடந் தோற்றுவித்தார்

சூழுதனந் தனதனெனத் துற்றவிறன் மாசாத்தர்
வாழ்வுதித்த மகனான மைந்தன்மணங் கண்ணகையைக்
ஊழ்முறையின் கைப்பிடித்துஊ உற்றிருக்கப் பெற்றதென
காள்மணியால் மஞ்சமுஞ்சிங் காசனமுந் தானமைத்தார்

தாருறுத்திப் பொன்முறுக்கி தங்கம்மணி தனிலுறுத்தி
வாரிறுக்கி மூன்றடுக்கும் வன்னப்பொன்னின் காலடுக்கும்
சார்புறுத்தும் பலமணியிற் றக்கதக்க சார்படுக்கும்
ஏருறுத்திக் கண்ணாடி யிடையிடைமேற் றங்கமிட்டார்

தங்கவிட்டுக் குமிழியிட்டுத் தங்கக்கம்பி யிட்டிளைத்து
வங்மிட்டுப் படியடுக்கி மாறில்சந்திர காந்தமிட்டுப்
பங்கமறத் தகடடுக்கிப் பன்னிரண்டு பட்டமிட்டு
தங்கள்சிற்ப நூலின்மணச் சாலைசெய்து முடித்தனரே

முடித்திரண்டு வாசலினும் முற்றுநல்ல ரத்தினத்தால்
படமருவும் பாவைகளும் பாவைகையிற் சாமரமும்
கொடியொடுநல் யாளிசிங்கங் கூடமண வாசலிலே
கொடியிடையாள் கண்ணகைக்குங் கோவலற்குஞ் செய்தனரே

செய்யிழையார் கண்ணகைக்குந் திருமகுணர் கோவலற்கும்
வையுடைய சுடர்கொளுவு மஞ்சனநீ ராஞ்சனத்தைக்
கையெடுத்து ஆலாத்திக் காட்டுமுறை யாட்டுதற்கும்
மெய்யுடைய பாவைகளும் விதம்விதமாய் நல்கினரே

நல்கியெங்க னாயகிக்கும் நாயகனாம் கோவலற்கும்
மல்குமந்தச் சடங்கியற்றி வதுவைசெய்யும் பந்தலிடம்
புல்லுமந்த வரசாணி போற்றுதங்கத் தாலமைத்து
சொல்லுமந்தக் கலியாணந் துலங்குமணக் கால்நிறுத்தி

மணமிகுந்த மலர்தொடுத்த மாலையொடு தோரணமு
இணையிணையாய் நிறைகுடமு மேற்றநவ தானியமும்
பண்மிகுந்த பலவிளக்கும் பட்டுடனல் லெப்பொருளும்
குணமிகுந்த தபதியரிற் குறிப்புடையோர் நிறுத்தினரே

நிறுத்துமுயிர் தாயாகு நேரிழையார் மணமுடிக்க
நிறுத்மோமா குண்டமுட னோ்ந்தபொருள் வேண்டும்வகை
நிறுத்துமந்த மண்டபத்தின் நின்றநடு மண்டபத்தின்
நிறுத்தினரே சூரியனோ நிலவுலகோ வென்றிடவே

நிலவுலகோ மாலுலகோ நின்றபிர மாவுலகோ
நிலவுபொன்னி னுலகமிதோ நீடுகதி ருலகமிதோ
நிலவுதனத் ததிபதியின் னீண்டவடக் குலகிதுவே
நிலவுலகி லிந்நகரம் நிதிபிறக்கும் பட்டணமோ

பட்டணமா முலகமெல்லாம் பார்க்கிலிதற் குச்சரியோ
பட்டளகும் பாக்கியமும் பலநலமும் பாவைபெறப்
பட்டசிறப் பித்தனையும் பார்க்கில்வெகு வாச்சரியம்
பட்துகாண் செந்திருவும் பாரிருக்கு மிடமிதுவோ

பாரிலவள் வீற்றிருக்கும் பாரிடம்வே றில்லையிந்தப்
பாரிலவள் வீற்றிருக்கப் பண்டையில்மா நாகரிந்தப்
பாரில்வெகு நற்றவத்தைப் பண்ணினனோ பார்க்கிலிந்தப்
பாரிலுயி ரீன்றவளும் பாலகியாய் வந்தருளால்

அருளடைய மாநாக ரவர்மனையி லவளிருந்தாள்
அருளடையுந் திருவிருத்த லதிசயமோ வாண்டவளின்
அருளடையத் திருடர்கள்ள ரானோர்கொலை பாதகர்கள்
அருளடையா விருண்மனதோ ரானவரு ளுள்ளவரும்

உள்ளநாளுந் தீங்குசெய்தா லுமையவளே யெனநினைந்து
உள்ளுருகிக் கள்ளமன துடையவரெம் மிடர்தீர
உள்ளுருகாய் தெள்ளமுதே யுத்தமியே யெனநினைந்து
உள்ளமுறக் கொள்ளநின்றும் உற்றஅன்பின் மலருதவி

உதகமது விழிசொரிய வுமையவளை மனந்நினைந்தால்
அதுசமய மெனையீன்றா ளவர்மனதி லுலவிடுகில்
மதியிலமர் மாயமென்னும் வல்லிருளும் பிணியிருளும்
அதிலகன்று ஒளிவீசு மாதவனைப் போலெறித்து

எறித்துலவு பவுத்திரமா யாவருநற் செய்கைமுற்றில்
மறிப்பிணைசேர் மணிக்கரத்தார் மலர்ப்பதத்தி லிருத்துவளே
குறுக்கிலிந்த மாநாகர் குலக்கொடியா யம்மைவந்த
சிறப்பிதெனப் புகழ்ந்தாரே சிறந்தபெரும் புலவர்களே

பெரும்புலவர் புகழுமிந்தப் பேரழகெல் லாந்திருத்தும்
பெரும்புலமைத் தபதியர்கள் பேசுமிந்த மணச்சாலை
பெருமபுலமைப் படிமுடித்துப் பேர்செறிமா நாகரிடம்
பெரும்புலமை யொடுபுகுந்து பின்வணக்கஞ் செய்துநின்று

நின்றமணச் சாலையுடன் நேர்ந்தபொரு ளத்தனையுந்
துன்றுவித்தோம் வணிகேசே சொற்பணிகள் வேறுமுண்டோ
என்றவுடன் மாநாகர் இலகுமணச் சாலையிலே
சென்றுலவி விழிபரப்பிச் சேரருளுஞ் சிரிப்புமுற்றார்

உற்றிடுநல் நாகரங்கே யுடனிதய மகிழ்ச்சியுற்றும்
உற்றிடுநற் றபதியரை யுடனழைத்து வீட்டிலுற்றும்
உற்றிடுநற் பவளவனம் உடனெடுத்தோ ரிடத்திலுற்றும்
உற்றிடுநல் லாடைபண முடனெடுத்து முற்றனரே

எடுத்தபல பலபொருளு மேற்றதப தியற்குதவி
அடுத்துமவர் மனங்களிக்க ஆகுமது மிகக்கொடுத்து
வடித்தசித்ர வல்லவரே மனங்களிக்க வாங்குமென்று
படிப்படிமென் மேலவர்க்குப் பரிந்தளித்து விடுத்தனரே

விடுத்வந்த மாநாகர் மிக்கபுகட் கோவலற்கும்
வடுப்பொருவு விழிமாது மகளான கண்ணகைக்கும்
அடுத்தவரி சைகளிற்கலி யாணநிரை வேற்றுதற்கு
விடுக்குதூதர் தனையளைத்து விரைவிலவர்க் கோதுவரே

ஓதுவரேதூதுவரே யொண்டொடிக் கண்ணகைச் சடங்கு
தீதகல நிரைவேற்றஞ் செய்வதிங்கு நீங்கள்சென்று
மாதலமெல் லாம்புகழும் வாணருக்கும் ராசருக்கும்
ஏதமில்லா தவரெவர்க்கு மின்றுரைப்பீ ரென்றனரே

என்றவுடன் தூதுவர்க ளேகிவாயு கதியெனவே
துன்றுசேரன் சோழனுறை தொல்பதிக்கும் பாண்டியனார்
என்றரசு செயும்பதிக்கு மேகியப்பர் னகர்களுக்கும்
சென்றுசென்று கண்ணகைக்குத் திருமணமென் றுரைத்தனரே

உரைத்தவர்க்கங் குற்றோர்க ளுபகாரமிக வளித்துத்
தரைத்தலத்திற் றாய்மனத்தைத் தானறிய நான்முறையில்
வரைப்பொருவு புயத்தாரே வருகுவோநாம் வணிகருக்குப்
பெருக்குவுரைத் திடுமெனவே பேசிவிடத் திரும்பினரே

திரும்பிவந்து மாநாகர் திருமுனையிற் றண்டமிட்டு
விரும்பியெந்தத் தெருத்தோறும் விளம்பினேனாம் மணமுகூர்த்த
மரும்புநகை மாதருட னாடவரு முகூர்த்தமதில்
வரும்பரிசா யுரைத்தார்காண் வணிகேசே யென்றனரே

என்றுரைக்க மாநாக ரினிதியற்றுஞ் சிறப்பிருக்க
அன்றுரைத்த மாசாத்த ரகவீதி யலங்கரித்தார்
சென்றாரே மாநிலத்திற் றேவரர சொடுவணிகர்
மன்றுளவர் மற்றுமுள்ள வாணர்முத லானவர்கள்

ஆனவர்க ளெல்லோரு மவரவருக் கிசைவரிசை
ஆனதுட னெழுந்துவழி யாங்கடவி மலைகடந்து
ஆனதுறை தான்கடந்து மாரவார வரிசையுடன்
ஆனபுகழ் மாசாத்த ரடவியிட முடுகினரே

முடுகினவர் மாசாத்தர் முன்கடை வீதியினில்வரக்
கடுகெனவே மாசாத்தர் கைகொடுத்தங் கெதிரில்வந்து
சடசடென வெடியொலியுந் தக்கபறை குழலொலியுந்
இடியொலிபோ லேயதிர யாவரையு மழைத்தனரே

அழைத்துமணச் சாலையிலே யவரவருக் கிசைந்தபல
விளக்கமுள்ள வாசனத்தில் விரைவுடனே யிருத்திமெல்ல
வழக்கமுற்ற வேவலரால் வாசனைகொள் சாந்துபன்னீர்
குழப்புநல்ல வாசனையின் கோலமலர் வெள்ளடைகாய்

வெள்ளடைகாய் முதலான வேண்டுவன கொண்டுவந்து
அள்ளியள்ளி யெல்லவர்க்கு மங்கமெங்குந் தானணிந்து
வெள்ளிரத்தினப் பொற்றட்டத்தில் மீதுவைத்துக் கொடுத்துநின்று
உள்ளமுரு கிடவார்த்தை யோதியோத விருந்தனரே

இருந்திடுமா சாத்தர்சொல்வா ரென்மகனாங் கோவலற்குங்
மருந்துமொழிக் கண்ணகைக்கு மணமுடிக்கு மணமுகூர்த்தம்
விரைந்துகூடுங் காலமுமாம் வேளையுமா மானதினால்
இருந்தசபைப் பெரியோரே இயம்பிடுவீ ரின்னுரையே

உரையுமென்ன பெரியோர்க ளுன்மகனை நீர்த்துறையில்
வரவழையு மென்றுரைக்க மசாத்தர் கோவலரை
விரைவழைத்து வரிசையுடன் மிக்கதோழர் தற்சூழப்
பெரியோருந் தற்சூழப் பெருவாவிக் கரையடைந்தார்

பெருவாவிக் கரையடைந்து பேரிமுதற் பறையொலிக்கப்
பெரியோர்நல் வாக்குடனே பேணுதோழ ரேவலரும்
நிரைநிரையாய் வேண்டுவன நிச்சியித்துப் பட்சமுடன்
திருவாவிக் கரையிறக்கிச் சிறந்தமுழுக் காட்டினரே

ஆட்டியீரந்தனைக் களைந்து மழகியதோர் மயிர்முடித்து
வாட்டமற்ற பட்டுவர்க்கம் வகைவகையே கொய்துடுத்திக்
காட்டுவன்னத் தாறுகட்டிக் கதிர்முறுக்கிக் கொய்தணைத்து
மீட்டுமொரு தங்கசாலம் விரைவிலிடை தனிலிறுக்கி

இடையிடையிற் பட்டமிட்டு மெளில்பொருவு தொங்கலிட்டுந்
தொடைவிளங்கு பொற்சரிகை தொங்கலொன்று தோளிலிட்டு
அடுக்கடுக்காய்ப் பொன்னிழைத்த வாரபட்ட மார்பிலிட்டு
சுடர்க்கொழுவு தலைப்பாவுஞ் சூரியனைப் போலணிந்து

சூரியகாந்தச் சட்டையிட்டு தூயரத்தினத் தெறிபூட்டி
காரியநற் பொன்னரைஞாண் கதிருடைமேற் பூட்டினரே
வீரியத்திற் கொருவனென்னும் வெற்றிபெறு கோவலரை
பாரிசத்துக் கிணையான பட்சத்தோழர் கொணர்ந்திருத்தி

கூடுமுத்து நிரைபதித்துக் கோலவன்னக் கல்லழுத்தி
நாடும்வன்னக் கணையாழி நல்விரலி லிட்டுமற்ற
சாடுசிறு விரலுக்கொரு தாரைவெட்டு மோதிரமுங்
கூடவெடுத் தணிந்துவிட்டார் கோவலற்குத் தோழர்களே

தோள்நிறைந்த கண்டசரஞ் சூழ்ந்தவாகு வலையமுடன்
காள்நிறத்தின் மரகதத்தின் கல்லழுத்து மாலையொன்றைச்
சூள்கழுத்திற் கண்டசரத் துணைக்குமொரு அணையாக
வாள்பளுத்த கோவலற்கு வாகுபெற வணிந்தனரே

வாகுபெற மரகதத்தின் மாலையிட்ட கடைசியிலே
கோவைவெள்ளைக் கல்லழுத்துங் குலமணிகள் பலகுயிற்றி
மேவுதங்கந் தனிலிழைத்த வெண்டரள மாலையொன்று
தாவுமந்தக் கோவலற்குச் சாத்திவிட்டார் மைத்துனரே

மத்தமெருக் கறுகணிந்தான் மலர்ப்பதத்தை மறவாத
சித்தமுறுங் கோவலற்குத் திருவுறைந்த பதக்கமொன்றை
மொய்த்தபொன்னின் வரைமேலே விரிகதிரோன் றெறித்ததுபோல்
உத்தமமாங் கோவலர்தன் னுரநிறையத் தரித்தனரே

தரித்துவந்தக் கோவலற்குத் தங்கமுன்கை வளையிரண்டை
திருத்தமுறப் பூட்டியணி சிறக்கவிடைப் பூண்டணிந்து
வரிக்குலவு நெற்றியின்மேல் வளைந்ததொரு சந்திரனன்போல்
தரிக்குபூதி நெற்றியின்மேற் றாவுபட்ட மணிந்தனரே

அணிமருவு கோவலனார் அளகு தனைக்காணவென்று
துணிவுபெறு மிருபுறத்திற் சூரியன் வந்திருந்தது போற்
கணிதமறு கதிர்பரப்புங் கனகமணிக் குண்டலத்தைப்
பணிவுபெற விருகாதிற் பணிந்து நின்றங் கணிந்தனரே

அணிந்துகாலிற் கழலுமிட்டா ரளகு நெற்றிப் பொட்டுமிட்டார்
அணிந்தபல வணிகளுட னரியசாந்து சந்தனமும்
அணிந்து நாவி நெய்முதலாமானமலர் யாவதுவும்
அணிந்து கணபதி கழலுக் கான பூசை முதன் முடித்தார்.

பூசைசெய்ய முகிதொலிப்ப போர்பறையு மத்தளமும்
வாசமுற்ற முரசுகொம்பும் மல்லரியுஞ் சல்லரியும்
பேசுகின்ற கொக்கரையும் பிடியுடுக்குந் துடிமுரசும்
பூசலுற்ற கடல்போலப் பொற்பறைகள் முழங்கினதே

முழங்குதிரு வாழ்த்தொலியு முரசொலியும் பூசுரர்கள்
தழங்குகின்ற மறையொலியுந் தமிழ்வாணர் பாட்டொலியுங்
கழங்குவிளை யாட்டொலியுங் கணிகையர் நாடகவொலியுங்
விளங்குமிடங் கோவலனார் வீரதண்டி யேறினரே

தண்டேறி வீதிவரத் தார்வணிகர் குலமுழுதும்
உண்டான நாளிதென்று உளமகிழ்ந்து சிறந்தனரே
கண்டாரே காரிகைமார் கண்மருளக் கோவலரை
எண்டான மன்மதனா ரிவர்தானென் றேங்கினரே

ஏங்கிநின்று பெண்களெல்லா மிந்த மணவாளரிவர்
பாங்கில்வந்து காமமென்னும் பசிகிளப்பி நசையளித்தார்
ஓங்குமெங்க ளிருதனமா முற்றசெப்பின் முடிதிறந்து
தேம்விரக வெள்ளமென்றுந் திருவமிர்தந் தாராரோ

ஆரமுறு மகங்குளிரு மனுபோக மிதுவாகும்
வாரமுறு மெம்முடனே வாய்திறந்து பறைந்தாலுந்
தீருமெடி தீருமெடி சிந்தைமையல் தீருமெடி
வாருமெடி யருகுறுவோ மயிலனையீ ரெனவளைந்தார்

வளைந்தவர் தன்னருகுசென்று வாலையுறு பெண்களெல்லாம்
இளைந்துமனப் பொலிவுடனே யேங்கிமதன் கணைதூவ
குளிர்ந்தமதி முகத்தார்கள் கோல்வளைகள் தான்களரப்
பொளிந்துபன்னீர் விசிறிகொண்டு பூங்கரத்தால் வீசினரே

வீசுகின்ற பன்னீரை விரையுநல்ல சாந்துகளைப்
பூசுநல்ல கைத்தூரிப் புழுகுகளைக் களபமதை
நேசமுட னெறிபவர்போல் நேர்ந்தவந்தக் கோவலனார்
கூசுபக்கல் சேர்வதற்காய் கொண்டுகொண்டு சென்றனரே

சென்றவந்தக் கோவலனார் தேகமுறு மழகதெனும்
மன்றலுறு வலையதிலே வந்துபட்ட பெண்கலெல்லாந்
துன்றுதனம் விருவிருக்கத் தூயதலை கிறுகிறுக்கத்
துன்றிவரு விரகவெள்ளத் துள்ளித்துள்ளிக் கன்றினதே

கன்றிமேனி கசிவுதரக் காலடிகள் தடுமாற
வென்றிமதன் கணைதூவ விழியிரண்டு மொளிபுரள
அன்றரிவை மார்கள்துய ரறைந்திடக் கூடாதபடி
சென்றிளநற் கோவலனார் தெருவீதி வரவருகே

வேறு சக்ரசாரம்

வரவருவிருதுக ணிரையொலியொருபால்.வருமறையவரறை மறையொலியொருபால்
அரசர்கள்விருதிட வருமிடமொமொருபால்.அவர்விருதிடைகொடிகுடை படையொருபால்
கரிமதவொலியுட னிரைவனவொருபால்.கலணைகொள்புரவிக ளிரைவனவொருபால்
பரிவுறுபட்டிடு பந்தர்களொருபால்.பதுமைகள்வித வரிசைகளொருபால்

வரிசைகளருகிரு புறமுறையொருசர்.வாதுவர்சேவகர் வீரர்களொருசார்
திருமிகுமரிவை யரநடையொருசார்.சீரிளமைந்தர்கள் திருநடையொருசார்
நரைமுதிர்முதியவர் தடநடையொருசார்.நாவலபாவல ரோர்நடையொருசார்
விரைமலர்புதிதிடு தொடுபவரொருசார்.வீசினவாசனை யோசனைசார்பே

யோசனைதூர மதாகவும்வருவார்.ஊடிடமுற்றெதி ரோடியும்வருவார்
பேசிடமுன்னெதிர் பின்னெதிர்வருவார்.பேரிளமைந்தர்கள் சீரெதிர்வருவார்
பாசிளமங்கையர் வலமிடம்வருவார்.பற்பலகாளைய ரற்புடன்வருவார்
ஆசையினாலவர் தூசிடைநெகிழ்வார்.ராடலினாசையி னாடிடவருவார்

நாடினரோரொரு பக்கலிலாவார்.நன்மதியோரொரு பக்கலிலாவார்
ஊடினரோரொரு பக்கலிலாவார்.ருழமகிழ்வாரொரு பக்கலிலாவார்
சேடியரோரொரு பக்கலிலாவார்.திறலவரோரொரு பக்கலிலாவார்
கோடியரோரொரு பக்கலிலாவார்.குறள்வெதிர்செவிடொரு பக்கலுமாமே

பக்கலிலொக்கவர் திக்கிடுநடனம்.பார்புகள்கோவலர் வீதியில்நடனம்
தக்கிடகீர்தகிட தரிகுகுநடனம்..தாழொலியாழொலி மேழொலிநடனம்
கைக்கணைபதுமைகள் கணிகையர்நடனம்.காணிடவாடவ ரோடிடுநடனம்
திக்குகளிற்பலர் சேரிடுநடனம்.தீரர்கைவாளயில் சேரிடுநடமே

தீரர்சிலம்படி யோடெழுசங்கஞ்.சேவகர்சூரல் பிடித்தெழுசங்கந்
தீரர்கள்வாசிக ளுரெழுசங்கந் தேர்படியூடிட மோடெழுசங்கந்
தோரணர்தோலொடு சூழ்ந்தெழுசங்கந்.துரிதமொடருகுறு பவரெழுசங்கஞ்
சாரிகளிற்பலர் சாரெழுசங்கஞ்.சார்ந்தவராய்ந்தெழு சங்கமுமாமே

சங்கமொடுற்றிடு மறையவர்பலரே சயந்தனமுற்றிடு மரசர்கள்பலரே
தங்குதனத்துள வணிகர்கள்பலரே.சகசுதராகிய மேழியர்பலரே
துங்கமதுற்றிடு வீரர்கள்பலரே.தூதுவர்வாதுவர் போதகர்பலரே
இங்கிவரல்லது வருபவர்பலரே.யிடமிடமில்லென வருகுனர்பலரே

பல்குடைசடையொடு வருவனநிரையே.பலர்கொடிமுடியொடு வருவனநிரையே
பலர்சிரவெண்டொடு வருவனநிரையே.பலருறுமாலொடு வருவனநிரையே
பலர்குடுமிகளொடு வருவனநிரையே.பலரிடுதிரையொடு வருவனநிரையே
பலரெதிர்பார்வையில் வருவனநிரையே.பலரடிவிழிகொள வருவனநிரையே

நிரைவிழியொளி யிளமடவியர்நாட.நிரையிளவழகுள புருடரும்பாட
நிரைவருநாயகர் மருளொருநாட. நிரைவருநாயகி யருளொடுபாட
நிரைவருவேசியர் பொருவிழிநாட.நிரைவருகாமுக ரெதிர்விழிபோட
நிரைநிரைவழிவழி பலர்பலர்கூட .நிரைநிரைதுன்பின்பமு நாடினவே

நாடிடுகணிகைய ராடிடுதமரம்.நாடினரோடினர் வாடினர்தமரம்
கோடியர்பாடலி னாடகதமரம்.கூறிடுபந்தய மேறினர்தமரம்
கோடொலியாழொலி கூடிடுதமரம்.கூசினர்பேசின ராய்வுறுதமரம்
சாடினர்புன்னகை யாடினர்தமரம். .தத்திடுதிரைகடற மரமதெனவே

தமரொடுதமர்களு மோரிடமாமே.தக்கவர்தக்கவ ரோரிடமாமே
சமமுறுகாளைய ரோரிடமாமே.தகவுறுதோழர்க ளோரிடமாமே
நமநமறையவ ரோரிடமாமே.நரபதிபொருநரு மோரிடமாமே
அமைபவரவரவ ரோரிடமாமே. யமரிடிபடுநட ரோரிடமாமே

இடமுறுமடவியி லமரொலியதிகம். இறையவர்தேரொலி தாரொலியதிகம்
சடசடவெனவிடு வெடியொலியதிகஞ்.சங்கொலிகொம்கொலி தங்கொலியதிகம்
மடமடெனப்படு தவிலொலியதிகம்.மண்ணிடுமத்தள மொத்தொலியதிகம்
திடுதிடெனப்படு முரொசொலியதிகந்.தெருவுறுசேனைக ளொலியதிகமுமே

வேறு

தெருவில்வருகோவலர்க் கருகுவருதொழிலுளார் திகுதகுத்தகுத்திமி செகினதாதாமென
வொருவர்கரமொருவர்சிர மொருவருரமுழைய.வொத்துடன்தித்தி யாழ்மத்தளந்தாளம்
வரிபடகதவினாத சுரமோடுதம்புரு.மடமடெனுமடிதடியின் வரிசைசரிபொருவ
விருதாடுபலராடு சிரமாடநடராக.விசையோடுதிசையோடு நசையாடுமிசையே

இசையோடுநடராக விசையாடல்பாடலு.மெழிலாரணங்கார் கணங்கூடலாடலுந்
திசைசேரநசைநயூர வருவார்களாடலுந்.தீவெட்டிகைக்கொட்டி யிட்டார்களாடலுந்
வசையிற்களாஞ்சி படிமஞ்சிகையாடலும். வடிவானபடமாடை கொடிவீதியாடலும்
இசையுற்றமாசாத்தர் மகனானகோவலன்.எதிராடுதண்டிகையி னாடலும்பொரவே

பொருவார்கண்மடமாத ரிருகாதினமுதே.புகுமாறுநடராக விசையோடுபாட
அருகாதுவணிகேசர் சிரமானகோவலன்.அணியார்கள்பணிமாற வதிலேவும்விழியே
வருவார்களருகாக மதனம்புமருவ.மருளாகியருளாகி யுருளாகிவிழியும்
புருசாபவிரகாசை பொருவாருமருகே.புகளாகவருவார்கண் மணமாலைக்கழகாய்

மணமாலைபுனைவாகு வழகானவணிகேசர்.மண்ணுற்றகண்ணகையை மாமணஞ்செய்ய
இணையாகமுன்செய்த தவவேடமிதுவோ.வெவராலுமிதுகாண முடியாதுபெண்காள்
குணமானவணிகேச ரிவர்காமனலவோ.குணமானவடிவோடு மறுகேறிவருவார்
அணையானவிழவான திருநாளுமழகே.யானாலுமெம்மாசை போனாலுமிசையே

வேறு

இசைபொருந்துங் வாத்தியங்க ளிடிமுழக்கம் போன்முழங்க
இசைபொருந்துங் கோவலனா ரத்னதங்கத் தண்டிகையில்
இசைபொருந்தும் யாவர்களு மிடம்வலம்பின் முன்வரவே
இசைபொருந்துந் தெருக்களெல்லா மேற்றினரே நிறைகுடங்கள்

நிறைகுடங்க ளிருபாலும் நேர்பவர்பூம் பந்தலிட்டு
நிறையநவ தானியமும் நெய்விளக்கு மாலாத்தும்
நிறையுநல்ல தீபமுடன் நேசமுடனிடு மிடங்கள்
நிறையினின்றும் வரிசைபெற்றுந் நிகர்வணிகர் வருவாரே

வருவாரே கோவலனார் வாறபவ னியைமறுகில்
வருவாரிற் பேதைமுதல் வருமிளம் பெண்ணீறாக
வருமழகிற் பெண்களெல்லாம் மதிமயங்கித் தலைகிறுகி
வருமளவி லுற்றறிவு வருமிளம்பெண் ணோதுவளே

பெண்ணழகிற் சிறந்தவரே பேய்பிடித்திங் காடுகிறீர்
வண்ணமுற்ற கோவலர்தன் வடிவழகி லெல்லீரும்
வண்ணமுற்ற கணிகையர்போல் மனவாதைப் படலாமோ
திண்ணமுற்ற வுங்களுக்குச் செப்பிடுவேன் கேட்டிடுவீர்

கேட்டநூலின் முறைதெரியிற் கிலேசமுற்று நாங்களெல்லா
வாட்டமற்ற கோவலர்மேல் மயல்புரிதல் பாவமது
கூட்டுகலை யுரைப்பதல்லோ கொம்பனையீர் நாங்களிது
கேட்டறியோ மோவுரைக்கிற் கெடுதலல்லோ வாள்மயிலே

வாள்மயிலி னனையீரே வாகாகச் சொல்லுகிறேன்
ஆள்பரமன் கயிலைதன்னி லம்மைதனக் குரைத்ததொரு
நான்வேத நான்கினங்கை நடபடியைக் கூறுகிறேன்
தாள்வீதென் றுரையாது தங்கமின்னே கேட்டிடுவீர்

கேட்டிருப்பீர் மங்கையரும் கெருவமுள்ள வாடவரும்
கூட்டமுற மன்மதனார் கோள்செலுத்திப் பளிமுடிக்கில்
தீட்டுமந்த வாடவர்கள் செயிழைமேன் மயலானால்
கூட்டுமந்தப் பெண்களுக்குக் கூடுமிந்தப் புத்திசொல்லி

புத்தியினா லவள்தனக்குப் பொலிவான மயல்கிளப்பி
எத்திளைப்பா லிருபேரு மிசைந்துமன மொருவழியால்
வித்தகநற் கலவிசெய்து விரும்புமின்பம் தனைப்பெறுகில்
பத்திவரு பாதகங்கள் பாங்காகு மிருவருக்கும்

இருவருக்கும் வரும்பாவ மீசனருண் மந்திரத்தாற்
பொருமருவு பூசைதன்னாற் பொலிவுபெறும் யாகமதால்
அரிமுதலாந் தேவர்களா லருளளிக்குந் தானமதால்
வெருவிவிடும் தோசமது வேறுமொன்று கூறுவனே

கூறுமந்தக் காளையர்கள் கொடியிடையார் பிரிசமற்றால்
வேறுமுள்ள மந்திரத்தால் மிக்கவாடை தயிலமுதற்
றேறுமுள்ள மந்திரத்தாற் தீட்டுவா லேபனத்தாற்
றாறுமாறு செய்தணைந்தாற் சாருவதே கடுநரகம்

கடுநரகம் வருவதன்றிக் கணவனந்த மங்கைதன்னை
வடுவுடனே பிறர்வசத்தில் மாறுகொண்டு தள்ளிவிட்டால்
நடுவுரையி லவளையிவ ணங்கையென்று காத்துமிக்க
கெடுவுரையில் லாமல்வைத்தல் கிருபைமற முறையுமதே

முறையிகந்து தள்ளிவிட்டால் முன்னமிவன் கற்பழித்த
குறைநரகா மின்னமொரு குடிகெடுத்த நரகுமுண்டே
உறையுமிந்த நரககற்ற வொருநாளு முடியாது
பிறையணிந்த வேணியரும் பேணாது தள்ளுவரே

தள்ளிடுமே வங்கிஷமுந் தருமமொன்று மணுகாதே
கள்ளினுடன் பொய்கொலைகள் காமமஞ்சி னொன்றிதுவே
துள்ளுகல்வி புத்திவித்தை தொடராம லகன்றிடுமே
நள்ளுமுயிர் தமக்குமொரு நாசமது சேர்ந்திடுமே

சேர்ந்தவரு மிகளுவரே சென்றிடுமே கீர்த்தியெல்லாம்
மாந்தளிர்போன் மனையாளும் மைந்தர்களுஞ் சீறுவரே
சாந்துமந்திர மருந்ததனாற் றையலர்க்குங் கொலையுறுமே
வாய்ந்தகொலை பாதகமு மாந்தரிடஞ் சேர்ந்திடுமே

சேருமந்தத் தீமைவெல்லச் சிவனருளு மணுகாதே
ஆருமெட்டு நூறுகத்துக் கரியநர கழுந்துவரே
வாரணைந்த மங்கையரு மருந்துமந்த்ர மகிழ்நற்கிட்டாற்
சாருமந்தத் தீவினைக டப்பாதென் றுரைத்தனரே

தப்பரிய குடிமுறையிற் சார்ந்தபெண்க ளாடவருக்
கிப்படியே வருவதெடி யிவர்கள்மண மகப்படமுன்
கைப்படவே செய்தவரைக் கலியாணமாய் முடித்தால்
செப்பிடுமிற் றீவினைகள் சேராது செய்யிழையீர்

செய்யிழையீ ராடவரைச் சேர்ந்தபெண்கள் கற்புடனே
மெய்வழு வில்லாதபடி விரும்பிநடந்தே முடித்தால்
ஐயமில்லாக் கற்புடைய வாயிழைமார் தாங்களையே
வையகமு மதிக்கநல்ல வாழ்வுவந்து பொருந்திடுமே

வாள்பொருந்துங் கண்மடவாள் மங்கிலியந் தரித்தவுடன்
ஊள்பொருந்துந் தெய்வமென்ன வுடனணைந்த கணவனையே
நாளுமய ராதுமலர் நல்லதீர்த்தங் கொண்டுசென்று
தாளிணையிற் பூசைசெய்யத் தான்மறைகள் மொழிந்ததுவே

மொழிக ளவனுரைத்திடுகில் முன்னமது மந்திரம்போல்
தழுவியது கடவாமற் றையலர்கள் டான்மகிழ்ந்து
எழுமையுமின் புறப்பிரிந்துஊ இணையடியைத் தொழுவாரேல்
பழுதகன்று கணவனுடன் பார்புகழும் பதம்பெறுவார்

பெறுமனையா டனைக்கணவன் பிழைகேட்டி னடித்திடுகில்
உறுமனையிற் பஞ்சணையி லுளமகிழக் கலவிசெய்து
இறுகவிரு முலைபிடித்து மின்பமார்பத் தோடணைத்து
துறுமல்கொள்ளச் சினமகன்று தோகையின்பு புரிவாரே

புரிவிரும்பு நாயகனார் பொற்கொடிவே றொருத்தியுடன்
சரிபுரிந்தங் கணைவளவிற் றான்பூண்ட பணிகளைத்தான்
அருமையுட னவட்களிக்க வாரமொன்று குறைந்திடுகில்
தருவனென்று கொடுத்திடுகிற் றையலர் கற்பழியாதே

அளிபுரியு கணவனிரா வனந்தலிற்பின் பவள்துயின்று
களிவாக வெழும்பமுன்னே காலைதனி லவளெழும்பி
தெளிவான மனையகத்தி சேர்ந்தசெடித் தூசகற்றி
வளியான கோமயநீர் வார்த்திடங்கள் சுத்திசெய்தே

செய்துசமைத் திடுபாண்டஞ் சீர்விளக்கி நீராட்டி
சையமான வெண்கலங்கள் சாம்பரிட்டுப் புளிப்பூசி
வையுவெண்ணை நகைவிளக்கி வான்புனலிட் டலம்பிவைத்து
துய்யசுத்தி நீறிணிந்து சூரியற்குப் பூசைசெய்து

செய்தலின்முற் றோய்த்துலர்ந்த திருத்தூசு தனையுடுத்து
மெய்யணிந்த பணிகளெல்லாம் விதம்பெறவே திருத்தியிட்டுக்
கையதனி னீருடனே கடிமலரோ டினிதுவந்து
மையலுறு நித்திரையில் மகிழ்நரைவந் தெழுப்புவரே

எழும்பியந்த நீர்மலரை யிணையடியிட் டேதொழுது
தழப்பிலாத நாயகற்குத் தகக்வெண்ணீ றுடன்கொடுத்து
விழப்பமுள்ள பணிவிடைகள் விதிமுறையிற் செய்தமைத்தால்
குழப்பமில்லா மயலார்க்குக் குறித்தகற்புப் பலித்திடுமே

பலித்திடுமக் கணவர்பிற பாரினிடம் படர்வாரேல்
சலித்துமந்த மடவாருந் தனதுபணி தானகற்றி
கெலித்துமேனி தூசடையக் கிட்டவேணு மகுணரென்று
கலித்தமுகச் சிரிப்புமற்று காற்பளல்லோ கற்புடையாள்

புகழ்சேர்ந்த மகிழ்நரங்காய்ப் புனிதமனை யணுகிடுகில்
இடைசேர்ந்த தண்பாலு மிசைந்தவெல்லச் சருக்கரையும்
நடைசேர்ந்து கரைத்துவிட்டே நசையினொடு தோற்றுவரே
வடல்சேர்ந்த மகுணருக்கு வழியிழைப்பு மாற்றுவரே

மாற்றமில்லாத் தந்தையினா மற்றுமீன்ற தாயாரினும்
போற்றுகின்ற கடவுளினும் பொற்புமிகு குரவரினும்
சாற்றுகின்ற மகுணரவர் தலையான தெய்வமென்று
யேற்றியேற்றி தொழுதிடுகி லென்றும்வினை வாராதே

வாரமுள்ள கோயிலுக்கும் மற்றுமுள்ள விழாச்சவைகும்
தீரமுள்ள மணச்சபைக்குஞ் சேர்ந்தசவை மற்றதுக்கும்
ஊரமுள்ள கணவர்சொன்ன வுத்தரவிற் போவதன்றிச்
சாரிலது பழியாமே தையல்கற்பு மழிந்திடுமே

அளியாத மாதவந்தான் மானவிரதம் புரியில்
வளியான கணவர்சொல்லும் வாக்கதன்றி யதுபுரியில்
பளியாக முடிந்திடுமே பாணரகுஞ் சேர்ந்திடுமே
தெளிவான கற்புடைய செய்யிழையார் செய்யாரே

செய்யுமந்த வாயிழையார் தெளிந்தசில வாடவரை
வையமதின் முகம்பார்த்து வார்த்தைசொல்ல முறையாமே
உய்யுமந்த நாயகனா ரொண்டொடியைக் கூடிடுகில்
மைவிழிக்கோ ரமுதமென்று மாந்திமய நீர்ந்திடுமே

தீருமந்த நாயகன்கை சேயிழைமேற் சேரமுன்னே
காரிகையாண் மையலென்று கனவிலெண்ணக் கூடாதே
சாருமாடு கோழிபல்லி சாற்றுமாடு வண்டுமுதற்
சேருஞ்செய்கை சேயிழையார் திரும்பிமணம் விரும்பாரே

விருப்பமுறு மகுணருக்கு விட்டழியு மாயுளென்று
உருப்பணிய நாயகன்பே ரொருநாளு முரையாரே
உரைக்குமந்த நாயகனை யூரவர்கள் வசையுரைத்தால்
நெருப்புநெருப் பாய்மனது நினைவுதொறு மழித்திடுமே

அளிசோறு நாயகனுண் ணாமல்வேறோர்க் களியாளே
அளிசோறு கணவனுண்ணா தருங்கோப முறுவாரேல்
அளியோடு தழுவியுண்பித் தவருடைய தமர்களுக்கும்
அளியோடு செயல்புரிந்து மாதவராய் நடப்பாரே

ஆரமணிந் திடுமவளுக் காசௌசம் வந்துதென்றால்
தூரநின்று நாயகன்முன் றோன்றாமற் போயொளித்து
சேரவொரு கதையுரையாள் செவிதனக்குக் கேளாமற்
பாரமுகங் காட்டாளே பத்தினிகற் பழியுமென்றே

பத்தினியார் சூதகமாய்ப் பரித்துநாலு நாளகன்றால்
ஒத்தபுனல் தனில்முழுகி யுடனொருவர் காணாமல்
மத்தமுறு நாயகன்றன் மதிமுகத்தைப் பார்ப்பாளே
அத்தவன்வே றிடமகன்றால் லருக்கனைமுன் னோக்குவளே

அருக்கனையு மகுணனையு மகன்றுபிறர் முகம்பார்த்தால்
கருப்பமந்த மாதமதிற் காரிகையயார் வயிற்றுதித்தால்
பெருக்கவெதிர் விழித்தவர்போற் பிள்ளைவந்து பிறந்திடுமே
அருப்புமந்த மைந்தரினா லவட்குவசை யணைந்திடுமே

அணைந்திடுமப் பெண்ணிவளே யன்பரின்மே லின்பமதாய்
பிணைந்திடுகிற் கற்பதெனும் பெரியபொருள் விளைந்திடுமே
துணைத்தனஞ்சேர் மடவார்க்குச் சூழ்ந்தகற்போர் தெய்வமல்லோ
சணத்தினவ னுயிர்விடுகிற் தானுமிறந் திடலறனே

தானிறந்து மகுணனுடன் சாரவொரு கட்டையிலே
மானெரிந்தாற் றேவரெல்லாம் வந்துவந்து வணங்குவரே
ஆனகற்பின் மடமானோ ரம்புவியின் மீதிருந்து
சோனைமுகில் தனைப்பார்த்துச் சொரியுமெனச் சொரிந்திடுமே

சொரிகருணை யீசுரனார் தோகைசொற்கு மடங்குவரே
வரிவிழியா ளுமையாளும் வந்தெதிர் கொண்டாடுவளே
எரியுமென்ன நகரமெல்லா மெரிந்துவெந்து பொடியாமே
தருவதென்னப் பலபொருளுந் தையல்சொல்லில் வளர்ந்திடுமே

வளர்ந்து வளமிகுந்திடுமே வங்கிஷமும் வளர்ந்திடுமே
இளங்கமுகு போலமைந் ரெவர்களையு மீனுவளே
களங்கமுற்று நாயகன்செய் கடுவினையும் கட்டறுமே
விளங்கமூன்று தலைமுறையும் விரும்பிடு மோட்ஷமுமுறுமே

மோஷ்சமென்னுந் தருநிழற்கீண் முழுமணிச்சிங் காசனத்தில்
காட்சிபெற மகுணரொடு கருணைபுரிந் திருப்பர்களே
தாட்சியில்லா தரமகளீர் சாமரம் நீராஞ்சனமும்
மாட்சியின்வெள் ளிலைபழுக்காய் வரும்பரிசும் புரிவர்களே

புரியவரித் தேகமெல்லாம் பொன்னொளியாய் மின்னிடவே
அருமை யின்பமகலாது அளியாத காயமொடு
பெரியதொரு கற்பகமு பேசரிய வாவதுவும்
சரியதுறு சூடாமணி சங்கநிதி பதுமநிதி

நிதிமணிகள் பட்டுவர்க்க நீண்டபுட்ப மாலைவற்கம்
அதிகசாந்து சந்தனங்க ளரும்புனுகும் பன்னீரும்
புதியபால்நெய் தேன்தயிரும் பொன்னடிசில் நற்கனிகள்
அதிவகையுண் டிடவுடுக்க அரியபல சுகமுடைத்தே

சுகமுனிவர் கருடர்சித்தர் தொண்டர்பல கொண்டாட
மகிமையுட னெழுந்திருப்பாள் மாகமுறு தேவுலகில்
அகமகிழுந் தேவர்கட்கு மவளுமொரு தாயாமே
அகமகிழ்வா யாவரும்வந் தடிவணங்குந் தாயுமவள்

தாயாமே யெப்பொருட்குஞ் சத்தியென்ன முத்துவளே
காயாம்பூ மேனியனார் கற்பமுநூ றாளுவளே
ஆயிரமா யிரம்புரவி யருமகப்பே றடைவாளே
வாயான புவியிலவள் வருந்தியொரு அடிக்கொருக்கால்

அடிமிதித்த மண்ணிலொன்றை ஆருந்தங்கள் நாவிலிட்டால்
படியடுத்த கயரோகம் பாதகஞ்சேர் குட்டமுதற்
கடிதடுத்த பிணிகளெல்லாங் கட்டளிந்தும் விட்டகலும்
கொடியகொலை பாதகமுங் குடியழிந்து போய்விடுமே

போய்விடுமே கற்புடைய பொற்கொடிதன் பெருமைகளை
ஆயிரநா ளுரைத்தாலு மனந்தனுக்கு முடியாதே
பாயிரஞ்சேர் மறைகளெல்லாம் பலமுறையுந் தொழத்தகுமே
நாயகிதன் மகத்துவத்தை நாமெப்படி மொழிவதினி

மொளியகன்று கணவனுக்கு மோசமுற்ற வேசியரை
பளியவள்தன் முகம்முளித்த பாதகங்க ணீங்காதே
வழியெதிர்செல் கணவர்சொன்ன வார்த்தைமறுத் துரைத்தவளே
புழுவாயிற் சொரிந்திடவும் புலியாகிப் பிறப்பாளே

புலியாகப் பிறந்தவளும் புன்னறிவு மின்னலுமாய்
சலிவாகப் பசியுடனே தளர்ந்துவனம் திரிந்தலைந்து
கலிவாகு முடம்புவற்றிக் காலன்வலை தனிற்புரண்டு
பரநாளு நரகடைந்து பல்வினையாற் றளர்வாளே

தளர்வேசி நாயகனைத் தானடித்த கள்ளியவள்
களுதையென்ன வேபிறந்து கதறியழுக்கே சுமந்து
முழுதுலகில் கெட்லணங்கை முதுகில்வைத்துச் சுமந்தலுத்துப்
பழுதுபட்டு முடிந்தளவிற் பாணராகிற் புகுவாளே

புகுந்துமந்த நாயகனைப் பொல்லானென் றேயிகழ்ந்து
மிகுந்துமொரு ஆடவன்பான் மேவியணைந் திட்டவள்தான்
பகுந்துமந்தப் பெண்ணாயாய்ப் படியினடி யுடன்பிறந்து
தகுநத்வின்பப் புணர்ச்சியிலே தானலைந்து சடம்புழுத்து

புழுத்தூனு மில்லாமற் புழுக்கம்வெய்யில் மழைபனியில்
முழுதுமலைந்தே முடிவில் மூர்க்கஞமன் றூதர்வந்து
கழுத்திற்பாசமிட்டிழுத்து கட்டைமுள்ளிற் போட்டிழுத்து
தழற்புலிசெந் தூணோடே தழுவவிட்டுக் கட்டுவரே

கட்டுடன்பல் லுகங்கிடந்து கடிரவுர நரகழுந்தித்
கெட்டளிவள் நாயகன்மேற் கிருபையில்லா துண்டவள்தான்
மட்டளிந்து பேயாகி வனந்திரிந்து பசிநலிவால்
கெட்டபிணந் தின்றலைந்து கீழிருக்க நிழலுமற்று

நிழல்பொருந்து நீருமின்றி நெடுநாளா யுலைந்தலைந்து
கழல்பொருந்துஞ் சண்டனுடை கடுந்தூதர் கையிற்பட்டு
மளமளெனக் கல்லுமுள்ளில் மாளவவர் போட்டிழுத்துத்
தழணரகிற் றள்ளிவிடச் சாந்துதுய ருறுவாளே

உறுகணவ னுக்குறுபொய் யுரைப்பதொன் றுண்டானாலும்
கறுவுமணப் பெண்ணவள்தான் கலக்குருவி யாய்ப்பிறந்து
வறுமையுற்றுப் பளிபிடித்து வாதையுற்றும் பேதமையாய்
மறலிகையிற் பட்டவுடன் வந்நரகாய் மாளுவளே

ஆயுநல்ல நாயகற்கு அரும்பளிசேர் கோளுரைத்தால்
காய்கரிய காகமதாய்க் கானகத்திலே பிறந்து
ஓய்வகன்ற பசியுடனே வுலகிலெங்கு முலைந்தலுத்து
மாய்வுவரு போதுங்கொடு வண்ணரகும் புகுந்திடுமே

புகுதிமிகு நாயகன்றான் புத்திசொலக் கடந்தவன்தான்
தகுதியற்று மெருமையதாய்த் தாரணியிலே பிறந்து
கதுவுமன வெப்பமென்னுங் கடியபிணி யகலாமல்
மிகுதியற்று முடலிறந்தும் வெய்யநர கழுந்துவளே

அழுந்தவந்த நாயகன்மே லரியகோப முற்றவள்தான்
கொழுந்துவிட்ட காட்டகத்திற் கொடியபெரும் பாம்பாகிக்
கழிந்துபசி யுடலௌவே கண்ணிரண்டுந் தெரியாமல்
விழுந்துவெகு நாளுலைந்தும் மிகுநரகிற் புகுவாளே

வாளுமந்த நாயகன்மேல் வசையெடுத்துப் பிறர்க்குரைத்தால்
தாளுமந்த நரியாகித் தான்பிறந்து கானகத்தின்
மூளநின்று தான்குழறி முற்றுமுடல் வற்றிவந்து
நாளுலர்ந்து கொடுநரகி னசைபுரியப் புகுவாளே

நசைபுரிந்து பிறருடனே நடனமிட்டுச் சிரித்தவள்தான்
அசைவுபெறு குரங்காகி யருங்கானிற் றிரிகுவளே
இசையகலப் பிறருடனே ஏச்சின்மிகும் பெண்ணவள்தான்
பசையமிகுந் தவளையதாய்ப் பாரகத்திற் பிறப்பதுவே

பிறர்மனையி னாள்தோறும் பெருக்குவுண்டி யுண்டிடுவாள்
கறடியதாய்ப் பிறந்தலைந்து கட்டழிந்து திரிகுவளே
தறையில்வய திளையவரைத் தழுவியணைந்திட்ட பெண்ணாள்
அறையுரல்போ லடிபொருந்து மலியனாகிப் பிறப்பாளே

பிறப்பரிய கற்பதெனும் பெரியதெய்வந் தனைமறந்தால்
சிறைப்படுத்தும் விலங்கதன்றிச் சேர்விலங்கு வேறிலையே
உறப்பொருந்தும் வாழ்வதனி லுளமருண்டங் கிருள்பிடித்தால்
மறுத்துமொரு மருந்துளதோ மற்றுமொரு வினையுளதோ

வினையகற்றுந் தீயணிந்த விமலமல சங்கரனார்
எனையடிமை கொண்டாளு மீசனவர் காசிநகர்
தனில்முதற்பே ரொழியானோர் சத்தியிடம் வைத்தபரன்
மனதருள்செய் திடுவதன்றி மந்திரமும் வேறிலையே

மந்திரமும் மருந்துமில்லை மானமற்ற பெண்களுக்கு
இந்தவழி வந்திடுமென் றெடுத்துரைத்து மடக்கொடியும்
சுந்தரஞ்சேர் கோவலர்மேற் சூழ்ந்தவாசைப் பெண்களுக்கு
விந்தைபெற வுரைத்துமந்த மின்கள்மனந் தேற்றினளே

தேற்றியின்னு மொன்றுசொல்வேன் சேயிழையீர் கேட்டிடுவீர்
போற்றுமந்த வானுலகம் பூவுலகமீன்று முன்னே
தோற்றுசர மசரமென்னுந் தொகுதிதனை யும்மருளி
ஆற்றவவை யுய்யவென்றே யாலயஞ்சேர் காஞ்சிதனில்

வீற்றிருந்து தவம்புரிந்து விளங்குமக்கள் கதியுறவே
போற்றநாலெட் டறம்வளர்த்த பூங்கொடியாள் பாண்டியற்குச்
சாற்றுகின்ற சாபமொன்றாற் றானுமொரு பெண்பிள்ளையாய்
சாற்றுசூதப் பூவுதித்துந் தங்குகும்பம் தனிற்பிறந்தாள்

தனியுதிக்கப் பாண்டியனார் தானெடுக்கி வளர்ப்பளவில்
மனமிகுந்த கனவதனால் வாக்குமிகு சாத்திரத்தாற்
வனமிகுந்த பத்தினியை வன்னப்பேழை தன்னில்வைத்து
கனமிகுந்த கடலருகிற் கங்கைதனில் விடுத்தனனே

கங்கைகொண்டு பெட்டகத்தைக் கடலில்விடக் காரிகையும்
அங்கசைந்து வந்திடவே யானசெட்டி மாநாகர்
தங்குபுகழ் மாசாத்தர் தாமிருபேரும் பொருந்தி
வங்கமுறை துறைமுகத்தில் வந்துநின்ற தருணமதில்

தருணமணிப் பெட்டகந்தான் தாவுகரை மேவிடவே
கருணைபெறு மாசாத்தர் கண்டாரே பெட்டகத்தை
பெருமைசெறி மைத்துனரே பெட்டகத்தைப் பாருமென்ன
அரியநாகர் பொருளெனக்குஊ அடைந்தபேழை யுமக்குமென்றார்

என்றுசொல்லி யிருபேரும் எழின்மருவு பெட்டகத்தைச்
சென்றுதிறந் திடுமளவிற் றெய்வமின்னா ரங்கிருந்து
அன்றுகோடி சூரியர்போ லருழொழியைக் காட்டினளே
துன்றுமந்த வொளியாலே சூழ்ந்தோர்விழி மழுங்கினதே

மளுங்கவவ ரிருபேரு மங்கைதன்னை வாழ்த்திநிற்க
விளங்குமந்த வொளியடக்கி மிகுந்தவிரு பேரினுக்கும்
தளங்குகண்ணை விழிக்கவைத்த தையறன்னை யவர்நோக்கி
களங்குகண்ணி லொழிநல்கலாற் கண்ணகை யென்றோதினரே

கண்ணகையா நாமமிட்டுக் கையதனாற் றானெடுக்கிப்
பெண்ணணங்கை யும்மகற்குப் பேர்பெறநற் கலியாணம்
வண்ணமுடன் முடிப்மென்று வாக்குடனே நோக்கமுற்று
எண்ணமுடன் மாநாகர் இவளைமனை சேர்த்தனரே

தனமருவு கண்ண்கையார் டானொருகாற் சிலம்புடனே
மனமதிக்கப் பிறந்தனளே மற்றுமந்தச் சிலம்பினுக்கு
இனமருவு மிணைச்சிசலம்பு மியல்புடனே சமைப்பதற்கு
வனமருவுநாக மணிவாங்க வாரிதனிற் படவுவிட்டு

படவுடன்மீ காமன்சென்று பரதவரா சர்களைவென்று
படநாக ராசனிடம் பருமணியை வேண்டிவந்து
படவுபெறு மாநாகர் பத்தினிக்குச் சிலம்புசெய்ய
படவிறங்கிக் கொடுக்கக்கொண்ட பருமணியிற் சிலம்பொருகால்

ஒருகாலிலிணைச் சிலம்பா யுற்றிருக்கும் பொற்கொடியார்
அருளான மணமிதெடி ஆனதொரு புதுமையெடி
திருவாளும்பெண் ணணங்காய்ச் சேர்ந்ததெங்கள் ளாண்டவள்காண்
வருமுலகத் தாயுமெடி வாகுதொண்டர்க் கடியவளே

வாகுபெற நீங்கள்கொள்ளு மயலைவிட்டுத் தெளியுமெடி
தோகையரே கோவலற்குந் தொந்தமண மாகுமெடி
ஆகையினால் நீங்களிந்த வாசைவைத்தால் பாவமெடி
ஏகபரை கோபமுற்றா லீசனரு ளில்லையெடி

இல்லையெடி கோவலற்கு மேற்றபெண்ணோ வில்லையெடி
இல்லையெடி யாசைவைத்த லேகபரைக் கேதேதெடி
தொல்லையுங்கட் காகுமெடி தோகைதன்னை வாழ்துமெடி
மெல்லியரே யென்றுசொல்ல மிகமனது தெளிந்தனரே

தெளிந்தமனப் பெண்களெல்லாந் சேர்விரகந் தனையகற்றித்
தெளிந்தமனக் கோவலர்பின் தெருவீதிப் பவனிவரத்
தெளிந்தபல வாடவருந் தேசுபுகழ்ச் சிறப்புடனே
தெளிந்தபல வாத்தியங்கள் சேர்ந்தொலிக்கப் போதுவரே

போதுறுமவ் வேளையிலே புகழ்பெருகு மாநாகர்
வீதியக மிடங்களெல்லாம் விரைவிலலங் கரித்திருக்க
ஈதிவர்முன் தூதுவர்சொல் லியன்றமணங் காணவென்று
ஆதிமறை யவரரச ரருள்வணிக ருழவர்முதல்

முதன்மைபெற்ற மறையவர்கள் முப்புரிநூண் மார்பிலங்க
முதன்மைபெற்ற குண்டலங்கள் முகத்தருகிற் செவிதுலங்க
முதன்மைபெற்ற கோசிகத்தின் முடித்ததலைத் திராணமின்ன
முதன்மைபெற்ற பசியரத்தின் முறுகுகசை புயத்தணிந்து

அணிந்துருத்ர வடந்திரித்து மங்கையிற் சிற்றாலவட்டம்
அணிந்தபூதித் திரிபுண்டரத் தளகெறிப்பத் தருப்பையுங்கை
அணிந்தபூதிப் பையுடனே யடியின்மிதி யடிதொடுத்து
அணிந்தகரத் தண்டுடனே யாதிமறை யவர்வரவே

அவரவரே யரசர்களு மாடுகொடி குடைகவரி
தவரயில்வேல் வாளுடனே தர்ப்பணங் கும்பமுரசு
அவையுநல்ல தோட்டியுட னானசல் சரவரிசை
அவையுநல்ல ரதகசங்கள் ஆனபரி வீரருமே

வீரரொடு தும்பைமுடி மேவுமகுடம் புனைந்து
ஆரமுத்து மங்கதமு மங்கமிடு மங்கியுடன்
வீரதண்டை காலணிந்து மேவுகரக் கோதையிட்டு
வீரநெற்றிப் பட்டமிட்டு மேவுமார்பிற் பதக்கமிட்டு

இட்டபட்டின் பொன்னிழைத்த ரத்னபீதாம் பரமணிந்து
இட்டமுடன் ராசர்களுஞ் சிங்காசனத் தேரில்வர
மட்டிலாத வசியர்களு மாறுதாறிட் டிறுக்கியுடைப்
பட்டணிந்து பணியுமிட்டு பாரவெண்டு சிரத்திருத்தி

சிரத்திருத்தி யுத்தரிகந் திருத்தோளி லிட்டசைய
உரத்திரத்ன மாலையிட்டு முற்றபணி சாந்தணிந்து
தெருத்தனிற் றண்டிகையிவர்ந்து சேரிடக்கா ராளர்களு
பரித்தபூதிச் சாந்துவகை பரிமளங்கள் தேகமுற

உறவணிந்து முறைப்படியே யுத்தரீகமுடை சிரமாய்
உறவணிந்து முரியவரா யுற்றவருஞ் சுற்றிடவே
உறுமறையோ ருடனுடனே யோதரசர் வணிகர்வீதி
உறவுமிவ ருறவும்பெண்க ளுறவுமெதி ருறவருவார்

வேறு

வருவார்களௌதிரேறி மடவார்களுஞ்சிவிகை.வாகனமசைந்துவரு மஞ்சமதின்மீதும்
வருவார்கள்கலையேறு மதியென்னமுகமே.வடிவானகொடிபோலு மிடையூடிலங்க
வருவார்கள்நடையன்ன நடையென்னமடவார்.மணமாலைவணிகேச ரிடல்நாடலெனவே
வருவார்களிந்நான்கு வருணத்தின்மாதரும்.மடமொடுகுணங்களொடு மகுணர்களினருகாய்

அருகாதுராசருக் கதிவேககதியாய்.அசுரமரதககேசனை யாரவாரமுமாய்
அருகாதுபலவீரர் கரவாளமசைவாய். யடலேறுகைச்சால மதச்சாலமடைவாய்
அருகாதுவாய்நீரு முடனோடுமொலியாய்.அதிவேகபரிசால நிரையானதொலியாய்
அருகாதுபடைகூடு படைநாடுமிடையாய் .யருகாகவரராசர் ரணிதேரில்வருவார்

அணிதேருமொருசாரில் அணியோடுவரவே.யழகானவணிகேசர் களுமேறுசிவிகை
அணியாகமணிதா ரிலங்கிப்புலம்பவே.அரசருடனடமாடு படைவீரரறைய
அணியாகமுரசமொடு தவில்நாகசுரமும்.மடைவானதம்பேறு வீணைவங்கியமும்
அணியாரியாழ்கொம்பு கம்புபுள்ளாங்குழ லடைவாகநடையோர்க ளணியாகவரவே

வரவேறுதிருநாடு சோழமண்டலமெலாம்.மழைமுகிலினிடிபடுவ தெனநடனமிடவே
திருவேறுபொன்னாடு மின்னாடுமுறவோ.தெருவீதிகுறையாத மணிதங்கவணியே
அரசேறுதெருவீதி யிதுவாகும்வணிகேசர்.அணிவீதியெதுவாகு மதுவாகுமிதுவே
வருவார்களிவர்கள்பெரு முறையாகவணிகேசர்.மனைவீதிதனில்வரவு மாநாகர்வருவார்

மாநாகர்வருவரிசை யுடனோடிவந்தே.மறையவரொடரசை வணிகேசர்காராளரை
தானாகமுன்னின்று தக்கபடிதக்கபடி.தங்கரங்கொண்டுகொண் டங்களைத்தங்கழைக்
கானாறுமாலையிடு பவர்களுக்கிட்டுநற் கைவணக்கம்மெய்வணக்கம் புரிந்துடன்
வானாறுபோல்வாச நீர்சொரிந்தரமனையில்.வாசலின்படிகடந் தேசுமணவறையிடம்

இட்டமிட்டரத்ன தங்கத்தாசனங்களில்இவரிவரின்முறை கிரமமுறையிருத்தினரே
படமிட்டபட்டால வட்டமொடுவாங்கா. பணிமாறுவணியாக வருதூதரருகே
புடமிட்டகவரிகளிரட்ட வருகெங்கும் புகழ்.மேழதாளங்கள் வழுவாதறைந்தார்
வடமிட்டமணவறையி லிருநிரையில்யாவர்களும்.மாமருங்காகவணி கேசருடனின்றார்

வேறு

வணிகேச ரங்குநின்று மனமகிழ்ந்து சிரிப்புமுற்று
பணிவிடைத்தூ துவர்கள்செய்யும் பணிவிடையெல் லாம்பரப்பி
அணியணியா யவரவற்குஊ ஆகுமாறெல் லாம்புரிந்து
மணிசிறந்த பாவைகளால் வரிசையும்பல் புரிவாரே

புரிந்தநல்ல வெள்ளிலையும் புதிதான பழக்காயும்
தெரிந்தமுத்தின் சுண்ணாம்பும் சேரும்வாசத் திரவியமும்
விரிந்தரத்ன பொற்கலத்தில் விதவிதமாய்த் தான்சொரிந்து
பரிந்துபொற்பட் டாடையிட்டுப் பணித்திடுகா ளாஞ்சிகளை

அஞ்சுவிதச் சித்திரத்தா லமைத்திடுபொற் பாவைகையிற்
அஞ்சவிடப் பதுமைசென்று சொன்னவாக்குக் கொடுத்தெடுத்து
வஞ்சியென்ன மீண்டுவர மனமகிழ்வாய் வாங்கியவர்
மிஞ்சமிஞ்ச நகைபுரிந்து விருந்தருந்தி மகிழ்ந்தனரே

மகிழுமிரு வாட்சிபுன்னை மல்லிகைசம் பகங்கோங்கு
புகழ்பதுமஞ் செங்கழுநீர் பூந்திருக்கொண் மந்தார
நிகழிம்மலர் மாலைவர்க்க நீழ்பதுமை கொண்டுசென்று
துகமுறுநல் லாடவர்க்குச் சூட்டிமீண்டும் மேவினதே

வேம்மருவு பன்னீரு மிகுமணநற் செஞ்சாந்துங்
காமருவு செந்சாந்துங் கதிக்குநல்ல வெண்சாந்தும்
வாமருவு கஸ்த்தூரி மணமிகுந்த புனுகுவர்க்கம்
ஏமருவு மிடதூரம் ஏகுவாச மிசைந்திடவே

இடமிகுந்த பாவையொன்று ஏற்குமிந்தக் கிண்ணமதை
திடமிகுந்த சிரசில்வைத்து திருச்சவையோ ரிடஞ்சேர்ந்து
தடமிகுந்த கையதனாற் சாரநின்று வாரியெடுத்
திடமிகுந்தோர் மார்பகத்தி லெறிந்துமீய்ந்தும் போயினதே

போகுமந்தப் பாவைசெய்யும் புதுமைகளைத் தான்பார்த்து
ஆகுமிந்தப் பெண்கள்விண்ணி னரமகளோ வென்பாரும்
சேகுசெய்யு மாயமெல்லாந் திரண்டதிதோ வென்பாரு
வாகுபெற்ற செந்திருவோ வந்தபெண்கள் பாரீர்கள்

பார்மிகுந்த பெண்ணிவர்கள் பலமுறையும் வெள்ளிலையும்
ஏர்மிகுந்த பொருள்களெல்லா மிடைக்கிடை கொண்டேவருவார்
சீர்மிகுந்த கதையுரையார் சேயிழைமா ரிங்கிவர்கள்
ஊர்மிகுந்த வூமர்களோ வுரையுமென மகிழ்ந்தனரே

மகிழ்ந்தவர்கள் பலவசனம் மாறிமாறிப் பேசியங்கு
திகழ்ந்தபாவை களிலுண்மையுந் தேர்ந்துந்தேரா தையமுடன்
மகிழ்திருக்கு மவர்களுடன் வந்தபெண்கள் காரியமும்
மகிழ்ந்திருந்த பெண்கள்செய்த வரிசையுமிங் குரைப்பேனே

வரிசைபெறு மரசரொடு வந்தசதுர் வருணபெண்கள்
வரிசையுடன் கண்ணகையார் மனதுமகிழ் வாகவென்று
வரிசையுடன் சேடியரால் வாகுபெறு பால்தயிர்நெய்
வரிசையுடன் கனிமுதலாம் வரிசையுடன் வந்தனரே

வந்தவுடன் மாநாகர் மனம்மகிழ மனைவிசென்று
வந்தவரி சைகளுடனே வரவழைத்தும் வணக்கமுற்றும்
வந்தவர்கள் பெருமைகளை வகுத்தெடுத்து அவரவர்க்கு
வந்ததக்க வாசனங்கள் வகுத்துவைக்க மாதர்களே

மாதர்களெல் லோருமுடன் மனமகிழ்விற் கண்ணகையார்
ஆதரவோ டிருந்தமனை யயலணுகக் கண்ணகையார்
போதமுட னெழுந்தவர்கள் பொற்கரங் கொண்டாடியன்பு
தீதகல முகமகிழ்ந்து சிறந்திருக்கச் செய்தனரே

சிறந்திருத்தி வாசமுள்ள திரவியங்கள் கரைத்திருத்துஞ்
சிறந்தகிண்ணந் தனையெடுத்துச் சேடியர்க ளுடனுடனே
சிறந்தவர்கள் முகங்குளிரச் சேர்த்தழுத்தி வீசிமிகச்
சிறந்தபாக்கு வெற்றிலையுஞ் செம்பொற்றட்டத் தேந்திவந்து

வந்தவர்க்குக் கண்குளிர மகிழ்தளித்தார் சேடியரும்
முந்தநின்ற பாவைகளும் முதன்மைபெற்ற மலர்மாலைகள்
தந்துநிற்கப் பார்த்துமிகத் தயவுடனே பெண்களெல்லாம்
அந்தமில்லா மகிழ்ச்சியுற்றார்அழகியநற் றினமிதென்றே

தினமருவு வரிசைகளைச் சேயிழைமார் கையேர்த்து
மனமகிழ்வு மிகுந்தவர்கள் வண்ணமாதர் நடனமுடன்
தனமருவு களங்காடல் தாயபந்து விழையாடல்
இளமருவூஞ் சலினாடல் யாவதுமங் காடினரே

ஆடிடமா யிவரிருக்க வம்மனதைக் காணுவதாய்
ஓடுபுகழ் புலவருட னுற்றதவசி யர்வரவும்
நாடியவர்தனை யழைத்து நல்லிடங்கொண் டின்பமுற்று
தேடுபுகழ் மாநாகர் சிறந்தவுப காரம்செய்தார்

செய்திருக்க வேறுமுள்ள சாதிசில பேதமுடன்
வையகத்தின் மாநாகர் மகண்மணத்தை காணுவதாய்
ஐயமுற்று வந்திடவும் அவர்களையு மவர்க்கிசையச்
செய்யுமிட மழைத்திருத்திச் சிறந்தபுகழ் வரிசைசெய்தார்

வரிசையுற்ற மீகாமன் வாழ்குலத்தி னுள்ளவரும்
திருமணத்தின் பொருட்டாகச் சென்றாரே மானாகர்
விரைவுடன் வந்தவர்களையும் மிக்கபுக முடனழைத்து
விரைவிலவர்க் கிடுமிடத்தில் மேவிடுநல் வரிசையுடன்

மேவிடுமா சனத்திருத்தி மிக்கபன்னீர் சாந்துவகை
தாவுபுட்ப மாலைவகை தக்கபுனு கிவைமுதலாய்
மேவிடுவெற் றிலைபாக்கு வெள்ளித்தட்டந் தனிலிவர்க்கும்
பாவைக ளியன்றபடி பரிந்தளித்து மிருந்தனரே

இருந்திடக்கை யிளந்தவர்கா லிளந்தவரோ டுமர்முதல்
வருந்திமடந்தைய ராடவர் வலதுகுறைந் திடுபவரும்
விருந்தராக வந்தவரும் மேவுவாச லாகவங்கே
பரிந்தவர்க டனையும்வரப் பண்ணுவித்தங் கருள்புரிந்தார்

இருந்தள்வில் மாநாகர் இளல்புடனே அங்குவந்த
திருத்தமுள்ள யாவர்கட்கும் தேடிடுநற் பதார்த்தமுய்த்தும்
அருந்தியுட னளவழவி யகமலர்ந்து முகமலர்ந்து
விருப்பமுட னிருந்தனரே மேவிமனஞ் சலியாதே

சலியாதங் கிருந்தளவிற் றாரைசின்ன முரசுகொம்பு
ஒலிப்புடனே வாழ்த்தெடுப்ப வுயர்குடைகள் கொடிநிழற்ற
சலிப்பிலாது அரசருடன் றாவுமற்றெல்ல வரும்வர
நலத்துடனே கோவலர்மா நாகர்வீதி மேவினரே

மேவுகின்ற வவ்வளவில் விளங்குமந்த மாநாகர்
தாவுசில வாடவருந் தையலருங் கூடவர
மேவுசங்கு தாரைசின்ன மிகவிருது பலவதிர
மேவியந்த மாப்பிளையை விரைவழைத்துப் போனாரே

போகமணப் பந்தலின்கீழ் பொற்புடைய கோவலனார்
ஏகுகின்ற வவ்வளவி லிசைந்ததிரு மாநாகர்
தாவுபெண்ணம் மாமியென்பாள் தாதியர்கள் பலருடனே
மேவுகின்ற பாலறுகு வெள்ளிவட்டில் தனிலேந்தி

ஏந்திவந்து கோவலர்தன் னிருபதத்தில் விடுத்தலம்பி
ஏந்திழையாள் மீண்டுவெள்கி யேகியபின் தோழரவர்
சேர்ந்தமுத்தின் சால்வையொன்றைச் செங்கரத்தி லெடுத்துவந்து
சேர்ந்ததோழன் கோவலர்தன் றிருப்புயத்திற் போட்டனனே

போட்டவுடன் கோவலனார் பொன்னின்மணிக் கணையாழி
வேட்டமுடன் தோழன்கையில் விரலிலிட்டார் ரிட்டபின்பு
ஆட்டுநீர் ராஞ்சனத்தை யரிவையர்கள் கரத்தேந்தி
கூட்டமுட னாலாத்திக் கோவலற்கு வலஞ்சுற்றினார்

சுற்றியபின் நடனமிடு தோகையர்கள் கைவருடி
சுற்றிநின்று கோவலர்முன் துரிதநட மறித்தாட
ரற்றின்மணி பட்டுவர்க்க மேந்திழையார்க் கிட்டபின்பு
ஏற்றுதவில் நட்டுவர்க ளிடைமறித்தும் புடையடைந்தார்

மறித்தவிரு துடையவர்க்கு வாகுபெற்ற பட்டுவர்க்கங்
குறித்தவர்க்குக் கொடுத்தகலக் குடநடனக் கோதையர்கள்
மறித்துநின்றுங் குறித்திடவே மனமகிழ வெள்ளிலைகாய்
குறிப்புடனே குடநடனக் கோதையருக் கிட்டனரே

இட்டபின்பு பலர்கீர்த மிசைந்தபல கவிவாணர்
பட்டமிகுங் கோவலர்முன் பலகவிகள் பாடிநிற்க
மட்டுகவி யிட்டவர்க்கு மனமகிழ பலநிதியுங்
கட்டிபட்டுங் கொடுத்தகலக் களிப்பின்மிக வாழ்த்தினரே

வாழ்தொலியைக் கேட்டுமவர் மணவறையி னிடமருவ
வாழ்த்துமந்த மாநாகர் வரிசையுட னிரையிநின்று
வாழ்த்துடன் மாசாத்தர்வர மருவியவர் தனையழைத்து
வாழ்துபவ ரேற்றமுடன் மருவாசனத் திருத்தினரே

வேறுபொறிஇசை
குறிலிசை

ஆசனமேறிடச் சாமரம்வீசிட.வாடிடுகணிகையர் பாடலுமோவிட
வீசினர்கலவைக ளாசகல்வணிகர்கள்.வீசினர்மருமலர் பூசுரரானவர்
காசகல்விருதிடு தவில்கொடுநட்டுவர்.கடிகொடுபடபட மடெனமுழக்க
பேசிடுமோசையொ டாசையினங்கெழு.பேரவைதந்தன சந்தமுமிகவே

சந்தசயந்தனம் வந்தரசரையும்.அந்தமாநாகர்கை தந்தழைத்தாங்கே
வந்தரசர்களையும் வருகுமரர்களையும்.இந்திரரத்தின சிங்காசனத்தேற்றி
அந்தரவெடிகுடை கொடிபறைமுறையறை.தந்திடுவரிசையொ டங்கிடுவித்தே
சுந்தரமாலைகள் கந்தரஞ்சூட்டித்.தந்திடுமலர்முடி தந்தனராங்கே

ஆங்குடனந்தணர் பாங்குடன்வரவர.அவர்களைவிரைவொடு பரிவொடுகடுகத்
தாங்கிநடந்தெதிர் பாங்கினிடம்புகு.சரிவரநிரைநிரை யெதிருருகெதிரே
வேங்கையடித்திடு தேரலிடுமஞ்சம்.மீதினிலாதர வோடினிதாக
ஓங்குபுகட்கொடி ருத்தியருத்தியி லுடனுபசாரமு முறைமுறையிட்டே

இட்டபின்வணிகர்க ளெவரையுமங்கங்.கிட்டிடுமாசன முட்டவிடுத்தே
தொட்டிடுமன்பொடு தட்டிடுமாசனஞ்.சூழவிருத்தியு மேழியர்தமையு
தட்டுறுமாசன வகைவகைமீதே.சரிமுறைபரிவுட னிறையொடிருத்தி
வட்டமொடருகுறு மற்றுளர்களையும்.வருமுறைவரிசையி.லெதிரிருத்தினரே

வேறு

இருத்தியபின் னவரவருக் கிசைந்தபல வரிசைசெய்து
மருத்துமாலை மணிமஞ்சத்தின் மைத்துனர்கள் கோவலரை
அருத்திபெறு கணிகையரி னாடல்பாவை யாடல்செய்ய
இருத்தியிரு பக்கலினும் இருந்தனரே தோழர்களே

இருந்தவந்தக் கோவலற்குஊ எழில்சிவறி பன்னீரு
பொருந்துசந்து தைலமுடன் புனுகுநல்ல நரந்தமுடன்
திருந்துசாந்து வகையுமிகத் திருத்தமுட னுரத்தணிந்து
பரிந்திடுவெள் ளிலைபழுகாய் பாவையிடத் தனுப்பினரே

அனுப்பிடுகா ளாஞ்சித்தனை யழகுபாவை கரம்பிடித்து
தனக்குநிக ரில்லாததோர் தனிப்பாவை விளக்கேந்த
அனத்தை நிகரிருபாவை யருகுவெண் சாமரமிரட்ட
கனத்தநிதிக் கோவலர்முன் களிப்பதுமை மேவினதே

மேவுமந்தப் பொற்பதுமை விளங்குமந்தக் கோவலர்முன்
தாவுமந்தக் காளாஞ்சி தன்னையவர் கரங்கொடுக்க
கோவலருங் கைநீட்டிக் குறுநகையோ டேற்றிடவே
பாவைகையிற் கணையாழியைப் பறித்துமீண்டங் கோடியதே

ஓடியவப் பாவையுட னுற்றநின்ற பாவையொன்று
ஆடுமவர் தோழிலிட்ட வழகியதோர் சால்வையொன்றை
தேடியெடுத் தோடிடுவோர் திருப்பாவை கரப்பூவைக்
கூடிநின்று பறித்தெடுத்துக் கொண்டோடிப் போவதுவே

போவனவப் புதுமைதன்னை புகழ்தலுற்ற கோவலனார்
மேவுநசை புரிந்திடவே விரைந்துகூட வணிந்தவர்க்குந்
தாவுநல்ல அடைகாய்கள் சாந்தொடு பன்னீருதவித்
தேவரென மனமகிழ்ந்து சித்திரம்பார்த் திருந்தனரே

இருந்திடுமவ் வேளையிலே யிளந்தளிர்போல் வளர்ந்தழகு
சொரிந்திடுநல் வடிவமுள்ள தோகைநல்லார் கண்ணகையை
பரிந்துமணக் கோலமிடப் பரிவுபெற்றுப் பெண்கள்வந்து
கருங்குழலிற் புனுகுமஞ்சள் காசறையும் பூசினரே

பூசியந்தக் கண்ணகையைப் பொற்கொடியார் தானழைத்து
நேசமொடு நீர்க்கரையி னீராட்டல் வேண்டுமென்று
தாசியர்கள் நடனமிடத் தாரைசின்ன நின்றதிர
நேசமுட னன்னைதன்னை நீர்க்கரைகொண் டேகினரே

வேறு

ஆனதொருதம்பேறு கம்பேறுபேரிஇ.அடக்கைமுடக்கை படக்கைதிடீமென
வானமதிரவே மத்தளம்கைமணி.மல்லாரிசல்லாரி யொடுசாரிபடகம்
தானொத்திசைக்கநல் நாகசுரம்வீணை.தக்கைதடாரி குடந்தாளமேழும்
மானொத்தமெல்லிநல் லார்கவரிவீசியே.வாழ்கவெனப்பெரிய பேரொலியிசைக்க

பேரானவன்னநடை யோர்பந்துபோடப்.பேரணிகொள்கணிகையர்க ணடனமுறையாட
நேரானபலவெடிக ளொடுவானமதிர.நிறைமதிமுகம்பொருவு கண்ணகையைவண்ணக்
காரானகுழன்மாதர் தோழியர்கள்சூழக். கட்டுபட்டிட்டபூம் பந்தலூடாக
பேரானநீராட வேரானமாதரும்.பெண்ணழகுகண்ணகையு நீர்க்கரையில்வந்தார்

வேறு

வந்துவெள்ளிக் குடமெடுத்து வைப்புச்செப்புக் குடமெடுத்து
அந்தநற்பொற் குடமெடுத்துஊ ஆயிழையா ராங்கடுத்து
சந்தமுறும் புதுப்புனலிற் றாமிறங்கி முகந்தெடுத்துக்
அந்தமிகு கண்ணகையார்க் கரியமுழுக் காட்டினரே

ஆட்டியீரந் தனைக்களைந்து மரியகருங் குழன்முடித்து
தீட்டுமயிற் சாந்தணிந்து சேரவகிற் புகையூட்டி
காட்டுமிர்க மதம்புனுகு காரிகையார் வடிவமுத்தி
கூட்டுகுங்கு மக்கலவை கோலுமுலைக் குப்பினரே

பூசலிட்டு மதனைவெல்லும் புரிகுழலார் வரிவிழிக்கு
தேசினுடன் கருவரியுஞ் செவ்வரியும் தீட்டிநல்ல
காசினுற்ற கும்பமதைக் கடிந்தமுலை யிரண்டினுக்கும்
வாசமாகப் புயத்தினுக்கு மையிற்றொய்யி லெழுதினரே

எழுதியிள மதிநுதலி லிலங்குதிரு நீறணிந்து
செழுமையிற் செஞ்சந்தணத்தாற் றிருநுதலிற் பொட்டுமிட்டு
குளிருபன்னீர் சாந்துவகை கூட்டியவள் கழுத்தணிந்து
வளர்கரத்துப் புனுகுடனே வாசமெனப் பூசினரே

பூசியிளமாந் தளிர்போற் பொன்னிழைத்த புடவையொன்றை

நேசமுறக் கொய்துடுத்தி நிரைவடத்தின் மேகலையை
ஆசைமிக விடையிறுக்கி யரியமுலை மீதிலொரு
காசிழைத்த மாதாளம்பூக் கரையினுத்த ரீகமிட்டார்

இட்டுமுலை சுமந்திளைக்க எழிலுடைமே கலைமணியை
வட்டவட்ட மாய்ப்புனைந்த மாமணியின் மாலையொடும்
கட்டநல்ல பணிகளுடன் கழுத்தழகாய்ப் புனைந்தனரே
வட்டமுலைப் பெண்கள்பின்பு மாதின்வன்ன மயிர்முடிமேல்

மேல்விளங்கு மிந்துவென்ன மேவுகுச்சுந் தாவியதின்
மேல்விளங்க நாகபடம் மின்புடனிட் டதனைக்கவ்வ
மேல்விளங்கு மயலிதென்ன மேவுமெதிர் முகப்படத்தை
மேல்விளங்கப் பூட்டிவிட்டு மிளருமயிர் முடியினின்று

நின்றிறக்கிக் காதளவு நிதிமருட்டு சுருட்டுவரி
அன்றணிந்து சிரவரியில் அழகெறிக்குஞ் சுட்டிவரி
யொன்றுநெற்றி யிடந்தழுவ வொப்பனையிற் சுருண்டசைந்து
நின்றுபடி நாகமென்ன நிலவநுதற் பூட்டினரே

பூட்டிநெய்த கருங்குழலிற் புதியமண மலர்சொருகி
காட்டுமௌவல் மாலையொன்றுங் கனங்குழற்குச் சூட்டிவிட்டு
தீட்டுமருட் கண்ணகையின் செவிகளிற்கோப் பணியுமிட்டு
மீட்டுநற்பொற் றோடிரண்டு மேவுசெவிக் கேவினரே

ஏவுநுத லணியுடனே யிசைந்தகழுத் தினிற்பணிகள்
தாவிமுத்து மாலைவடந் தானுமொன்று தாவவிட்டு
மேவுபுயந் தனிலரிய வெள்வளையின் பணியிரண்டை
காவவிட்டு முன்கரத்திற் கனகவளை பூட்டினரே

வளைவுகொண்ட மோதிரங்கள் வன்னவிரல் துன்னவிட்டு
தொழுதுமட்டுக் குழன்மடவார் தோகைபாதச் சிலம்பணிந்து
வழுவிநல்ல பாதசரம் மருவுசிறு சதங்கையுடன்
கொழுவியிணை விரலணியுங் கொம்பனைக்குப் பூட்டினரே

கொம்பனையார் கொம்பனையைக் கோலமிட்டுத் தரியமொன்று
கொம்பனையா ரிடையிறுக்கிக் கோலவடி வினைமூடிக்
கொம்பனையீர் வாருமென்று கூடியிரு சேடியர்கள்
கொம்பனையை விடையசையக் கூட்டிவர நடந்தனளே

நடக்குமந்த மங்கைமுக நன்மதியி னொளிகொடுக்கச்
சுடர்குலவு மாபரணஞ் சூரியனி லொளிபொழிய
படப்பொறி கொணாகமணிப் பாதச்சிலம் பனலொளியாய்
விடுக்கவிடை கொடியிரவும் விடிவதும்போ லாயினளே

ஆயிழையின் பாதமது அழுத்தும்பஞ்சிற் றழும்புறுமேல்
மாயவுல கானதிந்த மாநிலத்தி னடப்பதுவோ
ஆயிலிதா காதெனவே யணிச்சிலம்பு புலம்பிடவே
சேயிழையார் மெல்லமெல்லத் திருவடியிட் டிடம்வருவார்

திருவினல்ல கண்ணகையார் சேரவிரு ளானதெல்லாம்
வரையிடத்தும் வானிடத்தும் மறைந்ததுதான் அதிசயமோ
அரியவிந்தக் கண்ணகையா ரருவடிவை யெவர்மனதில்
உருகிநினைத் திடுவாரே லுறுபவமவிட் டருள்வருமே

அருளதெனும் பதமதனில் லருள்சிறந்த கண்ணகையார்
திருவடிதான் வணிகர்மனைச் சிலவிடத்தி லுலவிடுமோ
திருமிகுந்த விம்மனையிற் சிற்றடியிற் சுவடுகண்டால்
கரியகல்லென் மனமலையுங் கன்மவிரு ளகன்றிடுமே

கன்மவிருள் தனையகற்றுங் கண்ணகையார் வண்ணமதை
இன்னவித மென்றுரைக்க யாவராலு முடியாதே
பன்னுமிந்தப் பத்தினியார் பலவரிசை நிரையெதிரத்
துன்னுமந்த மணச்சவையிற் றோகையரோ டேகினளே

ஏகியபோ தங்கிருந்த வெழின்மருவு மாநாகர்
பாகமுற்றமாலை யொன்றைப் பத்தினியா ரிடம்கொடுக்க
கோகுலரை விழிபரப்பிக் கோதையந்தக் கோதைதன்னை
தாகமுடன் கழுத்திலிட்டுத் தாதியரோ டேகினளே

ஏகுமந்தக் கண்ணகையை யேந்திழையா ராங்கழைத்து
வாகுபெறு கோவலனார் வலப்புறத்தா சனத்திருத்தப்
பாகுமொழிக் கண்ணகையார் பரிவுடனங் கிருந்திடவே
ஆகுமாறு வரிசைபல ராரவாரித் தெழுந்தனரே

வேறுதாளி தட்டுப்பறைதக்கைப்பறை தப்புப்பறைதட்ட.தாளம்பலமேளம்பல காளம்பலசூழ
சைவநெடில் மட்டுக்குழல்கட்டைக்குழல் பட்டக்குழலூத.வாணம்பலவாணம்பல மாகந்திசைபோக
கொட்டுப்பறைகோட்டைப்பறை .மூட்டுப்பறைபோடக்.கொம்பினொலிகம்பினொலிபம்பம்மெனவோத
எட்டுத்திசையுற்றோர் செவியுற்றேசெவிடுற்றே:ஏங்கப்பலரேங்கிப் பயமோங்கப்பலரானார்

ஆனார்பலமாநாகரு மங்குற்றனராரும்.ஆடப்பலர்நாடப்பலர் தேடப்பலரோடத்
தேனார்மொழிமாதர்பலர் பாடச்சுதிகூடச்.செவிடாயினர்குருடாயினர் செவிகண்கள்திறந்தே
தானாசையினிசையோசையி னிடமாடிடல்நாடத்.தக்தக்கழல்தெத்தப் புகழுற்றுப்புவியுற்றார்
மாநாகர்தன்மகளான கண்ணகை வதியும்பதமிதுவோ.மாகேந்திரனூரோநிக ரேதோவுலகென்றார்

வேறு எழுந்தபுகட் கோவலரும் இளங்கொடி கண்ணகையுநல்ல
வளங்குலவு மாசனத்தில் மகிழ்ந்திருக்குஞ் சமயமதில்
வளம்பொருந்து முலகீன்ற மாதின்மணங் காணுவதாய்
வளம்பொருந்து மிந்திரனும் மற்றுஞ்சில தேவர்களும்

தேவரொடு சித்தர்களுந் தேவுலகி னோக்கமுற
ஆவதொரு சமயமிதா மாகுமண நிறைவேற
தேவையில்லை யெனக்கணிதர் சேர்கால வூழின்முறை
ஆவதறி யார்போல்முன் னறைந்தவழி பூசுரர்கள்

வழிவளியா யிருவருக்கும் மணக்காப்பைத் தரித்துமிகும்
ஒளிமிகுந்த கரிமுகனா முத்தமற்குப் பூசைசெய்து
தெளிந்தமந்திர முறைதெரிந்த சிரேட்டகுரு வாயினரே
களிமிகுந்த வோமமுறை கருணையொடு புரிந்தனரே

புரிந்தவந்த வோமமதிற் பொருள்மருவு கோவலருங்
கரிந்தகுழற் கண்ணகையுங் கதிர்ப்பொரியைச் சிதறினராய்ப்
பரிந்துஅந்தச் சமயமதிற் பதித்தவரசாணி முன்னாய்த்
திருந்திழையுங் கோவலருந் திகழ்வுற வீற்றிருந்தனரே

திகழுமந்த மங்கலியஞ் செம்பொற்றட்டில் லேந்திநல்ல
புகளடையும் வெள்ளிலையும் பொலிவுறுநல் லட்சத்தையும்
நிகழுமன்பிற் றோழரவர் நேர்ந்துகையி னெடுத்துதவ
மகிழ்வினந்த கோவலனார் வாழ்த்துடனே வாங்கினரே

வாங்கியந்தக் கோவலனார் வரிசையுற்ற முதியவர்கள்
தாங்கிவிடை பெறுவதற்காய்ச் சவையகத்திற் கொடுநீட்ட
தேங்கமகிழ் முதியவர்கள் சிறப்புடனே மிகவாழ்த்தி
ஆங்குமந்த மங்கிலிய மவரவர்தொட் டருள்புரிந்தார்

அருள்புரியத் தோழருட னவர்மீளக் கொண்டுசென்று
அருளுதவும் கரிமுகனை யடிக்கடியே தண்டமிட்டு
அருளுடனே குருமுகமா யவைமுகமு நோக்கமுற
அருள்சொரிந்த கண்ணகையா ரணிகழுத்திற் பூட்டினரே

பூட்டியபொற் கூறையொன்று புகழ்மருவு கோவலனார்
நாட்டுதோழ ரிடம்வாங்கி நங்கையர்தன் வடிவிலிட்டு
இட்டுநல்ல மணம்வீச மிசைந்தமலர் மாலையொன்று
காட்டுமருட் கண்ணகையார்க் கனங்குழன்மேற் சூட்டினரே

சூட்டுகின்ற வவ்வளவிற் றூயவோமச் சடங்கியற்றி
நாட்டுமவ்வக் கினியின்முன்னாய் நயன்மருவு மாநாகர்
தீட்டுபுகட் கண்ணகையின் றிருக்கரத்தைக் கோவலர்கைக்
கூட்டமுற மனைவியவள் குளிர்ந்தகெண்டி நீர்வார்க்க

வார்பொருந்து மென்மகளை மணமுறையின் றுமக்களித்தேன்
நீர்பொருந்திக் காருமென்று நீருடனே கொடுக்கவேற்று
தார்பொருந்து கோவலனார் தையலின்கை யுடன்சேர்த்தார்
வாரமுற்ற விருதோழர் வந்தவர்தன் கைக்கொடுத்தார்

கைகொடுக்கக் கண்ணகையார் கரத்திலிரு தோழிதொட
ஐமருவு மரசாணி யதனைவல மாகவந்து
கைதவறா மும்முறையே காரணவாக கமப்படியே
செய்துமாதின் வலக்காலாற் சிலையில்மிதிப் பித்தனரே

சிலைமிதித்துக் கண்ணகையுஞ் சிறந்தநல்ல கோவலரு
கலன்சேர்ந்த வருந்ததியைக் கண்குளிரப் பார்த்துநிற்க
பலஞ்சேர்ந்த பொற்கரத்திற் பாலறுகு செம்பருத்தி
நலஞ்சேரும் வெண்கடுகு நாடுமஞ்சள் வேம்பினிதழ்

நாடுசாற்றின் மூன்றுசுடர் நாட்டுநெய்யின் விளக்காசனம்
தேடுபெண்க ளாலாத்தி சிறக்கமூன்று முறையவர்க்கு
நீடுகுற்ற மணுகாது நெற்றியிற்பொட் டிடவரிசை
நாடநல்ல கோவலனார் நன்மணிமண்டபம் புகுந்தார்

### நைவேத்தியக் கதை

புகுந்தளவிற் கண்ணகையார் பொற்கலத்தி லமுதுகறி
தகுந்தநல்ல பணிகாரந் தயிர்பழம்பா நெய்யுமிட்டு
மிகுந்துணுமென் றுரைப்பளவில் வெகுமகிழ்வ தாயருந்த
தகுந்துணையாம் கோவலனார் தாமிருந்தா ராசனத்தே

ஆசனத்தி லிருந்தளவில் ஆயிழையார் கண்ணகையும்
நேசமுடன் பட்சமுற்று நேர்கொலுவி லிருந்தளவில்
வாசமுடன் முதியோரும் வங்கிசத்தோ ருடனெவரும்
ஆசையுட னிருவோரு அனுதினமும் வாழ்கவாழ்க

வாழ்கவாலும் விழுதுமென்ன மாறிலாது வாழ்கவாழ்க
வாழ்கஆவின் பாலறுகு மருவலென வாழ்கவாழ்க
வாழ்கவலர் மலருமுடன் மணமுமென்ன வாழ்கவென்றார்
வாழ்வுரைக்க விரதியையும் மதனனையும் போலிருந்தார்

இருந்திடுமவ் வேளைதனி லியர்வணிகர் சவையிலுற்றோர்
இருந்தபல பொருளுடனே யினிதுணவு முடனளித்து
இருந்தவர்க்கு நல்லடைகா யியன்றபடி குறையாமல்
இருந்துகொடுத் தவரவரை யேற்றமுடன் வாழ்த்தியங்கே

வாழுமவரவர் நகர்க்கு வரிசைசெய்து குறையாமல்
வாழுவீரென் றனைவரையும் வழிவிடுத்து மீண்டிருக்க
வாழுமந்தக் கோவலரும் மாதுமடைந் தோர்க்கருளி
வாழுவரி சைகளுடனே மணவறையிற் புகுந்தனரே

புகுந்துமஞ்சச் சயனமதிற் பொற்கொடியுங் கோவலரு
மகிழ்ந்திருந்த சமையமதில் மதன்கலக மயக்கமதால்
புகுந்தறிவி லன்னைதன்னைப் புகழ்பெருகு கோவலனார்
தகுந்தபடி கலவிதனிற் றழுவுதற்குத் தொடங்கினரே

தொடங்குவணி கேசருக்குந் தூயவண்ணக் கண்ணகைக்கும்
நடுவிடமோ ரனலெழுந்து நாடுசுட ராய்பரந்து
தடம்பொருந்த முகடளவுஞ் சாரவளர்ந் தெழுந்தொழிய
இடம்பொருந்தக் கோவலரு மேக்கமுற்று நின்றனரே

நின்றவக்கினிக் கொழுந்ததனை நிமிர்ந்துகண்ட கோவலரும்
அன்றுமனத் ததிசயித்துஊ ஆயிழையே நாயகியே
இன்றனலிற் கொழுந்தெழுந்திங் கெரிவதொரு புதுமையிது
உன்றனைநான் றழுவுமுனம் உற்றதென்ன வோதுமென்றார்

ஓதுமென்ற மொழிகேட்டுஊ உத்தமியு மேதுரைப்பாள்
வாதுமதன் தன்னைவென்ற வாகுபெற்ற நாயகனே
ஈதுரைப்பே னிரகசிய மெவர்களுக்கு முரையாதே
தாதளவு தார்மார்பா சாற்றுகிறே னெனவுரைப்பார்

உரைப்பொருவு மங்கிலிய முனைமணரத் தரித்ததனால்
புரையறு நாயகனெனவே பூவுலகிற் பேரானேன்
தரைமருவு வுனதுமொழி தவறாம னிறைபுரிவேன்
வரைமருவு புயமுடைய மகிழ்னரேநீர் கேட்டிடுவீர்

கேட்டிடுவீர் தீண்டாத கிருபைபுரை கற்புடையேன்
நாட்டுசிவ னருளாலோர் நாடுவினை யுடையவள்நான்
பூட்டுமுன்றன் மயல்தீர பூவுலகிற் கணிகையர்கள்
கூட்டமுண்டு பொருள்கொடுத்தோர் கொடியிடையைப் புணர்ந்திடுவீர்

புணருமென்ற நாயகனே பூவுலகி லீதொருவர்
உணரார்க ளுரைத்தேனே லுறுபழுது மிகவுழது
துணர்மருவு மஞ்சமதிற் சூழுமனல் நாளுமிது
குணமருவ வெனைக்கூடக் குறிக்கில்வெந்து நீறாவீர்

ஆவீரென்ற மொழிகேட்டுஊ அகமகிழ்வி னதிசயித்து
காவிநிகர் கண்ணகையீர் கற்புடைய தெய்வமுநீர்
தாவுமுன்றன் னருட்படியே தப்பிதஞ்செய் யேனெனவே
பாவின்மொழிப் பெண்ணுடனே பள்ளிகொண்டார் கோவலரே

பள்ளிகொண்டங் கெழுந்திருந்து பலபலவந்தன முடித்து
ஒள்ளியதேன் மொழியாரு முத்தமரும் வீற்றிருந்தார்
கள்ளவிழுங் குழன்மடவார் கண்ணகைதன் மணமாலை
உள்ளபடி யுரைத்திடுகில் லுத்தமத்தி லுத்தமமே

உத்தமவை காசிமதி யோங்குவளர் பக்கமதி
வித்தகைசே ருமைக்குரிய வியலுமதி வாரமதில்
வித்தகிக்குப் பொங்கல்முறை விளக்கேற்று நாளிதனில்
சுத்தமுறு விரதமொன்று தோகைதன்னைத் தொழுபவரே

தொழுபவர்க ணீர்முழுகித் தூசுகும்மி யிடையணிந்து
முழுதகலா வந்தனைகள் மோசமறத் தான்முடித்து
அழகியதோ ராபரண மணியணியாத் தானணிந்து
குணமருவு கண்ணகையார் கோயில்வல மாகவந்து

வந்துபதந் த்ண்டமிட்டு மகிழ்வுறு சங்கற்:பமிட்டு
முந்தியோர்பொற் குடமதனில் முழுதுமிளை யால்வரிந்து
மந்திரத்தால் நீரெடுத்து வாசல்வல மாகவந்து
நந்தலில்லா விளக்கேற்றி நல்லவேம்பி னிலையிருத்தி

திருமருவு நெற்குவித்துச் செப்பியகும் பம்பதித்து
உருமருவு வுத்தமியா ளுறையிடங்க ளலங்கரித்துக்
கருதரிய பட்டுவர்க்கங் கட்டிமண மாலையிட்டு
திருவுறையை யலங்கரித்துச் சேரவிளக் கொளிபரப்பி

பரப்பிநல்ல பழவகையும் பழுக்காய்வெள் ளிலையுமுடன்
பொருட்கிசைந்த பணிவகையும் புனிதசம்பா வமுதுமிட்டு
இருப்பினிய பருப்புவகை யிசைவிநெய்யின் கறியருத்தி
மருவினிய பலகாரம் மகிழவைத்துப் பூசைசெய்தே

செய்யகண்ணாற் பார்த்தருளுந் திருத்தாயே யெனப்போற்றி
துய்யபூசை முடித்தபின்பு தொழுதுசூழ்ந்து தண்ணமிட்டு
ஐயமற்ற கதையிதனை யவளருளென் றேபடித்து
மெய்ம்மகிழ்வின் வணங்கினர்க்கு மிகுமருள் பூரணிதருவாள்

பூரணிதன் பொங்கலிட்டுப் பூசைசெய்திக் கதையுரைத்தால்
தாரணியி னினைந்ததெல்லாந் தந்தெவர்க்கு மருடருவாள்
சீரணியு மம்மைபதந் திருப்பூசை முடித்தவுடன்
கூரணியிற் குளிர்ச்சிசெய்து கோதைமகிழ் வானபின்பு

கோதைதன்னைப் பூசித்துடன் கும்பமதைத் தானெடுத்து
வேதமுறை கோயில்தன்னை விளங்கவல மாகவந்து
ஆதியைமுற் கொண்டுவழி யதனிற்பரி கலமகற்றிப்
போதுமுதற் கும்பமதைப் புனல்குளிரச் செய்வதுவே

செய்யுமுறை தவறாமற் செப்பியவர் நோற்றாலும்
வையகத்தி நாயகியார்மகிழ்ந்தடிமை கொள்ளுவளே
மைபுரையும் குழலிவளை மனமகிழ்வா யாதரித்தால்
நையுவினை நோய்பிணிகள் நாடாது ஓடிடுமே

நாடாது வினைமிருகம் நாடாது பேய்பிணிகள்
நாடாது சூனியங்கள் நாடாது பாவதுகள்
நாடாது ஞம்வினையு நாடாது சத்துருவும்
நாடாது கோழ்வழக்கும் நாடாமும் வாழவுறும்

வாழ்வுதவும் கண்ணகையார் மணமாலைக் காவியத்தை
ஆழ்வுதரு கடலுலகில் ஆரேனுமனு சரித்தால்
சூழ்வயது நூறளவுஞ் சுகமுறவும் துயரறவும்
ஊழிகால மீழுலகி லுகந்திருந்தும் வாழுவரே
“ ஆறாவது கண்ணகை திருமணக்கதை முற்று “

விருத்தம் கலியுகத்தினி லாதியெனவுதித்தே.மதுரைக்கட்டளிய நீறியுலகிற்
கைதொழும்பிள்ளைக டனைக்காத்து.முடிவிலொருகதியருள வேணுமென்றே
பொலிவுறுத்தியகோயின் மேவியங்கவர்கள்.புரிபூசைகொண் டருளுமென்றெ
புத்தியறியாதநீர் சித்திமுத்தவளுடைய.பொற்பதந் தொழுவதரிதோ
கெலிவுதித்திடு மயிடனுடல்கெலாடிய்.மோதியேகிருபைபுரி விசையமருளுங்
கிள்ளையேமாநாகர் பிள்ளையே.யுள்ளத்தருள்கொள்ளையே சொரியுமம்மா
மலிவுதித்திடவுன்னுரு நாகர்பதிமேவியருள வந்தவதரித்தவுமையே
வாலபிரகாசமுறு ஞானமாரூபியே மாதுகண்ணகையம்மனே

"ஏழாவது மாதவி ஆடல் அரங்கோற்று"

தரங்கேற்றும் வெண்புரைசூழ் தரளமெறி புவியதனிற்
குரங்கேற்றம் கொள்ளாத கொம்பருண்டோ வாகையினா
லிரங்கேற்று நல்லோர்முன் யானுரைத்த புன்சொல்லெனு
மரங்கேற்று கதையதனை யவனியுள்ளோர் கேட்டருளும்

அவனிநயி னாப்பணிக்க னருளறிவிற் காங்கேசன்
அவனிகரிற் சகவீர னானபட்டம் புனைந்தவன்காண்
அவனியிலிக் கதைச்சுருக்கம் ஆகவேபா மாலைசெய்தான்
அவனியினா யடியேனு மதனருகாம் மாலைசெய்தேன்

மாலையது பாமாலை வகுத்ததுநான் பூமாலை
சாலவிது விங்கிருக்கச் சாற்றிடுவே னேற்றுடுவீர்
மாலையூரு மிந்திரனார் மாதர்கள் சாமரமிரட்ட
சீலமணிக் கனகரத்னத் திருச்சபை யிலிருந்தனனே

இருந்தளவிற் றேவரெல்லா மெம்பெருமா னெனுமொலியும்
அருந்தமிழோர் பாட்டொலியும் மருந்நடன யாழொலியும்
வரும்படக முதலுடுக்கை மத்தளத்தின் போரொலியும்
கருங்கடலி னொலியெனவே கதித்தெழுமச் சவையகத்தே

அகமகிழு முருப்பசியு மணிமுலையின் கச்சமுத்தி
அகமகிழு மணிமாலை யாபரணம் பலவணிந்தும்
அகமருளக் கச்சைகட்டி யரியகருங் குழன்முடித்து
அகவுமிரு கழற்கொலிக்க அணிச்சிலம்பு மணிந்தனளே

அணிச்சிலம்புஞ் சதங்கைசர மானதலைக் கோலமுடன்
அணிகலைசேர் மதிவதனத் தழகுறுநல் லுறுவசியு
அணிபெறுநா ரதமுனிகை யாளுமொலி யாழிசைக்க
அணிபெறுமிந் திரன்சவைமுன் னாடல்பல தாடினளே

ஆடுகின்ற வவ்வளவில் லதம்மிகு மதகரியின்
கோடுபுரை முலையாளைக் குறித்துமிக்க வாசவனு
நாடிமகிழ் வோடிருக்க நலஞ்சிறந்த சவையதனி
லீடுறுநற் சயந்தனும்பின் னிவளையெட்டிப் பார்த்தனனே

பார்த்தளவி லேயிருவர் பார்வையுமங் கொன்றாகி
ஆர்த்ததிரைக் கடலிலெழு மழகுமதி யொளிர்முகமும்
ஏர்த்தவிரு மரைமலர்போ லிலங்குமிரு கரமுஞ்சோர
வேர்த்துமுகம் வெண்ணிறமாய் மிகமயங்கி விழுந்தனளே

விழுந்தளவி லம்முனிவன் மீக்கதன்கை யாழ்ப்பாடல்
ஒழுங்கின் வழியாடம லுளமருண்டா ளெனவெகுண்டு
செழுந்தரள நகையழகாற் சிறந்தவடி வுறுவசியை
அழுந்துபுவி தனிற்கணிகை யாகநீபோய்ப் பிறப்பதென்றே

ஆகவென்றங் குருவசியை யருண்முனிவன் சபித்தபின்பு
வாகுபெறு மிந்திரன்தன் மதலையையு முகநோக்கி
தாகமிகப் புவிமீதே சயந்தனுநீ பிறந்திவள்மேல்
மோகமுற்றங் கிறந்திடென்றே முனிவரனுஞ் சபித்தனனே

வரமுனிவன் சாபமதால் மாநிலமா சாத்தரிடம்
திருமகனா யவதரித்துச் சேயிழை கண்ணகைக்குமணம்
புரிவிதியாற் கோவலனாய்ப் பூமிதனில் வளர்ந்துவர
உரியமுனி சாபமதால் உருபசியு மினைவழிந்தே

இனமருவு திருக்கடையூ ரென்னுமந்தப் பட்டினத்தில்
அனமருவு நடைபயிலு மரமகளிவ் வுறுவசியும்
வனமருவு சங்கினுள்ளே வாய்த்தமுத்துப் பூத்ததென்ன
மனமருவு சித்திரவல்லி மாதுதரம் பூத்தனளே

வேறு

ஆடுமயிலுங் குயிலுங்கிளியு.மஞ்சுமிவள்சாயலோசை மொழிக்காங்
கோடுசெறியுந் தரளமும்பூவுங். கொம்புந்துகிரும் வயிரமுமென்ன
தேடுநிதிபலதில் லாதவர்க்கொரு.செல்வமிறுதியி லுற்றதுபோலத்
தோடுமணஞ்செறி தாமரையாளெனத்.தூயதோர்மாதேவியுந் தோன்றினாளே

தோன்றியமின்னைச் சுடர்மாமணியைச்.சோதியைத்தந்தையுந் தாயாருங்கண்டு
ஈன்றோமிதொன்றை யிரத்தினம்போலே.யின்னாள்முகூர்த்த மறிகுவோமென்று
ஆன்றோர்புகழ்மறை யோர்க்கறிவித்தே.யானமுகூர்த்த தரும்பலன்கேட்க
மூன்றுமுறையு மிசைநூலெடுத்தவர்.முறைப்படியாய் மொழியலுற்றாரே

உற்றேயலகெடுத் தொன்றாய்நிரைத்து.முந்திடுமந்தணர் கேசரிசொல்வான்
பற்றுள்ளசித்திரை முற்பதின்மூன்றாம்.பக்கம்வியாழ்க் கிழமைமகத்திற்
துற்றருள்கும்ப வியாளன்னகோரை.தோன்றுமுகூர்த்த மதனிற்பிறந்த
பொற்கொடிக்கோள்களி லைந்திலாதித்தன்.பொருந்துறமூன்றா மிடந்தனில்ராகாம்

ஆகியவேழாமிடந் தனிற்சந்திர.னாறாமிடந்தனிற் செவ்வாயதாகும்
ஏகியசென்மந் தனிலேபுதனா.மெண்ணும்வியாழனு மஞ்சாமிடத்தில்
வாகுபெறுபதி னோராமிடத்திலே. வந்தசனியதால் வாழ்வுகள்மிஞ்சி
ஆகுமிரத்தினபொற் றண்டிகையேறி.ஆயிழைவாழ் வாளெனவுரைத்தாரே

வெண்பா

அரிவையிவட் கேளாமிடந் தனிலே யாகும்
பெருகுமதி நின்றதனாற் பின்பு – வருகணவன்
செங்கையினா லுள்ளபொருள் தோற்பனவன் முன்தேவிக்
கொங்கையினா லங்களியும் கூடல்

எண்சீர் விருத்தம்

கூடல்பின்னளிவது திண்ணமதென்னுங் குறிகுலமறையோர் மொழிவிதமுறையாங்
பாடல்களிசைபெறு மண்டபநீழல் படர்கனலாலெரி பரவுறவிடவும்
கோடலர்பூழியனின் மதுமுடியுங் கோதையர்முற் கணவன்கொலைபடவுங்
ஏடலர்கோதையர் வெகுநிதிதேடலி லெவர்களினழகுள் ளிவளழகென்றார்

வேறுதத்திசை

என்றுமொழிந்த மறையோர்தமக்கு.மின்புறவேண்டுந் நிதியமுந்நல்கிச்
சென்றிடுமென்றே யுரைத்தேவிடுத்தபின்.சேயிழைக்கேழு நாளுஞ்சென்றபின்பு
நன்றியுடநற் கிரமமுடித்து.ஞாயிறுகாட்டியே பொற்காப்புமிட்டுத்
துன்றுமினிதூழி வாழுவீரென்று சொல்லியேயெல்லோருங் கொண்டாடினாரே

கொண்டாடவல்ல வயிரேகைகால்களுங்.கோலமுகத்தின் குறிகளதாலுங்
உண்டாசைதீராத செவ்வையினாலு.முந்திச்சுளியினு ரோமத்தினாலுங்
கண்டோர்விரும்ப விழிக்கடையாலிவள்.காமக்கலவி கலப்பவளென்றே
வண்டேயிணங்கி வளர்குழலிக்கொரு.மாதேவியென்றோது பேருமிட்டனரே

பேராலுயர்ந்ததோர் பெண்பெருமாளைப்.பேணியேசேடியர்க ளெல்லோருங்கூடி
ஆரவிதங்கொள் சரணங்கரணம்.அதிவிதமானதோர் போதகத்தோதகம்
மாராளிதாமாக வைத்துத்துவக்கும்.மதர்விழியாலிட்டு வாணர்களைவாங்கும்
பாரவிதங்கொளிவையும் வெண்சங்குனிற்.பாலும்புகட்டி வளர்த்தனர்தாதியர்

வேறு

வளர்ந்தவுந்தி யாரமுதோ மதிக்கவொண்ணா மாணிக்கமோ
உளர்ந்தனில்மால் செய்கொழுந்தோ உற்றமதிமுகத்தாளோ
குளிர்ந்தபரி மளக்கொழுந்தோ கோவரசர் நாயகமோ
தளர்ந்தகுடித் தாயுமன்று தாலாட்டி வளர்த்தனரே

வேறு

வளர்த்தார்மதன னப்பிடேகமென்ன மாதேவியாளை மணித்தொட்டிலேற்றி
உளத்தாதியர்கண் மகிழும்படிக்கே யுற்றவள்தள்ளி நடையிடக்கண்டு
தளர்தாமரைத்தா ளெனத்தாளதனிலே.தண்டைகிண்கிணி பாடகந்தானணிந்தும்
களுத்தானெருக்கப் பலபணிபூண்டு காதோலைரத்ன தங்கந்தானுமிட்டார்

தானேரினுறைபஞ்ச வண்ணக்கிழீயுந் தன்னடைகண்டுநடை பெற்றவன்னமும்
கானேயுறைகின்ற மானும்மயிலுங் கருதியபூவையுங் கண்போல்வளர்ந்து
தேனேயனைய வமுதமுமூட்டிச் செவ்வாய்திறந்தின்ப முத்தங்கொடுத்துத்
தானேயனையநல் வண்டலிற்பாவையைத் தாலாட்டியிருகையி னாலேயணைத்தார்

கையாலணைத்துவளர் சேடியர்கள்தாயார் கால்வருடமேல்வருட வாலைமதிபோல
பையத்தவழ்ந்துங் கிடந்தும்மிருந்தும் பார்நின்றெழுந்தும் விழுந்தும்புரண்டும்
கையைத்திறந்தும் மறந்துஞ்சிறந்துங் காலோட்டமோடிச் சிரித்துங்கனைத்தும்
வையமெய்துற்று வளரன்னமெனவே வளர்மாதேவிக்கைந்து வயதுவந்தனவே

வந்தைந்துவயதிந்து சந்தம்பொருந்திவளர் மகவினிற்றந்தைதாய் மகிழிவினிற்றுஞ்சி
சந்தம்பொருந்துசெந் தமிழினாடகமுடன் சலசலோசனர்சுதன் சார்வேதமுடனே
அந்தம்மிகுந்திந்த விந்தைநடமாடிடற் காசிரியரொருவர் விரைவாகவரவாக
வந்தங்கழைத்தில்லிடந் தங்கவைத்து.நல்வாரநல்லோரை நல்லோருரையதாக

வேறு

உரைபெறுநன் முகூர்த்தமதி லுபாத்தியா ருடனிருந்து
கரிமுகற்குப் பூசைசெய்து கருவிழியாள் மாதேவிக்கு
வரியகர வேடெடுத்து வாய்ப்பாட முடனோதி
அரியநில வெழுத்தெழுதி யறிவுறவா சகமுரைத்தார்

வாசகமுற் றுறப்பயிற்றி வடகலைச்செந் தமிணூலும்
வீசுபுகழ் மதநூலும் வேதமுறை யுறைநூலும்
ஆசுகசித் திரமதுர மத்தொடுவித் தாரகவி
காசினியோ ரதிசயிக்கக் கற்றிடக்கற் பித்தனரே

கற்றறிந்து பின்னுமெண்ணல் கதித்தெழுத லிலைமலைதல்
உற்றமலர் தொடுத்திடுத லோதுமியாட் பாடிடுதல்
சொற்றமணிப் பந்துகொண்டு தூக்குவிதம் பாடிடுதல்
நற்கலை யோரறுபதுட னாற்கலையுந் தானறிந்தாள்

தானறிந்த பின்குருவின் தக்ஷணையு முதவிவிட்டு
மானனைய விழியாழை மதுரபண்க ளிசைபாட
ஈனமறக் கற்றறிந்த ராகவல்லோர் தனையழைத்து
தானவெகும திகொ்டுத்துத் தங்கவளைப் பெண்பிளையை

இளையுறுமின் னிடையாளை ராகதாள நடனசுதி
விழைவுபெற வுதவுமென்ன வித்தைகற்ற கீர்தவல்லோர்
இளையினல்ல அசைவுகட்டி யேமுறுப்புக் குறையாமல்
இழையாரு மிடறிசையாய் ராகவிசை யரிதுரைத்தான்

வெண்பா

அரியகுர லதுதானசை யாதிசை யிசையச்
சரியாய் முகிலளகத் தாராளைக் -கரிகுவளைக்
கண்ணாளை மாதவியைக் காசினியிலே மிகுந்த
பண்ணேழும் பாடுவித்தான் பார்த்து

வேறு

பாடுந்நலபிற நீர்மையுந்தாளம் பஞ்சுரங்கொல்லி பழந்தக்கிராகம்
நீடுந்நடராகமொடு நட்டபாடை.நேர்திறம்விளரிஇ பியந்தையாழின்திறஞ்
சாடுகவிதைமுரற் கைமுடுகியல்.தக்கதோர்முற்பா தொகையிதிகாசம்
தேடவரிதானனற் கேகயத்தோடு.சிரநெற்றிநெஞ்சுநா மிடறண்ணநாசி

நாவினந்தாதி யொடும்பதினெட்டாய்.நண்ணுபண்ணுங் குறையாமுறையாக
நாவுபூவாளநற் சுத்தவசந்தனு.நாவாரதேவாரமுட நாட்டைநடமும்
நாவுகாகன்னடங் கவுடங்குசாரி. நன்றானகொன்றைக் கிரிமானகேசரி
நாவாருகெண்டிச் சிகண்டிமுகாரி.நாடியபாண்டிய கேசரிபார்புகழ்

பார்புகழவல்ல மாமத்தமாசேரியும்.பாரதநாளுற்ற நாராயணமும்
பார்புகழவல்ல மாகாரமுதாரியும். பரராசசேகரன் நருகீர்தசாரமும்
சீர்பெறநஞ்சஞ்ச விஞ்சுகண்வாஞ்சியுஞ்.சிற்றிடையசைத்திசைய வொத்தடிமிதிக்கச்
சீர்பெறநல்லதோர் சாளங்கமக்கிரி.சீச்சிலிகாகத்தொனி வயிரம்மொழி

வயிரஞ்செறிபிற வந்தமல்லாரிமாரி காம்போதியாம் பேதமாசாரி
அயிலம்புரைகொம்பு கம்பாகசுதிசுதி யாடுதாளஞ்சுழற் சாமந்தமல்ரி
பயிரசாவேரியுஞ் சுத்தசாவேரியும் பண்டிதராகவே கொண்டபல்லிராகமும்
செயிரற்றுவாழ்வு வடிவுபொருந்திய சேயிழைமாதேவி பாடாடுவித்தான்

வெண்பா

வித்தார வண்டுகுயில் வெண்சங்கு மூவோசை
வைத்தாரை யின்பமெமு மாதெவிக்குச்- சுத்தமுடன்
காகத்தொணிக் காகசரங் கண்டபல ராகமொடு
வாகுடனே பாடுவித்தான் மற்று

மற்றுமுள்ள பாரதண்டி மாடகயாழ் பலவீணை
எற்றுதாளங் காளமேள மிசைவுகரத் திசைவுடனே
கற்றதெல்லா மிகவியற்றிக் காசினியோர் மனமகிழ
நற்றமிழ்சே ரிவையனைத்து நற்பாடல் வகையடலே

அடல்மதனன் சிலையனைய வரும்புருவம் வேறாக
மிடறசைய விழிபுரள வெள்ளெயிறு மொளிவிழங்க
உடலொசிய விடையசைய வுயிருறுப்புக் குறையாமல்
மடலவிழ்பூங் குழன்மடவாள் மாதெவியைப் பாடுவித்தான்

பாடுவித்தா னியலிசையும் பலகலையும் பயின்றதன்பின்
தோடுசுற்றுங் குழல்வாரிச் சொருகவளர்ந் ததுவயது
நீடுபெற வேழாண்டு நிரம்பியது பெய்வளைக்கு
நாடகத்தின் வகையறிய நட்டுவனை யாராய்நதார்

ஆராய்ந்து மிதற்குரியா னதிவிரதை மணவாளன்
சீரான சோழதுரைத் திருவிசையம் பெற்றுடையான்
ஏருறுகா லிங்கனென்பா னிதற்குரியா னெனவழைத்து
மாரனபி டேகமென மாதவிக்கு நடமிடென்றார்

மாதெவிக்கு நடமிடென்ன மனமிசைந்து நட்டுவனு
ஓதரிய நால்வேத வோதிமனந் தெளிந்துமிகும்
ஆதிமுத லந்தமதா யலகெடுத்து நாள்குறிக்கும்
வேதியர்கள் சிகாமணியில் விரைவினன்னாள் விதியுமென்றார்

விதியுமென்ன வரவழைக்க வேதியன்சித் திரைமாதம்
பதியுமுதற் பக்கமதிற் பஞ்மியோ டத்தந்திங்கள்
கதிமையுள்ள வாரமொடு கனமேட முகூர்த்தமதிற்
புதுமைபெற நடனமது பொருந்திடநாண் முகூர்த்தமென்றான்

முகூர்த்மென்ற மாதெவிக்கு முத்திளைப்பட் டிடைசேர்த்து
பகுத்தகெச்சை காலிலிட்டு பட்டுடையிற் கச்சைகட்டி
வகுத்தநல்ல சந்னமும் வளர்புனுகு நெய்யுமிட்டு
மிகுத்தமணி யாடரங்கின் மெல்லியலை நட்டுவனும்

மெல்லியலைக் கொண்டுவந்து மிக்கபொரி யவலுடனே
வல்லமத கணபதிக்கும் வாகுபெருசா முண்டிக்குஞ்
சொல்லியவந் தனபூசை தோமறவே நிரைவேற்றி
நல்லநாளி நட்டுவனு நடனமிட மாதெவிக்கே

மாதெவியே கணபதியை வல்லநல்ல சாமுண்டியைத்
தீதறவே நின்றாடித் திரும்பிநிரை கும்பிடென்று
பேதையிவள் கரம்பிடித்துப் பெருமகிழ்வி னாவதென்று
காதல்கொண்ட நட்டுவனுங் கம்பமது நாட்டுவித்தான்

வேறு

கம்பந்திகழவே நாட்டியபின்னே கன்குழைமாதெவி யாழாடரங்கின்
செம்பொன்றிகழு நற்கம்பத்தின்மீதே சேரடிவைத்தடி மேல்முடிதேடி
அம்பதும்மலர்க் காலொத்துவீசுத லானகாலொன்றுட னொன்றுமடித்தல்
மொய்பங்கமெங்குந் திரும்பவேவுத்தல் முரிவுசரிவு மிகவிடுவித்தான்

வித்தாரமாமிரு கைக்குத்திருப்புதல் மேனிசுழலப் பவுரியைக்காட்டல்
வைத்துமுன்போட்டங் குடன்றுதிருப்புதல் மாறுமொருமுழங்கா றனிலூன்றிச்
சித்திரமாகத்தொழுது முன்குந்துதல் சீராய்பவுரியி னேராயெழும்பல்
கத்திரம்போட்டங் கருந்தூசிபோலே காலுறக்காலுற வைத்துக்கவிழ்த்தல்

காலேபகிர்ந்துமுள நீளங்கொண்டே கருதியபாவிடங் காட்டிநடந்து
மாலுழந்தே கண்டவர்கண்மழுங்க மருவுசமநிலை மண்டலங்கொண்டும்
சேலிணங்குங்கண்ணி தன்னையருத்தித் திருப்பியேமுத்திறம் போட்டங்ககன்று
கால்தனைவீசிப் பவுரிவிடுத்தல் கம்பத்தொழிலில் வருத்துவித்தானே

தானேபவுரியைக் காட்டியெழும்பி சற்றேயொதுங்கியே சீராணியிட்டு
ஈனமறவேபிடித் தொருகாலை யேற்றியேகாலுக்கு மேலேசொருகித்
தேனார்மலர்போ லிருகரஞ்சுற்றித் திசையேவிசையிற் சிறக்குமழகாய்
நானாவிதமாய் மொழிமடவாளையே நட்டுவன்நாகரிகத் தோடிருத்தியே

நாகரிகத்தோடிருத்தி முன்னாக்கியே நல்லமுழந்தா டனிலொருகாலை
வாகுடன்காட்டியே வைத்துத்திருப்புதல் வலசாரியிடசாரி செய்துமடித்தல்
ஆகஞ்சிறக்கவே சாரியிற்சுற்றுத லதிலுஞ்சிறக்க கிறுகிறுத்தோங்கல்
ஏகமாய்த்தோணப் பிதந்தெத்திறுக்குத லிவ்வகையிங்கே வருத்துவித்தானே

இவ்வகைநின்றொரு கால்மடித்தேற்றுத லேற்றிப்புறத்தோ டிறுகவிடுத்தல்
மைவிழியம்பைக் கடைக்கேவிநிற்றல் மாலுறுசக்கரம் போலுறச்சுழலல்
கைவகையொக்கவே முன்னேர்முடித்தல் காலிற்றுடையிற் கடிதிற்பிடித்தல்
செவ்வியமாதேவியைத் தண்டினற்றொழில் சேர்வடத்தோடிடத் தோடாட்டினானே

வேறு

நானமிகுங் குழலியிந்த நாடகங்கள் பயின்றிடவே
தான்வயதங் கொருபதுவாய்த் தாரணியில் வளர்ந்திடவே
ஆனசெழு நீர்தனிலே யரும்பியதா மரைமுகைபோல்
மான்விழியாண் மாதெவிக்கு வன்முலைக ளரும்பியதே

வன்முலைக ளதுஅரும்ப மலர்குவளை விழிகுறித்து
வன்னருப்புப் புருவமுமாய் வருவிதமோர் பருவமுமாய்
வன்விழிக்கோ ரழகளிப்ப வந்துமத ராசனுந்தான்
வன்சமரம் பேவுதற்கு வருமளவு பார்த்தனனே

பார்த்தளவிற் றனதுகையிற் படையுமம்புங் கொடுஞ்சிலையும்
ஆர்த்தசெழு மதிக்குடையு மணிமகரத் துவசமுமாய்ப்
பூர்த்தகொம்பு போலசைந்து பூங்கொடியு நிற்பளவிற்
பார்த்தமத னிவளெம்மிலும் படைவலியளென நினைந்தான்

நினைந்தமத் ராசனுந்தான் நேரிழையா டன்னுடனே
முனைந்துபொரு திடல்நினைந்து முயன்றாலு முறைகேடாம்
எனுந்திறங்க டன்மனதி லெண்ணியின்னு மொருபோது
கனன்றெழுந்து பொருதிவள்மேற் கருத்தழிப்பே னெனப்போனான்

ஆனமெய்யிற் பல்லுறுப்பி லறிவுநெறி பூண்டதென்ன
கான்மருவு சுருழளக்க காரிகையாம் மாதெவிக்கு
ஆனநட ராகமுறை யறிந்தநட ராகவனும்
தானுநட ராசனெனச் சாரிபல வகுத்தனனே

வெண்பா

நாகரிகம் பெற்று நடமே பயிலுமதில்
மோக அரம்பை யென்முன் னாளில் - வேக
விடவிழியாண் மாதெவிக்கு மிக்கு வங்கசாரி
அடைய வருந்தினா னாங்கு

ஆனபடியிலேகை வைத்துநீக்குதல் லாடிப்பகர்ந்து வைத்தேயழகாக
மேனிமுரிவுடன் விட்டிருகைக்கும் மிகவேபகர்ந்து முன்நீக்குதலாக்கி
ஆனபவுரியைக் கட்டியொதுக்கி ஆட்டியேபோட்டந்தரங் கொள்ளுவித்துத்
தானேமறுவிதம் வேண்டுபவுரிகள் தாக்கியேமாதெவிக்குத் தாக்கினானே

தாக்கவலதுகாற் றன்னைமுன்சுற்றி சற்றேயக்காலினிற் றான்படமிட்டு
ஊக்கவேபக்கந் தனிலேபதுங்கி யுற்றமலர்க்கரந் தன்னையொப்பித்து
ஏக்கமுறவுடன் வேடிக்கைவிட்டுஊ இருந்துகுதித்துஊ வலப்பதந்தன்னை
காக்கப்பிறகுறச் சாரப்பவுரிகள் காட்டுவகைகளுங் கற்பித்துநின்றே

கற்பித்தனன்விட்டுக் கட்டியேசுற்றுஊக் கைகமூண்டாமலே மையலும்பெருக
முற்படத்தொங்கிப் பிறகேதிரும்பி முன்காலினின்று முரிவுஊவிடுதல்
நற்பதந்தப்பிஈ யெதிரேநடந்துஊ நாடித்துவைத்துத் தொடைதனிற்றட்டிஇஈ
சற்பம்படத்தை யொதுக்கினாற்போலேய் தானேயொதுங்கவுங் கொள்ளுவித்தானே

கொள்ளுவித்தான் முதற்சக்கரமண்டலங் கோலியதிற்பெரு மண்டிக்கையிட்டு
மெள்ளவெழுந்தபின் மேனிப்பவுரியை வீசியேகட்டியெதிர்த்த கால்வைத்துத்
துள்ளியேமுன்னின் றணங்கிரூஉகாலுஞ் சூழிடம்வீசிப் பவுரிவிடுத்துக்
கள்ளவிழுங்குழன் மாதேவிதன்னைக் கருதிப்பூச்சாரியன் கட்டுவித்தானே

கட்டுவித்தேமுற்றி மண்டலஞ்சுற்றிக் காலக்கரண வசைவிற்சுழன்று
தொட்டகாறன்னைப் பகர்ந்துடனின்றுஊ துய்யிரட்டித்துநற் றோகைகம்பித்துஊ
இட்டமுடநல்ல நாலடியிட்டு மிசையச்சுழன்றோ ரசைவிசைபோட்டும்
மட்டவிழுங்குழன் மாதேவிதன்னைஈ வருத்மறவே யிருத்தினன்வரிசே

வரிசையுடன்முன்பு வைத்துப்பிறகே வாங்கியேபக்கந் தனிலேயசைந்து
தருக்கியருக்கி வலக்காலைமுன்னே தட்டிச்சுழற்றியுட் கட்டிட்டுமெய்யைத்
திருகித்தவளவே யொருகித்திருப்பிச் சித்திரம்போல வொழும்பித்திரிந்து
அருமையுடன்காலை மும்முறைபோட்டுநல் லாட்டித்தமரித்தலு மாக்கினானே

ஆட்டியேநட்டுவன் றன்னிலுண்டான வருமைகளெல்லாம் வருவித்தபின்பு
ஏடார்கருங்குழன் மாதேவிதன்னை யியல்வாகவே யெழுப்பித்தானிருத்தல்
ஆட்டுதலோடுத லங்குமிங்காத லடிகரமூன்றாலூன் றாதல்மல்லெறிதல்
நீட்டும்பவுரிகள் கட்டியெழும்புத னீர்சுழல்வண்டுபோ லாட்டுவித்தானே

ஆட்டுவித்தானந் தரமாம்பவுரியை யதிலேயொருகா லொழித்தொருகாலை
பூட்டிபவுரி யிறுகவேகட்டிப் பொருந்தவொருகா றுடையிடந்தட்டி
நாட்டியேநின்றகால் தன்னைக்கடந்துஊ நயமாகவந்தர மாகநடந்தும்
சூட்டியிவ்வடைவாக வாசாரியத்தொழில் சொல்லியேயெல்லாம் வருத்துவித்தானே

தானாகமாதேவி யாடுந்தொழில்க டனக்கங்கிசைய வுதிரந்துடிக்க
நானாவிதமும் பயிற்றுங்குருவுட னல்லபலங்கள் நலங்கள்பெலங்கள்
ஊடானசுற்றங்க ளில்லங்டாங்க ளொக்கச்சிறந்தவியற் கும்பம்வந்தனம்
ஈனமறவெவ ரளவற்றதாக விசையிசைத்தாளம் யேந்திரதாளம்

தாளமெக்கோடு மத்ராடிதீவுடனே தழுவுறுஞ்சொற்பத சாரிகைதன்னுடன்
தாளஞ்சிறந்தவ யிர்க்கும்பதாளந் தரணிபுகழ வருமிந்துதாளம்
தாளமிகத்தாழு மண்டலதாளம் தாவியபூடண முடனங்கசாரி
தாளநற்பிரதான தாளஞ்சிறந்த சபிடசபிடேக சச்சாரிசாகோரி

சச்சவுடன்முன் கடைஇபித்தராவந் தன்னுடன்மிக்க தாளமுடன்மட்டை
இச்சையுடநல்ல சாரீக்கைதன்னுட னிசைந்ததோரானீ கனந்தம்பமாத்திரை
மெச்சுமெய்தாளங்கண் மேட்டியம்மாத்திரை மேலுள்ளதாள வகைப்படியெல்லாம்
அச்சுப்பதித்தென்னை மாதேவிதன்னைமுன் னடைவாகநட்டுவ னாட்டினானெண்ணே

வெண்பா

எண்ணு மெழுத்து மிசைமூன்றும் பண்ணேழும்
பண்ணமைந்த கூத்துப் பதினொன்றும் - வண்ணமுட
னுற்றபதி னெண்கலையு மோதியுவமையறக்
கற்றனளே மாதேவி காண்

வேறு

கற்றகலை யுற்றுமிளங் காவில்வஞ்சி யசைந்ததுபோல்
உற்றுமிக வளருகொம்போ . டுறவோடியுடன் றளிர்த்துக்
குற்றமற்ற சந்தனப்பூங் கொம்பினிடை வளர்ந்தனபோற்
பற்றிவளர் மாதேவிக்குப் பருவமிது வானதுவே

பருவமங்கை யாம்பொழுது பரந்தெழுந்த கங்குல்களும்
உருமினெழு கருமுகில்நீ ருற்றதொரு சைவலமும்
பொருவிலிவை பொலிவழியப் புழுகொழுகு செஞ்சாந்து
மருவவின்ப மாதெவிக்கு மலர்க்குழல்கள் வளர்ந்தனவே

மலர்க்குழல்கள் மேகமென்ன மதிக்குறையொன் றுதித்துமங்கே
துலங்குவபோல் நுதலிலங்கத் துணைவிழிக ளதனருகே
இலக்கனெய்ய மருவலரை யிந்திரன்றா னேவுமம்பும்
விலக்குவில்லும் போற்புருவம் விழியும்மிகச் சிறந்ததுவே

சிறந்ததுண்டங் குமிழெனவே திகழ்மகரக் குழையிரண்டும்
நிறைந்த வள்ளை ஞாழலென்ன நித்திலம்போற் பற்களதே
உறைந்தமிர்தம் பொதிந்துவைத்த வொளிப்பவளம் போலதரம்
மறங்கொள்கொங்கை மாதேவிக்கு மதன்பருவ மானபொன்னே

பொன்னான தொடைபுனைந்து புலகியதிற் பூண்டவர்கள்
உன்னுமிரு கையாலே யுறவணைத்தால் வாங்கவொண்ணா
மின்னும்வன்னக் கமுகெனவும் மேவுசங்கின் றிறனெனவும்
பின்னுமந்த மததேவிக்குப் பணிக்கழுத்துந் தாவினதே

தாவலிசேர் மதகரியின் றரளமுறு கொம்பெனவும்
தீவலிசேர் மாரனது சிரமகுட வழகெனவுந்
தூவலெழ விறுமாந்து துத்திமிகு பொற்புமுற்று
தேவரம்பை மாதேவிக்குத் திரண்டுமுலை புடைத்ததுவே

புடைப்பளவிற் கருடனெதிர் புக்கெழுந்த கருநாகம்
உடனரையி னுட்புகுந்துஊ ஒளித்ததென மயிரொழுக்கம்
அடைவுபடக் கடிதடமு மதின்படங்கள் விரிந்ததென
இடையும்வஞ்சி யெனவளர்ந்து மியற்கருமை யுற்றதுவே

உற்றமுலைக் கழுத்தளவு முற்றதேமற் பொற்புமிக
சிற்றிடையு மழகொழுகச் செம்பதத்தின் பஞ்சொழுக
மற்றுமெய்யு மொழிபொழிய மாறுகொண்டோர் மடலெழுதப்
பொற்றொடியாண் மாதேவியும் பூமகள்போற் பொலிந்தாளே

பொலிந்த வயதவளழகும் பொற்பிடை மிட்டழகும்
பொலிந்திருக்க விருந்தினனாய்ப் புக்கராக தாளவல்லர்
பொலிந்துபுகழ்ந் திடத்தனக்கு புதியராக தாளநடம்
பொலிந்துகாட்டு நட்டுவனை பூட்டுமினி விருதையென்றாள்

வெண்பா

விரிந்திடு நற்கற்கை வியநடனஞ் சங்கீர்தம்
புரையறக் கற்றோர்புகழ் பூவுலகிற் - சிரமணியாய்
மட்டவிழ்தார் பொன்னிவள நாடராசனிடம்
கட்டுவிரு தென்றாளே காண்

எனன்றவிவள் மொழிப்படியே யியல்நடன ராகவனும்
அன்றவளுக் காபரண மணிபெறவே யணியணியாய்
நின்றிலங்கப் பூட்டியாட நின்றுகண்ட நட்டுவர்கள்
மன்றினட ராசர்கள்முன் மருலுவிரு திறுப்போமென்றே

விருதிடுநற் சோழராசன் மேவுநகர் வாசல்சென்று
திருவுளங்கொண் டுலகுயிர்கள் செழிக்கவொரு குடைநிழலில்
அரசுசெய்யு மரசரேறே யாண்டவனே வேண்டுதவி
புரியரசே யெனப்பதத்திற் போற்றியூழி வாழியென்றார்

வாழியென்னப் படிபுரந்தோன் வந்வித மறையுமென்ன
வாழ்வுபெற வேழையர்க்கு மனமிரங்கி மண்டலங்கள்
தாழவென்றி யரசுபுரி தனிக்கொடியிற் புலிபொறித்தோய்
சோழதுரை யேயடியேம் சொல்வசனங் கேட்டருள்வீர்

சொல்லுவது கேளுமையா சொல்லிவல்ல வுந்நாட்டில்
மல்லுறு மார்பழகழக மாதேவியென் பாளொருத்தி
எல்லையில்லா விருதுபெற்று மிப்போது முமக்குமுன்னே
புல்லாகவுமை யிகழ்ந்தாள் புகலவந்தோ மெனவுரைத்தார்

வந்தசில நட்டுவர்சொல் வார்த்தைமன்னன் கேட்டுளத்தில்
கந்தமிகு குழன்மடவாள் கற்றவித்தை யவ்வனைத்துஞ்
சந்தேகந் தீருமுறை தானறிந்து நானுரைப்பேன்
முந்தவேண்ட நீங்களென்று முடியரசன் விடைகொடுத்து

விடைகொடுத்துச் சோழதுரை மீண்டுமவர் தனைப்பார்த்து
மடலவிழ்பூங் குழன்மடவாள் மாதேவியாள் நட்டுவர்க்கு
உடைகள்கட்டி தூக்கியது முண்டோமற் றெனச்சிரித்து
நடைவிருது பெற்றவேறு நட்டுவரைப் பார்த்தரசன்

உரைபுரிவா னீங்கள்விரை வுற்றுமாதேவியி னடனம்
அரிதறிந்து வருவீரென வவர்களவ ளிடம்போகத்
திருவனையாள் கண்டுராகச் சீரெடுத்து நடம்பாடல்
அரியகலை கண்டுமகிழ்ந் தரசுகோயி லடைந்தனரே

கோயில்சென்று சித்திரமுங் குலவவெயி லொளிவீசும்
வாசறடை விடநடந்து மாமலையால் மழைகாத்தோன்
வேயிலதரத்தை வைத்தோன் வெண்ணையுண்டோன் மண்ணையுண்டோன்
தாயெனவந் துதித்தரசன் றாழிணையில் வாழியென்றார்

வாழியென்னப் படிபுரந்தோன் மற்றவர்தம் முகம்நோக்கி
ஆழியங்கை மாதேவியா ளாடல்களும் பாடல்களும்
வாழுநல்ல செந்தமிழும் வடகலையும் ராகமுடனன்
தாழ்விலையோ சித்திரரே சாற்றுமெனச் சாற்றலுற்றார்

சாற்றுவதென் னரசேகேள் சங்கீர்த்த நடனமுடன்
தோற்றிவரு மழுகுமலர்த் துய்யதிருமகளு மொவ்வார்
ஏற்றரிய பண்பாட லிருசெவியிற் கேட்டறியோம்
ஆற்றரிது காணரசே யடியேமு மறிவழிந்தோம்

அறிவழிந்தோ மலையதனி லலையுமரக் கலமானோம்
பொறிகலங்கி யுள்ளளிந்து போந்தோநா மன்னவனே
குறிநெறிக ளுறுப்பதொன்றுங் குறைகளில்லா மாதேவியின்
செறிபுகழு நடங்காணச் சிந்தையென்று தெண்டமிட்டான்

வெண்பா

தெண்டனிட் டவ்வளவிற் சீரேறு மாதேவி
எண்டிசையும் போற்ற வியற்றுநடங் - கொண்டு
தழைத்தபுகழ் நட்டுவனைத் தானோடியிங்கே
அழைத்துவரச் சொன்னா னரசு

அரசனுடை மொழிப்படியே யழைக்கவந்த நட்டுவனும்
விரைவினுடன் பதம்பணிய விறல்நடரா சனைப்பார்த்து
மரகதம்போற் குயில்மொழியா மாதேவி தன்னுடைய
பரதநடங் காணுவம்நாம் பரிவுடனே யழையுமென்றான்

அழையுமென்ன வரசனுட னடல்நடரா சனுமுரைப்பான்
உழையைவென்ற வேல்விழியார்க் குவமையுரு வசியுமொவ்வாள்
பிழையறவோ ரரங்கம்வைத்துப் பீடிகைமே லெழுந்திருந்து
மழையைவென்ற கொடையானே மகிழ்ந்துநடங் காணுமென்றான்

காணுமென்ற நட்டுவற்குக் காயடைநல் லுபகாரங்
பேணிமுன்னே யளித்திருந்து பெரியோனும் விடைகொடுத்து
ஏணிலரங் கதுசமைக்க வெழிலுடைய மாந்தையரைச்
சேணிலொக்க வழைத்துவரச் சிலதூதர் தனைவிடுத்தார்

தூதுசென்று கம்மாளர் தூயதெரு வுட்புகுந்து
காதுமொரு வேல்விருது காவலவ னுரைகூறி
மோதுவலி கொண்டவரில் முதன்மைபுரி தபதியரில்
ஓதநல்ல மூவரையு முற்றோரையு முடனழைத்தே

அழைத்துவந்த தூதுவரு மழைக்கவந்தா சாரியரும்
தழைத்தபுக ழரசனது தாழ்பணியப் பார்த்தரசன்
இழைக்கணி நன்மாதேவி யினியநடம் பார்ப்பதற்கு
அழைப்பதற்கோ ராடரங்குஊ அமைத்திடுநீ ரிடமுடனே

இடமுடனே யென்றுசொல்லி யேவுதூதர் தனையழைத்து
வடகலைநூல் வல்லமறை வாணரில்நல் கேசரியைத்
திடமுடனே யழைத்திடுவீர் சேவகரே யெனமொழிய
அடைவுடன் சென்றவர்கள்மறை யவனையழைத் திட்டனரே

இட்டமுடன் சோதிடத்தி லேறுபுகட் கேசரியு
கிட்டியரசனை வணங்கக் கிளருமறை வல்லவனே
மட்டவிழ்தார் மாதேவி வகுத்திடுமா டலுக்கரங்கு
திட்டமுறக் கட்டுதற்குத் தீதிலிடமுரையு மென்றான்

என்றரசு புரியமறை யெடுத்தோதும் வேதியனும்
நன்றெனவே கணிதப்படி நாடிமாதம் வைகாசி
சென்றிடுபத் தாந்திகதி சேருசனி ரோகணிநாள்
இன்றுநல்ல முகூர்த்தமிதி லியற்றிடலா மாடரங்கே

ஆடரங்கே யென்றிடவு மமைந்துநின்ற தபதியர்கள்
மாடகூட மண்டபமு மணிமதிலு மதிலுறுப்பும்
ஆடல்புரி மண்டபமு மரியதம்ப நாட்டியொரு
கூடமொடு வீதிபல கொள்ளிடுமா சனமுமிட்டார்

இட்டரசு கம்மியர்க ளியன்றநிலை படிகதவு
திட்டமுட னியற்றியிந்தச் செகதலத்தோர் மதிக்கநல்ல
பட்டமுறு சாளரங்கள் பற்பலசிற் றிடவறைகள்
மட்டுநவ மணிகளினால் மதகரியின் கொம்புறவே

கொம்புநிரைத் தம்பமதில் கோலமணி திருத்தியிடை
பம்புபசும் பொன்னுருக்கிப் பற்பலசித் திரமெழுதி
தம்பமதிலறைய வொண்ணாத் தங்குபது மைகளெதி
அம்புவியிலறைய வொண்ணா வாடரங்கொன் றாக்கினரே

ஆக்கமுற்ற நடனசபை யாக்கியவா சாரிகளும்
தேக்கமுற்று மனங்களித்துச் சிறந்தவிந்தச் சபைபோலே
ஆக்கிடமொன் றில்லையென்று அரியசிரந் தனையசைத்து
நோக்கிவந்தங் கரசனிரு நுண்மலர்த்தாள் வணங்கினரே

வணங்கியெழுந் தரசேகேள் மாகவிந்திர சபையதுவும்
இயங்காதிவ் வாடரங்குன் னிசைவினமைத் தோமெனவே
இணையறு நல்லுபகார மீந்தவரை விடுத்தருகில்
குணமோடு நின்றுபுகழ் கோலமறையவர்க் குரைப்பான்

மறையவரே மாதேவிதான் மகிழுநடமிடவு நன்னாள்
அறைவீரென் றிடமறையோ னாய்ந்து கணிதப்படியே
முறையிலிந்த வாவணியின் முற்பதின்மூன் றாந்திதியில்
நிறைவான நாளிதொன்று நிச்சயிக்கத் தொடருதுகாண்

தொடருநின்று வருமதியிற் றூயநல்ல திருவோணம்
அடரநின்ற வியாகமது மகோரைகன்னி முகூர்த்தமதில்
வடிவுளசூ ரியனுதித்து வருமொருநா ளிகைபத்தினில்
நடமிடு மாதவிக்கரங்கு நாளிதுபோற் கிடையாதே

கிடையாதிம் முகூர்த்தமெனக் கிளர்புகழான் மன்னவனு
அடைவான மாதேவிக்கு அரங்கேற்றென் றாளைவிட்டு
திடமுடனே யாவர்களுந் தெரியவுரைப் பீரெனவே
முடியரசன் பணிவிடையாய் முற்றூதர் போயினரே

தூதர்சென்ற பின்னரசன் சோடினையில் வல்லவராய்
நீதிமண மாலைகும்ப நிறைகவரி பட்டுவகை
ஓதுபணி வகைமாலை ஓங்குபுகழ் புனுகுபன்னீர்
தாதுமலர் முதலடைவே தந்தழகு புரிவித்தனன்

வித்தகமா யலங்கரிப்போர் வீதியெல்லா மலங்கரிக்க
ஒத்தவிந்திர லோகமென்ன வுற்றபரி மளமழகும்
வைத்தபுகழ் மெத்தரங்கின் வடிவுகூறி முடியாதே
இத்தலத்தி லில்லையென் னரற்றின்வொளி மிகுந்ததுவே

ஒளிவிளங்க வுலகினுள்ளோர்க் குரைத்திடச்செல் தூதுவர்கள்
வளிநடந்தங் கரசர்மறை வாணர்முத லானவர்க்கும்
வழிவழியா யறைந்தரசன் வாசல்வந்து வணங்கிநிற்க
அகளிமிகுவிஞ் சயனொருவன் அரசன்மனை வாசல்வந்தான்

வந்தவனவ் வளவர்பிரான் வாசல்நின்றோன் தனைப்பார்த்து
எந்தன்வர வதனையுந்தன் ராசனிட முரையெனவே
விந்தைபெற வுரைப்பளவில் வேந்தனிட மிவனடந்து
வந்தனன்விஞ் சையனொருவன் வாசலென்று சொன்னானே

சொன்னளவி லவரையிங்கே சுறுக்குடனே யழைத்திடுவாய்
என்னவவ னுடன்மீண்டங் கிறையருள்காண் வரவெனவே
மண்ணுவித்தி யாதரனும் வாசல்பல நிலைகடந்து
சென்னில்வேந்தன் முன்னில்வந்தான் செல்வனும்பார்த் தேதுரைப்பான்

உரைத்திடுநீர் யாரெனவே உம்பர்பதி தன்னிலுள்ளேன்
தரைத்தலத்தின் மாதேவியார் தாண்டவத்தைக் காணவந்தோம்
தரைபுகழு மரேசேயென்னத் தவிசிடுவித் திருத்திநல்ல
வரைத்தனத்தாள் மாதேவியின் வரன்முறையை யுரையுமென்றார்

உரையுமென்றங் கரசுரைப்ப வுள்ளபடி விஞ்சையனும்
வரைபொறித்த புகழுடைய மன்னவனே மாதேவிதான்
அரம்பையரி லுருவசிகா ணன்னாளிந் திரன்சபையில்
மருவிநட மிடும்போது மகதியாழ் நாரதர்பாட

நாரதர்யாழ்ப் பாடலிவள் நடனமிடும் போதுசபை
யாரநின்ற சயந்தனைப்பார்த் தாசைகொண்டு மயங்கினள்காண்
நாரதரும் யாழெறிந்து நானிலத்திற் சயந்தனுடன்
வாரமுற்றுப் பிறப்பீரென்று வன்சாப மிட்டனரே

வன்சாபத் தரம்பையவள் மாதேவியாய் பிறந்தனள்காண்
மின்னாள்தான் நடனமதை மேதினியோர் பார்க்கரிதே
மன்னவனே யெனவுரைக்க மன்னவனும் பின்னுரைப்பான்
அன்னதெனிற் சயந்தனெங்கே யறைந்திடும்விஞ் சையனேயென்றான்

விஞ்சைமிக்க சயந்தனுமுன் வேயாகவே முளைத்து
கஞ்சமலர் வழுதிதிருக் குடைக்குநல்ல காம்பாக
எஞ்சிவந்தோர் வெட்டிடவே யெழின்மருவு சயந்தனவன்
விஞ்சியபொற் கோவலராய் மேவியங்கே பிறந்தனனே

பிறந்தவந்தக் கோவலனார் பெண்ணணங்கு கண்ணகையை
சிறந்துமண முடித்தகதை தெரியுமும துளத்தலவோ
உறைந்தவிந்த மாதேவிமே லுறுமயல்கொண் டணைந்தவர்கள்
துறந்துநிதி யளகழிந்து துன்புறுவ ரென்றனனே

அன்னவனீ துரைத்தளவி லரசனுநன் மனமகிழ்ந்து
மன்னமதி தினகரன்போல் வன்னப்பட்டுக் குடைநிழற்ற
மன்னர்மறை யோர்முதாலாம் வாணர்பல நாடகர்கள்
பின்னெவரும் வந்தணியாய்ப் பேரவையில் நண்ணினரே

நண்ணுமதி யெனவரசர் நன்கமைச்சர் தற்சூழ
எண்ணரிய தாரகைபோல் யாவர்களுந் தானெருங்க
கண்ணுமனமுங் களிக்கக் காட்டுமந்த அரங்குதனில்
வண்ணநறுங் குழன்மடவாள் மாதேவியை யழையுமென்றான்

அழையுமென் வரசனுரை யானபொழு தவரேகி
குழையையவென்ற விழியாளைக் கொங்கைநல்ல மங்கையரை
இளையைவென்ற விடையாளை யேந்திழைமா தேவியைக்கண்டு
தழையநிலம் புரந்தரசன் தானழைப்பா ரென்றுரைத்ததார்

என்றுரைத்த மொழிகேட்டுஊ இசைந்தவர்க டனையனுப்பி
மன்றலணி பூங்குழலாள் வாசனைநீ ராடவென்று
தன்றுணையாந் தோழியர்கள் தற்சூழச் சென்றரிய
பொன்றிகழ் மஞ்சனச்சாலை போயிருந்தாள் பொற்கொடியாள்

பொற்கொடி மாதெவியினது பூங்குழலை விரித்துதறி
மற்றொருத்தி தன்துகிரால் வகிர்ந்துபுழு கெண்ணையிட்டு
சுற்றசைவு பெறுமருங்கிற் சந்தனத்தா லேதழுவி
உற்றமஞ்ச டடவியுரத் துறுதயில மூட்டினளே

ஊட்டிநல்ல மருக்கொழுந்து மூறுநல்ல மல்லிகையுந்
தேட்டமுற வாசனையின் செந்துநல்ல பூவகையுந்
ஆட்டுபன்னீ ருடனளவி யம்பொற்குடத் தூறவைத்து
நாட்டுநட மாதெவியி னறுங்குழற்குச் சொரிந்தனரே

சொரிந்தநன்னீர் தனையுலர்த்தி சுகந்தமஞ்சள் குளிப்பாட்டி
விரிந்தவிளந் தென்றலிலே மென்குழலை விரித்துதறி
பரிந்துநின்றோர் தோழியினிப் பைம்புதுநீ ராட்டுமென
வருந்துமரு கொருதோழி மாசில்லாத நீரெடுத்தே

நீராட்டி யீரமொற்றி நிலவியபூந் துகிலெடுத்து
வாராருங் கூந்தலுக்கு மணங்கமழும் புகையூட்டி
ஏராருமயிற் சாந்தும் மிசைவினல்ல மான்மதமும்
ஆரணியு மாதேவியி னருங்குழலிற் சேறுசெய்தார்

சேறுசெய்து மயிர்முடித்துச் செங்கழுநீர் பிச்சிவெட்சி
நாறுமலர் மாலையிட்டு நல்லமல ரிதழ்செருகி
கூறுமிரு நுதற்பிறையுங் கோலமயி லெதிர்பட்மும்
வேறுசுறா நாகபடம் மிக்ககுச்சும் பொற்புடனே

பொற்புமிகு தலைக்கோலம் போதுமெனத் தானணிந்து
நற்குழையிற் பொற்றோடு நன்னுதலிற் சுட்டிவரி
ப்ற்றுசிந்தூ ரத்துடனே பலவணிக ளூரமணிந்தும்
ஏற்றுகரத் திடுவளையும் மிறைவிரலில் மோதிரமும்

விரலணிகொள் பதச்சிலம்பும் வீறுதண்டை பாதசரம்
பரிவுபெறு சிறுசதங்கை பற்றுதொடை யாபரணம்
முரியுமிடை யுடைமீது முற்றிழைசேர் மேகலையும்
வரியுமுலைக் கச்சுமறை வாருமரைக் கச்சுமிட்டே

இட்டபணி மாதேவியு மிசைவினொன்றுங் குறையாமல்
இட்டுடனே கூடிநட ராகமாடுந் தோழியர்க்கும்
இட்டமுட னணிகலங்க ளெடுத்தணியு மெனக்கொடுக்க
இட்டமுடன் றோழியரும் ஏற்றணிந்தார் கோலமெல்லாந்

கோலநட ராகவல்லன் குறித்தகுரு நட்டுவர்க்கும்
சீலமுற தாளமேளஞ் செய்துநிற்கு நட்டுவர்க்கும்
தோல்வியில்லா ராகவிதஞ் சொல்லவல்ல நட்டுவர்க்கும்
பாலுறுவீ ணைகள்பயிற்றும் பற்பலவன் நட்டுவர்க்கும்

பற்பலநன் மாலைமுத்தற் பட்டுவகை முதலான
பற்பொருளெல் லாங்கொடுத்துப் பாங்கழைத்து மாதேவியும்
ரற்றினதண்டி மீதேறி யிசைந்துவரும் தோழியர்கள்
நற்குடை சாமரமிரட்ட நட்டுவர் வாத்தியமுழங்க

வாத்தியமும் வரிசைபெற மாதர்கைகா ளாஞ்சிவர
ஏத்திடுவோர் சேடியர்கை யிசைநந்திடுமா லாத்திவர
பூத்தமதன் தென்றலின்மேற் பூம்படைக ளேவிவர
சாற்றரங்கின் வாசல்வந்து தண்டிகைவிட் டிறங்கினளே

தண்டிகையி னின்றிறங்கித் தங்கக்குயி லாமெனவே
எண்டிசையும் புடைபோற்ற விலங்குமணி யாடரங்கில்
மண்டுவலக் காதலனை வைத்துமுன்னே வழித்தூணின்
தெண்டிரைவாழ் திருவெனவே சேர்ந்துநின்றாள் மாதேவியும்

மாதேவிதூ ணருகிடமாய் மருவிமன முருகிநின்று
தாதியர்செய் வரிசையொடு தரணிமன்னன் கொலுவிருக்க
நீதிமன்னர் பலர்சூழ நிரைவிருதுக் கொடிப்பறக்க
ஆதிநட மாதேவியு மரசனைமுன் னிறைஞ்சினளே

இறைஞ்சிநிற்கு மவ்வளவி லேருறுவா ரிகளேழும்
சிறந்தமுகி லோரேழுஞ் திடுதிடென வார்த்தனபோல்
புறம்படவா ரிட்டிறுக்கு போனபல வாத்தியமும்
அறைந்தவந்தத் தொனியதனா லதிர்ந்தனவே யிவ்வுலகே

உலகுதனிற் கண்ணகையா ருற்றுமணஞ் செய்யவந்த
நலமறையோன் விதிப்படியே நாலாநாட் சடங்குதனில்
இலகியதோர் மணக்கோலத் திருக்கின்ற சமயமதிற்
குலவியதோ ரோசையது கோவலர்க்குக் கேட்டதுவே

கேட்டதற்பி னிந்தவொலி கிளரும்வித மேதெனவே
ஓட்டமதிற் றானோடி யுற்றறிந்து வாருமென்ன
வாட்டமில்லா வொருகோடி மாதூதர் தானோடி
மீட்டுவந்து கோவலற்கு விளம்பினரே யுறுங்கருமம்

உறுவசியோ மேனகையோ வுள்ளவழிச் செந்திருவோ
மறுவிலாத சானகியோ மாதேவியென் றொருகணிகை
எறிகிரண முடிபுனையும் ராசராச னெழிலகத்தே
குறுகியவ் நடனமிட்க் கொள்ளுமோசை யெனவுரைத்தார்

ஓசையுள்ள மாதேவியா ரொன்றுக்கொன் றானவிதம்
வாசமுறத் தானாடு மாநடன பாடல்களும்
வீசியகால் மிதிப்பதுவும் விதங்காணப் போவதுவோ
ஆசையதென் றேயுரைக்க வவர்போகத் தார்புனைந்தார்

தாரசைய முடியசையச் சங்கைபெறு புயமசையப்
பாரசையுந் தோழருடன் பரிவினல்ல குடையசைய
சீரியநற் கோலமுடன் சீரகத்தார்க் கோவலரும்
வீரமணித் தண்டேறி வீதியுள்ளே தோற்றினரே

வீதியுள்ளே கோவலனார் விரைந்துவரு மவ்வளவிற்
போதல்கண்டு மாநாகர் போவதுநீர் கருமமல்ல
மாதேவியின் றன்னழகும் வரிசைபெறு நாடகத்தின்
பேதகமுங் கண்டீரேற் பிழைபடுமிங் காகுவதே

பிழைத்துவரும் வாறறிந்து பேசிலவள் பிழைகாறி
மழைத்தடங்கண் ணியர்கணிகை மாதுமவள் மாயமுள்ளாள்
புழைத்தடக்கை மாமருப்பாம் புணர்முலைசொற் கரும்புநிகர்
அழைப்பளவள் மால்பூட்டி யடியிடவு மாகாதே

அடியாகா தெனவுரைக்க வழகொளிசேர் கோவலரும்
கடிகமழு மலரழக்க காரிகையாள் திருநடனம்
படியில்வெகு புதுமையென்றார் பார்த்துநானு மீளுகிறேன்
வடிவிருந்தும் மாயமதின் மனதுவழி போவேனோ

போவேனோ வெனவுரைக்கப் புகழ்வணிக ரீதுரைப்பார்
யாவரினு மதன்போல எழிலழகு முடையவர்நீர்
ஆரேறு முலையவளு மரம்பையரை நிகர்த்தவள்காண்
தாராளும் புயமுடையீர் சவையிற் செல்லலாகாதே

ஆகாது கடவுளரு மரிவைமய லறுக்கரிது
வாகான கணிகையவள் வளங்களெல்லாங் கவர்ந்திடுவாள்
போகுமொரு வசையுமனப் புத்திகெடும் சித்திகெடும்
பாகான சொல்நடனம் பார்ப்பதுவு மாகாதே

ஆகாதென் றேவணிக ரறைந்திடவுங் கோவலனார்
பாகான வுன்மகளைப் பரிந்துமணம் முடிப்பதனாற்
ஆகுமாறு சீதனமா யரும்பொருளுக் காகவினி
வாகான நடனமதை மகுணர்காணக் கூடாதோ

கூடாதோ வெனக்கறுத்துக் கோவலனார் கூறியதால்
மாடாக மாநாகர் வார்த்தையொன்று மோதமல்
ஊடாக விருந்தளவி லுயர்வணிக கோவலனார்
சோடன தோழருடன் தொடர்ந்துவரப் போயினரே

வரவறிந்து மாநாகர் வார்த்தைசொல்லக் கோபமுற்றும்
அரசுபுரி செம்பியர்கோ னரங்கமதி னெருங்குநடம்
விரைவுடனே பார்க்கவென்று வீரதண்டி தனிலிறங்கி
அரமனையிற் புகுந்தரசை அன்பினுறக் கண்டுநின்றார்

கண்டளவில் வணக்கமுறக் காவலனும் தலைசாய்ப்பத்
திண்டிறல்சேர் தோழருடன் சேரநிற்கவரசன் சொல்லால்
வண்டிறல்சேர் கோவலரு மன்னனுக்கோ ரயலிருக்கப்
பண்டைவிதி மாதேவியும் பார்த்தனளே கோவலரைப்

பார்த்தளவிற் கோவலரைப் பார்த்தனரே கோவலரும்
வார்த்தைவிம்மி மயங்கியவள் வாள்விழிக ளூறநாணிப்
பூத்தகொம்பு போலணையாள் புழகமெளச் சிரித்தளவில்
வாய்த்தசோழ துரைமுகத்தை வணிகேசர் பார்த்தனரே

வணிகேசர் பார்த்திருக்க வாழ்விழியாள் மாதேவி
தணியாத புகழ்வணிகன் றனதுவிழி யவளருகே
துணிவோடு படைச்சனங்கள் சூழ்ந்துநிற்கப் பலவணியாய்
அணியாகச் செலுத்துகின்ற வடல்நெடுவே லானதுவே

வேலான விழிகிளித்த விரகவெள்ளந் தனிநீந்திக்
காலானை யுண்டவிளாங் கனியதுபோ லறிவழிந்து
மாலான வழியொழுகி மற்றுநினை வற்றழிந்து
மாலாயன் கொன்றமர மாதேவியு மாகிநின்றாள்

நின்றளவின் மாதேவிக்கு நிரையின்முத்தி னுடைதுலங்க
மின்றிகளுந் திரைப்படத்தை மெல்லியர்முன் னேபிடிக்க
நன்றுநட மாட்டுவிக்கு நட்டுவர்க்குள் நடராசன்
என்றும்வரு சவைக்கவியை யெண்ணமுற்றுச் சொல்லினளே

எண்ணையிட்டு மத்தளத்தி லிருங்களரிச் சபைநடுவே
வண்ணமுற்ற சிலம்பொலிக்க வைத்தபதத் தொத்துவித்துப்
பெண்களிநற் சிரோமணியாம் பேரழகி மாதேவி
அண்ணல்சோழ ராசன்முன்னா மரங்கில்வந்து தோன்றினளே

அகவல்

வாழ்த்திடுமாநில மன்னர்கள்மன்னா.வீழ்மதுதாமரை விதுமுதுவதனா
மன்னியவுலகிலோர் மத்தமால்யானைபோல் எந்நாளுமாழு ராசகெம்பீரா
சூரியவங்கிச சொற்பரிசாதகர் போர்புனைநிதியந் பொதிந்திடுபுகழாய்
அடையலராய்வரு மரசர்கடங்கள் படையதுமுடிவுறப் பாய்புலிக்கொடியாய்

எறிவதுதரளமா யினத்திரைக்கொளிக்கும் பறைதருபொன்னிசேர் பண்புகார்நாடா
அன்றழிந்தலறுமப் பெரும்பசுவின்கன்றுக்கு முலையைக்கருணை செய்தீரா
உத்தமதுங்கா வுலகினில்முதல்வா முத்தமிழ்கடல்களை முழுதளந்தவனே
வெட்டியசடந்தனி விழுந்தலும்பழுந்தக் கிட்டியேபடைகளைக் கேடுசெய்பவனே

ஏழைகளுங்கணீ ரேதெனவினவிச் சூழ்துயர்துடைத்துச் சுகமளிப்பவனே
எத்தகையோரு மிளைத்திடக்காத்து வித்தககுடைநிழல் விடுத்துலகாண்டாய்
சுத்தனேயெளியவள் சொல்லியகீதமு மத்தனேயெனநான் மதித்திடுநடனமும்
குற்றமதுளதெனிற் கோடிநின்மனதில் வைத்திடாதருள் வாழியவாழியதே

வேறுநெடில்

வாளிநசைவென்ன சித்திரவண்டி னிசையென்ன
மறைநாலி னிடையாக வருசாமமென்ன
தாளின் நெடுங்கரிய மாயவனெடுத்துத்
தங்குதொறுமறுகூது விண்டு சுரமென்ன

சூழுமணியென்னவொலி சுடர்வேகமென்ன.தொனிகொண்டவெழுவோசை சூழ்ந்திததுவென்ன
பூழியனிருந்துள மயங்குதொனிசெய்தே புழகமெனவிருதனம் புரளநின்றனளே
வாரார்தடங்கொங்கை மாதேவியார்தானன்பாக மகிழ்வுற்று வருதெய்வபாடல்
சீராகவேசொல்லி யாடிடவிரும்புந் திடமேறுகல்லுமது தேன்போலவுருகும்

ஆர்மேவுசோழனுள முருகவேசூழ்ந்தோ ரறிவுநிறையழிவுமுள குறியும்வேறாக
பார்மேவுமனல்வெண்ணை போலுருகியுடையவே பைந்தொடிகைமாதேவி யார்பாடினாளே
பாடினாள்வாகமும் மதியுமெனமாயோன் பாணியெழுவேராலும் பண்பினில்மயங்க
ஓடியேநால்வகைப் பாடலும்பாடி யொற்றைவெள்ளைக் கொம்பதுடையானைப்பாடி

ஆடவேசற்றேயசைத் தடிகள்வைத்துஊ அகவுமயிலேறுமறு முகவனையும்பாடி
சாடுநவபாத்திரக் கோளீட்டமெனவே தானிட்டமேல்விருதையும் பாடினாளே
தானேயியலிசை ராகமும்பாடித் தன்னீர்மையசைவுச்ச ராகமும்பாடி
தேனாறுகுழலவள் நின்றசைந்தாடிச் சிறந்துடன்னேரான சௌரிசம்பாடி

நானாவிதம்வன்ன வொருராகமுற்றே. நடசாரியிடசாரி யுடநாடவாடிக்
கானாருகுழலிமட மாதேவிசற்றே கையுடன்கால்மெய் யசைத்துநின்றனளே
நின்றுலவிநாட்டை நடராகமும்பாடி நேர்சாவேரி சாவேரிசைஇபாடி
நன்றாகவேநல்ல நட்டுவனுமீதெங்கு நங்கைகற்றாளென்று மிங்கிர்தங்கொள்ள

குன்றாதுகாம்போதி வீம்பூதிபாடிக் குறையாதுதாளத்தின் முறையேகால்வைத்துச்
சென்றாகுமச்சவை யோர்திசைகண்டுமுருகவே சிற்றிடையசைத்து முளசித்திரம்வைத்தாள்
முழக்கமாய்நட்டுவன் முன்தாளம்போட முடுகுமத்தளதாள மிடல்பின்னேபோத
வழக்கமதான விலக்கணத்தின்படி மற்றிடத்தொருகையை வச்சித்துவாங்கி

அழுத்தமுடநல்ல வண்ணமதென்ன அடிக்கடியே காலசைத்துந் நடந்து
விழுப்பமுடன்றலை சற்றுமசையாமல் விலகினிச்சமநிலை மண்டலங்கொண்டாள்
மண்டலங்கட்டிச் சவனிக்கைசுற்றியே வருபவனிமாதேவி யார்வந்தபின்பு
விண்டங்கிருந்தவர்கள் மேலாகநீல விழிக்கணையளுந்த விழுந்தவர்கள்சோர

கண்டேயவள்தலை சற்றேயசைத்துக் கண்ணம்புநோகாமல் வண்ணம்புதீட்டி
வண்டேறுபூங்குழல் மாதேவியார்கொடிஇ வாங்கிஇஈமுகச் சாழையந்தொட்டுநின்றாள்
தொட்டொக்கவேயொரு கால்வைத்துநின்றுஊ.சூழாதிகொண்டொரு மண்டிகைபோட்டு
மட்டொக்கவிருகால் படத்தாற்சுழித்து மாசிலாமெல்லணை வைத்தேயிருந்து

வெட்டிமிகுந்தகா லத்துடன்காலை விலக்கியேபாத் திடக்கைவலக்கை
தட்டித்திரும்பியே யொட்டிப்பிரிந்துகா றாம்பார்த்திடவே தரித்துநின்றனளே
நின்றுடன்மெய்யைத் திருப்பிப்பவுரியை நீர்ச்சுழல்வண்டுபோ லேசுற்றிவாங்கி
வென்றிஇவரிசேர் விழிமடமாதேவி மேதினியோர்புகழ் சோழனைப்பார்த்து
நன்றனவேயொரு கால்பின்னின்று நயத்தொடுத்த தகவென்றுநடித்து

மன்றல்கமழுங் குழவிபண்பாடிஇஈ மகிழ்ந்துசுபத்தோ டிருகைகுவித்தாள்
கையைச்சுழித்திரு கண்ணால்மருட்டிக் கருத்துடன்வந்தொரு கைகொண்டசைத்து
மொய்யொக்கவே புயங்கந்தனைப்போட்டு முக்கமலப்பொற்பதா கையைத்தொட்டு
பையரவின்மெய்ப் படத்தைப்பளித்துப் பகிருமிடைசுழரச் சுற்றியோடி

ஐயவிவ்விடையீ தொடிந்ததாவென்ன அரசனைச்சென்று புட்பாஞ்சலிசெய்தாள்
அரசனிடநல்ல மாதேவியோடி யன்புடனேமல ராஞ்சிலிசெய்தே
வருவிழிநீலமும் வாயினல்லமிர்தமும் வச்சன்னவச்சத்தை நச்சத்தருய்ப்ப
சரதம்மிகவென்றும் மாப்படைவீரர்கள் சங்கசாலம்மங்கி மங்கைசாலம்முற
அரிவையர்தங்க ளருஞ்சிரமாதேவி யடிவைத்தரங்கி னடமாடத்துணிந்தாள்

வேறு

துணிவுறுபரிமள மிர்க்கமதவுரகிரிஇ சுழலவுமுழவொடு தொனியதிர
பணிவுறு நிலமகளதிரவும் பலவரைபடியொடு கிடுகிடுகிடெனத்
துணிவுறுதிசைபத கயகுலமுந்திசைசுழலவுமரவுகள் நெளிதிரவும்
அணிமதிகதிரொளி விதமுறமறையவு மடவிகள்பல தருவடியதிர

அதிரவுமிகுதியு மிருபதமொருவித மணிதருதண்டைகள் தொனிதரவே
மதிகடல்சுளிதர வடவைகளவிய வழிகளுநிலைபட வழிவழியே
விதியொடுமயனெழுதிய கரமெனவே வித்தகியித்தகை விழைவெழவே
மதிஅயலுறை பவர்கழும்விழவே மாதவியாடல் துதித்தனரே

துதிசெறிமணியென மன்னவனுருகச் சுருதியின்மாதெவி துரிதமுடன்
சுதிசெறிநட்னந் தொகுதொகுவெனவே தொந்தொந் திந்தகவென்றிடவே
நதிமிசைசுழலரி யிதுவெனவிருபத நகநகவென்பூ புகையெழவே
மதிவிதுமுன்னெதிர் புலபொறிசிதறிட வைத்தனள்சுத்த வளைக்கரமே

சுத்தவளைக்கர படமுறுவரவஞ் சுழலவும்வளை விழிபுரள்தரவும்
புத்தில்வதிந்தெழு பாம்பதுபோலப் புறமுன்னரு கிருபுறமுறவும்
தித்திமியெனவிரு கால்தனையெற்றி திகுதரியெனவொரு துரிதமொடே
வைத்தொருகால்வசை வுற்றொருகாலிசை வளையக்கட்டி யொதுக்கினளே

கட்டியொதுக்கிப் பின்னொருகாலைக் கருதியதுடைதனி லசைவுறவே
தொட்டொருபுறமுங் கட்டிநடந்தே தொங்கத்தொங்கத் தொம்மெனவே
தட்டிடுகரமிசை சிரமிசையுரமிசை தாளிணைதோளிணை தங்கிடவே
மட்டுறநவ்வி மறிப்பதுபோல்மிகு மாதவியாடின னாடகமே

ஆடினளேபல தாளவுறுப்போ டசைந்துடலவனி வசைந்திடவே
நீடினளேமுரி வோடுகைகட்டிஇ நிருத்தவிதம்பட நேர்பலவும்
நாடினபேரவை கண்டுமருண்டுளம் நயந்துபயந்து மொதுங்கிடவே
தோடவிழ்மென்குழன் மாதெவியார்குடைச் சோழன்முன்வந்து நின்றாடினளே

முன்னாடி.கெ.தச் சௌவுதௌப்படிஇ முக்கிரணத்தெதிர் சக்கரமும்
மின்னாடித்திசை யந்தரமாடிப் பிரளயசங்காரத் தொழிலே
மின்னாம்மைதுழி யொழிவதுபோல விகடதடக்க கனத்தொழிலாய்
தென்னாதெனவிசை நன்னாடகமொடு திரிசக்கர சித்திரமோடே

சித்திரமென்னமுன் னேயொருவிதமுஞ் சேர்மயிலொத்த வகைத்திறமும்
முத்தொழிலால்முரி வுத்தொழிலாடி முந்தியசரிகன கட்டொளிலும்
கத்திரநத்திர சித்திரமாடிக் கம்பிததுக்க கனத்தொழிலும்
சுத்தமுடன்முக மொத்தொழிலாடித் துவட்டங்கொண்டு முன்றொட்டனளே

தொட்டுநடந்தெதிர் நின்றுசுழன்று துடையிடைதட்டிப் புடைகொட்டி
விட்டகைதாளம் போட்டுநடித்து மீளவுங்கிட்டிச் சுற்றுடனே
விட்டொருபக்க மெழுந்துமேல்பாய்ந்து வீழுநிலத்தெழும் விரைவுடனே
மட்டொறுவொக்கப் புடையெதிர்சென்று மலக்கமெறிந்து திரும்பினளே

வேறு

திரும்பிஇசுயொருகாலை வீசிநடித்தாடித் திமித்தாவென் றேநடித்தாள்
இருந்தவர்மாலை விழியாற்குடித்தா ளெத்திசையோர்க்குநின் றேர்க்கப்படித்தாள்
விரும்பாதவர்க்கும் மருந்தாய்விழித்தாள் மிகுராகநட்ராசன் மிகுதாளமிடவே
கரும்பினினவான மொழியாடல்பாடலகள் கண்ணுக்குங்காதுக்குங் காணவொட்டாதே

ஒட்டியொருகாலைத் தட்டியேசுற்றி யோடியேமீளவு மொக்கநடித்தாள்
கட்டளைப்படியாடி மண்டலங்கொண்டு கையுமெய்யுங்கண்ணு மொத்துச்சுழித்து
விட்டொருபக்கத்திற் கைத்திறம்போட்டு மேலேவழிச்சிர வேடிக்கைபோட்டுத்
தொட்டிளமைக்கண் சுழரவிழித்தே தோகையசைந்து சுழன்றுநடந்தாள்

நடந்தொருகாலொக்க வெற்றியெதிர்சென்று நலத்துடன்னின்ற காலிற்பவுரிகட்டி
உடன்கையுமெய்யுமா யொட்டிப்புறத்தி லுற்றலங்காரமுகம் மின்னிவேர்க்க
விடங்கொண்டுலாவும் விழியால்மருட்டி விழுத்தியெழுப்பி நெழித்தேமுளித்து
வடங்கண்பொருந்தி நிமிர்ந்திடுங்கொங்கை மாதேவியரசனவை கொண்டாடிநின்றாள்

கொண்டகுழலோகுலவு விண்டுமணல்நிகரோ குவளையோநிகர்விழிகள் கூரம்புநிகரோ
புண்டரிகமோவிவள் முகந்தனமிரண்டும் பொற்கலசமோமகுடமோ புகலுதற்கு
ஒண்டொடியினிடையர வுடுக்கோகொழுந்தோ வுற்றசைவுக்குநிக ரெற்றிசைவுமுண்டோ
கண்டதுவுமில்லைநாங் கேட்டதுவுமில்லையே கமலமலரயனெழுது கார்குழலினாளை

காரனையகுழலிவரி வண்டுபண்பாடக் கமலமலர்நிகரு முகமதுவெயர்வரும்ப
ஏரனையவடகொங்கை புடைவிம்மியடைய விடைமுரியுமென்றுபத மிடுசிலம்பரற்ற
கூரனையவிழிகள்பளி செய்யுமென்றஞ்சிக் கொற்றமகரக்குழைகள் கொடிபோலவாட
சீர்பெருகுசோழன் மனமுருகமாதேவி தித்தியெனநின்றுவித மொத்துமாடினளே

தித்தியெனநின்றுவித மொத்தியாடிடவுந் திகழுமணிமண்டப மிருந்தமனுவீரன்
புத்தியுமழிந்தறிவு. சற்றுமில்லாமலே பொதுவரிடைவெட்டுமரம் போலறிவழிந்து
அத்தியதெடுத் தருந்துங்கனியதாகியே யனலுருகுமெழுகுமென வவசவுயிராகிச்
சித்திரமதாகவித்தார பாவாணருந் தேடுகின்னரரும் யாழ்ராகமோதினரே

கின்னரர்கடங்கள்கிளை ராகமதிசைப்பக் கிணதொங்ககிணதொங்க வென்றொத்துவைத்து
உன்னிமிகவேபவுரி கட்டியிட்டோடி யுள்ளாகநீர்சுழலும் வண்டுபோலாடி
பன்னிவருசெண்கிடக செண்தொங்கவெனவே படகமொடுமத்தளந் திடுதவிலிசைப்ப
தென்னதெனவென்ன பலரின்னிசைகள்செய்யச் செம்பியன்முன்மாது சீராடினாளே

மாதர்பொருமான் மதனனபிடேகமென்ன மலரினம்மஞ்சியொடு மின்வாடுமிடையாள்
பூதலந்தன்னிலே மேல்விருதையிட்டுப் புறங்கொடுத்தேகினார் புகழ்நடனகாறர்
சோதிமணிமுடிசோழ ராசன்மதிக்கவே தோற்றியகூத்தங் கிதநாடவாடித்
தாதவிழ்பூங்குழலி நட்டுவனைநோக்கி சாற்றுகவிவேறொன்றோர் வடிவுற்றுநின்றாள்

நின்றசவையோர் கண்டுமண்டமுகடதிர நெருங்கியேவாய்விட்டு நீடதிசயிக்க
மன்றினுறுசோழனு நன்றுநன்றென்றே மணிமருவுமாசனம் மகிழ்வாயிருக்க
மன்றிலுறுமிந்திரன் சவையிலுருவசியா மாதேவிசுடர்மணிபோல் மருவுநடமாடத்
தன்றுதுணையதாய் நின்றநட்டுவனுராக தாளதரிகிடவென்று தவில்முழக்கினனே

அக்கரமிகுந்தசீராசு கவிதத்தளைகள் ஆனபாமுற்பாவி னங்கலங்காமல்
செக்கிடகசென்கிடக சென்கிடகதிரிதா செகுணசெகவென்றுதா திகுணதகவென்றே
திக்கிடகதாதகுத திங்கிடகதொங்கத் திமிதிமிகுடிங்கு டிங்கெனமிகுந்தாடி
மைக்கடுவின்மிக்கவிழி யொக்கநேர்படவே மருழமாதேவிஇ வகுத்தாடினாளே

வகுத்தவுருவத்தினொடு மொக்கநடமிட்டாள் மழைக்கருநிகர்த்த விழியைக்கொடுமுருட்டி
தகுதத்தகுதித்தியென வொத்தடிமிதித்தாள் சரிக்கொடுபரித்திரள தனைத்தனமருட்டிப்
பகுத்ததொழிலைக்குறி மிகுத்தொளிசெய்திட்டாள் பதத்தினையொதுக்கியொரு பத்தடிமிதித்தாள்
சுகத்திலெவருக்குமொரு சொற்பரிசளித்தாள் சுத்தமதனக்கடலில் முத்தமுதைவைத்தாள்

முகைத்திரளெனத்தன மிகுத்தவனமானாள் முத்தமணிசோழன்முன் மித்தகைநடித்தாள்
அகைத்தடிமிதித்து மெலவங்கேநடந்தும் ஆனகுயில்மயிலன்னமென விடைதொடர்ந்தாள்
உகைத்தடியடிக்கு மேலாகவேபாய்ந்தும் ஓங்கியேசீராணி மண்டிகைபோட்டும்
நிகர்க்குமிருகாலுமொரு காலதாய்நின்றும் நிரையிடுசதங்கை யொலிநின்றேபுலம்ப

நின்றாடிநின்றளவி லரசனிவளுக்கு நிகரரம்பையரென்று திருமுடியசைக்க
மன்றழகபுழகபாரக் கொங்கையசைய வாடுமிடையசையு மித்தங்கமாதேவியை
குன்றனையபடைவீரர் பாவாணரிவளைக் கொண்டாடவாயிரந் நாவேணுமென்றார்
என்றளவிநட்டுவர்க ளிவள்கற்றதிதுவோ வின்னுமொருதொழில்பாரு மென்றிசைத்தனரே

பாருமெனவேகண்கள் நீலவரியென்னப் பரிவுதருமிருதனம் பதுமமுகையென்ன
சீருலவுபூங்கொம்பதா மென்னவெழுதரிய செயலென்னமயிலென்ன திலதமதியென்ன
ஏர்மருவுகையென்ன விடையென்னநடையென்ன விரதியெனவெழிலிந்திரதனு வென்னமாய்கை
தாருமெனவெனவங் கிரங்காமதேனுவாள் தாதகுதவென்றுபல சாரிநடமிட்டாள்

வேறு

தாதகுதிகுதகு தொந்தகவெனவே தத்தரிகிடதா தித்தகவெனவும்
தோதகுதகதகு செணகிடசெனவே தொங்கிடதங்கிட தொம்மெனவும்
பாதவமலை யுருகும்படிபாடிப் பருவிழியிருகுழை புரளமருட்டி
வாதிவைபலவரி தாளவகைப்படி மாதேவிசோழன் முன்னாடினளே

மாதேவியா ரிவர்தாமெனவே வளர்மாமயிலோ குயிலோவெனவே
காதொடுதாவியு மோடியவேல்விழி கற்றதுமிங்கிவ ளித்தனையோ
தாதவிழ்பூமகளோ மலர்மாதோ தான்மிகவாழ வருங்கிளியோ
கோதிலரம்பையர் தாமெனவேசிலர் கொம்பெனநின்று மசைந்தனளே

கொம்பில்விழுமல்லுயிர்கள் கொள்ளைகொளுமென்பார் கொந்தளகபந்தியவிளந் திலதோவென்பார்
அம்பனையவேல்விழி யறக்கொடியதென்பா ராகமிகவேயெழுத வாரறிவரெனபார்
செம்பொனுருவென்றதொரு தெய்வமிதுவென்பார் செப்பனையகொங்கைவடி வொப்பனையதென்பார்
உம்பருலகென்னவரு மாதேவிபதங்கள் ஒருபோதுங்கண்டிங் கிருந்தோமோவென்பார்

பாரானநஞ்சுவிழி காதோடளாவியே பாதமரவிந்தமதுவோ முகமுமென்பார்
பேரானமுன்னழகு தன்னிலிவள்சித்திரம் பிரதானமாகவுற வதுவாமோவென்பார்
ஆராயிலமிர்தமிவள் சொல்லாகுமென்பா ரவளருள்புரிந்தடிமை யாவோமோவென்பார்
காரார்கருங்குழலி மாதெவியைமன்னவன் கண்டகண்கூசுமோ கருணையொளியென்பார்

கண்டகண்சுழரநிலை நின்றுயிர்திகைப்பார் கண்ணறிவுமெய்யொடுகை கால்மறந்திடுவார்
பண்டுலையிலுருகு மெழுகென்னநின்றளிவார் படைக்கவுமொருத்த னுளனோவிவளையென்பார்
வண்ணங்களிப்படித் தேற்றியிவளாட வருத்தியுரைநட்டுவ னகத்தியனோவென்பார்
பெண்ணென்றராசமணி பெரியமாதேவியிப் பேருலகிலிவ்வா றுதிப்பளோவென்பார்

பார்மிசையிலிப்படி வருந்துவதுகண்டு படைக்கலமெடுத்து மதராசன்வருதென்றாற்
றேரின்மிசையேறி யிவளைப்பரிசளிக்கச் செங்குவளையொன்றொழிய நாலம்பெடுத்து
தீரமுறுமறுபடைகள் தான்மிகப்போவெனச் சென்றவனுமண்டிச் செலுத்திவருமளவில்
மாரனுரம்வேல்விழிக ளுடுருவியோடவே மதிபுருவசிலைவளைஇ வஞ்சமுறவெய்தாள்

தானவரையெய்த மதராசனுமொதுங்கிச் சங்கையற்றறிவழிந் தங்கயலிநிற்க
கானில்வருபேயென வுலைத்தலைவுகொண்டுவிடை காலனுமறிந்துசிவனே துணையதென்னத்
தேனிதழ்பொதிந்தமொழி மாதேவிசற்றே சிரித்தவர்களிற்றன் கடைக்கண்ணெறிந்து
ஈனமறவேதகுத்தகு திகுதியெனவே யிணைச்சிலம்பார்க்க வவர்முன்னேநடந்தாள்

நடந்தளவில்மன்னவன் மகிழ்ந்துகளிகூர்ந்து நன்றுநன்றென்று முடியன்றேயசைக்க
உடன்கடகமேல்விருது பட்டமுமுழங்கவே ஓகோவெனக்கை யமைச்சனுமசைக்க
இடம்பெரியநட்டுவனு மன்னனையிறைஞ்சியே இன்னுமொருநடனமிவள் கற்றதுமிருக்கென
தடம்பெரியவாளரசர் தங்கள்குலமன்னன் தான்காணுமாறுசவ னிக்கைபிடியென்றாள்

வேறு

சவனிக்கைக் குட்புகுந்து தார்குழலி மாதேவியும்
பவனிக்குட் தெய்வமென்ன பத்துவித வாடல்களும்
புவனிக்கு ஏறிய்வரிய பூடணங்க டான்புரள
தவநோக்கு மதிவேந்தன் றான்மதிக்க வாடினளே

தானமுள்ள மாமேருத் தனுவாகத் திரிபுரத்தை
வானமொக்க வனல்பரவ வைத்தசிவன் போற்சிரித்து
தேன்மொழியாழ் மாசடையத் தேவரெல்லாஞ் சேசெயென
ஆனவகை யோர்நடன மாடினளே சோடுகட்டி

சோடுகட்டி யாடியபின் சோதிமணி முடிக்காமன்
ஓடியொக்க விழிபுரள வோவியம்போற் பார்பதியார்
ஆடியபாண் டரங்மதும் மன்னநடை மாதேவியார்
பாடியொக்கத் தானாடிப் பவுரிகொண்டு நின்றனளே

நின்றுபின்பு மாயவனார் நீடுபதந் தனிற்பிடிக்க
அன்றுகாளி யன்முடிமே லாடியவத் திருக்கூத்து
மன்றழகத் தேவரெல்லாம் மனமகிழத் தானாடி
வென்றிகொண்ட தொகுதிகளும் மெல்லிநல்லா ளாடினளாம்

மெல்லியலிவ் விசைபாடியும் மீட்டுமந்தக் கேசவனார்
சொல்லவல்ல வரக்கருடை தோள்வலிகள் கெடவறுத்து
வெல்லவெட்டித் துரத்திடவே மீண்டவர்கள் சென்றிடவுந்
மல்லுயிர்த்த நடனமதும் மாதெவியா ளாடினளே

மாதிரஞ்சூழ் வேலைதன்னில் மாறுசெய்யுஞ் சூரனுடல்
மீதுருவ வயிலுருவும் வேலவராடிடு நடமும்
பாதமிக வருந்திடவே பண்ணிராகம் பொருந்திடவே
காதன்மிகு மாதேவியும் காவலன்முன் னாடினளே

காவலுடனண்ணல் தன்னைக் கடிந்தசுர ரடர்ந்திடவே
ஆவலுட னங்காடும் மரியகுடைக் கூத்துடனே
பூவுலகுண்டோ னிடையர் புகழ்மறுவி னிரையாடும்
கோவுசெறி குடக்கூத்துங் கொம்பனையா ளாடினளே

கொம்பனையா ளாடியபின் கொற்றமணி முடிமதனன்
அம்புமலர் தனைப்பொழிய வவள்பாடி யாடினதும்
கம்பவரைப் போலிவருங் கவுரிபோய்க் கால்காட்டினதும்
செம்பியன்முன் மாதேவியார் தெய்வமென்ன வாடினளே

தெய்வமென்னவே திருவின் சேர்ந்தவன்னப் பாவைகளும்
அவ்வியங்க ளில்லாம லயிராணி முன்னாளில்
செவ்வியினோர் திறமாகத் திறம்பாடி யாடியதும்
நௌவிவிழி மாதேவியா ணயந்தாடி வியந்துநின்றாள்

நயந்தவேஷ மிகவுமிட்டு நாற்பதினோர் மண்டலமும்
அயலாடி பின்பதினோ ராடல்வகை திறம்பாடிப்
புயந்தாவும் வேல்விழியாள் பூசலொடு நிற்பளவில்
வியந்துமிக மாதெவியை வேல்வேந்த னமையுமென்றாள்

வேல்வேந்த னமையுமென்று மிகவுரைத்த படியறிந்து
சீலமுடன் மன்னவனைத் தெண்டமிட்டு நட்டுவனும்
கோலமுடன் தாண்டவத்தைக் குறித்திடுவீ ரரசேயென்று
சாலமிகு மாதேவிக்குச் சவனிக்கை போட்டனளே

வெண்பா

சவனிக்கைக் குட்புகுந்து தம்பிரான் முன்னாக
அவனிக்குண் மாகாளி யஞ்சவே – பவனிக்குள்
வேற்கைமா றடிகளை வென்று விருதிட்ட
மார்க்கஞ் சமைந்து நின்றாள் மான்

மானனையாள் மூன்றுவிழி மன்னும்வன்னச் சட்டையிட்டு
தேனுலவு மிதழியுடன் செஞ்சடையு மிளம்பிறையும்
ஆனமானும் பொன்னாலே யணிசிறந்த பாம்புகளுங்
கானுலவு புலித்தோலுங் கட்டிவந்தாள் மாதேவியே

கட்டிவந்தோர் பாதமதைக் கையதனா லேமடித்து
விட்டனளே யார்ப்பரித்து மிகுத்ததொண்டர் பதங்காட்டி
இட்டதலை மாலைகளு மிசைவிசைவாய்த் தானணிந்து
தொட்டுநின்று விடுகவிகள் சொல்லுவளே மாதேவியும்

சொல்லரிய புகழ்பூண்ட சோழேசர் காவலனே
அல்லைமுன்னாட் பகலாக்கு மழகான முகத்தோனே
வல்லபத்தில் லிந்திரன்றன் மாதர்கட்கு மாதரவாய்
எல்லையில்லா வுருவசிபோல் யானொருத்தி யிப்பொழுதே

இப்பொழுது காளகண்டர் இணைப்பதமுந் துணைச்சிலம்பும்
முப்பொழுது மறவாமல் மும்முறையுந் தெண்டனிட்டே
தப்பறநற் பலகலையுஞ் சாருநிருத் தாடனமும்
செப்பிவர வேணுமென்று சீராடப் பாடினளே

அகவல்

சீர்பெறநல்ல திருவிக்கிரமா.பார்புகழிட்ட.பாடகநடையாய்
நண்ணியதூய நலம்பெறுமண்டலம் எண்ணியதிகிரியியற் செல்வதனால்
ஊர்தனைக்காக்கு மொருபெரும்புயனே நீர்மையினிலைக்கோ னிருபனேசரணம்
அந்தரகரண மணிபெறுகரணம் உந்தியசாகர முயர்பெறுமண்டலம்

இடமுடைவாத்திய மியற்றுங்கரண மிகவுறுவாகிய மிக்கவானந்தம்
தாண்டவநடனஞ் சங்காரதாண்டவம் பூண்டிகளகம்பத புதுநடனங்கள்
இகலிலில்லாத நூற்றெட்டுக்கரண மகவலுமுனது ஆஞ்ஞைப்படிக்கே
ஆடனான்வல்ல ளென்றறிவதுமுமது பீடுடைக்கூத்தின் பெருமையதாமே

| | |
|---|---|
| வேறு மண்டல சக்கரம் | பெருமைகளறிவது முனிவர்களிருஷிகள் பிரளயநடமுலவிய தொனியெனவே<br>இருமையுமுரிமைகள் வெறுவெறுரைத்தனள் எழுகடலென வருமுரசதிர<br>தரிகிணதரிகிண தகதிகுதகதிகு தாந்தாந்திந்தொம் மென்றாடினளே<br>பரிபுறநிறைமுறை யுறவுபிடித்திடும் பாடகமாடிட வாடினளே |

ஆடியமாதெவி சோடினையதனி லமர்ந்தசடா டவியும்பிறையும்
நாடியகொன்றையு நாற்புயமான்மழு நங்கைவிபூதி யணிந்தணியாய்
ஆடியதோலுடை யோடசைவுற்றிட அங்கவர்சங்கர வென்றிமையோர்
தோடவிழ்மாதெவி தாளிணைசூடிடத் தோழனிருந்து சிரித்தனனே

சிரித்ததுகண்டு திகுத்தகுதாதிகு திகுவெனவருகிரு தொகுதியொடே
கருத்தினமர்ந்த நடத்தொகையுடனே கத்திரசித்திர நத்திரமும்
திருத்தியநட்டுவ னுக்கிணையிப்புவி செல்புலவோரொருவரு மிலையெனவே
திருப்பதமொத்தொடு வைத்திடுமாதெவி திருநடமின்று சிறந்தனவே

| | |
|---|---|
| வேறு | சிறக்கமிகவேதாள மானதுமெடுத்துஊ தேவிதிருநடனமது திடிரெனவடுத்து<br>நிறக்கநீர்நிழல்வைத்து ஓசையதுமெத்த நின்றடியில்மடிவைத்து மடியிலடிவைக்க<br>மறித்துநல்தாளவகை யூதுகுழலொலியுடன் மண்டுதவில்விருதுமுன் மண்டியேகுமுற<br>நறைக்குழலிமாதேவி மிகுத்தசங்கிலியுடன் நாராயணம்போட ராசனும்நயந்தான் |

நயத்தொடுவைத்து நடித்தனளொத்துஊ நகைப்பொடுசுற்றி மடிப்புடனே
புயத்தளவிற்கை குவித்திருகண்கள் புரண்டதுகண்டு மருண்டுமிகும்
குயத்தினில்முத்து வடத்திரளற்றது கொண்டதுபவுரிகள் விண்டதுவே
செயத்தொடுமாதெவி யிட்டசிலம்பு தெறித்துளபன்மணி சிந்தியவே

சிந்தியபன்மணி தாரகையோ புகழ்செறியரவின் மணியோபணமோ
கந்துபிணித்தது போலவுமுள்ளொளி கனமணிகாட்டிய தெவ்வொளியே
சுந்தரகும்பதனத்தின் மணித்தொடை சுற்றுறலற்று விழுந்தனவே
அந்தரமேல்வரு வாண்மதிசிந்திய கண்டம்விழுங்கிய தாமெனமான

மானமுகத்தி லெழுந்தனவேர்வை வழிந்துவிழுந்தது மார்பினிலே
வாணபதிப்பரி வட்டமதிடிட்டு வாறெனமாதெவி தன்குழலில்
தானமதாகிய மயிலெதிர்பட்டமுந் தங்கியமின்னெழு மாமலர்வடமும்
தேனவிழ்பூங்குழல் மாலையவிழ்ந்தது செட்டிகள்மாலை யிழந்ததுவே

| | |
|---|---|
| வெண்பா | வாழ்வுபெறு ராசர் மருங்கிருக்க மகராச<br>சோழனிவள் நடனஞ் சோதித்துக் - கோதைபுனை<br>மாலை விருது வரிசை பரிபுரமுஞ்<br>சேலையுட னீய்ந்தான் சிறந்து |
| வேறு ஆதி | சிறந்துமனம் மறவாது தீரன்மிகு சோழதுரைஇ<br>அறந்தவறா யிரத்தெண்கழஞ் சானபுயமாலை யொன்றை<br>கறங்குமின்னின் முகிலெனவே கருங்குழலி கழுத்திலிட்டு<br>விறன்மருவு புயராசர் வேந்தனுமங் கேதுரைப்பான் |

வேந்தர்சபை மகிழ்நடன மெல்லியலே மாதேவி
ஏய்ந்தசவை யகத்திலேநீ யின்னபொருள் வேணுமென்று
சேர்ந்துரைக்கி னானுமிப்போ சீக்கிரத்திற் றருவெனென்று
வாய்ந்தசோழ னிவைகூற மாதெவியு மீதுரைப்பாள்

உரைக்கரிய வேந்தேகே ளூற்றவிந்தச் சபையோர்கள்
இருக்குமிடஞ் சொல்லுகின்றேன் யானுமொரு கன்னிமின்னாள்
வருத்தமுறக் கொடுபிறந்தேன் மாலையொன்றென் மார்பகத்திற்
இருப்பதிதை இச்சவையி லேற்றுஞ்செப்பு கம்பமதில்

கம்பமதி லேறிநின்று கழுத்தில் மாலைதனைக் களற்றி
உம்பருல கோங்கிவர வொருநொடியி லெறிந்திடுவேன்
.இம்பரிந்தச் சவையினிடத் தெவர்கழுத்தில் விழுந்தாலும்
நம்புமென்ற நாயகனாய் நாடவேண்டு மவரெனக்கே

வேண்டுமெனக் கிவ்வரத்தை வேண்டுகிறே னென்றுகுற்றந்
தீண்டவல்ல செந்திருப்போற் செயிழையா ளுரைப்பளவில்
காண்டகைய சோழதுரை காரிகைக்கங் கீதுரைப்பாள்
ஈண்டியுன்றன் மாலைசவை யெவர்கழுத்தில் விழுந்தாலும்

தாலமது மரம்வீடு தடிமலையில் விழுந்தாலும்
கோலவிழி மாதெவியே கொழுநனோநீர் சொல்லுமென்ன
ஆலகண்டர் தம்மாணை யாரிடத்தில் விழுந்தாலும்
மேலுமொன்றும் பேசாமல் விரைவில்மணம் முடிப்பேனென்றாள்

என்றுசொல்லச் சம்மதித்து ராசராசன் சவையிருக்க
கன்றுமானை நிகர்த்தவிழி காரிகையாள் கம்பமதில்
நன்றுடன்மே லேறிநின்று நடனராகம் பலதாடி
வென்றிகொண்டங் குடன்பிறந்த மிகுமாலை கழற்றினளே

மாலை களற்றிடுமளவில் மாதேவியின் நாயவளும்
பால்நிறத்தின் வீணையொன்றைப் பரிவுடனே வாயில்வைத்து
கோலமுத்து மாலைதன்னைக் கோவலனார் தன்கழுத்தில்
மேல்விழநீ யெறியெனவே வீணையினா லூதினளே

ஊதுமந்த வீணையொலி யுற்றசெவி மாதேவியும்
ஆதிமுதற் பரனாரே யாலைவாயி லமர்ந்தவரே
வாதுவெல்லுங் கோவலனார் மலர்க்கழுத்தில் விழுவதன்றி
ஈதொருவ ரிடமணுகா தித்தருணங் காருமென்று

கார்குழலி மாலைதன்னைக் கவன்விரை வுடனெறியக்
கார்வளைந்த வேடமெனக் கறகறெனச் சுழன்றுதிசை
காராளர் கொடியெனவே கண்டசவை யோர்மயங்கக்
காரையூரன்சுத கோவலன் கழுத்தில்வந்து விழுந்ததுவே

விழுந்தமணி மாலைதன்னை மிகச்சினத்துக் கோவலனார்
உழுந்துரள முனங்கழற்றி யுயரவழி யெறிந்திடவும்
செழுந்தரள மாலையது சென்றுவழி யாய்ச்சுழன்று
குளிர்ந்தமுக மாதேவிதன் குறுங்கழுத்தில் விழுந்ததுவே

விழுந்தமணி மாலைமுன்னம் மேவியேகோவலர் கழுத்தில்
விழுந்திடவே யவர்கழற்றி வீசிடமாதவி கழுத்தில்
விழுந்திடக்கண் டவர்களெல்லா மிக்கவதி சயமுடனே
விழுந்தது கோவலர்க்கதிட்ட மென்மேலு மென்றனரே

என்றளவில் மாதேவியு மிணைமாலை தான்கழற்றிக்
குன்றனைய் புயமுடைய கோவலர்மேல் விட்டிடவே
சென்றுமந்த மாலையவர் திருக்கழுத்தில் விழப்பிரித்து
அன்றெறிய மாலையவ ளருங்கழுத்தி லுற்றதுவே

உற்றஅந்த மாலைதன்னை யொண்டொடியும் பின்கழற்றி
உற்றவணி கேசர்கழுத் துறவெறிந்தாள் மும்முறையாய்
உற்றமாலை தனைவணிக ருடன்கழற்ற முயன்றளவில்
உற்றசாபம் கழராம லுடனுரைத்தாள் மாதேவியே

மாதுசாப மிட்டளவில் வணிகேசர் மார்பகத்திற்
கோதையிட்ட கோதையது குறியெனக்கொண் டழுந்தினதே
ஆதலினாற் கோவலுரு மன்புமிகு துன்பமுமாய்ப்
பேதமுறத் தோழரெல்லாம் பிழையெனவங் கிருந்தனரே

இருந்தளவில் மாதேவியா ரிட்டகம்பத் தாலிறங்கப்
பொருந்தநின்ற தாய்க்கிழவி பூணாகத் தயிலமொன்றை
வருந்தொருவ ரறியாமல் மாதேவிகை தாவிடவே
திருந்துமந்தக் கோவலர்முன் சென்றாளே மாதேவியும்

மாதேவியும் போய்ச்சவையில் வாகுபெற்ற கோவலரைக்
காதல்கொண்டேன் நாயகனீர் காணும்வாரும் போவோமென்றே
ஓதவந்தக் கோவலனா ரொண்டிநீ தாசியெடி
ஆதலிலிங் குனக்கெனக்கு மலுவலில்லைப் போடியென்றார்

போடியென்ற மொழிகேட்டுப் பூங்குழலா ளேதுசெய்வாள்
போடியென்றிங் கெனைவிடுத்து போவதுவோ வணிகேசே
நாடியென்கை யாலொருகால் நல்வெற்றிலைப் பாக்கருந்திச்
சூடுமென்றென் மாலைதந்து சுறுக்கிடனீர் போவீரென்றாள்

என்றுமவர் முகம்தனிலே இவள்கரத்தி லெண்ணைதன்னால்
சென்றஅந்தக் கோவலருந் திரும்பிமனம் கசிந்துருகி
மன்றல்கமழ் வெள்ளிலைகாய் வாயருந்தத் தாறோமென்றாய்
நன்றினிநீ தாவெனவே நாயகியா மாதேவியும்

மாதேவிதாய் முன்கொடுத்த மருந்தையிட்டு வெள்ளிலையில்
ஆதரவாய் யவர்கரத்தில் லருந்திடுவீ ரெனக்கொடுக்க
ஈதுநன்றென் றவர்வாங்கி யிட்டுவாயி லிலைமருந்தால்
மாதுவச மனதினராய் மதிமயங்கித் தளர்ந்தனரே

தனம்பொருந்து மாதெவிபின் தனதுமாலை தன்கழுத்தில்
மனம்பொருந்தி வாவெனவே மாலைவந்து கழுத்திலுற
அனம்பொருந்து மாதேவியு மவரைவிட்டு மீண்டிடவே
மனம்பொருந்துங் கோவலரும் மாதெவியைத் தொடர்ந்தனரே

வேறு

மாதெவிதன்புருவச் சிலைமீதினில் வாள்விழியம்பு தொடுத்தனன்வேளும்
சூதமலர்க்கணை தன்சிலைமீது தொடுத்தனன் மிக்கவடுப்படவே
மேதகுகோவலரைப் படவெய்துமுன் வெற்றிமதன்கணை சுற்றினதே
ஏதகுமங்கவர் மேலதுபட்டிட விருந்துபுலம்பி வருந்தினரே

வருந்தியகோவலரைச் சிலசெட்டிகள் மன்னனுமஞ்சல் வகுப்பரிதே
பொருந்தவழைத்து மகிழ்ந்துசிரித்தவர் பொற்கொடிமாயையு மிப்படியோ
பரிந்திவரெங்கள் குடிப்பழுதாகவும் பங்கயனெழுதிய பலனிதுவோ
அருந்திடல்நல்ல வருக்கடைவோவிதென் னந்தோவென்றங் கலறினரே

அந்தோவென்றங் கலறுவர்சிலரே அநங்கனினால்நொந் தலறுவர்சிலரே
பந்தாடிய்கர மாதெவிதன்விழி பட்டுருவும்படி கிட்டினர்சிலரே
இந்தாவெகுபொருள் தருகிடுவோநா மேற்றெனைச்சேர்ந் திடுமெனவிசைய
மந்தார்புயமுள கோவலனும்பெரு மாய்கையிநொந்து வருந்தினனே

வெண்பா

பாதிமதிசேர் பரனாரருளு மிதாம்
ஆதிவிதிசே ரயனாரும் - நீதியதாய்
இட்டவிதி நட்டநயம் யாவருக்கு மாகுமதாற்
பட்டாரே செட்டி பழுது

வருத்முற்றுக் கோவலனார் மன்னவன்றன் சவைநடுவே
திருத்தமற மதிமயங்கிச் செய்வனவொன் றறியாமற்
கருத்துடைய வாசையெனுங் கடற்கரையைக் காணாமல்
வருத்தமிக வுள்ளளிந்து மலங்கிநின்று புலம்பினரே

புலம்பியபின் சோழகேசன் புகழிகழிற் கோவலரை
நலமுறப்பார்த் துனைவதைக்கு நாயகியா மாதேவியை
துலங்கில்மிகப் போடுவித்துத் தோகையுனக் கிடுமாலை
விலக்குவிக்க அழையெனவே விரைவினிற்கண் காட்டினனே

காட்டிடவே யாடுநடக் காரிகைமா தேவியவள்
வாட்டமுற்ற கோவலர்முன் மாறுசெய்து லாவிவர
தீட்டுபுக ழரசனப்போ தேன்மொழியே மாதேவியே
நாட்டுபுகழ் கோவலர்தன் நன்மதிகே டாக்கினியே

ஆக்கினதா லவர்வருத்த மாகிமன மாழ்குவதால்
நீக்கிவிடல் வருத்தமென்ன நீதிராச னுரைப்பளவில்
ஆக்கமிளந் திடுவிதியா லங்குநின்ற கோவலரும்
ஏக்கமதால் நீக்கலெனக் கில்லையென்று நின்றனனே

நின்றளவின் மாதெவியு நேரரசன் முகம்பார்த்து
மன்றலருந் தொடையானே மகராசர் மாமணியே
என்றுங்குறை யாவாயிரத் தெண்களஞ்சு பொன்விலைநான்
தன்றுறைசேர் கோவலனார் தரத்தகுமோ வெனக்கேட்டாள்

கேட்டளவிற் செம்பியர்கோன் கிரணமணி முடியசைத்து
ஆட்டமிகு மரங்குதனில் ஆராக விருந்தாலும்
காட்டநல்ல வாயிரத்தெண் களஞ்சுபொன்னின் மாலையொன்றை
கோட்டமறக் கோவலருங் கொடுப்பீரோ வென்றனனே

கொடுப்பேனா னல்லாதிக் கொற்றவர்கள் சவையகத்தில
வடுப்பாக வண்கர்முன்னே மானபங்க மிளந்திடுவேன்
தொடுப்பான பொன்மாலை தொகைகளஞ்சாய் நான்கொடுத்து
நடுப்பாக மாதேவியை நானணைவே னென்றனனே

என்றுநின்ற மாதேவியை யேந்திளைசேர் மாதேவியே
உன்றன்மனப் படிக்குநல்ல வுயர்விலையி னிழைத்தமுத்தின்
நன்றுபொன்னின் மாலைதிரு நாயகியை நிகர்த்ததுகாண்
இன்றதுநா னறந்திடுவே னேர்க்கவுனக் காகாதோ

ஆகாதோ வெனவுரைக்க வழகின்மிகு மாதேவியும்
வாகாரமனங் குளிர்ந்து வணிகேசே நாளொன்றுக்கு
ஆகார வாயிரத்தெண் ணளவுகளஞ் சானவிலை
தாகாரும் வணிகேசே தரவேணுங்கா ணிப்பொழுதே

இப்பொழுதி னீயுமென விசைந்தவந்த வணிகேசன்
செப்பரிதா மாதேவிமேற் றேடுமைய லுய்வரிதால்
அப்பொழுதங் கங்கருகி யறிவழிந்து விசர்பொருந்தி
இப்போதென்னைக் கொலைபுரிவ திவள்விழியா மாலமென்றே

ஆலமொரு வடிவுகொண்டுஊ அம்பெனப்பொற் குழைதாவிக்
காலன்விடு பாசமுடன் கருங்கயிலும் படநெருங்கி
நீலமெனக் கோரமென்ன நிட்டூரச் சேயிழையாள்
பாலுருவும் விழியாலே படுவதெல்லாம் பட்டேனே

படுவதெல்லாம் படுவதற்குப் பட்டோலை யடங்காது
அடுவானோ மதனனையு மன்றிருந்த சாபமிதோ
வடுவெனவே கடுவிழிசேர் மாதேவியின் றன்கழுத்தில்
நெடுநாளா யணிவதற்கோர் நீழும்பொன்னா னேனிலையே

நீள்மகரச் சலதிதன்னில் நிறைந்தெழுந்த மதியைநிகர்
தாள்செறிந்த வுடல்முகத்திற் றாமரையிற் றரளமென்ன
வேள்சிறந்த நகைவிளைக்கும் வெண்ணகையி னொளிபரப்பி
ஆளாம லெனைவிடுனீ யாளாக மாட்டேனே

மாட்டேனே நானுனது வனசதிரு முகைமேலே
கோட்டாம லணிந்துநிற்குங் குலமணியா னேனிலையே
ஆட்டாலைக் கரும்பின்மொழி யமிர்தமெனக் களிப்பீரால்
தோட்டாரு முனதுகுழைத் தோடாவேன் மாதெவியே

மாநாக படம்போலே வழகரிய விடைதழுவும்
தானான நிதம்பமெனுந் தானறுகைப் பொருளதனை
மேனானீ யுடுத்தபட்டம் மேகலையைத் தான்குலைத்து
நானாகக் காணவயன் நன்றுவகுத் தானிலையே

வகுத்துநின்று நசைபுரியு வண்ணமதி முத்தெனவே
துதிக்குமென்றன் மணிமுகத்திற் றுப்பதர முத்தமிட்டுக்
கருதுமுன்றன் கழுத்தணைத்துக் கைநெருடி மெய்வருடி
கதித்தெழுந்த முலையிணையிற் கைப்பிடிக்கக் காணேனே

கைப்பிடித்து மெய்மகிழ்ந்து கட்டிமகிழ் வுறவணைத்து
தைப்பிடித்து வருடிவைத்த தனிக்கூறை தனைவிலக்கி
பைபிடித்த நிதம்பமெனும் பாம்பினைநான் தொட்டெழுப்பி
மைபிடிக்க வாடிவைகும் வரிசைகொள்வ தெக்காலம்

காலமிது சமயமென்னக் கைகளிரண்டாலு முன்றன்
கோலமுலை தனைத்தழுவிக் கொண்டமுத முண்டுமிழ்ந்து
பாலுறுத்து முலைமார்பிற் பட்டமுந்தி யிட்டிடவும்
மாலுறுத்துங் குழலேயுன் மனமளிக்க மாட்டாயோ

மாட்டமர்ந்து நசைபுரிந்து வாருமென்றங் கெனையழைத்துக்
காட்டிமையல் பூட்டியுன்றன் கையதனாலே யணைத்துக்
கூட்டியின்ப முத்தமிட்டுக் கொடுமடியிற் படுக்கவைத்தால்
தீட்டியவேல் விழியாரே தினமடிமை செய்வேனே

அடிமைகொள்ள வுன்பதத்தி லானசிலம் பானேனில்லை
முடிவிலுன்றன் விரலிலிட்ட மோதிரமு மானேனில்லை
படியிலுன்னைக் கூடிலொரு பரகதியுண் டாகுமென்று
வடிவுபெற்ற மதன்வேத மாறுரைக்கு பேறுமுண்டோ

பெறுசதங்கை காலாளி பீலிதண்டை பாதசரம்
மறுவில்பரி புரமிதுவாய் வந்தேனுமில்லை மின்னே
நெறியில்மிக வேதுலங்க நிருத்தமிடு முன்பதத்தில்
நறைகமழ்செம் பஞ்சாயு நானிருந்தே னில்லைமின்னே

மின்னுதெடி கண்ணிரண்டும் வேற்குதெடி மலர்முகமும்
துன்னுதெடி விரகவெள்ளஞ் சுடுகுதெடி மதனவெப்பம்
பண்ணுதெடி ரோமமெல்லாம் பதறுதெடி சரீரமெங்கும்
கன்னிமதி யளிந்தேனெடி கட்டிமுத்த மிட்டிடுவாய்

முத்தமிட்டு மலரணைமேன் முலையிரண்டுந் தலைதழுவி
உத்தமன்வேழ் செப்பதெனு முனதமிர்தந் தனைக்குடித்து
பைத்தகடி னசைவுதந்து பழகியநித் திரைபுரிய
மைத்தவிழி மானாரே வாருமென்ன வணங்கினனே

வணங்கியவுள் ளுடல்கடிந்து வாட்டமுற்ற கோவலரை
சுணங்குபூத்த முலைமலையுந் தோகைசிரித் தேதுரைப்பாள்
இணங்குலவா யிரத்தெண்களஞ் சேற்றபொன்னைத் தந்திடுகில்
வணங்கவேண்டாம் வருவேனே வணிகேசே யெனவுரைத்து

வணிகேசே யாயிரம்பொன் மகிழ்த்தளித்திங் கெனையணையில்
இணையாக மூவிரண்டு ஏற்றநல்ல வருஷமட்டும்
அணையான வுனதுபெண்ணாள் அவனையுநீ தள்ளிவைத்து
இணையாக வருவீரே யேற்பநல்ல தில்லையென்றாள்

என்றமொழி தனைக்கேட்டு இயல்மருவு கோவலனார்
துன்றுமென்னை யுன்னுடைய துணைவிழிகொண் டாழுவையேல்
இன்றுமென்று நீயுரைத்த வெண்ணமதி லிசைந்திடுவேன்
குன்றனைய தனத்தாளே கூறுமென்றார் கோவலனார்

கோவலனா ருரைப்பளவிற் கொடியிடையா ளேதுரைப்பாள்
மாவலிய பூமீது வாழுபவர் சாட்சிபெறத்
தாவினதோர் பொன்னிலெதுந் தடைவருமே நானிசைந்த
ஏவலுனைக் கொள்வேனென் றிசைந்தெழுமென் றென்றனளே

வெண்பா

பட்டணத்துச் செட்டிபடும் பாடரசர்சபை
வட்மிட்ட நற்புலவர் வாய்திறவா - இட்டவிதிக்
கென்செய்வோ மின்செய்தா ளிவ்வுலகி லிக்கலக்கம்
மன்செய்தா னென்றனரே மன்று

வேறு

என்றென்றுமாதேவி யோதுமிடத்தில் ராசராசன்சிங்ககேச ராசனனாய்
குன்றாமலர்கரங்கொள் சுரிகைவீரன் கொற்றவைபுயன் புலிக்கொடியுடையதீரன்
நன்றென்றுரைத்து வணிகேசர்பெருமாளே நாடேறுமாயிரத் தெண்களஞ்சாக
ஒன்றுபடுபொன்னின்று முதலாக்கொடுப்பீரே லுற்றபடிகூடிடுவீ ரென்றுரைத்தனனே

உரைத்தளவில்வணிக ரவரோமென்றுரைக்க உற்றமுடிமன்னரு மமைச்சருமுரைப்பார்
வருத்தமுறுகோவல ருரைத்தபடிமன்னா மாதெவியுமப்படி மனம்வைத்திசைத்தாள்
தரைக்கரியவேழமதிலே மாலைசூட்டச் சங்குமுரசம்பல தனித்தனியியம்ப
நிரைத்தமணிமாலை வணிகேசரணிமாலையென நீணிலமதிக்கவலம்வர வருளுமென்றா

அருளென்றுசொல்ல வவராமென்றுரைக்க அரசுபெறமருவுமத வணியானைதன்னில்
விருதென்றுமாதெவியும் வாதாடிவென்றே வெற்றிபுனைமாலையொடு கோவலருமேறி
நிரைகொண்டுநிற்க வெண்சாமரமிரட்ட நீலமணியாலவட்டம் பலநிழற்ற
முருடுகொடுகொக்கரை தாளமுழவொலிமுழங்க முன்னாகுபின்னாக வாந்தியந்திருக

திருவன்னவழகான மயிலன்னமென்னத் திருமகன்பாரிரதி யிவளென்னவுன்ன
தெருவென்னதெருவன்ன விவளன்னமன்ன தெரிவாருமருகாக வருவாருந்துன்ன
நிரைமுத்தின்மணியார நிரைகனகவீதி நீணகரகோபுரமு நிரைநிரையதான
உரையுற்றகோமளக் கொடியாடுமிடமெலா வூர்வலந்தோலின் மேலோடிவந்தனளே

வேறு

வந்துசெருந்தி குருந்துமணங்கமழ் மாதுழைபாதிரி மாமகிழும்
நந்துறுதாழை மராமரமென்றிசை நாற்றிசைமொய்த் திடவும்மடைவே
கந்தமுறுஞ்சிறு சண்பகநந்தியும் கரம்பைபரம்பி நெருங்குபலா
சுந்தரசூதசதாபல தாதுறுதுளவொடு முல்லைமௌவ் வலரியெலாம்

வந்தொருதென்ற லிசைப்பமரங்களு மாமலர்சிந்தி மணம்பெருக
மந்திகளந்தவிதத் தொழின்முற்றையு மந்திரவெள்ள மடைக்குள்விட
சிந்தியமாங்கனி தேங்கனிதேம்பவே சேலயல்வாவி மிதந்துவிழச்
சுந்தரமாதெவி கோவலர்யானையில் சோழநகர்த் தெருமேவினரே

வேறு

தூயநல்ல மறுகுசுற்றிச் சுந்தரசிந்துர மிசையே
சேயிழையாள் மாதேவியுந் திருமிகுநற் கோவலரு
தாயமுறை வீதிவரத் தங்கிநின்று கண்டவர்கள்
ஓயாதிக் கோவலர்க்கும் ஊழ்வினையென் றுரைத்தனரே

உரைக்கரிதா மாலெவர்க்கும் முள்ளதுதா னானாலும்
நிருத்தமிடு மாதெவியாள் நீளழகின் மேலுளமாய்க்
கருத்துவைத்து மாயிரத்தெண் களஞ்சுபொன்னோ நாட்கொடுக்க
விரும்பினனே வீணனென்றே மெல்லிநல்லார் கூறினரே

கூறிடவே வேழமதிற் கோவலனும் மாதெவியும்
தேறிவலம் வருதல்கண்டு திருமிகுந்த கண்ணகையார்
வீறுமெந்தன் மணவாளன் வீதியிலோர் யானைமீது
நாறுமலற் குழலியுட னன்மணமா யிவ்விடமாய்

இவ்விடம் வந்திடநான்முன் என்னதவஞ் செய்தனென்று
பொன்னின்கும்ப மணிவிளக்குப் போதுபல வாலாத்தி
கன்னியர்கள் பலர்கூடிக் கைவகையி லேந்திவர
இன்னிலத்தோ ரும்புகழ எடுத்துநிரை யிட்டனளே

இட்டுநிற்கப் பெண்களெல்லா மிசைந்தமின்னைத் தள்ளிவிட்டு
மட்டவிடார் கோவலனார் மதிகேடாய்க கணிகையுடன்
கட்டிமுத்த மிடுவதற்கோர் நாளாயிரம் களஞ்சுபொன்னாம்
அட்டமத்திற் சனியிவருக் கானதென வுரைப்பாரே

உரைக்கவிந்தக் கண்ணகையா ருகந்துசெய்த வரிசைகளை
தரைக்குலத்தில் வணிகரவர் தான்பார்த்துத் தலையசைத்து
விரைகுழல்சேர் மாதெவியை மேவுவெட்கம் பூண்டதனால்
திரைக்குள்மிகத் தலைகவிழ்ந்து தெருவீதி செனன்றனரே

சென்றுமீண்டு சோழராசன் தெருவதிலே கோவலனார்
வன்னமுலை மின்னிடையாள் மாதெவியோ டேயிறங்கி
மன்னர்புகழ் வணிகேசன் மனதுருகச் சிரமசைத்து
வன்னமுத்து மாலையொன்றை மாதெவிக்குச் சூட்டினனே

சூட்டியபின் மாதெவிக்கு சொன்னவண்ணங் குறையாமல்
ஈட்டமுடன் றேடிவைத்த விருநிதியுங் குறைச்சலுக்கு
நாட்டமுடன் றானணிந்த நற்பணியு மற்றுமெல்லா
வாட்டமற நிறுத்துரைத்து மாதெவிக்குக் கொடுத்தனரே

கொடுத்தபின்பு மாதெவியுங் கொண்டுசோழ ராசன்விடை
கொடுத்துவிடக் கடைவாசல் குறுகியில்லந் தனிலடைந்து
கொடுத்தபணி தோழியரிற் கொடுத்துவைத்து மெத்தைஓயில்
கொடுத்துமந்தக் கோவலரைக் குறுகியணைந் திடவிருந்தாள்

இருந்தளவிற் கோவலனார் இடைக்கொடியை தனதுவலி
இருந்தவிரு கரத்தாலு மிருதனமார் புறவணைத்து
இருங்குழலி கழுத்தணைத்து எழிற்கமல முகமோந்து
இரும்விரக பசிக்கமுத மினிதினுண்டார் கோவலரே

கோவலனார் மாதேவியாங் கொம்பதனைத் தானணைத்து
மாவளவு மலர்முகத்தின் மாவெனவே தேறலுண்டு (மா – வண்டு)
காவளவுங் குழன்முடியைக் கையணைத்தும் மெய்யணைத்தும்
வாவுபிறக் கரணமுதன் மதலீலை செய்தனரே

செய்துமந்த மாதெவிமேற் தேம்விரகந் தீராமல்
ஐயமதன் மயக்கமுடன் அருமருந்தின் தியக்கமுமாய்
வையகத்தில் லிடத்தெய்வம்போல் மாதெவியைப் பாதுகாத்து
எய்விரகத் தோடிருந்தா னேழரையிற் சனியும்வந்தான்

சனிபிடித்த கோவலனார் தானிருக்குங் காரணத்தை
இனியசொற்சேர் கண்ணகைக்கு ஏகுபெண்க ளெடுத்துரைக்க
அனநடைசேர் கண்ணகைதன் னன்பனுக்கு வறுமையுற்றால்
இனியபொரு ளியன்றபடி யான்கொடுப்பே னென்றாளன்றே

அன்றதன்று கோவலருக் கன்புமுய்த்த மாதெவியாள்
அன்றாடு நிருத்தமதி லரங்கிருந்த சோழதுரை
அன்றாரு போவதற்குஊ அங்கெவர்க்கும் விடைகொடுத்து
அன்றரசன் மனைபுகுந்தா னரங்கேற்று முகிந்ததுவே
**“ஏழாவது மாதேவியாடல் அரங்கேற்று முகிந்தது”**

விருத்தம்

என்செய்வேன் கொடியாமிடியும் வருபித்தையமெனும் வாதபிணிவாதையும்
ஏறுவினையும் பெல்லிபேறுவினையும் மிருகமீண்டுவினை தோன்றிடுவதும்
உன்னிவருகோளு மொருகளவும் வருமாதருடனூ டாடுகின்றபழியும்
உயிர்போகவருபோதி லருகாகும்ஞம வாதையுற்றவிக் குற்றமெல்லாம்
அன்னையேயுன்னை யென்கண்கண்டு நீக்குதற்காசை யுண்டானவடியேன்
ஆவறீர்த்துன் னுடையகாவல்பார் தென்னையுமடைக்கலம் கொள்ளுமம்மா
கன்னிசிவகாமி யென்னன்னை யகவாசிகண்காண வரவேணுமம்மா
காவுநிதிநாகர்பதி மேவுபிரகாசியே கருணைசொரி நிதமம்மையே

**“எட்டாவது கோவலரைப் பொன்னுக்கு மறித்தல்”**

வெண்பா

வாங்குமதி நுதலாள் மதெவி கோவலரிடத்திற்
தாங்குபொன்னை வாங்குகதை தானுரைக்க - ஓங்குமொற்றைக்
கொம்பா குடவயிறா குஞ்சரா வுன்சரணம்
நம்பினேன் தந்தாள் நயம்

ஓதத்திற் சூதவரை யூடுருவ வேலுருவும்
ஆதியே யாதிக் கருள்குருவே – மாதலத்து
வல்லகலை யோதவரு வரதபண்டிதனே
அல்ல லுறாதென் மேலருள்

சீரகத்தார் கோவலரை திருக்கடையூர் மாதேவி
வாரமுற்றுக் கொண்டுவந்து மதிமயக்கி யூழ்வினையால்
ஆரமொடுநா ளொவ்வொன்றில் லாயிரத்தெண் களஞ்சுபொன்னைத்
தாருமென்று வாங்கவருள் சமுமாறு சென்றதுவே

சென்றிடவிவ் வுலகிலெம்மைத் தேற்றவந்த சிவக்கொழுந்தை
சென்றபர மருள்பரையே தேவசிகா மணியாளைச்
சென்றவுலகோ டுயிரைச் சேரவீன்ற மாதாவை
சென்றவூழிற் செழியனுக்கோர் திருமகளா யுதித்தவளை

உதித்தஅந்தக் கண்ணகையை யுறவின்மண நிறைவேற்றி
விதித்தவிதிப்படி நாலாநாள் விட்டகன்று மாதேவியின்
கதித்தமய லாகியந்த கணிகையர்மா தேவிதன்னை
மதித்திருந்து கண்ணகையை மறந்தானே தேவிமுறை

தேவியென்று நினையாமல் திருமனையிற் செல்லாமல்
காவிவிழி மாதேவியைக் கைப்பொருளென் றேநினைந்து
தாவிவைத்த முதியபணிச் சரங்களெல்லாங் கழற்றிவைத்து
வாவுமொரு நாள்வீதம் மாப்பொன்னதுங் குறையாமல்

குறைவறவே கொடுத்துமந்தக் கோவலனார் மாதேவிக்கு
முறைமுறையே திரவியங்கள் மூட்டுடைத்தும் பின்னேயுள்ள
அறையிருந்த பலநிதியு மள்ளியள்ளிக் கொடுத்தாரே
நிறையிற் குறையாதபடி நித்தியமும் வைத்தாரே

தரைநிரைசெய் காணிகளு தாழ்விலைசெய் தழித்தளித்தும்
நிரைநிரைசெய் காலிகளு நேர்த்தழித்துக் கொடுத்தாரே
வரைவரையாய் மாதேவிக்கு வசந்தமணி மண்டபமும்
விரைவிரைவாய் வணிகரிவை விற்றுவிற்றுங் கோட்டமுண்டோ

கோடமர்ந்த யானைவிற்றார் குலமிகுந்த குதிரைவிற்றார்
ஆடல்தகும் வண்டில்விற்றார் ரடுத்திடுமொட் டகங்கள்விற்றறார்
ஆடுவிற்றார் எருமைவிற்றார் ரானவிந்தப் பொருள்கள்விறற்றுங்
கூடுமிந்த மாதெவியார் குலமிகழக் கொடுத்தாரே

குலமுறைசேர் தண்டிகையுங் கூடமாட வீதிகளுங்
குலமொடுநற் கப்பல்களுங் கூடவிற்றுக் கோவலனார்
குலமழிந்த மாதெவியைக் கூடியின்ப முண்பதற்காய்
குலமிழந்து பொருழளித்துக் கொடும்வறிய னானாரே

வறுமைவந்து சேர்ந்திடவும் மாயவலை மாதேவிமேல்
உறுமயல்கள் தவிராமல் உளம்மயங்கிப் பித்தரைப்போல்
விறலியொடு முறவினராய் வேறுபுல னில்லவராய்
கறுமமொன்றி முன்விழைந்த காரணத்தாற் சேர்ந்தாரே

சேர்ந்தநல்ல மாதெவிக்குச் செறிந்தபணத் தொகைகளது
கூர்ந்தவொரு மாதமட்டுங் கொடாதுவிட்டார் கோவலரும்
சார்ந்தபுகழ் மாதெவியின் றாயான சித்திரவதி
நேர்ந்தபொன்னைக் கொடாததினால் நெஞ்சுமிகப் புழுங்கினளே

புழுகுசெறி குழலாள்தன் பொற்கொடியின் முகம்பார்த்து
எழுதிவந்த பணையமது இம்மட்டுமேன் வாங்கவில்லை
முழுதுமிந்தச் செட்டிதன்னை முலைத்தடத்தின் முயங்கிவந்தாய்
வழியின்மிகு புத்திகெட்டாய் வாங்டிநீ பொன்னையென்றாள்

வாங்குமென்று மாதெவியின் மதிமுகம்பார்த் துரைத்தளவில்
ஏங்கியவள் மதிமயங்கி யிருந்துநெடு மூச்செறிந்து
தாங்குவணி கேசர்முகந் தனைப்பார்த்து நானுரையேன்
பாங்கியரோ டுரைத்துவிட்டு பணமதனை வாங்குமென்றாள்

வாங்குவரோ பாங்கியர்கள் மதிகேடோ மாதேவியே
தேங்குழல்சேர் பாங்கியரோ செட்டியுடன் படுத்தவர்கள்
ஓங்புகழ் கோவலரை யோரிரவு பகலாக
தாங்காத வளைப்பில்வைத்துத் தருமதிபொன் வாங்குமென்றாள்

என்றபின்பு மாதெவியு மேங்கியுட னெழுந்திருந்து
மன்றல்கமழ் மாலைபுனை வணிகரிடம் போகவெண்ணிக்
குன்றனைய புயமுடைய கோவலரைக் கூடியபின்
அன்றுசொன்ன மாதாச்சொல் லதைமறந்தாள் மாதெவியே

மாதெவியைத் தானழைத்து மாதாவுங் கோபமுற்று
ஏதுமறி யாதவளே யின்றுவிலைப் பணங்களெங்கே
கோதுகுலங் காட்டிவிட்டாய் கோவலனார் தன்னைநச்சிப்
போதுமெடி யாசையினிப் பொன்னைவாங்கு மென்றனளே

பொன்னில்லைகா ணென்றுசொன்னாய் பொறுத்துவிட நீதியில்லை
அன்னையேநான் பணமதனை யறுக்கையுடன் வாங்குகிறேன்
என்னையுநீ வேண்டிடுகில் இன்னொருநாட் பொறுத்துவிடு
மன்னனென்னும் வணிகரிடம் வாங்குவேன்பொன் நாளையென்றாள்

நாளையென்றா யொருமாதம் நான்பொறுத்தேன் நீகூட
வேளைவணி கன்றனிடம் மிகவுமாசை புரிந்தாயெடி
பாளைமணம் வீசுகுழற் பாவையர்களுனை நகைக்கச்
சாளையப் பட்டாய்மகளே தார்வணிகன் றனைவிரும்பி

தாரமதுதனைப் பிரிந்துஞ் சற்றுநம்மைப் பிரியாதார்
ஆரவர்க்கு நிகராவா ரம்புவியி லுள்ளவரில்
பார்புகழு வணிகர்தம்மைப் பதைப்புறநாம் வருத்தல்நன்றோ
சீர்கெடவே யுரைத்தோமாற் சிரிப்பர்களே ஆருநம்மை

வேறு

ஆருமறியாயிரத் தெண்களஞ்சுபொன் அரைமாவுங்குறையாமலே யாறுவருடம்
சேரவேயிரவொன்றி லிப்படியளித்து தீரவேபத்தரைக் காசுமில்லாமல்
ஈரமற்றார்பொன்னு மில்லைமாதாவே யின்றொழியநாளையும் பொன்தருகுவார்காண்
தாரமெனவேயென்னை வைத்தகோவலரைத் தள்ளிவிடல்நீதியோ சொல்லுமென்றாளே

தள்ளிவிடநீதியோ வென்றவுடனவள்தாய் தலையசைத்து பல்லிறுக்கியுறுக்கிஇ
கள்ளிஇயுனைப்பெற்ற பாவமெனக்குக் கைகண்டதிதுபோல மெய்கண்டதில்லை
எள்ளியவள்மனங் கல்லோவிரும்போ வென்றென்றுதாயவ ளிகழ்ச்சியாய்ப்பேசி
மெள்ளவிழுந்து நானுன்மேலுயிரை விடுவேன்வணிகனுக் கிச்சைப்பட்டாய்நீ

இச்சைப்பட்டாய்நீ யெழும்பெடிபோடி யேகுமிதுநேர மாகாதெடியெடி
இச்சைப்புவியினில் மெச்சுமாதேவியே யேங்கியிருந்து பாசாங்குபண்ணாதே
இச்சையாயுன்வய துற்றமாதர்களை ஈயெனென்றுகேளெடி முன்னொன்றுமறியாய்
இச்சையோவென்றென்று கொச்சையாய்ப்பேசி இவளைப்பணிந்துமாதெவி சொல்லுவாளே

சொல்லுங்கருங்குழற் கண்ணகைப்பெண்ணை தொட்டுமணஞ்செய்து விட்டேகியிங்கே
அல்லும்பகலு மெனைக்காத்துப் பொன்னுமாயிரத்தெண் களஞ்சாகநாள்தந்து
நல்லதென்றிம்மட்டு மென்னைப்பெண்ணாக்கும் நாயகனைத்தள்ள நீசொல்லினாலும்
கல்லோமனதுநான் தள்ளேனேபொன்னைக் காரியமாகநீபேசி வேண்டென்றாள்

வேறு

வேண்டுமென்று சொன்னவுடன் விருவிருத்துத் தாய்க்கிழவி
பூண்டுகொண்டாள் மாதெவியும் பொருவணிக னாசையிலே
ஈண்டுமதி சொன்னாலும் என்னுரையைக் கேட்பதில்லை
மீண்டுமருந் திட்டிவளை வேறுசெய்வே னென்றுசொல்லி

சொல்லரிய மூலிகளுஞ் சூழுகடைச் சரக்குகளும்
எல்லையில்லாச் சாத்திரத்தின் எழுதிவைத்த படியாகத்
தொல்லையாண்பெண் ணிருவருக்குஞ் சூறைகொள்ளு மருந்திதென்று
மெல்லியவோர் பலகாரம் விட்டுள்மருந் தாக்கினளே

உள்ளபடி சொல்லாம லுத்தமியா மாதெவியைக்
கள்ளமனத்த தாய்க்கிழவி கருணைகொண்டு முடன்பார்த்துத்
தெள்ளமுதே யுன்கணவன் றீனருந்தப் பலகாரம்
கொள்ளடிமே நல்லதென்று கொண்டொருபாத் திரங்கொடுத்தாள்

கொடுத்தபல காரமதைக் கோற்றொடிமா தேவிவாங்க
அடுத்தவென்னா யகனுக்கிப்போ அவம்நினைந்தா ளெனக்குறித்து
வடுப்படுநற் பாலகாரம் மாதேவியா ளெறிந்தப்புறம்
கடுகுசெப்புச் சட்டிதன்னைக் கட்டிலின்கீழ் கவிழ்த்துவைத்தாள்

கவிழ்த்துமந்தச் சட்டிதன்னைக் கணவனுடன் படுப்பளவில்
தெவிட்டவந்தச் சட்டியிலே சேர்ந்தருந்தி யோரெறும்பு
துவட்டுநல்ல நித்திரையிற் றோகைநல்லாள் மூக்கினிடம்
பவஞ்செய்யும்அம் மருந்துவெக்கை படக்கடித்து விட்டதுவே

விட்டவந்தக் கொடுமருந்து விருவிருத்துச் சிரசேறி
தட்டளிந்து மனங்கலங்கித் தாங்கரிய கோபமுற்று
துட்டக்குணப் பயித்தியம்போற் றுடிதுடித்தங் கவளெழும்பி
கட்டுமந்தக் கோவலர்மேற் கடியசினம் விழைந்தாளே

தாள்நடுங்கிக் கண்சிவந்து தள்ளாட்டந் தான்பிடித்து
வேழ்நடுங்குங் கோவலரை மிகச்சினந்து முகம்பார்த்து
பாழ்வணிக மாதவீதம் பணங்களொன்றுந் தாராமல்க்
கோழிருந்தாய் விடமாட்டேன் கூசாமலழியு மென்றாள்

அளியுமென்றீர் மாதேவியே அள்ளியள்ளி யுள்ளதெல்லாம்
விழைவிலுனக் களித்துவிட்டேன் மிகுதியுநான் றருவதுண்டு
குழைவுகொண்ட கப்பலெல்லாங் கூட்டமொடு வந்தபின்பு
இழையைவென்ற விடையாளே யெல்லாநான் றருவெனென்றார்

தருவெனென்ற கதையைவிடுஊ சற்றேனு நான்கேளேன்
விரைவிநேரம் போகாமல் வீண்பேச்சும் பேசாமல்
கருகியென்றன் கண்சிவந்து கனலெழும்ப முன்னாக
ஒருநொடியிற் பணமுழுது முதவுகுறை யாமலென்றாள்

குறைவறவே நான்தருவேன் கோதையரே கோபமுறீர்
ஒருமுறைநீர் பொறுப்பீரே லுதவுவேன்பொன் னென்றுசொல்லக்
கருமமுன்னாள் பற்களெல்லாங் கறகறென்று மிகக்கடித்து
உருமெனவே யுறுக்கிமடிஇ உத்தரியம் பிடித்திழுத்தாள்

பிடித்துமடிச் சீலையிலே பெரியகட்டி லிருந்தவரை
வடுப்படவே யதன்கீழே வலித்திழுத்து விழுத்திமேலே
அடியெடுத்தங் குதைப்பளவி லயலினின்ற பாங்கியர்கள்
கடிதடுத்துக் கைப்பிடித்தார் கனன்றுரைப்பார் மாதேவிபின்

மாதெனநீ நினையாதே மானபங்கம் படப்போறாய்
தீதுவந்து சேரமுன்னே சேரவைப்பாய் பொன்முழுதும்
வாதைகொண்டு வருத்தமுற வாணாளுக்கிடர் விழைத்தால்
போதுமென்று வைப்பாயோ புத்திகேடா பொன்னிட்டா

பொன்னிடச் சொன்னாய்மயிலே பொன்பிறகு தாறேனென்றேன்
உன்னவொண்ணாக் கோபமுற்றா யுறுக்கியென்னை நெருக்குகிறாய்
என்னிடத்திற் பொன்னுமில்லை எனதுவீட்டிற் போயுனது
பொன்னெடுத்துத் தருகுவனே போகவிடென் றுரைத்தானே

என்றுசொன்ன போதவளு மெனக்குனது மனந்தெரியும்
நன்றுநன்று நாயகன்போல் நாடிச்சோர முயற்சிசெய்தாய்
துன்றவிப்போ தெனையணைந்து சொகிசுகளைப் போக்கிறெனே
இன்றுபொன்னைத் தாவெனவே யெடுத்தடித்தாள் சவுக்காலே

சவுக்காலே மாதெவியுந் தானடிக்கக் கோவலரும்
சிவுக்காகச் சுழன்றெழுந்து தேகமெல்லாந் தோலுரிந்தும்
புவிக்காகப் பொறைபொருந்திப் புத்திகெட்டுக் கோவலனும்
குவித்திருகை யழுதழுது கும்பிட்டுளம் நொந்தனனே

உளம்வருந்திக் கும்பிடும்போ துற்றகையை மாதேவி
வழுவிடாது பிடித்திறுக்கி மதிமயங்கச் சடுதியிலே
பழுதுபடக் கிட்டிகட்டி பாரிலொரு கோணமிட்டு
விழுமமொடு கோவலனை வெயிலதனில் விட்டனளே

வெய்யிலிட்டுக் கோவலரை விரைவினெற்றிக் கல்லேற்றி
துய்யபொழு தினைப்பார்க்கச் சொல்லியொரு சவுக்கெடுத்து
வையமெல்லாந் தொழுதிடவே மணம்புணர்ந்து மனமகிழ்ந்து
கையெடுக்க மாதேவியாள் கட்டிவைத்து மடித்தாளே

அடித்தபோதுங் கோவலனா ரப்போது மேதுசெய்வார்
மடக்கொடியி னிடராலே வாதையெனக் கானாலும்
இடர்படுத்து மிவளிடத்தி லிருதனமாங் தடம்மூழ்கப்
படுத்திடுவா யெந்நாளும் பராபரனே யெனத்தொழுதான்

தொழுதஅந்தக் கோவலன்கை துடிதுடிக்க கிட்டியிட்டும்
வழிபயக்குங் கயிற்றாலே வரிந்துகட்டிக் கைநெரிய
புழுதிமண்டி வெய்யில்சுடப் புரட்டிவிட்டுப் புழுக்கமெழப்
பழுதுபட்டுக் கண்முகமும் பாரின்மறு வானதுவே

மறுகிநின்று பற்கடித்தும் மாதேவிகோ பித்தெழும்பி
விறுவிறுக்கச் சவுக்காலே மேவிலடி தான்போட
தறுமமுண்டு சீமாட்டி தயவுசெய்திங் காளுமென்னப்
பொறுபொறெடா கோவலனே பொன்கொடுக்கில் விடுவெனென்றாள்

விடுகிலென் றுரைத்தாயேல் மெல்லியலே கட்டிவைத்தால்
மடியிலில்லைப் பொன்னெனக்கு வரும்விதமென் மானாரே
தடியிற்கிட்டி கரத்தடுத்து தாறுமாறாய் வாதைசெய்தாற்
படியிற்கிட்டாப் பொன்வருமோ பத்தினியே சொல்வாயே

சொல்லுமென்றன் நெற்றியிலே சூடவொருகல்லு வைத்தால்
வல்லியரே பொன்வரவோர் வகையேது சொல்லுமிப்போ
மெல்லியரே பொன்வரவும் வேறுவழி காணேனே
கல்லுமன மோவுனக்கு கடிந்துவேறு வெய்யிலிட்டாய்

வேறுவழி யறியேனே மெல்லியலேநீ சினந்தால்
கூறுமென்ற னுயிர்புரக்க கொண்டவழி யொன்றிலையே
ஆறியுன்றன் சினமகன்று யாண்டவற்கா யருள்பூண்டு
தாறுகட்டை விட்டெனது தாகமேகத் தாருமென்றான்

வெண்பா

தாருமென்று கோவலருந் தாழிணையில் வீழ்ந்திரப்ப
வாரைவிம்மு கொங்கைநல்ல மாதேவி – தூரநின்று
துட்டமட்டிக் பொன்கொட்டா சொர்ன்னம் வராமலுன்றன்
கட்டவிளே னென்றாள் காண்

என்றுசொல்லி மாதெவியு மின்னுமந்தச் சவுக்காலே
சென்றடிக்கு மேலடியாய்ச் சினமிகுந்து மோதினளே
அன்றவள்தான் செய்ததுன்புக் காற்றாமற் கோவலனுங்
கன்றிமனம் மிகவெதும்பிக் கண்ணிரண்டில் புனல்சோர்ந்தான்

சோராமற் றான்வளர்ந்த துய்யசடம் வெய்யில்பட
ஆராரும் மதனிவனென் றையமுறுங் கோவலனுந்
தீராத வசையடைந்து தேகமெல்லாம் வடுப்புனைந்து
கூராத கவலைகொண்டு கோவலரு மழுதனரே

அழுதாரே கோவலரு மவர்பிறந்த நாண்முதலாய்
முழுதான சிரவலிகண் முதலான நோய்மிடிகள்
கொழுவாத பசிமுதலாங் கோள்களொன்று மணுகாது
வழுவாத செல்வமுற்றோர் மானபங்க மானாரே

மானபங்கந் தானடைந்தார் மாசாத்தர் மகனுமென்கில்
மானபங்கம் மற்றவர்க்கு வருவதொரு வதிசயமே
மானமற்று நிதிகுறைந்தும் வறியவனா யிருக்கமுன்னே
மானிருந்த மலர்ப்பதத்தோன் வரைந்தவிதிப் படியாமே

விதியதென்ன செய்யுமுன்னாள் விழைந்தவினைப் பயனாலே
அதிகதுயர் வருவதல்லா லாராலும் வருவதுண்டோ
நிதிகுவிக்க விடமிலதாய் நீண்டகப்பல் சுமந்துகொண்டு
உத்திமிசை நின்றதல்லோ உத்தமனார் பாக்கியமே

பாக்கியத்திற் றலைவரென்று பட்டமது புனைந்தசெல்வர்
வாக்கியத்திற் கீர்த்திதன்னில் மகிமையினிற் சாதியினில்
யோக்கியத்திற் கல்விதன்னி லொருவர்தள்ள முடியாதே
மீக்குயர்ந்த கோவலற்கு விதிவிதியின் மதியாச்சே

மதிக்கவொண்ணாப் பாக்கியத்தை மதிவணிக ரெல்லோரும்
துதிக்கவொண்ணாப் பலநாளுஞ் சூறைகொண்டு போனாலும்
சதிக்கவொரு குறைவருமோ தார்வணிகர் பாக்கியங்கள்
மதிக்கவொரு மின்போலே மாய்ந்ததிது மாயமல்லோ

மாயமுற்ற பாக்கியத்தை மாநிலத்தோர் தேடிவைத்தால்
ஆயமுற்ற விரவலர்க்கு மாதிசிவ னடியார்க்கும்
காயமுற்ற கோயில்கட்டல் கட்டியபி டேகமிடல்
தாயமுற்ற சிவனார்க்கும் தற்பரிக்கும் பூசைசெய்தால்

செய்தவிவை முதலான சிவவழியிற் சேர்த்துவைத்தால்
உய்யுமல்லோ பாக்கியங்க ளுறுபுகழும் பெறலாமே
வையமுற்ற நாதரெல்லாம் வந்துவந்தும் வணங்குவரே
துய்யமுத்தி யெனவுரைக்குஞ் சோதியின்பும் பெறலாமே

பெறலரிய மனையகத்திற் பிறர்பசிக்கப் பார்த்திருந்து
உறவதொன்று மீயாம லுண்டவன்றன் பொருள்முழுதும்
துறவுகொண்டங் களிந்திடுமே சொல்லுமொரு நாளிகைக்குள்
உறவுவெறுப் பனவாச்சே யுயர்வணிகர் பொருளதெல்லாம்

பொருளதென்றும் கல்விவித்தை போதமிகுசூழ்ச்ச மெல்லாம்
உருளமிகு வோதிவைத்த வுபாத்தியாயற் கீயாமல்
மருள்மிகுந்த மடையர்வைத்த மாநிதிய மளிந்ததுபோல்
அருள்மிகுந்த கோவலனாற் கணைந்தசெல்வம் போனதுவே

செல்வமுற்றோர் தம்மிடத்திற் சிறிதுமெலி வுடையவர்கள்
நல்வினையிற் காருமென்று நம்பியிடத் தீதுசெய்தோன்
வல்வினையிற் பொருள்களெல்லா மாறுகொண்டு போனதுபோல்
பல்வினையாற் கோவலர்தன் பாக்கியங்க ளோடினதே

ஓடுபுகட் சீதையின்மே லுற்றமையல் கொண்டதனால்
நாடுமொழி லிராவணனு நன்னிதியு மழிந்ததல்லோ
வாடுமிடைச் சசியதெனு மாதின்மையல் வந்ததினால்
ஈடுபடச் சூரனுட னிருந்தவூரு மழிந்ததல்லோ

அணிக்குழலாள் விருத்தையின்மே லானமைய லானதினால்
பழிப்பறும்மா தவன்வனத்திற் பசுங்குழையைச் சுமந்தனனே
வழிக்குதவா வகலிகைமேல் மயல்பொருந்தி யிந்திரனும்
விழித்தொகைகள் சடமுழுதும் மேவவெட்கித் திருந்தனனே

தானமுறை மாதேவிமேற் றாவுமையலானதினால்
ஆனபொருள் தான்தோற்று மரியவிந்தக் கோவலனும்
மேனிசுக மாயிருக்க விதிவழியு மில்லாமல்
மானபங்கந் தான்பொருந்தி வருந்தினரே கோவலரும்

கோவலனா ரழுதழுது கோதைமுகந் தனைப்பார்த்து
தேவியென்னைச் சினவாதே சீக்கரமுன் கடன்தருவேன்
காவிவிழிக் கண்ணகையே கட்டுவிட்டு இழைப்பாறத்
தாவுமருள் செய்யுமெனத் தானுருக்கி மாதெவியும்

மாதமொன்றிற் பொன்களெல்லாம் மாவளவுங் குறையாமல்
பாதமுன்வைத் தாலொழியப் பழியெனக்குத் தணியாது
காதுமுன்தன் கட்டவிளேன் கடியவெய்யில் தனிற்கிடந்து
சாதல்கடனென் றுரைத்தாள் தார்குழலின் மாதெவியே

மாதெவியிவ் வாறுரைப்ப வாதையுற்றுக் கோவலருந்
தீதுகொள்ள மாட்டாமற் றீமையினால் விம்மிவிம்மிப்
போதுபொன்னி நாட்டவரும் பூதல்ததோரும் மிரங்க
ஆதிநிதிக் கோவலரு மையகோவென் றழுவாரே

ஐயமில்லா வீசுரனே யாறுசடைக் கணிந்தவனே
கையினளல் தரித்தவனே காலனைமுன் காய்ந்தவனே
வையமெங்கும் வினையகற்றி மாறில்முத்தி கொடுப்பவனே
மைவிழியாள் வாதையிதை மாற்றியரு ளூற்றுமென்றான்

என்றழுது கோவலனு மின்னுமொன்றை மனதிலெண்ணி
மன்றவெள்கி நாணமுற்று மானமெனும் வசையாலே
சென்றுமுன்னே மணம்புரிந்த சேயிழையா ளொருத்தியுண்டே
அன்றுமணங் கொண்டவன்னா ளக்கினியொன் றெழுப்பினளே

எழுப்பினதை மனதறியில் என்மனத்திற் றெய்வமல்லோ
முழுப்பொருளை நான்மறந்து மோகமுற்ற வேசியிடம்
குழுப்பொருந்தி வந்ததென்மேற் குற்றமல்லோ கொடியிடைக்கு
விழுப்புரிந்தே னானல்லவோ மெல்லிநல்லார்க் குள்ளமாமோ

உள்ளதொரு கண்ணகையே யுனையிகழ்ந்த மாதேவிமேல்
கள்ளமனது டையவென்றன் காமமென்னும் மாயையினால்
தெள்ளமுதே யிவள்வலையிற் சேர்ந்துபட்டுப் பொருள்தோற்றேன்
எள்ளவொரு மாதம்பணம் மீயாத குறைவதனால்

குறையிருந்த மாதெவிதான் கூற்றுவன்போ லெனைச்சினந்து
சிறையிலென்னை வெய்யில்வைத்தாள் தீமைசுமக் காற்றேனே
அறையவிதற் கொருவரில்லை யன்னையுநீ தந்தையுநீ
பறையவிதை யுன்னிடத்தில் பண்பாகவொரு வரில்லை

இலையிலசேர் விழியாளே யிதுவுனக்குத் தெரியுமெடி
கலைமுழுது மளந்தவநீ கற்பிலொரு தெய்வமுநீ
வலையறுக்கும் சுடரயில்நீ மனத்திலொரு விளக்கொளிநீ
நிலையிலென்றன் வினையகற்ற நீயருளாய் மாமயிலே

நீயருள்செய் யென்மனதில் நிகழ்தியிந்தக் கோவலர்தான்
வாய்புலம்பி நீர்சொரிய வாழ்துகின்ற வளவுதன்னில்
தாயெனவே யுலகமெல்லாந் தற்காத்துஞ் சீவனுள்ளே
வியாபகமா யிருந்தருளும் மெல்லியலீ தறிந்தாராம்

அறிந்துமெங்கள் கண்ணகையா ரயலிருந்த பாங்கியரைச்
செறிந்துமங்கே வரவழைத்துத் தெய்வமின்னா ளீதுரைப்பாள்
பிரிந்தவென்றன் னாயகன்மேற் பிரியமுற்ற மாதேவிதான்
முறிந்தமன துடையவளாய் முற்பணம்நாட் டப்பினதால்

தப்பரிய வடம்பூட்டித் தங்குவிரற் கிட்டிகட்டி
ஒப்பரிய சவுக்காலே யுளம்பதைக்கத் தானடித்துக்
குப்பரிய மணல்தனிலே கோடுகீறி யுள்ளிருத்தி
வைப்பரிய நெற்றியிற்கல் வைத்துமிக வருத்துவளே

வருத்முற்றென் னாயகனார் மானபங்கந் தான்படவே
விரித்தமலர் கடவுண்முன்நான் விரைந்துசிரம் வரைந்ததிதோ
பரித்தவிந்தப் பாதகத்தைப் பார்த்திருக்க நானுமிப்போ
தரித்திரங்கொண் டிருப்பவளாய்ச் சாரமணஞ் சூட்டினனோ

சூடுமென்ற நாயகனை தூயவுல குள்ளவர்கள்
கேடுகொண்டு நகைப்பர்களே கிட்டுமவ ளாக்கினைகள்
பாடுகொள்ள நாயகனார் பதைபதைத்துத் தவிப்பாரே
வாடியாடி மெலிவாரே மாபாவ மானதென்று

என்றுகையை முகத்தறைந்து யிசைந்தகுழல் விரிந்தசைய
தன்றுணைசேர் விழியாலே தாரைகொண்டு நீரோடக்
குன்றனைய முலைச்சாந்து குழைந்துருகி வழிந்தோட
அன்றவடான் படுந்துயர மறைவதற்கோ ரளவிலையே

அளவரிய துயரமுற்றங் காயிழையார் மனந்தெளிந்து
குளகருளம் மதிக்கும்வன்னக் கோதையர்கள் முகம்பார்த்து
உளமகிழும் நாயகனாற் குண்டான கடன்முழுதும்
வளமிகநான் தருவெனிப்போ மாதரேநீர் கொண்டுசென்று

கொண்டுசென்று நாயகன்பாற் கூறியிதை நீர்கொடுத்து
வண்டரிய மாதேவிக்கு வாய்த்தபொன்னே குறையாமற்
கண்டிடவே ஆயிரத்தெண் களஞ்சுமோர்நாட் கணக்கிலிட்டு
கண்டவர்கள் தான்நகைக்குங் காரணத்தை மாற்றிவிடீர்

மாற்றிவிட்டு நாயகரை வரும்படிநீர் மண்டாடிப்
போற்றியிவ்வா றுரைத்தாளுன் பூவையென்று சொல்லிடுவீர்
நாற்றிசையு புகழுமெந்தன் நாயகரிங் கேகுவரேல்
தோற்றுதங்கப் பல்லக்கிலே சுமந்துகொண்டு வாரீரேற்

வாரமல் மாதேவிமேல் மையலின்று முண்டாகித்
தீராத வாசையினாற் சேர்வெனென்று பேசினரேல்
கோரமதாய்ச் சதிரநிந்தை கொடியிடையாள் புரியாமல்
சீரான சத்தியங்கள் செயதுகூடச் சொல்லுவிரே

சொல்லுமெடி பொன்குறைந்தாற் சோதிபெறு மணிச்சிலம்பு
புல்லுமெடி கழற்றிவிற்றுப் பூங்கொடியோ டேயிணைந்து
அல்லுமெல்லு மாகநாளி ஆறுநூறு வருடமட்டும்
செல்வரவ ளொடுகூடச் செலவுசெய்யப் போதுமதே

போதுசொல்ல முன்னாகப் போவதுநீர் காதமெடி
ஈதுமென்னை மனநினைந்து யேகிடுவீ ரிருகடிகை
காததூரம் பலகடந்து கணவனைநீர் காணுமென்ன
ஆதுசரி யென்றுமவர் ஆபரண மெடுத்தாரே

வேறு

ஆரவடமோடுபல சங்குவளைதங்கவளை.யரிதானசூடக மோடணிமோதிரமும்
பாரபடவாளியொடு மூக்குத்திமேல்முருகு. பண்டரியபொற்றோடு கொண்டகுச்சோடு
சீரனையசங்கிலி சரப்பளிபதக்கமொடு.சேர்ந்தமணிமாலையொடு காலுமேகலையும்
கூரானவேல்விழிகள் கொலிசோடுசதங்கையுங்.கொடுபோவீரென நாடியெடுமென்றுரைக்க

என்றுரைத்திடுமளவி னற்றாதிமார்களிணை.யடிதனைத்தொழுது மிருநாலுபேர்கள்
சென்றுரைத்திடுபணிகள் செப்பினிடம்வைத்து.திறம்பிடாவண்ணமோ கொம்பின்சிமிழிட்டு
அன்றுகண்ணகையி னருளானபடிதாதியர்கள்.அடைவுடன்கண்ணகையி னாமமிடனோதிச்
சென்றநற்பலகையவர் தோழினில்வைத்துத் திருகடவையூர்தனிற் சேரவந்தாரே

வேறு

வந்தஅந்தத் தாதியர்கள் மகிழ்திடு பல்லக்குடனே
சந்ததமுங் கண்ணகையின் தாழிணையின் பணிவிடயாய்
சிந்தையன்பு முடையவாராய்ச் சேரநகர் மாதேவியின்
முந்துகடை வீதியிலே முத்துப்பல்லக் கிறக்கிவைத்து

வைத்துவரு மளவில்வெய்யில் வணிகேசர் படும்பாட்டை
அத்தோழியர்கள் கண்டழுது அருகுசென்று பரிவுடனே
இத்துயர முமக்காச்சோ வெனத்தொழுது நாங்களுன்றன்
பத்தினியின் பாங்கியென்னப் பரிவுபெற்று மகிழ்தனரே

மகிழ்துமாதர் தனைப்பார்த்து மாதர்களே வந்ததென்ன
மகிழ்வொடுருரைத் திடுமெனவே மாதர்களங் கேதுரைப்பார்
மகிழ்வினுன்றன் நாயகியார் மதிக்குமாறா பரணந்தந்தார்
மகிழ்வினொடு நீர்கொடுத்து வாதைதனைத் தீருமென்று

தீருமென்று சொல்லிவன்னச் செப்பின்மூடி தனைத்துறந்து
பாராமான கோவலர்முன் பரப்பிவைத்தா ராபரணம்
ஆரமுற்றுக் கோவலனா ரகமகிழ்ந்து கவலைகொண்டு
வாரமுற்ற மாதேவியை வரவழைத்துப் புகலலுற்றார்

புகலுமுன்றன் பணமுழுதும் பொற்கொடியிப் போதருவேன்
விகலமின்றிக் கட்டவிழ்த்து விடுவாயென் றுரைப்பளவில்
சகலமுறை தரித்தவண்ணத் தாதியரை முகம்பார்த்து
நிகரில்கட்டை நீக்குமென நேரிழையா ரவிழ்த்துவிட்டார்

விட்டிடவக் கோவலனார் விளங்குமேனி மண்துடைத்துப்
பட்டணத்திற் செட்டிகளைப் பரிவுடனே வரவழைத்துக்
கட்டுகல்லிநகை யதெல்லாங் காட்டிவிலை கழற்றிவிற்க
மட்டுவிலை யிட்டளவாய் வாங்கினரே பொன்தொகுதி

பொன்தொகுதி களைவேறாய்ப் புல்லுமாதெவிக்கு விலை
அன்பொடு கொடுத்தளவில் அவள்தாய்நின் றங்குரைப்பாள்
பொன்னிடத்திற் களங்கமுண்டு போடிபோடி சரியாக
வன்னமுற வுருக்கிவித்து வாங்குபாங்கா யென்றனளே

வாங்குமென்ன மாதெவியும் வகைசெறிந்த தட்டானைத்
தீங்கறவே யங்கழைத்துச் சேர்ந்தபொன்னை யுருக்குமென்ன
ஆங்கிசைந்து கோவலர்தன் யருட்படியக் கம்மாளர்
பூங்கனலிற் கோவலரின் பொன்னுருக்கத் தொடங்கினரே

பொன்னுருக்கித் தெளியவைத்துப் பொருந்தமாற்றுத் திருந்தியபின்
கன்னிமுன்னே நிறுத்துமொரு கணக்காகநா ளொவ்வொன்றுந்
துன்னுமொரு மாதத்துக்குச் சூழ்ந்தமுப்ப தாயிரமும்
இன்னுமிரு நூற்றிநாற்பத் தெண்களஞ்சு பெண்ணினுக்கு

பெண்ணினுக்கு மதியமது பேசும்படி தான்கொடுத்து
வண்ணமதிற் குறையாமல் மாற்றுரைத்துத் தீர்த்துவிட
வண்ணமகள் மாதேவியும் மாதாவு முடனுடனே
எண்ணியெண்ணிக் குறையாமல் யாவதையுஞ் சேமமிட்டார்

சேமஞ்செய்ய அவரிருக்கத் தேவிவிட்ட தாதியர்கள்
காமஞ்செய்யுங் கோவலரைக் கண்டுமது கண்ணகையார்
தூமஞ்செய்யும் மாதெவியார் தோன்றுசினம் மூண்டதென்றால்
வாமஞ்செய்யும் மனையகத்தே வரும்படியாய்ச் சொன்னாளே

சொன்னாளே யுமதுமணஞ் சொகிசானால் மாதேவிக்கு
முன்னாளில் மோகமுறில் முழுமணிசேர் பணிச்சிலம்பை
என்னாளுஞ் செலவழிக்க எண்ணப்படி கழற்றிவிற்று
மன்னனாக வாழுமென்று வாய்புதைத்துங் கூறினளே

கூறுகின்ற மொழிக்கிசைந்து கோவலரே வாறீரே
வீறுகொண்ட மாதேவிபால் மேவுவீரே சொல்லுமென்ன
மாறுகொண்ட சொற்கேட்டு மணிவிழியால் நீர்சொரிய
சீறிநின்று தெரிந்துபின்பு செப்புகின்றார் கோவலரே

கோவெனவாங் கண்ணகையாங் கொம்பனையை விட்டிளந்து
ஆவெனவித் தாசியுட னாடிவந்த பாதகத்தால்
மேவுமென்ற பொருளழித்து விட்டதொரு கேடுமன்றிக்
கூவியென்னைப் பதைபதைத்துங் குரவையிடச் செய்தனளே

செய்தவிந்தத் தாசியுடன் சேரமன தில்லையெடி
வையமன்றி லரங்கேறி மாதைமாலை சூடியநாள்
மைவிழியாள் சொற்படியென் மாதிடத்திற் போகேனென்று
ஐயமறவார்த்தை யொன்றை யறைந்ததுண்டு மானாரே

அறையுமந்த வார்த்தைதன்னா லவள்மொழியே கேட்பதன்றி
.இறையுமென்னைக் கொன்றாலு மேகமாட்டேன் மாதர்களே
குறையிருந்துங் கால்விழுந்துங் கும்பிட்டுத் தண்டமிட்டும்
பிறைநுதலா ளுத்தரவே பெற்றுவாறேன் போங்களெனன்றார்

போங்களென்று சொன்னவுடன் பொற்கொடிமார் மீண்டுவந்து
வாங்குநுதற் கண்ணகைக்கு மாறிலாதிப்படி யுரைத்துப்
பாங்கியர்க ளிருந்ததற்பி பட்சமுற்றுக் கோவலனார்
தாங்குமந்த மாதெவியாள் தன்முகம்பார்த் துரைப்பாரே

பார்மிகுந்த பணங்களெல்லாம் பண்புடனே தந்துவிட்டேன்
கூர்மிகுந்த மாமயிலே கூறுவேன்கே ணான்மணஞ்செய்
பேர்மிகுந்த பெண்ணினுக்கு பெரியதொரு சன்னிவந்து
சார்மிகுந்த துயரமதாற் சாவதுமிப் பரிசதுவாம்

பரிசகற்றுங் கடன்முறைக்குப் பாலையள்ளி வாயில்விட
கரிசகற்றா மங்கலியங் களுத்திலிட்டே னாகையினால்
துரிதுகற்றும் வேதமுறை சொல்வதற்கா யுலகோர்கள்
பிரிசமுற்றோர் சீட்டெனக்குப் பெய்வளையே வந்துதெடி

வந்தவந்த மொழிப்படியே மாதிடத்தி னானேகிச்
சொந்தமான கடன்கழித்துச் சுருதியினான் வருவதற்கு
விந்தைசெறி குழலாளே விடையெனக்கின் றழிப்பாயேல்
வந்துவிடுவே னொருநாள் மற்றுமது தடையிலையே

தடையிலையென் றுரைப்பளவிற் றார்குழலாள் மாதேவியும்
படியிலாறு வருஷமுற்றீர் பாவைதன்மே லாசையற்றீர்
வடிவுடநீர் போய்வாரும் வகையெனக்கொண் டின்னமுண்டே
அடியிலந்திக் கடைச்சிலவுக் காயிரம்பொன் தாறோமென்றீர்

தாறமென்ற பொன்னையிப்போ தந்தீரேல் விடுகுவேனான்
மாறிலையென் றேயுரைக்க மாதெவியே நானுமக்கு
மாறுசெய்யேன் மீண்டுவந்து வருமதிபொன் முழுதுமீய்வேன்
மாறியுனை விட்டிருக்க மாட்டேன்பொன் கொடுவருவேன்

வருவேன்மனக் கவலைவேண்டா மாறுபொன்னுந் தாறேனான்போய்
வருவேன்விடை தாருமென்ன மாதேவியங் கேதுரைப்பாள்
வருவீரெனிற் காவேரியின் வந்துகழுத் தளவுநீரில்
வருநீரள்ளி யொருகரத்தால் வாக்குரைத்தென் கைதாரும்

தா்ருமென்றீர் பெண்ணரசே தடையிலை நீரென்கூட
வாருமிப்போ தாறேனென்று மாதேவியுங் கோவலரும்
சாருமந்த வாற்றினிலே தண்ணீர்கழுத் தளவிறங்கிச்
சாரவந்தக் கோவலரை தள்ளிநீரில் விழுத்தினளே

தள்ளியந்தக் கோவலரைத் தான்விழுத்தி மாதெவியும்
மெள்ளவோடிக் கரையேறி வீட்டில்வந்து சேர்ந்தாளே
கள்ளிதள்ளக் கோவலருங் கால்தவறி மேலுதறி
துள்ளியந்த நீரிலுள்ள சுரியிலகப் பட்டாரே

சுரியில்மாளுங் கோவலரைச் சுலவிவந்த சுறவினங்கள்
வரிவிழியாள் கண்ணகையெம் மாதாவின் மகுணரிவர்
விரைவிலவர் தனைத்தின்னாதீர் மிண்டிநின்று தின்றீரென்றாற்
கரியகுழற் கண்ணகையார் கடுஞ்சாபஞ் சொல்லுவளே

சொல்லுவளென் றேசுறவு சொல்லஅந்தக் கோவலரை
மெல்லமெல்ல மீனினங்கள் மேற்சுமந்து கரையேற்ற
அல்லலுற்ற கோவலனா ரருகணைந்து கரையேறி
வல்லநட மாதெவிதன் மனையகத்தி லணுகினரே

அணுகக்கண்ட மாதெவியு மவரிறக்க வில்லையென்று
துணிவுடனே வருமளவிற் றூயபுகட் கோவலனும்
மணியைவென்ற மாமயிலே மாளவெனைத் தள்ளிவிட்டுத்
தணிவுகொண்டு வந்ததென்ன சாற்றுமென்றான் கோவலன்றான்

சாற்றுமந்தத் திரைசுலவு தன்மைகண்டு நான்பயந்து
தோற்றுமுமைத் தழுவவந்தேன் தோழனேநீர் பின்போனீர்
ஆற்றலையி னான்விழுந்து மலைந்தலைந்து தடுமாறிக்
காற்றுதவி யாகவந்தேன் கணவனேயீ துண்மையென்றாள்

உண்மையிதா மென்றுரைத்த வொண்டொடி மேற்பட்சமுற்று
கண்மணியே போய்வாறேன் கருணைபுரி யெனவுரைப்ப
தண்ணீரில்லைக் குடத்தில்மிகத் தாழ்ந்தகிணற் றதனிலள்ளி
வண்ணமுடன் வைத்திட்டுப்போம் மறவாமற் பார்த்திருக்க

பார்த்திருக்க வெனமொழிந்த பாதகியுங் கோவலருந்
தீர்த்தக்கூவ லிடமடைந்து சிறந்ததுலாப் பிடித்திறைக்க
காத்துநின்று கோவலரைக் கற்கிணற்றிற் றள்ளிவிட்டுப்
பேர்த்துமொரு கின்றமர்ந்த பொரியகல்லை விழுத்தினளே

விழுந்தவந்தக் கோ்வலனும் வெண்ணகையார் கண்ணகைபேர்
மொழிந்தளவி லவளருளால் முழச்சிரத்திற் போனகல்லு
குளிர்ந்தகுடை பிடித்ததெனுங் கொள்கையென்ன வொருமுளத்தி
எழுந்துநின்ற தவளருளை யாதுங்கடந் திடவல்லதோ

வல்லவந்தக் கண்ணகைதன் வழியருளாற் பெருக்கெடுத்து
செல்லுமந்தக் கோவலரைத் திரைகிளப்பிக் கொண்டுவந்து
கல்லுடனே தள்ளிமெள்ளக் கரையினரு கிடம்விடவே
மல்லமருங் கோவலனும் மாதேவிவீ டணுகினனே

மாதெவியைக் கண்டுமனம் மகிழ்வடைந்து கோவலனும்
கோதையரே யெனைக்கிணற்றிற் கொண்டுபோய் நீர்தள்ளிவிட்டு
ஏதெனமாதேவி சொல்வாள் என்கணவா வதனருகில்
வாதைசெய்யுங் காளியொன்று வாழுமந்த மரத்தடியிற்

அடிமரத்தி லவள்புரிந்த வனியாய மிப்படியே
முடிவுமில்லை முன்னுஞ்சில மோசம்வரப் பலர்க்கிழைத்தாள்
அடியேனென்செய் வேனெனவே அகமகிழ்நது கோலரும்
வடிவுடையீ ரினிப்போக மகிழ்ந்துவிடை தாருமென்றான்

என்றவுட னும்மையெந்த விரவுபகல் கண்டதுபோல்
இன்றுமினிப் பார்க்கவுநான் எழிலார்ந்த கடுக்கனெல்லாம்
இன்றுதாரு மெனக்கழற்றி யீந்துவிடை தாருமென்ன
நன்றுனது சால்வைசேலை நான்பார்க்கத் தாருமென்றாள்

தாருமென்ன வுடனுரிந்து தான்கொடுத்து நான்போகத்
தாரும்விடை யெனவரைஞான் தரவில்லைநான் பார்ப்பதற்கு
தாருமென்னக் கழற்றிவைத்துச் சரிதருவீர் விடையெனவே
தாருமென்றீர் விடையெனக்குத் தரும்பணமெப் போதருவீர்

தருகுவேநான் பத்துநாளிற் தயவுசெய்து போகவிடை
தருகுவீரென் றிடநீரிந்தத் தருமதியைத் தராதிருந்தால்
விரைவினில் நீயிறந்திடென்று விடையுமுடன் றான்கொடுத்தாள்
விரைவில்வெகு துன்பமுற்றும் மேலுநாசச் சாபம்பெற்றார்

மேலுமென்றோ விதிவழியை வேதனுக்குக் கடக்கரிதே
ஆலமுண்ட கண்டர்சொல்லை யாரகற்றப் பெற்றவர்கள்
காலமூன்றுங் கடந்தபிரான் கற்பனையைத் தப்பவொரு
சீலமில்லைத் தேவரில்லைத் திருமறையின் முறையுமிதே

திருவிருந்த கோவலனார் மாதேவியெனு மூதெவியால்
திருவிளந்து பொருளழிந்து திகைத்துவெய்யில் தனிலிருந்து
திருவுடலி லடியும்பட்டுத் திரையிலாழ்ந்துங் கிணற்றில்வீழ்ந்துந்
திருவுயிற்கு மோர்சாபந் தேடிவாடி மேவினரே

மேவுவிழி மேற்கணிகை விடைகொடுக்கக் கோவலனு
காவுபணி தானிளந்துக் கட்டுமரைத் துகிலிழந்தும்
காவியுமில் நிருவாணி காலமூன்றுங் கடந்தனபோல்
தாவுபுகழ் கோவலனார் தலைவாசல் கடந்தனரே

வாசல்தனைத் தான்கடந்து மானமற்று மனதுருகிக்
காசகலுங் குழைதழைத்த காடணைந்த வழிநடந்து
மாசதுற்ற திருக்கடையூர் மாறியேறிச் சோழநகர்
தேசமுற்றுக் கண்ணகையார் திருப்பதிக்கங் கணித்தானார்

திருப்பதிக்குப் பிறகான திருவாத்தி நிழலிருந்து
திருவாத்தி நாருரித்துச் சேரவரைக் கயிறணிந்து
பெருத்தநாராற் கவுஷணமும் பின்னொருதா மரையிலையைச்
சிரத்திருத்தி யெழுந்துபசி சேரவந்தார் கோவலனார்

வந்தநல்ல கோவலனார் மானமென்னும் வசைநசையாற்
சிந்தைமிகு கண்ணகையார் திருமனையில் சேராமல்
வெந்தபசி யதனாலே விரைந்துபழ மருந்துவதாய்
அந்தமனைக் கருகிலொரு ஆலமரம் பழுத்துநிற்க

பழுத்தமரத் தேறித்தின்று பழம்மரத்தி லிவரிருக்க
அழகுபெற்ற கண்ணகையின் அடிமுறைசெய் தாதியர்கள்
புழகமுற்ற விருமாதர் பொற்குடங்கள் கரமெடுத்து
குளிர்மிகுந்த நீரெடுக்கக் கோதைநல்லார் மேவினரே

மேவுகின்ற வேளையிலே மேலுயரு மால்மரத்திற்
தாவுபழம் பெண்களுடை தலைதனிலே விழுந்திடவும்
வாவுபழ மென்றுமேலே மாதுநல்லாள் பார்ப்பளவிற்
கோவலரோர் குரங்கெனவோர் கொம்பிலுறக் கண்டனரே

கண்டவர்க ளதிசயித்துக் கடுநடையி லோடிவந்து
வண்டமரும் பூங்புழலார் மாதினல்ல கண்ணகைக்கு
ஒண்டொடியே கேட்டருளு முத்தமியே கேட்டருளும்
பண்டையிலுன் நாயகனார் பரதேசிக் கோலமதாய்

கோலமதா யுடையுமில்லை கோமணங்கொள் நிருவாணியாய்
ஆலமரம் மீதுபோகும் மரியதொரு பெரியகொம்பின்
பாலிருந்து பழமுண்கிறார் பார்க்கநாங்கள் வெட்கமுற்று
மாலொடோடி வாறோமென்ன மாதுகேட்டு மகிழ்வுடனே

மகிழ்வுடனே விதனமுற்று மாதர்முகந் தனைப்பார்த்து
புகழுநல்ல பட்டுச்சோமன் பொற்சரிகைத் தலைப்பாவும்
நிகழுமுத்தின் மோதிரமு நிகரிணைந்த சவடிகளும்
இகழ்விலாத பலபணியு மெடுத்தவர்கள் கைக்கொடுத்து

கொடுத்துமுத்துப் பல்லக்குடன் கூடிநீங்க ளங்குசென்று
கொடுத்தபணி பூணுவித்துக் கொழுனனையிச் சிவிகையிலே
விடுத்தெடுத்து வாருமென்று விடைகொடுக்க இவர்கள்சென்று
வடத்திருந்த் கோவலர்முன் வந்துசொல்வார் கொம்பனையார்

கொம்பின்மிசை வீற்றிருக்குங் கோவலரே கேட்டிடுவீர்
கொம்பனைய கண்ணகையார் குற்றமற்ற வாபரணம்
கொம்பிடுதண் டிகையுந்தந்தார் கோலமுற நீரணிந்து
கொம்பனையா ளிடம்வருவீர் கொண்டுபோவோ மென்றனரே

என்றுசொல்லக் கோவலரு மின்பமுற்றுத் துகில்தருவீர்
என்றுவாங்கித் தானுடுத்து இறங்கிமரத் தடியில்வந்து
என்றுமுள்ள பணியணிந்து எழில்சிரத்தில் வெண்டிறுக்கி
என்றுமில்லா மகிழ்வுடனே யேந்திளையார் தனைப்பார்த்து

தனைநிகருங் கோவலனார் தாதியரே கேட்டிடுவீர்
மனைமருவ நான்நடந்து வருகுவேநீர் தண்டிகையை
நினையுமுன்னே கொண்டுசெல்வீர் நீங்களென்று கோவலர்பின்
இணையுமன மனையகத்துக் கின்னலொடு சென்றனரே

சென்றுமனைக் கண்ணகைமுன் செல்வர்வந்து சேர்ந்தளவில்
மன்றுபொற்பாய் தனைவிரித்து வணிகர்தமைத் தானிருத்தி
நன்றுதீர்த்தம் பலகொணர்ந்து நாயகனைத் தண்டனிட்டு
நின்றொதுங்கிக் கைகுவித்து நேரிழையாள் நிகழ்தினளே

நிகழுமண மெனைமுடித்து நேர்ந்தமறு நாலாநாள்
புகழுமந்த மாதேவியாம் பொற்கொடிக்கு நாயகனாய்
சகமதிக்க நீரிருக்கத் தலைவாவுனை யவள்வருத்தி
இகழ்துவிட்டா ளென்னிலிப்போ திறந்தபின்னென் படுவளென்றாள்

என்றொளி செய்திருமேனி இடுக்கணுற்றுக் கறுத்திடவே
புன்றொழிலாள் புரிந்தசெயல் போமோவென்றும் புகைந்துநின்று
மன்றுலவுந் தாமரைமா மலர்போலே யலர்ந்தமுகம்
கன்றிமிகக் கறுக்கமற்றக் காரிகைகண் குருடாச்சோ

சோதிசெறி மேனியது துகள்பரம்ப வாடினதால்
சாதமுடன் கறிபல்வர்கந் தானருந்த வாருமென்ன
வாதைபெற்ற கோவலனார் மனமகிழ்ந்து மாமயிலே
யாதுமென்றன் விதிவசத்தா லிடுக்கணுனக் களித்தேனென்றார்

என்றுசொல்லக் கண்ணகையார் ரெனக்கிடுக்க ணொன்றுமில்லை
இன்றுமது துன்பமதால் என்னுருவம் கருகினதே
நன்றுதீதென் பதுவிரண்டுந் நமக்கும்கும்வரு மெவர்க்கும்வரும்
சென்றதினா லாவதென்ன திருவுளத்திற் றெளியுமென்றாள்

தெளியுமென்று கோவலர்தன் சிந்தைமய றனையகற்றி
ஒளிபொருந்துங் கோவலரை யொழும்புமென்றங் கழைத்துவந்து
களிபொருந்தும் அமுதுகறி கருணையுட னேபடைத்து
வளிபொருந்துங் கோவலரை மகிழ்ந்தருந்து வித்தனளே

அருந்திமிக்க கையலம்பி யகமகிழ்ந்து குளிர்ந்திருந்து
திருந்தியவெள் ளிலைபழுக்காய் தேன்மொழியாள் தான்கொடுக்கப்
பரிந்தருந்திப் பட்சமுற்றுப் பாவையர்தன் முகம்பார்த்து
விரைந்துமன வியாகுலமாய் வியந்திதனைப் பேசலுற்றார்

பேசரிய பெண்ணாரே பெரியதொரு வணிகர்குல
நாசகனா னென்றுபல நாடறிய வேயிருந்தேன்
வாசமின்னே நல்வினையால் மணமுடித்தே னுன்னையந்தத்
தேசழிந்திப் போதூழ்வினை தேவடியா ளானதெடி

தேவடியாள் மாதேவியென் திருப்பொருள்கள் கவர்ந்ததனால்
தாவிடுமென் சந்ததியோர் தானிகழ்ந்தார் வாழ்மயிலே
பூவெடிநீ தான்துணையும் புந்திதனி லன்புமுற்றாய்
மேவிடுமென் வங்கிஷமு மிகமனது சலித்தனரே

சலிக்குமெடி மனதுமிந்த தாரணியு மேசுமெடி
கலிக்குமெடி யொருவருடங் கடன்வாங்கப் போனாலும்
கெலிக்குமெடி யென்மனது கிலேசமுற்ற ததனாலே
புலித்தொடைநற் பொறையாளே புகலுவேன்கே ளின்னுமொன்று

புகலவிது வெட்கமெடி பூவைநீயோர் தெய்வமெடி
விகலமதில் லாதபடி விளம்புகிறேன் கேள்மயிலே
சகலதனம் முதலாகத் தாவியமா தெவிக்களித்தும்
இகலிலொரு பகையுமின்ன மிருக்குதெடி யேந்திளையே

இருக்குமவளுக் காயிரத்தெண் களஞ்சுபொான் கடன்காண்
சுருக்கமறத் தாறேனென்று சொல்வந்தேன் தோகையரே
கருங்குழலாள் திகதியிலே கருதுபொன்னைத் தாராயேல்
தருக்கனில்நீ யிறந்திடென்று சாபமொன்றங் கோதினளே

சாபமிட்ட மாதேவியின் றனதுபொன்னை நான்கொடுக்கத்
தாபமிட்டேன் கொடுக்கவழி தானுமில்லை மாமயிலே
சோபமிட்டேன் நான்பிழைக்கத் தோணுவழி தானுமில்லை
பூபசோழன் மதுரைநகர் போறெனெடி வாழ்வதற்கே

வாழ்வதற்று வழிதேடி வாணிபங்கள் தனைப்புரிந்து
தாழ்வகற்றி யுன்னையுநான் தாபரிக்க வாறேனே
ஊழகற்றி யெனைப்புரக்கு முத்தமியே பத்தினியே
மீழ்வதற்கு மெண்ணமென்ன மெல்லியலே சொல்லுவுமென்றார்

சொல்லுமென அவருரைக்கத் தோகைநல்லா ளேதுரைப்பாள்
புல்லுமந்தப் பெண்களுக்கு பூரணமாய் நாயகமார்
நல்லதொரு தெய்வமென்று நல்லவேதங் கூறிடுமே
வெல்லும்பிழைப் பில்லாமல் வேறிடம்நீர் போகலாச்சோ

நீர்போகில் நானும்வாறேன் நேராயுன்றன் பிறகேயென்றாள்
வாரைவிம்முந் தனத்தாளே வாறெனென்று நீருரைத்தீர்
சீரிழந்த வறியவளோ சேவயிழையே யல்லதுன்றன்
பாரிலுள்ள வங்கிஷத்தோர் பரிவுசெய்வா ரெனவுரைத்தார்

பரிவுசெய்வா ரென்றுரைத்த பத்தாவை முகநோக்கி
மருவுமயில் விழியுடைய மங்கைநல்லா ரேதுரைப்பார்
மருவுபெண்க ளெல்லவர்க்கும் மகிணர்பெருந் தெய்வமல்லோ
விரைவிலவ ரல்லாது வேறுதுணை பேறுமுண்டோ

துணைபொருந்து மென்னுடைய சுற்றமெல்லாம் வெறுத்தாலும்
அணைபொருந்து தெய்வமெல்லா மாணைசெய்து மறுத்தாலும்
விணைவிழிசேர் கற்புடைய பெய்வளையார் கேட்பாரே
இணையதில்லா நாயகனே யான்வருவே னெழும்புமென்றார்

என்றவுடன் கோவலரு மினிதெனவே மனமகிழ்ந்து
மன்றலளி புரிகுழலே மாதேநீர் வாருமிப்போ
சென்றுமது ராபுரியிற் சிலமுயற்சி செய்திருந்து
துன்றுபல பொருள்தேடித் தோகையரே மீள்வோமெனன்றார்

மீள்வொமென்று சொன்னமொழி வித்தகியார் தான்கேட்டு
ஊழ்வினையை மனதிலெண்ணி யுழம்பொருந்தி மடக்கொடியும்
தாழ்வுசற்று மில்லாமற் தனக்கிசைந்த பணிபூண்டு
வாழ்மயிலுங் கோவலரும் மதுரைசெல்லத் தொடங்கினரே

மதுரைசெல்ல வேணுமென்று வாழ்மயிலுங் கோவலரும்
சதுர்விதமா யமுதுசெய்து தந்திமுகன் தனைநினைந்து
அதிர்பொருந்து முரசதிர ஆடல்செய்யுங் கோவலரும்
கதிர்பொருந்து மொழிபுரக்குங் கண்ணகையோ டெழுந்தனரே

எழுந்தபுகழ் பாண்டியனுக் கிட்டபெருஞ் சாபமென்னும்
கொழுந்துமுற்றுங் கயிறதுவே கோவலரை முன்னிழுக்க
அழுந்துபுகட் கோவலனார் அவரிறக்கும் வினையதுவே
தொழுந்தகைய பிடரிதள்ளத் தோகையுடன் மேவினரே

மேவுமந்தக் கோவலரும் மிக்கபுகட் கண்ணகையும்
தாவுமின்பப் பொருளாமே சாரவைக்குந் தேவருளால்
காவரசன் மால்பிரமன் காணாத கருணைகொண்ட
மாவிழியாள் மாதுடனே மதுரைநகர் குறுகினரே

**"எட்டாவது கோவலரை பொன்னுக்கு மறித்தல் முற்று "**

விருத்தம்

அருளளித்தேமிகுதி பொருளளிப்பாய் பிணிகளானது மகற்றிவைப்பாய்
ஆதாயமதுமிகுதி நீபுரிந்தே யரசரானவசிகரமு மருள்வாய்
பொருளளித்தேமிகுதி கரவர்புரிசூழ்ச்சமதும் பூதமொடுபெல்லி வினையும்
போராடுநேராளர் பலமிருகமேவினும் பொன்றமாரண முதவுவாய்
அருளளித்தென்மனது குடியிருந்தருள் ஞானவழியுமதி னொழியும்வெளியாய்
வந்தருளவேயுனது சிந்தைமகி ழானந்தவாரிகொடு காணவருவாய்
தருவழித்தேமிகுதி தென்றலுறுநாகர்பதி தங்கியரு ளெங்குமுதவும்
தற்பரீதயவுமிகு சிற்பரீஇ கற்பினொருதலைவி கண்ணகையம்மனே

**"ஒன்பதாவது சிலம்பு கூறல்கதை"**

கோவலருங் கண்ணகையுங் கூடலிலே சிலம்புகொண்டு
மேவிவிலை கூறுவதால் வேறொருதட்டான் மருட்டிக்
காவலன்முன் கொண்டுசென்று கள்வனெனக் கோவலனை
கூவியுயிர் கொன்றகதை கூறுகிறேன் கருமமதே

கரும்பாரு மொழிபயிலுங் கண்ணகையார் தன்னுடனே
அருங்கானில் வழிநடந்து அகமெலிந்து கோவலரும்
விரும்பாத மன்னவரை விண்ணேற்றும் பாண்டியன்தன்
சுரும்பாருங் காமதுரைத் தூயபதிக் கேகினரே

பதிக்கடையூர் மாதேவிமேற் பாசமுற்றுப் பொருள்தோற்று
விதிக்கடைசேர் கோவலனார் மென்குழற்கண் ணகையுடனே
கதிக்கவழி நடைந்திழைத்துக் கால்கடுக்கக் கனதூரம்
மதிக்குபுகண் மாமதுரை வாழிடையர் தெருவில்வந்தார்

வந்தபொழு தோரிடையர் மாதுகண்டு மனமகிழ்ந்து
முந்தியோடித் தாயிடத்தில் முன்னாகநின் றுரைப்பாள்
எந்தாயே கண்டதுண்டோ எழிலுருவின் மதனெனவே
வந்தாரேயொரு வணிகர் மாதுடனே யென்றனளே

என்றவுடன் தாயிடைச்சி யெழுந்துமன மகிழ்ந்துடனே
சென்றவரா றறியவென்று தேசிகன்முன் வந்துநின்று
கன்றிமிகவிளைத்து வந்தீர் கன்னியுட னன்மகனே
ஒன்றிவழி வந்ததென்ன வுங்கநகர் தூரமென்ன

தூரமென்ன வாரமென்ன தொல்குலமென் நல்லலென்ன
தாரமுடன் வந்ததென்ன சரீரமுகக் கோட்டமென்ன
வாருமிளைப் பாறியெங்கள் மனையிடத்தி லணையுமிப்போ
காரியமு மோதிடுவீர் கலங்கவேண்டம் வாருமென்றே

வாருமென்று மனைகொடுபோய் மகிழ்ந்தவரைத் தானிருத்தி
ஓருநாங்க னிடையர்குலம் யோசனைகள் வேண்டாமையா
தேருமென்று சொல்லவவள் சீர்வணிகர் மனமகிழ்தார்
வாரணையுங் கொங்கையவள் மகளும்வந்து தொழுதுநின்று

தொழுதுநின்று கண்ணகையார் தூயமுகம் பார்த்தனையே
அளியுடனோர் மாமியுண்டுஊ ஆடநாலு தோழியுண்டு
வழுவில்லாதிங் கிருப்பீரெங்கள் மாதவமே குலதெய்வமே
எளிமையெங்கள் மனையகத்துக் கேகுதெய்வமென மொழிந்தாள்

மொழிந்தமொழி தனைகேட்டு மொய்குழற்கண் ணகையருளத்
தொழுந்தகைசேர் கோவலருஞ் சூழ்ந்தவர லாறுரைத்து
குளிர்ந்துமனங் கொண்டாடக் கொடியிடையா ளிடைச்சியம்மை
தெளிந்தசெப்பில் அடைக்காயு சேரும்வாசச் சரக்குகளும்

வாசமாகக் கொடுத்துடனே மனையிரண்டிற் திருத்தமதாய்
வாசமிட்டு விளக்கேற்றி வடிவுறுசம் பாவரிசி
வாசமுற்ற பால்தயிர்நெய் பருப்புவகை பழவகையும்
வாசமுற்ற சரக்குடனே வகைவகையாக் காய்வற்கமும்

வகைவகையாய்க் கொடுத்திடையர் மாதுசொல்வாள் மாதாவே
வகைவகையாய்க் கறிசமைக்க வாகுடனே யமுதுவைக்க
வகைவகையாம் மடப்பளியில் வைத்திதனை வந்திநீர்
வகைவகையாச் சமையுமென்ன மாதுமேகிப் பார்த்தனளே

ப்ர்த்துமடப் பளியழகும் பரிவினிடைச் சியர்மகிழ்வும்
பார்த்துமனம் பரிவுபெற்று பட்சமுற்ற விடைச்சியரை
பார்த்துநன்னீ ராடவேண்டும் பாவையரே வாருமென்ன
பார்த்திடைச் சேடியரிருவர் பரிவுடனே யழைத்துவந்தார்

வந்துவாவி தனிலிறங்கி மலர்குழலாள் நீராடிச்
வந்துகுழ லுதறிக்காய்ந்த வாசமதைத் தானுடுத்து
வந்திடையர் மகளிரொடும் வந்தனைசெய் துடன்முடித்து
வந்துமனை யகம்புகுந்தும் மடப்பளியி னகம்புகுந்தாள்

அகம்புகுந்து சனிமூலையில் அடுப்படுத்துப் பாண்டம்வைத்து
அகமகிழ்வி னிடைச்சியர்கள் ஆனபணி விடைகள்செய்ய
அகமகிழ்ந்து அமுதுகறி யாக்கிமுகம் வேர்க்கநல்ல
அகமுடைய கண்ணகையா ரமுதுகறி பாண்டங்களை

பாண்டங்களின் புறவழுக்கைப் பத்தினியார் துப்பரவாய்
பாண்டிலிட்டுக் கழுவியிட்டும் பவுத்திரமா யமுதுவைத்த
பாண்டமதில் நீறணிந்து பணிபுரிந்த விடமதிலே
பாண்டமெல்லாம் பக்குவமாய்ப் பத்தினியார் வைத்துவந்தே

வந்துமகிழ்னனை யழைத்து வாகுபெற முன்னிருத்தி
வந்தனஞ்செய் தமுதுகறி வர்கமிலை யிற்படைத்து
வந்துவெகு நேரமென்றன் மகிழ்நரேநீ ருண்ணுமென்ன
வந்துவணி கேசருண்டும் மாதுபின்னு முண்டாளாம்

உண்டுகைவாய் பூசறுத்தும் மோரறையிற் போயிருந்து
உண்டான வெள்ளிலைகா யுடனருந்திப் பரிவுமிக
உண்டாக்கிக் கண்ணகையு முயர்வணிகர் கோவலரும்
உண்டாட்டுக் களித்துடலி லுற்றகளை களித்திருந்தார்

உற்றிருந்து பலபலநாள் ஒருநாளிற் கண்ணகையின்
உற்றதிரு முகம்பார்த்து உயர்ந்தபுகட் கோவலரும்
உற்றமனத் தாயிழையே யொருவசன முரைப்பேன்கேள்
உற்றவிடத் திடைச்சியம்மை யுதவிசெய்து மூணிடுவாள்

வாள்விழியே யெந்நாளும் வரும்விருந்தென் றுண்டிருந்தால்
வாழ்வுடையோ ரேசுவரே மாநிலத்தில் லிம்மனையில்
வாழிடையர் மாதர்களும் மனவெறுப் புண்டாகுவரே
வாழ்விதனால் வடுவருமே வானுதலே யென்செய்குவோம்

செய்வதென்ன நாயகனே தீராத வசையும்வரும்
செய்யிழையா ரெந்நாளுஞ் சீருணவு தரவுண்டோமேல்
செய்யுபகா ரமுமில்லையே தெரியுமுன்னே யிதற்கினிநாம்
செய்வதென்ன வானாலுஞ் செப்புகிறேன் கேட்டிடுவீர்

கேளுமெங்கள் நகரைவிட்டுக் கிலேசமுற்றெந் நகர்ப்பிறருங்
கேளான வணிகேசருங் கிருபையில்லா மருவலருங்
கேளாரெம் சொல்லெனவே கீர்த்தியழிந் திங்குவந்தோம்
கேளாயிங் கொருவரில்லைக் கிட்டியிடைச் சியரிடத்தில்

இடத்திருந்து வடுப்படுதல் ஏராதென் நாயகவெம்
இடத்திருந்து நடந்துவெகு யாபாரஞ் செய்வோமென்று
இடத்தினல்ல மதுரைநகர்க் கேகுவோமென் றெழுந்துமிந்த
இடத்திருந்த நாளதிகம் ஏகுமதுரா புரிக்கே

ஏகுமது 'ராபுரியில் யாபாரஞ் செய்யுமென்றாய்
ஏகுவேனான் மாதேவிக் கென்பொருளுன் பொருள்முழுதும்
ஏகியங்கே கொடுத்தேனே யேந்திழையே வறியவனாய்
ஏகினேனே பொருளில்லையே யாபாரஞ் செய்வதற்கே

செய்வதென்ன வென்றுரைத்து சீர்வணிகன் துன்பமுற்றும்
செய்யிழையே மாதேவிக்குச் சேருமொரு நாளையிற்பொன்
செய்முறையிற் கொடாதிருந்தா லத்தேசமெல்லா மெனையிகழ்ச்சி
செய்யுமல்லோ சேயிழையே செய்வதென்ன செய்வதுநான்

செய்வதுவைப் பெண்ணைவிட்ட சீர்கேடன் மூடனென்னும்
செய்நடன மாதேவியைத் தேடியோடும் விசரனென்று
செய்யரிய நிதிகளெல்லாஞ் செலவளித்த தூர்த்தனென்று
செய்நலத்தி னுலகிலுள்ளோர் செப்புமொழிப் பழிசுமந்தேன்

பழிசுமந்த தன்றுமிந்தப் பாருலகில் ஞமனானேன்
பழசுமக்க விந்தமனைப் பத்தினியின் சோற்றையுண்டேன்
பழிசுமந்த வுலகிலென்னிற் பார்க்கவொரு பாவியுண்டோ
பழிவிழைக்கு மாதேவிக்குப் பாரிலொரு பொய்சொன்னேனே

பொய்யுரைத்தா னிவனென்றிந்தப் பூதலத்தோர் சொல்லுமுன்னே
பொய்யிடையே யுயிரைவிட்டுப் பொன்றுவது நல்லதெடி
பொய்யுரைத்து முயிரைவிட்டோர் புழுநரக மடைவரென்று
பொய்யில்லாது வேதம்சொன்ன பொருளிலுயிர் சுமந்தேனெடி

சுமந்தேனெடி யென்றுமனத் துக்கமுற்றங் கிருப்பளவில்
சுமந்தமலரக் குழலழகத் தோகைமன முருகியருள்
சுமந்தெனது நாயகனே சோரவேண்டா மென்னுரத்தில்
சுமந்தமணி யிருக்குதிதில் தொகைதருவேன் கழற்றிவில்லும்

கழற்றிவில்லும் வறுமைதனைக் கழற்றிவிடும் மனக்கவலை
கழற்றிவிடும் மாதேவியின் கடன்முழுதும் நாயகனே
களத்திலுற்ற பணியிலெதோ காணும்விலை நாயகனே
களத்திலிநா னுமக்கல்லவோ கள்ளியோநா னெனவுரைத்தாள்

உரைத்தளவிற் கோவலனு முளம்மகிழ்ந்து பெண்ணரசே
உரைக்குமிந்தப் பணிகளெல்லா மோதுவிலை போகாதெடி
உரைத்தபுக நாகமணி யுற்றசிலம்பா னால்நல்ல
உரைக்குநிற்கும் வேறுபொரு ளொன்றும்வேண்டாஞ் சிவனருளே

சிவனருளால் மதுரையிலே சிலம்புகொண்டு சென்றுவிற்றுச்
சிவனருளின் மீண்டிடுவேன் சிலம்புநீதா வெனவுரைக்கச்
சிவனருளாங் கண்ணகையார் செலவாரேயென் நாயகரே
சிவனருளாய் நீயிருக்கச் சீசீயென் றுரைப்பேனோ

உரைப்பேநான் சிலம்பைவிற்று ஒருநொடியில் மாதேவிக்கு
உரைத்தபொன்னைக் கொடுத்திடுவீ ருயர்புகழ்நா யகனேயென்று
உரைத்தபெண்ணின் முகநோக்கி யொண்டொடியே மதுரையிற்போய்
உரைக்கரிய சிலம்பைவிற்க வுன்கையினாற் தாருமென்றார்

தாருமென்ற கோவலரைத் தான்பார்துக் கண்ணகையார்
தாருமென்றே னுரைத்தீரையா தாளிலிதைக் களற்றுமென்று
தார்குழலாள் கரத்தாற்கொடுக்கத் தார்வணிகர் சிலம்பிற்றொட
தார்மார்பா கொலையுனக்குத் தாவுமென்றோர் சத்தமதே

சத்தமசரீரி சொல்லத் தாவும்வினை யெனப்பல்லியுஞ்
சத்தமிடக் கருமுகிலுஞ் சத்தமிடக் கழற்றியிட்ட
சத்தமுறு மணிச்சிலம்பு தான்தவறித் தரையில்விழ
சத்தியிந்தக் கண்ணகையாள் தார்வணிகர் முகம்பார்த்தே

பாரில்விழு வதனாலே பாவக்குறி தோணுதையா
பாரினல்ல மதுரையிலே பழிகாறத் திருடர்மிச்சம்
பாருமெந்தன் நாயகனே பணிச்சிலம்புக் குனக்குதவி
பாரிலாரு முண்டோவென்னப் பத்தினியே கேட்பீரென்று

கேள்ப்பீரென்று கோவலனுங் கிளர்த்திடுவான் கண்ணகையே
கேழுமொப்பு மில்லாத வீசருள் புரிவர்பெண்ணே
கேழிருந்து வாறேனென்னக் கேட்டஅந்தக் கண்ணகையார்
கேழுமெந்த நாயகனே கீர்த்திபெற்ற மதுரைக்குப்போய்

மதுரையிற்போய் நல்லவராய் வாழுநல்ல வர்த்தகர்கள்
மதுரையினற் பதியேதென்று வாங்நல்ல வல்லவராய்
மதுமுதற்கோ ளில்லவராய் வதிந்தவரை யறிந்துவில்லும்
மதுசூதன் மைத்துனர்தன் மலர்பதமு மறவாதே

மறவாதே புத்தியைநீ மதுரையிலோ ரிடமேயன்றி
மறந்தும்வெவ்வே றிடமிராதே மாறுரையுங் கூறாதே
மறவாதே நன்மார்க்கம் வாதுசூது பேசாதே
மறந்தும்பல பலவிடத்தில் மதிமயங்கி யுறங்காதே

மதிமயக்க முரைப்பவர்கள் வாறஇடம் போதகாதே
மதிதோன்று மிராச்சாமம் வாறவரோ டேகாதே
மதியிழக்கப் புத்திசொல்லி வருபவரோ டணுகாதே
மதியினல்ல பெரியோரின் வாசலிலே போகுவிரே

வாசல்பல மதுரையிலே மணிச்சிலம்பை விற்பேனென்று
வாசமாகப் போறேனென்றீர் வருகரும நலமறிந்து
வாசகநல் லுரைத்திடுவீர் மதுரையிலே தேவடியாள்
வாசமுட னிருப்பார்கள் வாலிபர்க ளவர்களையா

அவர்கள்கண்டா லுடனழைப்பா ரங்கேபோனால் விருந்தளிப்பார்
அவர்களும்மை வீட்டில்விட்டு அருங்கதவு பூட்டிடுவார்
அவர்களுக்கு நிகரொருவர் ரங்குமில்லை யெங்குமில்லை
அவர்கள்நல்ல வடிவுடையோ ராசைவார்த்தை பேசுவரே

வார்த்தைபேசிப் பொருள்முழுதும் வாங்குமட்டும் நாயகர்நீர்
வாரமுற்றிங் கிருந்திடுவீர் மன்னவனே யென்றுசொல்லி
வாரமுற்றுப் பொருள்பறித்து வாசலிலே தள்ளுவர்காண்
வார்த்தனத்தின் விலைமாதர் மாகொடுமை சொல்வேனே

கொடியவிலை மாதரவர் கொஞ்சுவார்த்தை பேசிடுவர்
கொடியிடையை யசைத்துவிழி கொண்டுமிரு தனங்குலுக்கி
கொடியகாம மூறுவித்துக் கொண்டுபோன பொருள்பறித்துக்
கொடிமைசெய்து வறுவிலியாய்க் கூசாமற் துரத்துவரே

கூசுகாகம் பருந்துசெந்நாய் கொடியகழு கோந்திநரி
கூசுநாக மிவையிடமாய்க் குறுக்காகில் நன்மையில்லை
கூசமேகமிடி யிடித்ததல் குளிர்ந்ததுளி சொரிதல்மின்னல்
கூசிமூசித் தும்மலிவை கூடிற்போக லாகாதே

ஆகாதே 'யந்தணனு மாகாதே யாண்டிகளும்
ஆகாதே வெறுங்கழுத்தி யாகாதே குசக்கலமும்
ஆகாதிச் சகுனமெல்லா மரியவழி வருமானால்
ஆகாதே யந்தவழிக் காரும்போக லாகாதே

போகுமிடங் குறுநரியுங் போகுமோந்தி சண்பகமும்
போகவலம் வருமானாற் பொற்சிவிகை குடைபெறலாம்
போகுமொழிக் கண்ணாடி புரவிசெந்நாய் கருங்குரங்கு
போகுமுலைப் பசுவுமல்லாப் புறமுதுகி லழுக்கெடுத்த

அழுக்கெடுத்த வண்ணானோ டாரும்வழி சேரிநல்ல
அழக்கரிய லாபமுண்டு அயன்விதித்த விதிப்படியும்
அழக்கரிய கருமமெல்லா மரானார்தன் னருட்படியும்
அழகான நாயகனே ஆவதெல்லாங் காணுவிரே

காணுவிரே வால்நெடிய கரிக்குருவி வலமிருந்து
காணஇடம் போகுமெனிற் கனகதண்டி யேறிடலாம்
காணரிதாம் வேதமெல்லாங் கழறும்வழி யாரறிவார்
காணரிய நாயகனே கண்டிடுவீ ரொன்றுசொல்வேன்

சொல்லரிய ராவணன்முன் தோகைசீதை தனையெடுக்க
வல்லமாயன் முன்னாக மாயமானை விட்டெடுத்தான்
சொல்லரிய குருகுலத்திற் துரியோதன னாதியரை
வெல்லலவ்வர் வந்ததுவும் விதிபடியென் றோதினளே

ஓதுதோகை தனைப்பார்த்து உயர்வணிக ரேதுரைப்பார்
மாதேயிவ் வசனமெல்லாம் மறுத்துரைக்க வேண்டாங்காண்
பாதமணிச் சிலம்பிதனைப் பாரின்மது ராபுரியில்
ஏதும்விற்று வாறேனென்றங் கிடைச்சியம்மைக் கீதுரைப்பான்

வேறு பொன்னேமணிவிளக்கே புருடராகமே. பொதுவர்குலநாயகியதான பொற்கொடியே
அன்னேதவமே யறத்தின்பயனே. அடைந்தவர்தமக்குதவு மாருயிர்த்துணையே
மின்னேயொழுங்காம் விறல்பொற்சிலம்பை.வெற்றிமதுராபுரியில் விற்றுவருமளவும்
தென்னாருமரிமாலைத் தேங்குழற்கண்ணகை.சேயிழையுன்ற னடைக்கலந்தானே

தேனாகியமுதாகி யினியகனியாகித் தேவாமுதக்கட லாகியேயெங்கள்
ஊனாகியுயிராகி யுலகத்திலெங்கள் உறவாகியுருவாகி நின்றவோவியமே
மாநாகர்செய்வித்த கனகச்சிலம்பைநான் வழுதிமதுராபுரியில் மாறிவருமளவும்
கானாருமலரழக மாமாதுஎனது கண்ணகையுன்ற னடைக்கலம்பொன்னே

பொன்னாயிரத்தெண்களஞ் சோரிராவினிற் பூதலமதிக்குமா தேவியற்கீர்ந்ததால்
எந்நாடுநகரைவிட்டிங்கு நாம்வந்தோம் எங்களுக்கினிதா மிடைக்குலமாதே
கொன்னாருமணிநாக விறல்பொற்சிலம்பைக் கொற்றமதுராபுரியில் விற்றுவருமளவும்
மின்னாருநுண்ணிடைக் கண்ணகையென்றன் மெல்லியலுன்ற னடைக்கலம்விறலே

விறலெயினர்கொடுமறவர் வனமருவுபவரரிய வெற்றிபுனைகாராளர் மற்றுமுளசாதி
மறுவில்மதகரி கரடிவரியுழுவையேனம் வாளடவிவழிகடந்திங்கு நாம்வந்தோம்
இறையரசுபுரிவழுதி மதுரைநகரேகியே யிதனைவிலைகூறி யானிங்குவருமளவும்
நறைகமழுவனசமலர் பொருவதனகண்ணகை நண்ணுதலுன்ற னடைக்கலம்வென்றோர்

வெற்றிபுனைமீகாம னாயிரங்கப்பல் வேலைமிசைவிட்டங்கு வெடியரசனுடனே
அன்றுபடைபொருதவன் படைகளையழித்து அரவரசனிடமருவி யன்றுகொடுவந்த
நன்றிதருமணியணியு நற்பொற்சிலம்பிது நான்மாடகூடல்விலை கூறிவருமளவும்
என்றுமறவாமல் முறையாகவிறையாக வெப்பொழுதுமுன்ற னடைக்கலங்காரேன்

கர்ராளிமீதிலே செங்கண்துயின்றவன் கன்றுகொடுசென்று விளவின்கனிவிழுத்தினன்
தாராதலங்களோ ரடியாலளந்தவன் தயிரோடுபால்வெண்ணை திருடியடியுண்டவன்
சீரேறவாளரக்கன் முடிகள்பத்துஞ் சிதறியேமண்மேல்விழச் சிலைவளைத்தவன்
நாராயணன்றனை வளர்த்தநாயகியே நாயகியுன்வீ டடைக்கலங்காணேன்

வேறு அடைக்கலங்கா ணென்றுசொல்லி யழகுசெறி கண்ணகையை
விடைக்குநிகர் கோவலனார் வியாகுலத்தோ டுரைத்தளவில்
இடைக்குலத்தி னடைப்பெரிய வேந்திழையு மீதுரைப்பாள்
தொடையிலங்கும் புயத்தழகா சொல்வதே னிவ்வளவுகதை

வளவிலெங்கட் கொருதெய்வமாய் வந்துனது மனையிருக்க
எளியதொழில் செய்வேனோ யிந்தமொழி யுரைப்பானேன்
தழுவிமிக வாதரவாய்த் தற்காத்துண்பன வழித்து
வழுவுக ளில்லாதபடி வைப்பேன்கா ணெப்பொழுது

எப்பொழுது முப்பொழுது மேற்றதொழில் முடித்துவைப்பேன்
இப்பொழுது மதுரைநகர்க் கேகிவாரு மெனவுரைக்க
அப்பொழுது கோவலரு மறைந்திடுவா ராச்சியரே
செப்புகிறேன் கேழுலகோர் சிரியாரோ சிறியனிவன்

சிறியனிவ னிடைக்கொடியார் தீணுதவத் தினந்தோறுஞ்
சிறுவிலையுங் கொடாதபடி செட்டிபெண்ணோ டிருந்துண்கிறான்
அறிவலையோ விவனுக்கென்பா ராதலினா லுரைத்தெனென்ன
அறிவின்மிக்க விடைச்சியவர்க் குரைப்பாளே யேதுரையே

வேறு ஏதுரைப்போம்வணிகர் குலதிலகமகனே இவ்வுலகிலெவ்வெவர் தமக்குமிடியுண்டே
ஏதுரைப்போந்தலையி லெழுதுவிதியிதுகாண் இடையர்குலவுணவுவிலையெவருமிடுவரே
சாதியவரெனில்வறுமை தானணுகிலையா தக்கோருமிக்கெளிமை தானடைவர்திண்ணம்
சாதியிதினாங்கள்விலை வாங்குவதுமில்லை தாரணியிலவரமுது தந்தும் முலைவிலையே

விலைமாதரெனநீரு மெனையெண்ணினீரோ மீதுலுகினிகழாத புகழிகழுமிலையே
விலையாகமதுரைநகர் மீதிச்சிலம்பைநீர் விற்றுவருமளவுமுன் பொற்கொடியுமிங்கே
அலையாதிருப்பளுன் மனதாகுலங்களைஇ ஆற்றியேமாதெவிக் கானகடனளியும்
அலையாளியுலகுள்ளோர் வசைபேசிலவரா லாவதொன்றில்லை நீரேகலாமென்றாள்

வேறு

என்றுசொல்லி யிடைச்சியம்மை யிவர்மனதைத் தேற்றியிட
நன்றுநாம்போய் மீள்வோமென்று நல்வணிக ரெண்ணிமனம்
கன்றியவேல் விழிமடவான் கண்ணகையின் முகம்பார்த்து
ஒன்றுபடத் தழுவிநின்று ஒண்டொடியே முற்பிறப்பில்

முற்பிறப்பிற் செய்தவினை மொய்குழலாள் மாதேவிக்கு
இப்பிறப்பிற் றேடிவைத்த விருநிதியந் தோற்றெனெடி
அப்பெரிய வடவிகளும் மாறுகளுந் தான்கடந்து
வைப்பெரிய மதுரையிலே வரவறுமை யெனக்காச்சே

என்சிரசில் மலரவன்முன் னிப்படியிட் டெழுதினனோ
மின்னிடையே நானுமுன்னை விதனமுறக் கொண்டுவந்தேன்
பொன்னடை வில்லாததினாற் பூழியன்றன் மதுரையிலே
உன்னுடைய காற்சிலம்பை யுருவழிக்க விதியாச்சே

விதியாச்சே யெனக்குமிது மேவினதே யுனக்குமது
அதுபோக விம்மனையி லாயர்குலத் தாயருடன்
விதியீதென் றிருந்திடுநீ வேறுபுல னினையாதே
மதியைவிட்டு மடமாதே மதிமுகங்கோ டாதையென்றார்

என்றுசொல்லக் கண்ணகையு மெழில்வணிகர் பதந்தொழுது
நன்றுநன்று நாயகனே நன்மையுடன் போய்வாரும்
என்றுசொல்லக் கண்ணகையி னிருவிழியி னீர்சொரிந்து
குன்றனைய முலைத்தடத்திற் குதித்துநிலத் தொழுகியதே

ஒழுகுமந்த நீர்துடைத்துஊ ஒண்டொடியின் முகந்தடவி
புழுகுசெறி குழலாளே புந்திநொந்து கலங்காதே
அழகுசெறி மதுரையிற்போய் யணிச்சிலம்பை விற்றுவரும்
அளவுமென்ன விடைச்சியர்க ளாங்கிருந்தெம் மம்மணியே

மணியைநிகர் மாதாவே மச்சினிமார் நாங்களல்லோ
அணியணியாய் நாங்களுண்டே யாச்சியுடன் துணையுமுண்டே
மணிவிழியி னீர்சொரிந்து வருந்தாதீ ரெனத்தழுவி
துணிவுடனுன் நாயகற்கு சொல்லும்விடை யென்றனரே

என்றுசொல்ல விடைபுரிய இவர்களையக் கோவலரும்
நன்றியோடிங் கிருமெனவே நல்லவிடை தான்கொடுத்து
என்றுங்கணபதி துணையென் றெழிற்சிலம்பைத் தானெடுத்துத்
சென்றுபையுந் தோழிலிட்டுத் திருமறுகில் வருகுவரே

மறுகில்வரும் வேளையிலே வலதுபுறம் பல்லிசொல்ல
விறகுசுமை யுடனொருத்தி வெறுங்கழுத்தி யொருத்திவரக்
குறியுமிதைக் குறியாமல் குறித்ததொல்லைக் குறிப்படியே
இறகுமுறிப் பறவையைப்போ லெழில்வணிகர் நடந்தனரே

நடந்திடையர் தெருக்கடந்து நாட்டிலொரு செம்மான்றன்
இடந்தனிலே போயவள்ளை ஏகுவழி முறைமைசில
இடங்களையுங் கேட்கவென்று இயல்வணிகர் வரும்போது
திடமுடைய செம்மானோர் தேசமுற்றன் நேரம்வந்தான்

வந்துகளைத் தாகமுற்றேன் மாதேதண்ணீர் தாருமென்ன
வந்துதண்ணீர் குடித்திடுவீர் மடியிற்பிள்ளை கிடக்குதுநான்
வந்துதர மாட்டேனென்ன வந்தசெம்மான் கோபமுற்று
வந்தடித்து விழுத்திடவே மாதுமவன் முகம்பார்த்து

பாரகுற்றஞ் செய்தேனா பாராம லடிக்கிறிரே
வாரமுற்ற பிள்ளைமடி வந்துவாங்க் வொருவரில்லை
வாரும்பாருங் கரகமிது வந்தெடுத்து நீர்குடியும்
ஏருமென்ன வெனக்கடித்தீர் ஈதிலுமக் காவதுகேள்

ஆவதுகே ளுடலிரண்டாய் ஆகுவாயுன் மேலரசன்
கோவமுற்று வருத்திடுவான் குடிகேடா யுன்பொருளால்
மேவுங்கொலை யுனக்காகும் வேங்கைமரத் தடிகிடப்பாய்
மேவிடுவாய் கழுவிலென்றும் மெல்லிநல்லா லழுதனளே

அழுதுமண்ணி லறைந்திடவே அங்குவந்த கோவலரும்
அழுதகுர லீதெனவே அகமெலிந்து நடுக்கமுற்று
அழுதகுரற் றெருக்கடந்து அப்பால்வே ளாளர்தெரு
அழகிதென வரும்போது அங்கோர்மலை வாழ்குறத்தி

குறத்தியந்த மாமதுரைக் குறுந்தெருவி லொருகுழந்தை
உறத்தழுவிக் கையெடுக்கி யுற்றமரத் தோலுடுத்து
முறைப்படியே பாசிமணி முழுதணிந்து முறம்பிடித்து
திறத்துடனே யம்மதுரைத் தெருவில்வரக் கண்டனனே

கண்டவுடன் கோவலர்போய்க் கட்டுரைச் சோதிடங்கேட்க
கொண்டுபோன சிலபணிகள் குறத்தியம்மை கைக்கொடுத்து
வண்டமருங் குழலாளே வள்ளிதன்னை வளர்த்தவளே
ஒண்டொடியே தப்பாது உள்ளபடி சொல்லுமென்றான்

சொல்லுமென்ற வாறறிந்து சொற்குறத்தி யேதுரைப்பாள்
நெல்லிருந்த குறியாலும் நிமித்தமுற்ற குணத்தாலும்
பல்லிசொன்ன திசையாலும் பகருகிறேன் கேண்மகனே
அல்லலுண்டு காணுமது ஆருயிர்க்குந் தீங்குவரும்

தீங்குவட திசையினின்று சென்றாய்காண் வணிகேசே
தூங்குதொடைக் குழலொருத்தி சொல்மருட்ட மயலானாய்
பாங்கான வுன்நிதிகள் பழையதெல்லா மவட்களித்தாய்
தாங்காதுன் பதிவிட்டிங்கே தாரமொடு கூடிவந்தாய்

குறச்சிந்து

வந்தாய்கானீமகனே மரபுகிளையுடனே.மதியும்விதிக்குறையாலே பதியதனைவிட்டு
உந்தநிதிதோற்றபின்னுன் சுந்தரியுநீயும்.உயர்மதுரைக்கேகவென்று தெருவதனில்வந்து
சிந்தைமகிழ்ந்திடைச்சியம்மை தெருவிலருந்துணையாய்த் தேடவவள்கூடமனை சென்றுகுடியிருந்து
உந்தன்மின்னாள்கழலிணையி லோர்சிலம்பைக்கழற்றி உயர்வணிகேசேதுணிவா யிங்குவிற்கவந்தாய்

வந்தவிந்தச்சிலம்புதன்னால் வரும்வினையுமதிகம்.மணிச்சிலம்புநாகமணித் துணைச்சிலம்பொன்றாமே
வந்தவிந்தப்பரிபுரத்தால் மாறநகரழியும் வணிகேசேயுனதுயிரு மாளுவழியிதுவாம்
வந்தவுந்தன்பெண்ணினுக்கு மருந்துறவுசரியோ.மாதுமனக்கோபமுற்று வழிவருவாள்கிளியே
வந்துமதுராபுரியிற் செந்தணலைக்கிளப்பி.மாறனுடனூர்முழுது மழிப்பாள்கிளிமொழியே

மொழியமிர்தமுற்றகிளி மொய்குழல்மீனாட்சி. முன்னவனாரிடமருவு முன்னுதிருக்காட்சி
ஒளிமருவுஞானவித்தா முமைகயிலைக்காட்சி.உத்தமியோர்பத்தினியெம் வித்தகிகாமாட்சி
பழையபரம்பரையிங்ஙனம் வந்ததொருசூழ்ச்சி. பாருலகின்மதுரையர சாட்சிபடச்சாட்சி
சுழல்விழியாளுனக்கருகே.கூடினதோர்தாழ்ச்சி. குமரனேநீயவளுக்கொரு கணவனல்லசீச்சீ

சீரேறுசகலகலை ஞானமுதல்நிறைந்தாள். திருவுருவாயொருசபதந் தீர்க்கப்புவிபிறந்தாள்
சீரேறுசிலம்புவிற்குஞ் செய்கையினியறிகாண்.திருச்சிலம்பாலுயிர்க்கொலையென் றிருக்குதிந்தக்குறிகாண்
சீரேறுமுலகுபுகழ் சேர்வணிகனாரே.திரும்பிமனைசெல்லுமிது நயந்தருவதில்லை
சீரேறுநெல்லின்குறி திட்டமிதுபட்டதுவே.செல்லவேண்டமல்லல்வருஞ் சென்றிடுவீரென்றாள்

வேறு

என்றவளிக் குறிவழியா யிசைத்திடக் கோவலர்கேட்டு
இன்றுவறுமை யினால்நான் யாபரஞ்செய்ய வந்தேன்
என்றும்பிழைத் திடுவனிவ னென்றுமுறை தவறுரைத்தாய்
கன்றல்மன முனக்கோடி கானிடத்தே வாழ்குறத்தி

குறத்தியென்று கோவலனுங் கூறுமொழி யவள்கேட்டு
உறச்சிரித்திங் கிவர்மனதுக் குற்றபடி சொல்வேனென்று
திறப்பொருளைத் தேடினுமாம் சேருலகில் வாழினுமாம்
கறைக்கண்டர் திருவடியிற் காட்சிபெற்றுச் செல்லுமென்றார்

வெண்பா

சொல்லுஞ் சிவன்பாதந் தெண்டனிடு மென்றுரைக்க
நல்லதென்று கோவலரு நாடியே – நல்மதுரை
ஆதிசிவானா ரடிக்கமலந் தண்டனிடப்
போதுடனே வந்தா னப்போது

வந்தலைசேர் வைகைநதி மருவுசொக்கர் பதியகத்தில்
வந்துமண மலர்தூவி வணங்கியுட னெழுந்துநின்று
சந்தமதி வேணியனே சமனுதைத்த பதத்தோனே
இந்தவேளைக் கருள்புரிவா யேகாதி போற்றிபோற்றி

போற்றுகிறேன் பலமுறையும் பூவையிடப் பரனாதா
போற்றவுல கீரேழும் போற்றுமருட் பரம்பொருளே
ஏற்றுகிறே னெனதுமனத் தெண்ணமின்று நிறைவேற்றி
ஆற்றிடுவா யருளடியேற் காலவாயி லருளானே

அருளெனவே தொழுதிறைஞ்சி யப்பதியை விட்டகன்று
இருளைவென்ற குழல்மடவா ரிருந்தபல தெருக்கடந்து
அருளளிக்கு மவன்சாலி யழகளிக்கும் பழனமுற்ற
தெருவரம்பு கரும்புநிரைத் தெருவில்வந்தார் கற்பனையோ

வெண்பா

கற்பனையி லுற்பவமாய்க் கண்ணகையைத் தான்மணந்து
கற்பனையாற் காற்சிலம்பு கையெடுத்து – வெற்றிபுனை
மாறன் மதுராபுரியில் வணிகர் விலை
கூறி வருவாரே குறி

வேறு-நெடில்

கற்றவர்களுற்றதோர் கடையைக்கடந்து.காராளர்தெருவிலே கோவலன்வந்து
மற்றுநிகரொவ்வாத மரபிநல்லவரே.வண்டுசெறிசெங்கழுநீர் மாலைபுனைவோரே
வெற்றிபுனைவேலரசர் மேதினியிலறமும் மேழியால்விழைவிக்கு மிக்கவேளாளரே
குற்றமறுமொருபொற்சிலம்புகொடுவந்தேன்.கொண்டிடுவிரென்று விலைகூறியும்போனார்

விலையாகவிப்பொழுது விற்றிடுகுவேனே விரகுடையமாசாத்தர் மகனானநானே
சிலையாண்மைவேலரசர் மண்டலகுலாதிபர்.செந்தமிழ்பாவாணர் தங்கள்தெருவீதோ
மலையாளார்துளுவரொடு மறவர்பப்பரவர் மாறுதெருவோவணிக ரேறுதெருவேதோ
நலமானவரவின்மணி யிடுபொற்சிலம்பிதோ நாடுவீரென்றுவிலை கூறியேபோனார்

போனதோர்பொழுதத் தெருத்தலையிருந்த.புகழ்வசியகுலதிலகர் வரவென்றழைத்து
ஈனமில்லாத சிலம்பேதுகாட்டும்.என்றவுடனிவர் சிலம்பீதெனக்காட்ட
ஆனந்தக்கரு ணாகரனென்றொரு அருள்வணிகனொளிகண்டு கண்களைமூடி
மானமுற்றிச்சிலம் பிங்குவிலைதந்திட வணிகரிலைவணிகரே மறுதெருவிலேறும்

மறுதெருவில்வணிகேசன் வந்துவாழ்கின்ற வணிகேசர்தெருவீதி தலைவாசல்தோறும்
குறையாதுநவரத்தினங் கனகமெல்லாங் கூறிநிறையோடுவிலை மாறுபவரிடமும்
இறையோர்மதிக்கும் புகார்நின்றுவந்தே னென்மனைவியாள் காற்சிலம்போசிலம்பு
சிறுவறுமையால்விற்க விலைகூறிவந்தேன் தேசிகர்கள்வாங்குமென் றாங்குரைத்தனரே

ஆங்கவருரைக்கவே தேசிகர்கள்யாவருங் ஆம்வணிகரேவருகு வீரென்றழைத்து
பாங்கினிலிருத்திச் சிலம்பைமுன்பார்த்துப் பரிவுடன்செட்டியர்கள் விலைசொல்லுமென்றிட
நீங்கள்பாரும்நாகமணி நற்சிலம்பிதுஊ நேரானவிலைநீங்கள் பாருமென்றிடவே
நாங்களிதுகொள்ளும் விலைதாங்கமுடியாதே நற்சிலம்பைக்கொண்டு நடவுமென்றனரே

என்றவருரைக்க விவரேகவத்தெருவில் எழிலோடிருந்தொரு செட்டியார்சொல்வார்
இன்றிந்தவீதிவரு மெழிலுள்ளபிள்ளாய் எம்மானையும்மானை யெங்குங்குபோறீர்
சென்றநாளும்மையோர் தெருவிநாம்சற்றே தெரிந்தவரினழகா யிருப்பதும்மழகு
நன்றிங்குவாருநீ ரொன்றுமஞ்சாதீர் நற்சிலம்பிற்குவிலை சற்றுரையுமென்றார்

என்றபோதவரிடஞ் சென்றுகோவலரு மெழிலரவுமணிபுனையு மழகியசிலம்பை
தன்கையெடுத்து முன்னவர்முகம்பார்த்து சாற்றுவீரேற்றவிலை பார்த்துரையுமெனவே
நன்றிங்குதாவென்று வாங்கியேபார்த்து நாவரண்டிருகண்ணி லொளியும்மழுங்கிச்
சென்றிடுகுவீரிச்சிலம்பு நிறைகொள்ளுஞ் சேருவிலையெம்மிடஞ் சேரவிலையென்றார்

என்றவருரைக்கவே கோவலருமப்பா லேகவேவேறுசில தேசிகருங்கண்டு
நன்றென்றுவாங்கியே மெய்கூசியையா நங்களாலிங்குவிலை தந்துமுடியாதே
இன்றுநீர்போமென்ன வத்தெருவினூடே யெழிலுற்றவணிகேசர் பெரியோர்களிடமுந்
துன்றியேபப்பரவர் தெருவுநிரைநிரையே சூழவேகோவலன் விலைகூறினானே

கூறுந்தெருவெல்லாம் கூறித்திரிந்து கோவலன்றன்கைச் சிலும்புவிலையீது
கூறும்படிக்கந்த வீதியூர்தன்னிலே கொள்பவர்களொருவ ரில்லாதபடிகண்டு
வேறென்செய்வேனென்று தானின்றலைந்து மேலைத்தெருவீதி தன்னைக்கடந்து
தேறும்படியேநடந்து கோமாறனைச் சேவிக்கும்பெண்கள் தெருவில்வந்தனனே

வந்துவண்டுழல்மாலை மருவுகுழலாலும் மாமயிலைவென்றதோர் சாயலன்நடையும்
விந்தைபெறவந்தவிரு கொங்கையதனாலும் வில்லனையநுதலாலு முல்லைநகையாலும்
கந்திநிகர்கந்தரம தாலுமொழியாலுங் காசினியிலிளைஞர்களைக் கவர்கின்றபெண்கள்
இந்துகதிரென்ன நிகரிந்தச்சிலம்பை ஏற்றணியுமென்றுவிலை கூறியேபோனான்

கூறுசெய்வாளம்பு வேலொத்தவிழியீர் கொண்டலைநிகர்த்தகுழல் மண்டழகிநல்லீர்
நாறுமலர்மாலையொடு மண்டலங்கோட்டி நல்லவிதராகமுறை சொல்லிமருட்டி
வீறானமதனங்க மங்கங்கமோடுகை வித்தாரமானநற் பவுரியைக்கொட்டி
ஈறிலாசாரிபல தினிதாடும்பெண்காள் இந்தச்சிலம்புங்க ளாடலுக்காமே

ஆமீதுஊநாகமணி யணியார்சிலம்பிது அழகினாலுங்களுக் களவாயிருக்கும்
ஆமந்தநடனங்கள் விந்தைநடனங்கள் ஆடலுக்கிதுநல்ல சோடானபரிபுரம்
நாமிங்குகொடுவந் தெனென்றென்றுகூற நங்கையர்கள்பலர்நின் றிங்குவாவாவென
நாமிங்குபோறேன் பணங்கொண்டுவாரும் நல்லஅவிலைதெருஊ சொல்லிடவாரும்

வாருமென்றீர்வாருஞ் செட்டியாய்பிள்ளாய் மன்னர்பராக்ரம பாண்டியனாணைத்
தாருஞ்சிலம்பை விலையுமிந்தாரும் தங்கவேண்டாம்வாசல் சற்றிங்குவாரும்
பேருமும்மூருந் நீராரென்றுசொல்லும் பெண்களினல்லா ரழைக்கிறாரென்னச்
சேரவோவென்னை நல்லாருங்கழைப்பது சீச்சீயென்னாச்சியார் சிந்தைவேண்டாமே

சிந்தைவேண்டாமென்ற செட்டியாபிள்ளாய் தென்னன்பெருமாளைச் சேவிக்கும்பெண்காள்
சிந்தனைசொல்லிநீ ருங்கேகலாமோ நீதிப்பெருந்தெரு வீதிகழூடே
சந்தனக்கொங்கை யுரமும்புதையத் தழுவிச்சயன நயனம்மனையில்
வந்திருந்துபோ விரும்மானையல்லது வாறோமென்றுபோவிர் தாறோம்பொன்மட்டாய்

மட்டாகமாதர்நின் றிப்படியுரைக்க வணிகர்சொல்வார்வழுதி மதுரைப்பதியிற்
செட்டுப்பலித்துக் கிடக்குதென்றிங்கே சேரத்தலைவிலை யாமென்றுநீங்கள்
கட்டிப்பிடித்துநீர் முட்டுப்படுத்திக் கழுவைத்துமழுவுய்த்து அழவைப்பிரேனும்
எட்டிப்பாரேன்வாசல் கிட்டிக்காரேனான் இறக்கிலும்வாரேன் பிறக்கிலும்பாரேன்

பாவாங்கியிட்ட துணியைப்பொறுக்கிப் பருக்கச்சறட்டால் முறுக்கியிசைத்து
பூவாங்கியாடை யென்றோதியுடுத்துப் புறப்பட்டமட்டுக்குப் பொற்கம்பிகட்டி
நாவாங்கிவீங்கிச் சுரித்தகழுத்தும் நைய்யுங்குரங்கின் முகம்போற்றியங்கித்
தேவாங்குபோலே யிருந்துமுளிக்கின்ற சேயிழையீர்சிலம் பாகாதுமக்கே

பாகானமஞ்சலைத் தட்டிக்குளித்துப் பண்பிற்பழுப்புற்ற மேனிநெளித்துக்
பாகானநல்ல பணிச்சேலைகட்டிப் பாக்கிலையிட்டிடைப் பல்லையுங்காட்டி
பாகானவீதி யுலாவிக்குலவியே பாராதொருவனைப் பார்த்துமருட்டி
பாகேவிமூதேவி யாகத்திரிகின்ற பாதகியீர்சிலம் பாகாதுமக்கே

ஏயவேகொட்டிக் கிளங்கெருக்கம்பூ இக்குப்பேபேயித்திப் பாலுடன்கூட்டி
ஏயமுலைப்பாலு மூட்டுமவிடதம் இட்டுமயக்கி யெவரையுங்கிட்டி
ஏயவட்டிக்குமுன் னிட்டவர்போலே ஏட்டிமறித்துப் பொருளைப்பறித்து
ஏயவைத்துக்கொண்டு வாராதேபோவென் ஏலமிடும்வாலை யோர்க்கிதாகாதே

வாலைவயதினிற் றேடியேயுண்டு வருந்தியேசேர்த்து வளத்தினைவாங்கிக்
கோலமழிந்து குரங்காகிப்பின்னே கூத்தியாரென்றொரு வாழ்தொலிவைத்து
பாலிற்கறுப்பது போற்புள்ளிபற்றிப் பட்டிக்கடாப்போற் கழுத்துமிழுத்துப்
மாலைவடம்போ லிடந்துநடக்கும் வலியீர்சிலம்பிது ஆகாதுமக்கே

வலியிற்பிடித்துத் தெருவிலேநின்றும் மையல்தெருட்டி விழியால்மருட்டி
ஒலியலுடையி லிடையிற்பிடித்தும் உம்மானைவாவென்று உள்ளோரைத்தேடி
சொலியற்சிராயப்பனை யேறினோர்போலத் தோழிலுமார்பிலு வன்னங்களெழுதி
நலியவெலியை யரவுபோற்பார்த்திட நண்ணுவீர்ச்சிலம் பாகாதுமக்கே

நண்ணிக்குழல் தன்னைசீவிமுடித்து நல்லபுடவை யெடுத்தேயுடுத்துப்
பண்ணியசெம்பிற் பழுப்பணிபூண்டு பார்வைக்குமையிட்டு நெற்றிப்பொட்டிட்டு
வண்ணநலவாசப் பொடியுமணிந்து மரப்பாவைபோலே திருப்பாவைகொண்டு
பண்ணிட்டிளைஞரைப் பார்த்துமருட்டி படருவீரிச்சிலம் பாகாதுமக்கே

படருந்தெருத்தலை தன்னிலேவந்து பலவிதமான கொலுவொடுநின்று
நடந்தாடிவாற வனைக்கண்டுசற்றே நாடியேவெற்றிலை தாருநீரென்றும்
தொடர்ந்துபிடித்து இழுத்துத்தொழுது தூயநகரெங்கள் சொக்கனாராணை
இடந்தருவோம்நீர் கிடந்துபோமென்றிடு மேயச்சிறுக்கிகட் கேராச்சிலம்பே

சிறுமையினல்ல கருங்குன்றிவித்துஞ் செங்குன்றிவேருட னானெய்ப்பால்கூட்டி
நறுநெய்க்கிணங்க நல்லாந்தைநெய்கூட்டி நல்வசமாக்கிப் பணத்தைப்பறித்து
வறுமைபூண்டாலிங்கு வாராதேபோவென்று வாசலினின்றுவே றோரைத்தேர்கின்ற
எறியம்பெனக்கண் ணெறிகள்ளியர்களே ஈனமறுசிலம் பாகாதுமக்கே

ஈனமறவேயெருத்தின் கோரோசனை ஏற்பதரைத்துண்டை கூட்டியுலர்த்தி
ஆனதுடரி யறணைவால்பூரா னானோந்திமுட்டை யருநாவமுக்கு
சீனிமருந்திலை பாக்குடனிட்டுச் சேருமிளைஞர் மனத்தையுருட்டிப்
பானெய்தயிரெனத் தேனெனப்பேசிய பச்சிதளீருமக் காகாச்சிலம்பே

பச்சோந்திப்பித்துங் கழுகினிணமும் பசுங்குன்றிவேருட னானைப்பால்கூட்டி
செச்சைக்குருகி னிணத்தையும்வாங்கிச் செவ்விதினல்ல விரதமுங்கூட்டி
உச்சிப்பொழுதிற் பதத்திற்கொதிப்பித்து உள்ளிச்சருகித்திப் பேய்ப்பாலுமூட்டி
அச்சுற்றிடவிம் மருந்திட்டணைகின்ற அஞ்சாக்கருத்தினீர்க் காகாச்சிலம்பே

அஞ்சுதேயெங்கள்பிராணன்மயங்கி யணைந்திடுமென்று மழகினைப்பார்க்க
மிஞ்சுமுலையுங் குலுங்கமணியுறு மேகலையும்விழ வேயுளஞ்சோர
அஞ்சுகணைபோற் கணையயுங்கொண்டே யம்மதுரைத்தெரு வூடேநடந்தே
புஞ்சமுறுமெங்க னெஞ்சையுருக்கிநீர் போகிறீர்புள்ளிமான் போலேநியாயமோ

புள்ளிமானோடே புலியுறவுண்டோ பூனையுடனேயெலி யுறவுண்டோ
கொள்ளியுடனே குடியுறவுண்டோ கோமாறிகளுட னல்லுறவுண்டோ
முள்ளினத்தோடே பதமுறவுண்டோ மோகஞ்செய்துனைப் பழியைவிழைக்கும்
கள்ளிகளோடே யெமக்குறவுண்டோ கண்டுநீர்பித்துப் பிதற்றாதேபோம்போம்

கண்டிருந்தேநஞ்சை யுண்பாருமுண்டோ காஞ்சுரங்காயைக் கடிப்பாருமுண்டோ
கொண்டரவை மடிகூடவைப்பாரோ கொள்ளழல்கொள்ளியைக் கூரைவைப்பாரோ
தொண்டுகண்டுபொய்ப் படுவாருமுண்டோ சுட்டபிணத்தைச் சுமப்பாருமுண்டோ
பெண்டிர்பிள்ளையற்று மூண்வழிக்காசற்ற பிச்சைவணிகனேன் தேடிநீர்பெண்காள்

தேடாமலென்று மிருப்போமோநாங்கள் செட்டியொருத்தன் தெருவூடேவந்து
கூடாமாலெங் கடனைக்குறைபேசிக் கொங்கைதழுவாம லங்கங்குபோறான்
ஏடார்குழலீரிவனை நாமெல்லோரும் இப்போபிடித்துச் சிலம்பைப்பறித்து
போடாநீயென்று துரத்திடுவோமென்று பூவையர்பின்வரக் கோவலர்சொல்வார்

கோவம்பினல்லோரே நீரிங்கேகேழுங் கூசாதென்பின்னாகத் தேடுவீரென்னில்
தாவுமரைநாளி கைக்குள்ளேவாறேன் தகப்பனாராணைத் தலையாணையெங்க
ஆவதனாணைவயிற் றாணையும்மாணை யம்மாண்டராணை வருகிறேனென்னவும்
ஓவியமென்னப் பெண்ணெல்லோருங் கூடியோடியேகோவலரைப் பிடித்தாரே

வேறு

தாராருஞ் சீரகமார்த் தனவணிகன் கோவலனைத்
தாராருங் குழலழகத் தாசியர்க ளெல்லோருந்
தாராய் சிலம்பிதென்று தாகமுற்றங் கோடிவந்து
தாரமெனக் கைப்பிடித்துத் தங்குமனை கொண்டுசென்றார்

சென்றிருத்திப் பெண்களெல்லாந் தேசிகரே கேளுமிப்போ
சென்றுகளை தீர்ந்திருந்து திரையலுடன் காயருந்தி
சென்றுணவு முண்டுபடுத் திருந்திரவு சென்றபின்பு
சென்றிடுவீர் நாளையென்னத் தேசிகரங் கிருந்தனரே

இருந்துமிலை காயருந்தி யேர்வணிகர் கோவலராங்
இருந்தவந்தச் சமயமதி லேந்திழையாள் கோவலர்தன்
இருந்தருகு மடிதடவி யிவரின்மன முருகச்செய்து
இருந்தவந்தச் சிலம்புதன்னை ஏரிழைசேர் காரிகையாள்

காரிகையாள் கையெடுக்கக் கவுரிதிருக் காற்சிலம்பு
காரிகையைப் பேசிமிக்க கலகலென்று சத்தமிட்டு
ஆரெடிநீ தேவடியா ளாவதொன்றைக் கேளெடிநீ
ஆருமைய லோடணையு மன்புமிகு துன்பமுள்ளாய்

உள்ளகற்பு மழிந்திட்டநீ யுமைபாதம் பூண்டவென்னை
உள்ளமுற்றுத் தொடப்பெறுமோ வுங்கள்பொருள் நாசமெடி
கொள்கையுனக் காகுமெடி கூடுசுற்றம் போகுமெடி
கொள்ளையிட வென்னையிப்போ கொண்டாயே தீண்டாதே

தீண்டாதே யென்றுமணிச் சிலம்புரைத்த மொழிகேட்டு
தீண்டாருங் கற்புடைய தேவடியாள் மனங்கலங்கி
தீண்டாத கற்புடைய தேவிதிரு நாயகனே
தீண்டாவிச்சிலம் பைக்கொண்டு செல்லுமென்று சொன்னாளே

சொன்னவவ ளுடனேமற்றத் தோகையரும் போவிரென்று
சொன்னவுட னிவரகன்று தோகையரே போறெனென்று
சொர்ணசிலம் புடனடைந்து சோதிடனந் தணனொருவன்
சொனன கலை பயிற்றிநின்ற தூயசாலை தனிலடைந்தார்

சாலையிலந் தணர்கேசரி தானிருக்கக் கோவலரும்
சாலமனத் தாக்கமுடன் தக்ஷிணை வைத்தந்தணரே
சாலமனத் துள்ளபடி சாத்திரமொன் றினைத்தபடி
சாலமிக வோதுமென்று தானருகு நின்றனரே

நின்றிடவேதி யருரைப்பார் நீர்கேட்ட காரியத்தின்
நின்றகுறி யலகுமுறை நிற்கவிப்போ சொல்லுகிறேன்
நின்றகற்புன் றேவியுடன் நீயுங்கூடித் தேசம்விட்டு
நின்றவிந்த மதுரையிலோர் நினைவுடனே வந்திடையர்

இடையர்மனை தனிலுனது இளங்கொடியை வைத்துவரும்
இடையிலொரு சாத்திரமு மேற்குமாறு கேட்டுவந்து
இடையிலொளிச் சிலம்புவிற்கு மெண்ணமதா யிங்குவந்தாய்
இடையிலேநீ பிறந்தநாளு மேகுமக நாசயோகம்

நாசயோக முடனுதித்தாய் நல்வினை யெல்லாமழிந்து
நாசமுட னெட்டிற்சனி நாடினதிப் போததனால்
நசாமதா யுன்பொருட்கள் நட்டமுனக் கானதுவும்
நாசவிதி யானதுகாண் நன்னூலின் முறையுமிதே

ஈதுமுறையிச் சிலம்பா லேகும்வினைத் தட்டானும்
ஈதுசிலம் பெனதெனவே யேகியுனை ராசனிடம்
ஈதெடுத்த கள்வனிவ னென்றுஉன்னைக் காட்டிடவே
ஈயும்வினை யரசுனக்கு என்றுரைத்தா ரந்தணரே

அந்தணர்சொல் லிவர்கேட்டு ஆகுலமுற் றறிவழிந்து
அந்தநகர்க் கேகாமல் அரியமனைக் கேகவென்று
அந்தநல்ல கோவலரு மரியவழி வருவாரே
அந்தவழிக் கதையிருக்க ஆகுமாறென் றோதுகிறேன்

ஓதுபுகட் பாண்டியனார்க் குற்றதேவிக் காற்சிலம்பு
ஓதரிய பழுதுறலா லுற்றதொரு தட்டானை
ஓதியழைத் திடுமாறு னோதுவன் தட்டானிடத்தில்
ஓதுபணித் தட்டானே உற்றசிலம் பிற்பழுதே

பழுதுமுழுதுந் திருத்திப் பகற்பொழுது மூன்றினுள்ளே
பழுதில்லாது தருவையென்று பாண்டியனார் கொடுத்துரைக்க
பழுதில்லாது வணங்கியவன் பாதச்சிலம் பினைவாங்கிப்
பழுதிலாத்தன் மனையிடத்திற் பரிவுடனே கொண்டுவந்தான்

வந்துசிலம் பினையுருக்கி வாகுபெறச் செய்துலர
வந்துசுவ ரிடத்தில்வைத்து மட்டித்தட்டான் வேறிடத்தில்
வந்துபணி செய்திருக்க மனையிலிவன் மகனொருவன்
வந்தபெயர் வஞ்சித்தட்டான் வந்தசிறு வயதிலவன்

சிறுவயதில் விளையாடித் தெருவிலொரு ஆலமரச்
சிறுநிழலி லிருப்பளவிற் செழித்தவந்தப் பழுமரத்திற்
சிறியகுஞ்சைக் கூட்டிலிட்டு சேர்ந்திருந்த கருடனிரை
சிறிதுதேடப் பறந்திடவே சிறுபிள்ளைக ளோடிருந்த

இருந்ததட்டான் தன்மகனும் ஏறியந்தமரத்திற் குஞ்சை
இருந்தபிள்ளை களேயேந்துங்க ளென்றெடுத்துக் கீழ்ப்போட
இருந்த குழந்தைகளேந்த ஏந்திடுங்கை தவறியது
இருநிலத்தில் விழுந்துயிர்விட் டிறந்ததந்த மரத்தடியில்

மரத்திருந்த வஞ்சித்தட்டான் மனந்திடுக்கிட் டிறங்கிவந்து
மரத்தடியிற் குஞ்சைவைத்து மண்மூடிப் போயினனே
மரத்தருகி லிரைதேடி வந்துபின்பு தாய்க்கருடன்
மரத்திருந்து பார்ப்பளவில் வைத்தகுஞ்சைக் கண்டிலதே

வைத்தகுஞ்சைக் காணாமல் மனமயங்கித் தியங்கித்துன்பம்
வைத்தழுது தெளிந்துவிழி வைத்துமனம் பார்ப்பளவில்
வைத்தகுஞ்சு மரவடியில் மண்மூடிக் கிடப்பகண்டு
வைத்ததென்ன வெனப்பார்த்து வஞ்சித்தட்டா னெனவறிந்தே

அறிந்தவந்தக் கருடனது அக்கினிபோல் மிகச்சீறி
அறிந்தவவன் சுற்றமெல்லா மடித்தழித்திட் டெரிப்பெனென்று
அறிந்தவன்றன் மனைபறந்து அவன்சுவர்வைத் திடுசிலம்பை
அறிந்தெடுத்துக் கருடனது அப்புறமாய்ப் பறந்ததுவே

பறந்துசமுத் திரமேழும் பாரமலைகளும் கடந்து
பறந்தொருபொன் மலையறையில் பக்குவமாய் வைத்திருக்க
பறம்பெனவே திரண்டபுய பாரவன்னித் தட்டானும்
பறைந்தமனத் துடனோடிப் பார்த்தானே சுவர்ச்சிலம்பை

பார்த்தளவிற் சிலம்பதனைப் பருஞ்சுவரிற் காணாமல்
பாரில்விழுந் தழுதவனும் பத்தினியே பாண்டியன்றன்
பாரமான சிலம்பைப்பண்ணிப் பருஞ்சுவரில் வைத்தேனெடி
பார்க்கவிப்போ காணவில்லை பத்தினியே யென்றழுதான்

பத்தினியென் நாயகியே பார்த்தெடுத்து வைத்தீரோ
பத்திமையாச் சொல்லெனவே பாங்கிலவ ளோடிவந்து
பத்தாவே யுமக்குநட்டம் பலித்ததுகாண் நானறியேன்
பத்தோநூறோ நூற்றுப் பத்தோவிச் சிலம்புவிலை

விலைமதிக்கக் கூடாதே வேந்தனுடை சிலம்பதுவும்
விலைகொடுக்க வழியுமில்லை வீணிலுயிர் போகுந்தொல்லை
விலைகொடுத்துப் பெறலாமோ வேந்தனது சிலம்புக்கிணை
விலையிலை யென்றவனுடனே விழுந்தழுதா ளவளுமப்போ

அப்போதங் கழுதெழுந்த மரியமகன் றனைக்கேட்க
அப்பனாணை நானறியேன் அறியேனச்சிலம்பை யென்றான்
அப்போதவ் விடங்களெல்லா மாராய்ந்துங் காணாமல்
அப்போதங் குயிர்விடவே ஆனகத்தி தாடியென்றும்

என்றுநஞ்சை யுண்டுயிரை யினிவிடட்டோ கடல்விழட்டோ
என்றுரைக்க மகனுரைப்பா னென்னுடைய தந்தையேகேள்
என்றுமில்லா வொருவணிக னித்தெருவி லப்புறத்தே
என்றொளிசே ரொருசிலம்பை ஏந்திவிலை கூறிவாறான்

கூறிவருஞ் சிலம்புதனைக் குறிக்கிலொளி நாகமணி
கூறவிலை முடியாது கொண்டுகொடு மென்றுமகன்
கூறியபோ தெழுந்துதட்டான் கோவலனுஞ் சிலம்புவிலை
கூறிவரும் வழியதனிற் கொடும்புலிபோற் சென்றுகண்டான்

கண்டளவிற் தட்டானுங் கண்பார்த்துக் கோவலரை
கண்டறிவேன் பண்டுமும்மைக் கைதவன்றன் மதுரைவந்தீர்
கண்டதொரு காரியமென் காணுமும தூரேது
கண்டறியச் சொல்லுமென்னக் கரைந்திடுவார் கோவலரும்

கரையிலாத மருவலரைக் காய்ந்துவிரு தாய்ந்தவன்காண்
கரையிலாத தருமகுணன் கடைமையாறி லொன்றுடையோன்
கரையிலாத சோழநகர் காவிரிப்பூம் பட்டணத்தில்
கரையிலாத நிதிவணிகர் கண்ணிகர்மா சாத்தர்மகன்

மகனான கோவலனான் மாமாறன் மதுரையிலே
மகநாளிற் சனிதுரந்த வாறதனில் நிதிகளெல்லாம்
மகமாய்கைக் கணிகையர்க்கு வாரியிட்டு வறுமைகண்டு
மகாபெரிய சிலம்பிதுவும் மனைவிகாலிற் சிலம்பிலொன்றே

சிலம்பிதுவு நாகமணிச் சிலம்பிதுபோற் சிலம்புமில்லை
சிலம்பைவிற்றுப் பணந்தேடித் தேசம்போக வந்தெனென்று
சிலவசன முரைக்கவந்தத் திருடுமனத் தட்டானும்
சிலவசனங் கோவலற்குச் செப்புவனாங் கோவலரே

கோவலரே யிச்சிலம்பு கொள்வதற்கிங் கொருவரில்லை
கோவமுற்ற நாகமணி கொடுத்திழைத்திங் கிருப்பதனால்
கோமதுரை மாறனல்லாற் கொள்ளமுடி யாதிதைநான்
கோவலரே யவரிடத்திற் கூறிவிலை தருகுவனே

தருவதினா லெனக்குவெகு தாயம்வரிசை களடையும்
தருகுவேன்நற் குடைதண்டிகை தாரசையும் வணிகேசே
தருமமுள்ள குணத்தவர்நீர் தனலாபங் கனலாபம்
தருகுவேன் பாண்டியனிடத்தே தடையிலைநீர் வாருமென்றான்

என்றவன்சொல் லிடவணிக ரிழைத்தவிதிப் பயன்வழியே
நன்றென்று அவன்பிறகே நடந்துவரத் தட்டானும்
சென்றொழிர்சேர் பாண்டியன்றன் திருவாச லிவரைவிட்டு
நின்றிடுவீ ரென்றுசொல்லி நீர்சிலம்பைத் தாருமென்றான்

தாருமென்ன விவர்கொடுக்கத் தட்டானுங் கைவாங்கித்
தாரணியு முடிவேந்தர் தற்சூழ வீற்றிருந்து
தாரணியெல் லாம்புரக்குஞ் சக்கரவிக் கிரமன்நிம்பத்
தாரணியும் பாண்டியன்றன் தாழிணையைத் தொழுதனனே

தொழுதூழி வாழியென்று தொழுதுவட கிரிதனிலே
தொழுராச ரடிபணியத் துங்கபடந்தனைப் பொறித்தோய்
வழுவாத மதுரைநகர் மன்னவனே வேலைதன்னில்
வழுவாத வேலுருவி மழையைவென்றோய் போற்றியென்றான்

போற்றியென்றங் கெதிரில்நின்ற பொன்செய்கொல்லன் றனைப்பார்த்து
போற்றியென்றிங் கோடிவந்தாய் புதுமையென்ன சொல்லெனவே
போற்றிமெய்யைத் தூற்றிமனம் போனபொன்செய் கொல்லன்சொல்வான்
போற்றியையா சாற்றுகிறேன் பொய்புகலேன் மெய்யிதுவே

புகலுகிறேன் னீரளித்த பொற்சிலம்பைத் திருத்திவைத்து
புகலுமனை தனிற்றுயிலப் போம்பொழுதோர் செட்டிவந்து
புகலிடஞ் சற்றுதவிடுவீர் புண்ணியம்வந் தணுகுமென்றான்
புகலிடநான் கொடுத்திருக்கப் பொற்சிலம்பைக் கண்டானோ

கண்ணுறங்கிப் போனேன்நான் காற்சிலம்பை யவனெடுத்து
கணணுறக்கங் காத்திருந்து கதவைவிட்டப் புறம்போனான்
கண்ணுறக்கம் நான்விடுத்துக் காற்சிலம்பைப் பார்ப்பளவில்
கண்ணுறக்காற் சிலம்புமில்லை கண்டசெட்டி தானுமில்லை

இல்லையென்று தேடிடனான் என்மகன்கண் டென்னவென்றான்
இல்லையெடா சிலம்பெனநான் ஏங்காயின் றிரவெமது
இல்லில்வந்த செட்டிகொண்டு ஏகுவன்நீ போவெனவே
இல்லிலிருந் துருமாறி யிவனிடம்போ யடைந்தேனே

அடைந்துநல்ல வுறவாடி அரிதுவழி காணுமிது
அடைந்திடநல் வழிவிடுவேன் ஆகுமாறென் றிங்கழைத்து
அடைந்துகடை வாசலிலே யரியவிலை தாறேனென்று
அடைவாகச் சிலம்பிதைநான் அவனுடனே கொண்டுவந்தேன்

கொண்டசிலம் பிதுவுமது கோதையர்தன் சிலம்பிதையா
கொண்டிடுநீ ரென்றுநின்று கும்பிட்டுக்கை கொடுத்தளவில்
கொண்டமுடி யரசன்கையிற் கொண்டிருந்து கோபமுற்று
கொண்டுபோனா னோகள்ளனென கோதையர்காற் சிலம்பிதனை

இதனையெடுத் திட்டகள்வன் என்னையுந் தட்டிடுவனினி
இதமுற நானுலகாள இங்குகள்ளத் தொழிலாளன்
இதமுடனே வரலாச்சோ என்னரசு நன்றுநன்று
இதமிதநல் லவனையிப்போ திங்கழைத்து வாருமென்றான்

வாருமென்ன மந்திரியு மாறுரைப்பான் மாறரசே
வாருமிகு கள்ளனென்றால் வழியிற்காண வாரான்காண்
வாரமுடன் காரியத்தை மதியினறிந் திடுவதற்கு
வாருமக ராசாவே மனமகிழ்வா யுரையுமென்றான்

உரையுமென்று மந்திரிசொல் லுணர்ந்தரசன் சேவகரை
உரையுமிங்கே யவன்வரவும் ஓடுமெனச் சேவகர்போய்
உரையரசன் வரும்படியாயுன்னையோடி வாவெனவே
உரையறநா வரண்டுமனம் உயங்கிவந்தார் கோவலரே

வந்துநிற்க மந்திரியின் வாய்மையினா லரசுரைப்பான்
வந்ததென் னுன்னூரேது மரபேதிங் குரையுமென்ன
வந்தபுக ழரசேகேள் மாநகர்கா விரிப்பட்டினம்
வந்தபுகார் நகர்புகழுங் மாசாத்தர் வணிகேசன்

வணிகேசர் தான்பயந்த மகனான கோவலனான்
வணிகேசர்க் கில்லாத வறுமையெனக் கானதினால்
மணிபோலென் மனைவிகாலில் மணிச்சிலம்பை மதுரையினல்
வணிகேசர்க் கீய்ந்துபணம் வாங்வந்தே னென்றனரே

என்றிடத் தட்டான்வணங்கி ராசராச சேகரனே
என்றுங்கள வெடுப்பவர்கள் ஏதுமுண்மை சொல்வர்களோ
நன்றரசு பயமீதோ நற்சிலம்போ டுடன்பிடித்தேன்
நன்றிவன்சொல் லின்றறியில் நாயகியினொரு சிலம்பாம்

ஓருசிலம்பா மிணைச்சிலம்பாம் ஒருகாலி லிருப்பதுவாம்
ஒருவருக்கு வறுமைவந்தா லொருகாலிற் சிலம்புடனே
ஒருவர்மனை யிருந்ததுண்டோ யுற்றறியு முமதுளத்தே
ஒருவரிரு காலுக்கிட்ட வொருசிலம்பை வாங்குவரோ

வாங்குபவர்க் கொருசிலம்பேன் மறுமுறைவிற் றிடுவதல்லால்
வாங்குசிலம் பிணையாக மதிக்குமொரு சிலம்புசெய்யில்
வாங்குசிலம் பொன்றுக்கொன்று மாறுருவங் காட்டிடுமே
வாங்கிவேலை செயுமெனக்கு மாறுவேறு தெரியாதோ

தெரியதோ நேற்றுச்செய்த சிலம்புவெகு நாளாச்சோ
தெரியாதோ வெள்ளிபொன்னைச் செய்தொழில்நா னறியேனோ
தெரியாதோ நவரத்தினம் செய்யொழிநா னறியேனோ
தெரியாத கள்ளனிவன் சீக்கரங்கொன் றிடுவிரென்றான்

வேறு

சொல்லவேணுமென்று கும்பிட்டுநின்றபொன் கொல்னைக்கூடலிற கோமாறன்பார்த்து
நல்லதுநீசொன்ன காரியமிப்போ நடுநீதியுபின்னறிந்து செய்குவெனான்
சொல்லென்னமின்னென்ன மலர்சொருகுகுழலியென் தேவியின்காலிற் சிலம்பிதுதானோ
அல்லவோவென்றுநீ யவளிடஞ்சென்று ஆராய்ந்துவிரைவிலிங் கடைகுவாயென்றான்

அடைகுவாயெனவழுதி யடைவுடன்சொல்ல ஆமென்றுதட்டானு மரசனைத்தொழுது
விடைகொண்டுபோ யிந்தவணிகேசனுக்கு மெய்ப்பகைவிளைக்கமன முற்றுபாயமதாய்
பெடைகொண்டநடைமின்னி னிடைமாதர்சூழப் பீடத்திருக்கும் பெருந்தேவிதன்னை
தடையின்றுபோனதோர் தட்டானுமப்போ தாளிணைதனிற்பணிந்தே தொழுதுநின்றான்

வேறு

தொழுதுநின்ற தட்டானைத் தூய்மொழியாள் பார்த்தளவில்
தொழுதுநின்று மாமாதே சொல்லரிய பூமாதே
தொழவரிய நாமாதே தூய்மையுறு காமாதே
தொழுமரச ரரசுகந்த தோகையரே கேட்டிடுவீர்

கேட்டிடுவீர் சொல்லுகிறேன் கேழாக நீருமது
தாட்டுணையி லொருசிலம்பைத் தந்ததல்லோ வென்னிடத்தில்
மீட்டுவேலை செயும்படியாய் விதமதுபோற் செய்தேநான்
பாட்டில்வைக்க வொருதிருடப் பாதகன்கொண் டோடிடநான்

நானவனைத் துரந்துபற்றி நற்சிலம்போ டரசனிடம்
நானவனை விடுத்துரைக்க நாயகனிச் சிலம்பையிங்கே
நானறியேன் தேவியிடம் நன்றுகாட்டி வந்தபின்பு
நானவனுக் கறுக்கைசெய்வேன் நாடியோடி வரவிடுத்தார்

விடுத்தபடி வந்தேநீர் மேவுசிலம் பிதுமுமது
விடுக்கவேண்டா முமதெனவே விண்ணப்ப முரையுமென்றான்
மடைப்பயல்சொல் வார்த்தையந்த மாதுகேட்டு மூச்செறிந்து
மடைப்பயலே பெரும்பாவி மாறுதெடா சிலம்பிதெடா

சிலம்பிதனை நம்மிதென்றால் தேடாதோ கொடுநரகு
சிலம்பிதற்கென் சிலம்பிணையாச் சேராது நான்நாவற்
சிலம்பெனதென் றுரைப்பேனேற் தெய்வப்பழி யாகுமெடா
சிலம்பிதனைக் கைத்தொழிலாற் செய்ததென்று சொல்லரிதே

சொல்லரிய விச்சிலம்பை தோணுமிடம் பார்ப்பளவில்
சொல்லரிய சிவனருளாற் சூதவடுப் பிறந்தெமது
சொல்லரிய பொற்குடத்திற் தோன்றுதோகை காற்சிலம்பை
சொல்லிவினை யாகுமவள் சோடாகப் பூண்டனளோ

பூண்டதவ ளென்றிதனைப் புத்தியுடன் சொல்வதல்லால்
பூண்டிடவிங் கொருவரில்லைப் போடபோ மடைக்கொல்லனே
பூணட்வென்றன் சிலம்புவிற்றுப் பொழுதுவிட்டுக் களவெடுத்துப்
பூண்டுவந்தாய் யோர்வேடம் போடநீ யென்றனளே

என்றுசொல்லத் தட்டானு மேங்கிமனந் தூங்கிமுகம்
என்றுமில்லா யோசனையோ டிங்குநின்ற விடத்தைவிட்டு
இன்றரசர்க் குபாயமொன்றை யெடுத்துரைப்பே னெனமகிழ்ந்து
சென்றரச னடிபணிந்து தீயவனீ தோதுவனே

ஓதுவேன்கேள் மீனவனே உலகரசர் பெருமாளே
ஓதுமுன்றன் தேவியவர் உற்றிதனைக் காலில்வைத்து
ஓதினவர் தன்சிலம்பாம் உள்ளபடிக் குண்மைசொன்னே
ஓதுபொய்யன் கள்ளனிவன் உண்மையிது கொல்லுமென்றான்

கொல்லுமென்ற தட்டான்சொற் கோவலருங் கேட்டவுடன்
கொல்லும்விதி யெமக்காச்சோ கோலமலர் மேலவனும்
கொல்லலின்றென் றெழுதினனோ கூடலுறை பரம்பொருளே
கொல்லலின்று குடியாச்சே கொல்லுஞமன் பொன்கொல்லனோ

பொன்கொல்லனோ வென்றிடியிற் புரண்டசர்ப்பம் போற்றியங்கி
பொன்னைநிக ரென்மனையைப் போற்றுதந்தை தாய்சுற்றத்தை
பொன்னிருந்த வெனவிருந்த பூங்கொடியின் சிலம்புகொண்டு
பொன்னொடுநான் வாறெனென்றேன் போறேனே யென்றழுது

அழுததடா தட்டானே அரவின்மணிச் சிலம்புதன்னை
பொழுதுடனே விற்றுத்தரப் பொருந்திவந்த திதற்கோடா
வழுதியர்கோன் திருமுகத்தில் வாய்மைநல்லாய்ப் பேசுகிறாய்
பழுதுடையா னெனப்பதிந்தப் பாருலக மறியாதோ

அறியாதோ செட்டிகள்ளன் அல்லதுபொற் கொல்லன்கள்ளன்
அறிவாலும் பெரியவர்கள் ஆராய்ந்து மறிவார்கள்
அறியாயோ வெனக்குனக்கு மாம்பழியு முண்டோடா
அறியிதனை யரனருளும் ஆகுமென்று புலம்பினனே

வெண்பா

புலம்புகின்ற கோவலரைப் பூழியர்கோன் பார்த்தும்
பலம்பெறவே தட்டானைப் பார்த்து – சிலம்புதன்னைக்
கண்டோ மினியிந்தக் கள்வனுடை காரியம்
வேறுண்டோ வுனக்கென் றாருற்று

உற்றகனகச் சிலம்பு உண்மையிது வென்றாக்காற்
இற்றையுரைக்கு மிவனை விட்டால் - சற்றேனுந்
தட்டாரை விட்டுவையான் தனந்திருடு கள்வனையா
மட்டாகச் சொன்னேன் மதி

வேறு

மதித்தவன்னப் பொற்சிலம்பு வந்ததெங் ளிடமிவனை
சதித்ததினாற் பயனேது தட்டானே யென்றுசொல்லி
விதித்தவிதி யறியாமல் விட்டுவிட வேண்டுமென்று
மதித்துமாறனன் மந்திரியும் மனமுருகிச் சொல்லினரே

சொன்னபோது தட்டானும் சோதிபெறு வேலரசே
இன்னுமொன்று சொல்லுகிறே னிராசநீதி யொருவருக்கு
அன்னீதமு நன்மையுமா யாண்டவனே கண்டதுண்டே
இன்னவனைச் சிலம்புடனே ஏற்படுத்தினே னல்லவோ

அல்லாது புரிப்வரை யரசுவிட்டா லனியாயம்
அல்லாது வேறுமுண்டோ அருங்களவு புரிந்தவரை
அல்லல்செய்ய யரசருக்கோ ரானநீதிதா னில்லையோ
அல்லல்செய்து மிவனையின்றே யரியகழு வேற்றுமென்றான்

ஏற்றுமெனத் தட்டானங் கெடுத்தோதப் பாண்டியனு
ஏற்றமொழி யிதுவெனவே யெண்ணியிந்தக் கள்வனுக்கும்
ஏற்றதெண்டஞ் செய்வமென்று எண்ணிமேக நாதனெனும்
ஏற்றயானை யுடன்பாகனை யிங்கழையு மென்றனனே

என்றரச னோதிடவே யேகியந்தத் தூதுவர்கள்
என்றுதிக்கு மலைநிகர்த்த யானைப்பாக ரிடத்தணைந்து
என்றுதித்த புவியளந்தோ னெழுமுகிலைச் சிறையில்வைத்தோன்
என்னுமரசர்கள் பணியு மிறைவழுதி மொழிகேட்பீர்

கேள்ப்பீர்நற் பாகர்களே கெற்சிதத்தின் மழைமுகில்போற்
கேழானயானை தன்னைக் கிட்டுமாறு கொடுவரட்டாம்
தாழாதீ ரென்றுசொல்லத் தந்திரஞ்செய் பாகர்களும்
தாழாதிந் திரன்பேருடைத் தந்திமுன்னே வந்தனரே

தந்திதனிநிற்கின்ற பந்திதனில்வந்து தனக்காறாநூ றாயிரம்பேருமுந்தி
வெந்திறல்மிகுத்து மதமேருகிரிபோலே மேகநாதனெனும் வேழத்தினழகை
இந்தநெடுமதயானை யெம்மைச்சினத்தே யேறிடவிழிக்குதே போதலரிதாகச்
சிந்தையினினைந்தென் னாயினும்வழுதிதன் திருவுளப்படிநாங்கள் செய்வதேயென்றார்

செய்யுநரிநாய்முலைப் பாலுடன்முருங்கைவேர் செவ்வலரியிருதூணி செந்நெல்முக்காலும்
பையரவினிற்பித்து மத்தியின்பால்குறுணி பனையினிற்கள்ளோடு கஞ்சாப்பதின்கலம்
துய்யதொருகுங்குமம் வெங்காரமிருவேலி சொற்பிசுக்கம்விரை தொடமூன்றுபலமும்
ஐயிருபதின்களஞ் சவினோடுகூட்டியே ஆகும்பதத்தி லரைத்தேயெடுத்து

அரைத்துக்கராம்புள்ளி வசமானமிளகு மானதோர்வசுவாசி கசகசாவுடனே
வருக்கையொடுமுப்பழஞ் சீனியொடுசர்க்கரை மற்றுள்ளபலவகை மருந்துடன்கூட்டி
தருக்கவேபொன்னின் கலத்திற்றரித்துச் சம்பாவரிசியின் சோறுடன்சேர்த்துப்
பெருக்கப்பிசைந்து தருக்கத்திரட்டிப் பெருங்கோபவேழந் தனக்கிட்டுநிற்க

இட்டதோரந்த மருந்தையருந்தி யிருகால்விலங்கறுத் திணலைமுன்சீறி
அட்டமாய்நின்ற வருமையமுற்றோடி யலறிவிழவலைகடலி னடிபோன்முழங்கி
கட்டவருபாகருங் கிட்டவொட்டாமலே கைகால்மருப்பினாற் காதியேமோதி
மட்டிடவுமொண்ணாது மதமுற்றுவருமாம் மதுரைநகராசனது மத்தவாரணமே

வாரணம்பொருமன்னர் தம்பதியழிக்கவும் வட்மிட்டெழுகடலை வற்றக்குடிக்கவும்
ஆரணம்புகழீச னருள்மேருகிரியென ஆகவேழிடமுயர்ந் தலறிமுகில்போல
ஏரானபாகரையு நூறிநெடுவீதியி லெதிர்த்தவர்கள்பார்வையு மிமைத்தேமழுங்க
சீரானநிழலைமேல் மோதியேவருமாஞ் செஞ்சொலிடுமீனவன் குஞ்சரந்தானே

குஞ்சரம்பந்தியிற் குஞ்சரவினங்களைக் கோடுகொடுகுத்தியே காலினால்மொத்தியும்
அஞ்சினவரஞ்சவே மிஞ்சினவர்மிஞ்சவே அலைபோலமும்மதம் நிலமூடுபாய
வஞ்சமுறுபாகரும் நெஞ்சுதுணிவாக வாகாயுதங்கா திறுக்கிமுறுக்கி
குஞ்சரக்கந்திநிற் பாசந்தொடுத்து குவலயத்தாரஞ்ச நடைகொண்டுவந்தார்

வேறு

நடந்ததுவே யானையது நாலுதிக்குங் கிடுகிடென்ன
நடந்ததுவே மதசலமும் நாலுதிக்குஞ் சடசடென்ன
நடத்தியந்த யானைதன்னை நாற்புறமும் பாகர்களும்
நடத்துமது ராபுரியி னாயகன்முன் கொண்டுவந்தார்

கொண்டுவந்து கைதொழுத கொலையானைப் பாகர்கள்மேல்
கொண்டுவிழி களிகூர்ந்து குலவழுதி மொழிகுவனாம்
கொண்டவிலைச் சிலம்பெடுத்த கூசாத கள்வனிடம்
கொண்டுவந்த யானைதன்னைக் கொலைபுரிய விடுவிரென்றான்

விடுவிரென்ற மொழிகேட்டு விடுவிடென்று தட்டானும்
விடுமிதுவே சமயமென்று விரைவிலொரு கயிறெடுத்து
விடுவிடெனக் கோவலரை மிகவிறுக்கி வரிந்திழுத்து
விடுமதத்தின் யானைமுன்னாய் விட்டானந்தத் தட்டானும்

தட்டான்விட் டிடக்கோவலன் தந்தியைப்பார்த் தழுதுரைப்பான்
தட்டானுஞ் சவையகத்தே தாம்பெடுத்து வீங்கக்கட்டித்
தட்டிடென்று யானைமுன்னே தான்போடத் தலைவிதியோ
தட்டாக மலரிருந்த சதுர்முகன்தன் விதியுமிதோ

இதுவிதிக்கோ மாசாத்த ரென்னைத்தவஞ் செய்துபெற்றார்
இதுவிதிக்கோ வென்தாயார் ரென்றுஞ்செல்வ மாய்வளர்த்தார்
இதுவிதிக்கோ மாதவிமே லின்பமுற்றுப் பொருள்தோற்றேன்
இதுவிதிக்கோ பதியைவிட்டு இம்மதுரை தன்னில்வந்தேன்

தனமருவு மாநாகர் தான்வளத்த தையனல்ல
தனமருவு கண்ணகையைத் தாரமாகத் தந்திடநான்
தனமருவி யிருந்தேனோ தையலியின் காற்சிலம்பை
தனமருவ விற்கவந்து தட்டானிலகப் பட்டேனே

பட்டேனே பாடுமிகப் பாரிலொரு களவறியேன்
பட்டமத குஞ்சரமே பாரிலுள்ளோர் தானறியப்
பட்டகுற்ற மொன்றுமில்லைப் பாண்டியனும் பார்க்கவில்லை
பட்டிடநான் தட்டிடென்று பார்விழுந்தார் கோவலரே

விழுந்வுடன் யானைதன்னை மிகமிகவாத் தியம்முழங்க
விழுந்தபுக ழாதோரணர் வீரா வேசப்படுத்தி
விழுந்தவணி கேசனைநீ மிதித்திடென் றங்கேவிடவே
விழுந்தவன்கண் ணகையம்மையார் மேவியநாயக னென்பதால்

என்செய்வே னிவ்வுலகை யீன்றபெரு மாட்டியவள்
என்னவிதஞ் செய்தாலும் ஏந்திழைக்குத் தெரியுமல்லோ
என்னையிந்தப் பாகர்நின்று ஏவுகிறா ருயிர்வதைக்க
என்னையவ ளறியாளோ ஏகபரத் தாயல்லவோ

தாயல்லவோ வெவ்வுயிர்க்குந் தற்பரியாள் கணவனைநான்
தாயமறக் கொன்றேனேல் தாங்வொண்ணாத் தீங்கடையும்
தாயமீதா காதெனவே தான்வணிக னைத்தொழுது
தாயமுற்ற பாகர்சொல்லைத் தானறிந்து மறுக்கமுற்றும்

உறற்பாகர் ருறுக்கிடவும் ஒலிகடல்போ லேமுழங்கி
உற்றதாரு மலைபோலே உன்னிதங்கொண் டெழுந்துநின்று
உற்றகாலில் விலங்கறுத்து உற்றபாகர் தனைச்சினந்து
உற்றகரக் குழலூதி யொருத்தலும் விட்டோடியதே

ஒருத்தல்விட் டங்கோடிடவே யுற்றருகு நின்றதட்டான்
ஒருப்படப்போய் பாண்டியனை யுடன்வணங்கித் தொழுதுரைப்பான்
ஒருத்தனையா யிவன்வலியன் உபாயமந்திர மருந்துள்ளவன்
ஒருத்தலும்விட் டோடினது ஓதுமிவன் மாரணங்காண்

காணுமிவன் சோழநகர்க் கள்ளன்மிகு மருந்தறிவான்
காணுமந்த வூரவர்கள் கள்ளவித்தை தனில்வலியர்
காணிலிவ னவர்களிலுங் கள்ளனிவன் றன்னையிப்போ
காணநகர் ம்ழுவதனாற் கட்டாயம் வெட்டுமென்றான்

வெட்டுமென்ற தட்டானும் மென்மேலும் பலபுகல
வெட்டுபடை மாலகனை விரைவிலழைத் திடுங்களென்று
வெட்டுபடை மீனவனார் விளம்பிடத் தூதுவரோடி
வெட்டுமழுத் தலைவர்களில் வீரனைக்கண் டீதுரைப்பான்

துரைத்தனஞ்சேர் மழுவரசே சொல்லிடக்கே ளொருவார்த்தை
துரைத்தனஞ்சேர் சோழநகர்ச் சோரனொரு வீரன்வந்து
துரைச்சிலம்பைக் களவாகச் சோரஞ்செய்தா னாகையினால்
துரையவனைக் கொலைபுரியத் தொடங்கினர்நீ யெழுந்திடென்றார்

எழுந்திடென்று தூதர்சொல்ல விரணகொலை மழுவரசன்
எழுந்துமனை மனைவிமுக மெதிர்நோக்கி யீதுரைப்பான்
எழுந்தபுகட் பாண்டியனா ரிடம்போக மழுவெடுத்து
எழுந்துவாடி தாடிபெண்ணே யென்றவுட னவளெடுத்தே

எடுத்தமழுக் கொடுத்திடவே இறைஞ்சிநின்று வாங்கியவன்
எடுத்தகரத் துடனுடனே யேகுதூத ருடன்கூடி
எடுத்ததெரு வரும்பொழுது ஏங்கியொரு பொடிபயந்து
எடுத்தகுர லழுதிடவே இவனிதனை நினைந்தனனே

இதனைநினைந் தரசனுக்கு மின்றழிவு தோன்றுதென்று
இதனுடனின் நகரழிய வேதுவுமுண் டானதென்று
இதனைமனத் துடநினைந்து ஏகிவாயுக் கதியெனவே
இதமுடனே சபையிருந்த ராசராசன் பதம்பணிந்தான்

பணிந்தெழுந்து மாலவனும் பாராளுந் தென்னவனே
பணியணிநற் சயமகளும் பார்மாதும் வாழுகின்ற
பணியணியு முரபுயனே பாதம்போற்றி போற்றியுன்றன்
பணிவிடையே தழைத்ததென்ன பகர்ந்திடுவீர் பரிவினென்றான்

என்றவுடன் மன்னவனு மெதிர்வணங்கு மாலவனே
என்றன்மொழி கேட்டிடுவா யென்னுடைய மாளிகையில்
என்றுமில்லாச் சோரனிவ னெதிர்புகுந்து சிலம்பெடுத்து
என்தனுக்கு மறைந்துவெளி யேகவுடன் பிடித்துவந்தோம்

வந்திவனை் கொன்றிடவே மதயானை தனையழைத்து
வந்துவிட விவன்புரிந்த மருந்துமந்த்ர மாரணத்தால்
வந்தயானை கொல்லாமல் மனமருண்டங் கோடியதே
வந்தமழு மாலவனே வஞ்சனிவன் தனைவதைப்பாய்

வதைபுரிவா யெனமாறன் மாலகனுக் குரைத்தளவில்
வதைபுரியு மாலகனும் மதுரைநகர்ப் புரவலனே
வதைபுரிவே னுனதுரைகள் மறுத்ததுண்டோ யிவனையிப்போ
வதைபுரிய விடைபுரிவாய் மாறேனானெனத் தொழவே

தொழுதுநிற்க விடைபுரியத் துர்க்குணனுங் கோவலனும்
தொழுமரசர் முடிமருவுந் தூயபாதப் பாண்டியன்றன்
தொழுமணிகள் புனையுறுப்பிற் தோரணவா சலைக்கடந்து
தொழுவழுதி யெழுபதியின் தோன்றுவட திசையில்வந்தார்

வந்தவுடன் கோவலரை மாலகன்பார்த் தோதிடுவான்
வந்ததென்ன காரணங்காண் வழிவழியே யுண்மையதாய்
வந்தமுறை யறையுமென்ன வணிகேசர் சொல்லிடுவார்
வந்தமழு மாலகனே வகுத்துரைப்பேன் கேளெனவே

கேட்டிடுவாய் மாலகனே கேடொருதட்டான் விழைத்தான்
கேட்டிடுவாய் பின்சொல்லுவேன் கிருபையுட னிரைநிரையே
பாட்டின்மிகு காவிரிப்பூம் பட்டினத்தில் வாழுகின்ற
பாட்டின்மிகு மாசாத்தர் பரிவுடனேபெற்ற மைந்தன்

மைந்தனென்பேர் கோவலன்காண் மாநிதியமுடை யவன்காண்
மைந்தழிந்து மயங்கியொரு மாதெவிமேல் மயலாகி
மைந்தினுள்ள பணமுழுதும் வகைவகையா யவட்களித்து
மைந்துகெட்டு வறுமையுற்று மதுரையிற்போய்ப் பிழைப்போமென்று

என்றெனது குலமனையும் யானுமெங்கள் நகரைவிட்டு
என்றுமறி யேன்வழியி லேகவங்கோ ரிடைச்சிமனை
என்றுமவர் துணையெனவே யேகியிருந் தென்செய்குவோம்
எனன்றெனது மனைவிபத மேற்றவிரு சிலம்பிலொன்றை

சிலம்பிலொன்றைக் கழற்றியிங்கே சென்றிடத்த தட்டானொருவன்
சிலம்பைவிற்றுத் தாறெனென்று திருவழுதி முன்கொணர்ந்து
சிலம்பெடுத்த கள்வனிவன் தேடியிங்கே பிடித்துவந்தேன்
சிலம்பிதுதா னரசேயென்று செப்பிடப்பாண் டியன்கேட்டே

கேட்டவுடன் மோட்டரசன் கேள்விசற்று மில்லாமல்
ஆட்டியிழுத் தானைமுன்னே அறைந்துகொல்லென் றெனைவிடநான்
மாட்டிருந்திச் சங்கதியை மதயானைக் குரைத்தழுதேன்
கேட்டவுட னானையுங்கை கிளப்பிநின்று புலம்பினதே

புலம்பிவிலங்குகள் நெகிழப் போரானை பாகரஞ்ச
புலம்புமென்னைக் கொல்லாமல் புறவீதி யோடினதே
மலங்கலில்லாப் பொன்செய்கொல்லன் மந்திரத்தா லிவன்வலியன்
புல்ம்புவது மாயமென்று போற்றவவ னேற்றானே

ஏற்றவந்தப் பாண்டியனு என்சிலம்பில் நாகமணி
ஏற்றதரி சாயிருக்க விராசனதைப் பார்க்கவில்லை
ஏற்றவென்னைப் பார்க்கவில்லை யெந்நகரைத்த தேடவில்லை
ஏற்றவென்றன் மனையாள்தன் னிணைச்சிலம்புங் கேட்கவில்லை

இல்லில் மனையாள்பூண்ட விணைச்சிலம்பு சரிதானோ
இல்லையோவென் பதையுமிந்த ராசனொத்துப் பார்க்கவில்லை
இல்லில்வந்த கள்வனென்றிங் கிருந்தோரை வினவவில்லை
இல்லைமனத் தறிவுமவற் கென்னுரையு மெய்யில்லையே

மெய்யுமில்லைச் சிவனருளும் மேவவிலை யானைக்குள்ள
மெய்யறிவு மிவனுக்கில்லை மிக்கசங்கந் தேரவில்லை
எய்யுமெந்தன் விதியாலோ யிவனுக்குள்ள மதியாலோ
எய்துகொலை புரியெனவே யித்தீர்வைச் செய்தானே

செய்தியிது வென்றுசொல்லத் தேர்ந்துஅந்த மாலகனும்
செய்தியிதோ கைதவனுந் தேசரசு புரிவதிதோ
செய்வதென்ன வனியாயஞ் சேர்ந்ததென்று துயரமுற்று
செய்தியென்ன செய்வேநான் தீர்வையிது கோவலரே

கோவலரே யரசனுக்குங் கொடுமைவந்து நேருமென்று
கோவலரை யுடன்கூட்டிக் கொலைமழுவன் போகையிலே
கோவலரே பாருமந்தக் கொலைக்களந்தான் வேங்கைமரம்
கோவலரே வாருமென்று கொலைக்களத்தி லுற்றனனே

களத்தில் நரிநாய்கழுகு காக்கையெறும் பீயினங்கள்
களப்பலியை யருந்துகின்ற காரணமெல் லாங்காட்டி
களப்புதுமை கண்டீரோ கடவுளாணை மறுத்தரிய
களவுமுதற் பாதகத்தைக் கற்றவருற் றிடுமிடமே

இடமிதுகாண் கோவலரே ஏழைத்தட்டான் கோள்முடித்து
இடியுரைத்தான் மடையரச னிப்படியே தீர்த்துவிட்டான்
கொடிமையிது கோவலரே கூறுகிறே நீர்பிழைத்து
நடவுமிந்த வுபகாரம் நான்செய்கிறேன் தேசிகரே

தேசிகரே தேசமெங்குஞ் சிறந்தபுகழ் மாசாத்தர்
தேசுவிளங் குதித்தமகன் சீராளு நீயதனால்
கூசவேண்டாந் தேவருக்குங் குற்றமுண்டு கோவலரே
கூசுதென்றான் மனமுமிப்போ கோவலரே போமெனவே

போவெனச்சொல் மழுவரசே புகுதிசொல்வேன் கேட்டிடுவீர்
போவதெல்லா லுயிர்நிலையாய்ப் பூமியிலு மிருப்பதுண்டோ
போவதெங்கே நான்போனால் பூழியன்றன் மதுரையிலே
போவனிவன் கள்ளனென்றே பூவுலகோ ரேசாரோ

ஏசாரோ பாண்டியனு மிதையறிந்தால் விடுகுவனோ
ஏசாதே யுன்னுயிர்க்கு மிடறுவந்து நேரிடுமே
ஏசாரோ நம்மவர்க ளிந்தவெட்கம் வேண்டாங்காண்
ஏசுலுயர் சொர்க்கமுண்டே யிப்பபோவெட்டு மென்றனரே

என்றுரைக்க மாலவனு மேதுசொல்வான் கோவலரே
என்றரசன் முனிந்தாலும் எத்தீமை சேர்ந்தாலும்
என்றுமில்லாத் தீமையிது என்மனதிலறிந்து கொண்டேன்
என்னவித முனைக்கொல்லலா மென்மனமும் பதறுகுதே

மனம்பதற லதுவிருக்க மாதுமையோர் பெண்பிள்ளையாய்
மனமுடனிம் மதுரையிலே வந்துபிறப் பாளவளால்
மனம்மறுத்த வழுதிநகர் மாழுமன லெழும்புமென்று
மனுநூலு மோதினதாம் மாதும்வந்து பிறந்தனளாம்

பிறந்ததொரு பிள்ளைதன்னைப் பேழையிலே தள்ளினராம்
பிறந்தபுகள் கோவலரே பெண்ணுனக்கு மொருத்தியென்றாய்
பிறந்தகாலிற் சிலம்புமென்றாய் பேதைவரல் வாறறிய
பிறப்புரைப்பா யெனக்கேட்கப் பேசிடுவார் கோவலரும்

வலமழுவின் மாலவனே மாநாகர் வணிகேசர்
வலமடையப் பிள்ளையில்லா மனக்கவலை கொண்டிருந்து
வலமுறுமென் னையரொடு மாநாகர் கடற்றுறையில்
வலம்வரவோர் பேழைகடல் வந்தது கண்டாரையரே

கண்டுபேழை தனக்கெனவே கருதியமா நாகரப்போ
கண்டபேழைக் குள்ளிருக்கும் கருதுபொரு ளெனக்கெனவே
கண்டபேழை கரையில்வரக் கடிதிலிவர் சென்றெடுத்து
கண்டபூட்டுத் திறந்திடவே காரிகையா ளங்கிருந்தாள்

இருந்தவளை யெனக்குமணம் இட்டிடுவோ மென்றிவர்கள்
இருந்துபேசி வளர்த்தனர்காண் ஏந்திழையாட் கொருகாலில்
இருந்ததொரு சிலம்பதனுக் கிணைச்சிலம்பு நாகமணி
இருக்குமிடந் தேடிச்சிலம் பிட்டெனக்கு மணம்முடித்தார்

முடித்தபின்னர் மணவறையில் மூழ்குதன முளமயலால்
முடித்தமஞ்சம் படுத்திடவே மோகமுற நடுவாக
முடிக்குமனற் கொழுந்தெழுந்து முகடுறநா னென்னவென்றேன்
முடித்தகுழ லவளெனக்கு முன்னுரைத்தா ளிரகசியம்

இரகசியத் தறிவோடே யிருந்திடநான் நாலாநாள்
இரகசியப் புணர்ச்சிமிக்க ஏந்திழையாள் மாதேவி
இரவலரை யீடேற்றும் இயல்வழுதி சவையகத்தில்
இரவலரு மனமகிழ வினியநட மாடினளே

ஆடுநடத் தாலவளு மாசைகொண்டு மாலையிட்டாள்
ஆடுவினையால் நானு மவளிடத்திற் பொருள்தோற்றேன்
ஆடுகுழ லென்மனைவி யதற்குரிய பொருளளித்தாள்
ஆடியமா தேவிக்கொரு ஆயிரத்தெண் களஞ்சுபொன்னே

பொன்கொடுக்குங் காரணத்தாற் பூவையுடை காற்சிலம்பை
பொன்மாற விங்குவந்தேன் புகளிடையர் வீட்டிலெந்தன்
பொன்னான மனைவியங்கே போந்தேன்காண் நானுமிங்கே
பொன்னைநிக லவளறிந்தாற் பொன்றிடுவாள் போலினியே

இனியவளுக் கிடரைவைத்தேன் இடையமனைக் குடிகெடுத்தேன்
இனியவளோர் காற்சிலம்பை என்னவிதந் தேடிடுவாள்
இனியமனக் கணவனென்று மிணைச்சிலம்பைத் தந்தாள்காண்
இனியறியெல்லா முரைத்தேன் னெங்கள்பர னாராணை

ஆணையுடனுனக் குரைத்தேன் அறியவொண்ணா திதுவொருவர்
ஆணினல்ல மாலவனே யவளருளும் விரைவில்வரும்
ஆண்திறமை யிளந்தேநான் ஆதலினா லென்னையிப்போ
ஆண்டரசன் மொழிப்படிநீ அருமழுவாற் பிளந்திடென்றார்

பிளந்திடென்ன மாலவனும் பேதையவள் கவுரியென்று
பிழைகேடு வந்ததிந்தப் பேரரசன் பேயானான்
பிழைத்தோடென் றுரைத்திடவும் பேரானே செட்டியிவன்
பிழைக்கவிட்டால் எனையரசும் பிடித்துடனே வதைத்திடுமே

வதைத்தாலும் விதிவலியை மாற்றுபவ ரொருவரில்லை
வதைத்தகடன் நாளையல்லோ மாதுவந்து மதுரைமுற்றும்
வதைத்திடப்போ றாளென்செய்வேன் வணிகரேநான் சொல்வதைக்கேள்
வதைப்புறவேண் டாமெனக்காய் மாறுநக ரேகுமென்றான்

ஏகுமென்னக் கோவலரு மென்னாணை மழுவரசே
ஏகாதே வெட்டியென்னை யிப்போது முடியுமென்று
ஏகிவாவி தனில்முழுகு ஈசர்பத நேசமதாய்
ஏகுசெபஞ் செய்துடனே யேழையெனக் குறுபதமே

பதமளிப்பாய் சிவனேயென்று பத்திசெய்து மழுவரசன்
பதமுரைத்த படியொருகற் பாறையிலே வந்திருந்து
பதத்தைவட திசைநீட்டிப் படுத்தினியுன் மழுவாலே
பதப்படுத்து வாயெனக்கண் பாராது துயின்றனனே

துயின்றவந்தக் கோவலரைத் துர்க்குண மாலவன்பார்த்து
துயிலுகுதே மனமெனக்குந் தூயசெட்டி திருமேனி
துயிலிளமைக் கொருவரில்லைத் தோகைபழி நாளைவரும்
துயில்வதுதா னெல்லோருந் துக்கமெனக் கேனினியே

இனிக்கரத்தில் மழுவெடுக்க எடுத்தகரம் நடுங்குகுதே
இனியிடக்கண் துடிக்குதையோ ஏந்திழை கண்ணகைத்தாயே
இனியடியேன் செய்வதென்ன என்மேலோர் குற்றமில்லை
இனியறிநீ யென்றவளி னிருபதமுந் துணையெனவே

துணைபரமன் பதமெனவுஞ் சொல்லியவன் மூச்செறிந்து
துணையுடனே தேவர்களுந் தூயமன மிரங்கிடவே
துணை யொருவரில்லாத துய்யபுகட் கோவலனைத்
துணையெனக்குங் கடவுளென்றே துணிந்துவெட்டிப் போடடானே

வெட்டிடவந் நகரமெங்கும் மின்தூற லிடிபடவே
வெட்டினமா லவன்விரைவாய் விறலரசர்க் குரைத்துவந்து
வெட்டுமழு தனைக்கொடுத்து மெல்லியற்கு மிதுகூறி
வெட்டினதா லெனக்கேதும் விழைவாமோ வெனவிருந்தான்

அவனிருக்க வந்நகரி லானதுதீக் குறிகள்மிக
அவன்பிளந்த கோவலரை அருங்கானிற் சிற்றுயிர்கள்
கவனமுட னோடிவந்து காட்டில்நிண முண்பதுவாய்க்
கவனமுறக் கண்ணகையின் காரணமோ கண்திறந்தே

கண்ணகையார் தன்னுடைய கணவரிவ ராதலினால்
கண்ணிமிகத் திண்றோமேற் கனசாபம் பலிக்குமென்று
கண்திறந்து பருந்தினங்கள் காவலுடன் பந்தரிட்டுக்
கண்ணகையார் நாயகனைக் கனவிலங்குங் காத்ததுவே

" ஒன்பதாவது சிலம்புகூறுங் கதை முற்று "

விருத்தம்

ஆங்காரமென்னுமொரு புருடனோடுடாடி யவமாயை யானமின்னும்
அடிக்கடிமனத்திடை தடுத்துமொருமேலான வானந்தவெளி மறைத்தே
நீங்காதகருணைபுரி யுடலுயிரதாகிவரு நிமலவொளி யமலபரமாம்
நேசர்சிவசம்பு சருவேசர்தமை நம்புபரநித்த மானந்தமுத்தே
ஓங்காரவொளியையு முடனணையு முன்னையுமொரு நாளுமறியாமலே
உலைக்குமிருட் டொகையறுக்கும் விளக்கொளியதுணை யன்றியொன்றுமில்லை
வாங்காரமணி பூழியன்கூடல் சுட்டிடையர்மாதலங் காத்தவுமையே
மாநிலனன்னாகர் பதிமேவியரு ளேவியிருள்மாற்று கண்ணகையம்மனே

" பத்தாவது உயிர்மீட்சிக் கதை "

புள்ளலம்புஞ் சீரகத்தார் புகழ்வணிகர் கோவலருங்
தெள்ளுதமிழ் மதுரையிலே சிலம்புவிற்கச் சென்றுமதால்
உள்ளபடி நடந்தசெய லுத்தமிதன் கனவிற்கண்டு
துள்ளுகயல் விழிவிளித்துத் துணுக்கெனவங் கெழுந்தனளே

எழுந்திடுவாள் கண்டகனா வேதெனிற்றன் முத்துவடம்
எழுந்தறுந்து விழுந்திடவும் இடையுடையிற் தீயப்படவும்
எழுந்ததிரு மங்கலியம் மிற்றுவிழுந் திட்டிடவும்
எழுந்தகொம்பன் யானையொன்று இறந்தலறி விழுந்திடவும்

எழுந்தபல்லுத் தான்விழவும் ஏரிழையார் புலம்பிடவும்
எழுந்தபழ வினையாலே எழின்மதுரைப் பட்டணத்தில்
எழுந்துசென்ற நாயகனுக் கிடரணைந்த விதங்களெல்லாம்
எழுந்தகன வினிலறிந்து ஏங்கியேங்கி யழுதனளே

அழுதழுது மதுரைநக ரரசனொடு முடிப்பெனென்று
அழுதழுது பத்தினியா ராயர்குலத் தோழியையும்
அழுதழுது அவர்களது ஆனநல்ல மாமியையும்
அழுதழுது முகந்தடவி யழுதனள்கண் ணகையம்மையே

நகைவிளங்கு கண்ணகையார் நாயகனை வழுதியர்கோன்
நகையுடனே கொலைபுரிந்தான் நானினிச்செய்வே னேதென்றழ
நகையுடைய தோழியர்கள் நாயகியே தாயாரே
நகையுடநீ ரெழுந்திருப்பீர் நன்றல்லவே புலம்புவதே

புலம்பாதே யம்மேயம்மே புதியவார்த்தை கூறாதே
புலம்புவதுஞ் சகுனமம்மா பொருவிழியில் நீர்சொரிய
புலம்புவது நலமல்லவே போற்றியே யுன்கணவன்
புலம்புசிலம் பினைமாறிப் போதுவரப் போதறியும்

அறியுமவர்க் கொன்றுமில்லை யம்மையேயுன் மனவாஞ்சை
அறிவில்வந்து கலந்துகனா வானதெடி நாயகமே
அறிவிலாத சிறுமியர்போ லாகம்நொந்து புலம்பாதே
அறிவுடனே யெழுந்திரென்ன அம்மையவர்க் கோதிடுவாள்

ஓதுவதே னம்மையரே யொருநாளும் பொய்யறியேன்
ஓதுமென்காற் சிலம்பைவிற்க வுற்றமது ராபுரியில்
ஓதுபொய்த் தட்டானொருவன் உடனவரி லுறவுகொண்டு
ஓதரிய பாண்டியனுக் குரைத்தானே கள்வனென்று

கள்வனிவ னென்றுதட்டான் காட்டிடவே பாண்டியனும்
கள்வனிவன் கொன்றிடுவீா கடுகவென்று கொல்லுவித்தான்
கள்ளவிழும் குழலாரே காரியமீ தையமில்லை
கள்வனோவென் கணவனையோ கண்கெடுவான் கெடுத்தானே

கெடுத்தானே யென்றலற கிட்டிநின்று மிடைச்சியர்கள்
கெடுத்ததென்றீர் ரம்மணியுன் கேள்வனைநீ ரறிந்ததென்ன
கெடுப்பிடிக்கும் புலம்பாதே கேளெனவும் கண்ணகையார்
கெடுவாச்சே யினியுமொரு கேடுவரும் முறையென்னடி

முறைமுறையே கையறைந்து முகம்வீங்க நீர்சொரிய
முறைமுறை நானறிவெனெடி மோட்டரசனிடம் போய்நான்
முறைமுறையே மதுரைமுற்றும் மூழவனல் விடுவெனெடி
முறைமுறையே தட்டானை முறித்திரத்தங் குடிப்பெனெடி

குடிப்பெனெடி யென்றழுது கோதைகுழல் விரிந்தசைய
குடியிருந்த நிலத்துருண்டு கோகோவென் றழுதிடவே
குடியிலுள்ள விடைச்சியம்மை கோதையரைத் தானெடுக்கி
குடியிநல்லாய் புலம்பாதே கொடியிடையே புலம்பாதே

புலம்பாதே நான்மதுரைப் புரியளவும் போய்வாறேன்
புலம்பாதுத் தரவிடுவாய் பொன்னேயென்று விடைகேட்டு
புலம்பமத்திடு மோர்பால் புதியதயிர் நெய்யெடுத்து
புலந்தோறும் விற்பவள்போற் பொதுவியம்மை புலம்போனாள்

போனாளே யிடைச்சியம்மை புவிபுகழு மதுரையிலே
போனவணி கேசர்செயல் போயறிய வேணுமென்று
போகமுன்னோர் மீனவனார் பொன்றுவித்த கதையதனை
போனவிடங் களிலறியப் புகன்றவர்க ளொருவரில்லை

ஒருவரேனு மிக்கதையை யுலகறியச் சொன்னாரேல்
ஒருவரையும் விட்டுவையா னுங்கரசனென்று தட்டான்
தெருத்தெருவா யோடிவாடிச் சென்றறுக்கை செய்தானே
தெருத்தெருவே யிடைச்சியும்போய்த் தேடிவிலை கூறினளே

கூறிவந்த விடைச்சியம்மை கோவலரைக் காணாமல்
கூறியந்த மோர்தயிர்பால் கொள்ளுவிரோ வென்றுதேடி
கூறுபுகள் மதுரையிலே கொலைக்களம்போய்ப் பார்ப்பளவில்
கூறுபுகழ்க் கோவலரை கொன்றிருத்தல் கண்டனளே

கண்டனளே வேங்கைமரம் கழுகுநரி நாய்பருந்து
கண்டுகாவல் கொண்டதையுங் கண்டுமனக் கவலைகொண்டு
கண்டவர்க ளெனைப்பிடித்துக் காவலன்கைக் கொடுத்திடுவர்
கண்டாரே வென்றுருகித் கதறியொரு தெருவில்வந்து

தெருவில்வந்து மோர்க்குடத்தைச் சிதறிடப்போட் டுடைத்தழுது
தெருவிலோடு தனையெடுத்துச் சிரத்தணையிற் சுமந்துகொண்டு
தெருவிலழு தோடிவரச் சென்றோர்கண்டோர் கேட்டதற்குத்
தெருவிலென்பால் மோர்க்குடத்தை சிரம்வழுவ விட்டுடைத்தேன்

உடைத்த மனச்சலிப்பாலே யூரவரே புலம்புகிறேன்
உடையபிழைப் பெனக்கிதல்லா லூதிபம்வே றில்லையென்று
உடல்நடுங்கப் பதைத்தழுது ஓடியவ ளூர்க்கருகாய்
உடையமனைக் கிடம்வரவோர் யோசனையு முன்னினளே

உன்னியயோ சனையென்னெனில் ஒருசிறுவ னவளுக்குண்டு
உன்னுமனங் கண்ணகையை யொருப்படுத்தி முடிப்பெனென்று
உன்னியுன்னி வீட்டில்வர வோடிவந்து கண்ணகையும்
உன்னியுன்னிக் கணவன்செய லோதிடுவா யுண்மையென்றாள்

உண்மையென்னென் றுரைப்பெனம்மா உன்கணவ னிறந்தனனாம்
உண்மையிது நானறிந்த தோதினனே யென்றுரைக்க
உண்ணெகிழ்ந்து கண்ணகையு முருத்தனல்கண் பொறிபறக்க
உண்மையறிந் திருவிழியி லூறுபுன லாறோட

ஆறாது கோபமுற்றும் அங்கமனப் பங்கமுற்றும்
ஆறாறி னாலொழிந்த அழகியபல் நெறுநெறுக்க
ஆறாதங் கிடைச்சியைப்பார்த் தறைகுவளே முறைமுறையே
ஆறெனவே மோரறையு மம்மையேகே ளிம்மெனவே

இம்மெனமுன் னென்கணவ னேகமது ராபுரியில்
இம்மெனமுன் தட்டானு மிராசனுகொன் றிட்டதுமெய்
இம்மெனநீ போனதுமெய் யெத்தெருவுந் திரிந்ததுமெய்
இம்மெனவென் கணவனுட லிறந்திருத்தல் கண்டதுமெய்

மெய்யெடிநீ தயிர்க்குடத்தை வீழவிட்டங் கழுததுமெய்
மெய்யாக வுன்மனதில் வேறுமொரு யோசனைசெய்
மெய்யாயுன் மகனுக்கென்னை விபாகமுற நினைத்ததுமெய்
மெய்யெடியிப்படி நினைத்தல் வீணல்லவோ இடைச்சியம்மை

இடையி லடைகலமாக இல்லில்வந்த வென்னையுநீ
இடையகுலத் திடைச்சியென்ன வெண்ணினாதா லுன்மனையை
இடையழல்விட் டெரிப்பெனென்று இருவிழியி லழல்சொரிய
இடையர்மாது முடல்நடுங்கி யேழையேன்செய் பிழைபொறுப்பாய்

பிழைபொறுப்பா யென்றடியைப் பேணிவிழுந் தழுதளவில்
பிழைபொறுத்தங் குயிர்க்கிரக்கம் பேணுநற்றா யதனாலும்
பிழைப்பிலாமல் வந்தளவிற் பேணியேநல் லடிசில்நெய்பால்
பிழையறஇட் டணைத்திருந்த பேருதவி யதனாலும்

அதனாலும் வேறுதவி யதனாலும் மாயர்குலம்
அதனாலும் மனமிழகி யங்கெழுந்த கண்ணழலை
அதமுறக்கொள் ளாதபடியம்மை தணித்தருள் புரிந்து
அதிகமன நடுக்கமுற்று ஆயர்பெண்மே லருளும்வைத்தே

வைத்தபின்னம் மதுரைநகர் மன்னனொடு தட்டானை
வைத்தபிழை யறமுறித்து மதுரையெல்லா மனல்பரப்பி
வைத்திலனேல் லென்மார்பில் வளர்ந்ததிது முலையல்லென்று
வைத்துமனச் சோபமுடன் மலைமுலையா ளெழுந்தனளே

வேறு

முலையின்மிசையொளிர்தரள முதியவடமுருள முளரிமலர்விதுவைநிகர் முகநகையுமொழிய
பருமலர்கண்றையொழுகு நிறைகுழலுமவிழப் பகரரியதிகிரிநிக ரிருபுயமுமெலிய
உலகிலெனதுயிரைநிகர் வணிகருயிர்கொண்டங் குறுவழுதிசமரமுக மலையெழுதியாண்டகுஊ
வலயமுழுதும் மனலெழுப்புமனமுடனே வஞ்சியிடைவஞ்சிநடை யஞ்சநடைகொண்டாள்

நடையேறுசீறடியினொரு சிலம்பொலியாய் நங்கையெழுகொங்கை வனசம்பொறிகடோய
தொடைமிடையுகடக கரமிடைபுடையிலடையச் சுகமலரினிதயமன வுதயனுறவிரிய
புடைபெயருகுழைநிலவு குழையுலவுவிழிகயல்கள் பூமுகமெழுந்தொழுகு நீரிடைகுதிப்பக்
கடலதிரவருமதனை முனையிலெதிர்கண்ணகை காதலானைத்தேடி வாடியேகினளே

ஏகுமிகுவானவர்கள் மாககனமீதே ஏறுகதிரேறுவெயி லெங்கணுமறைப்ப
ஆகமிகவம்புவியின் நங்கைநொந்தேங்கிட ஆருமறியாதபத வாரிசமுமிந்தக்
கோக்கிடைநடக்கமனல் கெம்புமனல்கொடிதோ கோவலரிறக்கமனம் வெம்புமனல்கொடிதோ
காதுமெனமாறனை முன்னேகுபகையோடே கஞ்சஞ்சமஞ்சவரு கண்ணகையும்வருவாள்

வருமரூஉகமுநீர்கொள் மதுநீர்களொழுகி வயலூடுபயில்சாலி யதனூடுபயில
வருமீறுகயலேறி மதுவுண்ணமுத்தம் வாரிக்கொளிக்காறு  மாடுற்றகூடலில்
மருவாரைநிரையேற்று களுநாட்டுகள்மேல் வணிகேசையுறவாட்டி மதிதாட்டிருந்து
வருராசன்வழுதிமுற் பளிவாங்கவென்றே மங்கையனலம்புமுலை  மலைகொடுநடந்தாள்

வேறு

கொடுந்தகைய காமமெனுங் கொடியபாலைக் காட்டகத்தில்
கொடுந்தகைய குரோதமென்னுங் கொழுந்தினழல் மூண்டெரியக்
கொடுந்தகைய மேகமென்னுங் குறுங்கானல் வெப்பமுற
கொடுந்தகைய மதமதெனுங் குறும்பொறைக ளிடைதோன்ற

தோற்றமுற லோபமென்னுஞ் சுடுமணல்க ளிடைபரவத்
தோற்றமுறு மாச்சரியத் தோன்றுகட்டை யனல்மூழத்
தோற்றமுறு மனமதெனுந் தூரமான காட்டகத்திற்
தோற்றமுற்றுத் திரிவளென்னிற் துரைவழுதி மதுரையிலே

மதுரமொழிக் கண்ணகையார் வருவதற்கும் வருத்தமுண்டோ
மதுதுளிக்க மலர்ந்தெழுதா மதுமலரை நிகர்த்தும்வன்ன
மதுபமுண்ணும் மதுத்துளிக்கும் மாந்தளிரி னழகுமுற்ற
மதுவொழுகு குழலிபதம் மதுரைநகர்க் கேகினதே

ஏகுமந்த வேளையிலே எழின்மலர்க ளொடுபலமீன்
ஏகுவாவி தனிற்பெருகு மினியபுனல் குடத்திலள்ளி
ஏகுபெண்கள் பலரைக்கண்டு ஏந்திழையீர் கேழுமிப்போ
ஏகுமதிக் குலத்துதித்த ராசராசர் பூழியர்காண்

பூழியர்காண் சீரகத்தார் பூம்பூகாரிற் செட்டிதன்னை
பூழிகொள்ளிம் மூதுரிற் பொன்திருடு கள்ளனென்று
நாளினல்லோர் நீதியில்லை நடுவுமில்லைத் தான்பிடித்தின்
நாள்வதைத்த கொலைக்களத்தை நானறியக் காட்டீரோ

காட்டீரோ வெனவினவ்க் காரிகையார் முகம்பார்த்து
காட்டொளிசெய் கண்சிமிட்டீக் கையசைத்து மெய்நெளித்து
நாட்டிலுள்ள காரியங்கள் நாங்களறிந் திடுவதற்கு
நாட்டரசர் நாங்களல்ல நங்கைபோபோ வென்றுசென்றார்

சென்றுநீயூர் தேடெனவே தேன்மொழியோர் தெருவில்வர
சென்றுபள்ளிக் கூடத்திலே சித்திரவித் தாரநூல்கள்
நன்றுபயின் றிடவேவரும் நல்லசிறு பிள்ளைகளை
நன்றுகண்டு பிள்ளைகளே நானுரைப்பேன் கேளுமென்றே

கேளுமிந்தப் பாண்டியன்தான் கிருபையில்லா முறைதவறிக்
கேள்விமுறை யறியாமல்க் கிட்டினதோர் செட்டிதன்னை
கேளரவின் மணிச்சிலம்பைக் கெடுதிசெய்த கள்வனென்று
கேள்வியினால் வெட்டுவித்த கெடுகளத்தைக் காட்டீரோ

களங்காணக் காட்டீரென்ற கண்ணகையார் கண்ணெதிரே
களகமுற்று வந்தபிள்ளை களிலொருவன் சொல்லுவனே
களமுமுண்டு வழுதியிந்தக் கதையுரைத்தோர் தனைப்பிடித்துக்
களக்கொலை செய்வேனெனவே கட்டளைதா னிட்டனனே

இட்டதைநான் சொல்லிடநீ யாவருக்கும் பேசாதே
இட்டமழு வெட்டிவைத்தா னிராசனொரு செட்டிதன்னை
இட்டவிடங் காட்டிடுவேன் என்றபொழு தேந்திழையாள்
இட்டமணி மாலையொன்றை யீந்துபரி வோடழைத்தாள்

பரிவுகொண்டு காட்டெனவே பாலகனு மப்போது
பரிவுகொண்டு வணிகன்பட்ட படுகளம்பார் வேங்கைமரம்
பருந்துகொடி கழுகுமேலே பறத்தலைப்பார் பந்தல்போலே
பருந்துநரி நாயூழை பாடுவதவ் விடம்பாராய்

பாராய்போ யென்றுகுறிப் பாகவவன் கைகாட்டிப்
பார்வழியை யென்றவனும் பள்ளிக்கூடம் போய்விடவே
பாரமான துயரமுற்றுப் பாவிபட்ட படுகளத்தைப்
பாரிலுள்ள வழிதேடிப் பண்மொழியாள் போயினளே

போயருகில் வேங்கையின்கீழ்ப் பொலிந்துநரி நாய்கழுகு
போயுமருந் தாமல்க்காவல் புரிந்திருக்க நாயகன்றன்
போனவுயிர் ருடல்கிடக்கப் பூங்கொடியா ளாவலுடன்
போய்முகத்தி லறைந்துகையாற் புரண்டுவிழுந் தழுதனளே

விழுந்துருண்டு புரண்டெழுந்து வேல்மாறன் மதுரையிலே
விழுந்துபுற்றூர் நாகமணி மேவுசிலம் பதனைவிற்று
விழுந்தவறு மைகளழிக்க மீண்டுவாரே னீண்டெனவே
விழுமமுடன் வந்துகொலை விழுந்தீரோ வெனவழுதாள்

அழுதனளே முத்துநிரை யலங்கரித்த பஞ்சணைமேல்
செழுமையுடன் கண்துயின்ற செல்வரேநீ ரிவ்வனத்தில்
கழுகுநரி துணையிருக்கக் கற்பாறை யணையிருக்க
விழிதுயின்று மென்கணவர் வெகுநேர மாச்சுதையோ

ஐயோகோ பாவியவள் அழகான நாயகனை
வையம்புகழ் மதுரையிலே மணிச்சிலம்பை விற்கவிட்டு
ஐயோகோ நாயகனை யரியகொலைக் களத்திலிட்ட
வையகத்தில் மூதேவி வாறாளென்று பேசுவரே

பேசுவரே மாசாத்தர் பிள்ளைகொன்ற பாவியென்று
பேசுவரே தாலிகெட்ட பேய்ச்சியிவள் சீச்சீயென்று
பேசுவரே பிள்ளைகொல்லி பேடியிவள் போடியென்று
பேசுவரே பேருலகோர் பேறிளக்கக் கூறுவரே

கூறுமுன்றன் பேரழகைக் கொண்டிருக்கக் கண்டதில்லை
கூறுமுன்றன் முகத்தழகைக் கொஞ்சுமுத்த மிட்டதில்லை
கூறுமுன்றன் மார்பழகைக் கோட்டுமுலைக் கூட்டமில்லை
கூறுமுன்றன் நடையழகைக் குடையழகைக் காணேனே

காணேனே கால்நடையுங் கனகரத்னத் தண்டிகையும்
காணேனே தோழரையுங் கதித்தகதிர் முகவழகும்
காணேனே தெருவிலுனைக் காணேனே பவனிகளைக்
காணேனே மலரணையிற் கண்துயிலுங் காரணமே

காரணமா மாசாத்தர் கனகரத்னத் தொட்டிலிலே
காரணமாய் வைத்தாட்டக் கண்துயின்ற வென்கணவா
காரிநரி பேய்கழுகு காக்கைநிணக் காட்டகத்தில் (காரி - சனியன் )
காரிநடை யாயடைவாய்க் கண்வளரக் கண்டேனே

கண்டேனே களக்கொலையுங் கண்டேனே கற்பாறையுங்
கண்டேனே பாண்டியன்செய் காரணமுங் கண்டேனே
கண்டேனே மதுரைநகர் கண்டேனே யரசுநிலை
கண்டேனே யென்கணவர் காட்டிடநீ காட்டகத்தில்

காட்டகத்தில் மழுவரசன் கல்லில்வைத்துக் கொல்லவிதி
காட்டிவிட்டா னோபிரமன் கண்டுளுமன் கொண்டனனோ
காட்டகத்தில் விட்டுவெட்டக் கற்பித்திட்ட பாண்டியனை
காட்டியனல் மூட்டியுநல் கற்பகக்கா விற்புகுவேன்

காவிவிழிப் பாண்டியனுங் காதலியுங் கடுநரகந்
காவலுள்ள பாதலத்தைக் கண்டுவரக் காட்டிடுவேன்
காவலனே பூவுலகங் கண்டுமின்று தேவுலகங்
காவல்கொள்ளப் போனீரோ காதலிநா னாகாதோ

ஆகாதோ மாநிலத்தி லன்பர்களுந் தந்தையரும்
ஆகாதோ மாநிலத்தி லாச்சியருந் தாதியரும்
ஆகாதோ மாநிலத்தி லானசெல்வ மானகுலம்
ஆகாதோ கோகோகோ வையாகோ வையாகோ

ஐயோகோ நெஞ்சகமே யானகொலை வஞ்சகமே
ஐயோகோ நெஞ்சகமே யானபாவி பஞ்சவனே
ஐயோகோ நெஞ்சகமே யவனரசு துஞ்சிடுமே
ஐயோகோ வுஞ்சடமே யருங்கானிற் துஞ்சிடுமே

துஞ்சுமணிச் சிலம்பைவிற்றுத் தோகையேநான் வாறெனென்று
துஞ்சுமல ரணையைவிட்டுச் சுடுகாட்டிற் கிடந்திடவோ
துஞ்சவென்னை விட்டுவந்தீர் சொல்லீரோ வென்கணவா
துஞ்சாமற் துஞ்சினிரே தோழியோநான் மாதல்லவோ

வேறு

மாதுதனைவிட்டு மணவாளனுமிருப்பனோ.மதுமலரைவிட்டரிய வண்டுகளிருக்குமோ
ஆதவனைவிட்டுவெயி லெங்கேயிருக்குமோ.ஆசைதனைவிட்டுமண மங்கேயிருக்குமோ
போதுதடம்விட்டுரிய பறவைகளிருக்குமோ. பொன்னுலகைவிட்டு மகவான்வேறிருப்பனோ
போதுசரம்விட்டுமத னுலகாண்டிருப்பனோ.புருஷனையிளந்துலகி லினிநானிருப்பனோ

இருங்கடலைவிட்டினிய மாலுந்துயில்வனோ.இந்திரவிவானைவிட் டிவ்வுலகில்வருமோ
பொருங்களிறைவிட்டுரிய மதமெங்கிருக்குமோ.பூவினிறையாதுமணம் வேறேயிருக்குமோ
அருஞ்சுரபிதனைவிட் டதன்கன்றுநிற்குமோ.அன்றிலைவிடுத்ததன் சோடிருந்திடுமோ
வரும்பொன்னைவிட்டு மாதேவியுமிருப்பளோ.மணவாளனையிழந் தினிநானிருப்பதோ

நானுமிருப்பெனோ நாயகனைவிட்டும். நாடகக்கணிகை மாதேவியைவிடுத்தும்
நானுமிருப்பெனோ வானத்தைவிட்டும். நாட்டிலிருப்பெனோ கூட்டத்தைவிட்டும்
நானுமிருப்பெனோ கோலத்தைவிட்டும். நாட்டிலேசெழியனைக் கூட்டமாய்விட்டும்
நானுமிருப்பெனோ தட்டானைவிட்டும். நாளிந்தநாளந்த நாளிந்தநாளே

நாளிற்பெருவலிப் பூழியன்றன்னை. நாணித்தலத்திற் கலக்கிக்குலத்தை
நாளிற்றுநாளிற்று வாழ்வற்றுவாழ்வற்று. நாகத்தையாகத்தை நரகத்தைமருவ
நாளிற்றோநாளிக்குள் வேழொத்தமகுணனை. நாகத்தினேகித்த பாவத்தின்னகரின்
நாளிற்பெருந் தீயிடுவேனிடுவேன். நாயகாவென்றழு தின்றெனவெழுந்தாள்

வேறு
என்றெழுந்து கண்ணகையா ரிரங்கிவிழி சொரிநீரால்
என்றைநிகர் கோவலன்மே லீரமுற முழுக்காட்டி
என்னுலவு வானுலகை யேந்திழையாள் பார்ப்பளவில்
என்றுமுள்ள வெம்பெருமா னீதறிந்து மேதுசெய்வார்

செய்யரிய வேதமெல்லாந் தேடரிய திருவுருவிற்
செய்நாடிப் பிரணவத்தைத் திருத்திழையு மூசியுமாய்
செய்கிருபை புரியவிந்தத் தேவியிடம் மடியில்விழ
செய்யிழையா ளெடுத்துடலைத் திருத்தியெழுப் பிடமுயன்றாள்

வேறு
வெந்தவிந்த வெயிலிற்கிடக்கிறீர்.மேனியுஞ்சரு காகப்படுகிறீர்
இந்தவேந்த னுலகிலிருப்பனோ. வின்னுமின்னிலம் வாழநினைப்பனோ
சந்தனம்புனு கப்பியதுன்னுடல் சாக்களத்தில் மணல்சுட்டழுந்திட
விந்தைமேவு புயாசலதேசிகா.விதிவிதத்தது மிப்படியோபடி

படியலிப்ப்டிப் பட்டிடத்தெய்வமே. பாதகஞ்செய்த பாதகமாதேவிக்
இடியிடித்திட வேண்டாமோதெய்வமே.என்கணவாவிழுந்தீ ரெழுந்திரும்
கொடியமாதேவி வீடுகிடந்தநீர். கொடியகாட்டிற் சுடலைகிடக்கிறீர்
அடியேன்செய்த பழியிதுவாயினும்.அன்பரேநீரழுந் தாதெழுந்திரும்

இருநிலத்திற் சுடலையிலும்மை. விட்டெங்குநான்போவ தெங்குநானுய்வது
கருவுதித்தவிக் கட்டையைக்கட்டையில். காட்டிலினிட்டழல் மூட்டிமுடிக்கிறேன்
கிருபையுற்றுக் கிடவாதெழுந்திரும். கேள்வியொன்றென்னைக் கேட்பீரெழுந்திரும்
மருவுமாதேவி யல்லநான்கண்ணகை. மருவநின்றேன் வருந்தாதெழுந்திரும்

எழுந்தகீர்த்தி மாசாத்தர்மகனாரே இந்துபோலொழி தங்குமுகத்தாரே
எழுந்ததண்டிகை வாகனமேறியே.யெவ்வுலகும்புகழ் பெற்றதேசிகா
எழுந்தரத்தின ஆர்புனைமார்பரே. ஈரமுற்றிங்கெழுந் திருமென்றொரு
எழுந்துமந்திரமம்மை செய்யும்மையின் ஏதுவாலுரு வாலுருவாகவே

வேறு
உருவெடுத்த கண்ணகையார் உருவடுத்துக் கோவலரை
உருவெடுத்தங் கோதிடவே உடல்துடித்து மூச்செறிந்து
உருவுமுற்று விழியிமைத்து உடனெழுந்து கோவலரும்
உருவிலொரு திருவெனவே உற்றமாதின் முகம்பார்த்து

முகம்பார்த்த தேசிகனார் மொழிந்திடுவா ருறவெனக்கு
முகம்பார்க்க வொருவரில்லை மொய்குழல்நீ யாரெனவே
முகம்பார்த்துக் கண்ணகையார் மொழிந்திடுவா ரிடைச்சியரின்
முகமனையி லெனையிருத்தி முழுச்சிலம்பை விலைகூற

விலைகூறி விற்கவந்தீர் வீணிலென்னை மறந்தீரோ
விலைமாதென் றிருந்தீரோ மேவுவணி கேசேயென்றார்
விலைமாதென் றிடுமொழிதான் மேவுசெவி தாவவர்
விலைமயக்க முயக்கறுக்கும் மேவுமோக தாகமுற்று

உற்றுநின்றாள் தனைப்பார்த்து உறுமயிலு முறிகரும்பும்
உற்றிமின்னு மேகமுநீ ருறுகயிலுஞ் சிந்துரத்தின்
உற்றகோடு மன்னமுமென் னுறுகுயிலுங் கிளிபூவை
உற்றுவளர் காரிகையோ உற்றதுகண்ணகை யோவென்றார்

கண்ணகைதான் நான்காணுங் கணவரேநீ ருமக்குமிந்தக்
கண்ணலேனோ கடியதுன்பங் காணுவிதம் நானறியக்
கண்ணுமுரைத் திடுமெனவே காரிகையே பொற்சிலம்பை
கண்ணகைகாற் சிலம்பிதென்று காட்டிவிலை கூறிவந்தேன்

கூறிவரத் தட்டானுங் கூடிவந்து மீனவனார்
கூறுவிலை யுடன்தருவார் கொள்ளுவார் நீவாவெனவே
கூறியென்னைக் கொண்டுசென்று கொண்டசிலம் பினைவாங்கி
கூறுபுகட் பாண்டியன்முன் கொடுத்தெனையுங் கள்வனென்றான்

கள்வனென்ற வுடனரசன் காற்சிலம்பைத் தேவியிடம்
கள்ளத்தட்டா னிடங்கொடுத்துக் காட்டிவர விடுத்தனனே
கள்ளத்தட்டான் கொண்டுபோகக் காரிகைசொன் னதையறியேன்
கள்ளமாய்வந் தவள்சிலம்பாங் காட்டினேன் நானென்றனனே

என்றவுட னரசனிவன் எடுத்துரைத்த துண்மையென்று
என்றனையிக் களத்தில்வெட்டி யிட்டுவரச் சொன்னானே
என்தனுடன் மழுவரச னிங்குவந்தெல் லாமறிந்து
என்னாணைக் கோவலரே யேகிவிடுமென் றுரைத்தான்

ஏகிவிடுமென் றுரைக்க யானுரைத்தே னுலகிற்பழி
ஏகுமென்னைப் பிளந்திடுநீ யென்றுரைக்க வவன்மறுத்தான்
ஏகபரனாணை யிட்டேன் என்செய்வோமென் றெனையவன்பின்
ஏகயில்கொள் மழுவாலே யெனைப்பிளந்தான் மானாரே

மானாரே யெனைப்பிளந்த மாலவன்மேற் பழியுமில்லை
மானாரே தட்டான்தான் மன்னனையு மயக்கிவெகு
மானபங்கஞ் செய்துபழி வரவிழைத்தான் பழுதுரைத்தான்
மானேநீ ரறியுமென்று வரவுரைத்தார் கோவலரே

கோவலரீ தோதிடவே கோதைபற்கள் நெறுநெறுக்கக்
கோவமுற்றுக் கண்சிவந்து கொடுவளைக்கை யுடனடித்து
பாவித்தட்டான் தனைநெரித்துப் பழிவாங்கிப் பாரறியப்
பாவியந்த வரசனையும் பட்டணத்தோ டழிப்பனென்றாள்

என்றுசொல்லிக் கோவலரி னிளமுகத்தைப் பார்த்துடனே
என்றுமதி மாறனுன்னை யிங்குவதைத் திட்டதினால்
என்றுமுற்ற காலமிதோ யிடையில்வருந் தத்திதுவோ
என்றுரைக்கக் கோவலரு மிசைந்தகால மென்றனரே

காலமென்னக் கண்ணகையும் கதித்தமுத்தி யுமக்காகும்
காலமிது வெனக்களறிக் கததைத்த நூலிழுக்கக்
காலமதாய்க் கோவலருங் கண்துஞ்சி யுடல்விடவே
காலமூன்று மறிந்தவிந்தக் கண்ணகையா ரேதுசெய்வார்

செய்யநல்ல பந்தரிட்டு திருவுடலைப் பாறைக்கல்லில்
செய்யொழுங்கு படக்கிடத்தி தேவனையு மனதிறைஞ்சி
செய்யொழிசேர் கண்ணகையார் சீர்க்கணவன் படுகளத்தில்
செய்நடன மிருகமுடன் செப்புவளாங் கண்ணகையே

கண்ணாரு மிருகங்களே கழுகுமுதற் பறவைகளே
கண்ணான நாயகனைக் காத்திடுவீர் நானுமிப்போ
கண்ணிமைத்து முழிக்கமுன்னே கடுநீதிப் பாண்டியனைக்
கண்டுவாறேன் கண்டிருநீர் கற்பிதந் தப்பீரெனவே

கற்பினல்ல கண்ணகையார் கடியமுடி யரசனிடம்
கற்பனையில் லாதுதட்டான் கள்ளனெனக் கடிந்துநின்ற
கற்பனை யொப்பிதநீதி காட்டிடுமோட் டரசேயென்று
கற்பனைசெய் திடற்காகக் கண்ணகையு நண்ணினளே

" பத்தாவது உயிர்மீட்சிக் கதைமுற்று "

விருத்தம்

கலியிற்பிறப்பித்திய னற்பலவேதமுங் கற்பித்தெனக்கு முரிதாங்
காரியம்பலவுய்த்து வீரியம்பேறான காட்சிகொண் டாச்சிகொண்டாய்
அலியிற்பிறப்பல்ல தாணரிவையல்ல வென்னையர் சருவேசரிருதாள்
அயராதமுத்திகொண்ட னுரபோகசித்தியென் றதுவேயெனக்கோர்குறையே
சலியப்பிடித்துஞ்சும் தூதர்கொண்டே யுரியதண்டங் கொடுக்கமுன்னே
தற்பரனுநீயுமே பொற்புறமுன்மேவியே தயவுசெய் தாழுமம்மே
வலியப்பிடித்தென் மனத்திருளகற்றி யுனைவழிபாடு செய்யவருளேன்
மாகர்புகழ்நாகர் பதிமேவியருளேவு சிவகாமிகண்ணகை யம்மனே

" பதினொராவது வழக்குரைத்த கதை "

அரவறுகு தும்பைநதி யம்புலியு வேணியணி
அரனருளு மைந்துகரத் தானைமுகத் தானவனே
அரியயனு மம்பிகையு மமரர்களு மறியாத
அரியதிரு · வுருவொளியே யடியேனுக் கருள்புரியே

அருள்பொழிவாய் மதுரைநகர் ராண்டிருந்த பாண்டியனும்
அருளகன்று கோவலனை யநியாயம் புரிந்ததினால்
அருளினிறை கண்ணகைவந் தரசனிட மவையேறி
அருளில்வழக் கழித்தகதை யதனையுமிங் குரைப்பேனே

அதனியல்பிங் குரைப்பேனான் அலைகடல்சூ ழுலகுதனில்
அதிகலாப மதுரைநக ரரசாளும் பாண்டியன்றான்
அதிகதனக் கோவலனை யன்றுகொன்று சவைகுலைந்து
அதிகமனத் துடன்மனைவி யந்தப்புரம் போயினனே

அந்தப்புரத் தரசனுற ஆதபனுங் குடகடலில்
அந்ததனிற் போய்மறைய வன்றிரவிற் பாண்டியனும்
அந்தமில்லா மகிழ்வுடனே அருமனைவி தன்னுடனே
அந்தமலர்ப் பாயலிலே யனந்தலுற்றான் பாண்டியனே

பாண்டியனுந் தேவியுமாய்ப் பஞ்சணையிற் றுயில்கொளவே
பாண்டியன்ற னூழ்வினையாற் பன்னியவள் கனவுகண்டு
பாண்டிலிற்கண் விழித்தெழுந்து பதைபதைத்துக் கிடுகிடுத்துப்
பாண்டியனுக் கருகிருந்து பன்னியவள் பண்ணுவளே

பன்னலுறும் பாயலிலே பள்ளிகொள்ளும் பாரரசே
பண்ணுவதென் னென்னரசே பாரரசே போரரசே
பண்ணிமன்னு நித்திரையிற் பகரரிய கனவுகண்டேன்
பன்னுவேனுன் உளந்தெளிந்து பாருமெந்த நாயகனே

நாயகனே கனவெதுவோ நாடரிய பெண்ணொருத்தி
நாயகனே யுலகிலில்லை நங்கையவள் மங்கையையா
நாயகனே யவள்தலையில் நாடுகுழல் தனைவிரித்து
நாயகிதன் னிருவிழியில் நாடிடநீ ரோடிடவே

நாடியவ ளோடியிந்த நரபதியின் பதியேதென்று
நாடியொரு சிலம்பேந்தி நம்மதுரைத் தெருவரவும்
நாடியிங்கே கண்டதென்று நரபதியே கேளின்னமும்
நாடியவுன் பட்டமணி நல்லயானை வீழ்ந்திடவும்

வீழ்ந்திடவுங் கண்டேன்கேள் விண்டோயும் மாளிகையில்
வீழ்ந்திடவு மிடியதனால் மேகமின்ன லில்லையையா
வீழ்ந்தகுழ லவள்பழியாய் விறன்மதுரை நகர்முழுதும்
வீழ்தழல்பற்றி டவும்கண்டேன் வேந்தேயென் றுரைத்தனளே

உரைத்தபெண்ணின் முகம்நோக்கி யுலகாளும் பாண்டியன்றான்
உரைத்திடுவான் கேளணங்கே உலகாளு மரசரெல்லாம்
உரைத்தபடி திறைதருவார் உலகிலென்னோ டெதிர்ப்பவரார்
உரைத்தபகை வர்களைவிண்மே லுறவிடுவேன் எனவுரைத்தான்

வேறு உரைத்தபின்னெழுந் துதயனுதயகிரிமருவ.ஓதுபுகழ்மனைவிமன முற்றறிவுதேற்றி
உரைத்தகுலரத்தினமணி யொளிதழுவுமாளிகையில்.உற்றுநதியுற்றுதய னுற்றசெபமுற்றே
உரைக்கரியநெற்றிதனி லோதுசெபநீறணிந்.ருத்திரமணியாரமுட னோதுபணிபூண்டே
உரைக்கவரிதானவுடை மகிடமொளிவீச.உதயனெனவரசவையில் மருவுமதுசமயம்

அதுசமயமரசன்மணி வாசல்வருமளவில்அரிவையர்கள்புடைமருவு கவரிகளிரட்ட
அதுசமயமரசர்பல ரருகுநிரைவரவே.யானபடைவீரருடை வாளுருவிவரவே
அதுசமயநிரைகொடிகள் குடைகள்பலவெடிகள்.ஆனவட்டம்பேரி யாதிவாத்தியமும்
அதுசமயமஞ்சிகை யடப்பைகோடிகமுட னானரசர்மங்கலமிலங் கலங்காரமாய்

அதுசமயநடனமிடு கணிகையர்கள்முன்னா.யாடலொடுபாடலிசை யாடல்யாழுடனே
அதுசமயமிலகுகவி புலவர்களுமங்கங்.கரசுதிருவழுதி புகளெளுகவிகள்பாட
அதுசமயமந்தணரு மிந்துகோவந்தனம் ஆமோம்சுகானுபவ லோகாதிவாழ்கென
அதுசமயமணிமணியி னிழலொழுகு.புகழ்சிங்காசனமதானமதி லரசுடனிருந்தான்

இருந்தரசர்செங்கோலி னிறைநீதியோத. இயல்வணிகர்மாநாகர் மகளானகண்ணகை
இருந்திடுகொலைக்கள மருந்தெனவிருந்தாய்.இருள்முகிலைநிகர்தனது குழல்களைவிரித்து
இருநிலந்தடவியிடை தோயவருகுழலெல்லாம்.ஏர்மருவுமொருகரத் தொருசிலம்பேந்தி
இருந்தமருவலரை மேலானவானாடு.குடியேற்றவருதுர்க்கை யுருமாறிவருவதுபோல்

வருவாசைவிழிகுவளை மலரூறுநீரிலே.மதயானைதந்தத்தை நிகர்த்தனந்தோய
வருவாசமடைதொங்க லிடைதங்கநடைகொண்டு.மனவேககதிகொண்டு துணிகொண்டுவழியே
வருவாசமலர்கூந்தல் மதியேறியிருபூமி.வருமாறுவழிதோய வழியேகிச்செழியன்
வருவாசலணியாக மனதாருதுணிவோடு.மணிநூபுரத்தோடு வருவள்கண்ணகையே

வருநகரினந்தணர்கள் மறுகைக்கடந்து .மாநிலம்புகழரிய மதுரைநன்னகரில்
வருவணிகர்வீதியுங் காராளர்வீதியும்..மற்றுளவீதியுஞ் சுற்றியேசென்று
வருவார்களிவள்வானில் மாதோவென்றதிசயம்.மருவவிழியொழிமங்க மனதிலிடிதங்க
வருமிரதகசதுரக வாகினிகள்புடைசேர்.மன்னன்மணிமாளிகையில் முன்னம்வந்தனளே

வேறு வந்துநின்று மாறனுடை மாளிகையுஞ் சூழிகையும்
வந்தமணி மண்டபமும் மாமதிலும் பூவெயிலும் (பூவெயில்- புட்பசோலையுள்ளமதில்)
வந்தமணி மதிலுறுப்பும் மாடகூட வீதிகளும்
வந்தகுடை கொடிகவரி வாசல்பல வாசங்கண்டாள்

கண்டாளே மாமதத்தின் கரித்திரளும் பரித்திரளும்
கண்டாளே கோவுறையுங் கடையுறுப்பும் படையுறுப்பும்
கண்டாளே கனகமணிக் காரணமுந் தோரணமுங்
கண்டுமனங் கனலெளவே கண்ணிரண்டும் பொறியெனவே

பொறிபடமுன் மலைதனிலே புகழ்பொறித்த பூழியன்றன்
பொறிமருவு வாசல்பல புதுமைகளைப் பார்த்தரிய
பொறியைநிகர்க் கண்ணகையார் பூழியன்றன் வாசல்நின்று
பொறியழியும் பூழியன்றன் பொதுவீதி யிதுதானோ

இதுதானோ மீனவனா ரேகும்வீதி யிதுதானோ
இதுதானோ பூழியனா ரேறுசபை யிதுதானோ
இதுதானோ தென்வனா ாிருக்குமிட மிதுதானோ
இதுதானோ பாண்டியனார்க் கேர்க்குமிட மிதுதானோ

இதுதானோ ராசசபை யிதுதானோ வாசசபை
இதுதானோ மோட்டுச்சபை இதுதானோ கோட்டுச்சபை
இதுதானோ சிங்காசனம் இதுதானோ சங்காசனம்
இதுதான் சீதேவியிட மினித்தா மூதேவியிடம்

மூதேவித் தட்டானால் முட்டுசெட்டி தன்னைவெட்டி
மூதேவி தன்னைக்குடி முட்டவைத்த பாண்டியனார்
மூதேவியின் வாசலிதோ முறைதவறும் வாசலிதோ
மூதேவிநான் வந்தேனே முடியரசர்க் கபயமென்றாள்

அபயமென்று வாசல்நின்ற வாரியனைப் பார்த்துரைப்பான்
அபயவாசல் மருவிநின்ற வாரியனே வீரியங்கேள்
அபயமென்றோர் தன்னைவெட்டி யரியபழி தன்னைக்கிட்டி
அபயநீதி கெட்டழிந்த வரசர்திரு வாசலிதோ

வாசலிதோ கோவலனை மழுவேற்றும் வாசலிதோ
வாசலிதோ மானபங்க வாசலிதோ மாமதுரை
வாசலிதோ நானொருத்தி வந்தேனுங்க ளரசனடி
வாசமலர் தேடியிப்போ வரவுரைப்பா யெனமொழிந்தாள்

வரவுரைப்பா யாரியனே மன்னனுக்குச் சொல்வதைக்கேள்
வரமருவு மொருசிலம்பை வந்துகள வெடுத்திறந்த
வரவணிகன் மனைவிகள்ளி வந்துமது பதம்பணிய
வரமருவு திருவாசல் வந்தாளென் றுரையுமென்றாள்

உரையுமென்ன வாரியனு முடனடந்து பாண்டியன்றன்
உரைமருவு மிருபாத முடன்வணங்கி யேதுரைப்பான்
உரைமருவு மரசேகேள் ஒருகரத்தில் சிலம்பேந்தி
உரைக்கரிய குழல்குலைத்து மொருகையிலே குழைபிடித்தாள்

குழைபிடித்து மழுதகண்ணீர் குடிஞையெனச் சொரியுதையா
குழைவிழியாள் தனைப்பார்க்கில் கோலமலர் மாமாதோ
குழைவிழியாள் நாமாதோ கூறழகு முடியாதே
குழைவிழியாள் துர்க்கையைப்போற் கோலமணி வாசல்வந்தாள்

வந்தஅவள் கள்ளியுமாம் மணிச்சிலம்பொன் றிங்கெடுக்க
வந்தகள்ளன் வணிகனுடை மனைவியுமா முமதுபதம்
வந்தனைசெய் திடவந்ததாம் மாதிதுசொன் னாளெனவே
வந்தனைசெய் யாரியனும் மன்னனிடஞ் சொன்னானே

சொன்னளவில் மீனவன்றான் சொல்லுவா னாரியனே
சொர்னச்சிலம் பெடுத்ததென்று சொன்னவன் தட்டானல்லவோ
சொன்னபடி தீர்த்தேநான் தோகையரின் சிலம்பிதென்றால்
சொன்னபடி கொடுத்திடுவேன் தோகையையிங் கழையுமென்றான்

அழையுமென்ன வாரியனு மாரமணி வாசல்வந்து
அழைமருவு மரியெனவே யாங்குநின்ற வரிவையைப்பார்த்
அழைகுழையின் விழிமருவு மாரணங்கே பாண்டியனார்
அழைமருவு சிலம்புதர அழைத்துவரச் சொன்னார்காண்

வேறு சொன்னாரெனச்சொன்ன சொற்கேட்டகண்ணகை.தூறாகமாறுரைத்திட வவன்சொல்வான்
சொன்னதைக்கேள்வேலை தனில்வேலெறிந்தவன்.துங்கதலமேழுமோ ரடியாலளந்தவன்
சொன்னமதகயமுதலை யாலழிவுறாமலே.துதிசெய்யவந்துதவு மதமுற்றகோமான்
சொன்னரிவையாயரற் கொருபாகமுற்றவன்.துங்கதலமாழுமுறை யிங்குமிவனரசே

இங்குலகமோர்முறையி லுண்டேயுமிழ்ந்தவன்.இரணியனையொருதூணி லுடல்பிளந்திட்டவன்
இங்குடையிருந்துயர் குருந்தேறுகாரணன்.ஏர்கொள்மகராலயந் தனிலேதுயின்றவன்
இங்குலவமழைபொழியு மெழுமுகிலெடுத்தவன்.அருதேழடர்ந்துபடி யஞ்சாதுகாத்தவன்
இங்குலகைமுலையமிர்த முடனுயிர்குடித்தவற்.றேற்றபுகழறுவழுதி யருளில்வருவாயே

வேலையேவு வேலைமேவுமீனவன் வெற்பிலேபுகள் வைத்தவன்
சாலவேகுலி சாயுதன்முடி தன்னிலேவளை விட்டவன்
காலமாமுகி லஞ்சவேபுவி காணவேவிலங் கிட்டவன்
ஆலவேவிழி மாதரேயுனை யருளினான்வரை வருளினாலரோ

வரவருளினான் மாதேநீயினி மனதினோங்கிய கவலைநீங்கியே
வருமதிகுலாதீப நீதியின் மருவுமார்புனை யரசரேர்சபை
வரவுகூறிநீ யருகிலேறியே மன்னர்மன்னனை மன்னுவாயினி
வருசிலம்புனக் காகுநீயினி வருகுவாயவ ரருளினாரென்றான்

அருளிப்பாடென வவனுரைசெய்திடும் அளவிற்கண்ணகை யார்மொழிவாள்
பொருளிற்பலநல வணிகனைவதைசெய்த பூழியனாருரை வேறிலையோ
அருளிற்றாவிய மதுரையுமெரிசெய் தரசனையும் பழிகொண்டிடுவேன்
பொருளிற்சூதனை மருளுறுமரிதனைப் பூழியனைத்திரு வாசலிலழையாய்

வாசலிலழையென வானுதலுரைசெய வாசலிலாரிய னேதுசொல்வான்
வாசனைவாரிச வயனரியடிமுடி வாதொடுதேடரி தாமரர்முடிமேல்
வாசமதாயொளி வீசியமதிகுல மன்னனையும்முன் மன்னெனவே
வாசகமிட்டனை பொருபடையுடனே மாறமர்செய்திட வந்தனையோ

வந்தனையோவென வாரியனுரைசெய் மாதுடனோதுவனே துரையே
வந்தரவின்மணி தந்திடுவணிகனின் மாகொலையாகிய மாப்படையும்
வந்திளமதிநுதல் மாதெவிமூதெவி வாழ்விழிதந்த மதன்படையும்
வந்துனதரசனின் மாமதில்கோபுர மதுரையில்வந்து வளைந்தனவே

வளைந்ததுகாணென வாரியனேகியே மன்னவனைத்தொழு தென்னவனே
வளைந்திடுமதில் திருவாசலில்வந்திடும் மாதினையுனதருள் வழிமொழிய
வளைந்திடுசங்கிடு கங்கணமங்கையின் மாறுரையேதெனில் மாதெவியின்
வளைந்திடுபடைகளும் வணிகரின்படைகளும் வந்ததுவாமரசே பொருதிடவே

வேறு பொரவரிய பூழியனே பொன்னனையாள் சொன்னமொழி
பொருதுவென்று போவெனென்று புகலுகிறாள் பழியுமின்றே
பொருவிழியாள் நிற்குமிடம் போரரசே யுனைவரட்டாம்
பொரவரிய சயமகளோ பொற்கொடியென் றோதினனே

ஓதவுல காள்மாறன் உற்றறிந்து உலகாட்சி
ஓதரிய பேதையினா லொழிவதுவு மெளிமையிதே
ஓதிமுடி யாதவள்தா னுற்றவாசல் லெங்கேயென்று
ஓதிமணி யாசனம்விட் டுடனிறங்கி வருவானே

வருவானே சவைகுலைந்து வருமளவி லரசர்பலர்
வருவாரே மாமருங்கு வாத்தியமங்கல முழங்க
வருமமிர்த சாகரத்தின் மலர்விழிக டுயில்மருவி
வருகரிய முகிலெனவே வாகனந்தேர் சிவிகைவிட்டே

வாகனந்தேர் சிவிகைவிட்டு மன்னன்மிதி யடியுடனே
வாகான கணிகையர்கள் மருவுகவரி களிரட்
வாகான கொடிகுடையும் வாத்தியமு மார்ப்பரிக்க
வாகான முடியரசன் மணிவாசல் வந்தனனே

வந்துமணி யாசனத்தின் மருவியிருந் திட்டரசன்
வந்தசெட்டி பெண்ணையிங்கே வரவுரையு மெனவுரைக்க
வந்தவொரு தூதுவன்போய் மன்னன்மணி வாசல்வந்தான்
வந்திடுவீர் மங்கையென்ன மங்கையுமங் கேகுவளே

ஏகுமங்கை யிடையிரதம் யானைநடை புரவிமுலை
ஏகிவிழிப் படைபுருவ மென்னும்வில்லு முடன்வேகம்
ஏகுசேனையுடன் மதுரை ராசனுட னமர்க்கோலத்
தேகுமொரு சக்கரமா மிலங்குசிலம் போடடைந்தாள்

அடைந்ததுன்ப முடன்மதியா மானதொரு முகம்வாட
அடைந்தகுழல் நிலஞ்சோர யடிபடியி னிடமாட
அடைந்தகரச் சிலம்புடனே ஆயிழையாள் படிகடந்து
அடைந்தபொழு தரசன்முகத் தழகளிந்தும் பொலிவிழந்தான்

பொலிவிழந்த வரசன்முன்னே பொற்கொடியாள் வந்தவிதம்
பொலிவிழக்கு மயிடன்முன்னாய்ப் போனதுர்க்கைக் கிணையாமே
பொலிவுசிலம் பேந்தியகைப் பொன்னனையாள் போனவுடன்
பொலிவிழந்த மூதேவியும் போனாளே வாசலிலே

வாசல்வந்த கண்ணகையார் மாறன்முன்னே மருவுசபை
வாசலினின் றந்தணர்க்கும் மாமுடியி னரசருக்கும்
வாசநிதி வணிகருக்கும் வந்தவறுமைகள் களைந்து
வாசலாப தானம்நல்கி வருமுழவர்க் கபயமென்றாள்

என்றவுடன் பாண்டியனும் ராசராச ரெல்லோரும்
என்றுமில்லா தீதெனவே யெண்ணிநண்ணக் கண்ணகையார்
என்றுமினி ராசர்களுகக் கேற்றபடி வணக்கமென்று
என்றுமுடி ராசனது எழின்முகமுன் சொல்லுவளே

வேறு

சொல்லரியமன்னவர் குலத்தவதரித்து.தொல்லையுலகங்காவல் கொண்டுமுடிவைத்து
சொல்லுமனுநீதியி நடப்பதுதவிர்த்தே.சுத்தியலிலைக்குறடு தொட்டகரமட்டிச்
சொல்லரியபொன்திருடு தட்டானுங்கிட்டிச் சூதுகொடுசொன்னபடி யோசனையில்லாமல்
சொல்வணிகரெனது மணவாளனைவதைத்த.சொல்மதுரைமன்ன னிவனோவெனவுரைத்தாள்

உரைத்தபொன்னிறுத்திடை யறிந்ததனைவிற்றும் ஊதிபமெடுத்துரக பூழ்சனம்விரும்பும்
அரத்தமலர்மேனியார் பதந்தொழுதுமன்பி னுடனானகுருபூசை முதலானவசிகரமெலாம்
திருத்தமுடனேமிக வழங்குவணிகேசனைச் செம்பொற்.சிலம் பெடுத்திடுதிருடனென்றே
வருத்தமுறமழுவால் வதைத்தெமதுவாழ்வினைகள் வருவித்தமாறனிவனோ வெனமொழிந்தாள்

மொழிந்தவணிகேசர் குலமானைமுகநோக்கி முத்தமிழ்தெளிந்தமுடி மன்னவனுரைப்பான்
மொழிந்தபடிநன்றுபடி முடியரசமருவலரை முன்னுமுன்வானேற வேலேவுமென்முன்
மொழிந்தக்தைநன்றுநீ பேதையாதலினால் மோசமதியாதபடி நானிதுபொறுத்தேன்
மொழிந்திடுகவுனது குலமரபும்வருமுறையும் மோசமில்லாதூரு நாமறியவினியே

நாமறிவெனராச ராசனுரைபோது நடுநீதிபடியூடு முடிமன்னரிடமாய்
நாமறியவென்றுநீ நன்மையொடுரைத்தாய் நரபதிகளுனதருகு பொருவிழிகளெதிரே
நாமறியுமாறுசில கூறுவதுநீகேள் நாராயணன்காவ லானவுலகிதனில்
நாமமிகவானுலக மேவுமாதவர்குல நாயகன்வியாக்கிரம படதுவசனூரே

வேறு

ஊரேதெனுமன்ன வனேயுலகம் உவரிகடலா லுணர்வற்றிடவே
சீரார்குழையார் விழியாரிரவின் திருமுன்சென்றே செந்நெற்கதிரை
தாராயெனு விந்திரனுமறியத் தந்தோமெனவே தரியாதருளால்
வாராருலகுக் கன்னம்பகரும் வன்னத்திரு நாடெம்மூரே

எம்மூரரசன்மக னன்றொருநாள் ளேறியதேர் மறுகேவரவே
அம்மாவின்கன் றொன்றதனிடையோன் றாளக்கிடைபுக் கலறிப்படவே
ஏம்மாயுமைவாம மெழுந்தருளும் ஈசன்பழிசோதனை யென்றறிய
அம்மைந்தனை நொந்தரசாள் சோழன்ஆழும் புகார்காணெம்மூரே

வேறு

புகாரினுற்ற புதுமையிற்சில் புகன்றிடுவே நீகேளாய்
புகாரினுற்ற பெண்மயக்கம் பூண்டுநின்ற காமுகரைப்
புகர்மதன்பூ வாழியினாற் போர்புரிந்தங் குறுவதல்லால்
புகாரொருவ ரிரந்துமனை புகுந்திடவு மிரப்பில்லையே

இல்லையென்ற மொழியுரைக்கி லியல்வளவ னெம்மூரில்
இல்லினுற்ற மங்கைகொங்கைக் கிழைப்பதுவும் மார்பிலது
இல்லெனவே விழுவதுவு மேற்பவரூ டாடுவது
இல்லையென்ற பொய்யாகும் இதுவொழிந்தங் கிழைப்பில்லையே

அங்குமலர் பறிப்பதுவும் அரனடியைக் குறிப்பதுவும்
அங்கரம்பை தறிப்பதுவும் ஆற்றிடைநீர் மறிப்பதுவும்
அங்கடியார்க் கருமகவை யறுப்துவும் முறைதவறா
அங்கரிய புதுமைகளை யறைந்திடவும் முடியாதே

முடியாது பொன்னிநகர் முறையாழுஞ் சோழரசன்
முடியரசர்க் கறம்பயிற்றும் முற்றமொரு முற்றமல்ல
முடியாது கன்மவினை மூடாது மதிமயக்கம்
முடியாது மனுநீதி முறைநிதியுங் குறையாதே

வேறு

குறையாதுதிங்கண் மும்மாரிஇ குறையாதுசெந் நெல்லின்குன்றம்
குறையாதுசெங் கோல்வழக்கம் குன்றாதுநன் நீதிமன்றம்
குறையாதுநற் கீததாளம் குன்றாதுமறை நூலின்கோஷம்
குறையாதுமுத் தீனுநத்துக் குன்றாதுபொன்னி நம்மூரே

நம்மூரினஞ் சொல்லக்கேளாய் நாளேழு பூவுந்தடுத்தே
நம்மானில் மலையைத்திரித்தே நல்வல்லியக் கொடிபொறித்தே
நம்மாபரி யிரதமேறி நள்ளார்கள் சேனையைத்தூறி
நம்மாகை யாயிரங்கொண்ட நரபதியினூர் காணுமெம்மூரே

காணுங்கரும் பிரசசொல்லார் கடிமனைதிறந்து சோதிக்க
காணும்மதி முகத்தழகாள் கதையுரைத் தையகோவென்னக்
காணுதமிழ் மனுநூலுமாகிக் கதிக்கவேதன் கையின்விரலைக்
காணநற்கத்தி யாற்கொத்திக் கண்டசோழன் புகார்காணே

காணுமதிக் குலமன்னா கருமமுற்றறி யாததென்னா
காணுஞ்சிவ னருளுலகக் காவலுங்கைப் பாகநிலவக்
காணுமுகில் போற்கொடுக்குங் கைச்செட்டிதன்னைத் தடிந்தாய்
காணுமரச ரிற்பழியைக் கண்டநீ பாண்டியன்காணே

வேறு

பாண்டியனே பழியிதென்று பைந்தொடியு முரைத்தளவிற்
பாண்டியனு மேதுரைப்பான் பைந்தொடியே சோழநகர்ப்
பாண்டிலூரும் வீதிநல்ல பழனமுநா னறிவேன்காண்
பாண்டியற்குன் குலத்தைமுற்றாப் பகர்ந்திடெனப் பகர்ந்தனனே

பகர்ந்திடெனப் பைங்கொடியாள் பாண்டியனே கேட்டிருநீ
பகருவிலை மாதெவிக்கு பாரநிதிகளைத் தோற்று
பகருமுன்றன் மனையிலிட்ட பாதச்சிலம் பினைத்திருடிப்
பகரரிய வுயிரிழந்த பார்வணிக னென்கணவன்

என்கணவன் குலமுமினி யென்குலமு நீகேளாய்
என்சொல்லுவேன் வள்ளல்நிகர் ஏற்றவணிகற் றிலகன்
தென்தமிழின் முனிநிகரான் றேசுலவு மாசாத்தர்
தென்னரிகள் முரலிதழித் தேவினருளோடு பெற்றோன்

பெற்றமகன் கோவலன்காண் பேசினேன்கே ளெனதுதந்தை
உற்றசிர முடியிலணி யொளிமணியை நிகரான்காண்
நற்கலைக ளோதவல்ல நாவினன்கா ணிரப்பவர்கட்குப்
பற்றுடனல் மணிகளள்ளிப் பாரின்மிகக் கொடுப்பவன்காண்

கானாய்நீ யறுகரவு கங்கைமதி விதிசிரமும்
காணுசடை முடிபுனைந்த கங்காளாரருள் புனைந்தோன்
காணுமவர் நேசனுமாய்க் கண்டவன்முன் னிவ்வுலகில்
காணவடி வுடையவனாய்க் காவிரியினகர்ப் பிறந்தான்

பிறந்தவன் சீரகத்தாரான் பெரியமத னழகுடையான்
பிறந்திடும்பேர் மாநாகர் பெற்றமகள் நானாகப்
பிறந்தரவின் மணிச்சிலம்பு பெற்றவளும் நான்காணும்
பிறந்தகுல மிதுவெனவே பேசினளாங் கண்ணகையே

கண்ணகை யிவ்வாறுரைக்க கருதரிய பாண்டியனும்
கண்ணகையே யரவின்மணிக் காற்சிலம்பிற் கண்டதென்ன
கண்ணகைக்கு மொழிமணியைக் கண்டதென்ன கேட்டதென்ன
கண்ணரசர் முன்பிதனைக் கழற்றிடுநீ யெனவுரைத்தான்

உரைத்தவுடன் கண்ணகையு மோகோகோ மணிச்சிலம்பை
உரைக்கு முன்றன்றேவிபத முற்றசிலம் பிதுவெனவே
உரைக்கரிய வுமியோட்டி லுறுங்கனக மெடுத்துத்தட்டான்
உரைக்கவுயிர் வதைத்தனையே யுனக்கிதுவு மோதுவனே

வேறு

ஓதுவெனேயுலகாளும் ராசராசர்களே யுறுவழுதிதுரைமொழியு மெனதுரையுமேற்பீர்
ஓதுபுகழ்மாசாத்தர் மாநாகரிருவரும் ஓதரியகோவலர் தனக்குமெனக்கும்
ஊதுபுகள்மணவுறவு நாளானசமயமே ஓதுகலைவேதியரை யுடனங்கழைத்து
ஓதுவீரிவர்க்குமண நாளெனவுரைக்கவவர் உரகமணிபரிபுரமு முடன்வேணுமென்றார்

என்றவருரைத்து மணநாளுறவுரைத்தும் எந்தையைப்பார்த்து மாநாகரேகேளும்
நன்றுமதுமகளுக்கு நாகமணிபூணும் நாளெதுவினா லிலங்காபுரித்தீவிலே
துன்றுபடமைந்து தலைநாகராசனிடம் சோர்கிலாதொருவீர ராசனைவிடுத்து
நன்றுமணிவாங்கி யொருபரிபுரமமைத்து நன்மணமுடிக்குநாள் திண்ணமென்றனரே

திண்ணமிதுவாகுமென வேதியருரைப்பத் திறன்மருவுமாநாகர் சோழனைத்தொழுது
மண்ணுலகையாளவரு மன்னவர்தம்மன்னா வாவுபரிமீதுவரு வழவர்களினேறே
கண்ணகைதனைக் கோவலன்கைப்பிடிக்கக் கடியவிடவரவின்மணி வரவருளல்வேணும்
விண்ணவர்தம்மாலு முடியாதவெகுமதிதான் வேந்தனேதந்தருளும் விண்ணப்பமென்றார்

விண்ணப்பமென்றுதொழு மாநாகருக்கரசன் விடையாகுமென்று மீகாமனையழைத்து
பன்னொப்பிலாததொரு மங்கைபங்காளனைப் பரவியேபரவைதனி லரியபடவோட்டி
மண்ணிலொப்பில்லாத மாநாகர்மகளுக்கு வதுவைசெயவரவின்மணி வரவேணுநீபோய்
என்னொப்பிலாநாக ராசனடிதொழுதே யிந்தமணிவாங்கிவந் தீகெனவுரைத்தான்

உரைத்தளவில்மீகாம நரசனைத்தொழுதே உற்றவிடைபெற்றுவர மாநாகர்சொல்வார்
உரைக்கரியகடல்வார முறுசோலைநாடனே ஓதுபுகழ்வேதமுனி யொத்தமாமாயனே
உரைக்கரியமணமாலை கண்ணகைக்கின்நா ளுற்றபடிமுடியநீ யுற்றதுணையென்றே
உரைத்துமீகாமன் கரம்பிடித்துறவுகொண் டுரகமணிதருகுவா யரசனேயென்றார்

என்றபொழுதன்றுமீ காமனுமுறவுகொண் டேகியேபடவுவிட் டேகியேகடலில்
அன்றுதடைசெய்த வெடியரசனைக்கட்டி அவனுடைதம்பி நாரணணைமுடிவெட்டி
சென்றுதீவின்நாக ராசனைத்தொழுது செய்யமணிவாங்கியே யையமறமீண்டு
நன்றுபடவோடியிக் கரையிலேவந்து மாநாகரையழைத்து மணிதானளித்தானே

வேறு

அளித்தவந்த வருணமக ராசனாமீ காமனுக்கு
அளியுடனென் னையர்பல வானவரிசை களுதவி
அளியுடனே விடுத்துமணி யதனிலொரு சிலம்புசெய்து
அளியுடனே கோவலரை யெனக்கானமணம் முடித்தனரே

மணம்முடித்து நாலாநாள் மாதேவியின் கூட்டமுற்று
மணவாளன் பொருள்தோற்று மணிச்சிலம்பை விற்கவந்தார்
மணிபணித் தட்டான்மயக்கி வந்துனது சிலம்பெனவே
மணிபுனையு மார்பாநீ வன்கொலை செய்தாய்போடா

போடா நீபொற்சிலம்பைப் பொன்செய்கொல்ல னிடம்கொடுக்க
போடா தட்டான்திருத்திப் புதியசுவ ருலரவைக்கப்
போடா தட்டான்மகனோர் பொற்கருடன் குஞ்சைக்கொல்லப்
போட அக்கருடனந்தப் பொற்சிலம்பை யெடுத்ததெடா

ஏடா தட்டான்தேடி யில்லாம லிச்சிலம்பை
ஏடா கோவலனிடத்தி லிங்குவிற்றுத் தாறோமென்று
ஏடா வுன்னிடந்தரநீ எழிற்சிலம்பை யெடுத்துக்கொண்டும்
ஏடா வென்கோவலனை யேகவிட்டா யில்லையெடா

விட்டிலங்கு தரளமணி விளங்குசெம்பொன் நாகமணி
விட்டிலங்கக் கொண்டுவிற்கும் விறல்வணிகன் றனையுடனே
செட்டியுடை மாலைமுடி திருமுகமுங் கண்டவுடன்
செட்டியென்று மதியாத சீரழியுந் தென்னவனே

தென்னவனே பாராளுஞ் செம்பொன்முடி மன்னர்முன்னே
தன்னருகு பழிபாவம் தங்குகொலை யடையாமல்
தென்கலையில் வடகலையில் செய்தபல கலைப்பயனை
தென்னவனே கூடல்மன்னா தேடியறிந் தாயல்லடா

அல்லற்பட் டாற்றாதா ரழுதகண்ணீர் கொடியவரின்
அல்லலுற்ற செல்வமெல்லா மழிக்குமென்று பலவேதம்
அல்லலுறச் சொன்னதுவும் ஆய்ந்ததிரு வள்ளுவர்முன்
அலல்லறச் சொல்நூலும் அறிந்திலையோ பூழியனே

பூழியனே முடிபுனைந்த பூபால ராயிருப்போர்
பூழியுலகத்தில் மனுப் போதவரம் பினையழிக்கில்
பூழியனே யென்செய்யலாம் பூதலத்தை வளைந்துநிற்கும்
ஆழியுலகினை யழிக்கில் ஆராலும் விலக்கரிதே

அரிமருவுந் தொடைமருவு மரசரென்று படிபுரப்போ
அரியபகை செயநினைந்தா லார்தடுக்க வல்லவர்சொல்
அரிமகுட படஞ்சுமந்த அவனிதன்னை மூடிநின்ற
அரிவழியாம் வெளிவிழுந்தா லாற்றுவதார் கைதவனே

கைதவனே பாலகரைக் கையணைத்துக் களிகூர்ந்து
கையணைத்துப் பாலூட்டி காத்திருந்து போற்றாமல்
கையணைக்கும் மாதாத்தான் கடிந்துவினை செயநினைந்தால்
கைக்குழந்தை யுய்யுமோடா காரிடிக்கோ ரோலமெடா

ஓலமென வந்துலகி னொருகரியி னிடர்களைந்த
மாலைநிகர் மன்னவனே மதிகுலத்திற் தென்னவனே
காலிகளு மிருகங்களுங் கள்ளரும்புங் கிள்ளைகளும்
வேலிபயிர்தனை யழிக்கில் விழையுமோடா மீனவனே

விழையுமொடா வெனவுரைத்த மெல்லியலைத் தான்பார்த்து
வளையெறிந்த புகழ்புனைந்த மாறனுமங் கேதுரைப்பான்
பழையநீரி னிடைவளரும் பைங்கூழை வருத்துகின்ற
கழைகளைய வேணுமென்ற கட்டுரையால் வெட்டுவித்தேன்

கட்டுவீட்டி னுட்புகுந்தென் காதலிதன் காற்சிலம்பை
தொட்டகள்வன் தன்னையிரு துண்டமுறக் கொல்லாமல்
மட்டுமதி யில்லாத மங்கைநீயென் சொன்னாலும்
செட்டியல்ல வானுலகிற் தேவரெனில் விடுவேனோ

விடுவேனோ வெனவுரைக்க மெல்லியலு மேதுசொல்வாள்
வடுவாக மணிச்சிலம்புன் மாளிகையிற் புகுந்தெடுக்க
விடுவாரோ காவலர்கள் மீனவனே யுன்வீடு
சுடுகாடோ வரசர்முன்னே சொல்லாயென் றிடச்சொல்வனே

சொல்லுமெந்தன் பரிபுரத்திற் சுரித்தகம்பி முறிந்ததனால்
சொல்லுதட்டா னிடந்திருத்த தோகைசிலம் பினைக்கொடுக்கச்
சொல்லுசிலம் பினைத்திருத்தி சுவரில்வைக்க வணிகன்வந்து
சொல்லொடுங்க முன்திருடித் தூரமிகப் போய்க்கூறி

கூறிவிலை சொலும்வழியில் சொர்னத்தட்டான் போய்ப்பிடித்து
கூறியிந்தச் சவையிடமாய் கொண்டுவந்தென் முன்விடவே
கூறிவழக் கினிற்றெழிந்து கோவலனே கள்வனென்று
கூறியவன் பிழைக்குரிய கொலைபுரிந்தே னெனவுரைக்க

உரைக்குமிந்தத் தட்டானு முன்சிலம்பை மறைவுபண்ணி
உரைக்குமிந்தச் சிலம்புவிற்கு முயர்வணிகன் தனைப்பிடித்து
உரைக்குமுன்னுன் சவையில்விட்டு ஓகோவிவன் கள்வனென்றே
உரைத்திடநீ பிளந்திடுதல் உலகநீதிக் கேற்பதுவோ

ஏற்பதுவோ வெனுமளவில் ராசனுமங் கீதுரைப்பான்
ஏற்குமாறு முன்னாளி லிணைச்சிலம்பு தனைச்சமைத்தோன்
ஏற்றெடுத்து மறைப்பானோ யீதிலொரு வழக்குமில்லை
ஏற்றசவை யரசரிதை யேற்றிடுவா ரோபோடி

போடியென்றாய் சவையகத்தே பொன்செய்கொல்லன் நல்லனென்றாய்
வாடிவந்த வணிகனிவன் மாறுனக்குச் செய்வனென்றான்
தேடியிங்கு சொன்னவரார் தெரியவெனக் குரையெனவே
ஏடிபெண்ணே தட்டான்சொல் ஏராதோசவையி லென்றான்

சவையிலொரு வனைத்தனியே தந்தரமாய்க் கொண்டுவந்து
இவன்சோரன் கொல்லுமென்றால் ராசரென்றா லுடன்கொல்வரோ
அவன்சிலம்பை யெடுத்ததற்கோ ரானசாட்சி கேட்டாயோ
இவன்பழி சொல்லிடமுடிக்க ஞாயமென்ன மீனவனே

மீனவனே யென்றிடவவ் மீனவனு மேதுரைப்பான்
மீன்விழியே யென்மனையாள் மின்சிலம்பு தன்சிலம்பாய்
மேன்மொழிந்தா ளன்னபடி விட்டேனே யெனவுரைக்க
மீன்விழிக் கண்ணகைமொழிவாள் வேந்தேயுன் மனைவிசொன்ன

சொன்னவார்த்தை யுனக்குரைத்த தோழியரார் சொல்லுமென்ன
அன்னதட்டா னிடம்சிலம்பை யனுப்பவவள் தனதெனவே
சொன்னமொழி யவனுரைத்தான் தோகையொரு சாட்சியல்லோ
அன்னபடி விடுத்தேனே யாயிழையே சரியல்லவோ

சரியுனது பெண்ணிடத்தே தட்டானை விட்டதுபோல்
சரியான நீதியந்தத் தாரணியி லுண்டோடா
சரியுனது மனைவிசொன்ன சாட்சியைநீ யறிவையோடா
சரியெனிற் கோவலன்சொன்னது தானுனக்குத் தெரியவில்லை

தெரியவில்லை மற்றதெல்லாந் தெரியுமொடா மடைப்பயலே
தெரியுமிந்த எதிரியைநீ சிறைப்படுத்திச் சாட்சியைநீ
தெரியவிளங் காமலுன்றன் செயிழையாள் சொன்னதையும்
தெரிகரித் தட்டானிடத்திற், செப்பிடக்கேட் டறிந்தனென்றாய்

அறிந்தவிந்த மணிச்சிலம்புக் கணைச்சிலம்புன் மனைவியிடம்
சிறந்திருக்கு மதைவாங்கித் தீர்ப்பதுனக் கேராதோ
சிறந்தரவின் மணிச்சிலம்பு தெரியுமல்லோ வெவர்களுக்கும்
மறந்தாயுன் மதிவிழியும் மழுங்கினது மதிசயந்தான்

தானமுற்ற வணிகர்சொன்ன தப்பிதத்தை நீயறியில்
மானமுற்ற மணிச்சிலம்பை மனைவிசிலம் போடடுத்து
ஆனதிது சரியலதென் றாய்ந்தாயு மில்லையேநீ
மானமறக் கடிமைசெய்து வைத்தாயே மீனவனே

மீனவனே யுன்மனதில் வீரியமொன் றுண்டதெனில்
நானரசன் நினைத்தபடி நாடாமு வேனிதனை
நானிருக்க வேறொருவர் நாடாழ வருகுவரோ
நானெனவோ ராணவத்தை நம்பினது நாசமெடா

நாசமெடா வணிகேசர் நற்சிலம்பை யெடுத்ததென்று
நாசகனே சாட்சியுடன் நாட்டினியேல் விடுவேனான்
நாசமாகக் கொலைப்பழியாய் நாட்டிவைத்தா யானதினால்
நாசகிநா னுன்னிடத்தில் நாட்டிடுவேன் வினைகளென்றாள்

வினைகளின்று நீயுரைக்க மெல்லியலென்றே பொறுத்தேன்
வினையாக வெழுமுகிலை மேதினியிற் சிறையிலிட்டேன்
வினையாக கடல்மேலே வேலெறிந்து மீளவிட்டேன்
வினையான வெனதுதிறம் மேதினியு மறியாதோ

அறியாதோ மலைதனிலே யானபுகழ் பொறித்தேனான்
அறியாயோ சங்கரனா ரன்றுபரி கொண்டுவர
அறியாயோ பட்டாலே யவர்சடையி லெறிந்துவிட்டே
அறியாயோ விந்திரன்றான் அணிமுடியி வளையெறிந்தேன்

எறிந்தேனா னென்னவவ் னேந்திழையு மீதுரைப்பாள்
எறிந்தாயோ மன்னவனே ராசரெல்லா முன்னுடனே
எறிந்துபடை பொரவரினு யானவரின் முடிதுணித்து
எறிந்துனையு மிம்மதுரைக் கெரியிடுவேன் மீனவனே

மீனவனே யென்றுரைக்க மீனவனு மேதுரைப்பான்
மீன்விழியாள் தானொருத்தி மேவியிந்தச் சவையகத்தில்
மீனவனே யென்றுமிகை மீறிமிகப் பேசுகிறாள்
மீன்கொடியின் றிவளிடையாய் மேவினது போலுமினி

இனியறிவே னென்றுரைக்க யேந்திழையா ரேதுசொல்வார்
இனியெனது கணவன்வரு மேதுமுண்டோ ராசர்களே
இனியசிலம் பெடுத்ததென்றா லிருஞ்சிறையி லிட்டுவைத்து
இனியநீதி யோதாம லிருங்கொலையைப் புரிந்தானே

கொலைபடுமென் நாயகனைக் கொன்றதுவு மன்றியிப்போ
கொலைமனது கொண்டெனையுங் கொல்லவினி யறிவேனென்றான்
கொலைபுரியக் குடலுருவக் கொடுமுடிகள் படையிடற
கொலைபுரியு நேரமது குறுகினது அறியறிநீ

அறியறிநீ பாண்டியனே யன்நேரமாகு மெல்லாம்
அறியறியிவ் வரசர்முன்னே யரவின்மணிப் பரிபுரத்தை
அறிவிலுன்றன் மனைவிதன தானசிலம் பென்றுசொன்னால்
அறிசபையில் வழக்கிழந்து அரியசிறைக் காளாவேன்

ஆழாவே னல்லாதுன் னருமதுரை நகர்முழுதும்
மாழவிப்போ காண்டாவனம் மாண்டதுபோல் மாட்டிலனேல்
வாழ்வணிகர் மாநாகர் மகழுமல்லேன் புகழுமில்லேன்
ஈழமதிற் பெண்ணுமல்லேன் என்மார்பில் முலையுமில்லேன்

முலைகுறித்துக் கண்ணகையார் மொழிந்தபழிச் சாபமதை
அலைகுறித்து வேலெறிந்த வரசனுனா னங்குநின்ற
முலைகுறித்த வண்ணமகள் தன்னைமுன்னாய்த் தானழைத்து
சிலைகுறித்த மன்னவனுஞ் செப்பிடுவான் சேயிழையே

சேயிழையே யிச்சிலம்பைத் தேவிசிலம் பென்றுசொன்னால்
சேயிழையாள் வழக்கிளந்து செல்லுவேனே யென்றுரைத்தாள்
சேயிழையே நீயெனது தேவியிடஞ் சென்றுமிப்போ
சேயொழிசே ரிச்சிலம்பின் செய்திசொல்லிச் சேயிழையே

இழைபொருந்து மென்மனைவி யிட்டமுறைப் பாடுகொண்டு
இழைபொருந்து மாயிழையே யிங்குவரு வாயெனவே
இழையொழிசே ரிரத்னமுடி ராசனுரைத் திட்டவுடன்
இழைபொருந்தும் வண்ணமகள் ராசனடி போற்றிவிடை

விடையுடனே பெற்றவளு மீனவனார் தேவிதிரு
விடைபுரியுங் கோவிலிலே மேவிடும்போ தங்குபலர்
விடையுடனே பணிபுரிய மீனவனார் தேவியரி
விடைசுமந்த வாசனத்தில் வீற்றிருக்கும் வேளையிலே

வேளையிலே வண்ணமகள் மேவியந்தத் தேவிபதம்
வேளையிலே தெண்டனிட்டு மெய்யொதுங்கிக் கைகுவித்து
வேளைவென்ற ராசர்ராசன் மெய்த்துணையே பத்தினியே
வேளையில்யா னோதுவதை வேளையில்நீர் கேளுமென்றே

கேளுமம்மா சிலம்பெடுத்துக் கெட்டகள்வன் செட்டியுடை
கேளான பெண்ணினுக்கும் கேளுமது நாயகற்கும்
கேளான பொழுதுதித்துக் கிட்டுமிந்த நேரமட்டும்
கேளான சிலம்பின்முறைக் கேள்விவழக் கானதம்மா

ஆனதினாற் பாண்டியனை யரசர்தங்கள் பெருமாளை
ஆனபங்க மிகமொழிந்து அரிவையவள் விரைவாக
ஆனமது ராபுரியை யக்கினியிட் டரசனுடன்
ஆனபழி வேளையிலே யாக்குவேன்நான் திண்ணமென்றாள்

திண்ணமென்று வண்ணமகள் செப்புமொழி கேட்டவுடன்
கண்ணிரண்டிற் புனலோடக் காதலியுங் கைநெரித்து
மண்ணுலகை யாண்டிருக்கு மாறனென்றன் மன்னனுக்கு
எண்ணமின்றி வந்தவினைக் கேதுசெய்வே னென்றழுதாள்

என்றழுது மாரணங்கு மேதுரைப்பாள் நூற்றுவர்க்கும்
அன்றுபஞ்ச பாண்டவர்க்கும் மருவினைசெய் சகுனியைப்போல்
நின்றுபொன்செய் கொல்லன்செய்த நிட்டூரந் தொட்டதினால்
இன்றெமது ராச்சியமும் இற்றுவினை யுற்றதென்றாள்

உற்றதென்றே தேவியழ வோதுவளே வண்ணமகள்
கற்றூணைச் சிதலரித்துக் கடனீரைக் குடித்தாலும்
வெற்றிபுனை மன்னனுக்கும் வினைவருமோ வெனவுரைக்க
கற்புடைய தேவிசொல்வாள் காரிகையே யிவ்வுலகில்

இவ்வுலகி னல்லகற்பா மேந்திளையார் சொல்வசனம்
இவ்வுலகைத் தந்தமல ரிறையவனும் விலக்கரிதே
இவ்வுலகை யாண்டிருந்த ராகவன்றன் ஏந்திளையை
இவ்வுலகி லிராவணன்சென் றேந்திழையைத் தானெடுத்தான்

தானெடுத்து பழிமொழியத் தையல்சொன்ன சாபமதால்
யானசேனை நகரமவன் அன்றழிந்த தறிந்திலையோ
தேன்மொழியே யென்னவவள் செப்பிடுவாள் பத்தினியே
தென்மதுரைச் சொக்கரருள் செய்குவரே யுய்யவழி

உய்யவழி செய்வரம்மா யோசனையேன் கோவலனை
வையகத்தில் வதைத்தவழி மணிச்சிலம்பை யுள்ளபடி
உய்யும்வழி யோசனையா யுன்னுடையதென்று சொன்னால்
வையகத்திற் கண்ணகையும் வழக்கிளந்து போவெனென்றாள்

வழக்கிளந்து கண்ணகையார் வழிவழியே போம்படியாய்
வளைகரத்தெம் மாதாவே மனதிலொரு யோசைனையாய்
வளைத்கட லுலகரசன் மாமாறன் வீறுபெற
வளைந்தசிலம் புனதெனவே மறுமொழியொன் றுரைத்திடுவீர்

உரைத்திடுவீ ரென்றுரைக்க ஓதரியதேவி சொல்வாள்
உரைப்பதென்ன பெண்ணங்கே யுலகமெல்லா மொழிந்தாலு
உரைக்கரிய வென்னுலகோ டுற்றதுரை யிறந்தாலும்
உரைப்பேனோ பழிவார்த்தை யுற்றகற்புக் கிணையாமோ

கற்பொழித்துப் பேசுவது காரணமோ காரிகையே
முற்போரிற் தருமராசன் முனைநிலையிற் பரித்தாமர்
இற்றானென் றுரைத்தபொய்யால் ஈசுரனத் தருமருக்கு
செற்றநர கிடங்காட்டித் திருப்பிவிட்ட தாமல்வோ

ஓகோகோ பிறர்தார முற்றவரு நற்றவத்தை
ஓகோகோ பேணாதா ருறப்பழித்தோர் பெரியோரை
ஓகோகோ வன்கொலையா யுயிர்விடுவோ ரெழுநரகில்
ஓகோகோ விழுவரென்று முறுகளவும் புரிந்தவர்க்கும்

புரிநரகந் தனைக்கொடுக்கும் போதவழி தனைக்கெடுக்கும்
பரகதியை விலக்கிமிக்க பாவக்கதி யலக்கணுறும்
மருவுமலர் வீற்றிருக்கும் மாதுமணு காதகலும்
புரைபுரையு வஞ்சகத்தாற் பொய்யுரைக்கிற் பூங்குழலே

பூங்குழலே சொல்வேன்கேள் பொய்யுரைக்க வேணுமென்றாய்
ஆங்கமல மதிபுனைந்த அழகுசொக்கர் தன்னாணை
ஈங்குபொய்யை நானுரையேன் எழிற்சிலம்பென் சிலம்புமல்ல
வாங்குவளைக் கரத்தாளே மன்னனுக்கு மெய்யுரைப்பாய்

உரைப்பாய்மெய் யென்றுரைக்க வுற்றவண்ண மகள்பணிந்து
உரைப்பெரிய தேவியரே யுமதுசொல்லின்படி சொல்லுவேன்
உரைக்கரிய ராசனிடம் ஓதுதற்குப் போதவிடை
உரைத்திடுவா யென்விடையை யுத்தமியுங் கொடுத்தனளே

கொடுக்கவண்ண மகள்நடந்து கொண்டதுயர் கண்டவழி
கொடுக்கவுல காண்டிருந்த கோமாறன் வாசல்வந்து
கொடுத்ததுய ரடுத்திருக்கும் கோதைநிற்குங் கொலுவிடமாய்
கொடுத்தரியா சனமிருக்குங் கோவினடி பணிந்தனளே

பணிந்தெழுந்து போரேறே பாண்டியனே கேட்டிடுவீர்
பணிச்சிலம்பின் காரியத்தைப் பத்தினியா ரிடம்போய்நான்
பணிவிடையைக் கேட்டளவிற் பரமருரை யாணையிட்டுப்
பணிச்சிலம்பு தன்னுடைய பாதச்சிலம் பல்லவென்றாள்

அல்லவென்று படியில்விழுந் தரற்றியிரு கையாலே
அல்லலல்ல லென்றடித்து அரசனுக்கு மதிகேடோ
அல்லலுறத் தட்டான்செய் யநியாய மறியாரோ
அல்லல்வந்த தெனவழுதா ளம்மையென்றாள் வண்ணமகள்

வண்ணமகள் தானுரைத்த வார்த்தையினால் மாறனவன்
வண்ணமுக முடன்கருகி மதிமயங்கித் தலைசாய்ந்து
வண்ணமதிக் குலத்தரசன் மாறுரையா திருந்தனன்காண்
வண்ணமற வவனிருந்த வகையுரைப்பேன் சிறிதறிவீர்

அறிவீர்கள் குருகுலத்தி னரசரருஞ் சபையகத்தில்
அறிவுடைய திரௌபதியி னரைத்துகிலைக் கைப்பிடித்து
அறிவழி துச்சாதனன்றா னன்றுரிய வரவுயர்த்தோன்
அறிவழிந்து தலைகவிழ்ந்தும் அங்கிருந்த வாறுமொக்கும்

வாறதுவு மல்லாமல் மாநிலத்திற் சூர்ப்பனகை
வாறதுகண் டிலக்குமணர் மாதினுடை மூக்கரிய
வாறவசை கண்டுமதி மயக்கமுற்று ராவணனும்
வாறராச ரெல்லலோரும் மருவுசவையும் பொருமே

மருவுசவைக் கொப்பாக மாநிலத்தி லரசருடன்
மருவுமது ராபுரியின் மாறனுமங் கிருப்பளவில்
மருவரிய கண்ணகையார் மன்னவர்கள் தனைப்பார்த்து
மருவுசபை ராசர்களே மந்திரிகளே கேளும்

மந்திரிகேள் மன்னவனார் மாதெனது மணிச்சிலம்பைத்
தந்தரமோ தன்னுடைய தல்லதென்று சொன்னதுகாண்
மந்திரிக ளரசர்களே வாய்திறவா திருக்கிறீர்கள்
வந்தபழி யறிந்தீரோ மாதின்மொழி தெரிந்தீரோ

தெரிந்தீரே யரசர்களே தேவிசொன்ன சிலம்பின்முறை
தெரிந்தீரே யரசர்களே செட்டியோதட்டானோ கள்வன்
தெரிந்தீரே யரசர்களே செங்கோல்முறை நங்கோன்முறை
தெரிந்தீரே யரசனது செம்முகமும் முகநிலையே

நிலையழிந்த மீனவனே நிதியமெல்லா மெடுத்தொளிக்கும்
நிலையழித் தட்டானுறவாய் நீவணிகன் றனைவதைத்தாய்
நிலையாமோ வுனக்கிதுவு நீபழியைத் தந்திடுவாய்
நிலையரசர் முன்வழியை நிச்சயிப்பாய் பாண்டியனே

பாண்டியனே யெனவுரைக்கப் பழிபுரித் தட்டானும்வந்து
பாண்டியனைத் தொழுதுநின்று பாராழும் பூழியனே
பாண்டிலேறிப் பாராளும் பாரரசர் சேனையுடன்
பாண்டிநாட்டில் வருவார்களோ பரிதாப மென்னவையா

ஐயாவிவ் வரசரெல்லா மடியில்முடி படவணங்கி
ஐயாவென் றனுதினமும் ஆஞ்சலிசெய் திடப்பகைவர்
ஐயாவா னுலகத்துள்ளோர் வந்தாலு மரைநொடியில்
ஐயோவென் றலறிடச்செய் யையாவென் றறைந்துநின்றான்

வேறு நின்றபொழுதன்றுபொன் கொல்லனைப்பார்த்து நீடுமதுராபுரியி லிராசனுரைசெய்வான்
நின்சொலினைநம்பி யென்மனைவிகால்பூண்ட நீலுமணிபரிபுரத் திருடனிவனென்றே
நின்றவணிகனைவதைத்திடல் பழியதென்றே நீதியரசர்க்கெதிரோர் மாதிவளும்வந்து
நின்றுமுடிகவிழவிடி படுவதென்வசையாய் நீசனெனவேசிந்தை யேதனவுரைப்பேன்

ஏதுமறியாதரச னீயெனமொழிந்தா ளின்றுனையுமதுரையொடு சுடுவனழலென்றாள்
ஏதுமனுநீதிவழி நின்றிலைநீயென்றாள் ராசனலநீகொடியனான வடிவென்றாள்
ஏதுபகவான்மதலை வள்ளுவனுரைத்த எழிற்றமிழறிந்திலா மோடெனவுரைத்தாள்
ஏதையெனநானிவள் மொழிந்ததுபொறுத்தேன் இன்னரசரெனிலிவள் தனத்தையரியாரோ

வேறு அரியாருந் தொடைமகுட வடல்மாற னீதுரைக்க
அரிப்பொன்னு முமிக்கரியு மாண்டதட்டா னேதுரைப்பான்
அரிசூழ முலகின்மன்ன ராரேனும் வானேற
அரியேறும் பெருமாளே யடியேன்சொற் கேட்டிடுவீர்

சொற்கேளும் பஞ்சவர்கள் தோகைதுரௌ பதியானாள்
சொற்கேளாத் துரியோதனத் துரைமார்பி லிருந்தவன்றன்
சொற்கேட்ட தம்பியென்னுந் துச்சாதனன் முடிமிதித்து
சொற்சபதக் குழல்முடித்த தோகைநீலிக் கிவள்நிகரே

இவளெளியா ளோவரசே யெம்மரசி யிடம்போயோ
இவள்தனது சிலம்பெனவே யெவ்விதமோ சொல்லுவித்தாள்
இவளவளை மயக்கிவிட ளெவ்விதவித்தை களில்வல்லாள்
இவள்கணவன் றன்னைமத யானையுங்கொல் லாமலல்லோ

கொல்லாமற் போனதவன் கூறுவித்தை முறையல்லவோ
கொல்லவல்ல கள்ளனவன் கூடுகள்ளி யிவளல்லவோ
கொல்விழியா ளிவள்கொடிமை கூறுகில்முன் னோர்நாளில்
கொல்லவொரு வனைநினைத்துக் கொண்டுதெரு நின்றதிலே

நின்றவிட மொருவன்வர நீயெனது கணவனென்று
அன்றுதன்னைத் தள்ளிவிட்டு அப்புறம்போ றானேயென்று
நின்றழக் காராளர்கண்டு நீதிசொல்லிக் கூட்டிவிட
ஒன்றுபட்டுக் கொன்றநீலிக் கொப்பாகு மிவளேயென்றான்

ஒப்புரைத்துப் பொன்செய்கொல்ல னோதியதெல்லா முணர்ந்து
தப்பிலைக்காண் சரியெனவே தமிழ்மாற னுரைத்திருக்கச்
செப்பரிய கனதனத்துச் சேயிழைக்கண்ணகை நகைத்து
இப்படியே பொன்செய்கொல்ல னிசைக்கராச னிசைந்ததென்று

இசைபொருந்துங் கண்ணகைபின் னிராசனைப்பார்த் தேதுரைப்பாள்
இசைபொருந்து மரசனேநீ யெனதுதன மரியவென்றாய்
இசைபொருந்து மென்சிலம்பை யெடுத்துவணிகனை வதைத்தாய்
இசைபொருந்து மரசர்முன்னே யானோகள்ளி நீயோகள்ளன்

கள்ளத்தட்டா னோடுகூடி களவெடுத்த பாண்டியனே
கள்ளவணிகனைப் பிடித்துக் கவர்ந்தெடுத்த காற்சிலம்பை
கள்ளியென்கண் காணும்படி கனகமுடிராசன் முன்னாய்
கள்ளவெள்ளம் பார்ப்பதற்கு களரிதனிற் கொடுவருவாய்

கொடுவருவா யெனவுரைத்த கோதையர்தன் முகநோக்கி
சுடர்மவுலி மகுடமணி சுந்தரப்பாண்டிய னுரைப்பான்
குடகாவிரி நாட்டிருக்குங் கோதையர்சொற் கேட்கவென்றோ
நடுவுலகை நானாள்வதுநன்றிதென நகைத்தனனே

நகைத்தவனைத் தான்பார்த்து நற்கொடியு மேதுரைப்பாள்
செகத்தில்மனு நீதிகொண்டு திறலரசி னிருப்பவர்கள்
அகத்திலுற்ற பெண்வழக்குக் கரசுநீதி சரியில்லையோ
செகத்தரசர் பெண்ணானென்று தீர்க்கநீதி வேறுமுண்டோ

நீதித்தட்டான் சொன்னதுமெய் நீலிநானுஞ் சொன்னதுபொய்
நீதிசொன்னாய் நீயதுமெய் நிற்கநிற்கு மிராசர்களே
நீதிதானோ பாண்டியன்சொல் நிற்கயிவன் தேவியவள்
நீதிசொன்ன சரியில்லையோ நிறுமூடர் குணமிதுவோ

குணமிதுவோ சிலம்பதனைக் கோதைவேறு சிலம்பிதென்ன
குணக்குருட்டுத் தட்டானுடன் கூடினானே மோட்டரசன்
குணமிழந்த பாண்டியனே குலமிழந்த நான்சொல்லக்கேள்
குணமதுரை யாண்டிடுசெங் கோலுனக்கென் றொருசெருக்கே

செருக்குருக்கி நெருக்கியுன்னை தீயிடமுன் னென்சிலம்பை
செருக்களரி தனிலளையாய் தீயவனே யென்றுரைக்க
செருக்குணஞ்சேர் கள்ளியர்கள் சிலுசிலுக்கும் வாறதுபோல்
செருச்சிலம்புங் கள்ளமல்லோ சிலுசிலுத்துக் கொலுவருமோ

கொலுவருமோ வென்றரசன் கொலுவிருக்கக் கோதைசொல்வாள்
கொலுவிலுள்ளோர் காணாமல் கொலுச்சிலம்பை மறைத்துவைத்தாய்
கொலுவிலிப்போ சிலுசிலுக்கக் கூப்பிடுவே னாப்பிடென்று
கொலுவினின்று கண்ணகையுங் கூறுவளே கூறுமுறை

முறையாக வெனக்குமணம் முடிக்கவன்றென் காலிலிட்ட
முறைநாக மணிச்சிலம்பே முடியரச னிடமாழும்
முறையான சவையகத்தே முன்வருவா யென்றுநின்று
முறையான தேவிசொல்ல மூட்டுளித்த பெட்டகத்துள்

உள்ளிருந்த பொற்சிலம்பு உடனெழுந்து பெட்டகத்தின்
உள்ளிருந்த பூட்டுமுறித் தொலியுடனே கலகலென்று
உள்நாக மணிச்சிலம்பு உடன்வரவை யுரைப்போமென்னில்
உள்நெகிழ் பூந்திருவுமிவ்வூர் ஒளியுமென்றே புலம்பலொக்கும்

புலம்பலுடன் சிலம்புருண்டு பொற்சவையி னிடம்வரவே
புலம்புசவை யுள்ளவர்கள் பொற்சிலம்பைக் கண்டவுடன்
புலம்பலுட னாச்சரியம் புகுந்துவிந்தக் காரணத்தால்
புலம்புநங்கை தெய்வமல்லாற் பூமியிற்பெண் ணல்லவென்றார்

அல்லலுறப் பாண்டியனை யழிப்பெனென்று பழிப்புரையாய்
அல்லல்கொண்டு கோதையிவள் அறைந்தமொழி மெய்யாச்சே
அல்லலெங்க ளெல்லவர்க்கு மரசனுக்கு மானதென்று
அல்லல்கொண்டங் கரசரேல்லாம் அறைந்தறைந்து மருண்டிருந்தார்

மருண்டிருக்குஞ் சமயமதில் வந்தநாக மணிச்சிலம்பு
மருண்டுநின்ற கண்ணகைமுன் வருமளவிலவள் சொல்லுவாள்
மருண்டமாற னிச்சைகொண்ட மணிச்சிலம்பே சீசீகுற்றம்
மருண்டெனது முன்னணுகி வாராதுபோபோ வென்றாள்

என்றவுட னெழிற்சிலம்பு ராசராசர் சவையகத்தில்
என்றுதித்த தென்னவென்ன எழில்மருவு பாண்டியன்முன்
என்றொழிசே ரரசரெல்லா மேக்கமுறப் பாண்டியனும்
என்றுமில்லாத் துன்புறவு மெதிர்மருவி நின்றதுவே

எதிர்மருவக் கண்ணகையா ரிராசராசர் முகநோக்கி
எதிர்மருவும் ராசர்களே இச்சிலம்பு நாகமணி
எதிர்மருவு சிலம்பல்லவோ இரண்டுரையா துங்கள்கண்ணால்
எதிபார்த்துச் சொல்லுமென்ன ராசராச ரெல்லோரும்

எல்லோரும் பார்த்தபடிக் கெழில்நாக மணிச்சிலம்பு
எழில்வீசி நின்றதினால் ராசராச ரெல்லோரும்
எல்லோனுக் கிளையகுலத் திராசனெம்மை முனிவனென்று
எல்லோரு மூமரைப்போ லிருந்தாரே சவையருகே

இருந்தசபை தனைப்பார்த்து ஏந்திழையா ரேதுரைப்பார்
இருந்துமிந்தப் பாண்டியற்கா யெஞ்சியொன்றும் பேசாமல்
இரும்பினும்வன் மனதெனவே யிங்கிருந்த சவையோரே
இருந்திடுவீர் விருந்தளிப்பா னேற்றிடுவீ ரெனமொழிந்தாள்

மொழிந்துபின்பு தட்டான்றன் முகநோக்கிக் கண்ணகையும்
மொழிந்திடுவாள் பொன்கொல்லனே மூடமுற்ற பாண்டியனார்
மொழிந்துதந்த சிலம்புவேலை முடித்துனது சுவரில்வைக்க
மொழிகலங்கக் கெருடனொன்று மோசஞ்செய்த தறிந்திலையோ

அறியாதுன் மகனையங்கே யழைத்துவின விடவவனும்
அறியேனென் றொருவணிகன் னரியசிலம் பினைக்கூறி
அறிவுடனே போறான்நீ யவனிடம்போ வென்றுசொல்ல
அறிந்தவர்போற் கோவலர்முன் னரியவழி போயணைந்தாய்

போயணைந்து கோவலர்தன் பொற்சிலம்பை நீவாங்கி
தாயவெகு புத்திசொல்லித் தமிழ்மாறன் தன்னிடத்தில்
வாய்மையாக நல்லவிலை வாங்கியிப்போ தாறோமென்று
காயமொன்றுந் தோழனெனக் காட்டிக்கூட்டி வந்தாயே

கூட்டிவந்து கோவலரைக் கொற்றமணி வாசல்விட்டு
தாட்டிமையில் லாமலந்தத் தனிச்சிலம்பைக் கொண்டுவந்து
மோட்டரசன் முன்னாக மூட்டியவுன் சிலம்பிதென்று
காட்டினதால் மோட்டரசன் கள்ளவுன்சொல் நம்பினனே

நம்பினது முண்மையென்று நாயகியா ருரைத்தளவிற்
கம்பிகொண்டு பணியிளைக்குங் கள்ளத்தட்டான் சொல்லலுற்றான்
செம்பொற்சிலம் பினைகெருடன் சேர்ந்தெடுத்தும் போனதுண்டோ
வம்பியிவள் சொல்வதென்ன வையகமு நம்பிடுமோ

நம்பிடுமோ பொற்சிலம்பை நற்கெருட னெடுப்பதுண்டோ
எம்மரசே பாண்டியனே யிதுபுதுமை தனைப்பாரும்
உம்பருக்கு மரிதாச்சே யொண்டொடியாள் சொன்னமொழி
நம்பிடலாம் வம்பலவோ நல்லதிது நல்லதென்றான்

நல்லதென்று சொல்மொழியை நாயகியுங் கேட்டுநின்று
சொல்லரிய சினம்புரிந்து தோகைபின்பு சபையோரே
புல்லனென்னைப் பொய்யுரைக்குங் பூங்குழலென்றே மொழிந்தான்
நல்லதிது காணுமென்று நாயகிதந்தர மகிழ்வாய்

தரளமொத்து முகம்பொருந்துந் தனிச்சிவந்த மூக்கோனே
புரளக்கொத்திப் பாம்பினுயிர் போகவுண்டங் கிடுவோனே
அருளுமுன்றன் குஞ்சின்பழி யாக்குவேனென் றறிந்துமனம்
இருளழிக்குஞ் சிலம்பினைநீ யெடுத்துமீண்டும் போனாயே

மீண்டவந்த சிலம்பதனை விரும்பியிந்தச் சவைகாண
தாண்டுசிறை வல்லவனே தான்கொணரா யெனவுரைக்க
காண்டரிய கருடனந்தக் கண்ணகை தன்னருளாலே
மூண்டபழி தானறிந்து மோதியெழுந் தார்த்ததுவே

ஆர்த்தெழுந்து கடல்கடந்து மரியமலை வாரமதில்
ஆரழையி லிட்டிருந்த அரியசிலம் பினையெடுத்து
பேர்த்துமொரு நொடியதனிற் பெருங்கருடன் பறந்துவந்து
ஆர்த்தசவை யோர்காண அருஞ்சவையிற் போட்டதுவே

போட்டிருக்கப் பாண்டியனும் பொற்சிலம்பைத் தான்பார்த்து
மாட்டிலுற்ற மனைவிகாலில் மணிச்சிலம்பென் றறிந்திருக்க
கோட்டிருந்த வரசர்களைக் கொடியிடையாள் தான்பார்த்து
காட்டிருந்த கெருடனிட்ட காற்சிலம்பைக் கண்டீரோ

கண்டீரோ விச்சிலம்பிற் கண்டமணி தரளமல்லோ
கண்டீரோ என்சிலம்பிற் காரரவ மணியல்லவோ
கண்டீரோ மீனவனுங் கடியதட்டான் மொழிகேட்டு
கண்டவணி கேசர்தம்மைக் கரவனிவ னென்றுசொல்லி

என்றுசொல்லி யானையையும் ஏவினனே பாதகனும்
இன்றிருக்கும் ராசர்களே ஈதுநீதி சரிதானோ
என்றுசொல்லி யேந்திழையு மெதிர்வழுதி தனைப்பார்த்து
இன்றுனது புன்றொழிலுக் கென்னநீதி மன்னவனே

மன்னவனே தட்டானுன் மந்திரியோ தந்திரியோ
மன்னவரி· னீதியில்லா வாதைசெய்தாய் பாதகனே
மன்னவனே கோவலரை மதகரிகொல் லாததினால்
மன்மதி யில்லாமல்நீயும் மழுவில்வீழ வைத்தாயே

வைத்தாயே பாண்டியனே வணிகரைநீ வதைத்தபழி
வைத்தாயோ விந்நேரம் மாறுசொல்லப் போறாயோ
வைத்தமுடி மன்னர்முன்னே மாறிலாது காணும்படி
வைத்துரைப்பாய் ஞாயமிப்போ மற்றுநேரம் போகாதே

போக்காதே யெனமொழிந்த பூங்குழலாள் முகநோக்கி
வாக்கான புகழ்படைத்த மாறனிவை கூறுவனே
தேக்கான மணிச்சிலம்பு சேயிழையுன் னுடையதென்றாய்
மீக்காகக் கொண்டகல்வாய் வீண்பேச்சுப் பேசாதே

பேசாதே சிலம்பைக்கொண்டு பேருமென்ற மொழிகேட்டு
நாசகியு மிகச்சீறி நன்றுநன்றென் றுறநகைத்து
வாசகஞ் சொன்னதுசபையில் மன்னவரே கேட்டீர்களோ
தாசிமகன் சொன்னதைநீர் சவையில்மன தறிந்தருள்வீர்

அருளுமெங்க் ளிருவருக்கு மாய்விழைந்த விவ்வழக்கை
இருளகன்ற மனத்துடைய ராசர்களே கண்டீர்களோ
தருகணவன் றனைவதைத்தான் தனிச்சிலம்பைத் தாறோமென்றான்
உருவணைந்த ஞாயமிதோ வுங்ளெண்ணஞ் சொல்லுமென்றாள்

சொல்லுமென்ற மொழிகேட்டு சுடர்முடிசேர் ராசர்களு
வல்லமைசேர் மந்திரியு வல்லபடைத் தலைவர்களும்
எல்லவரு மேந்திழையா ளிசைத்தமொழி தனைக்கேட்டு
நல்லதென்று பாண்டியற்காய் நடுவுரையா திருந்தனரே

இருந்தனரே யரசர்களு மேந்திழைக்காய்ச் சொன்னாலும்
பொருந்து துயரெங்களுக்குப் பூழியனார் புரிவரென்று
அருந்துதுய ரூமரென்ன வரசரெல்லா மிருந்தளவில்
கருங்குழலார் கண்ணகையார் கனலெனவே கோபமுற்று

கோபமுற்று நடுஞாயங் கொண்டுரையு மென்றளவில்
கோபமென்ன வரசர்களே கூறாத நீதியிதோ
தாபமுற்ற வரசருடன் சரியிருந்தீ ரெல்லோரும்
சாபகர வரசர்களே சாபமிட்டோ ராருமுண்டோ

ஆருமொரு ஞாயமுண்டே லவ்வழியிற் செல்லாமல்
வாரமொரு வருக்காக வழுவுரைத்தால் மன்னவரே
பாருமொரு நிட்டூரம் பட்டுலகிற் செந்திருவும்
பேர்வளவன் மனையகத்திற் பிரமகத்தி தொடர்ந்திடுமே

தொடர்ந்திடுமே வறுமையெல்லாந் தூயமோகங் கிடையாதே
தொடர்ந்திடுமே தேவபழி சூழ்கொலையுந் தொடர்ந்திடுமே
தொடர்ந்திடுமே நரகவழி சொற்பொருளும் போய்விடுமே
தொடர்ந்திடுமே குருசாபந் துக்கமிகச் சார்ந்திடுமே

சார்வுபெற்ற கொடிமையிற்கோல் தலையில்வைத்த பாண்டியனே
வாரமுற்ற நாயகனை வதைத்தபழி வாங்குவேன்பார்
வேர்வையுற்று முழிபிரள வீக்கியுன்னைக் கழுத்திறுகச்
சூரமுற்ற கொலைமாலை சூட்டுவேனீ கண்டிரெடா

கண்டிரெடா கொடியதட்டான் கைப்பிடித்த தோழனெடா
வண்டனெடா செங்கோலை மாற்றியவனிலைக் குறட்டைக்
கொண்டிரெடா குழலுடனே கூட்டிவேலை செய்திரெடா
கண்டிரெடா சிலம்புமுதற் கள்ளமெல்லாங் கண்டிரெடா

கண்டிரெடா வென்றரிய கண்ணகையா ருரைத்தளவில்
கண்டிருந்த பாண்டியன்கண் கனலெழவே மனமுழைந்து
கண்டநெற்றி வெயர்வரும்பக் கடித்ததரந் துடிதுடிக்கக்
கண்டகோப வனலெழுந்த கடிமைக்கொரு முடிவில்லையே

முடியரசன் படைத்தலைவர் முகநோக்கி யேதுரைப்பான்
முடிவுசெய்யுங் கொலைபுரிய முன்னுதிறற் கன்னியரை
முடிகடிகை முன்னளையு மூர்க்கியிவள் திறமறிந்து
முடிவுசெய்வே னென்வவர் முறைப்படியங் கழைத்தனரே

அழைக்கவந்த பாதகியர்க் கரியதலை விரிமயிரும்
முழைத்திருண்ட கருமலைபோல் மூடுசடங் காலுரல்போல்
அழையெனவாய் வயிறுகடல் அரியவிழி சுழல்விழியார்
தழைசெவிதோல் முலைமலைபோல் தாங்கவொண்ணாத் தீமையுள்ளார்

தீமையெவர் செய்தாலுந் தின்றுடனே கொன்றிடுவார்
தீமைமிக்க வரக்கர்குலச் சேயிழையா ரிற்சிலரே
தீமைசெய்ய நாயகன்முன் சென்றுநின்றங் கடிபணியத்
தீமையெல்லாங் குடிபுகுதச் செழியனவர்க் குரைத்திடுவான்

வான்மருவும் வாயுடைய மங்கையரே யிவள்கொடிமை
நானுரைக்க முடியாது நங்கையிவள் தனைப்பிடித்து
மானபங்கஞ் செய்துசிறை வைத்திடுவீர் கொல்லலல்லல்
ஆனதுங்கள் பணியெனவே யரசனுமங் கறைந்தனனே

அறைந்தரசன் சவையிருக்க வன்னையிவ ளன்னேரம்
அறையவொண்ணாக் கோபமதோ அருளதுவோ வறிந்திலமே
இறையவனார் ரெழுத்திதனை யார்கடந்தா ரென்றருளி
நறைகுழலா ரன்னேர நாடசைய நகைத்தனரே

விருத்தம் நாடமசையமடமடென நரபதிகள்கிடுகிடென நாடுகொலை தேடரிவையர்
நாடுவிழிகூசியுட லூடுதடுமாறிமன நாவுதற வாய்பதறிடக்
கூடமொடுமாடமிடி கூடவெழுகோபுரங் கூடலிற் கோமதில்களுங்
கொடியாடு மிடைவீதிபடைவீதி நடைவீதிகுறுவீதி புறவீதியுங்
பாடசையவருமிரத கசதுரகசேனையும் படபடென மிடிகொண்டுராய்ப்
பாண்டியன்முடிவிசைய முடிவசைய முகவொளிபறந்திறந் திறையுமசையத்
தேடுநடமாதரிடை படபடெனவசைய விசைதேடரிய திருமருவுமசைய
திருவினிகர் கண்ணகைத் தெரிவைபரதேவருள் சிறந்துளமெழுந் தகையவே

"பதினோராவது வழக்குரையழித்தற் கதைமுற்றிற்று"

"பன்னிரண்டாவது மதுரைத்தகனக் கதை"

வேறு திருமருவுபரையருளி னழகினெழுமொழியே தேவரறியாதவிரு திருவடிகொண்மலரே
பொருமதகயம்புரை முகம்பொருவுபொருளே பொரவரியதிருவுருவி னோரைந்துகரமே
ஒருவரறியாத பிரணவசொரூபகுருவே ஒருதந்தமருவிழிகளொரு மூன்றுமுடையாய்
அருமதுரைபெரியகனலவிய வெழுகண்ணகை யாடல்சிறிதோதவரு ளரியநாயகமே

நகைத்தபின்முருக்கின் தரத்தினைமடித்தாள் நச்சுவிழியிற்குவளையிற் கனலைநட்டாள்
உகத்தில்வடவைக் கனலெழும்பவும்விழித்தாள் உற்றபலகொற்றவர் சுழித்துளநெளித்தார்
சகத்திலொருபேருருவு காட்டியெதிரானாள் சங்கமுறுதுங்கர்முடி ராசரிடிகொண்டார்
சகத்திலிவ்வுருக் கொடுதரித்தலரிதெனவே தானவர்கள்வானவர்கள் தானுமிதுகண்டார்

வேறு கண்டவந்தப் பாண்டியனார் கட்டுரைத்த காரணத்தால்
ஓண்டடியோ ருருவெடுத்தார் ளும்பருக்கு மரிதாமே
திண்டிறல்சேர் புயம்வளரச் செம்முகமுச் சுடர்தழுவ
கண்டதரந் துடிதுடிக்க கண்ணகையின் நெடுவடிவே

நெடும்புருவ மேனிமிர நீலவிழி யனல்பொழிய
உடன்மருவு நாசியிலே யோதரிய புகைமருவ
தடம்பொருவு நுதல்வேர்க்கத் தனஞ்சுமந்து மிடையிடைய
இடம்புவிகொள் சேடனுமங் கிரங்கவுரு வெடுத்தனளே

எடுத்த வொருதிருமுகமு மிருகாலு நாற்கரமும்
அடுத்த வொருகரஞ்சூல மானவொரு கரத்தில்மழு
சுடற் பாசமொருகரத்திற் றூயசெப மொருகரமாய்
சுடர் பொலிந்தமுடியசையத் தோகையுருத் தரித்தனளே

தரித்த வுருத்தனைப்பார்க்கிற் சக்கரற்கு மரிதாகும்
தரிக்கு மெனைத்திருத்தவந்த தாயுமிவள் கொண்டவுரு
தரித்த கமலாசனர்க்குஞ் சங்கையுற வானதுவே
தரித்த புவித்பூந்திருவுஞ் சாற்றுவளோ செந்திருவும்

திருமருவு மோட்சமுய்க்குந் தெய்வமிவள் கொண்டவுரு
திருவுலகி லறைந்திடுதல் தேவருக்கு மரிதாமே
திருமருவு தெய்வமின்னாள் தீயவர்க்கிவ் வுருக்காட்டி
திருவுருவைத் தீய்மாட்டிச் சேர்த்திடுதல் முத்தியல்லோ

முத்திதரும் பத்தினியார் மூண்டெழுந்து சிரிதளவில்
முத்திநக ரிந்திரனும் மோசமென்று தளர்ந்தனனே
முத்திதரு மக்கினியு முதல்விகொண்ட வுருவறிந்து
முத்திதந் தாளென்றுமன முன்னியுன்னி நடுங்கினனே

நடுக்கமுற வுயிர்பறிக்கு நமனுமிதைக் கண்டவுடன்
திடுக்கிட நின்றறிவயர்ந்து சிந்தைகுன்றித் தொழுதனனே
தொடுத்த வந்தநிருதியிந்த தோகையுருக் கண்டவுடன்
இடுக்க னுற்றுத்தொழுதவன்போ லேங்கிவிழுந் தழுதனளே

அழுதவந்த வம்மையவ ளனலெளக்கொண் டிடும்வடிவை
அழுதமனத் துடன்வாயு வரசனுநின் றிறைஞ்சினனே
விழியழகா ளுலகுதன்னில் மேவியயிவ் வடிவதனை
விழிகளிக்க வருணன்கண்டு விழுந்தழுந்தித் தொழுதனனே

தானமுற்ற கண்ணகையார் தானெழுந்த வடிவுதன்னைத்
தானவட பதியறிந்து தடதடத்துத் திகைத்தெழுந்தான்
தானவளாகிய கண்ணகை தரித்தவுரு தனைப்பார்த்து
தானவட கீழரசுஞ் சந்தேகஞ் சொல்லினராம்

சொல்லுமிந்த வுருக்காட்டித் தோகைநல்லா னிற்பளவில்
சொல்லரிய சபைதனிலே சூழ்ந்திருந்த ராசர்களும்
சொல்லரிய மந்திரியுந் துங்கபடை வீரர்களுஞ்
சொல்லுசபை யூடிருந்து துன்பமுட னாய்ந்தனரே

ஆய்ந்தவர்கள் கண்டவுடன் அல்லலுற்றுத் தொல்லையென்று
ஆய்ந்துபழி யானதென்று அகமுருகி முகங்கருகி
ஆய்திறத்த லானதெங்கட் கானதென்று அறிவழிந்து
ஆய்ந்தமல ரழகிகொண்ட அரியவுரு நோக்கினரே

நோக்கமுற்று நாற்கரமு நுவலரிய வனற்சினமும்
நோக்கமுற்ற் தாலிவளே நுவலரிய சிவனருளால்
நோக்கமுற்று விண்ணுமண்ணு நுவலரிய வென்றிகொண்டு
நோக்குவீர லக்குமியோ நுண்ணிடைமா திவளுமென்பார்

பார்த்தசிவன் மாதுதன்னைப் படியினீலி யென்றதினால்
பார்த்தபரை சினம்புரிந்து பகர்ந்தவண்ட ரண்டமுட்டி
பார்க்கரிய பரமருடன் பண்டெழுந்த வுருவுடனே
பாரினட மாடிவந்த பத்திரை காணிவளென்பரே

பரமன்கெங்கை பெருமைதன்னைப் பட்சமுறக் கேட்டதனால்
தரமிகுந்த கவுரிமதன் சர்பருரு வாக்கினதால்
அரமிகுந்த பாண்டரசு னாடல்கொண்டு சீவனுண்ண
குரமிகுந்த மலர்கணைகைக் கொண்டவளா மென்பாரும்

பரமிகு நிகும்பனையும் பண்டுதித்த கும்பனுடன்
கோரனையுங் கொன்றுளக்குங் கொற்றவையோ வென்பாரும்
வீரனுடன் கூடித்தக்கன் வேள்வியிற்போய் யாவரையும்
வீரமுற்ற பத்திரையோ மிக்கவுருப் படைத்ததென்பார்

படைக்குமுல கீன்றவளே பகருமிந்த வுருவெடுத்து
சுடர்க்குலிச னிந்திரற்காய்ச் சுந்தரப்பாண் டியனுடனே
அடர்த்துவெற்றி கொண்டுலகம் அழிக்கவென்று கிருபைகொண்டு
மடக்கொடியிங் கெழுந்தனளோ வாறிதெது காணுமென்பார்

காணவொரு பயமாச்சே கண்ணிரெண்டும் நெருப்பாச்சே
தோணுமிவள் தனைப்பார்க்கிற் சுடரொளிபோற் றோணுகுதே
விண்ணில் வணிகனைவதைத்த மீனவனா லெங்களுக்கும்
வீணிறுதி நாளிகையில் மேவிடுமென் றுரைத்தனரோ

என்றுரைத்த சவையகத்தோ ரிடுக்கணுறு மவ்வளவிற்
துன்புநிகழ் மீனவனுஞ் சுந்தரியைப் பார்ப்பளவில்
அன்றொருநாள் விடைதனிலே ஐயரிடப் பாகம்வந்த
கன்றியவேல் விழிக்கவுரி காட்சியைப்போன் றிருந்ததுவே

இருக்குமொரு பெண்மதுரை யெரிப்பளென்ற வாக்குமுன்னாள்
இருக்கவந்தப் பிள்ளைவந்த வேதுவினாற் சோதிடர்கள்
இருக்குமிந்தப் பிள்ளையினால் எரிமதுரை யெழும்புமென்றார்
இருந்தபிள்ளை தனைப்பேழை யிடமடக்கித் தள்ளிவிட்டேன

தள்ளுமந்தப் பிள்ளையிவள் சாயலெனத் தோணுகுதே
உள்ளமொன்றிப் பயப்படுதே ஒண்டொடியைப் பார்ப்பளவில்
கள்ளவிழ்பூங் குழலாளைக் கையெடுத்து நான்வணங்கி
உள்ளசினந் தனையகற்ற வொருப்படுதே யெனதுமனம்

மனந்துணிந்து நான்வணங்க மாதுகுளிர்ந் தேகுவளோ
சினந்தணிய வேகமுடன் செயிர்த்தெனைமுன் னெதிர்ப்பாளோ
அனந்தாவு நடையாடன் னறிவேது குறியேனே
நினைந்தவளை நான்வணங்கில் நிருபரெல்லா மிகழுவரே

நிருபரெல்லா மடிவணங்க நேரலரை வெற்றிகொண்டேன்
ஒருபொழுதி லிந்திரன்றன் னொளிமுடிமேற் சங்கெறிந்தேன்
வருணனுக்கு வேலெறிந்து மண்டாட்டம் போடுவித்தேன்
குருவெனவே யரசரென்னைக் கும்பிடவின் றிங்கிருந்தேன்

இன்றுமழி யாதபடி யிருந்தரசு புரிந்திடுநான்
கன்றுமொரு பெண்ணினுக்காய்க் கதறியிவளடி விழுந்தால்
வென்றிகொண்டு புரந்தரனும் விண்ணவருஞ் சிரிப்பரல்லால்
இன்றரசுசுற்ற மன்னா எனையிகட்சி புரிவாரே (மன்னா- சத்துரு)

புரியரசர் தன்னுடனே போயெதிர்க்க மாட்டேனே
வரிசையுற நான்வளர்த்த மானமுமே லழிந்திடுமே
சரியிவளா லெனக்கழிவு தாழ்வுவந்து நேரமுன்னே
புரிகுழலைக் கட்டுவித்துப் போடவென்று நினைத்தேனே

நினைக்குமந்த வேளையிலே நின்மலையு மதையறிந்து
கனைக்கு முகிலிடியெனவே கறகறறென்று பற்கடித்து
முனைக்குமிழ்போல் மூக்கினின்று முதுகனலும் புகையுமெள
அனைத்துலகுஞ் செவிடுபட வமலை சிரித்தார்த்தனளே

தாழ்வுசெறி பாண்டியனே தலைவனைநீ வதைத்தபழி
நாளிறநான் வாங்கவர நசைபுரிந்து மென்தனத்தை
மூழ்வுறநீ யரிவோமென்று முகம்பார்த்துச் சொன்னமையால்
வாழ்வுறுமென் றனத்தையிந்த மார்பகத்திற் கொண்டுசெல்லேன்

கொண்டிரெடா் வுனக்களிப்பேன் கொண்டமுறை யென்றுரைத்து
கொண்டபொன்னின் கும்பமெனக் கூறநின்ற திருமுலையை
கொண்டபல வுயிர்க்கனையாய்க் குறித்துநின்ற திருமுலையை
கொண்டவயில் முருகனுமுன் குடித்தமிர்தத் திருமுலையே

திருமுலையின் றிருவழியத் திருக்கமலக் கரத்தமலத்
திருமுலையி னிருமுலையின் றிருவுமிட முலைதிருகி
திருகுமுலை பாருனது திருமார்பைப் பாருமென்று
திருவிறங்கிப் புறமோடச் செழியனுரத் தெறிந்தனளே

எறிந்தவுடன் மணிச்சிலம்பை யெடுத்துவாசற் படியடித்து
எறிந்தவொழிப் பரிபுரமே யென்கணவன் றனைவதைத்து
பறித்துனையு மறித்துவைத்த பாண்டியனைக் கூடலுடன்
பொறிபறந்து கொழுந்தெழுந்து புகையுடனே யெரித்திடென்றாள்

என்றுசொன்ன வுடன்சிலம்பி லிசைந்தபல பொறியெழும்ப
துன்றுமந்தப் பொறியுடனே தோகைகண்ணி லக்கினியும்
சென்றுபற்றி யூழியனல் சேர்ந்தெழுந்த வாறதென்ன
அன்றரசு படமருவி யனலெழுந்து பற்றியதே

பற்றியந்தக் கனலெரியப் பத்தினியார் பாண்டியன்றன்
கொற்றமணி வாசல்வந்து கொழுந்தழல்போல் நின்றனளே
மற்றுமிந்தக் கண்ணகையார் மார்பின்முலை திருகினதால்
உற்றெழுந்த விரத்தமது ஓங்குநதி போலொழுக

ஒழுகநின்ற காரணத்தை உடனறிந்தோ ரிடச்சியம்மை
ஒழுகுவெண்ணெய் யெடுத்துவந்து உடன்மார்பி லப்பினளே
ஒழுக்கமுற்றுப் பறைச்சியர்க ளுடனிதனைக் கண்டோடி
ஒழுக்கமுற்ற துகிலெடுத்து ஒன்றொடிக்கு வீசினரே

வீசியந்த முலையறுந்த மேலிடத்திற் பஞ்சமுத்தி
நாசகிக்கிவ் வுதவிசெய்ய நாயகி கோபந்தணிந்து
வாசமிகு மதுரையிலே வளர்ந்தெழுந்த கொழுந்தணலை
நாசகியு முடன்பார்த்து நன்மொழியொன் றோதுவளே

ஓதரிய மதுரைநகர் உற்றெழுந்த பேரழலே
ஓதரிய மதுரையிலே உற்றிருக்கு மிடையர்தெரு
ஓதரிய பறையர்தெரு வுடனிரண்டு மெரியாதே
ஓதினேனுண்மை யதிதென்று ஒண்டொடியு முரைத்தனளே

உரைத்துநிற்க முன்னெழுந்த வூழின்வழி கனலெழுந்து
உரைக்கரிய மதுரைநகர் உற்றவுயிர் பதைபதைக்க
உரைக்கரிய சுடுகாட்டி லுற்றெரித்த வாறுமென்ன
உரைக்கரிய காண்டாவனத் துற்றதும்போற் பற்றியதே

பற்றுமந்த வக்கினிதான் பரந்தபுகை யுடனிறைந்து
பற்றியிடி முழக்கமென்னப் பற்பலநற் கொழுந்தெழுந்து
பற்றுத லில்லாதநல்ல பாறைகளி னிடம்புகுந்து
பற்றியெழு முயிர்மடிந்து பதைபதைக்க முதுகனலே

முதமைசெறி மூவுலகை முடிவுகொள்ளக் கடைசியிலே
சதுர்முகனுந் துணுக்கமுறச் சடசடென்று வடவையனல்
அதிகநாதன் சிவனார்தன் னக்கினியி னுடனெழுந்து
வதைபுரிந்து வந்ததுபோல் மண்டிமிண்டும் பேரழலே

மண்டலமுந் தான்மதிக்க வாதுசெய்ய மால்பிரமன்
மண்டலமின் றழியுமென்று மதிபுனைந்த சிவநாதர்
மண்டலம் விண்டலம்முழுதும் வளர்நின்ற வனல்போலே
மண்டலம்விட் டிசைபரந்து வளர்ந்தெழுந்த கொளுங்கனலே

எழுந்துவரு முகிலினங்க ளெழுகடலி னீர்முடித்துத்
தொழுந்தகைய விண்பரம்பச் சோதிபெறு செக்கர்முகில்
அழுந்தியொரு புறமெழுந்து மாகாசங் கவர்ந்ததும்போல்
செழுந்தகைய தூமமுடன் சேணெழுந்த கொழுந்தழலே

தழல்நடுவி லுட்புகுந்து தாரைமத யானையெல்லாம்
தழலுடனே யுடல்பொருமித் தங்குதலில் லாதெழுந்து
தழலவிய மழைசொரியுந் தானவனா மேகுவபோல்
தழலெழுந்த புகைப்படலந் தானெழுந்து போனதுவே

தானமுற்ற மதிற்படிந்து தாவுகின்ற வெண்முகில்கள்
மானினியாள் காற்சிலம்பில் வந்தகனற் காற்றாமல்
வானமிசை போவதென்ன வளந்தெழுந்த தழலிலெழும்
வானிறத்திற் புகைகளெல்லாம் வானமிசை போனதுவே

வானமுறு மாடமதில் வதிந்தபல குயிலினங்கள்
ஆனகனற காற்றாமல் ஐந்தருவிற் புகுவதென்ன
வானநீல மானபுகை மருவியிடை யிடையெழுந்து
தானமுறப் போவதென்னத் தாரைகொண்டு போனதுவே

தாரகைக ணிரைநிரையே தவறிவிழுந் திட்டதுபோல்
கோரமுறு மனற்பொறிகள் கூட்டமுற்றுக் கிடப்பதுவே
ஆரமுகில் மதுரையிலே யப்புமழை சொரிவதுபோல்
பாரமுற விடையிடையே பரந்துபுகை நிரந்ததுவே

பரந்தமுகி லினமுழங்கிப் படுமிடியைக் கான்றதென்னச்
சரிந்தகன லிடையிடையே சடுலவோசை தாவினதாம்
கரிந்தவிண்ணின் மிசையெழுந்து காட்டுமின்னி கூட்டமென்ன
சரிந்தபல கனற்கொழுந்து தாவிவிண்ணின் மேவினதே

விண்ணின்மிசை வருமுகில்கள் மேதினியில் விழுந்ததுபோல்
அண்ணலஞ்சேர் யானையெல்லா மருங்கனலிற் புரண்டதுவே
தண்ணீர்க்குடம் விழுந்துடைந்த தன்மையென்ன மதகரியின்
பண்ணிற்பல மதங்கள்சிந்திப் பார்மிசையே புரண்டதுவே

புரண்டுவிழ வச்சிரத்தாற் புரந்தரனுஞ் சிறகரிய
உருண்டவரை யெனக்கரியி னுடலெழுந்து விழுந்ததுவே
மருண்டமத யானைகரி வாக்கினுக்குத் தோற்றதென்னத்
இருண்டபல கரியாகி யெரிந்தெரிந்து பற்றினதே

பற்றுபரி யினங்களின்மேற் பற்றுபிட ரோமங்களிற்
பற்றியனல் சுற்றிடவே பதைபதைத்து மேலெழுந்து
கத்துகடற் றிரையிதின்மேற் காற்றினுடன் விழுவதுபோல்
சுற்றியெழு புகையினிடைச் சுற்றியெங்கும் விழுந்ததுவே

சுற்றிவரு தேர்நிரைகள் சூழ்ந்தகூம்பி னுடனளிந்து
பற்றுமூங்கிற் காடெனவே பரந்தெரிந்து விழுந்ததுவே
எற்றுபடைக் காலாளா யிருந்தபல சேனையெல்லாம்
சுற்றிவரு மருவலரைச் சூழ்ந்திருந்து கொன்றதினால்

கொன்றதினா லவரவர்கள் கொடியிடையார் பழிநெருப்பும்
அன்றுடன்வந் தழித்ததென்ன வனலிலவர் றிறந்தனராம்
துன்றுமுடி முதலான சொல்லரிய பலநிதியும்
அன்றுபற்று மழலதனால் அந்தரத்தின் மாய்ந்ததுவே

மாய்ந்தவிந்தக் கனலெழுப்பும் வாழ்விழியாள் பாண்டியனை
தாயமற்றும் பார்க்கமனந் தாவுகோப வேகமதாற்
காயமெல்லா மக்கினியாய்க் கண்பரப்ப விண்புரக்கும்
ஆயிரங்கண் ணாகியதில் அக்கினியுஞ் சொரிந்ததுவே

சொரிந்தகன லெரிந்தவிதஞ் சொன்னோமுன் துடியிடையாள்
நிரந்தபகை முடித்தவஞ்ச நெஞ்சானான் தட்டானை
பரந்தபதத் தாலுதைத்துப் பருத்தநெஞ்சின் மிதித்தரைத்து
குருதிகக்கக் குடல்பிடுங்கிக் கொற்வன்முன் வீசினளே

வீசிமுன்னாய்ப் பாண்டியனை வித்தகிபார்த் துரைப்பாளுன்றன்
நேசமான தோழனிவன் நிணக்குடலைக் குடித்துடனே
கூசாமல் நமன்புரத்திற் கூடக்கொலை புரிவதற்குப்
பேசுபல யோசனையைப் பிரிசமுடனென் றுரைத்தாள்

என்றுரைத்துச் சிலம்பிலிருந் தெரிந்தகனல் தனைப்பார்த்து
நன்றியில்லாக் கொடியோனை நாடியெரி தீயென்னவே
அன்றுஅந்தக் கொடுங்கனலு மவனைவளைந் தமுக்கிடவே
மன்றுமுயிர் துடிதுடித்து மாண்டனனே பாண்டியனே

பாண்டியனா றிறந்தளவிற் பத்தினியு மோடிவந்து
தாண்டுபுக ழிளந்திறந்த தட்டான்றன் மனைபுகுந்து
ஆண்டிருந்த வவன்மகனை யழகியகை யாற்பிடித்து
ஆண்டுடலை யிரண்டாக வாயிழையும் பிளந்துவிட்டாள்

பிளந்துகெரு டனையழைத்துன் பிள்ளைக்குஞ்சைக் கொன்றபழிக்
வளைந்துவந்து வாங்குகென்ன வன்கெருடன் சிறகடித்துக்
கிளம்பிவந்தங் கவனீரல் கெடுதலுறத் தானெடுத்து
உளமகிழ்ந்து குஞ்சைக்கொன்ற வூட்பழிகொண் டேகியதே

ஏகவெங்கள் கண்ணகையார் இமைமறைத்து விழிக்குமுன்னே
வாகுபெற்ற திருக்கடையூர் மாதெவியின் மனைபுகுந்து
மோகமுற முடித்திருந்த மொய்குழலிற் பிடித்திழுத்துக்
வேகமுற்றுக் கோவலனை வீக்கிவைத்த சுடுமணலிற்

சுடுமணலிற் கொடியவளைத் தோகைவிட்டுக் கோவலனை
முடித்தபழி யிடெடியென்று மொய்குழலார் மொழிந்தவளின்
கடியவுடல் தனைக்கிழித்துக் கையிலவள் குடலெடுக்க
நொடியிலவள் தாய்க்கிழவி நோக்கியழு தோடினளே

ஓடுகின்ற கிழவிதன்னை யுத்தமியாள் போய்ப்பிடித்துக்
கூடவந்த கோவலர்க்கு கூட்டுமருந்திட்ட நீயோ
வாடியென்று பிடித்திழுத்து மாதெவியைப் பிளந்திடத்தில்
நாடுமவளின் கழுத்தை நாயகியு முறித்தெறிந்தாள்

நாயகி மாதெவியினது நடுக்குடலின் மாலைதன்னைக்
மாயுமந்தக் கோவலர்மேல் வரும்படிக்கு வீசிவிட
ஆயகுடல் மாலைவந்து அவனுரத்தில் விழுந்திடவே
ஆயதோகை மாதேவிதன் அரண்மனையைப் பார்த்தாளே

பார்த்தவுடன் கண்ணினழல் பற்றியெரித் திடுமளவில்
வார்த்தனக் கண்ணகைமீண்டு வன்கொலையிற் கோவலனைச்
சேர்த்துவைத்த களந்தனிலே சென்றுபடர்ந் தங்குநின்ற
ஆர்த்தொரு சந்தனமரத்தை யாயிழையாள் முறித்தடுக்கி

அடுக்கியெரிந் திடுவரென்றும் ஆயிழையாள் விழிபரப்ப
வடுப்பொருவு விழியிலழல் வந்துபற்றி யெரித்திடவே
அடுத்துநின்று கண்ணகை யாரானகங்கை தனைநினைக்க
அடுத்துவரக் காவிரியும் அன்னையும்பார்த் துரைத்தனளாம்

உரைபெருகு காவிரியே யுற்றதைநா னோதிடக்கேள்
உரைபெருகு மென்கணவ னுடலில்வெந்த சாம்பரைநீ
உரையொடுங்கு முன்னாக வுன்னிடங்கொண் டேகுகென்ன
உரைமகிழ்வி னுடநதியு முறுசாம்பர் தனையெடுத்தே

சாம்பர்கொண்டு காவேரி தானோடக் கோவலனும்
பூம்புனலிற் பூவானான் பொற்கொடியாள் மாதேவியும்
ஆம்புனலில் வாழைமட லாய்மிதக்கக் கண்ணகையார்
காம்புகொண்ட தாறொடுபூக் கையெடுத்துக் கட்டினளே

கட்டுமந்த மாலைதன்னைக் கடிமதுரைச் சொக்கருக்கு
விட்டெறிய மதுமாலை விமல்ர்கழுத் துற்றதுவாம்
மட்டுலவு மார்புனையு மாதுமது ராபுரியிற்
கிட்டிநிற்கக் கொடுநெருப்பிற் கேழ்மதுரை யெரிந்ததுவே

எரிந்தவித முன்னுஞ்சொன்னே னின்னுஞ்சில சொல்லுகிறேன்
எரிந்ததுவே யானைபரி யெண்ணிறைந்த தேர்நிரைகள்
எரிந்ததுவே மண்டபங்க ளெண்ணிறைந்த கோபுரங்கள்
எரிந்ததுவே பந்திகளும் ஏகினதே கோகுலமும்

கோவரசு மரசருடன் கூடிவரு மரசர்களும்
காவரசன் மனங்குளிரக் காலாளுஞ் சீர்படையும்
ஏவரசர் மங்கலமு மேந்துமணிப் பணியணியும்
நாவரசும் புகலரிய நன்னிதியு மெரிந்ததுவே

நன்னிதியஞ் சூழிகைகள் நாடுமாடற் கூடமுடன்
சொர்னமன்ற மரங்கமன்றஞ் சூதுமன்றம் வாதுமன்றம்
செந்நிறமன் றங்களுடன் றேவியுடன் பாண்டியனும்
மன்னுமன்றம் பலவெரிந்து வாகான தூணிரையே

தூணிரையு பொன்னெழுது சுவர்நிரையு மரகதத்தின்
காணிரையும் வச்சிரத்தின் கனவளையு முத்திரமும்
மாணிரையு மிரத்தினத்தின் மாட்டிவிட்ட விட்டமுடன்
கோணிரையு மதிலுறுப்புங் கொடிபலவு மெரிந்ததுவே

பலமயிலும் பூவைகிள்ளை பகருமிசைக் குயிலுடனே
பலபலபெண் ணவர்களெல்லாம் பட்சமுடன் வளர்த்தபட்சி
பலபலநன் மிருகவினம் பாவையர்க ளாடுகளம்
பலபலநற் பதுமைவளம் பாடளிந்தும் பொன்றினவே

பொன்னுலகிற் பூஞ்சோலை புகழ்பெருகு மீனவன்றான்
இந்நிலத்திற் கற்பகம்போ லினிதுவளர்த் திடுபடப்பை
வன்னிபுன்னை மந்தாரம் வாட்சிமுல்லை கோங்குமௌவல்
பன்னுபிச்சி பாதிரியும் பாளைகக்கும் பூகமுமே

பூகமுடன் கதலிகன்னல் புகழ்சோகு தெங்குடனே
ஆகுபுட்ப சோலைகளு மானபெரு விருட்சங்களும்
பாகுபெற்ற கண்ணகையின் பதச்சிலம்பி லுருத்தெழுந்த
வேகமுறு மக்கினியால் விரைவினழிந் திறந்ததுவே

இறந்த மதுராபுரியி லேற்றபல தெருக்களெல்லாம்
இறந்ததேவ லோகத்தினு மில்லைநிகர் வல்லையதே
இறந்தநிதிச் செந்திருக்க ளிடமிடமாய் வீற்றிருந்த
இறந்ததெருத் தொகைகளெல்லா மெரிந்ததுவே நிரைநிரையாய்

நிரையின்மறை யோர்கள்தெரு நீதிமன்ன ராதிதெரு
நிரைவணிக ரேறுதெரு நிரைமேழிக் கொடியோர்தெரு
நிரைநிரையே யெரிந்தெரிந்து நீணகர்மற் றோர்தெருவு
நிரைநிரையே புகையழலு நின்றெரிந்து பரம்பினதே

பரம்புமிரா வணனிலங்கை பற்றியெரிந் திட்டதுபோல்
கரம்விரிந்து நிமிர்ந்துவன்னிக் காலெழுந்து பால்வளைந்து
உரம்புகுந்த சேடனுறு முலகளவுங் கனலுலவ
திரம்புகுந்தங் கெரிந்தசெயல் செப்புதற்கு நிரைக்கரிதே

நினைக்கரிதா மிந்நெருப்பு நிலம்பரந்து சேணளவும்
முனைக்கொழுந்து பரந்தெழுந்து முடிவிலுறு வடவையென்னக்
கனத்தெரிய மேற்பரந்த கருமுகில் கண்ணீர்சுவறி
அனைத்துமுட லனலாகி யருங்கடலில் விழுந்தனவாம்

அருமையுற்ற கனலெரிய அக்கினியு மிகப்பயந்து
கருமையுற நீர்பொருந்து கடலினிடை யொழித்தனவாம்
திருமதுரை தனிற்பரந்த தீயினது வெப்பமதால்
அருணனும்போ யுத்தியிடத் தாழ்ந்து முழுகுவனாமே

முழுகுநித வருணனுக்கு முடிமாற னிறந்ததினாற்
களையுமிக வற்றாத களிப்புமன மானதுவே
அழகனுட னிந்திரனும் அரியபல தேவருடன்
வளமதுரை யெரியதனால் மகிழ்ந்துவிண்ணின் வந்துநின்று

நின்றுபகைப் பாண்டியன்றான் நீண்மதுரை தன்னுடனே
ஒ்ன்றுபட வனலெரிக்க வுகந்துகண்டு மனங்கழித்து
அன்றுநல்ல கற்பகத்தி னருமலரைக் கரம்வாரி
அன்றெறிந்து கண்ணகையை யாஞ்செலிசெய் திட்டனனாம்

இட்டுமல ரிந்திரனும் ஏத்திடவெம் மன்னையவள்
இட்டவனல் மதுரைதன்னை யெரித்தெழுந்து சீறிடவே
இட்டவிதிப் படியேகி யாவருங்கண் டழுதோட
இட்டமுடன் கூடல்விட்டங் கிடையர்தெரு தன்னில்வந்தாள்

தெருவில்வர விடையர்குலத் தேன்மொழியோர் பலர்கூடி
மருவுபல சாமரமும் வாய்ந்தபொன்னின் விசிறிகளும்
கரமருவி மனமுருகி  காதலிகண்ணகைக் கருகாய்
திருவுருவின் களைநீங்கச் சேரநின்று வீசினரே

வீசுபன்னீர் புனுகுடனே விரைகள பச்சேறுகளும்
நாசிமண முடனளவி நன்னீரிற் கலந்தெடுத்துக்
ஆசிமக மாசியிவ என்னையென்னுங் கண்ணகைமேல்
வீசிவீசி வெப்பம்மிக வீசவீச வீசினரே

வீசியந்தத் தெருக்களிலே மின்னனையார் கண்ணகைக்கு
வீசுகொடி தெருநிரைத்து மேவிடுதோரண நிரையாய்
வீசுமொழி பந்தலிட்டு மேலிடமு விதானமிட்டு
வீசுபுகட் கண்ணகையின் மெல்லடியைத் தொழுதனரே

அடிதொழுது பெண்கள்சிலர் அன்னைதிரு முகநோக்கி
வடிபயிலும் வேன்மாறன் மதுரையெரி மானாரே
படியினல்ல வமுதருந்தப் பக்குவஞ்செய் திடுவோம்நாம்
விடைதாரு மெனவணங்கி வேண்டினரே மெல்லிநல்லாள்

மெல்லியர்கள் சொலுமளவில் வித்தகியு மப்போது
வல்லியர்கள் முகம்பார்த்து மனதின்வெப்பஞ் சிறிதகற்றி
சொல்லுமமு தருந்துகிலேன் தோகையரே பூசைசெய்தால்
நல்லதின்று ஏற்றிடுவே னாரியரே யெனவுரைத்தாள்

உரைக்குமந்த மொழிகேட்டு ஒண்டொடிமார் மனமகிழ்ந்து
தரைக்குமுத லானதெய்வந் தன்னையந்தப் பந்தலின்கீழ்
நிரைத்தபுட்ப வாசனத்தின் னேர்ந்திருத்திப் பாதமலர்ப்
புரைக்கொடியெம் மம்மனுக்குப் பூவையர்கள் பூசைசெய்ய

செய்யவாழை முதற்கனிகள் திரையல்பழுக் காய்சாந்து
செய்யநல்ல பாலடிசில் திருமருவு கும்பமுதல்
ஐயமற வறிந்தபடிக் கானெய்விளக் குடன்தீபந்
தையலர்கள் தேடிமுன்பு தற்பரிக்குப் பூசைசெய்தார்

விருத்தம்

கோரமுறுபித்தமுங் கொடியபலகட்டு முற்கோலமுறு வாதமதுவுங்
கொண்டுழலுசேடமும் மண்டைவருவாயுவுங் கொடிதான விடமருவியே
சார்பிலுறுகிறுகிறுப்பொடு நயனதாக்கமுந் தான்றிமிர்விறைப்பு முழைவுந்
தாக்கிலொரு தாக்கமுண்டாக்கி வருபிணிமுதற் சஞ்சலங்களைமாற்றியே
நேரவொருகிருபைபுரி நீயென்றுதண்டமிட நினையாதிருக்கும் விதமென்
நிமலையருள்மலைபுகழ் மதுரையழல் புனல்கொண்டு நீக்கினதுபோலுமிதையே
வாரமுறுகிரகபகை மாற்றியருளூற்றி யிவ்வரமுமின்றே புரிகுவாய்
வாகைபெறுமோகை நிறைவாகுமொரு நாகர்பதிமருவு கண்ணகையம்மனே

குளிர்ச்சி

வாரிவிடமுண்ட கண்ட மாதுபாக ரருண்மகவே
கூரியவோர்மருப் புடைய குஞ்சரமே நெஞ்சகமே
காரிகைகண்ணகைக் குளிர்ச்சி காதலுற வோதுதற்குச்
சீரினுமின்னருள் புரிவாய்  தினமதனிற் பூசைசெய்வேன்

பூசைசெய்தங் கிடைச்சியர்கள் பொற்கொடியை வீழ்ந்திறைஞ்சி
தேசொழியே பாண்டியன்செய் தீவினையி னானசினம்
நாசகியே குளிர்ந்தருள்வாய் நற்கொடியே குளிர்ந்தருள்வாய்
வாசமுறு மாநாகர் மாமகளே குளிர்ந்தருள்வாய்

குளிர்ந்தருளுஞ் சிவனிடத்திற் கொடியிடையே குளிர்ந்தருள்வாய்
தளஞ்செறிந்த பாண்டியன்தன் தன்மகவே குளிர்ந்தருள்வாய்
வளஞ்செறிந்த கோவலற்கு மனையனையே குளிர்ந்தருள்வாய்
உளஞ்செறிந்த சுடொரொளியே யுத்தமியே குளிர்ந்தருள்வாய்

குளிர்ந்தருளாய் பாண்டியன்செய் குற்றமதாற் கூடலிதைக்
கொழுதழலுண் டிடவிடலோ கொழுந்தனையே குளிர்ந்தருள்வாய்
களிந்தொழிசே ராயிரங்கட் கரிகையே குளிர்ந்தருள்வாய்
விழுந்தழலைக் குளிர்ந்தருள்வாய் வித்தகியே கோபந்தகீஇ

வேறு கோபங்கொள்ளாதேயென் தாயேகுளிர்ந்தருள் கோலவனல் தாவிடாதாகக் குளிர்ந்தருள்
கோபங்கொண்டாலண்ட மண்டலங்கூடுமோ கோவினழல்மாறருள் குளிர்ந்தருளவேணும்
கோபங்கொணாக மணிதரித்தனையே குலமலைக்கொடியழல் குளிர்ந்தருளவேணும்
கோபங்கொள்ளாதே யெங்கள்யோகமாதாவே கூடலழல்மாறக் குளிர்ந்தருளுமருளே

குளிர்ந்தருளவேணுமென் றங்கிடைக்கொடியிடைக் கோதையர்கள்கும்பிடக் கோதைகண்ணகையுங்
குளிர்ந்தகமகிழ்ந்துங்கள் குறைவுநிறைபுரிவேன் கோதையீர்கொண்டதுயர் மாறுமென்றருளிக்
குளிர்ந்தன்னைவானத்தை யுடநோக்குமளவிற் கோவினுறைவான்குல மேகங்கறுத்து
குளிர்ந்தருளினோடு மிகவுழுந்தருளமுன்னாய்க் கோலமுறுதாரைநீர் பார்சொரிந்தனவே

வேறு சொரியுமந்த மழைநீராற் றுய்யமது ராபுரியில்
எரிந்தகடு நெருப்பகற்றி யெவ்விடமுங் குளிரேற்றி
புரிந்தகுழ லிடைச்சியர்க்கும் போற்றுநல்ல வரங்கொடுத்து
கரிந்தகுழற் கண்ணகையார் காவிலங்க்க கெழுந்தனளே

காணவொரு காற்சிலம்புங் கையில்வேம்பின் பத்திரமுங்
காணமுன்னா ளிலங்கைநகர் காதலித்த தவத்தாலே
காணநல்ல இடைச்சியர்கள் கதிமறித்து மழுதுசெல்லக்
காணரிதாய் வாணுதலாள் கசிந்திடையர் தெருக்கடந்தே

இடையர்தெரு தனைக்கடந்து மிசைந்தசொக்கர் கோயில்சென்று
இடபமிவர் பரனையுன்னி யேத்திநிற்குஞ் சமயமதில்
இடபாரூட னெழுந்தருளி யேந்திழையின் முகநோக்கி
இடமுடைய மலைமகளே யேதுவர முரையுமென்றார்

உரையுமெனக் கயிலைசெல்ல வுத்தரவு தந்தருளும்
வரையுமொரு கரத்தில்வில்லாய் வாங்கினரே யெனமொழிய
கரியுமுரித் துடுத்தபிரான் கண்ணகையின் முகநோக்கி
பெரியதொரு வுலகீன்ற பெண்கொடிகே ளெனமொழிந்தான்

பெண்கொடியே யிலங்கையென்னும் பெரியதொரு தேசமுற்று
நண்படியே யுனைவணங்கும் நல்லவருக் கருள்புரிந்து
மண்ணில்மிடி பிணிபாவம் மாற்றிவரு கதிகொடுத்து
எண்ணரிய கயிலையிற்பின் னேகுகெனவிடை கொடுத்தார்

கொடுத்தவிடை தனைவாங்கிக் குளகர்பதந் தொழுதிறைஞ்சி
வடுத்திகழும் விழிமடவாள் வன்னக்கோடிக் கரையில்வந்து
அடுத்தவர்க ளனைவருக்கு மங்கிருந்து விடைகொடுத்து
சுடர்க்கொடியெங் கண்ணகையார் தொல்லிலங்கை தன்னில்வந்தார்

இலங்கைநகர் தன்னில்வந்தும் இலங்குநல்ல விடத்திருந்தும்
இலங்குதலந் தனில்வணங்கும் யாவருக்கும் விடைகொடுத்து
வலம்புரிந்து. தலங்களிலே வணங்கினீரேல் வருவெனென்று
வலங்கொளயில் விழிமடவாள் வற்றுப்பளை மேவினரே

மேவுமங்கே பசுவினத்தை மேய்த்துவருஞ் சிறுவர்பலர்
தாவுசிறு விளையாட்டாய்த் தாங்கள்சிறு கோயில்கட்டி
ஆவினும்பா லடிசிலிட்டு அரியமரத் திலைகனிகாய்
பூவுடனே பூசைசெய்யப் பொற்கொடியார் தோன்றினரே

தோன்றிடும் வைகாசித்திங்கள் சூழ்வியாகம் பூரணையில்
தோன்றினளே தடதடத்துத் துணைவிழிக ளிமைத்திமைத்துத்
தோன்றினளே நரைத்தலையும் துய்யபல்லு மில்லாமல்
தோன்றுமொரு கிழவியைப்போற் தோன்றிடவச் சிறுவர்கண்டார்

கண்டவுட னதிசயித்துக் காரியமென் னம்மையுன்னைக்
கண்டதில்லை யென்றுமிங்கே கருதிவந்த காரணமென்
கண்டவய தொருநூறோ கால்நடையுந் தடதடக்கக்
கண்டோநா மின்றுமையே கருதுமூர்பே ருரையுமம்மா

உரையுமம்மா வென்றளவில் லோதுவளே கண்ணகையும்
உரைசிறந்த சிறுவர்களே யூரெனக்குச் சோழநகர்
உரைபெருகு கதிர்காம முற்றிடவிவ் வழியில்வந்தேன்
உரைத்திடுமிப் பூசைசெய்ய உற்றதென்ன செப்புமென்றார்

செப்புமென்ற அளவைதன்னிற் சிறுவர்கள்கேட் டகமகிழ்ந்து
செப்பிடுவார் மாதாவே சிறுவர்கள்யாம் விளையாட்டாய்ச்
செப்பநின்ற பொங்கல்பூசை செய்தனமென் றுரைத்தளவிற்
செப்பினள்பின் சிறுவர்களே திருவிளக்கு மேற்றுமென்றே

ஏற்றுமென்ற சமயமதில் லெண்ணையில்லை யெனமொழிய
ஏற்றமுள்ள சிறுவர்களே யிந்தநந்திக் கழியிலுற்று
ஏற்றநீரை யள்ளிவந்து ஏற்றிடுவீ ரென்றவுடன்
ஏற்றமுடன் சிறுவருநீர்க் கேகியள்ளி மீண்ணடனரே

மீண்டுமிந்த நீர்தனிலே விளக்கெரிந்த புதுமைகண்டு
ஆண்டவளிங் கிவளெனவே யடிபணிந்து தொழுதுநிற்கப்
பூண்டஅன்பிற் சிறுவர்கள்மேற் பொற்கொடியு விழிநோக்கி
ஈணடுமக்கோ ரிரகசியம் இயம்பிடுவே னெனமொழிந்தாள்

மொழிந்திடுவேன் சிறுவர்களே முன்னுமென்பேர் கண்ணகைகாண்
மொழிந்தவிந்த மாதமதில் முதுகலைசேர் பூரணையில்
மொழிந்ததிங்கட் கிழமைதனில் முன்னமுறு வியாகமதில்
மொழிந்தகும்ப மேற்றிநல்ல முறைப்படியே பூசைசெய்தால்

செய்திடுகில் வந்திடுவேன் தெண்டமிட்டோ ரெல்லோர்க்குஞ்
செய்யநல்ல வரங்கொடுப்பேன் சீரின்முத்தி சேர்த்திடுவேன்
செய்யுமெய்யென் றுரைத்தளவிற் சிறுவர்கள்கேட் டுளமுருகிச்
செய்சிறுவ ரெமையடிமை சேர்த்தருளு மெனப்பணிந்தார்

பணிந்திரந்த பிள்ளைகட்குப் பாக்கியமுங் கீர்த்திகளும்
பணிவினல்ல மனமகிழ்வும் பண்பினல்ல சிறுவர்களும்
அணியணியா யெனைத்தொழுதா லாகுமுங்கட் கெனவுரைத்தும்
தணியும்பிணி யெனவுரைத்து தற்பரியாள் மறைந்தனளே

மறைந்துசென்று வன்னிநகர் மனத்திசைந்த தலமிருந்தும்
அறிந்துவணங்கி னவர்களுக்கு கானநல்லவரங் கொடுத்தும்
மறைந்துநல்ல கதிர்காம மலையகத்தி னிடமருவிச்
சிறந்தமயி லூர்பரனும் தெண்டனிடச் சிறந்திருந்தும்

இருந்துதனைப் போற்றுநர்க்கு மேகுமந்தத் தலங்களிலும்
இருந்ததொண்டர் மனமதென்று மோர்கமலக் கோயிலினும்
இருந்துமந்தத் தலங்களினும் யாவரேனும் விருப்புடனே
இருந்துதலம் பூசிப்பரே லேற்றுமனப் பூரணமாய்

பூரணமாய் வினைகளெல்லாம் போக்கியரு ளோக்கமுற்றும்
பூரணமா ஞானவொளி போனவிழிப் புலனுறவும்
பூரணமாய் வனமுதலாம் புலவர்களு மடிவணங்க
பூரணனா ருறைகயிலைப் பூரணியு மேவினளே

மேவுமிந்தக் கண்ணகையை விரும்பியிந்தப் பூதலத்தில்
மேவுமெவர் தொழுதாலும் வினையகற்றி நலம்புகுத்தி
மேவுமவர் மனமலையில் மேவியாவி யுடனிருந்தும்
மேவிவட கயிலையிலே விருப்புடனே யிருத்துவளே

இருக்குமுதல் வேதமெல்லா மீன்றுவைத்த தாயாரை
இருக்குமிந்த வுலகினையும் மீன்றபெரு மாதாவை
இருக்குமுயிர்த் தோற்றத்தையும் மீன்றதிரு வுருவிவளை
இருக்குமுதற் றுதித்திடவு மெப்பாவின் மேவிடுமே

பாவினிசை கொண்டிதனைப் படித்தவர்கள் பயனுரைத்தோர்
பாவினுடனே கேட்டுப் பத்தியுற்று மகிழ்ந்தவர்கள்
பாவின்மொழிக் கண்ணகையார் பத்திமுத்தி யிருப்பார்களே
பாவினமும் கலையினமும் பலநாளும் பெருகிடுமே

பெருகுவேத முடன்கலைகள் பெருகிமிக வாழ்வதுவே
பெருகுசிவ சமையஞானம் பேரரசர் நீதிபசு
பெருகுமதி மழைமூன்றும் பேரருளின் வாழ்கவென்றும்
பெருகுலகந் திருவுடனே பேரறமும் வாழியதே

'' பன்னிரண்டாவது மதுரைத்தகனக் கதைமுற்றிற்று''

"பரமபதிதுணை"

விருத்தம் அன்றுதொட்டின்றளவு மடியேனையாழ்கின்ற வருளுக்களிக்கு முதவி
யானதொன்றில்லை யென்நாளுமுன்றன் மனதிலாசைகொண் டுன்னுதற்காய்
இன்றுதொட்டிதுகதைக் குறைவிரித்தே சொன்னதிதுவு முன்னருளிலொன்றே
ஏகாந்தரூபிகவு மாரியருளானந்த விறையவனிடக் கொழுந்தே
மன்றுளாடியபரமனருளு முன்னருளுமென மனமலையி னடமாடியே
வாழ்வுதவியேமுத்தி நாளுதவியென்றும் வழித்தொண்டளித் தருளுவாய்
என்றுமானிலமகிழ்விக்க விக்கதைபரப்பியே யாவரும்புகழ வருள்வாய்
ஏகமுறுதேவியே நாகர்பதிமேவியே யெண்ணில்கண்ணகை யம்மனே

உ

கணபதி துணை

உலக வணக்கம்

ஆன்றோர்களே, அடியேனீண்டு வரைந்த ஏட்டுப்பிரதியில் கதைப்பாவினத்தில் தொடர்பெழுத்து தொடரவும், தொடராது யானெழுதியிருப்பதை நகையிகழ்ச்சியி னாண்டிலீர். ஏனெனில் அடியேன் பரீட்சித்தபடி தொடரெழுத்துச் சிலவிடமிருப்பதுண்டு இதனைவாசிப்பவர் முதியோரிளையோருமாக வேண்டியமையினாலும் தொடரெழுத்தை வரியிற்றழுவாது சிலவிடங்களிலெழுதினம்.முற்றுந்தொடர்பிற் வரையாமைபற்றி யிருப்ப தென்னெனின் அடியேன் தொடர்பின்றெழுத பழகினமிலம்..இதனடியாந்தம் பார்க்குமிடத்து ஏடெழவல்லன் அல்லனெனச் சந்திலிகாரத்தினெழுத் தமைந்தும்மிருக்கும் அஃதியாவரும் வாசித்தலாக. இடையிடை படவரைந்தனம்..இஃதன்று இப்பிரதியின் எழுதுங்கதைத் தளைகளின் குத்துவெட்டும் அமைந்தன. அஃதின் அடியேனை அலட்சியம் செய்யாது ஆழ்கவந்தனம். குத்துவெட்டு இங்குறுதல் ஓர் ஞாபகபதார்த்தாந்த சேவைசெயலெனவுணர்க

இக்கதைக்குரிய மெய்த்தெய்வம்

உ

கணபதி துணை

மண்விண்ணதிர மதுராபுரிக் கனல் மாட்டிவருங்
கண்ணாயிரம் பெறு பூரணியாரணி காரணியைப்
பண்ணார் மொழியணங் கார்க்கதிகாரியைப் பார்ப்பதியை
எண்ணாதவர் மனமெல்லோனிலா வெல்லெனப் படுமே

சந்ததமந்தி குலைக்குதை தெங்கினஞ் சார்பழனங்
கொந்தலர் மாமருதெட விழோடை குடாரப்பினான்
கந்தர் தவத்தனையார் வெற்றிவேன் முற்கதைக்கிணையாச்
செந்தமிழின் தாளிசைச் பாமிகச் செப்பினனே

ஈண்டுகாட்டப்பட்ட கதைகளின் அடித்தொடைக் கிலக்கணமின்னது என்பது அபிப்பிராயம். ஆயினும் ஆக்கியோன் பதப்பிரபந்தங்களின் அமையாது அமையக் காட்டுவாம்

இவ் ஏட்டுப்பிரதியின் இயல்பு.:-

நற்றவமிகுத் தாறுமுகனருளால் குணாசுதன் நாகர்பதிமேவு தீரன் கணபதிப்பிள்ளை யெற்கிதனை மும்மதியினன் றெழுதென்றமையினால் வெற்றிவேலன் சொற்றதிற் சில திருத்தினேன்.மேலுந்திருத்திவைப்பேன். வீண்பழுதிலேன் பொழுதினான் றழுவிலயனமாம். மிகுதியிற் புகுதலாகுதும்.,சற்றுமன்பில்லாத சிற்றறிவினர்க்கியான் சாற்றுவதுமேற்றிடாது சந்தமிகுபாவினஞ் சிந்தியதனைக் குறைவு சந்தபேதம் மிதேதம்.கற்றறியினர்க்கு கரும்பு போலாமிகுதி கற்றறிவிலார்க் கரம்பைக் கனியெனக் காணுநல்லார்க் கமிர்தாமாகு மிக் கதையடித் தோடை காணிலேன்

## நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலய வரலாறும் இவ் ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும்

நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்துள்ள காணியின் பெயர் "மாளிகைத் திடல்" இவ் ஆலயம் வரலாற்றுப் புகழ்மிக்க பூர்வீக நாகதம்பிரான் ஆவயத்திற்கு வடபாலுள்ள வெண்மணல் பிரதேசத்தில் ஆல்,அத்தி,அரசு வேம்பு, நாவல்,கொக்கட்டி,இலுப்பை,காயா ஆகிய மரங்கள் செறிந்து விளங்கும் சோலையின்கண் அமைந்துள்ளது.இவ் ஆலயத்தின் தலவிருட்சம் "ஆலமரம்" இவ்வாலயத்தின் கிழக்கில் சுடலைப்பிட்டி பிள்ளையார்,குடாரப்பு முருகையா ஆலயங்கள் காணப்படுகின்றன. மேற்கில் பெரியதம்பிரான் வீரபத்திரர் ஆலயம் என்பன உண்டு. வடக்கில் நரசிங்க வைரவர் ஆலயமும் தெற்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பூர்வீக நாகதம்பிரான் ஆலயம் பருத்தித்துறை ஆழியவாளை பிரதான வீதி என்பன உண்டு.

மாளிகைத் திடல் என்னும் இக்காணியில் ஓங்கிவளர்ந்திருந்த ஆலவிருட்சத்தின் கீழ் சிதம்பரர் இரகர் கொட்டிலொன்று கட்டி ஆசனம் அமைத்து கண்ணகை அம்மனின் ஒருகால் சிலம்பினை வைத்து பூசை வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.அத்துடன் வைகாசி விசாகத்தின் எட்டுநாட்களின் முன்வரும் திங்கள் கிழமை நாளில் பொங்கல்விழாவும் நடத்தி வந்துள்ளார்.கோவில் பதிவுகளின்படி 1875ல் சிதம்பரர் இரகர் இக்கோவிலினைப் பதிவுசெய்து இவரே இக்கோவிலின் பூசகராகவும் ஆலய பரிபாலன கர்த்தாவாகவும் இருந்து வந்துள்ளார். இதற்கு முன்பிருந்தே இங்கு கண்ணகி வழிபாடு இருந்துள்ளதாக நம்முன்னோர் கூறுவர். இக்காலப் பகுதியில் சிதம்பரர் இரகர் பூர்வீகநாகதம்பிரான் ஆலாய பரிபாலன கர்த்தாவாகவும் பூசகராகவும் இருந்துள்ளார். இவர்காலமானதும் இவரின் மகளின் மகன் முருகேசு சதாசிவம் 1924 ஆண்டு தொடக்கம் 1933வரை நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பூசகராகவும், நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன கர்த்தவாகவும், பூசகராகவும் இருந்து தனது பெரியதகப்பன் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை மற்றும் நாகர்கோவில் குடாரப்பு மக்களின் உதவி உடன் குடிசையாக இருந்த ஆலயத்தினை களிமண்சுவரினால் கட்டுவித்து பூசை ஆராதனைகளை 1933ம் ஆண்டு வரை மேற்கொண்டு வந்துள்ளார்.

1933ல் முருகேசு சதாசிவம் காலமானதும் அவரது மகன் ஆசிரியர் வல்லிபுரநாதர் 1933 முதல் 1987 வரை விசேட உற்சவகால பூசகராகவும் ஆலயபரிபாலன கர்த்தாவாகவும் கண்ணகை அம்மனின் பணியினை மேற்கொண்டு வந்துள்ளார். நாகர்கோவில், நாகர்கோவில் வடக்கு, குடாரப்பு மக்களின் உதவியுடன் களிமண்ணினால் கட்டப்பட்டிருந்த இருந்த ஆலயத்தை சீமெந்துக் கற்களினால் கட்டுவித்து பஞ்சலோகத்ததால் செய்யப்பட்ட கண்ணகை அம்மன் திருவுருவையும், கருங் கல்லினாலானபிள்ளையார் திருவுருவையும் பிரதிட்டை செய்து காலயுத்தி வருடம் சித்திரை மாதம் 14ம் நாள் (27.04.1978) வியாழக் கிழமை காலை 10மணி 05 நிமிஷம் தொடக்கம் 11மணி 10 நிமிஷம் வரையில் உள்ள மூலநட்சத்திரத்துடன் கூடிய மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில் அல்வாய், மாலிசந்தி விநாயகர் ஆலய பிரதமகுரு கிரியாகலாப முத்தாமணி பிரம்ம ஸ்ரீ தேவராசக் குருக்கள் அவர்களைக் கொண்டு விநாயகப்பெருமான், கண்ணகை அம்பாள் மகா கும்பாபிஷேகத்தினை ஆலய பரிபாலனகர்த்தா ஆசிரியர் வல்லிபுரநாதர் மற்றும் நாகர்கோவில்,நாகர்கோவில் வடக்கு, குடாரப்பு மக்கள் ஒன்றிணைந்து நிறைவேற்றினர்.

முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதருக்கு தில்லைநாதன் பத்மநாதன், கணேசநாதன், சிவயோகநாதன், சிவசக்தி, சோதிநாதன், லோகநாதன் என்னும் பிள்ளைகள் உளர்.

இவர்களுள் தனது வயோதிபம் காரணமாக இரண்டாவது மகன் பத்மநாதனை விழாக்கால பூசகராக 1988ல் நியமித்து ஆலய நிர்வாகப் பொறுப்பினை அவரிடம் ஒப்படைத்தார். இவ்வூர் மக்களின் அனுசரணையுடன் கண்ணகை அம்பாளின் பணிகளை இவர் மேற்கொண்டு வருகிறார்.

## கண்ணகை அம்மன் ஆலய விசேட உற்சவங்கள்

மாதாந்தம் ஒவ்வொரு திங்கள்கிழமை நாட்களிலும் ஒருகால பூசை.

பங்குனி திங்கள் விரதம் நாகர்கோவில், குடாரப்பு, நாகர்கோவில் வடக்கு கிராமங்களில் உள்ள மக்கள் விரதம் அனுஸ்டித்து கடைசிப் பங்குனித் திங்கள் நாளில் அன்னதானம் வழங்குவர்.

மணவாளக்கோலம் வருடாந்தம் சித்திரைமாத மூலநட்சத்திரத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று கண்ணகை அம்பாள் வீதி உலாவந்து திருவூஞ்சலாடி தனது இருப்பிடஞ்சென்று அமர்வார்.கண்ணகை அம்மனுக்குரிய திருவூஞ்சல் பாவினை நாகர்கோவில்,குடாரப்பு சிவஅன்பன் புலவர் கணபதிப்பிள்ளை குமாரசுவாமி 1979ல் பாடியருளினார். ஆலய நிர்வாகி வல்லிபுரநாதர் மணவாளக்கோல நாளில் திருவூஞ்சல் பாவினைப் பாடும்பணியை நாகர்கோவில், குடாரப்பு அம்பாள் பக்தன் அப்பாத்துரை சிவராசா அவர்களிடம் ஒப்படைத்தார் அன்று முதல் இப்பணியினை இவர் மேற்கொண்டு வருகிறார்.
பொங்கல்விழா மிகப்புதுமையும் பழமையும் வாய்ந்த பனை ஓலையில் எழுதப்பட்ட கோவலன் கண்ணகி கதை ஏடு ஒன்று இவ் ஆலயத்தில் உண்டு. இவ் ஏட்டுப்பிரதி குற்று இல்லாமல் எழுதப் பட்டுள்ளது. இவ் ஏட்டுப்பிரதியின் மூலகர்த்தா தும்பளையில் காராளர் மேற்குலத்தில் வந்துதித்த கதிர்காமரின் புதல்வனும் யாழ்ப்பாணத்தில் வடகீழ் திசையில் குடாரப்பு என்னும் ஊரில் வாழ்ந்தவருமான வெற்றிவேலன் என்பவர் தான் செய்யாத தவறு ஒன்றிற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது கண்ணகை அம்பாளின் திருவருட்கடாட்சம் கிடைக்கப்பெற்று சிறையில் இருந்துகொண்டு கண்ணகை அம்மன் மீது 14 நாட்களில் எழுதிமுடித்தபோது, தான்விடுதலையானதாகவும் இவ் ஏட்டுப் பிரதியில் காணப்படுகின்றது. இவ் ஏட்டுப் பிரதியில் வெற்றிவேலன் சொற்களில் சிலவற்றை திருத்தி நாகர்பதிமேவு தீரன் கணபதிப்பிள்ளை என்பவர் எழுதியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது இவ்வேடு எக்காலப் பகுதியில் எழுதப்பட்டதென்று சரியாகக் கூற முடியாதுள்ளது. நாகர்கோவில் கண்ணகை அம்மன் பொங்கல்விழா வருடா வருடம் வைகாசிமாத விசாகம் நட்சத்திரத்திற்கு முதல் திங்கள் கிழமை வற்றாப்பளை அம்மன் விளக்கு வைக்கும் தினத்திலன்று நடைபெறுகின்றது. பொங்கல் நடைபெறுவதற்கு முதல் திங்கள் கிழமை கும்பம் வைக்கும் வைபவம் நடைபெறும். அன்று முதல் எட்டு நாட்களும் இவ்வாலயத்தில கோவலன் கண்ணகி கதையினைப் படித்து இவ்வூர் மக்கள் விரதம் இருப்பர்.கும்பவைப்பு முதல் ஐந்து நாட்களும் பாண்டியன் அரசிருக்கை, கண்ணகி திருஅவதாரம், கோவலன் திருஅவதாரம், தூரியோட்டம் கப்பலிசை, வெடியரசன் வீரநாரணன்போர் ஆகிய கதைகளும் ஆறாவதுநாள் கண்ணகை அம்மன் திருக்கல்யாணம், மாதவியார்கூத்து கதைகளும் ஏழாவதுநாள் சிலம்புகூறல், வழக்குரை, மதுரைத்தகனம் ஆகிய கதைகளும்படிக்கப்படும். ஏட்டாவது நாளில்பொங்கல் விழாவும் விசேடபூசை ஆராதனைகளும் நடைபெற்று கண்ணகி கோபம் தணிய குளிர்ச்சியும் படிக்கப்படும். பின்பு கண்ணகை அம்மன் வற்றுப்பளை செல்வதற்கான வழிவிடுதலும், தீர்த்தமும் நடைபெற்று விழா நிறைவுறும்.

பொங்கல் வளந்து உபயகாரர்கள்: பிள்ளையார்வளந்து கந்தையா செல்வவினாயகம் குடும்பத்தினர். வ்வரவர்வளந்து வைரமுத்து குமாரவேலு குடும்பத்தினர், கண்ணகை அம்மன்வளந்து ஆலய பரிபாலனகர்த்தாவும் பூசகருமாகிய முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதர் குடும்பத்தினர். நாகதம்பிரான் வளந்து வல்லிபுரநாதர் தில்லைநாதன்

குடும்பத்தினர் காத்தவராயர் வளந்து வீரகத்திப்பிள்ளை கோவிந்தபிள்ளை குடும்பத்தினர்.ஆரம்பத்தில் வைரவர், கண்ணகை அம்மன்,காத்தவராயர் வளந்துகள் மட்டுமே வைக்கப்பட்டன.1978ல் விநாயகர்பிரதிட்டை செய்யப்பட்டபொழுது விநாயகர் வளந்தும் 1993ல் பொங்கல் எட்டுநாட்களும் நாகதம்பிரான் காட்சி கொடுத்ததினால் 1994ல் நாகதம்பிரான் திருவுருவும் நாகதம்பிரான் வளந்தும் வைக்கப்பட்டன. நாகதம்பிரானுடைய வளந்தினை விழாக்கால பூசகர் பத்மநாதனிடமிருந்து முன்னாள் பூசகர் வல்லிபுரநாதர் பொறுப்பேற்று தனது பேரன் தில்லைநாதன் சிவசொரூபனிடம் ஒப்படைத்தார். இவ்வூர் மக்கள் பொங்கல்தினத்தில் பொங்கல பொங்கி உடுக்கு, பறை மேளத்துடன் காவடி, கரகம், பாற்செம்பு, பறவைக் காவடி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அம்பாளின் அருளினை வேண்டிநிற்பர்.

நவராத்திரிவிழா 1993 அக்டோபர் 16ம் திகதிமுதல் வருடாவருடம் நவராத்திரி கும்பம்வைத்து பூசை ஆராதனைகள் நடைபெறும். இறுதிநாள் விசயதசமியில் கண்ணகை அம்பாள் வெளிவீதி உலாவந்து தனது இருப்பிடம் சென்றமர்வார்.

விழா உபயகாரர்கள்

| | |
|---|---|
| 1ம் நாள் | ஆலயபரிபாலனகர்த்தா வல்லிபுரநாதர் பத்மநாதன் மற்றும் அவரது சகோதரர்கள் |
| 2ம் நாள் | அப்பாத்துரை சிவராசா குடும்பத்தினரும் சின்னத்துரை லிங்கநாதன் குடும்பத்தினரும். |
| 3ம் நாள் | ஆறுமுகம் அழகராசா குடும்பத்தினர். |
| 4ம் நாள் | தம்பையா சதாசிவம் குடும்பத்தினர். |
| 5ம் நாள் | கோவிந்தபிள்ளை இரத்தினசிங்கம் மற்றும் அவரது சகோதரர்கள் |
| 6ம் நாள் | வீரகத்தி பரமேஸ்வரன் குடும்பத்தினர். |
| 7ம் நாள் | ஐயாத்துரை பாலசுந்தரம் குடும்பத்தினர் |
| 8ம் நாள் | கந்தையா கார்த்திகேசு குடும்பத்தினர். |
| 9ம் நாள் | சின்னத்தம்பி சதாசிவம் குடும்பத்தினரும் திருமதி. கைலயபிள்ளை சரசுவதியும் |
| 10ம் நாள் | கடைசிநாள் உபயம் கிட்ணபிள்ளை வேலாயுதம் குடும்பத்தினர். அன்றயதினம் கண்ணகை அம்பாள் வெளிவீதி உலாவருவார்.9நாள் வைபவம் நடைபெறும்போது 8ம் 9ம் உபயகாரர்கள் ஒன்றுசேர்ந்து விழாவினைச் செய்வர். |

நாகர்கோவில், நாகர்கோவில் வடக்கு, குடாரப்பு மக்கள் பொக்குளிப்பான், சின்னமுத்து, கண்நோய்போன்ற தொற்றுநோய்கள் பரவினால், உடன் கண்ணகை அம்பாளை வேண்டி கோவலன் கண்ணகி நாடகம்,, காத்தவராயன்நாடகம் நடத்துவர் உடனே இந்நோய்கள் வந்தசுவடு தெரியாமல் மறைந்துவிடுவது ஒரு புதுமையாகும்.

இவ் ஆலயத்தில் நடைபெறும் சகல வைபவங்களிலும் நாகர்கோவில், நாகர்கோவில் வடக்கு, குடாரப்பு பழங்குடி மக்களாகிய வேளாளரும், மீனவர்களும் ஒன்றிணைந்து சகோதரர்களாக ஆலய பணிவிடைகள் எல்லாவற்றையும் செய்து கண்ணகை அம்பாளின் அருட் பிரசாதத்தினைப் பெறுவதற்கு காத்திருக்கும் காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவும் 10.01.2005ல் கண்ணகை அம்பாளின் திருவடியினை சென்றடைந்த முன்னாள் விழாக்கால பூசகரும் ஆலய பரிபாலனகர்த்தாவுமாகிய ஆசிரியர் முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதர் அவர்களின் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.

இவ் ஆலயத்தில் இருக்கும் மிகப்பழமையும் புதுமையும் உடைய ஏட்டினை நாகர்கோவில் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயநிர்வாகியும் விழாக்கால பூசகருமாகிய யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து உதவிஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் கணனியில் குற்றிடடுப் பதிப்பித்தும் அதனை நாகர்கோவில் குடாரப்பு வாசியும், பருத்தித்துறை, பிரதேச சபையின் செயலாளருமாகிய அப்பாத்துரை நடராசா அவர்கள் ஒப்புநோக்கி செவ்வை பார்த்தும் 22.05.2010ல் புத்தகமாக வெளியிட்டுள்ளனர்.

கண்ணகை அம்மன் ஆலயம்<br>நாகர்கோவில் 22.05.2010

வல்லிபுரநாதர் பத்மநாதன்<br>(ஆலய நிர்வாகி, விழாக்கால பூசகர்)